பிரசித்தபத்திரிகை.

புதுவையிற்சிற்பதிப்பித்துவெளிப்படுத்தின புஸ்தகங்களாவன:

	புதுவையில்.		மற்றவிடங்களில்.		
	ரூ.	அ.	ரூ.	அ.	ப.
ஞானுமிர்ததடாகம். சித்திரகட்டிடம்.	௨		௨	௨	
ஷை தங்கவிரோக்குக்கட்டிடம்.	௨	௮	௨	௰	
ஷை தோற்கட்டிடம்.	௧	௮	௧	௰	
வேதவிளக்கம். —	௧	௮	௧	௰	
ஞானுமிர்தம. —		௰		௰௧	
வேதப்புரட்டலநீக்குஞ்சஞ்சீவி. —	௧		௧	௧	
சத்தியவேதப்பரிட்சை. —	௧	௪	௧	௫	
தேவமாதாவின்வணக்கமாதம். —		௰௧		௰௨	
Grammatica Latino-Tamulica. —	௨		௨	௨	
Dictionarium Latino-Gallico-Tamulicum. —	௫		௫	௮	
இலத்தீன்-பிராஞ்சு-தமிழ்-அகராதி. —	௫		௫	௮	
அநுசாரம். —		௮		௯	
ஷை அரைக்கட்டிடம்.		௫		௭	
ஞானமுயற்சி. —		௮		௯	
ஞானவுணர்த்துதல். —		௪		௪	௫
நன்றுய்தினை. —		௮		௯	
சிலுவைப்பாதை. —		௮		௯	
அர்ச்.- இஞ்ஞாசியார்தியானங்கள். —		௰௨		௰௩	
அர்ச்.-சவேரியார்சரித்திரம். —		௭		௮	
தெய்வப்பரிட்சை. —		௪		௪	௫
பிராஞ்சிலக்கணநூற்சுருக்கம். —		௰௨		௰௩	
இலக்கணச்சுருக்கம். —		௮		௯	
இலக்கணநூலாதாரம். —		௪		௪	௫
இலத்தீனிலக்கணநூற்சுருக்கம். —	௧		௧	௧	
வாலர்பொக்கிஷம். —		௪		௪	௫
வாலர்துணை. —		௩		௩	௪
வேதியரொழுக்கம்-ஞானக்கண்ணுடி. —		௰௨		௰௩	
சாதாரணம்... கடுதாசிக்கட்டிடம்.		௧		௧	
தேம்பாவணி முதற்காண்டம். —	௨		௨	௨	
ஷை இரண்டாங்காண்டம். —	௧	௮	௧	௰	
ஷை முதனுன்குபடலங்கள். —		௮	௯		
TEMBAVANI. Première partie, avec notice. —	௨	௪	௨	௫	
Notice sur la poésie Tamoule, le Rév. P. Beschi et le Tembâvani. —		௪		௪	௫
வேதப்புரட்டலமறுத்தல். —		௨		௨	௩
பிரிவினைவிளக்கம். —		௨		௨	௩
நெடுநாட்பஞ்சாங்கம். —		௨		௨	௩
சத்தியவேதாற்புதங்களின்சுருக்கம். —		௧		௧	

பிரசித்தபத்திரிகை.

		புதுவை யில்.		மற்ற விடங்களில்		
		ரூ	அ.	ரூ	அ.	ப
சத்தியசபைப்பிரதிஷ்டை.	—		௧		௧	
ஞானதேசிகனத்தியல்பு.	—		௧		௧	
ஆதிச்சுவடி.	—		௨		௨	௩
ஆதிச்சுவடிபரமார்த்தகுருவின்கதை.	—		௪		௪	௬
பரமார்த்தகுருவின்கதை.	—		௨		௨	௩
இலத்தீனுந்தமிழும்ஷைகதை.	—		௪		௪	௬
பிராஞ்சு நெடுங்கணக்கு...	—		௨		௨	௩
பிராஞ்சு-தமிழ்...எளிதானபாடங்கள்.	—		௮		௯	
Leçons faciles de Français et de Tamoul.	—		௮		௯	
Verbes irréguliers.	—		௪		௪	௬
பாலர்சுவடி.	—		௧		௧	
அஞ்ஞானதூஷணமறுத்தல்.	—		௨		௨	௩
அதிசிரேஷ்டசபை ஒழுங்கு.	—		௭			௬
பூசையுதவிமந்திரங்கள்.	—		௧		௧	

☞ விவரம். இப்புஸ்தகங்களைப்புதுவையினின்று மற்றவூர்களுக்குக்கொண்டுப்போகிற செலவையுஞ் சுங்கத்தையும்பற்றிப் புதுவைக்கும் மற்றவிடங்களுக்கும் வெவ்வேறுவிலைகுறிக்கப்பட்டது.

தேம்பாவணி.

அநாதிநம.

தேம்பாவணி

யிரண்டாங்காண்டம்.

வீரமாமுனிவர்

அருளிச்செய்த

இக்காபபியம்

அவரதுகையெழுத்துப்பிரதிக்கொப்பப்
புதுவையிலெழுந்தருளியிருக்கும்
மகாகனம்பொருந்தியஆண்டவரும்
அப்போஸ்தொலிக்குவிக்காரியுமாகிய

இளெமென்சுபொறுந்
துரிசிப்பாெென்றும்

நாமதேயங்கொண்டிருக்கிற
மேற்றிராணியாரவர்கள் நமதியில்
உரோமாபுரியினின்றுவந்த
உத்தாரத்தின்படியே

௲௮௱௫௰௨ம். ௵
புதுவையிற் சன்மவிராக்கினிமாதாகோயிலைச்சேர்ந்த
அச்சுக்கூடத்திற்பதிப்பிக்கப்பட்டது.

கடவுள் - துணை.

சந்தங்களின்

அட்டவணை.

௰ங-வது. வைதிரநீங்குபடலம்.

பக்கம்,	விருத்தம்.	
க	க	காய், காய், மா, மா, காய்.
ச	அ	விளம், விளம், மா, கூவிளம்.
எ	உ௰	விளம், மா, தேமா, விளம், மா, தேமா.
கூ	உசு	மா, கூவிளம், கூவிளம், கூவிளம். விளங்கனி, கூவிளம், கூவிளம்.

௰ச-வது. இளவன்மாட்சிப்படலம்.

௰ச	க	விளங்காய், கூவிளங்காய், கூவிளங்காய், தே[மா.
௰எ	௰உ	மா, கூவிளம், மா, கூவிளம். விளங்கனி, மா, கூவிளம். விளங்கனி, விளங்கனி.
உ௰	௰கூ	விளம், மா, தேமா, விளம், மா, தேமா.
உசு	ருஅ	விளம், மா, விளம், மா, விளம், விளம், மா.
ருக	சஅ	மாங்கனி, மாங்கனி, மாங்கனி, புளிமா.
ருசு	சுச	மா, மா, மா, மா, மா, மா.
ச௰	எசு	விளம், விளம், மா, கூவிளம். விளம், விளம், விளங்கனி.
சச	அஅ	வெண்பாப்போல வந்தவிருத்தங்கள். (இடைமடக்கு.)
சரு	கூக	காய், காய், மா, தேமா, காய்.

*௬ சந்தங்களினட்டவணை.

பக்கம்,	விருத்தம்.	
௪௮	௯௮	விளம், விளம், மா, கூவிளம். விளம், விளம், விளங்கனி.
௫௨	௱௰	விளம், மா, தேமா, விளம், மா, தேமா.
௫௬	௱௨௫	கருவிளம், கருவிளம், கருவிளம், கருவிளம். † (இடைமடக்கு.)
௫௭	௱௨௬	விளம், விளம், மா, கூவிளம். விளம், விளம், விளங்கனி.
௫௮	௱௨௯	மாங்காய், தேமா, மாங்காய், தேமா, மாங்காய், தேமா, புளிமா.

௰௫-வது. சோசுவன்வெற்றிப்படலம்.

௬௫	௧	காய், காய், காய், காய்.
௬௭	௮	மா, மா, காய், மா, மா, காய்.
௭௨	௰௯	மாங்கனி, கூவிளம், கூவிளங்காய். மா, புளிமா, புளிமா, புளிமா.
௭௮	௬௧	விளம், மா, தேமா, விளம், மா, தேமா.
௮௬	௫௭	விளம், கூவிளம், கூவிளம், கூவிளங்காய். கூவிளங்காய், புளிமா, புளிமா, புளிமா.
௯௰	௭௫	கருவிளம், கருவிளம், புளிமா, கூவிளம், கருவிளம், கருவிளம், புளிமா, கூவிளம். தன்தன், தன்தன், தன்ன், தான்ன், தன்தன், தன்தன், தன்ன், தான்ன்.
௯௫	௮௨	விளம், மா, தேமா விளம், மா, தேமா.
௯௮	௯௰	மா, கூவிளங்காய், மா, கூவிளங்காய், மா, கூவிளங்காய், விளம்.
௱௫	௯௯	விளம், கூவிளம், கூவிளம், கூவிளம், விளம், கூவிளங்காய்.
௱௬	௱௯	கருவிளம், புளிமா, தேமா, கருவிளம், கருவிளம், புளிமா, தேமா, கருவிளம். தன்தன், தன்த்த, தான, தன்தன், தன்தன், தன்த்த, தான், தன்தன்.

---

† அத்தத்தவிருத்தத்துக் கடைசியடியி னுலாஞ்சீர் புளிமாவென்றறிக.

பக்கம், விருத்தம்.

௱௯ ௱௰௪
புளிமாங்காய், கருவிளங்காய், புளிமாங்காய், கருவிளங்காய், புளிமாங்காய், புளிமா, புளிமா.
தன்தான், தன்தன்ன், தன்தான், தன்தன்ன், தன்தான், தன்ன், தன்ன.
புளிமாங்காய், கருவிளங்காய், புளிமாங்காய், கருவிளங்காய், புளிமாங்காய், கருவிளங்கனி.
தன்தான், தன்தன்ன், தன்தான், தன்தன்ன், தன்தான், தன்தத்தந்தன.

௱௰௨ ௱௰௯
விளங்காய், கூவிளங்காய், விளங்காய், கூவிளங்காய், விளங்காய், கூவிளங்காய், தேமா
விளங்காய், கூவிளங்காய், விளங்காய், கூவிளங்காய், விளங்காய், தேமா, புளிமாங்காய்

௰௮ ௱௩௧
விளம், விளம், மா, கூவிளம்.
விளம், விளம், விளங்கனி.

௱௨௨ ௱௪௨ மாங்கனி, புளிமாங்கனி, புளிமாங்கனி, புளிமா.

௱௨௫ ௱௫௧
தன்தத்தந்தன், தன்தத்தந்தன், தன்தத்தந்தன், தன்தன.
கருவிளங்கனி, கருவிளங்கனி, கருவிளங்கனி, கருவிளம்.
புளிமா, கூவிளம், புளிமா, கூவிளம், புளிமா, கூவிளம், கருவிளம்.

௱௨௮ ௱௫௮
புளிமா, கூவிளம், கருவிளம், கருவிளம், புளிமா, கூவிளம், கருவிளம், கருவிளம்
கருவிளங்கனி, கருவிளம், கருவிளம், கருவிளங்கனி, கருவிளம், கருவிளம்.
தன்தத்தந்தன், தன்தன், தன்தன், தன்தத்தந்தன், தன்தன், தன்தன்.

௱௩௩ ௱௬௮ விளம், கருவிளம், விளம், கருவிளம்.

௱௩௭ ௱௭௧ விளம், மா, தேமா, விளம், மா, தேமா.

*௮ சந்தங்களினட்டவணை.

பக்கம்,	விருத்தம்.	
௱௩௮	௱௮௩	கருவிளம், கருவிளங்காய், கருவிளம், கருவிளங்காய். தன்தன், தன்தன்ன, தன்தன், தன்தன்ன.
௱௪௰	௱௮௬	விளம், மா, தேமா, விளம், மா, தேமா.

௰௬-வது. சேதையோன்வெற்றிப்படலம்.

௱௪௩	௮	விளங்கனி, விளம், விளம், மா. மா, கூவிளம், விளம், விளம், மா.
௱௪௭	௰௭	மாங்கனி, கூவிளம், கூவிளம், தேமா, தேமா. மாங்கனி, கூவிளம், கூவிளம், கூவிளங்காய். மாங்கனி, கூவிளங்காய், புளிமாங்காய், தேமா. மா, புளிமா, புளிமா, புளிமாங்காய், தேமா.
௱௪௯	௨௫	விளம், விளம், மா, கூவிளம். விளம், விளம், விளங்கனி.
௱௫௧	௩௧	மா, கூவிளங்காய், மா, கூவிளங்காய், மா, கூவிளங்காய், விளம்.
௱௫௫	௩௯	விளம், மா, தேமா, விளம், மா, தேமா.
௱௬௰	௫௨	மா, காய், மா, மா, காய்.

௰௭-வது. காசைசேர்படலம்.

௱௬௪	௧	விளம், விளம், மா, கூவிளம். விளம், விளம், விளங்கனி.
௱௬௮	௰௩	விளம், மா, தேமா, விளம், மா, தேமா.
௱௭௩	௨௭	காய், காய், மா, மா, காய்.
௱௭௯	௪௰	மா, கூவிளம், கூவிளம், கூவிளம். விளங்கனி, கூவிளம், கூவிளம்.

௰௮-வது. சீனயிமாமலைகாண்படலம்.

பக்கம்,	விருத்தம்.	
௱௮௩	௧	விளம், விளம், மா, கூவிளம். விளம், விளம், விளங்கனி.
௱௮௭	௰௩	காய், காய், மா, மா, காய்.
௱௯௨	௨௪	விளம், மா, தேமா, விளம், மா, தேமா.
௱௯௫	௩௪	விளம், மா, விளம், மா, விளம், விளம், மா.
௨௱	௪௩	மா, கூவிளம், கூவிளம், கூவிளம். விளங்கனி, கூவிளம், கூவிளம்.

௰௯-வது. பாலைபுகுபடலம்.

௨௱௫	௧	விளம், புளிமாங்காய், விளம், புளிமாங்காய். விளங்கனி, தேமா, விளங்கனி, தேமா.
௨௱௭	௬	விளம், மா, தேமா, விளம், மா; தேமா.
௨௱௰௧	௰௮	வெண்பாப்போலவந்தவிருத்தம். (இடைமடக்கு.)
௨௱௰௨	௨௧	விளம், கருவிளம், கருவிளம், கருவிளம், மா, தேமா. விளம், கருவிளம், கருவிளம், கருவிளம், விளங்காய்.
௨௱௰௪	௨௬	மா, மா, காய், மா, மா, காய்.
௨௱௰௯	௩௬	விளம், விளம், மா, கூவிளம். விளம், விளம், விளங்கனி.

௨௰-வது. சித்திரகூடப்படலம்.

௨௱௨௫	௰௧	மா, காய், மா, மா, காய்.
௨௱௨௮	௰௮	காய், காய், மா, தேமா, காய்.
௨௱௩௩	௩௰	விளம், மா, தேமா, விளம், மா, தேமா.
௨௱௪௨	௫௫	மா, காய், காய், காய்.
௨௱௪௬	௬௬	விளம், மா, விளம், மா, விளம், விளம், மா.

பக்கம், விருத்தம்.

௨௱௫௪ ௮௨ { மா, கூவிளம், கூவிளம், கூவிளம்.
விளங்கனி, கூவிளம், கூவிளம்.

௨௱௫௯ ௯௭ விளம், மா, தேமா, விளம், மா, தேமா.

௨௱௬௯ ௱௨௰ { விளம், விளம், மா, கூவிளம்.
விளம், விளம், விளங்கனி.

௨௧-வது. நீர்வரமடைந்தபடலம்.

௨௱௭௪ ௧ விளம், மா, தேமா, விளம், மா, தேமா.

௨௱௭௯ ௰௪ { மா, கூவிளங்காய், கூவிளம், தேமா.
விளங்காய், புளிமா, புளிமாங்காய்.

௨௱௮௨ ௨௪ மாங்கனி, புளிமாங்கனி, புளிமாங்கனி, புளிமா.

௨௱௮௯ ௫ { மா, கூவிளம், கூவிளம், கூவிளம்.
விளங்கனி, கூவிளம், கூவிளம்.

௨௨-வது எசித்துசேர்படலம்.

௨௮௮ ௧ மா, கூவிளங்காய், கூவிளம், தேமா, மா, கூவிளங்காய், கூவிளம், தேமா.

௨௮௯ ௪ { மாங்கனி, கூவிளம், கூவிளங்காய்.
மா, புளிமா, புளிமா, புளிமா.

௨௯௨ ௰௨ விளம், மா, தேமா, விளம், மா, தேமா.

௨௯௭ ௨௪ { விளம், விளம், மா, கூவிளம்.
விளம், விளம், விளங்கனி.

௨௩-வது. குணுங்குமந்திரப்படலம்.

௩௱௧ ௧ மா, மா, காய், மா, மா, காய்.

௩௱௫ ௰ விளம், மா, தேமா, விளம், மா, தேமா.

பக்கம், விருத்தம்.

௩௱௰ ௨௨ தேமா, தேமா, கூவிளம், தேமா, புளிமா ங்காய்.

௩௱௰௩ ௩௰ { மா, கூவிளம், கூவிளம், கூவிளம்.
விளங்கனி, கூவிளம், கூவிளம்.

௩௱௰௭ ௪௩ விளங்காய், கூவிளங்காய், கூவிளங்காய், தேமா.

௩௱௨௧ ௫௪ விளம், மா, தேமா, விளம், மா, தேமா.

௩௱௨௭ ௭௰ காய், காய், காய், காய்.

௩௱௩௧ ௮௰ { மா, கூவிளம், விளம், விளம், மா.
விளங்கனி, விளம், விளம், மா.

௩௱௩௮ ௯௮ விளம், மா, விளம், மா, விளம், விளம், மா.

௩௱௪௬ ௱௰௩ { விளம், விளம், மா, கூவிளம்.
விளம், விளம், விளங்கனி.

௨௪-வது. சோகுதோர்வைப்படலம்.

௩௱௫௰ ௧ விளம், மா, தேமா, விளம், மா, தேமா.

௩௱௫௪ ௰௨ { விளம், விளம், மா, கூவிளம்.
விளம், விளம், விளங்கனி.

௩௱௫௭ ௨௨ விளம், மா, தேமா, விளம், மா, தேமா.

௩௱௫௮ ௨௪ மாங்கனி, கூவிளம், கூவிளங்காய், மாங்கனி, கூவிளம், கூவிளங்காய்.

௩௱௬௧ ௩௧ { கருவிளம், புளிமா, தேமா, கருவிளம், கருவிளம், புளிமா, தேமா, கருவிளம்.
தன்தன், தன்த்த, தான, தன்தன், தன்தன், தன்த்த், தான், தன்தன்.
கருவிளங்காய், தேமா, தேமா, கருவிளம், கருவிளங்காய், தேமா, தேமா, கருவிளம்.

௩௱௬௪ ௩௮ { புளிமா, கருவிளம், புளிமா, கருவிளம், புளிமா, கருவிளம், கருவிளம்.
தன்ன், தன்தன், தன்ன், தன்தன், தன்ன், தன்தன், தன்தனு.

சந்தங்களினட்டவணை.

பக்கம்,	விருத்தம்.	
௲௱௬௭	௪௪	விளம், விளம், மா, கூவிளம். விளம், விளம், விளங்கனி.
௲௱௭௧	௫௬	மா, கூவிளம், கூவிளம், கூவிளம். விளங்கனி, கூவிளம், கூவிளம்.

விவரம். இவ்வட்டவணையிற் குறித்திருக்கிற குறிப்புகளு மன்றி யிக்காப்பியத்தில் மற்றவையுமுண்டு. உதாரணம்: சோசுவன்வெற்றிப்படலம்-௧௧-ம். விருத்தம்.

தனதனந்த்தன், தனதனந்த்தன், தனதனந்த்தன், தனதனு.

தேம்பாவணி.

பதின்மூன்றாவது.

பைதிரநீங்குபடலம்.

வேறு.

குளிமுகத்தினிவையாகிப்பைம்பூமேய்ந்த கனலொப்ப
சுளிமுகத்தினூற்றதுயருள்ளம்வாட்டித் துகைத்தன்ன[illegible]ச
வளிமுகத்தின்விளக்கன்னமயங்கியேங்க வந்தவையான்
கிளிமுகத்தின் கிளவியொடுவிரும்பியிங்கண் கிளக்குகிற்பேன்.

உரை.—முற்சொன்னதெல்லா மகிழ்ச்சியோடுநடந்தபின்பு பைம்பூந்தாதைச் செந்தீயுண்டாற்போல வெகுண்டுவந்ததுயர் மரியுஞ்சூசையுமென் றிருவருள்ளத்தைவாட்டிவருந்தும்படி யவர் காற்றின்முன்வைத்தவிளக்குப்போல மயங்கியேங்கும்படி யங்கேயானசெய்தியை நானிங்கேமடக்கிளிச்சொல்லாகவிரும்பிச் சொல்லுவேனென்க. (க)

பூந்தாமக்கொம்பனையாள்பூத்தபைம்பூமுகைமுகத்திற்
றேந்தாமத்திருமகனேர்ந்தின்னுமெண்ணாள் செலவன்னார்
தாந்தாமக்கடிநகர்கண்டங்களுள்ளி நாடொறும்பொற்
காந்தாமக்கோயில்விழாவணியின்வெஃகிக் கனிசேர்வார்.

உரை.—பூங்கொம்போடொத்தாள் பூத்தபூவரும்பினொத்தமுகத்தையுடைய வாசமாலையாகிய திருக்குமாரனைநேர்ந்தபின் பின்னமெட்டுநாளுமங்கேசெல்லும்படி மரியுஞ்சூசை

யுந் தாமே யந்நகரிடத்துத் தரித்தற் காசைவைத்திருந்து நா
டோறும் பொற்கோயிலுக்குத் திருநாளாக விரும்பிப்போ
வாரென்க. (உ)

நெஞ்சுபதிகொண்டவருளெஞ்சாநீரார் நிறைந்தைந்
நாண்
மஞ்சுபதிகொண்டமலையொத்தபைம்பூ மணிப்புகைசூழ்
விஞ்சுபதிகொண்டமரர்வைகுங்கோயில் மேவியபின்
னஞ்சுபதிகொண்டவுரைத்தூதுவானோனவின்றடைந்தான்.

உரை.—தன்பதியென்று தயையேகுடியாய்நிற்கு நெஞ்சினையுடைய நீராராகியமரியுஞ்சூசையுஞ் சொன்னபடிமேகங்கள் பதியாய்நிற்குமலைபோல வகின்முதலியநற்புகைகள் மண்டிச்சூழ வானவர்குடியாய்நிற்குமக்கோயிலுக் கைந்துநாளும்போனபின்பு தஞ்சினைநிறைந்தவுரைகளைச்சொல்வியொருவானவன் றூதாகவந்தானென்க. (ங)

கான்வயிறூர்பூங்கொடியோனுறங்குங்காலை கதிர்தும்மி
மீன்வயிறூருருக்காட்டிவிண்ணோனெய்தி விரைக்கொடியோ
ஊன்வயிறூர்வேல்வேந்தனிளவற்கோற லுள்ளினனீ
தேன்வயிறூரிப்பதிநீத்தெசித்துநாட்டைச்செல்கவென்றான்.

உரை.—வாசனைநிறைந்த பூங்கொடியையுயர்த்தசூசை யுறங்கினபொழுது கதிரைவிட்டு மீனுருவாகவந்தவானவன் சொல்லுவான்: வாசபூங்கொடியேந்தியவனே யூனிறைந்த கொடியவேலையுடைய வேந்தனாகிய வெரோதன் றேவகுழந்தையைக் கொல்லும்படிநினைவெடுத்தா னாதலா னீயுடனே தேனைப்பொழிந்த வித்தேசத்தைவிட் டெசித்துநாட்டிற்குப்போவாயாக வென்றானென்க. (ச)

அழற்குளித்தபைந்தாதோகண்பாய்வேலோ வகல்வாய்
ப்புட்
புழற்குளித்தசெந்தீயோவருமோகூற்றோ பொருவின்றி
நிழற்குளித்தவுருவானோன்கொடுஞ்சொற்கேட்டு நெடுங்க
டலீர்ச் [ந்தான்.
சுழற்குளித்தமனஞ்சோர்ந்துவளனப்பணியைத்தொழுதுவ

உரை.— பைம்பூந்தாது தீந்துகெடும்படி குளித்ததீயோ கண்ணிலேபாய்ந்தவெறிவேலோ வகன்றபுண்வாயிலே குளித்தசெந்தீயோ விடியோ கூற்றனோ விவையெல்லாநிகராதபடி விளங்கியவடிவோடுவந்த வானவன் சொன்னசொல் கொடியதாய்த்தோன்றி யதைக்கேட்டகுசைநெடுங்கடலிலே சுழலப்பட்டமிழ்ந்தித் தன்மனஞ்சோரும்படிநொந்து பின்னையு மத்தேவபணியைவணங்கினானென்க. (௫)

மலிநிழற்பட்டலர்மலரினொய்யஞ்சேயின் மழவினை
யும் [னையா
பொலிநிழற்பட்டலர்பூங்கொம்பொத்தானொய்வும் புனைவி
லவிநிழற்பட்டெரியெசித்தார்நாட்டின்சேனாமாய்ந்தவளன்
புலிநிழற்பட்டேங்கியமான்போலவேங்கிப் புலம்பினனால்.

உரை.—வளனாகியகுசை யப்பணியைக்கேட்டவளவிலே மிக்கநிழலிலே மலர்ந்த பூவின்றன்மைத்தாகிய திருக்குமா[illegible]னுடையவிளமையு நிழலிலேமலர்ந்த பூங்கொம்பனை[illegible]னொய்மையும் பாவவினையா லழற்பட்டெரியு மெசித்தார் நாட்டின்றாரமு மென்னு மிவையெல்லாவற்றையுமாராய்ந்ததனாற் புலியினிழற்பட்டவளவிலேமான்குழைந்தேங்கினாற் போலத் தானுமேங்கிப் புலம்பாநின்றாளென்க. (௬)

அறிவின்மையுறவின்மையறத்தினின்மையங்கட்சென்
னெறியின்மைநெறிதுலைக்குமுறுதியின்மை நெறிதன்னிற்
பறியின்மைசார்பின்மைதன்பாவின்மை பரிசல்லாற் [ன்.
பிறிவின்மையோர்ந்துளைந்தானுளைந்துமீண்டே பிரிவுற்றா

உரை.—மீளவுமந்நாட்டிற் றம்மையறிந்தாருமின்றி யுறவோருமின்றி யறத்தினைவிரும்பினாருமின்றி யங்கேபோம்வழியறிதலுமின்றி வழிதுலையும்படி யுதவியுமின்றி வழியினாருமின்றிச் சார்புமின்றித் தனக்குத் தரித்திரமல்லது வேறொன்றுமின்றி யாயவித்தன்மையெல்லாமோர்ந்து மிகவும்வருந்தினான், வருந்தினுந்தாமதமின்றித் தேவகட்டளையின்படியுடனேபோதலுற்றானென்க. (௭)

வேறு.

வேரியந்தாரினான் விரைந்தெழுந்தனன்
மாரியந்தாரையின் வளர்கண்டாரைநீர்
நேரியந்துணைவியை நேடிநாயகன்
றேரியங்கேவிய பணியைச்செப்பினான்.

உரை.— வாசபூங்கொடியோனாகியகுசை விரைந்தெழுந்துமாரியின்றாரையாகக் கண்ணீரைவிட்டழுது தன்னற்றுணைவியைத்தேடி யாண்டவன்றெளிந்து செய்தகட்டளை யின்னதென்று சொன்னானென்க. (௮)

செய்யிதட்டாமரை பழித்தசீறடித்
துய்யிதட்டுப்பவிழ் சுருதிவாயினா
ளையிதட்டாரினா ளறையத்தீமுனர்
நொய்யிதட்டாதென நொந்துவாடினாள்.

உரை.—சிவந்ததாமரையைப்பழித்த சீறடியையுந் தூய பவளநிறத்தலர்ந்து வேதத்தைவிரித்துரைக்கும் வாயினையுமுடையமரியென்பவ ளழகிய பூங்கொடியோன்குசை யச்செய்தியைச்சொன்னவளவிலே தானொய்யபூந்தாது தீயிலேவாடினாற்போல வாடிநொந்தாளென்க. (௯)

எதிரிலான்பகையிலா னிணையெலாமிலா
னுதிரிலாமதுகையா னுணர்வின்மேனின்றான்
விதிரிலாவிதியிதென் றிறைஞ்சிவேண்டினர்
பிதிரிலாத்திருவுளம் பேணித்தேரினார்.

உரை.—இருவரும்வருந்தினபின்பு தனக்கெதிரும்பகையுநிகருமொன்றுமின்றித்தடுக்கப்படாதவல்லமையையுடையனாய் மனிதருணருமெல்லையைக்கடந்தகடவுள்செய்த தப்பாதகட்டளையிதென்று வணங்கிவேண்டிச் சிதைவில்லாத திருவுளத்தைப்பேணித் தெளிந்தாரென்க. (௰)

தேரியமனத்தவர் தேறிநாயக
னாரியமுகத்துறை யங்கணேகினார்

நீரியமுகிலெனப் படத்தைநீக்கலாற்
சூரியனவியெனத் தோன்றல்தோன்றினான்.

உரை.—இத்தன்மைத்துத் தெளிந்தமனத்திற்றேறித் தேவ குமார னழகியமுகத்தோடிருந்தவிடத்துச்சேர்ந்தார், சேர்ந் தபின்பு செல்வமணிமேகத்தின்றன்மையா லவன்மேற்போ ட்டிருந்தபடத்தை நீக்கினதினான் மேகநீங்கிச் சூரியன்றோ ன்றினாற்போலத் தேவகுழந்தைதோன்றினானென்க. (௰௧)

மூப்பொழுதொருபொழு தாகமுற்றுணர்ந்
தெப்பொழுதனைத்துமெய்ப் பொருளியாவினு
மெய்ப்பொருடெளித்தவிர் காட்சிமேன்மையா
னப்பொழுதுறங்கினா னன்னப்பார்ப்பனான்.

உரை.—இறப்பெதிர் நிகழென்னுமுக்காலமு நிகழ்கா லமாக வெல்லாவற்றையு மிறந்தபொருளும் வரும்பொருளு மன்றுள்ளபொருளைக்கண்டாற்போல வெப்பொழுதுமறிந் து அறிந்தபொருள்களில் மெய்ப்பொருளை மயக்கமின்றித் தெளித்துவிளங்கியகாட்சியையுடைய நாதனாகிய வத்திருக்கு மார னவர்வந்தப்பொழுதேயன்னத்தின்குஞ்சுபோலத் துயி லாநின்றானென்க. (௰௨)

கலைமுகந்தருந்திய புலமைக்காட்சியோ
யலைமுகந்தருந்திய வருளென் றன்பணி
கொலைமுகந்தருந்துயர் கொண்டுஞ்செய்வலென்
றலைமுகந்தருந்தழற் குருகியேந்தினாள்.

உரை.—கலையெல்லாங்கடந்த காட்சியையுடையமகனே! கடலினும் பெரிதாயவருளின்றன்மை யிதென்றெண்ணிக் கொல்லுந்தன்மையுள்ள துயரைக்கொண்டாயினு முன்கட் டளையைத் திருத்துவேனென்றுசொல்லி யுலையின்முகந்துட் கொண்ட துன்பத்தழலி லுருகியநெஞ்சினளாய்த் தாயாகி யமரியென்பவள் மகனையெடுத்துக்கையிலேந்தினாளென்க. (௰௩)

ஏர்வளரடிபணிந் திளவலேந்தவி
னீர்வளர்குவளைதேன் றுளித்தனேரவன்

சீர்வளர்விழிமலர் திறந்துமுத்துகச்
சூர்வளர்மனத்தவர் துகைத்துளேங்கினர்.

உரை.—அழகியபாதமலரைவணங்கித் தாய்திருக்குமார னையெடுத்தேந்தியபோது நீலிவ்வளருங்குவளை தேனைத்து ளித்தாற்போல வவனுந் தன்றிருவிழிமலரைத்திறந்து முத் தாகக்கண்ணீரைவிட்டழுதா னதைக்கண்ட மரியுஞ்சூசையு மிகுந்ததுக்கத்தோடுவருந்தியேங்கினரென்க. (யச)

கதிர்தருங்காதலன் கன்னித்தாயுரத்
தெதிர்தரும்விழிகலந் தினிதிற்சாய்ந்தனன்
முதிர்தருமமிர்துக் முறுவற்கொட்டலாற்
பொதிர்தருமின்பமுற் றிருவர்பொங்கினர்.

உரை.—ஒளியைச்செய்யாநின்ற திருக்குமார னவர்கொ ண்டதுயரத்தைக்கண்டு தன்கன்னியாகியதாயின்மார்பிலேத ன்கண்ணு மவள்கண்ணுமெதிர்பட்டுக் கலந்தபார்வையாம் படி சாய்ந்தன்று யவர்க் கமிர்தத்தையூட்டினதன்மைபோல வொருபுன்னகையைக்காட்டினன், காட்டினவளவிலேயிரு வர்மிகக்களிகூர்ந் தின்பத்தினற்பொங்கினரென்க. (யரு)

பொங்கியவருத்தியாற் பொலிந்தகன்னியுந்
தங்கியகொடியொடுட் டளிர்த்தசூசையும்
பங்கயமலரடி பணிந்துபாலனை
யங்கிவரகலுதற் காசிகேட்டனர்.

உரை.—அங்ஙனம் பொங்கியவாசையோடுகன்னித்தாயு ந் தானுயர்த்தபூங்கொடியைப்போல வுள்ளமலர்ந்து தளிர் த்தசூசையுந் தாமரைப்பாதத்தைவணங்கிப்போதற் காசீர்வா தத்தைத் திருக்குமாரனைக்கேட்டாரென்க. (யசு)

மருந்தடக்கனிமுக மகிழ்ந்துநாயக
னருந்தடத்தவர்க்குநல்லருளோடாசியைத்
தருந்தடத்திவர்ந்திருட் புறத்தசாமத்தாந்
திருந்தடத்தெருதற் கெழுந்துபோயினர்.

உரை.—அப்பொழுதுயிரைத்தருமருந்தினு மினியமுகத்தைக்காட்டிமகிழ்ந்ததாதனு மரியமாட்சிமையோடிருவருக்கருளைப்பொழிந்த வாசீர்வாதத்தைத்தந்தான், தந்தநன்மையா லிவருயர்ந் திருண்டநடுச்சாமத்தில் நெடும்வழிநடப்பதற்கெழுந்து போகத்துடங்கினுரென்க. (௰எ)

இருச்சுடரோன்பட வீனாயாயிரங்
குருச்சுடர்மேனியைக் கொண்டவானவர்
திருச்சுடரோனெனுஞ் சிறுவற்றுளிணை
பருச்சுடர்பாய்ந்துறப் பணிந்துதோன்றினர்.

உரை.—முன் னருபியாய்நின்ற பதினுயிர வானவரத்தரவாயிலே சூரியன்வடிவுமறைப்பதற்குப் பெருங்கதிரைவீசியவுடலையெடுத்துக்காட்டித் திருச்சுடரோனுகிய வத்தேவகுமாரன் றிருப்பாதத்திற் சுடர்பாயும்படி விழுந்துவணங்கித்தோன்றினுரென்க. (௰அ)

எல்வியல்படச்சுட ரிரவிறேற்றினர்
பல்வியங்கடலொலி படமுழக்கினு
ரல்வியங்குழவியை யளவில்வாழ்த்தினர்
கல்வியம்பாத்தொடை கனியப்பாடினர்.

உரை.—அத்தன்மையாய்த் தோன்றினவானவர் பகலினுமவ்விராவிளங்கும்படி யொளியைத்தோற்றினர், பலவாச்சியங்களைக்கொண்டுகடலினுமுழங்கினர், ஆம்பலின்வடிவாகநின்ற திருக்குமாரனை யளவின்றிவாழ்த்தினர், மதுவினுமினியபாவின்றொடைகளைப் பாடினுரென்க. (௰௯)

வேறு.

வார்வளர்முரசுமாரா வரிவளர்வளையுமூதா
தேர்வளருருளுஞ்செல்லா தெருவளரரவுந்தோன்று
வூர்வளரசைவுமில்லா வுறங்கியசாமத்தேகிச்
சீர்வளருயிர்போயவ்வூர் செத்துடம்பொத்ததன்றே.

உரை.—அவர்போனநடுச்சாமத்தி லெல்லாருமுறங்காநிற்ப முரசுஞ்சங்குமுழங்காமற் றேர்கணடவாமற் றெருக்க

ளிலாட்புழக்கந்தோன்றாம லூரிலேயசைவில்லாமலிருந்தந று லந்நகர் தன்னுயிர்போய்ச் செத்த பிணத்தின்றன்மை போலநின்றதென்க. (உ௰)

நல்வினையுலந்தபோழ்தின் னலமெலாமகலும்போலக்
கொல்வினையறுப்பவந்த குணத்தொகையிறைவன்போக
வல்வினைமருளிற்பொங்கு மல்லவையுயிரைவாட்டப்
புல்வினைமல்கிச்சீலம் புரிநலம்போயிற்றன்றே.

உரை.—நல்வினையின்றி நன்மையில்லையென்றதுபோல வுயிரைக்கொல்லுந் தீவினையையறுக்கும்படி மனிதனாயவதரித்துவந்த நற்குணத்தொகையோனாகியகடவு ளவ்விடத்து நீங்கிப்போனதினா லறிவிருட்டுமயக்கத்தாற்பொங்கிவரும் பாவங்க ளுயிரைவாட்டும்படி புல்வினையாகியதீவினை யங்கேம வியப்பெருகி நல்லொழுக்கத்தோடேவரு நன்மையெல்லாம் போயிற்றென்க. (உக)

இருள்புரிகங்குலுப்ப னிரிந்தறக்கடலோன்போக
வருள்புரிவுணர்வுகாட்சி யறந்தவஞ்சுருதிதானந்
தெருள்பொறைநீதிவீரஞ் சீர்தகையுறுதிஞானம்
பொருள்புகழ்புலமைமற்றப் பொலிநலம்போயிற்றன்றே.

உரை.—இருண்டவிராநடுவிலே யறக்கடலோன்போ யவனோ டன்றுகூட வருள்முதற் பத்தொன்பதுமன்றி மற்றுள்ள நன்மையெல்லாம் போயிற்றென்க. (உஉ)

அலைபுறங்கொண்டஞாலத் தடரிருள்சீக்கயாக்கை
நிலைபுறங்கொண்டஞான நெடுஞ்சுடரனையான்போகக்
கொலைபுறங்கொண்டவேந்தன் குணத்துரிநகருநாடும்
வலைபுறங்கொண்டபாவ மவிழ்ந்திருள்மொய்த்ததன்றே.

உரை.—கடல்சூழ்ந்தபூவுலகி லடர்ந்தபாவவிருளை நீக்க வுடலைக்கொண்டுதித்த ஞானசுடரோன்போனதினா லிவனைக் கொல்லநினைத்த கொடியவேந்தற்கிணையாக நகருநாடு மெங்கு மன்றுயிரை யகப்படுத்தும்படி சூழவலைவைத்த பாவமவிழ்த்துமயக்குவிக்குமிருளேமொய்த்ததென்க. (உ௩)

கதிதள்ளியுயர்வானேற்றுங் கனிந்ததம்வேந்தனோடும்
பதிதள்ளியமரர்போகப் பகையுநீண்பசியுநோயு
நிதிதள்ளிமிடியுங்கேடு நிசிதமுந்தீயயாவு
மதிதள்ளிமருட்டும்பேயு மறுகுடியாயிற்றன்றே.

உரை.— முடிவின்றி வானுலகில்வணங்கப்பட்ட தந்நல் விராசாவேரடுகூட வவ்விடத்துநீங்கிவானவரொல்லாரும்போய் மறுகுடியாகப் பகை பசி நோய் தரித்திரங் கேடு பொய்யன்றி மற்றக் கொடியதெல்லாமு மறிவினைமயக்குவிக்கும் பேயும்வந்தனவென்க. (உச)

மணிவளர்முகிற்றண்ணூர்தி வானுடுக்கொடிதண்டிங்க ளணிவளர்குடைகொண்டெங்கு மருணிழன்மன்னன்போக பணிவளர்நகருநாடும் பனிப்புறப்பகைத்துவாட்டிப் [ப் பிணிவளர்வினையின்செந்தீப் பிரிவிலாமேய்ந்ததன்றே.

உரை. — ஊர்தியாகமணிமேகத்தையுங் கொடியாகவான் மீனையுங் குடையாகக் குளிர்ந்ததிங்களையுங்கொண் டெங்குமுயிர்குளிரும்படி யருளினிழலைச்செய்யு மன்னனாகிய வவதரித்தநாதன்கன்றதினு லழகியநகருநாடு நடுங்கும்படி பகைத்துயிராவாட்டிப் பிணிவளர்தற்குக்காரணமாயவினையாகியசெந்தீயோயாமலெல்லாவற்றையுமேய்ந்ததென்க. (உரு)

வேறு.

கண்ணகன்றவகழிகலங்கவிற்
றண்ணகன்றதரங்கந்தளம்பவே
யெண்ணகன்றகுணத்திவர்நின்மினென்
றெண்ணகன்றகைநீட்டினதொத்தவே.

உரை. — அங்ஙனம்போய்நகரைவிட்டுக் கண்ணுக்ககன்றவகிளிடத்துச்சேர்ந்தார், சேர்ந்தவிடத்தவ்வகிள்கலங்காநிற்கவலைகளுந்தளம்பாநிற்க வெண்ணிறந்தநற்குணங்களையுடையவிவர்போகாமற்றடுத்து நில்லுங்களென்று விளங்கிய தன்கைகளை நீட்டினதன்மைபோலத் தோன்றிற்றென்க. (உசு)

அலையலைந்தலர்கூப்பியதாமரை
யிலையலைந்தலைமீதெழுந்தாடலந்
நிலையடைந்தனர்நீங்கிவிர்நின்மினென்
றலைவடைந்துகைகூப்பியதொத்தவே.

உரை.— திரைகளலைவினாற்குவிந்ததாமரையு மலைந்து திரைமேற்றோன்றியாடலே யங்கேவந்த விம்மூவரைப்பார்த்துப் போகாதேயுங்கள் நில்லுங்களென்று கலங்கிவருந்திக் கையைக்கூப்பித்தொழுததன்மைபோலத்தோன்றிற்றென்க. (௨௭)

நாகநெற்றியினன்மணியோடைபோ
னாகநெற்றியினன்மணியாறுபாய்
நாகநெற்றியினன்மலர்க்காவப்பா
னாகநெற்றியினன்மதிதோன்றிற்றே.

உரை.—யானைநெற்றியிலே தூங்குமணியாற்செய்த பட்டம்போல மலையினுச்சியிலே தூங்கிவிழு மணிகளைக்கொழித்தவாறுவந்துபாயும் புன்னைமரங்களுச்சியிலேபூத்த சோலையைக்கடந்தவளவிலே வானத்தினுச்சியிலே தேய்ந்தபிறை தோன்றும்படி யெழுந்ததென்க. (௨௮)

உறைகிடந்தவிண்வேந்துயிருண்பலென்
றுறைகிடந்தயிலோங்கரசைப்பகைத்
துறைகிடந்தகடற்பறைக்கோர்குணி
லுறைகிடந்தனவொண்பிறைதோற்றமே.

உரை.— அன்றுமுளைத்தபிறை யெப்படிதோன்றிற்றென்னில் மழையைப்பொழியும் வானத்தின்மேலாளு மரசனாகிய வத்தேவகுழந்தையுயிரை நானேயுண்பேனென் றுறையினுட்கிடந்தவேலையெடுத் தோங்கின கொடியமன்னனைப் பகைத் தவன்மேற்படையைக்கூட்டும்படி யுவர்க்கடலுமுரசாகக்கொண் டதையடித்தகுறுந்தடியாக வப்பிறைதோன்றிற்றென்க. (௨௯)

சிதமிடைந்தலர்ச்சேடனையாட்கையிற்
சிதமிடைந்தலர்சேடனைநோக்குபக்

சிதமிடைந்தலர்சேடெனத்தாங்குபற்
சிதமிடைந்தலர்சேடுகண்ணொத்தவே.

உரை.—மாறாத்தன்கன்னிமையாற் றூயவெண்மையுள்ள பூவனையதாய்கையிலே ஞானவடிவாய்மலர்ந்த வத்தேவகுழந்தையைக்காண வாசையினால் வானத்தினெருங்கிப் பூத்தபூவடிவாய்ப்பலமீன்களேநிறையமலர்ந்த வழகியவானத்தின்கண்போலத் தோன்றிற்றென்க. (௫௰)

மனவணங்குவணங்கடிநாயகன்
மனவணங்குவணங்கில்வருந்தினார்
மனவணங்குவணங்கவிலாளனு
மனவணங்குவணங்குமணங்குமே.

உரை.—நவமணிகள் தம்மினுமழகியதென்று வணங்கிய திருப்பாதத்தையுடையநாதனுக்கு நிலைபெற்றுவந்ததுன்பமாறாமைகண்டுவருந்தினார் மனத்திற்கொண்டதுயர்மாறாதகுசையும் பைம்பொன்னினுமழகியவணங்காகிய மரியென்பவளுமென்க. (௫௧)

ஆரணந்தருமாண்டகையாகுலக்
காரணந்தருங்கட்புனல்கண்டிடர்
பூரணந்தருமார்புபுடைத்தெலா
வாரணந்தரும்வானுறக்கூக்குரல்.

உரை.—வேதத்தினாகமத்தைத் திருவுளம்பற்றித்தந்த நாதனாகிய வத்திருக்குழந்தை யடைந்ததுன்பத்தினா விவர்வருந்தியழுங்கண்ணீரைக்கண்டு பூரணமாய்த்துயரையடைந்து தம்மார்பினையடித்துக் கோழிகளெல்லாம்வானமட்டுஞ் சேரும்படிகூக்குரலிட்டனவென்க. (௫௨)

பேர்த்ததன்பெருமானடைபீழைவா
னோர்ந்ததன்மையுளைந்தழுதாலென
வார்ந்ததண்பனிதாரையின்மல்கியன்
றூர்ந்தபைந்தழைக்காவழுதாயதே.

உரை.—வானமுந் தன்னிடத்தினின்றுபோர்ந் தவதரித்த தன்மன்னவனாகிய வித்திருக்குமாரனுற்றதுன்பங்களையாராய்ந்துவருந்திக் கண்ணீர்விட்டழுதாற்போலக் குளிர்ந்தபனியைப்பெய்தது, மழைத்தாரைபோலப் பனிபெய்தமிகுதியாலன்றுபசியதழைகள் பனித்துளிவிட்டொழுகிக் காவுமழுத தன்மைபோலத் தோன்றிற்றென்க. (௩௩)

கருகருவெனக்காடைகளுழ்ந்தன
குருகுருவெனத்தோகைகணைந்தழும்
புருகுருவுதலோடிவர்போதலா
லருநறுப்பொழிலாரழுமோதையே.

உரை.—காடைகள் கருகருவென்றழவும் மயில்கள் குருகுருவென்று நைந்தழவும் புருக்கள் குருவிநைந்தழவு மிம்மூவர்போனதினால் வாசனைநிறைந்த சோலைகளெங்கு மழுமோசைதோன்றிற்றென்க. (௩௪)

கிளியழக்குயில்கேட்டழத்தேனுணு
தளியழச்சிறைநைந்தழவாவென
வளியழத்துயர்மல்கிவனத்தெலா
வுளியழத்தகவோரழவேகினர்.

உரை.—கிளியுங்குயிலுந் தேனுண்ணுமற்கிடந்தவண்டு மன்னமு மழாநிற்க வையோவென்றிரங்கிக் காற்றழுதுவீசத் துயர்மிகுதியால் வனத்தினிடங்களெல்லாமழாநிற்க விவருமழுதுகொண்டுபோனாரென்க. (௩௫)

கான்மறந்தனகாமலரன்னதே
தேன்மறந்தனதேனினமன்னதே
பான்மறந்தனமான்பறழன்னதே
யான்மறந்தனதம்பிள்ளையன்னதே.

உரை.—அன்றுகாவிலுள்ளமலர் வாசனைவிடமறந்தன, வண்டுகள் தேனையுண்ணமறந்தன, மான்குட்டிகள் பாலையுண்ணமறந்தன, பசுக்கள் தங்குட்டிகளைமறந்தனவென்க. (௩௬)

சுருதியேந்துசுதற்றுமிப்பேனைக்
கருதியேந்துகுரோதங்கதித்தெனப்
பருதியேந்துபடம்படாமுனர்
குருதியேந்துகுணக்குசிவந்ததே.

உரை.— அப்பொழுது விடியக்காலமாகிக் கீழ்த்திசைசிவந்ததெப்படிதோன்றிற்றென்னில் வேதநாயகனுகியவத்திருக்குமாரனைக்கொல்லும்படி யெரோதனுகியமன்னனினைத்தகொடுமையைக்கண்டு வானங்கோபித்தாற்போலச் சூரியனுதயத்துமுன்னே யிரத்த முகத்திலேபாய்ந்ததன்மைத்துக் கீழ்திசைசிவந்ததென்க. (௩௭)

மூழவெழுந்தொனியொப்பமுந்நீரொலி
யெழவெழுந்துபொரக்கதிரெய்சரம்
விழவெழுந்தவெய்யோன்சிவந்தெய்திவா
னழவெழுந்துயராற்றிலதோன்றிற்றே.

உரை.—போர்முரசின் முழக்கம்போலக் கடல்முழங்காநிற்கச் சூரியனெழுந்து கொடியவரசன்மேற் போர்செய்யும்படி கதிர்களையம்புகளாகவிட்டுச் சிவந்தமுகத்தோடுதோன்றி வானுலகு மழும்படி யிம்மூவர்க்குவந்ததுன்பங்களைத் தான்பொறுக்கமாட்டாததன்மையென்று தோன்றிற்றென்க. (௩௮)

பானும்பானுெடுபோசறைபட்டழும்
வானும்வானுெடுமண்ணுமிரங்கின
தேனுமேதுமுணர்கிலமாக்களுங்
கோனுங்கோடணைகொண்டிரங்காயினுர்.

உரை.—இங்ஙனஞ் சூரியனுஞ் சூரியனோடு வருந்தியழுதவானுலகுமண்ணுலகு மிம்மூவர்க்கிரங்கினு லிவராரென்று மிவர்பிரிந்துபோகிறுரென்றுமறியாத மற்றமனிதரு மெரோதனுகியமன்னவனுங் கொடுமையாகவிரங்காதிருந்தாரென்க. (௩௯)

பைதிரநீங்குபடலமுற்றும்.
ஆகப் படலம்-மரு இ விருத்தம்
௬௨௱௬௰௪.

பதினான்காவது.

இளவன்மாட்சிப்படலம்.

வேறு.

இரங்குபடர்கானனைவையுநைந்தழுதிராக்குந்
தரங்குபடர்வேலையிறளம்பியலைநெஞ்சா
ரரங்குபடர்வான்றொழுமருட்குழவியேந்திக்
குரங்குபடர்காட்டுநெறிகொள்ளவலமுற்றார்.

உரை.—சொன்னதன்மையிற் காட்டிலுள்ளதெல்லா மிவ்ர்க்கிரங்கியழாநிற்க விரைத்தலைந்த கடலைப்போல வலையாநிற்குநெஞ்சினையுடையமரியுஞ்சூசையு மகன்றவானுலகத்தோர் வணங்குங்கருணையையுடைய திருக்குமாரனையேந்தி யொளித்துப்போம்படி மனிதர்சந்தடியில்லாமையால் விலங்கினம் படர்ந்தகாட்டுவழியேபோதற்கு வலத்தேபோனாரென்க. (க)

பிழைக்குலமளிப்பவர்பிழைப்பிடமிலார்போ
லுழைக்குலநடுக்கமெனவுட்குலையநைந்து
மழைக்குலமிடத்துநுழைமின்மருளமல்குந்
தழைக்குலமிடத்துநுழையச்சடுதிபோனார்.

உரை.—பாவிகளைப்பிழைப்பிக்கவந்தவர் தாம்பிழைக்கும்படி யிடமில்லவரைப்போல மான்கள்வெருவின தன்மைத்துத் தாமுள்ளஞ்சி நைந்து மேகங்களிடத்துநுழையு மின்களோவென்று மயங்கும்படி தாழ் தழைத்தகாட்டிலே நுழைதற்கு விரைந்துபோனாரென்க. (உ)

இருத்தியெழுவானரசனீரடிநனைப்ப
வருத்தியெழுதுன்பமுகிலார்த்துமிழ்கண்மாரி
திருத்தியெழுமாதவனுளைந்துளையுடேற்றாக்
கருத்திலெழுமார்ந்ததுயர்கான்றினையசொன்னான்.

உரை.—செல்வவானரசனாகிய திருக்குமார னிருபாதத் தையு நனைக்கும்படி தன்னன்பினாலெழுந்த துன்பமென்னு மேகமிடித்துப்பெய்த கண்ணீரென்னுமாரியைப் பொழிந் த மாதவனாகியகுசை வருந்தி வருந்தியமனத்திற்றேறுதலின் றிக் கொண்டதுயரைக் கொப்புளித்தாற்போல விவற்றைச் சொன்னானென்க. (ந)

விண்முழுதுமேற்றுதனிவீரமுதலோனே
புண்முழுதுமேற்றியபுலாலயிலனோடு
மண்முழுதுமொன்றுபடமல்கியமர்செய்தா
லெண்முழுதுநீத்தநினதாண்மையெதிருண்டோ.

உரை.—வானுலகத்தோரெல்லாருமொருப்பட்டுவணங்கு நிகராதவல்லமையையுடையமுதலோனே! தமக்குவிருந் தம ருமென்று கழுசமுதலியபுள்ளெல்லாம்வணங்கும் புலாவி னாறும்வேலையுடைய வெரோதனோடு மற்றவுலகமெல்லா ங்கூடிப்போர்செய்யவந்தாலு மட்டொன்றில்லாத வுன்னு டையவல்லமைக் கெதிருண்டோவென்றானென்க. (ச)

புல்வினையுளைந்தழவுதித்தருள்புரிந்து
நல்வினைதளிர்ப்பநலம்யார்க்குமிடுநல்லோய்
கொல்வினையுணர்ந்துனுயிர்கோறனைதாண்மைக்
கொல்வினையெனக்கருதுமிவ்வுலகிலுண்டோ.

உரை.—தீவினைகளுளைந்தழும்படி நீமனிதனாய்ப்பிறந் து நமக்கருளைச்செய்து நல்வினைகள்வளர்ந்துதளிர்க்கும்ப டியெவர்க்குநன்மைசெய்யுநாதனே! கொலைத்தொழிலைநினைத் துன்னுயிரைக்கொல்லும்படி தம்வல்லமையினாலாருந்தன் மையென்றிவ்வுலகினினைப்பாருண்டோவென்றானென்க. (ரு)

தொல்லையுளநம்வினைதுடைத்துநமைவீட்டில்
வல்லையுளவன்பொடுபுகுப்பமனுவத்தோ
யொல்லையுளதத்துயரொழித்திடநினக்கே
யெல்லையுளதொன்றுமிலவேண்டுமிடர்கொல்லோ.

உரை.—நமக்குள்ளபழம்வினைகளைத்துடைத்து வல்லமையுள்ள தயையைக்கொண்டு நம்மைப்பரமவீட்டிலே சேர்க்கும்படி மனிதனுயப்பிறந்தநாதனே! பிறந்தவுடனே நம்முடைய துயர்களைத்தீர்க்கும்படி யுனக்குமட்டில்லாததுன்பங்க ளடையவேண்டுமோ வென்றுனென்க. (சூ)

மூற்றுமுதலாயுலகமூன்றுதொழவான்மேற்
பெற்றுமுதலீறிலபெருந்தகையைமண்மே
லுற்றுமுதல்வீடிலவிலங்குறையுள்வந்தா
யிற்றுமுதனுடகலல்வேண்டுமினிக்கொல்லோ.

உரை.—நீயெல்லாத்துக்குமுதலாகி யுன்னைமூவுலகமும்வணங்காநிற்க வான்மேல்வீற்றிருந்து ஆதியந்தமின்றிப் பெருந்தகைமையுடையோனே! நீயவதரித்துப் பூவுலகில்வந்திருக்கும்படி மனையுமுதலாயின்றி விலங்கின மொதுங்குமிடத்திலேபிறந்தா யிதுமுதற்கொண்டினிநாடுமகன்றுபோதல் வேண்டுமோவென்றுனென்க. (எ)

ஞானமுறுசீலமிலநட்புறவுமில்லா
வானமுறுவேதமிலமாண்பருளுமில்லா
கானமுறுகாய்ந்தசுரமக்கடைகிடந்தா
ரீனமுறுநாடடைதல்வேண்டுமினிக்கொல்லோ.

உரை.—ஞானமுஞ் சீலமு நட்பு மூறவும் வான்கதியைப்பெறுதற்கு வழியாகியவேதமு மாட்சிமையுந் தயையுமென்னுமிவையெல்லாமின்றி யழற்காய்ந்தகானச்சுரத்தி னடந்தப்பாற்கிடந்தவீனநிறைந்தநாட்டிற் கினிப்போதல் வேண்டுமோவென்றுனென்க. (அ)

வெவ்வினைவிளைத்தடுமிவ்வாழ்வுவிடமென்று
மைவ்வினைமறுப்பவிவண்வந்துதுயர்வேண்டின்
மொய்வ்வினைமுதிர்ந்தமுழுதென்மிடிமையல்லா
லெவ்வினைதுலைக்கடைதல்வேண்டுமினியையா.

உரை. — இவ்வுலகின்வாழ்வுகள் தீவினையை விளைத்துக்கொல்லு நஞ்சென்று பாவத்தின்வினைகளை மறுத்தழிக்கும்ப

டி. நீயிங்கேபிறந்து துன்பங்களையடைதற் காலசையுண்டாயி னதற்குத் துயர்நிறைந்த வென்றுரித்திரந்தருந் துன்பங்கள ல்லாதே துலைக்குப்போ யெத்துயரைத்தேடல்வேண்டுமினி யையாவென்றானென்க. (௯)

விஞ்சியதிறஞ்செறியுவிஞ்சைமலிவல்லோய்
துஞ்சியநிலத்தி லுயிர்தோன்றிவினை நீக்கி
யெஞ்சியநலந்தருவையென்றறிவர்யாரே
யஞ்சியதோர்தன்மையிதுவென்றறைவனென்றான்.

உரை.—மிக்கவல்லமையையு மறிவையுமுடைய வல்லோனே! பாவத்தாற் பிணமாய்க்கிடந்தபூவுலகிற் கோருயிராகவந் துவினைகளை நீக்கி யில்லாதநன்மைகளைத்தருவாயென் றிங்கே யாரறிவா ரிப்பொழுதொளித்துப்போகிறதைக்கண் டஞ்சாநின்றாயென்று சொல்லுவாரோவென்றானென்க. (௰)

இற்றறுமருத்தியிலியம்பினனியம்பப்
பற்றறுமுணர்ந்தபலவும்பகர்தறேற்று
முற்றறுமார்த்தையெனா நீத்தமுழுகிச்சொல்
லற்றறுமழுந்தொழிலலாவெலவனுமாற்றான்.

உரை. — குசையுட்கொண்டவன்பினா விவைசொல்விப் பின்னையு மாசையோடேசொல்லநினைத்தபலவுஞ் சொல்லமாட்டாமலடைந்ததுன்பவெள்ளத்தின்முழுகிச் சொல்லற்றுப் போயழுவதன்றி யொன்றுமாற்றாதிருந்தானென்க. (௰௧)

வேறு.

ஆசைவெற்புவீ ழரந்தைவாரியுட்
குசைபட்டய்யச் சுழியின்மூழ்கலிற்
பூசைவாயினாள் புகற்கைதந்தா
மாசையங்கரா மருவச்சொல்வினாள்.

உரை.—தன்னன்பினாசையென்னு மலையினின்று விழுந்த துன்பமென்னும்வெள்ளத்திற் குசையகப்பட்டுச் சந்தேகமென்னு நீர்ச்சுழியிலேமுழுகி யமிழ்ந்திவருகையிற் றேவவ

ருச்சனைவிடாத வாயினையுடைய மரியென்பவளாறுதலான சொல்லென்னுங்கையைச் சூசைக்குத்தந்து மனவூக்கமென்னும் பொற்கணையில்வன்சேரும்படி சொன்னானென்க. (௰உ)

உருக்குங்கா லுலகுயிரெலாங்கெட
முருக்குங்காலமே முடிந்துபோயருள்
பருக்குங்காலமாய்ப் புரந்துபாதுகாத்
திருக்குங்காலமென் றிளவலரயினான்.

உரை.—முன்னாளி விவ்வாண்டவன் கோபமிகுதியாற் பூவுலகிலுள்ளவுயிரெல்லாந் தீயிலேயுருக்கினாற்போலக் கெடும்படி கொலைத்தொழிலைச்செய்வானாயினு மிப்பொழு தக்கொலைக்காலமுடிந்துபோ யருள்மிகும்படிகாலம்வந்து நம்மையிரட்சித்துக்காத்தற்குக்காலமிதென் றுகுழந்தைவடிவாய்த்தோன்றினானென்றானென்க. (௰௩)

மண்ணைவேண்டினும் வகுத்துவாழ்வரு
விண்ணைவேண்டினும் விரும்பியீகுவான்
கண்ணைவேண்டினு மளிக்குங்காறனை
யெண்ணிவேண்டினு மிகல்செய்வான்கொலோ.

உரை.— இவனே வேண்டியவர்க்கு மண்ணரசைத்தந்து நல்லறத்தைச்செய்து முடியாதவாழ்வினையுடைய விண்ணரசைவேண்டுபவர்க்குக் கொடுக்குந்தன்மையுடையனாய்த் தன் கண்ணைவேணுமென்றாற் கொடுக்கும்படி தயையுமுடையனாய்வந்தகுழந்தை தன்னைப்பற்றி வேண்டியிருந்தாலு மெவர்க்கும்பகைசெய்வானோவென்றானென்க. (௰௪)

மணியுயிர்க்குநாண் வடிவிற்றோன்றினன்
பிணியுயிர்க்குமா லவாசெய்பீழையாற்
றணியுயிர்க்கெலா முறுதிதந்துதன்
னணியுயிர்க்கிட ராகமாள்குவான்.

உரை.— தன்மணிவடிவினாற் குழந்தையாய்ப்பிறந்தவன் பிணியைச்செய்யுமயக்கத்தோடுகூடியவாசையால் வந்தபாவ

த்துயர்களாற் றணிவடையுற்றவுயிர்க்கெல்லாந் தானேயுறுதிசெ
ய்திரட்சிக்கும்படி தன்னழகியவுயிர்வருத்தி நமக்குவேண்டி
ச் சாகவந்தானென்றுளென்க. (௰௫)

இறந்துநம்முயி ரிரங்கிக்காக்கவந்
தறந்துதைந்தவ னிறத்தற்கஞ்சவோ
திறந்துதைந்துமுச் செகத்தையாள்பவன்
மறந்துதைந்தபுன் மதுகைக்கஞ்சவோ.

உரை.—இங்ஙனந் தானிறந்து நம்முடையவுயிர்களையிரட்
சிக்கும்படி மனிதனுய்வந்த சகலவறங்களையுடையோ னிப்
பொழுதிறத்தற்கஞ்சுவானே? சர்வத்துக்கும்வல்லவனு யுலக
மூன்றையுமாள்பவனுய்ப் பாவியுடையசிறியதோர் வல்லமை
க்கஞ்சுவானோ வென்றுளென்க. (௰௬)

நஞ்சினுவுயி ரருந்துநாற்படைக்
கஞ்சிலானறி வருள்வல்லாண்மையி
னெஞ்சிலானென விறைஞ்சிக்கூறினு
ணெஞ்சினல்லு தார்ந்தநேமியாள்.

உரை. — நஞ்சாகவுயிரைக்கொன்றுண்ணு நால்வகைப்ப
டைக்குத் தானஞ்சல்செய்யா னறிவையுமருளையுமாண்மை
யையும்பெருமையையு மெலிவின்றிநிறையக்கொண்டவனெ
ன்று வணங்கிச்சொன்னுளமிர்தத்தா னிறைந்தகடலொத்தநெ
ஞ்சினையுடையமரியென்பவளென்க. (௰௭)

புடைவரும்புகழ் பொலிந்தமிக்கயே
லடைவருந்தயை யணிந்ததாடொழு
துடைவருங்கருத் துணர்ந்தவாண்மையைத்
தொடைவருங்கனி பாவின்சொற்றினுன்.

உரை.—அப்பொழுது புடையில்வந்த மிக்கபுகழையுடை
யமிக்கயேலென்னும்வானவ னடைதற்கரிய தயையையுடைய
நாதன்றிருப்பாதத்தைவணங்கிக் கெடாதவிவனுண்மையைநி
னைத்துப் பாவாகச்சுவைக்குறுதியு மின்பமுமாகும்படி சொ
ன்னுனென்க. (௰௮)

வேறு.

அஞ்சுவான்கொல்லோநீதி யணிக்கலத்திலங்குவீரத்
தெஞ்சுவான்கொல்லோஞாலத் தியாவரும்பனிப்பவாண்
விஞ்சுவான்கொல்லோவென்ன மேவியவெசித்துநாடர் [மை
துஞ்சுவானுணர்ந்தார்முன்னாள் சுருதிசேர்கொழுகொம்ப
ன்னாய்.

உரை.—வேதமென்னுங்கொழுந்து மேற்படருங்கொழு கொம்போடொத்தகுசையே! இத்தேவகுழந்தை யஞ்சுவானோ? நீதிவிளங்கும்வீரத்தில் மெலிவானோ? உலகெல்லா நடுங்கும்படி வல்லமையின்மிகுவானோவென்று நீரிப்பொழுது போகிறவெசித்துநாட்டிலுடையோர் தாமடிந்துகெடும்படி முன்னாளிலே நன்றாயறிந்தாரொன்றானென்க. (௰௧)

நினைந்தயாவையுநினைந்த நிலைக்கவைநிகழ்த்துந்தன்மை
புனைந்தமாமதுகைகாட்டப் புணர்ந்தபுற்சூரற்கொண்டு
முனைந்தகாலிவன்முன்னாளின் முரிந்வெசித்தஞ்சிவாட
வனைந்தயாவையுநினக்கேன் வகுத்தியானுரைப்பலென்றான்.

உரை.—நினைத்தயாவையு நினைத்ததன்மைக்கு நிறைவேற்றும்படி தனக்குள்ளவல்லமையைக்காட்ட முன்னாளிலேயிவன்றானே சினந்தகாலத் தொருசின்னப்பிரம்பினைக்கொண்டு எசித்தாரெல்லாருமெலிந்தஞ்சிக்கெடும்படி செய்ததெல்லா நானுனக்குச் சொல்லிக்காட்டவேண்டுமோவென்றானென்க. (உ௰)

வீங்கெழுந்துயருளாற்று வெதிர்ப்பெழும்புணரிநெஞ்சிற்
பூங்கெழுங்கொடியோன்சொல்விப் புணையறவுணர்ந்ததேனு
மீங்கெழுத்தெளியனென்ன விரிந்தநாயகனைவாழ்த்த [ன்.
வாங்கெழுந்திறவினுண்மையறைதியென்றறைந்தான்வானோ

உரை.—உட்கொண்டமிக்கதுயராற்றுமற் கலங்கியெழுந்த கடலினொத்த நெஞ்சினையுடைய பூங்கொடியோனாகிய குசைசொல்வி நான் முன்னாகியசெய்தியை நன்றாயறிந்தாலு

பின்கேமனிதனு யெளியனைப்போலத் திரிந்தநாதனைவாழ்த்து ம்படி யங்கேழுன்னுளிலேதோன்றிய விவனுடையவல்லமை சொல்விக்காட்டுவாயாகவென்று சூஸ்சொல்ல மீளவும்வா ணவன்சொன்னுனென்க. (உக)

பேரவோங்கியவெற்புச்சி பிளந்தவிண்ணசனியேறு
நேரவோங்கடவிற்சீற்ற நெறித்தருள்வணங்காச்சென்னிப்
பாரயோனென்பானுதன் பணித்தநற்பூசைசெய்யா
வீரயோகத்திபூதர் விலக்கிமிக்கல்லற்செய்தான்.

உரை.—ஓங்கியமலையினுச்சிபிளந்துபேரும்படி மேகத்தி னின்றுவிழு மிடியைப்போலத் தனக்குள்ள வோங்கியவல்ல மையாற்சீறிச் சினத்தானெறித்துத் தயையால்வணக்கமில்லா த சென்னியையுடைய பாரயோனென்னுமன்ன னுண்டவ ன் கட்டளையிட்டபூசையைச் செய்யாதபடி வீரத்திவுயர்ந் தயூதரைவிலக்கி மிகவு மவர்க்குத் துன்பஞ்செய்திருந்தானெ ன்க. (உஉ)

உடைக்கலத்திலங்கிச்செற்றத் துடன்றிருள்பருகுநெ ஞ்சா
னடைக்கலத்தடைந்தயூதர்க் கடிமையென்றியற்றும்பீழை
துடைக்கலற்றெவருமெஞ்சித் தொறுந்தொறுமழுதகண்ணீ
படைக்கலத்தகுதிபோலப் பைதிரஞ்சிதைத்ததன்றே. [ர்

உரை.—பூணையணிந்துவிளங்கிப் பின்னையுஞ் சலஞ்சாதி த்துக் கொண்டபகையா விருண்டநெஞ்சினையுடைய கொ டியமன்ன னடைக்கலமாகமுன்றன்னுட்டிலேவந்தயூதரை ய டிமைகளென்றுபாவித்து நாடோறுஞ்செய்த வருத்தத்தை ப்பொறுக்கமாட்டாமல்மெலிந் தெல்லாரும் கூட்டங்கூட் டமாயழுதகண்ணீர்தானே படையாகநின்று அந்நாட்டை முழுதுங் கெடுத்ததென்க. (உ௩)

நொந்துநொந்தழுதவோதை நுழைந்துயர்வானத்து ச்சி
வந்துவந்தருளின்மிக்கான் வருந்தினர்க்கிரங்கிக்குன்றின்

முந்துநின்றருணமேய்த்த மோயிசன்விளித்தோர்சூரல்
தந்துநின்குலங்கொல்கோன்கட் சடுதிதூதேகுகென்றான்.

உரை. — அங்ஙன மன்னூர் நொந்துநொந்து நாடோறு மழுதவோசையே வானத்தினுச்சிநுழைந்துவந்து தயையின்மிக்கநாத னதைக்கேட்டுவருந்தினயூதர்க்கிரங்கி மலையின் முன்னேயாட்டைமேய்த்திருந்த மோயிசனையழைத் தவன் கையிலே யொருபிரம்பினைத்தந்து உன்குலத்தாரைவருத்திய கொடியமன்னனண்டைக்குச் சீக்கிரமாய்த்தூதாகப்போ வென்றானென்க. (உச)

கொடியகோன்வெருவலன்றன் குலேவுநிவெருவப் [பேசி
விடியமாபூசையாக விடுதியென்றவன்விடாதேல்
நெடியசூரலைச்சூழோங்கி நிருபனேடெவருமஞ்சக்
கடியதோர்துயராங்குய்த்தென் கதத்திறல்காட்டுகென்றான்.

உரை. — நீ யக்கொடுங்கோனுக்கஞ்சாம லவன்குலைந்தஞ்சும்படிபேசி நாளையுதயத்திலே நான்கட்டளையிட்ட பூசையாம்படி யூதரைவிடுவாயாகவென் றவனேடேசொல்லிய தற்கவன்விடானுயி னிந்தச்சூரலையோங்கி யிராசாவோடனைவருமஞ்சும்படி கொடிய துன்பங்களைக்கொண்டுவிட்டு என் கோபத்தின்வல்லமையைக் காட்டுவாயாகவென்றானென்க. (உரு)

ஒளியிற்சொன்னயாவு முணர்ந்தமோயிசன்போய்க்கூ
வாளியிற்கொடுங்கோன்கேளா தாங்கவனெறிந்தசூரல் [ற
வாளெயிற்றடுஞ்செம்பாந்தள் வடிவெடுத்தெழுந்தங்கப்டி
நீளெயிற்றழுவங்கட்டி நிறையும்விட்டுடற்றிற்றன்றே.

உரை. — ஆண்டவன்சொன்னதெல்லாவற்றையு மொழுங்கோடுகேட்டமோயிச னிராசாவினண்டைக்குப் போய்ச் சொன்னன், சொன்னவளவிலே யாளியிலுங்கொடிய மன்னனிணங்கிக்கேளாததினுன் மோயிசனவன்முன்னே தானேந்தியபிரம்பையெறிந்தான், எறிந்தபிரம்புங் கூர்ந்தவெயிற்றைக்கொண்டு கொல்லுஞ்செம்பாம்பினுருவத்தையெடுத் த

ங்கெழுந்தாடாநிற்க நீண்டபல்லின்வழியாகவுங் கண்வழியாகவு நிறைய நெருப்பினைவிட்டுச்சீறுநின்றதென்க. (உசு)

சாத்திரமாயவிஞ்சைத் தன்மையில்வரும்பற்பல்
காத்திரங்காட்டியன்னார் காட்டியவரவைத்தேவ
சூத்திரவரவுநுங்கத் துடர்ந்துமோயிசன்வால்வவ்வி
வேத்திரமாயதன்மை வேந்துகண்டஞ்சினானே.

உரை.—அதைக்கண்டவிராசா மாயவித்தைக்காரரையழைப்பித்து அவர்களும் பிரம்புகளைப்போட்டுப் பாம்புகளாகத்தோன்றும்படிசெய்தார், ஆயினு மவர்காட்டிய பாம்புகளெல்லாவற்றையுந் தேவசூத்திரத்தால் முன்றோன்றினபாம்புவிழுங்கிற்று. அப்பொழுது மோயிசன்போய்த் தன்பாம்பின்வாலைப்பிடித்தவளவிலே முன்னிருந்தபடி பிரம்பாகநின்றது. இதெல்லா மிராசாக்கண் டுள்ளஞ்சினானென்க. (உஎ)

அஞ்சினானெனினுந்தேவ வருச்சனைக்கிடஞ்செய்யா
தெஞ்சினன்கொடுமையாற்ற நீரொரீக்கமலத்தன்னந் [து
துஞ்சிவாழ்பொய்கைபோகிச் சொன்னவைமறுப்பாயாயி
னெஞ்சிலாத்துயரத்தாழ்வா யென்றுமோயிசன்சொல்கின்
றான்.

உரை.—அங்ஙனமன்ன னஞ்சினானுந் தேவபூசைக்கிடங் கொடாமற் றன்கொடுமையின் வேகத்தையாற்றும்படி நீரிற்றவழுநெருப்பாகிய தாமரையின்பள்ளியின்மே லன்னங்களுறங்கி வாழாநிற்கு மொருதடாகத்துப்போகையின் மோயிசன்கூடப்போய் நான்சொன்னதை நீமறுப்பாயாகில் முடியாததுன்பங்களிலே யமிழ்ந்துவாயென்று சொன்னானென்க. (உஅ)

சொல்லியவிசையிலேந்துஞ் சூலைச்சுழற்றிநிற்பக்
கல்லியமலர்கள்வாடக் கயலினந்தளர்ந்துமாள்க
வல்லியர்மயங்கயாரு முண்ணுநீரின்றிச்சோரப்
புல்லியபுனல்கள்யாவும் புண்ணினீராயிற்றன்றே.

உரை.—மோயிச னதுசொன்னவளவிலே தானேந்திய பிரம்பினை மேலேசுழற்றினவுடனே நீர்மலரெல்லாம் வாடவுங்

கெண்டைமுதன் மச்சங்களெல்லாஞ்சாகவுங் கற்றோரெல்லா
ரு மதிசயித்துமயங்கவு மற்றெவருமுண்ணும்படி நன்னீரி
ன்றிச்சோரவு மங்கிருந்தபலவகைத்தண்ணீரெல்லா மிரத்த
மாகநின்றதென்க. (௨௯)

மீட்டருஞ்சூரல்வீசி வீழ்ந்தன நுணலைமாரி
தீட்டருஞ்சயனமாடஞ் சித்திரக்கூடம்யாவு
மீட்டருங்கனகச்சாலை யிவைமுதவிடங்கடோறும்
வாட்டருந்துயர்கொளூட்டின் மல்கிய நுணலையீட்டம்.

உரை.—மீளவு மோயிசனரியசூரலைவீசாநிற்ப வெங்குந்த
வளைகள் மாரியாகப்பெய்தன, பெய்தமிகுதியா லிராசாப்படு
க்கைவீடுஞ்சித்திரக்கூடங்கள்பொக்கிஷச்சாலை யிவைமுதலா
கவிடங்கடோறு மொன்றும்விடாமல்முடியாததுன்பங்கொ
ள்ளும்படி நாடெங்கு நிறைந்ததவளைகளே மிக்கனவென்க.
(௩௰)

பண்ணிகவிசையாற்கோகு பயன்படாதென்னவன்றா
னெண்ணிகல்விடாமைநாத னேவலிற்சூரலோங்கி [யித்துப்
யுண்ணிகளெண்ணில்மொய்ப்ப வுழிதொறும்வெருவுமொ
புண்ணிகழ்கிடந்தநாடு பொருவிலாவருத்திற்றன்றே.

உரை.—வீணையினினியவோசையாற் கழுதைபயனைக்கொ
ள்ளாததுபோல வவ்வரசனுஞ் செய்ததைக்கண்டு பயனைக்
கொள்ளாமனினைத்தபகையையும்விடாமலிருந்ததினா லாண்
டவன்கட்டளையினால் மோயிசன்பிரம்பினையோங்கினவளவி
லே மட்டின்றியுண்ணிகள்நிறையமொய்த்தன, அவற்றாலெங்
குநிறைந்து ஒருபெரும்புண்ணாகநின்றவந்நாடு நிகரின்றிவ
ருத்தத்தைக்கொண்டதென்க. (௩௧)

தீயினங்குளித்தநெஞ்சான் செருக்குளத்தறாதுசீறத்
தூயினம்வெருவமீண்டு சூரலையாட்டுந்தன்மைத்
தீயினமெண்ணுமீறு மின்றியேயெவணுமொய்த்து
வீயினமலர்ந்தநாடு வீந்ததோர்பிணத்திற்றாமே.

உரை.—நெருப்பினைக்குளித்த கொடியநெஞ்சா னாங்கா
ரத்தைவிடாமற்சீறாநிற்க நல்லோரெல்லாரும் வெருவும்படி

பீளவு மோயிசன்பிரம்பினை யாட்டினவளவிலே மட்டு முடிவுமின்றி யீக்களே யெங்குந்திரண்டு மொய்த்ததனுன் முன்பூமலர்ந்தநாடு செத்தபிரேதத்தின் றன்மையாய்த்தோன்றிற்றென்க. (௩உ)

வெருவுறவரசன்போக விடைசெயவிடருநீங்கு
முருவுறவிடர்கணீங்க வுரைத்தவைமறுத்துச்சீறச்
செருவுறச்சாதியோங்கச் சிந்துரமுதன்மாவெல்லாந்
தருவருவுணராநோயாற் றளர்ந்துநொந்திறக்குமாதோ.

உரை.— அஞ்சினவளவிலே மன்னன் யூதனைப்போகவுத்தாரஞ்செய்வா னவ்வளவிலே தோன்றியதுன்பங்களுநீங்கும், நீங்கியவளவிலே பீளவு மவன்முன்சொன்னதைமறுத்துச்சீறுநிற்ப மோயிசன் றிரும்பிச்சூரலையோங்கினு னோங்கியவளவிலே யானைமுத லுள்ளவிலங்கினங்களெல்லாங் குணங்கெட்டு மற்றொருவனுற்கண்டுபிடியாதநோயைக்கொண்டு சாகா நின்றனவென்க. (௩௩)

சுட்டநோயாதினுருத் துகடருந்தருக்குநீக்க
விட்டநோய்போராவேகத் திவன்சுழல்சூரறன்றூற்
குட்டநோயரசனுதி கொண்டுளங்குலைந்தார்யாரும்
பட்டநோயொன் றுமின்றிப் பரிவறயூதர்வாழ்ந்தே.

உரை.— தீயாற்சுட்டபுண்ணுதினு லும் பாவமிகுதியா லவ்வரசன்கொண்ட வரங்காரமாருமையினு லதைநீக்கும்படியாண்டவன்வற்கிட்ட முற்சொன்னதுன்பங்கள்போராமலு மோயிசன்றிரும்பிச்சுழன்ற சூரவினு லரசன்முதலங்குள்ளவனைவருங் குட்டவியாதியைக்கொண்டா ரந்தநாவயூதர்களுக்குள்ளே யொருவனுக்காகிலும்வாராமற் றுன்பமொன்றின்றி யூதர்வாழ்ந்திருந்தாரென்க. (௩௪)

உலைமுகத்தருந்துந்தீய்நெஞ் சுருவுறச்சூரலோங்கி
யலைமுகத்தருந்தியையென் றழன்முகிலார்த்துமின்னிச்
சிலைமுகத்தருந்திக்கான்ற சீமோனப்பெய்தவாவி
கொலைமுகத்தருந்தியெங்குங் கொல்லுயிரளவொன்றுண்
டோ.

உரை. — மீளவு நெருப்பினைமுகந்துண்ட நெஞ்சினையு டையமன்னனஞ்சும்படி பிரம்பினையோங்கியவளவிலே கடலினீரைமுகந் தொருகணத்திலெழுந்தவழலைக்கொண்டமேகங்கள்மூடியார்த்து மின்னிப் பெருங்கல்லுக்களை முகந்துவிட்டாற்போலத் திரளாய்ப்பெய்தவாலங்கட்டிகள் எங்குமட்டின்றியுயிர்களைக் கொன்றனவென்க. (௩௫)

மதங்கலந்தரசன்கொண்ட மறங்கழிந்திலனுந்தன்மை
கதங்கலந்தசைத்தசாதி கடுகியபதங்கமெங்குஞ்
சிதங்கலந்தலர்ந்தநாட்டிற் சிறுபுலொன்றின்றியாவு
மிதங்கலந்திமைக்குமுன்ன ரிற்றழித்தாயிற்றன்றே.

உரை.— மதத்திற்பொங்கி யரசன்சாதித்தசலத்தைவிடாமையால் மீளவும் வெகுண்டசைத்தபிரம்பினால் விரைந்து திரளாய்மொய்த்தவிட்டில்களே குளிர்ச்சிபடமலர்ந்தவந்நாட்டி லொருபசும்புல்லில்லாதபடி யெல்லாமு மொருநிமையிமைக்குமுன்னே யிற்றழித்தனவென்க. (௩௬)

துச்சிறையுளம்போன்றள்ளுந் தொகுதியாவிருள்மொ
ய்த்தாடாக்
கைச்சிறைகடக்கறேற்றுங் காற்சிறையாகியெங்கு
மெய்ச்சிறைபட்டயாரும் வெருவியார்த்தலறிநோக
மைச்சிறைபட்டநாடு மறச்சிறைநரகொத்தாமால்.

உரை.— அத்தனையாக்கினைகண்டுநடுங்கித் தெளியாதகொடுமன்னனுள்ளமிருண்டதன்மைத் தெங்குமள்ளத்தக்க நெருங்கியடர்ந்தவிருள்மொய்த்ததனா லாடமாட்டாதகைகள் சிறைபடவு நடக்கமாட்டாதகால்கள் சிறைபடவுஞ் சரீரமெல்லாஞ்சிறைபட்டுநின்றவெல்லாரும் வெருவிக்கூப்பிட் டலறிநோம்படி யிருளாற்சிறைபட்ட வந்நாடு பாவத்திற்குச்சிறையாகிய நரகத்தின்றன்மையாய்த் தோன்றிற்றென்க. (௩௭)

வேறு.

அங்கடைக்கலமாயடைந்தவராளென் றாக்கியகொடும்
வினைமாறாப் [பரமன்
பங்கடைகொடியவேந்தனைத்தணிப்பப் படியுளவேந்தராள்

வெங்கறைநீகமுண்ணிகளிக்கள் விலங்கினேய்குட்டநோயா
வி [பதுவே.
சுங்கடைபதங்கமல்கிருளென்னுஞ் சபித்தோர்சாடமொன்

உரை. — எசித்துதேசத்தி லடைக்கலமாகவந்தயூதனா யடிமையாக்கிய தீவினைமாருத கொடியவரசனுடைய வாங்காரத்தைத்தாழ்த்தும்படி பூவுலகின்ரசமொல்லாரையுமாளாநிற்கும்பரமநாத னவனைச்சபித் திட்டசாபங்களொன்பதாவன: இரத்தந் தவளை யுண்ணி யீ விலங்கின்நோய் குட்டநோ யாலங்கட்டி விட்டில் இரு ளிவையொன்பதென்க. (௩அ)

கான்முகம்புதைத்தகண்மலர்நாட்டிற் கலக்கமுற்றிட
ந்தொறுமியாரும் [மற்றியூதர்
வான்முகம்புதைத்தமுகின்முழக்கெஞ்ச மயங்கியார்த்தலற
தேன்முகம்புதைத்தமலரெனவங்கோர் சிதைவிலவாழ்தலைக்
கண்டே [ன்பான்.
யூன்முகம்புதைத்தவேலரசஞ்சி யொருங்ககன்றேகுமினெ

உரை. —வாசமதுவைப்பொழிந்த மலரைப்பூத்த வந்நாட்டிலெங்கு மெல்லாரும் வானத்தின்மேகங்கள் முழங்கினவோசையைமறைக்கும்படி மயங்கிமுழங்கியலறுநிற்க யூதரோவென்னி லதிலேதேனோடுமலர்ந்தபூப்போல வொருகேடுமின்றிவாழாநிற்பதுகண்டு வூத்தைசொரிதற்குக்காரணமான வேலையேந்தியகொடியவரச னஞ்சி யெல்லாருமொருப்பட்டுப்போவீர்களாகவென்பானென்க. (௩௯)

ஏன்பதும்வீரமோயிசன்றன்கை யெடுத்திடர்தீர்ப்பது
மொன்றாய்த் [றமையா
துன்பதுநீங்கவரசுளத்திகன்று தொழும்பராய்நின்மினென்
லொன்பதுசாபநிலைதிரா துடர வுவமியாமதுகையோனிட்ட
பின்பதுகணியானேவெனச்சினந்து பெயர்ப்பருமிடுக்கணு
ய்த்திட்டான்.

உரை. — போங்களென்று மன்னன்சொன்னவளவிலே மோயிசன்றன்கையையெடுத்தோங்க வந்த துன்பமு நீங்கும், நீங்கியவளவிலே மீளவுமரசன்பகைத்தடிமைகளாக நில்

லுங்களென்றவனை நிறுத்துவானென்றதனாற் சொன்னவோ ழுங்கோ டொன்பதுசாபமு மொன்றின்பின்பொன்றை நிக ராதவல்லமையுடையநாத னந்நாட்டிற்கிட்டபின்ன ரிதுவு மெண்ணாதிருப்பானோவென் றுசினந்து பெரியதோராக்கி னையிட்டானென்க. (௪௰)

கண்முழுதட்டவிருளிரா நடுவிற் கதத்தளவருந்திறன்மி
க்க [நொடிபொழுதின்
விண்முழுதன்றிமண்முழுதிறைஞ்சும் வேந்தர்வேந்தனை
மண்முழுதாண்டகோன் றலைமகனு மற்றவர்தலைமகர்யாரு
மெண்முழுதின்றியிறந்துயிர்செகுப்ப வெசித்துநாடெங்க
ணுங்கொன்றான்.

உரை.— ஆண்டவனெசித்தார்க்குச் சினந்திட்ட பத்தா ஞ்சாபமேதென்னி லிருண்டவிராவினடுவிலே கோபத்தின ளவாக வல்லமையுடைய வானு மண்ணும் வணங்கு மரசர் க்கரசனாகியகர்த்தா வோரரைநொடிநேரத்தி லந்நாட்டைத்த னியாண்டகொடியவரசனது தலைமகனு மற்றவர்தலைமக்களு மெல்லாருமட்டின்றி யிறந்துகிடக்கும்படி யெசித்துநாட்டி லெங்குங்கொன்றானென்க. (௪௧)

ஓல்லெனவுளைந்துகண்புதைத்தலறி யுடன்றவிக்கடவு
ளோடெதிர்ப்ப [னவுளத்தஞ்சி
வல்லெனவெவரோமற்றெமையொருங்கு மடிப்பனோவெ
யல்லெனவெண்ணாதரசன்மோயிசனை யழைத்துமரிக்கணத்
தெழுகச் [தொருங்ககன்றார்.
சொல்லெனவுரைப்பவனைவருமுவந்து துணுக்கெனவெழுந்

உரை.— அதைக்கண்டெல்லாரு மொல்லெனவலறிக் கண் ணைப்புதைத்தழுது இத்தன்மைத்தாகிய கடவுள்கோபித்தா லவனோடெதிர்க்கும்படி வல்லவனாரோ வினிநம்மையெல்லா ரையுமிங்ஙனேகொல்வானோவென் றழுதஞ்சி நடுச்சாமமெ ன்றபாராம லந்நேரத் திராசா மோயிசனையழைப்பித் து ன்னினத்தாரெல்லாரு மிந்தக்கணத்திலே தாமதமொன் றுமி ன்றிப்போகச் சொல்வாயாகவென் றமையா லவரெல்லாருமு வந்து சீக்கிரமா யகன்றுபோனாரென்க. (௪௨)

இற்றியாவையுமிவ்விளவருன்காட்டி யெசித்திடைச்சி
தறியவெருவின் [ளைஞர்
வெற்றியாவியூதர்தஞ்சிறைதீர்த்து மிடைந்தனதெரிவையரி
முற்றியாங்கிழவரிவரலதரும்போர் முரண்படமலைப்புயவீர
ப் [றே.
பெற்றியாரறுநூறுயிரர்கடல்சேர் பெருஞ்சுரத்தேகினரான்

உரை.—இவையெல்லா நீங்கள்கையிலேந்திய வித்திருக்கு
மாரன்றானேசெய்துகாட்டி யெசித்துநாட்டிலெங்குஞ்சித
றின வெருவினாற் கொண்டவெற்றியினு லியூதர்பட்ட சிறை
யைமீட்டான், அங்ஙனமன்று மாதர்களுஞ்சிறுபிள்ளைகளுங்
கிழவமாருமன்றிப் போர்பொருதற்கேற்ற மலையினொத்தபு
யங்களையுடையவீரோ யாறுநூறுயிராங்குறையாமற்கடலைநோ
க்குஞ்சுரத்துவழியாகப்போனாரென்க. (௪௩)

விண்ணுகவார்த்துவீழுருமன்ன வேந்துமீண்டுலம்பி
யையென்னப் [யுஞ்செந்தீக்
பண்ணுகபசும்பொற்கொடிஞ்சியந்தேரும் பண்ணுகபுரவி
கண்ணுகடுமாமதகரிமாவுங் கடிந்தனர்தகைப்பனென்றயி
ல்கொண் [றத்துடர்ந்தான்.
டெண்ணுகவிடமற்றபயர்மாகடல்சூழ்ந் தெய்தகோல்பின்னு

உரை.—யூதர்போனபின்பு மீளவுமவ்வரசன் மேகத்தினி
ன்று முழங்கிவிழுமிடிபோலவார்த்துப் பொருக்கெனத்தேர்
களுங்குதிரைகளும் யானைகளும்பண்ணுகவென்றுபோனயூ
தரைத்தடுப்பேனென்று தாமெனயெண்ணப்படாதவீரர்கடல்
சூழவர வெய்தவம்பினுங்கடிதாய் முடுகித்தொடர்ந்தானென்
க. (௪௪)

நோக்கியநோக்கந்திசைத்தொறுந்தீக்க நாக்கருஞ்
செருக்கொடுநோக்கித்
தாக்கியதாக்கினுடன்றுளந்தாக்கச் சலத்தடுமடங்கலேறன்ன
னீக்கியபாக்கத்தகல்வரைத்தாக்க நெருங்கியகானெடுமறை
வை [யின்வல்லோன்.
யாக்கியபடத்திலார்த்தகார்முகில்விட் டடைத்தனன்மதுகை

உரை. — திசையெல்லாந் தீப்பற்றிவேதற்குக்காரணமா ம்படி மாருதவாங்காரத்துடனேநோக்கிப் பாய்ந்தபுலியினு ங்கொடிதாய்ச்சினந்து தாக்கும்படி கொல்லுஞ்சிங்கத்தி னேரொப்பான் றன்னகரை நீக்கி யகன்றயூதரைநெருங்கிவரு கையி லிருபடைக்குநடுவிலே மறைவாக விரித்ததிரைச்சீலை போல விடிக்குங்கரியமேகத்தைவிட்டு வழியடைத்தா னளவி றந்தவல்லமையுடைய நாதனென்க. (௪௫)

இப்படைதுடரப்புணரிமுன்னெருங்க விடைவரும்யூ
தருள்வெருவ [சுவர்க
வப்படைகடலையோயிசன்பிரம்பா லடித்தவிற்பளிக்கொளிச்
சொப்படையலைகள்பிரிந்தகன்றிருபா லுயர்ந்துநின்றிடத்
திவர்புக்கு [போனார்.
வெப்படையரசனுளத்துடன்றலம்ப விருப்புடனியூதர்கள்

உரை.— மாற்றார்படை பின்றுடரவுங் கடலேமுன்னெ ருங்கவு நடுவேநின்றயூத ருள்ளேவெருவாநிற்ப மோயிசன்ற ன்பிரம்பாற்கடலையடித்தான், அடித்தவளவிலே யலைகள்பிரி ந்து பளிக்குச்சுவராகவிருபக்கத்துயர்ந்துநிற்ப யூதர் நடுவே கடல்விட்டவழியேபுகுந்து கொடியமன்னனிதைக்கண்டு ம னதிலேவெந்து சினந்துமுழங்காநிற்ப யூதரெல்லாருங் களி கூர்ந்துபோனாரென்க. (௪௬)

மறங்கொடுகெதஞ்சால்மருட்டியமனத்தில் வருஞ்சிதை
வுணர்கிலாக்கொடியோ [ம்
னறங்கொடுபுக்கயூதரைத்தடுப்ப லையெனத்தானையுந்தானு
புறங்கொடுபிரிந்தபுணரிசெய்வழியே புக்குறிக்கடனடுவ
டைந்தான் [ரோ.
றிறங்கொடுசினமுமாசையும்பெருகச் சேரிழிவறிகுவரெவ

உரை.—மறமுங்கதமு மிகுந்தமையான் மயக்கத்தைக்கொ ண்டமனதிலே வருங்கேடறியாதகொடியவரச னல்லறத்தின் றுணையாற்கடலுட்புகுந்த யூதரைமறிக்கும்படி சீக்கிரமாய்த் தானுந் தன்படையும் பிரிந்தகடல்செய்தவழியேபுகுந்து ந டுக்கடலிலேசேர்த்தான், வல்லமையுடையார்க்குக் கோபமு

மாசையு மிகுங்காலத்துத் தமக்குவருங்கேடுகளை யவர்களுள் ளறிவாரில்லையென்க. (சஎ)

வேறு.

நெடுமாகடனிகர்மாபடை யுறிமாகடனெறியே
நடுமாகடலடைகாலையி னமையாள்பவனவிற்சொல்
லொடுமாகடல்பிலைசவானவ னருவாயினவொருவன்
வடுமாகடலெனுதானையை மதியாவதைவகுத்தான்.

உரை.—கடலொத்தவப்படை கடல்வழிவந்து நடுக்கடலிலேசேர்ந்தபோது நம்மையாளுஞ் சுவாமிகட்டளையினுற் கடல்மே லருபியாய்நின்ற வொருவானவன் கசுடெல்லாமடங் கக்கொண்ட கடலாகிய மாற்றூர்படையைச் சங்கரித்தானென்க. (சஅ)

உரமற்றனர்கவசத்தொடு முறமழற்றனவுழவர்
சரமற்றனர்தருகத்தொடு சம்மற்றனசமிதக்
கரமற்றனர்கருவிக்கொடு கழலற்றனர்கவிழச்
சிரமற்றனர்படைவிட்டெதிர் செருவுற்றனர்தெரியார்.

உரை.—நிகரில்லாத படைவீரர்கவசத்தோடு நெஞ்சினையும் வில்லோடுவம்புகளையும் பிடித்தவாயுதத்தோடுநிகரின்றிப் பொருதகையையுங் கால்களையுங்கவிழ்ந்துவிழும்படி தலைகளையுமிழந்துவெட்டுண்டுபோ யெதிர்த்துத் தம்மேற் படையை விட்டுச் சண்டைகொடுத்தவராரென்று தெரியாதிருந்தாரென்க. (சகூ)

கோவில்லனபுதையோடுள குதையில்லனகொடிய
வேவில்லனவளையோடிரு மழுவில்லனவிரிநிண்
டோவில்லனவசியோடுயர் கதையில்லனசுளிவிற்
காவில்லனவடமோடொரு கடையில்லெனமடிவார்.

உரை.—கைப்பிடித்தவம்புகளுந் தூணியோடகிலுள்ள வம்புகளும் வேலுஞ்சக்கரமும் பெரியமழுவு நீண்டகேடகமும் வாளுந் தண்டாயுதமு நாணியோடுகோபித்தவில்லின்கா

து மிவையெல்லாமில்லாதபடி முறிந்து மட்டின்றிச் சாவா ரென்க. (௫0)

உருள்பூட்டியநெடுமேச்சில வுருள்காலிலவுகளி
மருள்பூட்டியபரிமாவில வருபாகருமிலமேற்
பொருள்பூட்டியவுயர்கூம்பில பொவிநீண்கொடியிலபொற்
றெருள்பூட்டியவிரிபாரில சிதைதேர்பல்பலவே.

உரை.—சிலதேருக்கச்சின்றிச் சிலதேருக்குருளையின்றிச் சிலதேருக்குப்பூட்டிய குதித்துமருளிப்பாயுங்குதிரைகளின் றிச் சிலதேருக்குப்பாகரின்றிச் சிலதேருக்குப்பொற்கொடி ஞ்சியின்றிச் சிலதேருக்குயரக்கட்டின நீண்டகொடியின்றி ச் சிலதேருக்குப் பொற்பரப்பின்றி யிங்ஙனம்பற்பலதேர்க ள்முறிந்துகிடந்தனவென்க. (௫௧)

பிரிவார்தமினெரிவார்கறை பிளிர்வார்வதைபெறுவார்
முரிவாரலைபுகுவாருள முனிவார்துயர்முதிர்வா
ரொரிவாருடல்கரிவாரிறந் திழிவாரிடையிடையே
யொருவாளியெய்யருவாயின வொருவானவனுரனால்.

உரை.—அரூபியாய்நின்ற வொருவானவ னோரம்பினையெ ய்தவல்லமையினு லப்பகைவர்தம்முட்பிரிந்தெரிந்து இரத்த த்தைச்சிந்திப் பலரேசாவார், பலர்முரிந்துபக்கத்துநிறுவி நி ன்றகடலினலையுட்புகுந்துசாவார், பலர்சினந்துவருந்தியெரி ந்துகரிந்து அங்கங்கேசாவாரென்க. (௫௨)

வலமாயினுமிடமாயினும் வருவாளிகள்ளவுண்
டிலதாயினுமவருவாளிகள் படுமல்லதுமிலையால்
பலவாளியிலொருவாளியும் பழிப்பாரிலதுயிருண்
டலதாறுயிருணுமோர்சர மலதெல்லையுமிலையே.

உரை.— வலத்திலுமிடத்திலும்வந்துவிழு மத்திரங்கள்ம ட்டளவின்றியாயினு மவற்றுள்படுஞ்சரமன்றிப் படாததில் லை, பட்டவம்புக ளுடனேகொல்லு மதனுற்றனக்குப்பட்டவ ம்மைப் பழிப்பாரில்லை, மீளவுமொவ்வொருசர மாறுயிரையு ண்ணு மிதிலேயுமுடிவில்லையென்க. (௫௩)

அழலக்குயவழலக்கரி யழலப்பரியயிலோ
டழலக்கதையழலத்தனு வழலச்சரமசியோ
டழலக்கிடுகழலப்புதை யழலப்படையெவையு
மழலக்குடையழலக்கொடி யழலத்திரம்விடவே.

உரை.— அவ்வானவனேரக்கினிபாணமெய்ததனற் றே ரு மியாணையுங் குதிரையும் வேலுந் தண்டாயுதமும் விலலு ம ம்பும் வாளுங் கேடகமுந் தூணியு மற்றவாயுதங்களுங் குடை களுங் கொடிகளுமழன்று வெந்தனவென்க. (ருச)

அழிதாரொடுகேடலாழியி னடிவீழ்வனவுயர்தே
ரொழிபாயொடுகவிழ்கின்றன வுருவொத்தனமதமே
கழிமால்கரிகழறிக்குளிர் கடலுட்புகல்கதிரோ
னெழில்வானுறவலைபுக்கன விருளொத்தனவெனவே.

உரை. — மேற்கொடியழிந்து கடலில்விழுந்தேர்கள் வி ரித்தபாயழிந்துகவிழ்ந்துவிழுங் கப்பல்கள்போலத்தோன்றி ன, மதயானைகளலறிக்கடலிலேபுகுவது சூரியன்வானத்திலெ ழுந்துவருகையிற் கடலிலேபுகுந்தவிருளைப்போலத் தோன் றினவென்க. (ருரு)

முடிவானுறுமிரதத்துளர் சிரமற்றுகுமுடிகள்
வடிவாளியொடுரமற்றுகும் வடிவுற்றணிமணிக
ளடியோடிருகரமற்றுகு மழகுற்றவிரணிகள்
கடிதாயுலகொழிநாளுகு கணமொத்தனவெனவே.

உரை.— வான்மேலுயர்ந்த தேரினின்றவரசர் தலைவெட் டுண்டு சூழ்ந்தமுடிகள்விழவு மார்பறுந்துபோ யணிந்தபல மணிகள்விழவுங் காலுங்கையுமற்றுப்போ யதிலேபுனைந்த வாபரணங்கள்விழவு முலகமுடியுங்காலத்து வானினின்று வி ழும் விண்மீன்கள்போலத் தோன்றுமென்க. (ருசா)

காராரொவிகடலாரொலி கறைபாயொலிகடிதூர்
தேராரொலிகரியாரொலி பரியாரொலிசிதறும்

போராரொலிமுரசாரொலி புகைவாரொலிபுனைசெய்
நேராரொலிமடிவாரொலி நிறைபாரொலிநிகரா.

உரை.—மேலேமேகங்களும் பக்கத்துக்கடலு நடுவேயூர்திகளு மியானைகளுங் குதிரைகளு முரசுபறைகளு முழக்கத்தோடுகூடிய சிலைதவாரொலியுங் கோபிப்பாரொலியுஞ் சாவாரொலியு மிவையெல்லாங்கூடிமயங்கிப் பாவிகளானபகைவரிடத்துக்கிளம்பின முழக்கத்துக் கிவ்வுலகி னிகரில்லையென்க. (௫௭)

மாறாமதகரிபட்டன வதைபட்டனவயமா
வேறாயுருளழிபட்டன வழிபட்டனமிளிர்தேர்
கூறாயுடல்குறைபட்டன குறைபட்டனகுருதி
யாறாயலைகிழிபட்டென வதிர்பட்டுறுமகடே.

உரை.—மதயானைகளுங் குதிரைகளும்பட்டன, உருளைகள்வேறுபட்டுத்தேர்களுமழிந்தன, கூறுகூறாயுடல்கள் துண்டித்ததனா லிரத்தமாறாகவோடிப் பக்கத்துநின்ற கடல்கிழிபடும்படி யதிர்ந்துள்ளேகலந்ததென்க. (௫௮)

செப்பாரிலதடறானைக டிரள்மாள்தவிரணுந்
துப்பாறெனவுதிரத்திரை துடராழியின்விரவ
வப்பாரிவழலைசேப்பவி னதுசெங்கடலெனவே
யொப்பாரிலகதையாவரு முணரப்பினருரைத்தார்.

உரை.—சொல்லுந்தன்மைத்தன்றி வல்ல தானைகளின்றிரள்மடிந்திறத்தலாற் சிவந்தாறாகத் திரண்டோடுமிரத்தங் கடலோடுகலந்தவளவிலே தெளிந்தகடலுஞ்சிவந்ததனா லக்கடல்செங்கடலென்று நிகரின்றி யன்றுநடந்தசரிதை யெவருமறியும்படி பெயரிட்டிந்நாளு மப்பெயர்வழங்காநிற்குமென்க. (௫௯)

நானேருளதிசையெங்கணு நானாபடைநணுக
மேனேருளமுகிலின்றுளி மேனேர்கணைவிழுகக்
கா னேருளபடைகண்டிலர் காணார்விடுகரமும்
மா னேருளமழிவஞ்சகர் மானாதுளமருள்வார்.

உரை.— நாற்றிசையெங்கும் பலவகையாயுதங்கள் தம்மேனெருங்கவு மழையின்றுளியினுமடர்ந்த வம்புகள் தம்மேல்விழவு மூயிராயுண்ணுங்கூற்றமேனொடொத்த கொடியபடைகள்விழும்போ தவற்றைக்காணுமது மவற்றையெய்தகையைக்காணுமது மான்கூட்டம்போலே மனத்திலஞ்சியழியும் வஞ்சகர் நிகரொன்றின்றி மயங்காநிற்பாரென்க. (சுய)

முன்னேரினர்பின்னேரினர் புடைநேரினர்மூகிலி
னன்னேரினரின்னேரின ரன்னேரினரலைமே
லென்னேரினரொன்னேரின வொன்றேயவரெணினுங் [ர்.
கொன்னேபடைகொண்டாருயிர் கொன்றான்கரங்குறிப்பா

உரை. — இங்ஙனமயக்கமாதலா லேதோதம்மைச்சிதைத்துக்கொல்பவர் முன்னேநிற்பாரென்பார், பின்னேநிற்பாரென்பார், பக்கத்துநிற்பாரென்பார், மேகத்துநேர் மேனிற்பாரென்பார், இங்கேநிற்பாரங்கேநிற்பாரென்பார், கடலின்மேலெமக்குநேர்நிற்பாரென்பார், இவரல்லவெமக்குநேர்நிற்பாரென்பா ரவரொன்றுலும் வீணாய்ப்படைகளைவிட்டுத் தம்மைக்கொல்லுங் கையைக்குறிப்பாரென்க. (சுக)

கட்டுற்றெழுகன்றுற்றிய கதமுற்றியகயவ
ருட்டுற்றெழுபகையொத்தன வுறவிட்டிசையுயர்நேர்
பட்டுற்றெழுமுகிலொத்தெழு பகழித்திரள்விடுவார்
விட்டுற்றெழுசரம்விட்டனர் மிசைபட்டுருவிடுமால்.

உரை. — தம்மைக்கொல்வா ரெங்கேயுள்ளாரென்றுகாணாமையாற் கண்வழிநெருப்புப்பொங்கிவிடுங் கோபமிகுதியாலப்பாவிகளுள்ளேகொண்ட நிறைந்தபகையின்விசையோடுபோம்படி யாகாயத்தினேராக வெழும்பினமேகம்போலத்திரளாயம்புகளையெய்வார், எய்தவம்புகளோவென்னில் மேற்பறந்துபோ யெய்தவர் மேலேமீளவும்விழுந்து பட்டுருவியவரைக்கொல்லுமென்க. (சுஉ)

அண்டத்துயருலகாளிறை யவனோடெவர்பொருவார்
மண்டத்துயர்வலியற்றன மெனமற்றவர்மதமா

கண்டத்துயர்பொவிவேத்தொடு கடிதோடியகடையிற்
சண்டத்துயர்களாபூதர்கள் தனியுற்றனரொருங்கே.

உரை.—மடிந்தாரொழிய நின்றமற்றவரிலவையெல்லாங்க ண்டு வானுலகில் வீற்றிருந்தானுங்கடவுளோடு போர்செய்ய வல்லவரார்? நாமிக்கதுன்பங்களையடைந்துபெலனழிந்துகெ ட்டோமேயென்று தாமுமதயானைமேனின்றவரசனுஞ் சீக் கிரமாய்ப் புறங்கொடுத்தோடினார், ஓடத்துடங்கினபொழு தே விரைந்து முன்னேபோனபூதரெல்லாரு மறுகரையேறி னாரென்க. (௬௩)

வேறு.

கரைமேலிவர்சென்றனரென்று கதத்திறைமையோன்கடற்
டிரைமேலடற்குூலைநீட் டெனநீட்டியசீர்திரண்ட [றெண்
வரைமேல்வரைவீழ்ந்தெனவாங்கலைவீழந்தவர்மேற்கவிழ்ந்து
குரைமேலெழவுட்குளித்தாழ்ந்து கொடும்பகைவர்மடிந்தார்.

உரை.—பூதரெல்லாருங் கரைமேற்சென்றவளவிலே சின த்தைக்கொண்டநாதன் கடலின்மேற் பிரம்பினைநீட்டுவாயாக வென்றுகட்டளையிட்டமையான் மோசிசனதைநீட்டினவு டனே திரண்டமலையின்மேலே மலைவிழுந்தாற்போல விருப க்கத்துச்சுவராய்நின்றவலைகள் விழுந்து ஓடினபகைவர்மி சையேகவிழ்ந்து மேலேநுரைதிரளாயெழும்படி யுள்ளேயவ ரெல்லாருமமிழ்ந்திறந்தாரென்க. (௬௪)

கடைநாள்கடனீர்குடைந்து கழறிப்பொங்குங்கதம்போ
லிடைமால்களிகள்பரிக ளிருடேருழவருளமற்
படைநால்வகையுங்குடையப் படமேற்படக்கீழ்படவே
புடைவாங்கலையோடலையப் பொவியார்ப்புலகிற்பொருவா.

உரை.—உலகமுடியுங் கடையுகத்திலே கடல்குடைந்து முழங்கிப்பொங்குந்தன்மைத்து மதயானைகளும் புரவிகளுந் தேர்களும் படைவீரருமிந்நால்வகைப்படைகளுங் குடைய ப்பட்டு மேலுங்கீழுமாகத்துழாவி யிருபக்கத்துவிழுந்து க

விழ்ந்தவலைகளோடலையப்பட்டபொழு தெழுந்தமுழக்கத்தி
ற் இவ்வுலகி னிகரில்லையென்க. (௬௫)

ஓராயிரமால்கரிமா வோராயிர நூறயமா
வீராயிரமோரொழு நூ றருடேரொறி தம்பியவே
லாராயினபற்கோடி யமிழ்ந்திநிமைப்பிலனைத்தும்
பேராயினநீர்வலையிட்ட பிராணிறைவாரினனால்.

உரை.—அங்ஙனமாயிரம்யானையு நூறாயிரங்குதிரைகளுமீ
ராயிரத்தெழு நூறுதேரு மக்கினிபுறப்படவிட்ட வேலுடை
ய வீரர்பலகோடிகளு மொருகணத்திலமிழ்ந்திப்போ யத்த
னையெல்லாவற்றையுங் கடலினலைகளைப் பெரியவலையாகவீட்
டநாத னருப்படவாரிக்கொண்டானென்க. (௬௬)

போர்மீதேற்றும்புரவி கரிதேர்பொருநர்பொருவாச்
சீர்மீதேற்றுஞ்செருக்குற் றெவையுந்தெளியாநெஞ்சி
னேர்மீதேற்றுத்திறன்கொ ணிமலற்கஞ்சாக்கொடுங்கோ
னேர்மீதேற்றும்படையோடிமைப்பிற்சிதைந்தானழிந்தான்

உரை.— போர்க்களங்களைக்கடந்து மிக்கவெற்றியாலேந்
திய குதிரைகளும் யானைகளுந் தேர்களும் படைத்தலைவருநிக
ராதவல்லமையென்றெண்ணினதனா லாங்காரத்தைக்கொண்
டெத்தாலுந்தெளியாதநெஞ்சினா லுவமியாமலுயர்ந்த வள
விறந்த திறத்தையுடைய நாதனுக்குச் சற்றுமஞ்சாதிருந்த
கொடியமன்னன் றன்னுயர்ந்தபடையோடு தானுங்கூடவொ
ருகண்ணிமைத்தவளவிலே கெட்டழிந்துசெத்தானென்க.
(௬௭)

கரைமேனின்றூர்கொடிஞ்சி கழிதேர்த்திரள்பற்றீவின்
புரைமேன்மிதக்கவாமைப் புரையிற்கிடுகுமிதக்கக் [க்கத்
நுரைமேலெழும்போர்க்குடைவெண் கொடிவெண்கவரிமித
திரைமேன்மகரத்திரள்போற் செருமாமிதக்கக்காண்பார்.

உரை.—அப்பொழுதுகரைமேல்நின்றயூதர் கொடிஞ்சியி
ல்லாத ரதங்கள் தீவுகளைப்போலத்தோன்றிமிதக்கவுங் கே
டகங்களாமைகள்போலமிதக்கவுங் குடைகளுங்கொடிகளும்

வெண்சாமரைகளு நுரையைப்போலமிதக்கவு மதயானைகளு
ங் குதிரைகளு மகரமீன்களைப்போல மிதக்கவுங் காண்பா
ரென்க. (௬௮)

அல்லின்வண்ணத் துடலோ ரணியாய்த்திரண்டுபிரியா
தெவ்வின்வண்ணத்தெரிவா டணராதிணைந்துதிரிய [மேய்
வில்லின்வண்ணத்தொளிர்தெண்டிரைமேன் மிளிர்மின்னொடு
செல்லின்வண்ணத்தெவனுந் திரண்டுமிதக்கக்காண்பார்.

உரை.—இராப்போலக் கரியவுடலையுடையபகைவர் கூட்டங்கூட்டமாய்த்திரண் டொருவனொருவனைக்கட்டிக்கொண்டு பிரியாமலுங் கதிரைவிட்டெரியுங் கைப்பிடித்தவாளைவிடாமலுங் கூடித்திரிந்து விளங்கியகடலின்மேலேமின்னிக்கொண்டுமேய்ந்துதிரியுமேகங்களைப்போல வெங்குந்திரளாய் மிதக்கக்காண்பாரென்க. (௬௯)

மிகப்பட்டுயர்வல்லிறையோன் விறலார்கரைசேர்ந்தவ
ரோ
நகப்பட்டொருங்கேநவைபட் டென்றநண்ணார்கடலுள்
ளகப்பட்டமிழ்ந்தியலைமேன் மிதக்கவனைத்துங்கண்டே
புகப்பட்டழிக்கும்வினையின் பொலிசைகாண்மினென்பார்.

உரை.— மிக்கவல்லமையுடையநாதன் றிறத்திறற் கரைமேற்சேர்ந்தயூதரோ நகைக்கப்பட்டுப் பாவவினையா னிறைத்த தம்பகைவர்கடலினுள்ளகப்பட்டமிழ்ந்தி யவர்படையெல்லாஞ்சிதைத்து திரைகளின்மேன் மிதக்கக்கண்டு இதோவொருவன் மனத்திற்புகுந்தவினை யவனையழித்துக்கொடுக்கும்பயனிது காண்மினென்பாரென்க. (௭௰)

பரியேகாவாவுயிரைப் பருகியூன்பெய்மருப்பிற்
கரியேகாவாவளிமுற் கடிதாரிரதங்காவா
வெரிவேல்காவாவெவையுங்காவா விறையோனருளிற்
புரிவேகாவாதனகால் புணரின்வினைவிதென்பார்.

உரை.—குதிரைப்படையு முயிர்களையுண்டு குருதிகளையுமிழ்ந்தகொம்பையுடையயானைகளுங் காற்றினுங்கடிதாயோ

டியவீரதங்களும் படைவீரரு மற்றெவையுங் காக்கமாட்டாதே யாண்டவன்றனையனையப்புரிந்து தானன்போகொவானாயிருதலாலவனாதரவில்லாதபடி காரணமரனபாரவந்தரும் விளைவிதுதானென்பானென்க. (௭௧)

நல்லதிலதேலமுதே நஞ்சாநஞ்சேயமுதா
மல்லதிலதேல்வினையே யமர்செய்துதைப்பநிற்பா
ரில்லதிலதேல்வினையே யிகல்செய்தவரைக்கெடுக்க
வல்லதிலதேயென்பார் வரையாத்தொழுதுமகிழ்வார்.

உரை. — நல்வினையில்லாதாயி னமிழ்துண்டாலு நஞ்சாமே, தீவினையில்லாதாயி னஞ்சினையுண்டாலு மமிர்தமதுதானாமே, ஒருவனுக்குத்தன்றீவினை போர்செய்துதைத்துத்தள்ளுங்காலத்து நிற்பாரில்லை, அவ்வினையில்லாதவரைப்பகைத்தாலு மவரைக்கெடுக்கவல்லதொன்றில்லையென்பா ரளவுமின்றி நாதனைத்தொழுதுமகிழ்வாரென்க. (௭௨)

சொல்வாய்தவிரச்சிறைதீர் சுதருவந்தப்புறம்போ
யெல்வாய்முகிலுமல்வா யெரித்தூணுருவுமிவர்முன்
செல்வாயிவர்சென்றெரிவாய் திளைத்தபாலைத்தினைவா
யொல்வாயழுமாற்று துணுநீரின்றியுளைந்தார்.

உரை. — இங்ஙனஞ் சொல்வின்றன்மை கடந்தமுறையோடு சிறைதீர்ந்தசுதர்களிசூர்ந்தப்புறம்போய்ப் பகலிலேயொருமேகமு மிராவிலேயோரக்கினித்தூணு முன்னேவழியைக்காட்டத் தாம்பின்சென்றுபோ யழன்றபாலைநிலத்திற்சேரும்போ தெழும்பியவழலையும்பொறுக்கமாட்டாம லுண்பதற்கு நீருமில்லாமல் மிகவும்வருந்தினாரென்க. (௭௩)

தொடையேநின்றதளையயு நீதித்தொகையும்பிரியா
மிடையேநின்றவிறையோன் பணிப்பவேத்திரத்தாற்
புடையேநின்றகல்லைப்புடைப்பப் புனல்பாய்ந்தக்கல்
விடையேநின்றுஅடர வினிதெண்ணிலர்சால்புண்டார்.

உரை. — தொடர்த்தமாலையாகத் தளையயு நீதியும்பிரியாமனிறையக்கொண்டநாதன்கட்டளையைச்செய்ய மோயிசன்

முற்சொன்னபிரம்பிஞற் பக்கத்துநின்றகல்லே யடித்தவளவி லே யக்கல்லினின் ருண்ணீர்ப்புனல்புறப்பட்டுப் பாய்ந்தோ டி யவரப்பாற்பெயர்ந்துபோகையி லக்கல்லும் பக்கத்துத்து டர்ந்துவர நீரில்லாதவிடமெல்லாங் குறையின்றி மட்டில்லா தசனங்களே யினிதாயுண்டாரென்க. (எச)

அவ்வாறெருகுருஃலக்கொண் டவையாவையுஞ்செய்தெ
விவ்வாறிளவலென்ன வொளித்தத்நாடேகுகின்றான் [வனே
செவ்வாறுளத்தோன்பயந்தத் திசைதேடுவனேவென்று
வொவ்வாவெசித்தாருணர்வாரெனமீட்டுரைத்தான்வானோன்.

உரை. — சொன்னதன்மையா லவற்றையெல்லாஞ்செய்த வனுரோவென்னி விவ்வழியாக விளவலாயொளித்தாற்போல வவ்வெசித்துநாட்டிற்குப்போகிற திருக்குமாரன்றனே யிவ ன்பயந்தங்கேபோகிறுனேவில்லையோவென்று நன்றுயெசித் தார்தாமேயறிவாரென்றான் மிக்கயேல்மீளவுமிவற்றைச்சொ ன்னுனென்க. (எரு)

வே று.

கடலுடையுலகெலாங் கலங்கவின்னவை
மிடலுடை டவலியொடு விளங்கச்செய்தவ
னுடலுடையிளவலா யொளித்தபான்மையா
லடலுடையருளுணர் வமைந்துளானரோ.

உரை. — கடலேயுடுத்தபூவுலகெல்லா முற்சொன்னதைக் கேட்டஞ்சிக்கலங்கும்படி யிவற்றையெல்லா மளவிறந்தவல் லமையோடுசெய்தநாதன்றனே மனிதனு யுடலேக்கொண்டு குழந்தையாய்த்தோன்றி யொளித்துப்போகிறவனேப்போல ப்போ யளவிறந்த வனுக்கிரகத்தைச்செய்யும்படி நினைத் தானென்க. (எசு)

தீய்வினைசெய்தபோ தெசித்துச்சீர்கெட
நோய்வினைசெய்தன னுனித்தந்நாடர்தாந்
தாய்வினைசெய்துமுன் சகோபுகாத்தலாற்
போய்வினையறுத்தருள் பொழியவுள்ளினன்.

உரை.—முற்சொன்னபடி யெசித்தார் கொடுமையோடு தீவினைசெய்தகாலத் தவர்செல்வமெல்லாங்கெடும்படி பல வருத்தங்களைச்செய்ததாதன்றானே யதற்குமுன்குணத்தோ டவ்வெசித்தார்தாமே தாயைப்போலச் சகோபென்பவனைப் பேணினரென்றதனாற் றானே யிப்பொழுதங்கேபோய்த் தீவி னைகளையறுத் தருளைச்செய்யும்படி நினைத்தானென்க. (எ௭)

விண்டுளியிலாமையால் வியன்றபார்மிசை
ப்பண்டுளியனைத்திலும் பசிபரந்துயி
ருண்டுளிசகோபுதன் னுயர்குலத்தொடு
மண்டுளியெசித்தன ரருள்செய்தாரரோ.

உரை.—மழைத்துளியொன்றின்றிப் பூருவத்திலக்கன்றபூ வுலகிலெங்கும் பசிபரந்துயிர்களையுண் ணும்போது சகோ பென்பவன் றன்குலத்தோடங்கேபோ யண்டினவளவிலே யெசித்தா ரவர்க்கு மிக்கவாதரவைச்செய்தாரென்க. (எ௮)

வேதமொன்றறிந்திலார் வேதங்கொள்குலங்
கேதமொன்றியதெனக் கிளர்ந்தவன்பொடு
மேதமொன்றிலவள ரகனுள்ளிட்டனர்
பேதமொன்றிலதயன் பெருகவீட்டினார்.

உரை.—எசித்தார்தாம் வேதத்தையறியாதவராயினும் வே தத்தையநுசரித்த சகோபென்பவனதுகுலத்துக்குத் துன்ப ம்வந்ததென்றிரக்கம்புரிந்து குறைவின்றி விளையுமொருநாட் டையுந்தந்து வேறுபாடின்றித் தம்மோடொத்ததா யெல்லா தன்மையுந்திரளாய்க்கொடுத்தாரென்க. (எ௯)

தோன்முதலுடைமைசால் தொகுத்தங்கோச்சுசெங் கோன்முதலளித்தகோன் பேணுங்கொள்கையால் வான்முதலவற்றெழும் வளர்சகோபவன் கான்முதவினமெலாங் கரையில்வாழ்ந்ததே.

உரை.—பானமுதற்பலவுடைமைகளை யிவர்க்குத்தந் தந் நாளிலங்கிருந்தவரசன் றன்செங்கோலைமுதலா யிவர்க்குத்தத்

திவளைப்பேணினதன்மையால் வான்முதலோனாகிய விக்கடவுளைவணங்கிய சகோபுமகனாகிய வாணரன்முதற்றுவக்கி யவனினமெல்லா மளவின்றியங்கேவாழ்ந்தாரென்க. (இக்கதையைவிரிவாகச் சித்திரகூடப்படலத்திற்காண்க.) (௮௰)

இக்குலத்திவன்பிறந் தெய்துவானென
வக்குலத்தினருவந் தருட்கைம்மாறுற
மைக்குலத்தொளிநலம் வகுப்பப்போயவன்
மெய்க்குலத்தறிவிட வன்றுமேவினான்.

உரை.— முற்சொன்ன சகோபென்பவனதுகுலத்தி லித்திவ்வியகுழந்தை யுலகத்தையிரட்சிக்கவந்து மனிதனாய்ப்பிறப்பானென்றதனாற் சகோபினத்துக் கெசித்தார்சொன்னபடி செய்தவுதவிக் கவர்கைம்மாறடையும்படி யப்பொழுதுதானே வினையாவிருளைக்கொண்ட வெசித்தார்க்கு ஞானவொளியைக் கொண்டுவிடும்படி தான்மனிதனாயபின் பங்கேபோய் மெய்யானவேதத்தை யவர்க்கிடத்திருவுளமானானென்க. (௮௧)

மேவியகருத்தறிந் தரியவேதநூ
லேவியவிதியினோ ரிவனங்கேகியே
தூவியமுகிலெனத் தோன்றுவானென்றார்
பாவியமுறைக்கிது பயணமுள்ளினான்.

உரை.— அங்ஙனநாதன் றிருவுளமாயதன்மையறிந்த வேதநூலோ ரக்காலத்துத்தானே வரும்பொருளையுணர்த்தி யித்திருக்குமார னெசித்துதேசத்துக்குப்போ யருளைப்பொழிந்தமேகம்போலத்தோன்றுவானென்றெழுதிவைத்தா ரிப்படி யிந்நாளின்முடியும்படி யிப்பயணத்தைக்கொண்டானென்க. (௮௨)

உள்ளியவருணல மொளித்துச்செய்குவான்
றெள்ளியவமைதியீ தென்று தீயுளத்
தெள்ளியவரசுசெய் யிகற்பெயர்ப்பட
விள்ளியவுளத்துணர் வினைமுடிக்குவான்.

உரை. — எசித்தார்க்குச் செய்யும்படிநினைத்த தயையை யொளித்துச்செய்யும்படி நல்லசமயமிதுவென்று தீயமனத் திரிவுடையகொடியவரச னிவனைக் கொல்லவேணுமென்று வைத்தபகையினிமித்தமாகப் போகிறதென்றபேரிட்டு நினைத்தவற்றைமுடியாநிற்பானென்க. (அ௩)

மெல்லியவுருக்கொடு மிடலிளைஞனுணர்
கல்லியகருணையின் கருத்திதாமெனச்
சொல்லியமிக்கயேல் தோன்றலாயடி
புல்லியவணக்கொடு பொலியப்போற்றினான்.

உரை.— மெல்லியகுழந்தையுருவத்தோ டளவிறந்தவல்லமையுடையவிந்நாதனினைத்த வமிர்தமானதயையின் கருத்திதுதானேயென்று மிக்கயேலென்னும்வானவன் சொன்னபின் பத்திருக்குமாரனிருபாதத்தை மிக்கவணக்கத்தோடு தலைமேல்வைத்துவணங்கினானென்க. (அ௪)

பெய்தகான்மதுமழைப் பெருக்குற்றோடிய
மொய்தகாவெள்ளமுண் மூழ்கியின்பெழப்
பொய்தகாச்சுருதிநாற் பூத்தவாகையான்
கொய்தகாயிடர்கெடக் குளித்துள்ளாடினான்.

உரை.—மிக்கயேல்சொன்னவுரைகள் பெய்ததேன்மழையாகக்கொண்டு பெருகியோடிய வலைவில்லாத வின்பத்தின் வெள்ளத்திலே யின்பமாய்முழுகி மெய்யானவேதநூல் மலராகக்கொண்டு பூத்தபூங்கொடியோனாகியசூசை யுள்ளேகாய்ந்ததுயர்க ளறுத்துகெடும்படி யுள்ளேகுளித்தாடாநின்றானென்க. (அ௫)

தன்னுயிர்காத்தன தன்மைதன்னினும்
மன்னுயிர்காத்தருண் மலிபிரான்றன
தின்னுயிர்காத்தென வொளித்தெசித்துபோ
யன்னுயிர்காக்கவோ வயர்வுற்றானென்றான்.

உரை. — தன்னுயிரினு மற்றமன்னுயிர்களைக் காத்தளிக்குந் தயையின்மிக்கநாதன் றன்னுயிரைக் காக்கவேணுமென்ற

துபோல வொளித்தபான்மையா லெசித்துதேசத்துப்போய
ங்குள்ளவுயிர்களைக்காக்கும்படியோ வித்துன்பங்களைக்கொ
ண்டா னென்றனென்க. (அசு)

தெவ்வுலகருட்படத் தெரிந்தசூட்சிவக
னவ்வுலகினருணர்ந் தறிகுவாரலா
லிவ்வுலகுணர்குவா ரெவர்கொல்லென்றருட்
டுவ்வுலகிறைஞ்சடி தொழுதுபாடினன்.

உரை.—பகைவர்நா டருளையடையும்படி நாதன்றெரிந்
தெடுத்த விச்சூட்சியை வானுலகத்தோர் கண்டுபிடிப்பா
ரொழிய விவ்வுலகிலெவரோவறியக்கடவாரென்று சொல்லிய
பின்ன ரின்பமிகுதியா லருளைக்கொண் டறிவுடையோரெல்
லாரும்வணங்கு மத்திருக்குமாரன்பாதத்தைத் தானுந்தொ
ழுது பாடத்துடங்கினன்சூசையென்க. (எசித்துநாடுமெய்
க்கடவுளைவணங்காமையாற் கடவுட்குப் பகைவர்நாடென்றா
ன்.) (அஎ)

வேறு.

தினைவேண்டிப்போயொளித்த தன்மைபிறர்கொள்
வினைவேண்டித்தானுண் மெலிந்தழுவான்யாரே
வினைவேண்டித்தானுண் மெலிந்தழுதேயிங்கண்
ணினைவேண்டிமைந்தனென வெய்தியநீயன்றே.

உரை.—தன்னைவேண்டி யொளித்தவனைப்போலப்போய்
ப் பிறர்கொண்டவினைகளைத்தீர்க்கும்படி தானே துயர்கொ
ண் டுள்ளேமெலிந்தழுந்தன்மையுடையான்யாரோ? இத்தன்
மையுடையா னென்னைரட்சிக்கும்படி யிங்கேமனிதனுய
நீதானேயென்றனென்க.

இச்செய்யுள்முதன்மூன்றும் வெண்பாவிற்கேற்ற செப்
பலோசையால்வருவனவென்றறிக. (அஅ)

புள்வழியேநீர்மேற் புனைவழியேயாய்ந்தடைந்தா
லுள்வழியேநீத்தடையா வோங்கியல்பான்றூன்யாரோ

யுள்வழியேநீத்தடையா வோங்கியல்பான்வானரசாய்
மூள்வழியேயீங்கிடருண் மூழ்கியழுநீயன்றே.

உரை.—பறவைக ளாகாயத்திற்பறந்துபோனவழியையுங் கப்பல் கடலைக்கீண்டிப்போனவழியையுமாராய்ந் திதுவென் றுகண்டுபிடிக்கக்கூடாது, கண்டுபிடித்தாலு மனிதர் நினைக்குந்தன்மையெல்லாங்கடந்து கண்டுபிடிக்கப்படாதோங்கிய குணத்தையுடையோன்யாரோ? அக்குணத்தையுடையோன்வானரசனாயிருந்து நமக்குவேண்டி யிவ்வுலகின் முள்ளுநிறைந்தவழிநடந்து துன்பங்களுட்குளித்தழாநிற்குநீதானே யென்றுனென்க. (௮௧)

காய்ந்தாலுலகெரிக்குங் கண்ணான்கருணைமுகந்
தீய்ந்தாலவாவவிக்கு மேந்தருளான்றான்யாரோ
ஈய்ந்தாலவாவவிக்கு மேந்தருளாணீயன்றோ
வாய்ந்தாலுனதியல்பீங் காரறிவாராருயிரே.

உரை.—கோபித்தகாலத்துலகெல்லாம்வேம்படி யெரிக்குங்கண்ணையுடையனாய்த் தன்றயையைமுகந்து தன்மைகொடுத்தகாலத் தாசையையவிக்கு முயர்ந்தவருளையுடையனாயவன்யாரோ யவன்றானீயல்லோ! நாமாராய்ந்தாலு முன்னியற்கையின்றன்மையை யிங்கேயறிவாரில்லை யெவர்க்குநிறைந்தவுயிராகநின்றநாதனே யென்றுனென்க. (௮௨)

வேறு.

பாடினான்வியத்துளத்திற்பெருகுமின்பப் பரவையின்
றாடினானழுங்கண்ணீராட்டித்தேம்பூ வடிதொழுதான் [று
சூடினான்சுவைவிள்ளான்பினர்மூழ்நீர்மேற் றுறும்வெள்ள
மோடினாலெனத்தொழுங்காபிரியலின்புற் றுரையுற்றான்.

உரை.—இங்ஙனஞ் சூசைபாடினான், அதிசயித்துளத்திற் பெருகிய வின்பக்கடலைக்குளித்தான், திருக்குமாரன்மலர்ப்பாதத்தைத் தானழுதகண்ணீராற் கழுவித்தொழுதான், தலைமேலணிந்தான், தானுள்ளுண்டவினியசுவைகளைவிடாதிருந்தான்,

அதற்குப்பின்பு நிறைந்தகடலிலேவந்துவிழும்வெள்ளம்போ
லவவற்றினுமின்பமிகும்படி காபிரியலென்னும் வானோ
ன் றேவகுழந்தையை வணங்கிச்சொல்லத் துடங்கினானெ
ன்க. (௬௧)

உடல்வண்ணத்திளவலெனவிங்கண்டோன்றி யுதித்தபி
கடல்வண்ணத்தெக்குணமுமுளனாய்முன்னாட் கடுநீதி [ரான்
யடல்வண்ணத்தெசித்தறியுமல்லாவிங்கண் ணாரறியார் [ல்·
மிடல்வண்ணத்தெழுங்கதத்திவன்றன்னீதி வெகுண்டனகா

உரை.—அவதரித்தெடுத்த திருமேனியின்றன்மையாற்கு ழந்தையாய்த்தோன்றாநிற்குமிந்நாத னீரெல்லாங் கடலிலே யடங்கிக்கொள்வதுபோல வநந்தஞானமுதலெல்லாநற்குண ங்களையுடையனாய் முன்னாளிலேவல்லமைகொண்டு காட்டி யதன்னுடையநீதியை மிக்கயேல்சொன்னபடி யெசித்துநா டறியுமன்றி யிவன்றன் றிறத்தளவாகப்பொங்கிய தன்னீதியை க்காட்டக் கோபித்தகாலத் திப்பூவுலகி லதையறியாதவருண் டோ வில்லையென்றானென்க. (௬௨)

செய்ப்பட்டவானுலகும்வான்மீன்றிங்கள் செஞ்சுட
மொய்ப்பட்டநீருலகுநீரிற்றுப்பும் முத்தணியு [ரு
மைப்பட்டபூவுலகும்புனலும்வெற்பு மைந்திணையுங்
கைப்பட்டவெவ்வுலகுஞ்செய்தானிந்நற் காதலனே.

உரை. — இத்திருக்குமாரன்றானே சிவந்தவானத்தையும் வானத்தின்மீன்களையு மதியையுஞ் சூரியனையு மலைபொருத கடலையுங் கடலினுள்ளபவளமுத்துக்களையு மழகியபூமியையு மதிலேயாறுகளையு மலைகளையுங் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலையென்னுமைந்திணையையு மற்றுள்ளவுலகங் கள்யாவையுமுளவாக்கினானென்க. (௬௩)

சீராருமணியினமும்பைம்பூமுப்பா றீளையினமும்
பாராருங்கூழினமுங்கனியுந்தீந்தேன் பல்வினமு
மேராருநிறத்தினமுமின்புய்த்தாரு மிசையினமு
நீராரும்பூவுலகின்செல்வங்கூறு நிலையிலதே.

உரை.—இங்குள்ளசெல்வமணிவகையு நீர்ப்பூ கொடிப்பூ கொம்பிற்பூவென்று மூவிடத்துள்ளமலர்பலவகையு நிறைந்தபலபயிர்வகையுங் கனிவர்க்கமு மினியதேன்மொழியும் பலவகையு மழகியவண்ணங்களு மினியவோசைகளும் பூவுலகின்மற்றுள்ளசெல்வங்களை விரித்துச் சொல்லுந்தன்மையதல்லவென்க. (௬௪)

கூறுறநான்கூறுங்காற்கூற்றுங்குன்றக் குவிந்ததிரு
வேறுறவேறுய்ப்பரப்பிமண்மேனீர்மேல் விண்டிசைமேற்
பாறுறவாழ்புள்ளினமு நீர்வாழ்மீன்கட் பல்லினமு
மாறுறநீணிலத்துயிருமெண்ணற்றீட்டி வகுத்தனனே.

உரை.—வகுப்பறுத்துச்சொல்லுதற் கென்சொல் குறையாநிற்கும்படி திரளாய்க்கூட்டியசெல்வங்களை வேறுவேறாக வங்கங்கேபரப்பியபின்பு மண்ணிடத்தும் நீரிடத்தும்வானிடத்தும் விரிவாகப்பறந்துவாழும் பறவைகளினத்தையு நீரிடத்துவாழு மீன்களின்பலவினங்களையுந் தம்முண்மயங்கிநடுந் தூர்ந்து நிலத்தில்வாழும்பல்லுயிரினங்களையு மட்டின்றித் தோற்றுவித்தானென்க. (௬௫)

மட்டற்றபல்லுயிர்கட்கரசனாக வானவர்போற்
கட்டற்றவேண்டுதல்வேண்டாமைவல்ல கருத்துயிரா
நட்டற்றநிகர்கடந்தவுருவின்மாமை ஞாயில்பொறித்
திட்டற்றமின்றிமனுக்குலத்தையீன்று ளித்திறத்தான்.

உரை.— மட்டின்றியுண்டாக்கிய நல்லறிவில்லாத முற்சொன்னபல்லுயிர்க்கெல்லாமரசனும்படி வானவரைப்போலப் புறத்திறத்தாற்கட்டப்படாமற் றான்றியபொருளை வேண்டும்வேண்டாமென்னும்படி வல்லகருத்தினையுள்ளவுயிரை நட்டுச் சூழ நிகரில்லாதவடிவினையுள்ளவுடலாகிய வழகியமதிலையெழுதிவைத்துச் சோர்வொன்றின்றி மனுக்குலத்தையுண்டாக்கினு னளவிறந்தவல்லமையுடைய விவன்றானேயென்க. (௬௬)

இற்றெல்லாங்கலைமுகந்தகற்றோஞ்ச வீட்டியபின்
னற்றெல்லாமுணர்கில்லாமக்களின்று வருந்தும்வா

வுற்றெல்லாமழுக்குற்றதென் றுநாத னுடன்றனனான்
முற்றெல்லாமழிப்பமுனிவுணர்ந்ததன்மை மொழிகிற்பேன்.

உரை.—இங்ஙன முற்றக்கற்றோருந் தஞ்சொல்லாலின்ன தன்மைத்தென்று சொல்லமாட்டாம லெஞ்சிமெலியாநிற்கும்படி சொல்லிலடங்காத செல்வங்களையுண்டாக்கிப் பூவுலகிலாண்டவன்கூட்டியபின்பு மனிதரவ்வருமையுணரமாட்டாமற் றீயவைநுகரும்படி யாசையைவைத்துச் செய்தபாவங்களினாற் பூவுலகினுள்ளதெல்லா மழுக்கடைந்ததென்று நாதன் சினங்கொண் டெல்லாவற்றையு முழுதுமழித்ததன்மையைச் சொல்லுவேனென்றானென்க. (௧௭)

வேறு.

மாயிரத்தவிர்புவி வகுத்துமாயன
மாயிரத்தா றுநூற் றைம்பத்தாறுமாய்த்
தீயகத்தார்ந்தன செயிர்பொறுமையாற்
காயகத்தாண்டகை கதத்தையுள்ளினான்.

உரை.— சூரியன்கதிரால்விளக்கப்பட்ட விப்பூவுலகத்தை யுண்டாக்கி யாயிரத்தறுநூற்றைம்பத்தாறுவருடமாகி மனிதர் மட்டின்றிச் செய்தபாவங்களைப்பொறுக்கமாட்டாம லாண்டவன் றன்கோபத்தைக்காட்ட நினைத்தானென்க. (௧௮)

மறைநெறிநீங்கியமனிதருட்கெட
நிறைநெறிநீங்கியகாமநீர்குளித்
திறைநெறிநீங்கியவின்னபாருடை
கறைநெறிநீங்குபகழுவ லுள்ளினான்.*

உரை.—மனிதரெல்லாரும் வேதாகமத்தில் விதித்தநன்னெறியைவிட்டுத் தம்முள்ளங்கெடும்படி யந்நாளிலேநிறையைத்தவிர்ந்தகாமக்கடலி லமிழ்ந்தித் தேவாராதனையையுங் கைவிட்டாரென்று நாதன்கண்டு பாவங்களாவிப்பூவுலகெல்லாமடைந்தமாசுகணீங்கும்படி யதைக்கழுவ நினைத்தானென்க. (௧௯)

* Genesis, cap. 6, 7. மோயிசன் முதலாகமம், ௬-ம். ௭-ம். அதி.

உள்ளியவாய்செய வுளத்தினைவலா
லெள்ளியவுலகெலா மெஞ்சக்கார்முகில்
விள்ளியகண்பக மின்னியார்த்திடித்
தள்ளியவிருள்புவி யனைத்துமொய்த்ததே.

உரை.— ஆண்டவனினைத்தவற்றைச்செய்தற் கேவவீட்ட வளவிலே யிழிவுற்றபூவுலகமெலியும்படி கரியமேகங்களெங்கும்பரந்து விழித்தகண்ணைப்பிளந்தாற்போலக் கொடியதாய் மின்னிமுழங்கி யிடிகளிடித்துவிழவே கையாலள்ளலாமென்னும்படி யடர்ந்தவிரு ளுலகெல்லாமூடிற்றென்க. (௰)

வரையுழிவரைவிலா வடிந்தவாறெனப்
புரையுழிமுகில்கணீர் பொழியநாழிகை
யரையொழியாமுன ரகன்றியாண்டையுந்
தரையுழியாற்றொடு தடங்களார்ந்தன.

உரை.— மலையினின்றிழியுமாறுபோலத் துளைத்தமேகங்களினின்று நீர்த்தாரைகள் விழுந்ததனா லரைநாழிகைமுடியாமுன்னே யகன்றபூவுலகெங்குமுள்ளவாறுகளுந் தடாகங்களு நிறைந்தனவென்க. (௰௧)

ஆறொடுமாறொடு மரிதநான்கினு
மாறொடுமாறுமொய்த் ததிர்ந்தெழுந்திரை
பாறொடுபாறெனப் பொருதுபாறெலாம்
பாறொடுபாறுநீர் படர்ந்துமொய்த்ததே.

உரை.— பதினாறுதிசைகளிடத்துங் கரைவிட்டெழுந்த வாறுகளொன்றொன்றோடேமோதிக் கப்பலோடுகப்பலெதிர்த்துப்பொருதாற்போல வதிர்ந்தெழும்படி பருந்துபறக்குந்தன்மைத்தோடியவெள்ளம் பூமியையெங்குமூடிற்றென்க. (௰௨)

கரைகொழுங்கடலெழீக் கழறிவாங்கிய
வரைகொழுமுயர்திரை மங்குற்பாய்ந்தெழப்
புரைகொழுமுழக்கெழீப் புவனமெங்கணு
முரைகொழுநடுக்குறி யுலம்பிற்றாயதே.

உரை. — கரையின்மேற்பொங்கியகடல் முழங்கிவாங்கா நின்றமலையினுமுயர்ந்ததிரைகளெழுந்து மேகத்திற்பாய்தலி னிகரில்லாத முழக்கமாகிப் பூவுலகமெங்குஞ்சொல்லப்படா தநடுக்கத்தோடஞ்சிமுழங்கிற்றென்க. (௬௩)

நீரொழுமோதையு நீர்பெய்யோதையுங்
காரொழுமோதையுங் கால்செய்யோதையுஞ்
சூரொழுமோதையுந் துதைந்துவீழ்மனை
பேரொழுமோதையும் பெருகிமாறுமால்.

உரை. — கடற்றிரைமேற்பாயவு மழைதிரளாய்ப்பெய்ய வும்மேகத்தினின் றிடிகளிடித்துவிழவு நாற்றிசையிற் காற்றதிர் ந்துவீசவு மஞ்சினர் கூவென்றழவுநெருங்கி யெங்கும்பெ ரியமாளிகைதகர்ந்துவிழவு முழக்கத்தோடெழுந்த வோசை கள் தம்முண்மயங்கிப் பெருகிமுழங்கினவென்க. (௬௪)

புதைத்திருட்கிளர்த்தலும் புயற்பனித்தலுந்
துதைத்தடுத்திடித்தலுங் கடற்சுளித்தலுஞ்
சிதைத்தலைப்பெருக்கமுந் திளைப்பக்கண்டனர்
பதைத்திரைத்துகப்பிடைப் பனிப்புற்றோடுவார்.

உரை. — அங்ஙன நெருங்கியவிருளின்மிகுதியு மேகங்கள் விடாமழையைப்பெய்தலு மோயாமலிடிமிக்கிடித்தலுங் க டல்பொங்கிக்கோபித்தலு மெல்லாவற்றையுங் கெடுக்கும் வெள்ளப்பெருக்கமு மேன்மேலு மிகவாதலைக்கண்டவெல் லாரும் பதைத்துக் கூப்பிட்டு வெருவி நடுங்கி மேட்டிடத் தொதுங்கும்படி யோடுவாரென்க. (௬௫)

மாடநீண்முகட்டுயர் மரத்தின்கொம்புயர்
கூடநீண்பொருப்புயர் குழாங்கொடெய்தினர்
தேடநீணுளைந் தடுத்தசீரெலா
மோடநீணீத்தமோ டொழியக்கண்டமோ.

உரை. —சிலருயர்ந்தமாளிகையின்மேலுஞ் சிலர்பெருமு ரத்தின்மேலுஞ் சிலர் மலையினுச்சியின்மேலுங் கூட்டமா

யீக்கூடிநின்று நெடுநாளுந் தாமுழையும்படி தேடிச்சேர்த்திியசெல்வமெல்லாம் வெள்ளத்தோடோடிப்போ யழிவதே காண்பாரென்க. (௯௬)

கவிகையுங்கொடிகளுங் கதிர்செய்மஞ்சமுஞ்
சிவிகையுந்தளிமமுந் திவழ்ந்தகோசிகக்
குவிகையுங்குஞ்சமுங் கோலவட்டமும்
புவிகையுண்பெருக்கொடு போகக்காண்பரே.

உரை. — குடைகளுங் கொடிகளுங் கட்டில்களுந் தண்டிகைகளு மெத்தைக்ளும் பட்டாடையின்கட்டுகளுங் குஞ்சங்களு மாலவட்டங்களு மற்றதெல்லாமும் பூவுலகமெல்லாங்கைக்கொண்டதுபோல வெங்கும்பரந்த வெள்ளத்தோடு போகக்காண்பாரென்க. (௯௭)

ஏர்முகப்புதிமணத் திணைந்தகாந்தனு
மோர்முகத்தன்னையு முலந்ததாதையுஞ்
சீர்முகத்துணைவரு மினியசேயரு
நீர்முகத்தமிழ்ந்திமேல் வெழுமுங்கக்காண்பரே.

உரை.—மேட்டிலேநின்றவருட் சிலர்புதுமணமாகத் தமக்கமைந்தபுருடனைச் சிலரொருப்படத்தாயையுந்தகப்பனையுஞ் சிலர்தஞ்செல்வத்திற்குத் துணையாய்நின்ற கூடப்பிறந்தவரைச் சிலர்தாம்பெற்றவினியமக்களை வெள்ளத்திலேயமிழ்ந்தி மேன்மிதந்தழிந் தலையக்காண்பாரென்க. (௯௮)

கண்டுகண்புதைக்குவார் கலங்கியார்த்திட
ருண்டுகண்மழையொடு முமிழ்ந்துவிம்முவார்
வண்டுகண்விசைவரும் வாரிமேட்டுமேற்
கொண்டுகண்டங்கணூர் குழைந்தமிழ்ந்துவார்.

உரை.—சொன்னதெல்லாவற்றையுங்கண்டவர் கண்டவளவிலே தங்கண்ணை மூடிப்புதைப்பார், மனதிற்கலங்கியார்த் தளவிறந்த துன்பங்களையுட்கொள்வார், உட்கொண்டதுயரைக்கண்மழையாக வுமிழ்ந்தாற்போலவழுவார், அப்பொழுதெ

ய்தவம்புவரும்விசையோடு மேற்பெருகியோடிய வெள்ள
மேடுகளின்மேற் பிரளக்குதித்தமையா லங்கேயிருந்தவரெல்
லாரும் குழைந்தமிழ்ந்திச் சாவாரென்க. (௱௯)

வேறு.

ஏரணிவலியின்னீதி யிறைபவன்முனிந்தகாலை
நீரணியரணமாகா நெடுமதிளரணமாகா
சீரணியரணமாகா சேண்வரையரணமாகா
பேரணியரணமாகப் பெற்றநல்வினையிலார்க்கே.

உரை.— உயர்ந்தவல்லமைக்களவாக நீதியையுடையநாதன்முனிந்தகாலத்துத்தன் னுயிரைக்காக்கும்படிபெரும்படையினரணாக நல்வினையையுடையார்க்கொழிய மற்றவர்க்குக்கடலுமரணாகா, மதிலுமரணாகா, காடுமரணாகா, மலையுமரணாகாவென்க. (௱௰)

எல்விராப்பனிப்பமாரி யெழுந்திராக்கதிரிற்பாய்ந்த
வில்விராப்புரிசையோங்கு மெயிவிராப்புணர்ந்தநாவாய்
வல்விராக்கவிழ்ந்துமூழ்க வரையிராப்பெருக்குண்மூழ்கா
கொல்விராவுயிருமில்லாக் குழைந்துலகழிந்ததன்றே.

உரை.—நல்வினையில்லாரைக்காக்கும்படி யரணில்லாமையாற் பகலிராவுமாக மழைவிடாமற்பெய்தலிற் சந்திரன்முகத்திற்பாய வெழுந்தமாளிகையொன்று நில்லாமலு முயர்ந்த மதிலாற்சூழப்பட்டகோட்டையொன்று நில்லாமலுஞ் சம்பாதித்தகப்பல்களிற் கவிழ்ந்தமிழ்ந்தாதபடி வல்லதொன்றுமில்லாமலுஞ் சாகாதவுயிரொன்றின்றி யன்றேபூவுலகெல்லாமழிந்ததென்க. (௱௰௧)

ஆதியைப்பழித்தகாமத் தசனிபட்டெரிகின்றாரு
நீதியைப்பழிப்பவெள்ளி நீர்த்திரைநந்தமிழ்ந்துவாரு
மோதியைப்பழித்தபாவத் துணைவிலசோர்கின்றாருஞ்
சேதியைப்பழித்தமாடஞ் சிதைந்துவீழ்ந்தழுங்கின்றாரும்.

உரை.—ஆண்டவனைப்பழித்து முன்காமத்தீயிலெரிந்தவரன்றிடிபட்டெரிவார் சிலர், தேவநீதிமுறையை யெண்ணம

ணிந்தித்தவர் நீந்தி நீந்திச்சோர்ந்து வெள்ளத்தமிழ்ந்துவோர்சிலர், உயிர்க்குணவாகிய நல்லுணர்வுகளைக் காதுட்கொள்ளாமற் செய்தபாவத்தால்வாயினாலுட்கொள்ளும்படி யுணவின்றிப் பசியாற்சோர்ந்துசாவார் சிலர், தேவகோயிலினுஞ் சிறப்பாகவைத்தமாளிகைதகர்ந்துவீழ்ந் ததின்கீழ்நெரிந்தழிவார்சிலரென்க. (௱௰௨)

இடிமுகத்தூற்றுமாரி யிடைவிடாநாற்பானாளும்
படிமுகத்தெழுந்தவாரி பருப்பதத்துயர்ந்தவெல்லா
முடிமுகத்தெழுந்துமேலைம் முழத்தெழீஇயெவருமாண்டு
மடிமுகத்தழிந்தஞாலம் வயின்றொறு நீத்தவாரி.

உரை.—இடைவிடாம னாற்பதுநாளு மிடித்துப்பெருமழையூற்றதாகப்பெய்ததனாற் பூவுலகிலாயவெள்ள மெல்லாவுயர்ந்தமலைகளினுச்சிமேலே பதினைந்துமுழமாக வேறினதன்மையான் மனிதரெல்லாருமடிந்து பிணமாகவழிந்த பூவுலகெங்கு மொருவெள்ளமாகநின்றதென்க. (௱௰௩)

பிடிநலந்தழுவிநீந்தும் பெருங்கரிவரையென்றெண்
மடிநலமுயன்மான்கேழல் மணாகவிபலவுமேறிக் [ணி
கடிநலஞ்சேர்ந்துமூழ்குங் களிற்றொடுமவையுமூழ்க
வடிநலமிழந்தவாழ்க்கை யடுத்தனர்சிதைவபோன்றே.

உரை.—தன்பெட்டையானையைத்தழுவிநீந்துகின்ற பெரியமதயானையைக்கண்டு மலையென்றெண்ணி நீந்திச்சோர்ந்தமுயலு மானுங் காட்டுப்பன்றியு மணாயுங்குரங்குமொழித்தபலவு மந்தயானைமேலேறிப்போகையிற் றானெடுங்காலத்து நீந்தியபின்பு தன்பெலன்சொர்ந்தமையா லியானையமிழ்ந்தி யத்தோடு மற்றதெல்லாமு மமிழ்ந்தின, எத்தன்மைத்தோவென்னி லிடைப்பெலனில்லாத வாழ்க்கையைநம்பினவரழிந்துபோம்வாழ்க்கையோடு தாமுமழிவதுபோல விருந்ததென்க. (௱௰௪)

பயமிகப்பகைதோன்றாது பசுவரிப்புலியின்மேலும்
வயமிகச்சிங்கமேலு மான்கலையாளிமேலு

மயமிகச்சடுதிநீந்தி யயர்ந்துசோர்ந்துளமாயாவுங்
கயமிகப்பெருக்குண்மாண்டு கயற்கினம்விருந்துண்டாமே.

உரை. — பயமிகுதியாகியவளவிலே முன்னிருந்த பகை தோன்றமாட்டாமையாற் புலியின்மேலேபசுவுஞ் சிங்கத்தின்மேலேயாடும் யாளியின்மேலேகலைமானு மேறிக்கொண்டு நீர்பெருகிமிக்கவளவிலே சீக்கிரமாய்நீந்தியதனா லயர்ந்து சோர்ந்து சொன்னவையு மொழிந்தமிருகங்களெல்லாமு மாழமாய்ப்பொங்கின வெள்ளத்தின்மடிந்து மீனினங்கள் திரளாய்விருந்தினையுண்டனவென்க. (௬௰௫)

மயில்கிளிபுறவுபூவை மடவனங்குறும்புள் நாரை
குயில்கொடிசிரவங்கூகை கொக்கினமுதற்புள்யாவும்
பயில்துளிவிடாமையானும் பருகவொன்றிலாமையானுந்
துயில்சிறிதிலாமையானுந்தொறுந்தொறுந்துஞ்சிற்றன்றே.

உரை.—மயிலுங் கிளியும் புறவும் பூவையு மன்னமுங் காடையு நாரையுங் குயிலுங் காக்கையுங் கவுதாரியுங் கூகையுங் கொக்கு மொழிந்தமற்றப்பறவைகளெல்லாந் தாமாகாயத்திற் பறப்பனவாயினு நாற்பதுநாள்மழைவிடாமலு முணவில்லாமலுந் தூங்காமலு மெல்லாங்கூட்டங்கூட்டமாய் மடிந்தனவென்க. (௬௰௬)

வாயுமுன்றூமம்போலு மாவிமுன்கங்குற்போலுந்
தீயுமுன்பூளைபோலுந் திடனின்முன்பொய்யும்போலும்
வீயுமுன்னுழைகள்போலும் விமலனுண்முனிந்தநீதி
நோயுமுன்னெதிர்த்துத்தாங்க நுனித்தபீடுடையார்யாரே.

உரை.—காற்றின்முன்னேபுகையுஞ் சூரியன்முன்னே யிருளுந் தீயின்முன்னேபஞ்சு மெய்யின்முன்னேபொய்யும் வேங்கையின்முன்னேமான்களு மிவையெல்லா நில்லாதழிவனபோலே யாண்டவன்கோபித்து நீதிமுறையால்வருத்துவிக்கும்வருத்தத்தைத் தாங்கி யழியாமலெதிர்த்து நிற்கும்படி வல்லமையுடையாரொவருண்டோ வில்லையென்க. (௬௰௭)

நூல்வருஞ்சுருதிவேலி நெறிதவம்விளைத்தசீலஞ்
சால்வருமாட்சிநோவன் றானுந்தான் றவத்திலீன்ற
வால்வருஞ்சேமுங்காமும் யாப்பனுமக்களாக
நால்வருநால்வர்காந்தை நான்குமன் றிறந்திலாரே.

உரை.—அங்ஙன முலகிலுள்ள வுயிரெல்லாந்தப்பாம விற ந்தபோதுவேதமேவேலியாகக்கொண்டு அடக்கத்தையுடை யதவத்தால் விளைந்தவறத்தின் சீலங்கள்மிகுதியால்மாட்சிமை யுடைய நோவனென்பவனு மவன்றவத்தினாற்பெற்ற மூன் றுமக்களாகியசேமுங்காமும் யாப்பனு மிந்நாலுபேருமிவ ருடையதேவிமார்நாலுபேரு மன்றேபூவுலகின்மடியாதிருந் தாரென்க. (௱௰௮)

எண்மருமிறைவனாலா வியைந்தநவ்வேறிமீண்டு
மண்மருவினங்கள்விண்மேன் மருவினம்விடாமையேற்றி
விண்மருவமலன்றானே விரும்பிமீகாமனாய்ப்பார்
கண்மருவளவில்வாரி கடந்துமேன்மிதந்துநின்றார்.

உரை. — சொன்னவெட்டுபேருமாண்டவன்சூட்சியாற் செய்யப்பட்ட வொருமரக்கலத்தேறி யதிலேபூமியிற்றிரியு ம்விலங்கின்வகையு மற்றுயிர்வகையு மாகாயத்திற்பறக்கும்வ கையும் வகைக்குவகை பலசோடுகளைத் தப்பாமலேற்றி யக்க ப்பலையுண்டாக்கிய சூட்சியான் மழைத்துளியொன் றுமுள் ளே நுழையாமலுங் கவிழாதபடி யதற்காண்டவன்றானே மீ காமனா யதனைநடத்திப் பூவுலகிடத் தளவின்றிப்பரந்தவெள் ளத்தின் மேன்மிதந்து துன்பமொன்றின்றி நின்றாரென்க.
(௱௰௯)

அணிவளராருமேனி யாகியநாட்டிலங்கண்
மணிவளர்குன்றத்துச்சி வதிந்தயாறிழிந்தவேலை
பிணிவளரின்னதன்மை பினர்பெய்யாதாணையாகப்
பணிவளர்வான்வில்பெய்காற் பரப்புவலென்றானாதன்.

உரை.—அழகிய ஆருமெனியநாட்டிலுள்ள வுயர்ந்தமலை யினுச்சியிலே யக்கப்ப லுளுக்கார்ந் ததினின் றெல்லாருமிற

ங்கினபின்பு பிற்காலத்தித்தன்மைத்துக் கேடாம்படி பெய்யாத்தற் காணையின்றன்மையா லடையாளமாக மழைபெய்யும்பொழுது மேகங்களிலே யணியைப்போல வான்வில்லைப்பாப்பித்தோற்றுவிப்பேனென்று நாதன்ருனே யவர்களுக்குச்சொன்னுனென்க. (ஆகையாலச்சலப்பிரளயம் வருமுன்னே வான்வில்தோன்ருதென்றதாயிற்றென்க.) (௱௨௰)

சோதியின்வடிவாய்ஞானந் துடர்குணத்தெஞ்சான்
வீதியின்வடிவாய் நீத்தம் விட்டுலகஞ்சியெஞ்ச [கோப
நீதியின்வடிவாய்நின்ற நிமலனேகருணைபூத்த
சாதியின்வடிவாயிங்கண் டனையனுமிவன்ருனென்ருன்.

உரை. — அங்ஙனஞ் சோதிவடிவாக வநந்தஞானமுதற் சகலநற்குணங்களைக் குறையாமனுடையனுக்கி கோபத்தின்வழியாகச் சொன்னபிரளயத்தைவரவிட்டுப் பூவுலகமஞ்சிக்கெடும்படி நீதிவடிவா யந்நாளினின்றகடவுளிப்பொழுது கருணையைப் பூவாகவணிந்த சண்பகமரத்தின்வடிவாயிங்கே குழந்தையாய்நிற்குமிவன்ருனே யென்ருன்காபிரியலென்க. (௱௨௧)

பொற்கலத்தேந்தித்தந்த பொழியமுதனைய வானேன்
சொற்கலத்தேந்திக்காதை துற்றியவிருவருள்ளந்
தற்கலத்தேந்துமின்பஞ் சால்பினுலன்னைதன்கை
யெற்கலத்தேந்துந்தேவ விளவலைப்பாடினுளே.

உரை.—பொற்கலத்தின்மே லமிர்தத்தையேந்தித்தந்தாற்போல வவ்வானவ னினியதன்சொல்லாற் காட்டியசரிதையைக் காதாலுண்டருசையுமரியுமென்றிருவருள்ளத்திற்கொண்ட வின்பத்தின்மிகுதியாற் ருயாகியமரியென்பவள் தன்கையா லொளியின்வடிவாகவேந்திய திருக்குமாரனைநோக்கிப் பாடாநின்ருளென்க. (௱௨௨)

வேறு.

மருடருமறுவற மழைதருமடிவற
வருடருகுருதியி னடைமழைதருகுவை

யருடஞுருதியி னடைமழைதருகுநின்
சருடருமதுமல ரிணையடிதொழுதும்.

உரை.—மயக்கத்தால்வந்த பாவங்களையறுக்கும்படி முன்
னூளிலேயளவின்றிப்பெய்தமழை தந்தகேடுகள்போ யருளை
ப்பொழியு மடைமழையாக வுன்றிவ்வியவிரத்தத்தைச்சிந்த
மனிதனாய்வந்தவனே யிந்தத்தயையைப்பற்றி யுன்றுமணாம
லர்ப்பாதத்தைத்தொழுது மென்றுளென்க. (ாஉரு)

சினவழிதெரிகில தயைவழிதெரிகில
மனவழியடைகில மரபுயர்கடவுளை
மனவழியடைகில மரபுயர்கடவுணின்
றனவழியொளிரரு டகுமடிதொழுதும்.

உரை.—உன்சினத்தின்வழியு முன்றயையின்வழியு மொ
ருவனாற்றெரியப்படாம லுணர்வெல்லாங்கடந்த வுயர்ந்தகு
ணத்தையுடையகடவுளே யத்தன்மையைப்பற்றிப் பொன்
னூல்விளங்கி யருளைத்தரு முன்பாதத்தைத்தொழுது மென்
றுளென்க. (ாஉச)

மெலியுலகழிவுற வெருவிடவெகுளினை
மலியுலகுயிருற மகவுருவடிவனை
மலியுலகுயிருற மகவுருவடிவநின்
வலியுலகுணர்வுற மலரடிதொழுதும்.

உரை. — பூவுலகெல்லாமெலிந்தழியும்படி யந்நாளிலே
வெருவிட்டு வெகுண்டாயே, இந்நாளோவென்னி லுலகெ
ல்லாந்தன்வினைதீர்த்து நல்லுயிரைப்பெறும்படி மனிதனு
யுதித்தாயே, உலகத்தையிரட்சிக்கும்படி யிங்ஙனம் வந்தவ
னே, உன்வல்லமையை யுலகெல்லாமறியச்செய்யும்படி யு
ன்மலர்ப்பாதத்தைத் தொழுதுமென்றுளென்க. (ாஉரு)

வேறு.

பாணெறிபலவையும் பகர்ந்துவப்பெழீக்
கோணெறியொளிமுகக் குழவியேத்தினர்

சேணெறிநடந்துபோய்த் தெளிந்தவாவியைக்
காணெறியெய்திக் கரையினண்மினார்.

உரை.—இனியபாத்தொடையாக விவற்றையும் பலவற்றையுஞ்சொல்லி மிகவுமகிழ்ந்து நவக்கிரகத்திலொன்றுபோல முகத்தொளிர்ந்த குழந்தையையேந்தி யிருவருநெடுநெறி நடந்துபோனபின்பு தெளிந்ததடாகத்தைக்காணும்படி சென்று கண்டகுளத்தின்கரையைச்சேர்ந்தாரென்க. (௱உசு)

புலங்கரைவதிந்தனர் புடையகன்றதோர்
நிலங்கரையிலாதொரு நிழலிலாதுநீ
றிலங்கரையுயர்மலை யெனக்கண்டும்பரை
யலங்கரைவாகையா னழைத்தனேதென்றான்.

உரை.—சொன்னகுளத்துயர்ந்தகரையின்மேலிருந்து தூரமகன்றதோரிடமட்டுமின்றி நிழலைச்செய்யு மரமுமின்றிக்கண் டதிலேவெண்சாம்பலாகப் பக்கத்துயர்ந்தமலையைப்போல வோர்மேடுகண்டு மலர்க்கொடியோனாகியகுசை சூழிருந்த வானவரையழைத் ததேதென்றுகேட்டானென்க. (௱உஎ)

இன்னவைமிக்கயே விறைஞ்சிக்கேட்டவண்
பன்னவைமிடைந்தவைம் புரத்திற்பண்டுநா
டுன்னவையிளவறன் றுண்மைதோற்றுமென்
றன்னவைகேண்மினென் றனுகிக்கூறினான்.

உரை.—இதைக்கேட்டமிக்கயேலென்னும்வானவன் றெண்டனிட்டுச்சொல்லி யங்கேபாவமிகுதியாலைந்துநகர்க்குப் பூருவத்திலேசம்பவித்தசெய்தி யித்திருக்குழந்தையுள்ளவளவிறந்தவல்லமையைக்காட்டுமென்றச்செய்தியைக்கேட்பீராகவென்று மீளவுங்கிட்டவந்துசொன்னானென்க. (௱உஅ)

வேறு.

காணாறுநேமிகாணாதுமூடு காவாதவாரிகழிவாய்
நாணாறுமாகநான்மூன்றுமாக நாலாண்டுமாரிநவைபா

ரூ னூ றுசோ துமத்தா ரதைந்து மூருற்றபாவமொழிய
வா னூ றுதீயையயோர்மாரியாக வான்வாரினுனிம்மகனே.

உரை. — முற்சொன்னபடி யொருவனூற்காக்கப்படாம லுலகமெல்லா மொருவெள்ளமாகநிற்க வந்தசலப்பிரளய முடிந்து நானூற்றுப்பதினுறுவருடமாயபின்பு பாவத்தா னிறைந்தமையாற் பாவத்தினூற்ருகியவுடலைக்கொண்டிருந்த சோதுமநாட்டிலுள்ளோரிருந்த வைந்துநகரு மடைந்தபா வங்களை யொழித்துத்தீர்க்கும்படி யித்திருக்குமாரன்ருனே வானத்தினின்று மாரியாக வங்கேயக்கினியைப்பெய்யவிட் டானென்க. (மஉக)

மறையொன்றிலாதுதவமொன்றிலரது மருள்கின்றசீல மடிய
நிறையொன்றிலாதுநிறையொன்றிலாதுநெகிழ்கின்றநீதியகல
முறையொன்றிலாதுவரைவொன்றிலாது முரிகின்றகாமமுதிரச் [ம்.
சிறையொன்றிலாதுசிதைகின்றநாடு தினைகின்றதீயினிரையா

உரை. —வேதமுந்தவமுமின்றி மயங்கியநல்லறமேமடிந் திருப்பவு நிறையுஞ்செம்மையுமின்றிக் குழைந்தநீதியந்நா ட்டைவிட்டகன்றிருப்பவு முறையு மட்டுமின்றி வழியெல் லாங்கடந்து முதியாநின்ற காமமேமுதிர்ந்திருப்பவு நல்வி னைசெய்யுங்காவலின்றி யந்நாடுகெட்டதனுனிறையப்பெய்த வக்கினிக்கிரையாயிற்றென்க. (ாகும)

மூடிகோடிகோடிகதிர்காலுமேக முதலேவலாகியசனி யிடிகோடிகோடியெரியோடுவீழ வெதிரோதைசீறவெரிவான் [லே
றுடிகோடிகோடிதுறுமோதைபோலு சுடுசூலகோரமுகி கடிகோடிகோடிகுடியாயுலாவு கடுநாடுமூடிமிடைய.

உரை.—கோடாகோடிமுடிகளைச்சூழ்ந்து கதிர்களைப்பர ப்பாநிற்குந் தனிமுதலாகிய விக்கடவுளேவலினுலே யளவின் றி யிடிகள்மேலிடிகள் நெருப்போடுவீழ வெரியும்வானமெ

ல்லாமெதிராகமுழங்கிக் கொடியதாய்ச்சீற வெண்ணிறந்த பறைகள்திரண்டுகூடி முழங்கினாற்போல வக்கினியைச்சூலா கக்கொண்ட வகோரமேகங்கள் திரண்டு கோடாகோடிபசா சுகள் குடியாயிருந்துதிரியு மக்கொடியநாட்டை மூடிநெ ருங்கினவென்க. (௱௩௧)

புரிவாய்பிளந்தவிறையோனுடன்று புரிசாபமென்றுக
டிதே [ன்
யெரிவாய்பிளந்தமுகிலேயுமிழ்ந்த விடியேறதிர்ந்துபடலா
மூரிவாய்பிளந்தமுகிலுவுயர்ந்த மூடிமாடமெங்குமுரிய
விரிவாய்பிளந்தமுகில்காலுமங்கி விளியாதெரிந்துபொழிய.

உரை.— சொன்னதைச்சொன்னதன்மையி லுளவாக்குந் திருவாயைத்திறந் தாண்டவன்கோபித்திட்டசாபம்போலவெ ரியுந்தம்வாயைப் பிளந்தமேகங்கள்கொப்பளித் தெரிந்து விழுந்த விடிகள்பட்டதனால் மேகங்களைத்தாவி யுயர்ந்தவுச் சியையுடைய மாடங்களெங்கும் வாயைப்பிளந்து முறிந் துதகர்ந்துவிழவே மீளவும்விரிவாக வாயைப்பிளந்தமேக ங்கள் திரளாய்ச்சொரிந்தவக்கினிமாரி யிடைவிடாமற்பொ ழிந்ததென்க. (௱௩௨)

பட்டியுமெங்குமெழவோதைபட்ட படர்ஞாலமுற்று
நெகிழ
விட்டியுமெங்குமிழிகாமமுற்றி விளைசோதுமத்தர்விரகத்
துட்டியுமெங்கும்வெருவோடுமுற்ற வுளவேகமுற்றியுருகும்
கட்டியுமெங்கும்விரவேகலந்துகடிமாகமொய்ப்பவெழுமே

உரை.—பட்டுவிழுமாடங்களெழும்படி விட்டவோசை யாற் படர்ந்தபூவுலகெல்லா மதிர்ந்துகுழைபாநிற்க மேகத்தி னின்றுபொழியுந் தீயும், சோதுமநாட்டாருடைய காமமுற் றிவிளைந்தவிரகநோயாலவர்மனதினின்றெழும்புந்தீயும், வெ ருவுங்கோபமும்வருத்தமுமுற்றியுருகாநின்றவவர் கண்ணிட த்துக்கிளம்புந்தீயு மிவையெல்லா மெங்குங்கலந்தாகாயத்தை மூடியெழுந்தனவென்க. (௱௩௩)

மேகங்கள்வேகவிடுமீன்கள்வேக விடியேறுவேகமினி
ரு
மாகங்கள்வேகவொளிவேந்தன்வேக மனமஞ்சிமேகமறைப
வாகங்கள்வேகவிழிகணைகள்வேகவறைநாவும்வேகவலைகொள்
வேகங்கள்வேகநதிவேகவேக வெருவாகவேலையகல.

உரை.—அங்ஙன மேகங்களு மீன்களு மிடிகளும்வானமு
ம் வேகாநிற்பச் சூரியனும்வெந்தஞ்சி மேகத்துண்மறைந்
தொளிப்ப அங்கெவர்க்குமனமும்வெந்து வேகும்வக்கினி
யைப்பார்த்தகண்ணும்வெந்து வேகுதென்றுச்சரித்தநாவும்
வெந்துஅந்நாட்டிலிருந்த வாறுகருட்டினவலைகள்வேகும்ப
டி தாணும்வெந்தோடியதனாற் கடலுமஞ்சி யகன்றதென்க.
(௱௬௪)

நாலோடுநாலுதிசையோடியோடி தனியாய்நடுங்கிந
வியக்
காலோடுகாலுமெரிகெந்தகஞ்செய் கனலாலெரிந்தபலவோ
டாலோடுமாலுமழலாவிமண்டி யவியாதகாமவசடர்
மாலோடுமாலுமிகமாழ்கிவெந்து மதிபாதெலாருமடிவார்.

உரை.— எண்டிக்கிலுமோடி யெவையுநடுங்கும்படி யடி
த்தகாற்றோடெரிந்துவிழுங் கெந்தகநெருப்பினுன் மற்றதெ
ல்லாம்வேகாநிற்ப விடாமழைபாகமுழங்கிப் பெய்யுமக்கினி
மாரிமிகுதியா லவியாதகாமத்தீயிலே வெந்தவப்பாவிக ளன்
று வாதையுமச்சமுமிகுந்துமயங்கி யெல்லாரு நினைத்திராம
ன் மடிந்தாரென்க. (௱௬௫)

வீழ்ந்தாருமேறுபடுவாருமுண்டு வெருவாகமுண்டும
னையின்
றாழ்ந்தாருமாவிவிடுவாருமுண்டு தழல்மாடமுண்டுதகர
வாழ்ந்தாருமாகிநெரிவாருமுண்டு வயின்யாவுமுண்டுவடியா
சூழ்ந்தாருதீயினெரிவாருமுண்டு சுடுமாரியுண்டிலையார். [ச்

உரை.—நெருங்கிவிழுமிடிகள்பட்டுச் சாவார்சிலரோ, வெ
ருவி யுயர்ந்த மனையினின்றுதாண்டிவிழுகையி லிறப்பார்சில

ரோ, பெரியமாளிகைகள் வெந்துதகர்ந்துவிழுகையி லதிலே வாழ்ந்திருந்தவர் கீழகப்பட்டுநெரிந்துமடிவார்சிலரோ, இடங்கடோறும் வடிவின்றிப்பரந்து நிறைந்தவக்கினி வெள்ளத்திலெரிவாரன்றித் தப்பியுய்ந்தாரில்லையென்க. (௱௬௬)

விரகங்கொடியபிறையாவும்வேக விரிநீதிதூண்டும்வி
ளியா
நரகங்கொடியினிகர்தோற்றுமாரி நனியாகவிட்டவிவனே
யுரகங்கொடியவிடமிஞ்சுபாவ முருவாகிமாறுகருணைச் [ன்.
சிரகங்கொடேயமுகிலாகவின்று திரிநாதனென்றுதொழுதா

உரை.—காமவிரசமுதற்கொண் டுள்ளபாவமெல்லா மெக்காலமும்வேகும்படி யாண்டவன்தளவிறந்தநீதி கொளுத்தித்தூண்டாநிற்க வெப்பொழுதுமவியாதநரகத்தீயி னகோரத்தைக்காட்டும்படி முற்சொன்னவக்கினிமாரியைத் திரளாய்ப்பொழியவிட்டவ னித்திருக்குமாரன்றானே, இப்பொழுதோவென்னிற் பாம்பினஞ்சினும் கொடியபாவங்களைத்தீர்த்திரட்சிக்கும்படி மனிதனுகிக்கருணையைமழையாகப்பொழியு மேகவடிவாய்த்திரிகின்றானென்று மிக்கயேல்சொல்லிவணங்கினனென்க. (௱௬௭)

மெய்ந்நூற்றிறத்துளிவையாவுமின்ப மிகவும்பர்கேட்
டுவிரிவாய்க்
கைந்நூற்றிறத்துநிகராதமாலை கடிதாகவாசமலரை
யந்நூற்றிறத்துவடிவாகவீக்கி யடிமேலிறைஞ்சியணிய
வெந்நூற்றிறத்துமிணையாதவாசி யினிதன்றுபாடியிடுவார்.

உரை.—உண்மைகொண்டுசொன்னவற்றை யினிதாய்க்கேட்ட மற்றவானவர் கைபடித்தநூலின்றிறத்தினு னிகரப்படாதவழகியமாலைகளாம்படி சீக்கிரமாய்வாசமலர்களை யழகுள்ளபொன்னூலாலே வடிவாகக்கட்டிக் குழந்தையின் றிருப்பாதத்தின்மேல் வணங்கியணிந்தபின்ன லெல்லாநூலானு நிகரப்படாத புகழ்ச்சிகளை யினிதாயுரைத்துப் பாடினரென்க. (௱௬௮)

மாற்றாரைமாய்த்தகதநீதிமாற்றி மாற்றாரையாற்றமனு
வா
யேற்றாரையேற்றவடுகோலநீக்கி யேற்றாரையேற்றவிழிந்தே
தேற்றாரையாற்றவழுதாவிவாழ்த றேற்றாரையுய்ப்பமடிவா[ர்.
யாற்றாரையாற்றமருளாய்ந்தியாரு னருவீரவாண்மையறிவா

உரை. — உன்னைப்பகைத்தவரைக்கொல்லும்படி சினந்த நீதியைமாற்றி யப்பகைவரையிரட்சிக்கும்படிமனிதனா யுன்னைவணங்காதவரை வெட்டியழிக்குங்காலம்போக்கி யவரையும் மோக்ஷக்கரையேற்றும்படி காலமாகி நீயிப்பூவுலகிலிறங்கித் தேறுதலின்றி வருந்தினரை யாறுதல்செய்துபேணும்படி நீயழுதுதம்முயிர்பிழைக்கும்வகையில்லாதாரைப்பிழைப்பிக்கும்படி நீயுன்னுயிரைச்செலவழித்துமடிவா யாறுதலில்லாதபாவிகளுக் காறுதல்செய்யு மித்தயையை யாராய்ந்து ணதறியவல்லமையா ரறியவல்லாரென்றொன்க. (௱௩௯)

ஒருநாதனென்றுதனியேகனின்றுமொருமூவரென்று
பெயராய்க்
குருவாகிவந்துதணவாதகன்று குறுகாதுமெங்குமுளனாய்ப்
பொருளாதியென்றுபொருடோறுநின்று பொருடோறழி
ந்துசிதையா
யருவாகிநின்றுமுருவோயியாரு னருவீரவாண்மையறிவார்.

உரை. — நீ தேவசுபாவமுறையாற் றுணையின்றி யொரேயொருகடவுளா யேகனுமாய்நின்று மாள்வகையினால்மூவரிலொருவனாய்நின்று எப்பொழுது மெங்குமுளவனாயினு மொருகாலத்துக் குருவாகவந்தாயென்று முன்னிருந்தவிடத்தைவிடாமலு மகன்றாயென்று முன்னளவிறந்தசுபாவங்குறுகாமலெவ்வொருகுறுகியவிடத்து முழுதுநிற்பாயென்றுஞ் சொல்லப்படுவாய், பொருளெல்லாத்திற்கு மாதிகாரணமேநீயாகி யெப்பொருளிடத்தினு நிற்பாய், அப்பொருளழியுங்காலத்துக்கூடநின்றநீ கூடவழியாய், அரூபியாய்நின்றுமிக்காலத்துருவானாய், ஆதலா லிவ்வுலகி னுனதரிய வல்லமையறியும்படி வல்லவராரென்றொன்க. (௱௪௰)

வினையொன் றுமின் றிவினைசெய்துசெய்த வினைதன்னி
லொன் றும்விழையாய் [வாய்
நினைவொன் றுமின் றிமறவொன் றுமின் றி நிகிலந்தெரிந்தநில
மூனவொன் றுமின் றிமுனிவாய்முனிந்து மூதிர்கின்றவன்பு
முயல்வா [வார்.
யனையொன் றுமின் றியுயர்வோயியாரு னருவீரவாண்மையர்

உரை.—வினையொன் றுங்கொள்ளாம லாக்கல் காத்த லழித்தலென் னும்வினையெல்லா நீயொருவனேசெய்துசெய்தவினைகளிலே யுனக்கிலாபந்தேடாய், இறப்பெதிர் நிகழென்னு மூக்காலமு மூனக்கொன்று யெல்லாநிகழ்காலமாகி யெல்லாவற்றையு மப்பொழுதே யாகும்பொருளைப்போலக்கண்டறிந்தமையா லுனக்குநினைவுமில்லை மறதியுமில்லை, இங்ஙன மெல்லாவற்றையு மறிந்தவொளியே! நீ மயக்குவிக்குங் கோபமொன் றுமின் றிக்கோபிப்பாய், கோபித்தவிடத்து நிறைந்த தயையைச் செய்வாய், இங்ஙன மூவமையொன் றின் றி யுயரியகுணங்களையுடையோனே! இவ்வுலகி லுன தரியவல்லமையறியும்படி வல்லவராரொன்றுமொன்க. (௱௪௧)

இளவன்மாட்சிப்படல முற்றும்.

ஆகப்படலம் - ௰௪ - ௯ - விருத்தம்

௲௪௱௫.

பதினைந்தாவது.

சோசுவன்வெற்றிப் படலம்.

வேறு.

தேனூர்ந்தநறும்பாகிற் றெள்ளமுதிற்றீஞ்சொல்லான்
மீனூர்ந்தவிண்ணவர்சூழ் விழைந்திளவற்றுதிபாடக்
கானூர்ந்தமலர்வாவி கடிந்தன்னூர்நெடுநெறிபோய்
வானூர்ந்தகதிர்சாய்ந்து வாருதிநீரொளித்ததுவே.

உரை.—முன்சொன்னபடி வாசத்தேன்பாகினுந் தெளிந்தவமுதினு மினியசொல்லைக்கொண்டு வானவர்கூடித் தேவகுழந்தையைத்துதித்துப் பாடாநிற்கப் பகலிலேயிருந்தவாசமலரைப்பூத்த குளத்தின்கரையைவிட்டு மரியுஞ்சூசையுந் திருக்குமாரனையேந்திக்கொண்டு நெடுவழிநடந்தபின்பு வானத்தினிறைந்தசூரியன்கதி ரன்று கடலிலேயொளித் தத்தமித்ததென்க. (க)

நீரொளித்தசுடரொழுமுன் னின்றெழுந்தநிறைநீரார்
பாரொளித்தநாதனடி பணிந்தேந்தித்துயர்க்கெஞ்சாக்
காரொளித்தமின்களெனக் கடுகிப்போய்நெடுநெறியின்
[illegible]ரொளித்தவானவர்தீஞ் சொல்லாடவேகினரே.

உரை. — கடலிலொளித்தசூரியனெழுந் துதயமாகுமுன் ன் நிறைவிடாதகுணத்தையுடைய மரியுஞ்சூசையும் பூவுல லொளித்து மனிதனுயநாதனைவணங்கிக் கையிலெடுத்தேந் த் துயர்க்குப்பின்வாங்காமல் மேகத்திலொளித்த மின்களை போலச் சீக்கிரமாய்நடந்து நெடும்வழியால்வருந் துன்ப ்களையாற்றும்படி சூழவானவ ரினிதாய்ப்பேசிக்கொண்டு வரப் போனாரென்க. (உ)

முளைத்தெழுந்தமுழுமதிபோ லரசன்னமுதிர் தூவி
வளைத்தெழுந்தகுடைவிரிப்ப வானுச்சிசெஞ்சுடரோன்
றிளைத்தெழுந்தகதிர்வீசித் தேன்றுளித்தபூஞ்சினைகள் [றார்.
விளைத்தெழுந்தமலர்ச்சோலை மிடைந்தடைந்தார்வினைவென்

உரை.—இங்ஙனம் வினையாவையும்வென்றவிம்மூவர்விரைந்துநடந்துபோய்ப் பூரணசந்திரனைப்போலத் தூயவன்னங்களிறகுகளைவிரித் திவர்க்குமேற்குடைபிடித்தாற்போலப் பறந்துவரச் சூரியனுச்சியிலேவந்தபோது தேனைப்பொழிந்தமலரைப்பூத்த வொருசோலையிலேசேர்ந்தாரென்க. (௩)

நீர்தவழுஞ்செந்தீயோ நிலமகடன்றுவர்வாயோ
கார்தவழுமின்னினமோ கமலமலர்த்தடமொருபால்
வார்தவழும்புவிச்சிலம்போ மணிவரன்றியொலித்தோடிப்
பார்தவழும்யாறொருபால் பணிக்கைபோற்றழுவினவே.

உரை.—அச்சோலையி னொருபக்கத்து நீர்மேலேதவழாநின்றநெருப்பென்பவோ, பூமகளது சிவந்தவாயென்பவோ, மேகத்திற்றோன்றிய மின்களென்பவோ, தாமரைநிறையப்பூத்த தடாகமு மொருபக்கத்து அப்பூமகள்காலிலேகட்டின பொற்சிலம்புபோல மணிகளைக்கொழித்து முழங்கிப் பூமேற்றவழ்ந்தோடுமா றிவ்விரண்டு மிருபக்கத் திருகைகளைப் போல வச்சோலையைத்தழுவாநின்றனவென்க. (௪)

அத்தலையாரந்நிழற்கா வகட்டுறைந்தார்மாதவனு
மைத்தலையார்முகிலுலகின் வானுலகின்மேலுயர்ந்தோன்
மொய்த்தலையாருலகெய்தி முற்றெளியனுருக்கொண்டா [ன்.
னித்தலையா னுண்மையைவா னெய்தினரோசொன்மினென்றா

உரை.— அம்மூவர் சொன்ன பூஞ்சோலைநிழலிலேயிருந்தார், இருந்தபின்பு மாதவன்சூழை சூழ்ந்தவானவரைப்பார்த்துமேகமண்டலத்தையும் வானமண்டலத்தையுங்கடந்து வாழ்ந்திருந்தநாத னிதோ கடல்சூழ்ந்தபூவுலகில்வந்து முழுதெளியனைப்போல வுருவத்தைக்கொண்டான், இத்தன்மைத்தானுக்குள்ளவல்லமையை வானவரேசொல்லுவீராகவென்றானென்க. (௫)

செய்ப்பட்டவானவருந் திறமுனிசொற்கேட்டுவந்து
மெய்ப்பட்டமறைமுதலோன் மெல்லடியைப்பணிந்தேத்தி
கைப்பட்டபடைவீரர் களத்திடைமுன்னிவன்காட்டும் [க்
மொய்ப்பட்டவலிகாட்ட மிக்கயலேமொழியுற்றான்.

உரை.— வானவருஞ் சூசைசொன்னதைக்கேட்டுக் களிகூறாநிற்ப மிக்கயேலென்னும்வானவன் மெய்யானவேதத்தைத்தந்த முதலோனாகிய வத்திருக்குமாரன் திருப்பாதத்தைவணங்கி முன்னாளி லிவன்போர்க்களத்திலே காட்டினவல்லமையைத் தான்காட்டும்படிசொல்லத்துடங்கினானென்க. (சு)

அலையீன்றமுத்தெனவீங் கயர்வுற்றோன்முன்னாளின்
மலையீன்றவிம்மணிப்பூம் புனவிடத்தும்மறைபகைத்த
கொலையீன்றவேல்வல்லார் குழைந்தறவிந்நாட்டிடத்தும்
கலையீன்றசொற்கடந்து காட்டியவைகேண்மினென்றான்.

உரை.— சிப்பியிற்பிறந்தமுத்துப்போலத் துணையின்றிக்கன்னித்தாயிடத் துடலையெடுத்து மனிதனாயலைபட்டுக் கடலிலம்முத்துநின்றலைவதுபோல விங்கேயலைந்துதிரியுமிந்நாதன் முன்னாளிலே மலையினின்றொழுகி மணிகளைக்கொழித்தோடு மிவ்வாற்றிடத்தும் வேதத்தைப்பகைத்தவர்படையெல்லாங்குழைந்து மடிந்துகெடும்படி யிந்நாட்டினிடத்தும் கற்றோருஞ்சொல்லத்தகுந்தன்மையைக்கடந்து வற்புதமாக விவனடத்தினவற்றை நான்சொல்லக் கேட்பாயாகவென்று மீளவு மிக்கயேல்சொன்னானென்க. (எ)

வேறு.

கல்விற்றீட்டிவரைந்தமறை கடவுள்தந்துமலையிறங்கி
யெல்விற்றீட்டியொளிர்ந்தமுகத் தெழுமோயிசன்செல்கதி
சேர்ந்து
வில்விற்றீட்டிபூணுமிழ்ந்த வேற்சோசுவனக்குலத்தரசாய்
வல்விற்றீட்டிவளர்தெய்வ மாட்சிகாட்டுமுருவானான்.

உரை.—ஆண்டவனிருகல்லிலே வேதகற்பனைகளை யெழுதித்தந்தபின்பு சீனயிமாமலையினின் றிறங்கிச் சூரியனைப்போ

ல விளங்கினமுகத்தோடுதோன்றின மோயிசனென்பவன்செ
ல்லத்தகும் கதியைச்சேர்ந்து மடித்தபின்பு விளங்கியூனுமிழ்
தற்குக் காரணமானவேலையுடையசோசுவன் யூதர்குலத்திற்க
ரசனாகி வல்லமையால்வளர்ந்ததேவமாட்சிமையைக்காட்டும்
படி தானேயுருவானானென்க. (௮)

கார்தாவசலமேற்பிறந்து கதிர்சால்தும்முமணிவரன்
றித்
தார்தாவென்னச்சூழ்தயங்கித் தண்டாதலரிற்றவழ்ந்துலவிச்
சீர்தாவிந்நாட்டிடைப்பரந்து செல்வாயெல்லாந்திருச்செ
லுத்துஞ்
சேர்தானென்னுமிந்நதியைத் துன்னியூதரெய்தினரே.

உரை.—மேகத்துட்டாவிய வுச்சியையுடைய மலையிற்பிற
ந்து விளங்கியமணிகளைக்கொழித்து மாலையின்றன்மையான்
மலைசூழவசைந்தோடிக் குளுந்தமலருட்டவழ்ந்துலாவி யிந்
தச்செல்வநாட்டிடத்துப்பரந்து தான் போனவிடமெல்லா
ஞ் செல்வங்களைநிறையும்படிசெய்தோடுஞ் சேர்தானெ
ன்னப்பட்ட விவ்வாற்றினிடத்து யூதரெல்லாரு மணுகிச்சே
ர்ந்தாரென்க. (௯)

தெண்ணந்தண்ணீர்மேய்ந்துயர்ந்த செல்லேமின்னி
த்திரண்டார்த்துக்
கண்ணங்குன்றத்துயர்நெற்றி களிப்பப்பொழிந்தவெள்ள
மொடு
தண்ணங்கந்தமலர்முல்லைத் தடத்திற்பெருகியந்நாளில்
வண்ணங்கொண்டுவந்தோங்கவளைவற்றொழுகுமாநதியே

உரை.— இந்நதி யூதர்வந்தபொழுதே கடற்றிரையைமே
ய்ந்துயர்பரந்தமேகங்கள் திரண்டுகூடி மின்னிமுழங்கிப்
பெரியமலையினுச்சி களிகூரும்படி திரளாய்ப்பெய்தோடி
ய வெள்ளத்தோடு குளிர்ந்த வாசமலரைப்பூத்த முல்லையிட
த் தங்கங்கேகூடிய வாரிகளாற்பெருகி யிவ்வழகியநாடுமகி
ழ்ந்துவளரும்படி மட்டில்லாத பெருக்கத்தோ டோடின
தென்க. (௰)

கரைமேற்றிரண்டயூதர்கொணர் கதிநூற்பேழைசேர்ந்
தனகா [த்
ணீரைமேற்கீழ்நின்றனதிரைக ணெறிபோயோடமேல்வருநீர்
திரைமேற்றிரைநின்றதிசயித்த சீர்போலடுக்கிநின்றினிதாய்ப்
புரைமேற்களித்தயூதரெல்லாம் போயக்கரைசேர்ந்தெய்தின
ரே.

உரை.—அங்ஙனம் பெருகினவாற்றின்கரையின்மே லியூதரு மவர்கொண்டுவந்த வேதமெழுதிவைத்திருந்த பேழையுஞ்சேர்ந்தவுடனே நேராகப்புனல்பிரிந்து அவர்க்குக்கிழக்குள்ளவாற்றுநீரெல்லாந் தன்வழியைத் தொடர்ந்தோடிப்போகாநிற்க மேல்வருநீரோவென்னி லதிசயித்துப்பார்த்திருந்தாற்போல் முன்னிருந்ததிரைமேற் பின்புவருந்திரையடுக்கடுக்காயேறுநிற்பக் கீழேநீரின்றியினிதாய்நனையாம லிகராதமகிழ்ச்சியோடு யூதரெல்லாரு மக்கரைசேர்ந்தா ரென்க.
(௰௧)

இவ்வாறவ்வாறவர்கடந்தவெல்லையெவருமுள்வியப்பச்
செவ்வாறடிகடம்பொறிபோற் சிதறுதொதுங்கிநின்றதிரை
யொவ்வாமறையைத்தொழுந்தன்மைத் துவந்தொல்லெனவீ
ழ்ந்துலகறிய
வவ்வாறுற்றதுரைத்தென்ன வதிரமுழங்கியோடினவே.

உரை.—இங்ஙன மந்நதியையூதர்கடந்தவளவிலே கண்டயாவரு மதிசயிக்கும்படி நல்லமுனிவரடக்கின பஞ்சேந்திரியங்களைப்போல வங்கங்கேசிதறிப்பரவாம லொதுங்கிநின்ற திரையெல்லாம் யூதர்கொண்டுவந்தவெத்தாலு நிகராதவேதத்தைத் தெண்டனிட்டதன்மையா லொல்லெனவிழுந்து அன்றங்கேயானசெய்தியை யுலகறியும்படி சொல்லிக்கொண்டுவந்தாற்போல வெங்கும்திரும்படி முழங்கியோடினவென்க.
(௰௨)

அமிர்தம்பாய்ந்துமதுப்பாய்ந்தா ரன்னம்பாய்ந்தவ
யல்கடந்து
துமிர்தம்பாய்ந்துகயல்பாய்ந்து துள்ளுங்கமலத்தடநீக்கித்

திமிர்தம்பாய்ந்துநிழல்பாய்ந்த செழும்பூஞ்சோலைபுடைமருவ
திமிர்தம்பாய்ந்துமுகில்பாய்ந்த நேரார்வைகுநகர்கண்டார்.

உரை.—அங்ஙனம் பூதராற்றைக்கடந் தப்புறம்போயினி யபுனற்றண்ணீருமதுவுங் கலந்துபாய்ந்துவிளைய வுள்ளே யன்னங்கள் குதித்துவிளையாடும் வயலைக்கடந்து நீர்த்திவலைசி தறும்படி கெண்டைகள்குதித்துப்பாய்தவிற் றள்ளித்தளம் புந்தாமரைமலரைப்பூத்த பெருந்தடாகத்தையுங்கடந்து மே ல்வளர்ந்து நிழலைப்பரந்த பூஞ்சோலைகள்சூழ்ந்து தலையெடு த்து மேகத்துட்பாய்ந்த மதிலையுள்ள பகைவரிருந்தநகரைக் கண்டாரென்க. (௰௩)

செல்லேவரையைத்தழுவுதலோ செல்லைத்தாங்கும்வரைதானோ
வெல்லேயெரிக்கோவென்னுநகரோந்துங்கன்னியம்புரிசை
வல்லேவளர்வேல்பூதரொலா மகிழக்கண்டார்த்தம்புவிசை
யொல்லேவெல்லப்போயினபோ துரையுற்றறைந்தான்சோசுவனே.

உரை.—மலையைத்தழுவினமேகங்களென்பவோ, மேகங்களைத்தாங்கிய மலைதானென்பவோ, விளங்கிய எரிக்கோவென்னுநகரைச்சூழ்ந்த வழிவில்லாதமதில்களை வேல்வல்லமையுடையபூதரெல்லாரு மகிழ்ச்சியோடுகண்டவளவிலே முழங்கிவிட்டவம்பின்விசையை வெல்லும்படி யதின்மேல்விரைந்துபோகையிலரசனாகியசோசுவன்சொன்னானென்க. (௰௪)

செல்வேஞ்செல்வநகர்தகர்ப்பச் செல்லச்செல்லுமெல்லைசெலும்
வெல்வேம்வெல்லும்வல்லமையோ வீரவில்விள்மாரியினே
டெல்வேல்வல்லதல்லதென விறைவன்றான்றன்வலிகாட்டக்
கொல்வேலில்லாதிந்நகரைக் குலையச்சிதைத்தல்காண்மினென்றான்.

உரை.—வீரரே! நாமச்செல்வநகரிடத்துச்செல்லுவோம், சென்றதைத்தகர்த்தழிக்கும்படி யங்கேசேருதற்குச்செல்லு

நேரமாத்திரமேசெல்லும், சென்றவுடனே வெல்லுவோமாகிலு மிவ்வெற்றியைக்கொள்ளும்படி வீரவில்லெய்தவம்பின்மாரியும் விளங்கியவேலின்றன்மையும் வல்லதல்லவென்று நம்முடையவாண்டவன்றானே தன்வல்லமையையின்றுகாட்டும்படி யாயுதமொன்றுமின்றி யந்நகரையழிக்கக்காண்பீராகவென்றானென்க. (௱௫)

ஏறுரொவிபோற்பற்பறையார்த் திறைவன்பணியால்ம
றைப்பேழை [ந்திவிரைந்
வீறுமதில்சூழ்கொணர்ந்தொருசொல் விளம்பாவெள்வேலே
தாறுவழல்பெய்யரியன்னா ராறுநாளைக்கொருகாலே [றார்.
மாறுவரவேமருண்டொன்னார் மனமுட்பதைப்பவியப்புற்

உரை.—இடிமுழக்கம்போலப் பற்பலவாச்சியங்கள் முழங்கி யாண்டவனேவலினால் வேதம்வைத்திருந்தபேழையை யந்நகர்மதிலின்சூழக்கொண்டுவந்து தாமொன்றும்பேசாமலாயுதங்களை யேந்திக்கொண்டு தழலைவிட்டசிங்கங்களைப் போல யூதராறுநாளுந் தப்பாமல் நாளைக்கொருமுறை சூழ வந்தார், அதைக்கண்டபகைவர்மயங்கியுட்பதைத்ததிசயித்திருந்தாரென்க. (௱௬)

கோளுற்றெளிர்வான்கோணிவற்றைக் காணக்குணக்கி
லெழுவேழா
நாளுற்றம்பிற்கடிதோடி நகரேழ்முறையின்றிடைவளைத்து
வாளுற்றெவரும்வானதிர வாய்விட்டார்த்துவருகவெனத்
தோளுற்றுயர்குன்றியல்குன்றுஞ் சோசுவன்றான்பணித்தி
ட்டான்.

உரை. — அங்ஙன மாறுநாளும்போ யேழாநா ளங்கே நடக்கு மதிசயத்தைக்காணும்படி சூரியனுதயஞ்செய்தவளவிலே யின்றுவில்லெய்தவம்பினுங்கடுகிப்போ யேழுமுறைநகரைச்சூழவளைத்து வாளையேந்திக்கொண்டெல்லாரும் வானதிரும்படி வாய்விட்டார்த்து முழங்கி வாருங்களென்று மலையினும்வல்லதோளையுடையசோசுவன் பணித்தானென்க. (௱௭)

ஆர்த்தார்திரண்டார்முடுகினிரு ரன்றேயேழாமுறை வரக்கா [ந்தே
ரீர்த்தாருருமொத்தொலித்ததிர விடைவிட்டாரனுந்தகர்ந்திடி
பார்த்தாரொன்னார்பதைத்தஞ்சப் பாய்ந்தார்பூதர்வாள்பசி யைத் [ண்டார்.
தீர்த்தார்துமித்தார்பகைவெள்ளஞ் சிறந்தவெற்றிநலங்கொ

உரை.— சோசுவன்சொன்னபடி பூதர் திரண்டுபோய்க் கூப்பிட்டுமுடுகி யன்று சூழவேழாமுறைவரும்போது மேகத்தைக்கிழித்தவிடிபோல முழங்கியதிராநிற்க வந்நகர்மதிலிடையில்விட்டுத்தகர்ந்திடிந்ததனைக்கண்டபகைவர்பதைத்தஞ்சாநிற்க பூதருள்ளேபாய்ந்து பகைவர்வெள்ளத்தைவெட்டித் தம்வாளின்பசியைத்தீர்த்தா ரங்ஙன நிகராதவெற்றியைக்கொண்டாரென்க. (ய அ)

வேறு.

பொருவற்றவிதத்துயர்பொற்புநகர்
செருவற்றதிறத்திறகர்ந்ததெனு
வெருவுற்றவியப்பிலொருங்கெவருந்
தருவுற்றபிரானடிதாழ்ந்தனரே.

உரை. — நிகராதவல்லமையுடைய வந்நகர்போரொன்றுமின்றித் தகர்ந்துவிழுந்ததென்று கேட்டவெல்லாருமஞ்சியதிசயப்பட்டு அவ்வல்லமையுள்ள குணத்தையுடைய நாதன் பாதத்தைவணங்கினரென்க. (யகூ)

விண்காவலனார்மிடலஞ்சினராய்
மண்காவல்வழங்கியசோசுவன்வாய்
தண்காவிலடைக்கலமேதரவென்
றெண்காபணநாடரொடுங்கினரால்.

உரை.—அங்ஙனங் காபணநாட்டிவிருந்தவ ரந்தச்செய்தியைக்கேட்டு வானுலகத்தையாளு மிக்கடவுளுள்ள வல்லமைக்கஞ்சிப் பூவுலகிலாண்ட சோசுவனிருந்த குளுஞ்சோலையிடத்துவந்து தமக்கடைக்கலந்தரச்சொல்லி யிவனிழலிலேயொடுங்கினரென்க. (உய)

பாரஞ்சினவஞ்சினபாரினொடு
நீரஞ்சினர்நித்தனடைக்கலம்வந்
தீரஞ்சிவிரஞ்சிவிறொன்றனனல்
போரஞ்சிலகைப்புகழெஞ்சிலனே.

உரை. — அப்பொழுதுவந்தகாபனரைப்பார்த்துப்போர் முகத்திலஞ்சாதகையா லென்றுங் குறையாதபுகழையுடைய சோசுவனிதனைச்சொன்னான்: நடந்தவற்புதங்களைக்கேட்ட ஞ்சினவுலகத்தோடு நீருமஞ்சி யழிவில்லாதநித்தனாகிய கடவுளையண்டி யடைக்கலமாகவந்தீரோ வினியஞ்சாதிருப்பீராக வென்று அடைக்கலந்தந்தானென்க. (உக)

எஞ்சாவுறவாயினரொன்றுளமற்
றஞ்சாமறமார்பலநாடரெலா
நஞ்சாடியநாணிவில்வவ்வியரு
நெஞ்சாடிகலாடநினைந்தனரால்.

உரை.—அங்ஙனங் காபனர்சோசுவனோடுறவானவென்று பின்வாங்காதகோபத்துடனே மற்றநாட்டாரெல்லாரு மிவரைப்பகைத்து வில்லையு மற்றவாயுதங்களையுங் கைப்பிடித்திவர்மேற் போர்பொர நினைத்தாரென்க. (உஉ)

வேறுயுரையும்முறையுள்விதமும்
வேறுய்முறையும்விதியுங்குலமும்
வேறுயிறையும்விழையும்மறையும்
வேறுயுறவாடவிரும்புதலென்.

உரை.—யூதர்பேசும்வார்த்தையு மிருக்குமிடமு நடக்குமுறையுஞ்சொல்லும்விதிகளு மெய்துங்குலமும் வணங்குந்தெய்வமு மனுசரிக்கும்வேதமு மிவையெல்லாம்வேறாகக்கொள்ள நீரவரோடுறவாகும்படி விரும்பினதென்னேவென்று மற்றநாடர்காபனரைக்கோபித்தாரென்க. (உங)

பகையார்க்குறவோர்பகையாரெனவுந்
தகையார்க்குளதம்முறையாமெனவே

நகையார்க்கநகைத்துநடுங்கியவவ்
வகையார்க்கிகல்செய்திடவந்தனரால்.

உரை.—நம்முடையபகைவரோ றேவாணுமெல்லாரு நம க்குப்பகைவர்தாமேயென்பது பெரியோர்க்குள்ள முறை மையல்லோவென்று காபனரை மிகவுநகைத்து நடுங்காநின் றவர்மேலே போர்செய்யும்படி மற்றவரெல்லாரும் வந்தா ரென்க. (உச)

வஞ்சித்துயிருண்ணயில்வவ்வினர்போர்
விஞ்சித்திரளாகமிடைந்தனரென்
றஞ்சித்திரிகாபனர்வந்தலறி
யெஞ்சித்தொழுதிற்றையியம்பினரால்.

உரை.—அப்பொழுது காபனர் வஞ்சனைமுற்றி வேலேந் தி மட்டின்றித் தம்மேற்போராம்படி கூடினுரென்றுகண்ட ஞ்சிச் சோசுவனிடத்துவந்து மெலிந்தலறி யவன்பாதத்தை வணங்கி யிதனைச்சொன்னுரென்க. (உரு)

ஒன்னாரினுரத்திலுலாவியுணூன்
பின்னேடுமிழுங்கதவேலடலோ
யுன்னேடுறவாடினமென்றுளமற்
றன்னுடரெலாம்பகையாடினரால்.

உரை.—பகைவர்மார்பிலுலாவி யங்கேயுண்டவவிரத்த த்தையு மின்னையுங்கொப்பளியாநின்ற வேல்வல்லவனே நா முன்னேடுறவானேமென்று மற்றநாடரெல்லாரு நம்மைப் பகைத்தாரென்க. (உசு)

மஞ்செஞ்சுகமாமுரசார்ப்பவரா
நஞ்செஞ்சுகவெய்ப்படைஞாஞ்சிலொடு
நெஞ்சஞ்சுகநீணிலமெஞ்சுகவந்
தஞ்சஞ்சிலமன்னரடுத்தனரால்.

உரை.—மேகமுழக்கத்திலு மதிர்ந்து முரசுமுழங்கிப் பாம்பினஞ்சினுங்கொடிய பலபடைகளையேந்திக் கண்டவ

ர்நெஞ்சஞ்சும்படி பூவுலகிலெங்கும்பரந்து பஞ்சரசர்கூடி நம்மேல்வந்தாரென்க. (௨௭)

விதுவீசியவில்வில்வெலற்கரியான்
மதுவீசுமெருசலமண்டிலமா
ளதுனீசதனென்னுமடற்பெயரான்
பொதுவீசர்பிரான்பொரவெய்தினனால்.

உரை.— அவ்வைந்தரசருள் பிறைதந்தவில்லால்வெல்லப் படாமல் மதுவைப்பொழியு மெருசலநாட்டையாண்ட அதுனீசதனென்பவ னரசர்க்கரசனைப் போர்செய்யும்படி வந்தானென்க. (௨௮)

நாவாலடையாநயனுபிரமாள்
மேவார்பணிவேலெறிகைமிடலோன்
காவாருமதத்தகளிற்றினுய
ரோவானெனுநாமனுமுற்றனனால்.

உரை.— வாயினாற்சொல்லத்தகாதசெல்வத்தையுள்ள ஆபிரநாட்டினரசனுமாய்ப் பகைவர்வணங்கும் வேலினையெறி யுங்கையனுமாய் நிறைந்தமதத்தைப்பொழியும் யானையின் மேல் ஓவானென்பவனும்வந்தானென்க. (௨௯)

ஏராடியவேரிமநாட்டிறையோன்
பாரானெனுநாமனகல்படியின்
வேராடியமூவிலைவேலுடனோர்
சீராடியதேர்மிசைசென்றனனால்.

உரை.— அழகியஎரிமநாட்டரசனாகியபாரானென்பவனு மகன்றபூமியின்வேராடும்படி காரணமாகிய வொருசூலத்தை யேந்தித் தேர்மேலேவந்தானென்க. (௩௰)

கிணையோவளியோகதிர்கார்மினலோ
துணையோர்துரகத்துயர்வாள்சுழலப்
பணையோம்பயிலக்கினபாழியினா
ளிணையோதவிர்யாப்பியனெய்தினனால்.

உரை.— அம்புங் காற்று மின்னலு மிவையெல்லாமயங் கும்படி பாயுங்குதிரைமேல்வந்து வாளைச்சுழன்றேந்தி வய லைப்பேணிவளரும் அயிலக்கினநாட்டரசனாய நிகராத யாப் பியனென்பவனும்வந்தானென்க. (ருக)

வாசத்தலர்பூம்வயலேகிலநற்
றேசத்தரசாய்ச்சிகிவாகையனாய்ப்
பாசத்திணைபான்மதியாழியனாய்ப்
பூசத்தியிருபிர்பொவிந்தனனால்.

உரை.— வாசமலரைப்பூத்தவயலுள்ள எகிலநாட்டரசனா யக்கினிக்கொடியையுடையனாய்க் கொடுமையா லுயிரைக் கொல்லுங் கூற்றன்பாசம்போலவும் வடிவினாற் சந்திரனைப் போலவுந் தோன்றியசக்கராயுதத்தையேந்தினனாய்ப் போர் முகத்து வீரயானையின்மேலாய்த் தாபிரொன்பவனும்வந் தானென்க. (ருஉ)

இன்னருமெவேயருமெத்தையரும்
பொன்னடமுறேயரும்வண்புகழ்சேர்
நன்னடெபுசேயருநச்சயில்வேன்
மன்னர்பிரொசேயருமண்டினரே.

உரை.— சொன்னவரச ரவருமன்றி எவேயநாட்டாரு ம் அமுறேயநாட்டாரும் எத்தையநாட்டாரும் எபுசேயநா ட்டாரும் பிரொசேயநாட்டாரு மிவ்வைந்துநாட்டிலுள்ளவ ருங் கூடிவந்தாரொன்க. (ருங)

மடையைக்கடல்வாரிதிறந்ததெனப்
புடையிற்புவியாவும்புழக்கமுற
விடையெக்கணுமுள்ளவியாவருமே
படையுற்றெமையின்றுபகைத்தனரால்.

உரை.— இங்ஙன மடையைத்திறந்து கடல்பொங்கியோ டினாற்போலப் பூவுலகநெருங்கும்படி சூழவெங்குமுள்ள வெல்லாருங்கூடிப் படையைச்சேர்த்தி நம்மைப்பகைத்து மண்டிவந்தாரொன்க. (ருச)

மலைநேர்கரியும்வளிநேர்பரியும்
முலைநேர்தனுவுமுறைநேர்கணையுஞ்
சிலைநேருரமுந்திளைசேனைகளே
நிலைநேரிலநேமிநிறைந்தனவே.

உரை.—மலைபோலுங்கரிகளுங் காற்றுபோலும்பாய்குதிரைகளுந் தீயைவிளக்கு முலைபோலும்வில்லுகளு மழைத்துளிபோலு மம்புமாரியுங் கல்லுபோலு நெஞ்சுமுடையசேனைக ளுவமையொன்றின்றிப் பூவுலகெல்லா நிறைந்தனவென்க. (௩௫)

போர்கீறியவெப்புணரித்திரையோ
நீர்கீறியநீண்கலமோசிறகாற்
கார்கீறியகற்கிரிக்குலமோ
பார்கீறியகாற்படர்தேர்த்திரளே.

உரை. — பொங்கிப் போர்க்களத்திற்படர்ந்தகோபக்கடலின்றிரைகளோ, கடலிற்றிரியு மரக்கலங்களோ, இறகுகளைக்கொண்டு மேகத்திற்பறந்தமலைக்கூட்டமோ வெங்கும்பரந்து பூமியைக்கீறி யுருண்டுவருந்தேர்களின்றிரளே தோன்றிற்றென்க. (௩௬)

வளியோகடலோமழையோவுருமோ
விளியோடதிர்கூற்றினமோவெவையோ
தெளியோமுயிருண்டுசினந்ததிருங்
களியோடுகடத்தகரித்திரளே.

உரை. — ஓடும்விசையினாற்காற்றோ, அதிருமுழக்கத்தாற்கடலோ, பொழியுமதத்தால்மேகமோ, பயக்குமச்சத்தாலிடியோ, செய்யுங்கொலையாற் கூற்றினமோ வேதோ நாந்தெளிந்து சொல்லப்படாதபடி யுயிர்களையுண்டு சீறிமுழங்குமதமாறுதயானைகளின் றிரளென்க. (௩௭)

மேமன்மன்னினவீரியர்வில்லிலுக்குங்
கோன்முன்னினகொல்லுகளம்பினமேல்

வான்மின்னெனவொல்கினவாவினபோர்ப்
பான்மன்மனமுற்றபரித்திரளே.

உரை.—திரண்டகுதிரைகளின் வெள்ளமோவென்னில் தம்மேலேறின வீரரெய்தவம்பிற்குமுந்திப்பாய்வன, தங்குளம்புகளாற்போர்க்களத்தைக்குழப்பிப் பகைவரைக்கொல்வன, வான்மின்னைப்போல வொல்கிச்சுழல்வன, பாய்ந்துதாண்டுவன போர்முகத்திற்பின்வாங்காத மனத்தனவென்க. (௩அ)

கழற்காலினர்கற்றிரடோளினர்பொன்
னிழற்றாரினர்போர்பலநீந்தினரே
றழற்கோவினர்கூற்றதுதோழரலைச்
சுழற்காரிணைதுன்றபயர்த்திரளே.

உரை.—காலராகிய படைவீரரோவென்னில்கழலையணிந்தகால்களையும் கன்மலையொத்தபுயங்களையும் பொன்னொல்விளங்கியமாலைகளையும் பலபோர்க்களங்களை நீந்தி வென்றபழக்கத்தையு மழன்றவிடிகளையொத்த வம்புகளையுமுடையராய்க் கூற்றனுக்கேற்றதோழருமா யலைகளைச்சுழற்றிய கடலைப்போலத் தம்முனெருங்கித்திரண்டனரென்க. (௩௯)

கோத்பேர்படைதேர்க்கொடிமாபடைமால்
தோற்பேர்படையோர்தொகையின்றிவருங்
காற்பேர்படைமாகடலக்கடைபோய்
வேற்பேர்படையோயெவர்வெல்வரொன்றூர்.

உரை.—இங்ஙனங் கூடியகுதிரைகளின் பெரும்படையுங் கொடித்தேர்களின் பெரும்படையு மதயானைகளின் பெரும்படையுந் தொகையொன்றின்றித் திரண்டகாலாளின்பெரும்படையுங்கூடி யாயவம்மாபோர்க்கடலைக்கடந்து வெல்லும்படிவல்லவருண்டோ பெரும்வேற்படையுடையோயென்றூரென்க. (௪0)

வேறு.

ஊன்முகந்தழன்றவேலோ ரேர்தகைசினந்துகொட்டித்

தேன்முகந்தந்துகொல்லுந் தீவினைப்பகையொன்றன்றி
வேன்முகந்தந்தவெம்போர் வெருவவோவிரங்கிநாதன்
றூன்முகந்தந்தகாலை சயநமக்கரிதோவென்றான்.

உரை. — காபனர்சொன்னதைக்கேட்டுப் பகைவர்மார்பி லே யூனமுகந்து தீயைக்கொப்பளிக்கும் வேலையுடையசோ சுவன் கோபத்திலேயொருபுன்னகையைக்காட்டிச் சொல் வான்: இன்பத்தைக்காட்டிக்கொல்லும் பாவஞ்செய்த பகை யையஞ்சுவதல்லாதே வேலையேந்திப் பகைவர்செய்யும்போ ர்முகத்தஞ்சுவேனோ? ஆண்டவன் றானிரங்கி முகந்தந்துதவி னால் வெற்றியுநமக்கரிதோவென்றானென்க. (சுக)

கூற்றெனச்சினந்தங்கின்ன கூற்றினைமுடியாமுன்ன
ரேற்றினத்துடன்றதானை யெழுகவென்றுயர்தேரேறிக்
காற்றெனப்பறந்துஞாலங் கலக்குறிக்கூசச்செந்தீ
யூற்றெனச்சுடரைப்பில்கி யொளிர்படைபடர்ந்ததன்றே.

உரை. — சோசுவன்கூற்றுபோலச்சினந் திவற்றைச்சொ ல்விமுடியுமுன்னே சிங்கங்கள்கூட்டம்போலக் கூடினதன் றானைகளெழுகவென்று தானுமுயர்ந்ததேரேறிக் காற்றுபோ லப்பறந்துபோய்ப் பூவுலகெல்லாங்கலங்கிக்கூசும்படி செ ந்தீயைக்கொப்பளிக்குமூற்றுபோல விடைவிடாம லொளி யைச்சிதறினபடை யெங்கும்படர்ந்துநடந்ததென்க. (சஉ)

காலெனவிசையிற்றேர்கள் காலொடுபறந்துசெல்லக்
கோலென்னப்பரிகள்செல்லக் குளிறிவேமிடிச்சூன்மேகஞ்
சாலெனக்கரிகள்செல்லச் சமர்ப்புலிவெள்ளமொய்த்த [ர்.
பாலெனப்பதாதிசெல்லப் பகைவர்வெம்படையைக்கண்டா

உரை. — அங்ஙனங் காற்றுபோலத் தேர்களுந் தம்முருளை விசையினாற் பறந்தாற்போலச்சென்று கூடவம்புபோலக்கு திரைகளுமுழங்கி யிடிகளைச்சூலாகக்கொண்ட மேகங்களின் றிரளைப்போல யானைகளும் போர்முகத்துமொய்த்த புலிக ளின்வெள்ளம்போலக் காற்படைவீரருஞ்சென்று பகைவ ருடைய படையைக்கண்டாரென்க. (சஙு)

கட்புலனழலைத்தும்மக் கதத்தெதிர்கடலைக்கண்டா
னுட்புலனழற்றஞ்சீற்ற மொடுக்கியசீலமுள்ளி [ப்
மட்புலன்மொய்த்தவாரி மறித்தெனப்படையைப்போக்கா
புட்புலன்றேய்வேலாபன் புணர்கவென்றறைந்தான்வல்லோ
ன்.

உரை.—வல்லோனாகியசோசுவன் றன்கண் ணுத்திரனைக் கொப்பளிக்கும்படி கோபத்தோடுபகைவர் படைக்கடலைக்க ண்டான், கண்டவளவிலே யுள்ளேபொங்கிய கோபத்தையுள் ளொடுக்கித் தருமநினைவெடுத்துப் பூவுலகெல்லாமூடும்படி வரும் வெள்ளத்தைமறித்துத்தடுத்தாற்போலவவன் றன்படை போகவொட்டாமனிறுத்திப் பகைவர்மார்பிற்படுத்தின பு ண்ணிடத்துத் தேய்வுள்ளவேலையேந்திய ஆபனை வரச்சொ ல்லிச் சொன்னானென்க. (சச)

ஐவருமிடைத்தூதேகி யனைத்தையும்பொதுவற்றுளு
மெய்வருஞ்சுருதிநாதன் விழைந்தடைக்கலம்வந்தானைக்
கைவரும்படையின்சால்பிற் கலக்குறிப்பகைத்ததென்றே
மொய்வரும்பகையினாங்கு முதலவன்பகைதீதென்பாய்.

உரை.—அவ்வைந்தரசரிடத்துத் தூதாகப்போ யுலகங்க ளியாவையுந் தனியேயாளுகின்ற மெய்யானவேதத்தைத்தந் தநாதனைவிரும்பி யவனடைக்கலமாகவந்தகாபனைத் தாந்த ம்படைமிகுதியா லாங்காரத்தைக்கொண்டு மயங்கிப்பகைத் ததேதென்றுகேட்டு மீளவும்போர்செய்யும் வீரர்பகையை க்கொள்வதைக்காட்டி னு மாண்டவன்பகை மிகவுந்தீதென் பாயாக வென்றானென்க. (சரு)

பார்பெறவாசையானும் பானுமுன்பனியினீங்குஞ்
சீர்பெறவாசையானுஞ் செகுத்துயிர்வித்திக்கொள்ளும்
பேர்பெறவாசையானும் பிறர்க்கியான்செருப்போர்செய்
யேன் [பாய்.
போர்பெறநாதன்வேண்டிப் பொறுக்கவுஞ்செய்யேனென்

உரை.—மீளவு நான்பூவுலகமாள்வதற் காசையினாலாயினு ஞ் சூரியன்முன்னேபனிகரைவதுபோல நில்லாதழியுஞ் செ

ல்வங்களையடைவதற்காசையினாலாயினும்போர்முகத்திற்கொ
ன்றவுயிர்களைவிளையாகவித்தி விளைந்தடையும் புகழைப்பெ
றுவதற்காசையினாலாயினும் பிறர்க்குப்போர்செய்யவு மாட்
டேன், நம்முடையநாதனைவேண்டிப் போர்செய்யவுஞ் சற்
றும்பொறுக்க மாட்டேனென்பாயாக வென்றானென்க.
(சசு)

ஒருப்படவுறவுநன்றென் றுடன்றுதாஞ்செருக்குற்றின்
செருப்படவேண்டினின்றேசெருவரந்தருவலென்பாய்[றே
மருப்படமலர்ந்ததாரோய் மருட்படாதறைதியென்று
னெருப்படவெய்யவாப னிருபனைத்தொழுதுபோனான்.

உரை.—ஒருப்பட்டுறவாதலேநல்லதென்பாயாயினுந்தா
மாங்காரித்தின்றுபொருதல்வேண்டுமென்று வின்றுதானே
போர்பொரவந்து கேட்டவரத்தைத் தருவேனென்பாய், வா
சமாலையையுடையோய்! மயக்கின்றி யஞ்சாதவுரைகளைப்பே
சுவாயாகவென்றான்சோசுவன், ஆபனு மிதைக்கேட்டுநெரு
ப்பினும்வெகுண்டு தன்னரசனைத்தொழுது போனானென்க.
(சஎ)

வின்முகத்தம்பிற்சென்று வேந்தனைந்திறைஞ்சிச்
சொல்வான் [ன்
சொன்முகத்தடங்காச்சீர்த்திச் சோசுவன்றூதென்றற்றே
வன்முகத்தொவ்வாநாதன் வணங்குகாபனைச்சீய்க்கச்
சென்முகத்துறையின்வைவேற் செருப்படைமிடைந்ததென்
னோ.

உரை.—அங்ஙனம் ஆபன் வில்லாலெய்யப்பட்ட வம்பின்
விசையால் விரைந்து பகைவரிடத்துச்சென்று கூடியிருந்தம
ன்னவரையுமிறைஞ்சிச் சொல்லத்தொடங்கினான்: சொல்வி
லடங்காதகீர்த்தியையுடையசோசுவன் வரவிட்டதூதாகவந்
தேன், நிகராதவல்லமையுடையநாதனை வணங்கியகாபனை
க்கெடுக்கும்படி நீங்கள்மழைத்துளியினு நிறைந்தபடையை
க்கூட்டினதேதோவென்றானென்க. (சஅ)

மண்முழுதன்றிவானும் வணங்குமொப்பெதிரீறின்றி
யெண்முழுதிழந்தசீலத் திறைவனைத்தொழுதல்தீதோ

வுண்முழுதறிவுமாழ்க வுடற்றலேவேண்டாவென்றான்
புண்முழுதேற்றும்வேலோன் பொருனருஞ்சினந்துநக்கார்.

உரை. — பூவுலகும்வானுலகும் வணங்காநிற்ப நிகருமெதி
ரு முடிவுமின்றி யெண்ணப்படாதகுணங்களையுடையகடவு
ளை வணங்குவ துமக்குத்தீதென்றுதோன்றிற்றோ? இங்ஙன ந
ல்லறிவு முழுதுமயங்கும்படி சினத்தைக்கொள்ளவேண்டா
வென்று கழுகுமுதலியபுள்ளெல்லாந் தமக்கு நல்விருந்திடு
மென்று துதித்துவாழ்த்தும் வேலையுடையோனாகிய ஆபன்
சொன்னான், இதைக்கேட்ட வவ்வைந்தரசருஞ் சினந்துந
கைத்தாரென்க. (சக)

வேற்றலாதவருநீரும் விரும்பியொன்றாயபோழ்தின்
மாற்றலாரெமக்கென்றன்ன மன்னவருரைப்பமீட்டுங்
கூற்றலாதிணையாவேலான் கூறுவான்படையின்வெள்ளம்
போற்றலாவுளத்திலேமம் பொங்குபுமருளல்வேண்டா.

உரை. — காயனரு நீருமொன்றாயபின்பு வேற்றுமையி
ன்றி யெல்லாரு நமக்குப் பகைவர்தாமேயென்று அவ்வரசர்
சொல்ல, மீளவுங் கூற்றனல்லாமல் வேறேநிகரில்லாதவேலா
னாகிய ஆபன்சொல்லுவான். நீர்வெள்ளம்போலவெண்ண
ப்படாதபடையைக்கொண்டதனா லாங்காரமுட்பொங்கிமய
ங்கவேண்டா வென்றானென்க. (ரு௰)

பிரம்பினாலெசித்துநாட்டிற் பெருந்துயர்விளைந்தவா
கரம்பினாரடியேகாணக் கடற்றிரைபிரிந்தவாறும் [றும்
வரம்பிராதெழுந்திந்நாட்டில் வரும்புனல்நின்றவாறும்
பரம்பிரான்வலியைக்காட்டும் பலவையுங்கேளீர்கொல்லோ.

உரை. — எசித்துநாட்டிலேயொருசிறுபிரம்பினாற்பெரு
ந்துன்பங்கள்விளைந்தவகையு மடிமணல்காணும்படி கடல்த
ன்றிரைகளைப்பிரித்து வழிவிட்டவகையுங் கரையிலடங்காம
ற்பொங்கி யிந்நாட்டிலேபாயுஞ் சோர்தானென்னுமாறுநி
ன்றவகையு மிவையுமன்றிப் பரமநாதனுடையவல்லமையை
க்காட்டும்படியாயபலவையுங் கேளீரோ வென்றானென்க.
(ருக)

இத்திறத்தனைத்துஞ்செய்த விறைவனம்மிறைவனாகி
யத்திறத்தடலோனம்மை யமர்செயவெகுண்டகாலை
கைத்திறத்துடன்றவெள்வேற் கடற்படையரணமாமோ [ன்.
மெய்த்திறத்திறைஞ்சியன்னான் விரிநிழற்பெறனன்றென்று

உரை.—இங்ஙன மற்புதமாய்முடிந்த வவற்றையெல்லாஞ் செய்தநாதனும்வணங்குநாதன்றானே யாதலாலத்தன்மைத் தாயவல்லமையுடையகடவுள் நம்மைப்பகைத்தாலப்பொழுது கையிலேவேலையேந்திக் கடலைப்போல மட்டின்றிக் கூடியபடை நம்மைக்காக்கும்படியுரியவரணாகுமோ? உண்மையுணர்ந்ததுணிவோ டத்தன்மைத்தாயநாதனைவணங்கி யவன்செய்யும் விரிந்தநிழலிலேயொதுங்குதலே நல்லதென்றான் ஆபனென்க. (௰௨)

போற்றியதேவர்நீக்கிப் புதுப்படவொருவற்போற்றச்
சாற்றியதூதோபோதி சடுதியேநீருநீவி
ரேற்றியதெய்வந்தானு மெம்படையாண்மைநும்மைத்
தூற்றியபின்னர்வாழ்த்திச் சொற்றுவீரென்றான்னார்.

உரை.—அதைக்கேட்ட வவ்வரசர்கோபித்து நா மிந்நாள்வரைக்கும்வணங்கியதேவரைக் கைவிட்டுப் புதுவாய்வந்தவொருவனைவணங்கச்சொல்லவோ தூதாகவந்தாய்? அகன்றுபோ. சீக்கிரத்திலே நீரும் நீர்வணங்கியதெய்வமு மும்மைவென்றழித்தபின்பாக்கு நம்முடையபடையின்வல்லமையையறிந்து வாழ்த்திச்சொல்லுவீரென்றாரென்க. (௰௩)

போரிடத்தஞ்சித்தூதுபுகலவோவந்தேனென்றாய்ப்
பாரிடத்தெதிராநாதற் பழித்தபோதின்றேயிவ்வேற்
சீரிடத்துரிமைசொல்வேன் செருப்படவம்மினென்னக்
காரிடத்தசனிகூசக் கதத்திலார்த்தாபன்மீண்டான்.

உரை.—அதைக்கேட்ட ஆபனிடியேறுகூசும்படிகோபித்துமுழங்கி நானோ பொருதற்கஞ்சித் தூதுசொல்லவந்தேன்? பூவுலகிலொன்றாயிருந் தெதிரில்லாதநாதனை நீர்பழித்தபொழுதே யின்றுதானே யித்தவேலைக்கொண்டு நம்மு

லுடைய நாதற்குள்ள வுரிமையைச்சொல்லிக்காட்டுவேன், இப்பொழுதே போர்செய்யவாருங்களென்று திரும்பினனென்க. (௫௪)

சூளிமுகத்தனைத்துங்கேட்ட சோசுவனுருமிற்சீறி
வெளிமுகத்தமலன்சொல்லும் வெல்லுவாய்வென்றென்னு
ண்மை [ட்டு
தெளிமுகத்தெவர்க்குந்தோன்றத் தெளிக்குவாயென்னக்கே
வளிமுகத்தழலிற்பொங்கி வயப்படையெழுகவென்றான்.

உரை.— நடந்தயாவையும் ஆயன்சொல்லச்சினந்துகேட்டசோசுவ னிடிபோலச்சீறிநிற்க வாகாயத்தி லொருமுழக்கந்தோன்றியாண்டவன்சொன்னான்: பகைவரைவெல்லுவாய், வென்றவகையா லென்வல்லமை யெவர்க்குந்தெளிவாகத்தோன்றும்படிசெய்வாயென்றான். இச்சொல்லைக்கேட்டசோசுவன் காற்றுமுகத்திலேபொங்கும் பெருநெருப்புப்போலத் தானுமுட்பொங்கிப் போர்செய்யும்படி படையெழுகவென்றானென்க. (௫௫)

காரின்மேன்முழங்கயானை கடலின்மேன்முழங்கத்தி
ண்டேர் [பை
தேரின்மேன்முழங்கமன்னர் திசைகள்மேன்முழங்கப்பம்
போரின்மேன்முழங்கப்பாய்மா புரவிமேன்முழங்கவீரர்
பாரின்மேன்முழங்கயாவும் பகைவர்மேன்முழங்கிமொய்த்
தார்.

உரை. — சோசுவன் படையெழுகவென்றமாத்திரத்திலே மேகத்தினு மியானைகள்முழங்கவுங் கடலினுந் தேர்கள்முழங்கவுந் தேர்மேனின்ற வரசர்முழங்கவு மெண்டிசையிலும் படைவாச்சியங்கள்முழங்கவும் போராசையினாற்குதிரைகள் முழங்கவுங் குதிரைமேனின்றவீரர்முழங்கவும் பூவுலகெல்லா முழங்காநிற்க யூதர்தம்பகைவர்மே லெதிர்த்துமொய்த்தாரென்க. (௫௬)

வேறு.

யானையெழுங்கடலேந்தியதேர்பரிகாற்
சேனையெழுங்கடல்சென்றுசெழுங்கடல்மே

வேலையெழுங்கடல்மோதலெனப்பகைவர்
தானையெழுங்கடலோடுதலைப்படுமால்.

உரை.— பூதர்க்குள்ளயானைகளின்கடலுந் தேர் குதிரை காலாளென்னும் பெருங்கடலுங் கூடிச்சென்று கடல்மேற் கடல்மோதினாற்போலப் பகைவர்தானையின்கடலோடெதிர்த் தனவென்க. (௫௭)

செல்லுகுமாரியெனச்சினமூற்றியநீள்
வில்லுகுமாரிமிடைந்துமிடைந்தனர்வாய்ச்
சொல்லுகுமாரிசளித்தமுழக்கமெழீ
அல்லுகுமாரியகத்தனரஞ்சினரால்.

உரை.— மேகங்கள்விட்ட மழைமாரிபோலச் சினந்தவில்லுகளெய்தவம்பின்மாரி நெருங்கும்படி மேனெருங்கின பூதர் வாய்விட்டார்த் ததிர்ந்தமுழக்கத்தினு லிராவைப்போல விருண்டமனத்தையுடையபகைவ ரஞ்சினரென்க. (அப்பகைவர்வஞ்சகராகவு மெய்யானவேதத்தையறியாதாராகவு ம் வராயிருண்டமனத்தையுடைய ரென்றுரென்க.) (௫௮)

நெஞ்சுறைநீள்கவசத்தொடுநேரலர்தந்
நஞ்சுறைநெஞ்சறநஞ்சுறைவெஞ்சரமொய்த்
தெஞ்சுறவிஞ்சியகுஞ்சரமிற்றதனின்
மஞ்சுறையுஞ்சினவஞ்சகர்துஞ்சினரால்.

உரை.— பகைவர் மார்பின்மேலணிந்தகவசத்தோடு நஞ்சு நிறைந்த தம்மார்புமறும்படி நஞ்சினையுகுத்த வம்புகள்மொய்த்து மேகத்துளியினு மதத்தைப்பொழியாநின்றயானைகளு மடிந்து யானைகள்முதுகின்மேனின்றவஞ்சனையுடையபகைவரு மடிந்தனரென்க. (௫௯)

அற்றிழிவார்பிரிவாரதிர்வாரிரிவார்
மற்றிகல்வார்மருள்வார்வரையாமடிவார்
முற்றியமாதவமார்முனிமார்முனிவை
யுற்றிரிகோலியிருண்டிலதொன்றிலதால்.

உரை.—அங்ஙனம் பகைவரற்றுவிழப் பிரிந்ததிரத் திரிந்துவெகுள மட்டின்றிச்சாவார். அதற்கியூதமொய்தவம்புகள் முதிர்ந்ததவத்தையுடைய முனிகளின் கோபத்தைக்கொண்ட வம்புகள்போல வவற்றுளொருயிரையுண்ணாது தப்பினதொன்றில்லையென்க. (௬௰)

தாறொடுதானைகள்சாய்ந்துமடிந்திடவும்
நீறொடுநூறியவீறுடனீறிடவும்
பாறொடுபற்சிரமீதுபறந்திடவு
மாறொடுமாறுதிரத்திரையார்ந்தனவால்.

உரை.—அணியணியாய்த் தானைகள்சாய்ந்திறக்கவும் புழுதியோடுபுழுதியாகப் பேருடல்கள் துவைக்கப்பட்டழியவும் வெட்டுண்டபலதலைக ளவற்றைக் கழுகுகளெடுத்தமையாற் கூடமேலேபறக்கவு மாற்றோடாறாகவோடியவிரத்தத் திரைமேலெழும்படி நிறைந்ததென்க. (௬௰௧)

தோலொடுதோல்பொரமீமிசைதுள்ளியெழீக்
கோலொடுகோல்பொருகொள்கையின்வாசிபொரக்
காலொடுகால்பொரநேமிகலந்துலகின்
ஞாலொடுநாறிசைநாதநரன்றனவே.

உரை.—யானைகளோடியானைகளுந் துள்ளிப்பாயுங்குதிரைகளோடு குதிரைகளும் போர்செய்யாநிற்கவு மம்பின்விசையோடுவளைந்தோடு முருளையோடுருளைபடும்படி தேர்கள்தம்முட்கலந்து நெருங்காநிற்கவு முலகினெண்டிசைகளு மிகவேமுழங்கினவென்க. (௬௰௨)

மேகநிகர்த்தனவேழமருப்புமிதித்
தேகமறுத்தவின்னையெனப்புயல்பாய்
வேகவினப்பரிமேகமுகுக்குருமொத்
தாகவரைத்துகளாகவுழக்கினவால்.

உரை.—மேகத்தோடொத்த யானைகளின்கொம்புகளைமிதித்தற்கு வேகத்தின்மிக்ககுதிரைகள்பாய்தலி னினைவுதப்பியா

னையென்று மேகத்தைப்பாய்ந்தன. பாய்ந்தபின்பு மேகங்களுமிழ்ந்த விடிகளைப்போலக் கீழே பாய்ந்து தங்குளம்புகளினாற் போர்செய்தபகைவரைப் புழுதியாம்படிகுழப்பி யுழக்கினவென்க. (௬௩)

வேலொடுவாளொடுவீரர்கள்மேலதிரக்
கோலொடுகோவியகொல்கரிசாய்ந்துபோரச்
சூலொடுசூழ்ந்துசுளித்திடிமின்னொடுகக்
காலொடுகாய்ந்ததிர்கார்த்திரளொத்தனவே.

உரை.— வேலையும் வாளையுமேந்தி மேனின்றவ ரதிராநிற்க வங்குசத்தால் வளைந்துதிரியும்யானைகள் போர்செய்தலிற் சூலைக்கொண்டு கோபித்திடித்துமின்னுமிடிகளுந் திரண்டு விழும்படி காற்றுவிசையினால் வேகத்தோடுதிரியு மேகங்களைப்போலத் தோன்றினவென்க. (௬௪)

கோடையெழுந்தபதங்கனெனக்கொடிநீ
ளாடையெழுந்தகலாகவநீளடவி
பீடையெழுந்துபெரும்படைவாடியற
மாடையெழுந்துயர்தேர்வருசோசுவனே.

உரை.—அப்போர்க்களத்திற் சோசுவனோவென்னிற்கோடைநாளிலே யெவையும்வாடும்படி கொடியதாய்ச்சுடுங் கதிரைவீசிச் சூரியன்வருவதுபோலத் தானும் பொற்றேரின் மேனின்று கொடிக்காடாகத்தோன்றிய வப்போர்க்களத்திற் படைநால்வகையுங் கெட்டுச்சோரும்படி தோன்றினனென்க. (௬௫)

மிடலொடுவேகமிகுந்தெறிவெங்கணைகள்
படலொடுமேகமவிந்தபருப்பதமொத்
துடலொடுவேழமுருண்டுகுவெங்குருதிக்
கடலொடுதீவுகிடந்தனகாட்சியதே.

உரை. — சோசுவன்வேகமும் வலியு மிகுந்தெய்யுங்கணைகள்பட்டு மேகங்கள்சூழ்ந்த மலைபோலநின்ற யானைகள்செ

ந்துருண்டுவிடுயிரத்தமோர்கடலாகத்தோன்றவிழுந்தயானை களக்கடலிலேகிடந்ததீவுகளைப்போலத்தோன்றினவென்க. (சுசு)

படுகணையல்லதுபட்டிலதொன்றிலதால்
விடுகணையாவையும்வீழ்த்தவில்விசையாற்
றொடுகணைமாரிதுளித்தனபின்றொகையற்
றடுகணைவாரியனைத்தையும்வாரினவே.

உரை.—சோசுவனெய்த கணைகளிற்பட்டுக் கொல்லுமம் பல்லாதே படாததில்லையாகி யெதிர்த்ததெல்லாஞ் சாய்த்துவ ருவனாகையான் மிக்கவிசையோடு தன்வில்லு மேகமாகவிட் டவம்புகள் மாரியாகத்திரளாய்ப்பெய்தபின்பு மட்டின்றிச் செய்யுங்கொலையினா லவ்வம்புகள்வெள்ளமாகத் திரண்டெல் லாவற்றையுஞ்சாய்த்து வாரிக்கொண்டுபோவனவென்க. (சுஎ)

ஈரிருதேரினரீரறுயானையின
ரோரிருநூறுகள்மாவுயர்வில்வினர்வந்
தாரிருபாவினரார்த்திவனைத்துதையப்
பாரிருநாறிசையன்றுபதைத்தனவே.

உரை.—அங்ஙனஞ் சோசுவன்பொருதுகொண்டு வருகை யில் நாலுதேரிலுள்ளவரும் பன்னிரண்டானைகளேறினவ ருமிருநூறுகுதிரைமேல் வில்வின்வல்லவருங்கூடி யொருப் பட் டிருபக்கத் தவனைமுழங்கிநெருங்கினார், அப்பொழுதுலக த்தெண்டிசைகளும்பதைத்தனவென்க. (சுஅ)

இத்தகவுற்றதெனக்கடிநக்கிடிவில்
லத்தகவோனவர்மீதுவளைத்தமையான்
மத்தகமாவொடுபாய்பரிமாவொடுவெண்
முத்தகநாறிரதங்கள்முரிந்தனவே.

உரை.— இங்ஙன மவர்வந்ததைக்கண்ட சோசுவன், மிகவு நக்கு முழங்கியிடிகளைவிடுந்தன்வில்லை யவர்மேலேவளைத்த வளவிலே யானைகளுங்குதிரைகளு முத்தாபரணங்களால் விள ங்கியதேர்களு முறிந்தனவென்க. (சுகூ)

ஓராறுபத்துமிரட்டியுமோர்தொடையாற்
சீராறுவேகமொடம்புகள்சேர்த்திவிடப்
பாராறுவாரியெனப்படர்சோரிவிழ
வீராறுபேர்பிணமிற்றதொரோர்கணையால்.

உரை.—சோசுவனம்புகளை யொவ்வோர் தொடையாலா றும்பத்து மிருபதுஞ்சேர்த்தி மட்டில்லாதவேகத்தோ டெய்ததனாற் பூமியைப்பள்ளமாக்கி யோடும்வெள்ளம்போலவி ரத்தம்படர்ந்தோடும்படி யொவ்வோரம்பாற் பன்னிருபெ ரும்பிணங்கள் விழுந்தனவென்க. (எ0)

வேலறவாளறவில்லறவீரரறக்
காலறக்கூம்புகவிழ்ந்தறநேமியறத்
தோலறமீமிசைதுள்ளியவாசியற
மேலறமேவினன்வில்லுகுமாரியறு.

உரை.— வேலும் வாளும் வில்லுமற்றுப்போய்ப் படை வீரருமடித்து தேருருளைமுறிந்து சிகரங்கவிழ்ந்து தேர்கள் ழிந்து யானைகள்பட்டுக் குதித்தகுதிரைகள்செத்து விவையெ ல்லாங்கெடும்படி மேலானநல்லறத்தைமேவிய சோசுவன் கைவில்லுகுத்த வம்பின்மாரி யிடைவிடாததென்க. (எக)

நூறுவனவாளிதுமிந்தனயானைகடே
ரிறுவனதாரொடெரிந்தனவின்னதெலா
மறுவனகாறுடையங்கையுரந்தலைக
ளூறுவனயாருமொழிந்துநடந்தனனே.

உரை.—அங்ஙன மிடைவிடாம லெய்தவம்புகளால் யா னைகளெல்லாம் வெட்டுண்டன, தேர்களெல்லாமுறிந்து கொ டியோடெரிந்தாற்போல வழிந்தன, காலுந் துடையுங் கை யு மார்புந் தலையுமற்றுப்போ யெதிர்த்துவந்தவெல்லாரு ம டித்தொழிந்ததனாற் சோசுவனெதிரின்றி யப்பாலடந்தா னென்க. (எஉ)

வேறு.

திருத்தகுபுயக்கிரிவளரவிக்குபு செருக்களமுழக்கிவனு
லவனேக்கிய
மருத்தகுதடத்தணிபெகிலநாட்டினை வயப்படவளித்தன்வர
சனேற்றெரி
கருத்தகுமுகிற்குரல்மெவியவார்த்தன கதத்தொடுகெடுத்தனக
ளிறுபேரக்கியு
முருத்தகுபுயத்தெழவளேயையோச்சியு முருக்கினனிரட்டி
ன்னுருமிருக்கியே.

உரை.— இங்ஙனஞ் சோசுவ னெதிர்த்தவெல்லாவற்றையு ஞ்சாய்த்துச் செல்வமலேயோடொத்த தன்புயங்களுயரவ சைத்துப் போர்க்களத்தையுழக்கி யுலாவிவருவதைக்கண்டு வாசமலராப்பூத்த தடாகங்களா லழகுபெற்ற எகிலநாட் டையாண்டவரசனுகிய தாபிரனென்பவனைந்தரசருள்ளொ ருவன் வேகுமிடிகளேச்சூலாகக்கொண்ட மேகமுழக்கத்தி னுங் கடிதாயார்த்துக் கோபத்தோடு வேகத்தின்மிக்க யானை யைநடத்தி யழகியதன்புயங்களோங்கி யொருசக்கராயுதத் தைக்கையிலேந்தி யிடியினுங்கொடியனுய்ச் சோசுவனையெ திர்த்துத்தாக்கிச் சீறிமுழங்கினுனென்க. (எ௬)

மிகப்படுபசித்தகுவளேயிதாய்ப்பல் விதத்துயிர்வெறுத்
துன துயிரலாற்பசி
தகப்படுசுவைக்கொடுநிறைபவாற்றில் தருக்கொடுவரப்பசிய
ருளிநீக்கென
நகப்படுசினத்தொடுகரியிஞக்குபு நகைத்தகுமதிக்கிணைப
ருதிவாய்த்திறை
பகப்படுகுறிக்கையிலெழுகதீத்திரள் பயப்படுசமர்க்களமிரி
யவோச்சினுன்.

உரை.— வந்தவளவிலே தாபிரனென்பவன் சோசுவனை நோக்கி நானேந்தியசக்கர மிகவும்பசியுளதாயினும் பலவுயி ர்களைவெறுத் துன் னுயிரையுண்டாலொழியச் சுவையோடு

தன்பசியாறுதென்று களிப்போடுன்னிடத்து வரவிட்டேன், நீயிரங்கி யதின்பசியையாற்றுவாயாகவென்று நகைப்படச்சொல்லிச் சினந்து யானையின்முதுகின்மேற் காலூன்றிநின்று விளங்கியமுழுமதியோடொத்த சக்கராயுதத்தைப்பொருத்தி நாலறும்படி குறிதப்பாதகையாற் றியெழும்படிவிசையோடு சூழப் போர்க்களத்திலெவருமஞ்சி விலகாநிற்க வெறிந்தானென்க. (எச)

பசிப்படவரிற்பசியினிதிலாற்றிய பருக்கையிதெனக்கு
னிதனுவின்வாய்க்கொரு
வசிப்படவளைத்தனவிசிகமேற்றலும் வயப்படவகுத்தலுமறி
கிலாக்கழு
சசிப்படவறுத்திருபிறைகளாக்கிய சமத்தெரிவளைப்படைய
றவுநோக்கிலா
சுசிப்படவறுத்தனதுணிகள்மேற்றிசை துடிப்பனபறப்ப
னவெருவநோக்கினர்.

உரை.— அதற்குச்சோசுவன் உன்சக்கராயுதம் பசியோடுவருவதாயி னப்பசிக்கினியபருக்கையிதுவென்று வளைத்த வில்லின்வாயிலே கூர்மைபட வெட்டற்குரியதாய்ப் பிறைபோல வளைத்தவோரம்பினையேற்றியெய்தான். ஆயினும்வில்லிலேயம்பினையேற்றலு மதைவிசையாகவெய்தலு மொருவருக்குந்தெரியாமல் நிறைந்தபூரணசந்திரனிருபிறையாம்படி நடுவிலேயறுத்தாற்போல விளங்கிய வச்சக்கரத்தையிரண்டாகப்பிளந்ததுஞ் சீக்கிரத்தினலொருவருங்காணமற் றீப்பறியும்படி யறுத்ததுண்டுகள்மாத்திர மாகாயத்திலேதுடிப்பதும் பறப்பதுங்கண்டாரென்க. (எரு)

பொருக்கெனமனச்சினமனையதீக்கிய பொறிப்படுசி
லைப்படைவளையமாற்றினன்
முருக்கினசினத்திருபுடையினூற்றுவர் முறுக்கெனவளைத்தி
டவொருகைதாக்கினர்
கருக்கனமிடித்தெனவருகதீக்கணை கணைக்கொருகணைப்பட
வெழுதிமீட்டவர்

வெருக்கனமுளத்துறவிடைவிடாச்சரம் விடுத்தனன்மறைக்க
ரசொருவில்கோட்டியே.

உரை.— அப்பொழுது தாபிரனென்பவன் சீக்கிரமாய்த் தன்மனக்கோபத்திற்குரியதாய்த் தீயைக்கொப்பளிக்கும்வில்லைப்பிடித்துத் தானும்வளைத்துத் தன்னோடுமுருக்கப்பட்டாற்போலத் தன்னைவிடாமற்கொல்லுஞ்சினத்துச் சூழ்ந்தநூறுவீரரு மொருகையாகப் போரைத்துடங்கினார், அங்ஙனமிடித்தாற்போலச்சூழமுழங்கித் தன்மேலளவிறந்த வம்புகள்வருகையிற் சோசுவனொவ்வோரம்பிற்கோரம்பெய்துதடுத்து மீளவு மவரெல்லாரும் வெருவும்படி யம்புகளையிடைவிடாமன்மட்டின்றி யொரோவொருவில்லைவளைத்து அவர்மேலேவிட்டான் வேதத்தின்ராசனாகியசோசுவனென்க. (எசா)

திளைத்தனசினத்திருபுடையினூற்றுவர் சிலைக்கொடுபெ
ளித்தனகணைகடாக்கலின்
முளைத்தனபொறிச்சிறகுடையதேர்க்கிரி முனைக்கொடுபறப்
பெனநடவுபாத்திபன்
வளைத்தனதனுப்புயவிடைவிடாச்சர மழைத்திரள்களிற்று
யர்மலையின்மேற்பட
விளைத்தனகளத்திடையுதிரநீத்தமுள் விறற்கயலெனக்குறையு
டல்களீட்டமே.

உரை.— அங்ஙனநெருங்கிக் கோபத்தோ டிருபக்கத்துச்சூழ்ந்தநூறுவீரர் சிலைக்கொண்டு விடாமற்பொழிந்தகணைகள் தேரிமேலெழுத்தைக்கும்படி தாக்கினதினு வீறகுகள் புள்ளிபுள்ளியாய்முளைத்து மலையோடொத்தபறவைத்தேர் சினங்கொண்டுபறக்கும்படி யதைநடத்தினசோசுவன் வளைத்த வில்லாகியமேக மிடைவிடாமற்பொழிந்த வம்பாகிய மழைத்திரள் தாபிரனேறிய யானையாகியமலையின்மேற்பொழிந்து போர்க்களத்திலெங்கு நிறைந்தோடு மிரத்தமாகியவெள்ளத்திலே யவனம்பாற்குறைபட்ட வுடல்களாகியமச்சங்கள் துடித்தனவென்க. (எஎ)

எளிச்சிலைபணித்தெதிருறைதணிக்கிய மிழைக்கொடுவக
த்தணிகவசநூக்கிய

நுனிச்சிலையடிச்சிலைசிலையைவீக்கிய நுனிக்கரமடிக்கரமெ
வையும்வீழ்த்தியுந்
தனிச்சிலைவளைத்தனனொருவனுக்கிய சயச்சமர்நலத்தினை
வெருவநோக்கின
ரினிச்சிலையமர்க்கரசிவனைநீத்தெவ னெனச்சிலர்வியப்புறிய
ளவில்வாழ்த்தினார்.

உரை. — குறிதப்பினதனு விகழ்ச்சிபட்டபகைவர்வில்லு கள் விடாமற்பொழிந் தெதிர்ந்துவரு மம்புமாரி தன்மேற்ப டாமற் றடுத்து நீக்கலும் பகைவரணிந்தவணிகளுங் கவசமு மறும்படியழித்தலு மவர் வில்லின் னுனியு மடியும் வில்லைப் பிடித்தவிரலு மடித்தோளு மற்றவையுங்கெடும்படிவீழ்த்த லு மிவையெல்லா மொருவில்லைவளைத்த வொருவன்றானே சோசுவனென்பான் செய்யும்போர்த்திறத்தொழிலாகவவன் செய்தவெற்றிப்போர்த்திறத்தைத் தாம் வெருவும்படிகண் டவ ரினிவில்லின்போரிலே யிவனொழியவரசனொன்றதிசய ப்பட் டளவின்றிவாழ்த்தினாரென்க. (௭௮)

இளைத்தனரிளைத்தமர் முரியவார்த்தன வெதிர்த்தனர்க
ணைத்திரளெழுதியோட்டினர்
திளைத்தனர்புடைப்புடைபடுபுண்வாய்க்கறை சிரத்தனர்சின
த்தொடுசினவில்பூட்டென
வளைத்தனர்வளைத்தவிலொடியமீட்டொரு வயச்சிலைபிடித்த
னர்முனியுதாக்கென
விளைத்தனர்சினச்சமரொருவில்வாய்க்குயிர் விடுத்தனரொரு
ப்படவிடையினூற்றவர்.

உரை. — அங்ஙன மந்நாறுவீரர்பொருதிளைத்து முறியா நிற்க மீளவு மார்த்தெதிர்த் தளவின்றியம்புகளையெய் து சோ சுவனைச்சூழ்ந்துநெருங்கினார், நெருங்கினவளவிலே யவனெ ய்தவம்புகள்தைத்துப் பட்டபுண்வழியாகத் திரளாய்க்குரு திகளைச்சிந்துவார், அத்தோடெழும்பிய கோபமிகுதியால்வில் லினிருதலையொருப்படப்பூட்டினாற்போ லதைமிகவும்வளை த்தார், அங்ஙனம்வளைத்தவில்லுமொடிந்து வேறொருவில்லைப்

பிடித்து முனிந்தவேங்கையின்கூட்டம்போலக் கொடிய போர்விளையும்படி பொருதுவருகையிற் சோசுவன்வளைத்த வொருவில்லின்வாக்கிரையாகத் தம்முயிரைத்தந்து வொருப் பட்டநூறுவீரருமடிந்தாரென்க. (௭௯)

பரப்பினநிணப்பிணமெழுகநூற்றுவர் படத்தனியியபத் துயர்திரியுபாத்திப
னிரப்பினசிலைக்கொடுதொடையொடூட்டிய நெறிக்கணைத டுத்தனகவசமேற்பட
வரப்பெனவழற்பொறிதவழமீச்சுடர் வனப்பெனவிமைத் தவனடியின்மேற்கணை
யிரப்பெனநிரைத்தனவரமிதாய்க்கடி தெடுத்தமரெதிர்த்தன னயரவோச்சுவான்.

உரை.—அங்ஙனம் பரப்பினபிணக்குப்பையெழும்படி நூறுபேருமடிந்ததனாற் றனிப்பட்டியானைமேலிருந்த வரசனாகியதாபிரனென்பவன் சீறி வில்லுநிறையத் தொடை தொடையாயேற்றி யெய்தவம்புகள் சோசுவனணிந்தகவசத் திற்றடுக்கப்பட்டு நக்கினாற்போல நுழையாமன் மேற்பட்டு விழ வதனாலழற்பொறிகள் மிகவும்பறிந்து சூழத் தீ வரம்பிட் டதுபோலத் தவழாநிற்கச் சூரியனோடொத்த வடிவாகவிளங் காநிற்கச் சோசுவன் மீளவு மங்ஙனம்பட்டவம்புகள் தேர் மேலவன்பாதத்தில் வரங்கேட்குமிரப்போர்போல நிரைநி ரையாய்க்கிடந்தன, அதைக்கண்டசோசுவ னவ்வம்புகள்தே டும்வரமிதுவென்று தானவற்றையெடுத்துத் தன்வில்லிலேற் றி யெதிராநின்ற தாபிரன்மேல்வனயர்ந்துமெலியும்படியெ ய்வானென்க. (௮௰)

வெறுத்தனபொறித்தவர்முனிவுபோற்பிறர் விலக்கரும் வடிக்கணைவிசையிலோட்டலோ
டிறுத்தெனமறைக்குயரிரதநீர்த்தன னிருட்பொறியகிக்கொ டுவிருநிலாப்பிறை
யறுத்தெனமருப்பிணைகரமொடீர்த்தன னடத்கரிமுழக்கொ டுவிழுமுன் மீட்டிம

னுமுத்தெனமறுத்தொருகணையையோச்சியு முருப்படுமு
டித்தலையடியில்வீழ்த்தினன்.

உரை.— மீளவும் வேதமிறுத்தற்கமைந்த விரதம்போல நின்றசோசுவன் றமதைம்பொறிகளையடக்கின தவத்தோர் கோபம்போல வொருவனுலும்விலக்கப்படாத வம்பினைவிட்டெய்து கரும்பாம்பினையு மிருபிறைகளையு மொருப்பட்டறுத்தாற்போலத் தாபிரனேறினயானையி னிரண்டுகொம்புகளையுந் துதிக்கையையுமறுத்தான், அங்ஙன மவ்வியானைமுழங்கிமடிந்துவிழுமுன்னே திரும்பிக் கூற்றனையொத்திவிட்டாற்போல வேறொருகொடியவம்பினைப்போக்கி விளங்கியமுடியைச்சூழ்ந்தவரசனுகியதாபிரனதுதலையை யடியோடறுத்துவீழ்த்தினனென்க. (அக)

வேறு.

காரொழுந்திடித்ததேபோற்கதத்தபற்பறையார்த்தின்ன
போரொழுந்தாயபோதைம் பொருனர்நீடுவப்பவென்னத்
தாரொழுந்தலைவனுய தகஞ்சணன் புரவிமேலாய்
நீரொழுந்திரையிற்பொங்கி ஞெகிழிவேலேந்திநின்றான்.

உரை.—மேகங்களிடித்தாற்போலப் பலபடைவாச்சியங்கள்முழங்காநின்று சொன்னபோர்முகத்தி லிவையெல்லா நடக்கும்பொழுது வேறோர்முகத்திலைந்தரசர்நெடுங்காலத்துவாழ்ந்திருக்கக்கடவதென்றுவாழ்த்தி மாலையையணிந்தயாப்பியனென்னுமிராசாவின் படைத்தலைவனுகிய தகஞ்சணனென்பான் குதிரைமேனின்று நெருப்புமிழும்வேலையேந்திக் கடற்றிரைபொங்கினாற்போலக் குதித்துநின்றானென்க. (அஉ)

நால்வருமறையைவாழ்த்தி நுகோதரனெதிர்ப்பக்கண்டு
கோல்வரும்விசையிற்பாய்ந்து குந்தம்விட்டுனதிதென்றான்
மேல்வருநிரையிற்சாய்ந்து விலகிநின்றெரிகொண்டுற்ற
கால்வருமழல்பெய்வேலைக்கவ்விமீட்டெறிந்தான்வல்லோன்

உரை.—அப்பொழுது சோசுவன் சேவகனாகிய நுகோதரன் வேதமே வழங்கக்கடவதென்று வாழ்த்தித் தன்மேலெதிர்த்துவரத் தகஞ்சணன் கண்டவளவிலே யம்புபோம் விசையோடெதிராகவோடி யுனதிதென்று வேலையெறிந்தான், எறிந்தவேல் தன்மேற்படாதபடி யதுவரு நிரையைவிட்டுச் சற்று விலகாநின்று சீறிவரும்வேல் சென்றசீரிலே யதைக்கையாற்கவ்வித் திருப்பி யவ்விசையோடெறிந்தவன்மேலெறிந்தா னுகோதரனென்பானென்க. (௮௫)

ஊழியறிந்தெறிகபாரா யுனதிதென்றெறிந்தவைவேல்
வழியறிந்தோடினாற்போல் வளியினுமுடுகிமார்பிற்
குழியறிந்தினிதின்மூழ்கிக் கொன்றுயிருண்டநெஞ்சின்
பழியறிந்தங்கண்ணில்லாப் பறந்தெனப்போயிற்றன்றே.

உரை.—அங்ஙனநீயிடமறிந் தெறிதல்வேண்டு நன்றுயடையாளங்களைப்பார்த்தா விவ்வேலுனதென்பாயேயென்று நகைத்துத் தகஞ்சணன் முன்னெறிந்தவேலை யவன்மேலே திருப்பி நுகோதரனெறிந்தபொழுதே யவ்வேல்முன்னடந்தவழியறிந்தோடினவனைப்போலக் காற்றினுமுடுகியோடி யவன்மார்பிலேபாய்ந்து தன்னூர்க்குளத்தின் றுறையையறிந்து கூசாமன் முழுகினாற்போல் வுள்ளேமுழுகி யுயிரைக்கொன்றுண்டு பின்னையு மவனெஞ்சின் கொடியபழியையறிந் தங்கேதங்குதற்கஞ்சிச் சற்றுநில்லாமற்பறந்துபோயிற்றெனக. (௮௪)

காயெரிசீற்றத்தெல்லாங் கண்டயாப்பியனூர்த்தெய்யத்
தீயெரியசனியூழ்த்துச் சினந்துவீழ்விசையில்வீழ்ந்த
வாயெரிகொடும்வேல்தைத்த மார்பினிற்பறித்தெய்யுங்கா
ளேயெரிகையுஞ்சோர்ந்து நுகோதரனுயிர்ச்சோர்ந்தான்.

உரை.— அப்பொழுதைந்தாசருள்ளொருவனாகிய யாப்பியனென்பவன் மிக்ககோபத்துடனே தன்றலைவனாகியதகஞ்சணன்மடிந் தங்காயதெல்லாங்கண்டதனுன் முழங்கிநுகோதரன்மேலெறிந்தவே லிடியெறிந்து சினத்தோடுவிழும் விசையைக்கொண்டு தீயெரிவாயுடைய கொடியவேலு மவ

ன்மேல்விழுந்துமார்பிலேதைத்தது, தைத்தவேலையவன்பறி த்து முன்னெறிந்தவன்மேலெறியும்போது பட்டபுண்ணே யின்மிகுதியாற் கையுஞ்சோர்ந் துயிரையும்விட்டு நுகோத ரன்சோர்ந்துவிழுந்தானென்க. (அ௫)

களிமுகத்தரசனூர்ப்பக் கதமுகத்தெதிர்ந்தவாபன்
சுளிமுகத்தழலைத்தும்முந் துரகமேலிருவர்தோன்றித்
தெளிமுகத்தெரிந்தமின்போற் றீயெரியிருவாள்வீசி
வளிமுகத்தன்ன தூளி மலிந்தெழவுழக்கிப்பாய்ந்தார்.

உரை. — அதைக்கண்டு யாப்பியன் மகிழ்ந்துழுழங்காநி ற்க விவன்மேலெதிர்த்து முன்றூதுசொல்லப்போன ஆப னென்பவன்வந்தான், அங்ஙன மிருவர்சினந்தழுகத்தோடுதீ யைத்தும்மியவிருகுதிரைமேற்றோன்றித் தெளிந்தெரிகின்ற விருமின்னலைப்போலத் தீயெரிகின்ற விருவாளைவீசிக்கொ ண்டு பெருங்காற்றுமுகத்திலெழும்பிய தூசிபோல வெங்கு ம்புழுதிமலிந்தெழும்படி போர்க்களத்தி லுழக்கிப்பாயாநி ன்றானென்க. (அசு)

வாடகவிசையோடாபன் வலத்திடத்தொல்கிவீசு
வாடகமுடியிற்செல்வ னதற்குடற்கரந்துதந்த
கேடகவிளிம்பிற்பட்டுக் கீழ்சரிந்தெருத்தின்மூழ்கிக்
கோடகத்தலையைக்கொய்து கோனிலத்துருமிற்பாய்ந்தான்.

உரை. — ஆபனென்பவன் வலத்திலுமிடத்திலும்பாய்ந் து வெட்டுத்தகும்படி விசையோடு வாளைவீசியபொழுது பொன்முடிசூழ்ந்தவரசன் றன்னுடலை யொளித்தற்குத்தந்த கேகடவிளிம்பிலேவாள்பட்டுக் கீழேசரிந்து குதிரைப்பிடரி யின்முழுகித் தலையைவெட்டி மேனின்றவரசனுகிய யாப்பி யனிடிபோல நிலத்திற்பாய்ந்தானென்க. (அஎ)

கோளொடுபெரியிற்றானுங் குதித்துடன்றபன்றீப்போ [ல்
வாளொடுபிரிந்துதுன்னி வதிந்துபாய்ந்தியல்பில்வீசத்
தோளொடுகுரிசிலேந்துஞ் சுடர்ந்தபொற்கிடுகுநீண்ட
தாளொடுமுளரிவீழ்ந்த தன்மையில்வீழக்கொய்தான்.

உரை.—யாப்பியன் குதிரையில்லாமையாற் றூனுங்குணியிதென்று குதிரைவிட்டுக் கீழேபாய்ந்தஆபன் தீப்போலச் சினந் தொரு நிலைகொள்ளாம லகலவு மணுகவும் பதியவும் பாயவும் பலபோர்த்தொழில்களைப்பயிற்றி யியன்ற சீர்கண்டவுடனே வாளைவீசித் தாளோடுமலர்ந்ததாமரை யறுத்தாற் போல மன்னன்டிக்கையுங் கையிலேந்தியகேடகமும்விழும் படியறுத்தானென்க. (௮௮)

ஏமமேதானு நீங்கி யிருவரீரூழித்தீப்போற்
றாமமேமல்கப்பொங்கித் தூதினீநகைத்ததெய்வ
நாமமேவலீயிதென்ன நல்வினையுலந்தகோமான்
வாமமெய்முடியிற்சென்னி வாளொடுவீழ்த்திருனே.

உரை.— ஆபனுங்கேடகத்தையெறிந்து மீள்வு மிருவரிரண்டேழித்தீப்போலப் புகைமண்டியெழும்படி பொங்கிப் போரைச்செய்யாநிற்க நான் றூதுசொல்லவந்தவிடத்திலே நீநகைத்த வென்தெய்வநாமத்தின்வல்லமை யிதுவென்று ஆபன்வாளைவீசி நல்வினையில்லாத கொடியவரசனாகிய யாப்பியன் றலை விளங்கிச்சூழ்ந்தமுடியோடுவிழும்படி யறுத்தானென்க. (௮௯)

வேறு.

வாரொழுந்தமுரசெதிரொழுந்தபரி மதமெழுந்தகரிவ
ளியினுந் [யுகும்
தேரெழுந்தவிசைவிசையெழுந்தவசி திரளெழுந்தகணைகணை
போரெழுந்ததனுபுகையெழுந்தபயர் பொரவெழுந்தவெரு
வொலிமருள் [யுமால்.
காரொழுந்தவிடியிடியெழுந்தவொலி கடலெழுந்தவலைமெலி

உரை.—இங்ஙனம் பலமுகத்திற்போராகி முரசுகள்முழங்கக் குதிரைகளெதிர்த்துப்பாய யானைகள் மதத்தோடுசீறக் காற்றிலுந் தேர்களோட விசையோடுவாள்கள்வீசத் திரளாயம்புகள்மொய்ப்ப விடாமற் போர்முகத்தில் வில்லுகளம்புகளையுதைப்பப் புகைத்தகோபத்தோடு படைவீரர்போர்செ

ய்ய விளைவயெல்லாமயங்கிக்கூடிப் போர்க்களத்திலெழுந்த வ்ச்சத்தால் மேகத்தினின் றுவிழும்பிடிகள்மெலியவும் விளைந் த்முழக்கத்தா லவ்விடிக ளார்ப்பொலிகுறையவுந் தம்முட்க லங்கியாயமயக்கத்தாற் கடலலையின்மயக்கமொழியவு மன்று போர்பொருதானென்க. (௧௰)

அணியுடன்றபரிபரியுடன்றகரி கரியுடன்றகொடியணி
யுதேர் [ரப்
மணியுடன்றதனுதனுவுடன்றகணை கணையுடன்றகறைமவித
பிணியுடன்றவமரமருடன்றவுட லுடலுடன்றவுயிர்பிரிதரப்
பணியுடன்றகுயவுயருடன்றுபடை படவுடன்றமறையரசு
ஞல்.

உரை.—கடிவாளத்தான் முனிவுபட்டனகுதிரைகள், அக்குதிரைகள் யானைகளைமுனிந்துதுடர்ந்தன, அவ்வானைகள்கொடியணிந்ததேர்களைமுனிந்துதுடர்ந்தன, கட்டியமணிகளையாட்டி வில்லுகள்முனிந்தன, அவ்வில்லுகள்முனிந்தம்புகளையுதைத்தன, அவ்வம்புகள்முனிந்து குருதியைச்சிந்தின, போர்முகத்துத் துன்பங்கள்முனிந்தன, அப்போருடல்களைமுனிந்தன, அவ்வுடல்கள் தம்முயிரைமுனிந்தாற்போ லவ்வுயிர்பிரிந்தன, இவையெல்லாங் கட்டித் தூங்கியவாபரணங்கள் பொருதாற்போலவசையும்படி யாடித்திரியுந் தேரின்மேனின்று பகைவர்படையைமுனிந்து வேதத்தினரசனாகிய சோசுவன்செய்யும் போர்த்தொழிலாலாயினவென்க. (௧௧)

முனிவெகுண்டமுனிவிணைபுகைந்துமுனி முனிவளைந்
துவிடுமுனிவரு [கணா
நனிவெகுண்டகணைகுதிதவிர்ந்ததில நனியெழுந்தபிணமிரு
தொனிவெகுண்டநதியெனவெழுந்தகறை துணையெழுந்தக
ணாயொடுமெழத் [விலா.
தனிவெகுண்டநரபதிபொழிந்தசர மழையொழிந்ததிலதணி

உரை.—அங்ஙன நரபதியாகியசோசுவ னெய்தவம்புகள் தவத்தோர்கோபம்போலப் புகையெழும்படி முனிந்தவில்லுவளைந்தெய்தவிற் றணியாமன் மிகமுனிந்து குறியைத்தப்

பாதன, ஆகையா விருபக்கத் திருகரையாகப் பிணங்கள்குப்
பையாய்க்கிடந்து நடுவேமுழங்கிமுனிந்தவாறுபோல விரத்
தமோடிப் பின்னையு மேன்மேலவ்வாறுபெருகவு மப்பிணக்
கரையிரண்டுமெழும்பவுஞ் சோசுவன்பொழியு மம்புமாரி
யொழியவுமில்லை தணியவுமில்லையென்க. (௬௨)

நீரோர்வாரிமுனர்நீளோர்கூலமென நீலோர்மேனிய
ரோர்நூறெதிர்த் [இயப்
தோரோர்வாளிவிடவோரோராகமற வோரோராவியுகவே
போரோர்சோசுவனுமோரோராயிரர்க ளோரோராயிரவி
ல்போலுமென் [வார்.
றோரோர்சாபமுளனாமினானெதிர வாவிவாழ்வனெனமாழ்கு

உரை. — ஓடிவருநீர்வெள்ளத்தின்முன்னே நீண்டதோர்
கரையையிட்டாற்போல வங்ஙனஞ்சோசுவன் பொருதுவரு
கையிற் கரியமேனியா ரொரு நூறுபடைவீர ரெதிர்த்தா
ரெதிர்த்த வளவிலே யவனெவ்வொருவற் கொவ்வோ ரம்
பெய்ததனா லொவ்வொருவன்மார்பற்றுப்போ யுயிருமழிந்
துமடிந்தா ரவனுமப்புறம்போ யெங்குமோடிப் பொருத
விசையினா லவ்வொருசோசுவ னாயிரசோசுவர்போலவு மவன்
வளைத்த வொருவில் லாயிரவில்லுபோலவுந் தோன்றுமென்
றாதலா லவனெதிர்த்துப் போர்செய்யுங்காலத் தொருவில்
லுள்ளவனாய்ப் பிழைத்துத்தப்பும்படி வல்லவனென்றெல்
லாருமயங்கா நின்றாரென்க. (௬௩)

மலையிரண்டுமிசைமலையெழுந்ததென மலிபுயங்கள்மி
சைதலையெழ [ட
வுலையிரண்டுமிசையழலழன்றதென வுயிரெரிந்தவெரிவிழிவி
வலையிரண்டுமிசையெழமுழங்குமென வதிரெழுந்தவுண
னொருவனீர்க் [ர்.
கலையிரண்டுமிசையமர்நிகர்ந்திருவர் களநடுங்கவமர்நடவினா

உரை. — அப்பொழுதிருமலைகள்மே லடுக்கிவைத்த வே
ரொருமலைபோல வுயர்ந்தவிருபுயங்கள்மேற் பெருமுண்ட
மாகத் தலைதோன்றாநிற்கவு மீளவு மிருவுலைகளிலெரித்தநெரு

ப்புபோல வுயிர்களெரியும்படி யிருவிழிகளெரியைக்கொப்புளியா நிற்கவு மிருகடல்பொங்கி முழங்குமொலியைப்போல முழங்கிவந்தவோரிராக்கத னெதிர்த்தவளவிலே யிருவருமிரு வீரச்சுருக்கள் பொருதாற்போலப் போர்க்களமெல்லா நடுங்கும்படி யரியபோரைத் துடங்கினானென்க. (௧௪)

கொடிசுமந்தவுயர்குயவிரண்டுமுயர் கொலைமலிந்தம
தகரியெனா [கணையிருட்
விடிசுமந்தமுகிலொடுமெதிர்ந்தமுகி லெனவெதிர்ந்துவிடு
கடிசுமந்தமுகிலெனமறைந்தவெளி கடைமுடிந்தவுகமிது
வெனாப் [ர.
படிசுமந்தபலவுயிரடங்கல்மருள் படவளைந்தவிருதனுவொ

உரை. — கொடியையணிந்த வுயர்ந்தவிருதேர்களின்மேவிருவர்கொலைத்தொழிலிற்பொங்கிய விருமதயானைகளின்றன்மையாற்றோன்றி யிடிகளைச்சுமந்த விருமேகங்கள் தம்முளெதிர்த்ததுபோல வவருமெதிர்த் தெய்தவம்புகள்மிகுதியாலிருண்டமேகத்தால் வெளியைமூடினாற்போல வானமறையாநின் றுலகமூடியும்படி கடையுகமிதுவென் று பூவுலகிலுள்ளவுயிரெல்லா மயங்கும்படி யோரிருவில்லுகள்வளைந்து போர்செய்தனவென்க. (௧௫)

தேரிரண்டுவலமிடமிரிந்தகல வருகெதிர்ந்துதமுடிரிய
வே
யோரிரண்டுசிலையளவிறந்தகணை யுகவடைந்துபடுகணையிலா
நேரிரண்டுபடையெனவெதிர்ந்தசர நெறியினின்றரகவின
மென [வே.
வாரிரண்டுபடைவியவமண்டிவிரி படமலர்ந்துமிசையாட

உரை. — அவரோதினவிருதேரும் வலத்திலுமிடத்திலும்வளைந்து தம்முளகன்றுபிரியவு மெதிர்த்துநெருங்கவுந்திரியம்போ தவரதுவில்லிரண்டு மளவிறந்தவம்புகளையெய்ட்டாலு மொருவன்மேற்படும்படி கிட்டச்சென்றவம்பொன்றின்றி யவ்வம்புகளெல்லா நடுவழியிலேயிருபடையாகநின்று தம்மூட் டடுக்கப்பட்டுப்பாம்புகளினிருகூட்டம்போ

லச்சூழப்பார்த்திருந்த விருபடைகளதிசெயாநிற்கும்படி ப
டத்தைவிரித்தாகாயத்திலாடாநின்றனவென்க. (௬௬)

சூசிமுகந்துசுடுமெனசரங்கடம தொழில்மறந்தனகொ
லெனவொளி
வசிமுகந்துகதிரளவிறந்திரவி மலியுமங்குல்டவிடுமெனு
நிசிமுகந்துகருநிறமலிந்தவுண விணமருந்தவுரிவிட நுனி
யுசிமுகந்துபலமுகமுனித்தகணை யொரொரலங்கலளவில்
வெய்தான்.

உரை. — அதைக்கண்டசோசுவன் செந்தீயைமுகந்து சு
டுமென்னம்புக ளின்று தாம்படித்ததொழிலைமறந்தனவோ
வென்று கோபித்துச் சூரியனொளியின்கூர்மைகொண் டம்
பாக வளவிறந்தகதிரை யிருளைக்கொல்லும்படி யுதயத்தி
லேவிட்டாற்போல விராவிருளைமுகந்ததென்ன கரியவிராக்க
தனிணத்தையுண்பதற்குரிய நஞ்சுதுவைத்தனவு நுனிக்கூர்
மையின்மிக்கனவும் பலமுகத்தனவுமாகவென்று முகந்து ம
ட்டொன்றின்றி யம்புகளை யொவ்வோர் தொடையா லவன்
மேலெய்தானென்க. (௬௭)

அறநிமிர்ந்தகொடியறவுயர்ந்தவுரு ளறவுகண்டடரிவல
வனோ [ளோ
டறவெதிர்ந்தசிலையறமுனைந்தகர மறவணிந்தகழல்சழல்க
டறவுடன்றவுரமறவிடைந்தசிர மறமுலைந்தவுணனுயிரற
வறமலிந்தசிலைநிகரடங்கலற வறமுணர்ந்துபொருமரினால்.

உரை. — அங்ஙனஞ்சோசுவன் றொடைதொடையாய் ம
ட்டின்றியெய்தவம்புகளா லவ்விராக்கதனிருந்ததேர்மேலு
ள்ளகொடியுமற் றுருளைகளுமற்றுப்போய்ப் பாகனோடு தே
ரிலேகட்டினகுதிரைகளுஞ்செத்து அவன்வில்லுமற்றுப்பொ
ருந்தவலக்கையு மணிந்தவணிகளோடுகால்களும் பகைத்தநெ
ஞ்சுஞ் சினந்ததலையுமற்றுப்போய் நல்லறமில்லாத விராக்க
தனுயிரும்போயிற்றே யிவையெலாம்புண்ணியநிறைந்தவொ
ருவன் புண்ணியத்தைக்குறித்துச் சிலைகொண்டுசெய்தபோ
ரினாலாயினவென்க. (௬௮)

வேறு.

பொன்பொதுளுங்கதிர்பூண்மகுடப் பொருனன்பு
னைவாகையினான்
மின்பொதுளும்புயலார்ப்புமெலிந்திட வீங்கொலியூதவொழீ
வென்பொதுளுண்டதழும்புமிடைந்த பொருந்தலர்மேன்
முடுகி
முன்பொதுளும்பகையார்முரியக்கணை மாரிமுடுக்கினரால்.

உரை.— முன்சொன்னபடி பொன்னுற்கதிரைப்பூண்ட முடியுள்ளவரசனாகியசோசுவன் வெல்லப்படாத விராக்கதனைவென்று கொண்டவெற்றியினால் யூதர்படையெல்லா மேகங்கள் மின்னியார்க்குமுழக்கத்தினுமுழங்கி மகிழ்ந்தோங்கி முதுகிற்றழும்புநிறைந்த பகைவரைத்துடர்ந்து முன்னின் றெதிர்த்தவெல்லாருமுறிந்தோடும்படி யவர்மேலம்புமாரி யைமுடுக்கிவிட்டானென்க. (கூக)

வளையமுழங்கினவண்சிலைதேருருள் வளையமுழங்கின
தொந்
துளையமுழங்கினமாள்கரிமான்பரி யுளையமுழங்கினபோர்
விளையமுழங்கினபற்பறைசெம்புனல் விளையமுழங்கினமெ
ய் [ரே.
களையமுழங்கினவெம்படையொன்னலர் களையமுழங்கின

உரை.—விற்களோயாமல்வளைந் தம்பெய்தலின் முழங்கவுந் தேர்களோயாமற் சுற்றிவருகையின்முழங்கவு முளைந்து யானைகளுங்குதிரைகளுஞ் சாகையின்முழங்கவும் போர் விளைதற்கோயாமற் பலவாச்சியங்கள்முழங்கவுங் குருதிகளா றாய்ப்பெருகிமுழங்கவு முடல்களைவெட்டிப் பலவாயுதங்க ளோயாமல் முழங்கவும் வெட்டுண்டபகைவரு மோயாமல் முழங்கினாரென்க. (௱)

துண்டுபடப்படுமுந்திபடப்படுதூசிகொடேர்சுடர்வா
கொண்டுபடப்படுபற்சிரமுங்கர முங்குவியும்பிணமுந் [ள்
தண்டுபடப்படுவாளியும்வாளொடு சாபமும்வையயினும்
வண்டுபடப்படுயானைகள்பாய்பரி வண்டுபடப்படுமே.

உரை. — அங்ஙனந் தேருருளைகள் துண்டாகமுறிந்து தேரிற்கட்டியகுதிரைகளும்பட்டுப் பலதேரழிந்தன, வாளைக் கொண்டு தலைகளுங்கைகளுமற்றுப்போய்ப் பிணங்கள்குவியாநின்றன, தண்டாயுதத்தைக்கொண்டு பகைவர்வாள்களுமம்புகளும் வில்லுகளும்வேல்களுமுறிந்தன, அம்புகளைக்கொண்டு யானைகளுங்குதிரைகளுமடிந்தனவென்க. (௱௧)

கீழ்கடல்மேல்கடல்மேல்முடுகிக்கிளரோதைகிளைத்தெ
ழு
வாழ்கடல்மானடருனையிரண்டு மதிர்ப்பவமர்க்களமோர்
தாழ்கடல்மானுதிரங்கடரங்கமெழுந்ததும்பநிலஞ்
சூழ்கடறீவுகளென்றுகிடந்தன துஞ்சியதோவினமே.

உரை. — கீழ்த்திசைக்கடல்பொங்கி மேற்றிசைக்கடலின் மேல்முடுகினு லெழும்பும்பெருமுழக்கம்போல விரண்டாழ்ந்தகடல்கள்போல வவ்விருபடைகளு மெதிர்த்துமுழங்கத் தாழ்ந்தகடல்போலக்குருதிகளலையெழும்படிபெருகி யதிலே பூவுலகஞ்சூழ்ந்த கடலிலுள்ளதீவுகளைப்போலச் செத்தயானைகள்கிடந்தனவென்க. (௱௨)

இடித்தனவேறெனவார்ப்பெழவின்னண மேயெதிர்பூ
தர்பொரத் [ய்
தடித்தனகைப்படைதந்தனவாய்வழி தாவியதன்னுயிர்போ
மடித்தனமேனிவடிந்தனசோரி மலிந்தனவார்கவியுட்
டுடித்தனகுன்றுகளென்றுயர்தோலொடு துஞ்சுகதூசிகளே.

உரை. — இடித்தவிடிகளின்முழக்கத்தோ டிங்ஙனம் பூதர் போர்செய்தவளவிலே யவர்பிடித்தவாயுதங்கள் செய்தவழியாக வுயிர்போ யுடல்கள்திரளாய்விழுந் துமிழ்ந்தவுதிரவெள்ளத்திலே கடலுட்குன்றுகள் துடித்தாற்போல மடிந்துயிர்விடுகையில் யானைகளுங்குதிரைகளு மொன்றின்மேலொன்று திரண்டுதுடித்தனவென்க. (௱௩)

போரிலெழுந்ததிர்போரினையாடினர் பொங்கிய
வோதையினுன்
மூரியெழுந்தமுரட்கரிதூசி மூரிந்துதுடித்தமையாற்

றேசொரியெழுந்துமிதம்படவோசுட ரச்சுழலொற்றையுருட்
டேரிலெழுஞ்சுடர்மேனிசிவந்ததின் மாலைசிவந்ததுவே.

உரை.—மீளவு மிருபடை போர்முகத்திற் பொங்கிக்கிள
ம்பிய நிகராதமுழக்கமிகுதியாற் பலயானைகளுங் குதிரைகளு
முறிந்துதைத்துத் துடித்துழக்கிக் குதித்துப்பாய்தலி னெழு
ந்தகுருதியின் றிவலைகள் மிகவுங்கிளம்பிச் சூரியன்முகத்திற்ப
ட்டதினாலேயோ வென்றுந் தோன்றும்படி கதிரைவிட்டுச்
சுழலு மொற்றையுருளையுள்ள தேரின்மேலெழுந்தஞாயிறு
சிவந்துபோய் மாலைக்காலமாகிவானஞ்சிவந்ததென்க. (௱௪)

அவ்விருடோன்றியடுத்தனகாலை யடங்கலுமொன்ன
லரை
வெவ்விடவெவ்வையிலாதொளிவேந்த னிழிந்தலைவீழுமெனு
வெல்வினைநோக்கியெழுந்தமனத்திற லேந்தியசோசுவனே
நில்லெனநின்றனனேமிவிளக்கிய விண்டவழ்நேமியினான்.

உரை. — மாலைக்காலமாயிற்றென்றுகண்டு இப்பொழுதி
ராவிருள்வந்து பகைவரைமுழுதும்வெல்லும்படி நேரமில்
லாமற் சூரியன்கடலிலேமுழுகி யத்தமிக்குங்காலமாகுதென்
று மனவூக்கமிகுதியாற்பொங்கியசோசுவன் சூரியனைப்பார்
த்துநில்லென்றான், என்றவுடனே பூமியைவிளக்கிவானத்திற்
றிரியுந்தேரோனாகிய சூரியனின்றதென்க. (௱௫)

மாலையில்மாவிபெயர்ந்தகலாது வதிந்தவணின்றொரு
காலையிலாகையிலாகியகாட்சியி லாயகளிப்பொடறச் [நாட்
சாலையிலாரியசோசுவன்மாலை தகாதுதடுத்தனவவ்
வேலையில்வேலையைவெல்லடலானையை வென்றனவாறிதே.

உரை.—அங்ஙனஞாயிறுபெயராம லங்கேயொருநாள்மு
ழுதுநின்றமையா லக்காட்சியினான் மிகக்களிகூர்ந்து நல்ல
றச்சாலையின்றன்மையா னின்றசோசுவ னிருள்மூடாதபடி
தடுக்கப்பட்ட வொருநாட்பொழுதிலே கடலோடொத்தப
கைவர்படையை வென்றதன்மையைச் சொல்லிக்காட்டலரி
தென்க. (௱௬)

மருடருநெஞ்சிடையஞ்சினவெஞ்சில வஞ்சினவெஞ்
சமருக்
இருடருமாதரவாகவெதிர்ந்த விராவெனுமேற்படையைத்
தெருடருமாவிசெகுத்துமறித்திட வான்றிரிதேர்முடுகா
தருடருமன்பொடுவெங்கதிரம்பென வல்லெதிரோவினனால்.

உரை. — அங்ஙனநின்றசூரிய னெப்படிதோன்றிற்றே வென்னில் மயங்கியஞ்சிநின்ற குறையாதவஞ்சனையுடையப கைவர்படைக்குதவியாக விருளைக்கொண்டுவந்த விராவென் னுமேற்படைவாராதபடி யதைமறித்து வெட்டியழிக்கும்ப டி சூரியன்வானத்திற் றன்றேரைநிறுத்தியூகர்மேற்றயைவை த்து வெங்கதிராகியவம்புகளை யிராவிற்கெதிராக வோயாம லெய்யாநின்றதன்மைபோலத் தோன்றிற்றென்க. (௱எ)

நான்மறையாதிசினத்தருநாக்கரி தாம்வலிகாட்டிய
போர்
வான்மறையாதுவழங்கிமலர்ந்தகல் வையமறிந்ததனைக்
கான்மறையாதுகதிர்க்குணிலோடு கறங்குகடற்பறையைத்
தான்மறையாதுபுடைத்தெனமாவி தரித்தனதோற்றமதே.

உரை. — மீளவு ஞாயிறுநின்ற தெங்ஙனந்தோன்றிற்றே வென்னில் வேதநாயகனன்றுகோபித்துக்காட்டுந் தள்ளற்க ரியவல்லமையைக்காட்டிய வப்போரின்றன்மையை யிருள் கொண்டு வானமறையாமல் வழங்கிப்படர்ந்தபூவுலகமெங்கு மெல்லாருமறிந்திருந் தெக்காலமுமறையாதபடி சூரியன்றா னே மறையாமனின்று தன்கதிர்களாகிய வெண்ணப்படாதகு றுந்தடிகளைக்கொண்டுமுழங்கும் கடலாகியமுரசினை யோ யாமலடித்ததன்மைபோலத் தோன்றிற்றென்க. (௱அ)

வேறு.

குதிரொதிருருட்டுமொழியகல்வில கருதலர்பதைத்ததானை
புறமிட
வெதிரொதிர்கடுத்தவீரதிசிதரனிரதமுயருற்றுவேகவுரையினாற்

பொதிரொதிர்சினத்துமீளமுகமிடு பொருதவர்முடுக்கிவேத
மவிகென [ளையுமே.
முதிரொதிர்கதத்தசோணனமர்செய முகிலிடிமறைத்தபூசல்வி

உரை.— சொன்னபடி யத்தமியாமற் சூரியனின்றதுகண் டி பகைவர்படை பதைத்தஞ்சியோடிப் புறங்கொடுக்கைவி ற் பாராளென்னுமரசனதுபடைத்தலைவனாகிய நிசிதரன் று னோடினவர்க்கெதிர்வந்து தேரின்மேலிருந்து கோபத்தோ டு கொடியவுறுதிகளைச்சொல்லி யவருஞ்சினத்திற்பொங்கி மீண்டு முகந்தந்துபொருதார், அதைக்கண்டு சோசுவன் ப டைத்தலைவருள்ளொருவனாகியசோணன் வேதம்வளரக்கடவ தென்றுவாழ்த்திப் பகைவரைமுடுக்கி முதிர்ந்தகோபத்தோ டுபோர்செய்தமையால் மேகத்திடிமுழக்கத்தைமறைக்கும் படி போர்முழக்கம்விளைந்ததென்க. (௱௯)

அழலெழவளைத்தசாபவிருமுகி லளவில்பனித்தபாண
மழையொடு [முரிதரப்
நிழலெழமறைத்தவானம்வெருவுற நிரைநிரையெதிர்த்ததானை
புழலெழவுரைத்தவாளிவழிவழி புனலெனவிரத்தமோடவிரு
வருஞ் [னளவதோ.
சுழலெழவுருத்தவாரியெனவமர் தொடுமுறையுரைக்கநூலி

உரை.— அங்ஙன நிசிதரனுஞ் சோணனுமென்றிருவர்தீ மேற்பறியும்படி வளைத்தவிருவில்லாகிய விருமேகங்க ளி னின்றிப்பொழியு மம்புமாரியினால் வானமுமறைந்திருண்ட ஞ்சம்படிமொய்த்து மற்றப்படைக ளணியணியாய்முறியா நிற்பப் புண்ணைப்படுத்தித் தைத்தவம்புகள் செய்தவழியால் வழிந்தகுருதி யாறாகவோடாநிற்ப நீர்ச்சுழியோடோடிவரு நிறைந்தவெள்ளம்போல விருவர்தொடுத்தபோரை யுரைக்கு ம்படி படித்தநூலின்றன்மையில்லவென்க. (௱௰)

கொடையிலதின்மக்களும்மெனவுயர் கொடிமுழு
தொழித்துநீறநிசிதரன் [னனவில
கடையிலசினத்தவாளியெழுநினன் கனமெனவிடித்தசோண

தொடையிலழிவிற்றபாணமிடுதலின் றுரகமோடறுத்தபாக
ன்மடிதர [ன்.
நடையிலநிலைத்ததேரினிசிதர னனுகிறகறுத்தநாகநிகருவா

உரை.—நிசிதரன் முடிவின்றிவிட்டவம்புகளாற் கொடைதானமில்லாத வுலோபிகளின்பேரொழியுமாறுபோல வெதிராளிதேரின்மேலிருந்தகொடிமுழுதுங் காணாதபடியழித்தான், அதைக்கண்டசோணன்மேகமிடித்தாற்போல முழங்கித் தொடைதொடையா யளவின்றியம்புகளையெய்ததனா லவன்றேரிற்பூட்டியகுதிரைகளு மதைநடத்தினபாகனுஞ் செத்துத் தேர் நடையின்றிநிலைத்துப் பேரிறகறுத்தமலைபோல நிசிதரனின்றனென்க. (௱௰௧)

உகமுகமுடித்தநாளின்வளியென வருளுருள்முடுக்கு
சோணனவமர [பினவன்
நிகமுகமுகுத்ததேரினிலைமிசை நெயுமவர்பிடித்தநோழிகை
முகமுகமெதிர்த்துவாளியிடையிடை முறைமுறைதொடுத்து
மீளவயமலை [முதினான்.
பகமுகமுனைத்தசூலமுனைகிறைப் பழியிதுவெனக்கடாவவெ

உரை.—அப்பொழு துலகமுடியுங்கடையுகத்திற் பெருங்காற்றுச்சுழலாகவடிக்கும்போலச் சோணனிடைவிடாமற்றன்றேரைமுடுக்கிச் சூழவந்தம்பெய்ய நிலைத்த விளங்கியதேரின்மேனின்ற நிசிதர னெய்வார்கையி னூற்றூர் சுழலுமாறுபோலச்சுழன்று முகமுகமாயெதிர்த்துநின்று சூழவெங்குமுறைதப்பாம லம்புகளைத்தொடுத்தெய்வான், மீளவு மம்புகள் பயனின்றிவிழுதலால் வயிரமலையையும் பிளக்கும்படி முனைகூடினவொருசூலத்தையெடுத்துத் தேவதூஷணமாக விதுவுன்றேவற்குப் பழியாம்படிவருவதென்று விட்டெறிந்தானென்க. (௱௰௨)

முதிர்வினைவிளைத்தகாலமெனவிவன் முதல்வனைநகைத்
தணுகியெறியழற் [னவழிந்
கதிர்வினைபழுத்தசூலம்வழியிடை கதிர்முனையிருட்டுமெரியெ

தெதிர்வினைவிளைத்தசோணனெறிகணை யிழிவுறவுணாத்தவாயி
னிறைவன [ணிநிகரவே.
பொதிர்வினைபழுத்தமார்பநிசிதரன் புகைகணைபுதைத்தனு

உரை.— அங்ஙன நிசிதரன் கொண்டதீவினைமுதிர்ந்துவி ளையுங்காலமாகையி லவன்முதல்வனாகியகடவுளை நகைத்தான், நகைத்தவினைப்பயத்தாற் றனெறிந்தவழலைப்பறியுஞ் சூல ந்தானே சூரியன்முன்னே யிருளழிவதுபோல வழியிலேபுகை யாயழிந்தது, மீளவு மெதிர்போர்செய்த சோணனெய்தவம் புகள் தேவற்கிகழ்ச்சியைச்சொன்னவாயிலே திரண்டுநிறை ந்தன, அங்ஙனநிறைந்ததீவினையாற் பழுத்தநெஞ்சினையுடை யநிசிதரன் சினந்துபுகைந்தவம்புகளானிறைந்தவம்பின்கூடு போலத்தோன்றி மடியாநின்றானென்க. (௱௰௩)

வேறு.

மடிவுற்றதலைவனெனுமறமுற்றநிசிதரனை மனமுற்றவெ
குளியொடுகெண் [விரதமிசையான்
டிடியுற்றவிசையினொடுவெரியொத்தவிவுளிவரு மலையொத்த
கடியுற்றமதுவினலரிமத்தினரசனெதிர் கதமுற்றிமுடுகுவி
சைகா [திராணுகினான்.
ணடியுற்றசுருதியரசனிலத்துவிசையினுமி யமர்முட்டவெ

உரை.—வாசமதுவைப்பொழியு மலரைப்பூத்த எரிமநா ட்டரசனாகியபாரான் றன்றலைவனாகியநிசிதரன்மடிந் திறந்த துகண்டு மேகத்தினின் றவிழுமிடி வரும்விசைபோலத் தா னுநெருப்போடொத்த குதிரைகளிழுத்த மலையோடொத்த தேரின்மேனின்று சோணன்மேலெதிர்த்து முடுகிவரும்வி சையைக்கண்ட வாதிவேதத்திற்கரசனாகியசோசுவன் காற்று ப்போலப்பறந்துவந்து போரிடும்படி யவற்கெதிர்கொண் டுகிட்டினானென்க. (௱௰௪)

விரதத்தினெடிதுறியுனுயிர்துய்ப்பவரமொடமர் வி
ழைவுற்றமழுவிதுவெனுப் [லெறியச்
பிரதத்தினிரியவிடையமருற்றவெவருமது பிரிவுற்றவிடியி

சரதத்தினெதிருவெளிறெனவிட்டகணையிலது துகளிட்டுவெ
ளியிலெழமற் [ணையெழுதினான்.
திரதத்தினணியுமுடியெரியுற்றமடியமறை யிறைமொய்த்தக

உரை.—இட்டினவுடனே சூலத்தையேந்திய பாரானென்பவன் சோசுவனைநோக்கி நெடுங்காலத்துத்தவஞ்செய் துன்னுயிரையுண்ணும்படி வரத்தையடைந்ததனா லாசையோடித்தப்போர்க்களத்தில் வந்தசூலமிதுவென்றுபக்கத்துப்போர்செய்திருந்தவெல்லாருங் கலங்கியஞ்சியோடும்படி மேகத்தினின்றுபிரிந்த விடியைப்போல வச்சூலத்தையவன்மேலெறிந்தான், எறிந்தவளவிலே சோசுவனெய்தவம்பினாற் கல்வி முன்னேயறியாமை யழிவதுபோல வச்சூலமுந் தூளாயாகாயத்திற் சிதறியழிந்தது, மீளவும் பாரான் றேரின்சிகரமெரிந்தழியும்படி வேதவரசனாகிய சோசுவனிறையவம்புகளையெய்தானென்க. (௱௰௫)

சிரகத்தினுழுவைமுகனுருமொப்பவுறுமிமதி தெளிவு
ற்றவளைவிடவெடுத் [ளையெறியுமுன்
னரகத்தினெயிறுபடுமதியொப்பவிரலினுள வொளியுற்றவ
னரகத்தின்வெருவுவிடுதருமத்துவிசையனொரு நகையுற்றபி
றையெழுதினான் [மொடுகரமுமே.
விரகத்தின்விளையுவினைவிசையுற்றகணையினொடு விழவட்ட

உரை.—தலைச்சீராவின்மேற் புலியின்முகவடிவுள்ள பாரான்றன் சூலமழிந்ததுகண்டிடிபோலமுழங்கி மீளவும் பூரணசந்திரனைப்போல்விளங்கிய வொருசக்கராயுதத்தை யெறியும்படியெடுத்தான், கரும்பாம்பு தன்பல்லுப்படக்கவ்விய திங்களைப்போல வவன்விரலாற்கவ்விப்பிடித்தசக்கரத்தையெறியுமுன்னே நரகத்திற்கும் பயம்வருத்துவிக்குந் தருமத்தினாற்செயங்கொண்டசோசுவ னிளம்பிறைபோல்வளைந்தவோரத்திரத்தையெய்தான், எய்தவத்திரமுங் காமத்தாலொருவற்கு வினைகள்விளையுஞ்சீக்கிரத்தோடுபோய் அச்சக்கரமு மச்சக்கரத்தைப்பிடித்திருந்த வலக்கையுமற்றுவிழுந்தனவென்க. (௱௰௬)

அடியற்றவலதுகைகயைவளைதழுற்றியிடதுகையி லணிவ
ட்டமொடுவிடவெடுத்

இடியற்றருகிவினொலியெழமற்றவிருதர்நக விடைவிட்டவி
சையிலவிழக் [ன்
கொடியற்றவிரதமறவுரமற்றவலவனற வடியற்றகுதிரையறமி
முடியற்றசிரமுமறமுனையுற்றபகைவனற முடிவற்றகணையர
செய்தான்.

உரை. — அங்ஙன மடியோடற்றுப்போன, வலக்கையை ப்பாரான் றன்னிடக்கையாலெடுத்துப்பிடித்து விடாத சக்க ரத்தோடு கையுங்கூடச் சூழநின்றவீரர் மேகத்தினின்றற்று விழு மிடிபோலமுழங்கி நகும்படியெறிந்தான், எறிந்தகை யுஞ் சக்கரமுநடுவழிவிசையினிச்சோர்ந்துவிழுந்தன. சோ சுவனுவென்னிற் பாரானேறினதேரின்கொடியற் றிரதமழி யவு மார்பற்றுப்பாகன்மடியவுங் காலற்றுக் குதிரைகள்விழவு மவன்சூடினமுடியுமற்றுத் தலையுமற்றுப் போரிலெதிர்த்த பாரான்மடிந்தொழியவு முடிவின்றி யம்பின்றொடைகளைவி ட்டானென்க. (௱௰௭)

இறையுற்றவிறுதலொடுவெருவுற்றபடைமுடுகி யெதி
ருற்றகரிமதமிலாப் [யுமிலாச்
பிறையொத்தவெயிறுமிலகுயவற்றபரியுமில பிரிவுற்றவுருளை
சிறையுற்றபறவையெனவிசையுற்றவயமுமில் செருவுற்றப
டைகளுமிலாக் [யெழுதவே.
கறையுற்றதிணையுமிலசெயமுற்றவரசுபடை கடையற்றகணை

உரை. — அங்ஙன மைந்தரசருள்ளொருவனாகிய பாரான் கெட்டுவிழுந்ததைக்கண்டவவன்படையெல்லாம் வெருவாநி ற்க வவர்மேலேயூதர்முடுகி யெதிர்பட்டயானைகளெல்லா ம் ச்சத்தாலே மதமின்றிச்சிலதும்வெட்டுண்டு பிறையோடொ த்தகொம்புகளின்றிச்சிலதுமுறிந்தன, வெட்டுண்டமையாற் குதிரைகளின்றிச்சிலதேருமொடிந்தமையா லுருளையின்றிச் சிலதேருங்கிடந்தன, இறகைக்கொண்டுபறப்பனபோலும் பாயுமேற்றுக்குதிரைகளுமின்றிப் போர்செய்யும்படியாயு தங்களுமின்றிக் குருதிகள்மட்டில்லாதோடும்படி பகைவர்ப டைகளழிந்தன செயங்கொண்ட வரசனாகியசோசுவன்ப டை யோயாதவம்புகளைவிட்டுச் செய்யும்போர்முகத்திலே யென்க. (௱௰௮)

வேறு.

புயலினெடுமோதுமுயர்கரியகரிமேற்சபலை பொழியுமயி
லேந்தியதிரோவான்
பெயரினெடுமோவமுனைமுடுகுமிடல்வேந்திவுளி பெலகரிப
தாதியுருடிண்டே
ரியலினெடுநால்வகையுமுவணமெனும்யூகமுறியிரணமுரியா
துறுதிநிற்பக்
குயலினெடுசோசுவனோடசனியெறிசாபமுளர் குழுமியவன்
மேன்முடுகிமொய்த்தார்.

உரை.— அங்ஙன மைந்திலே மூவரசருஞ்செத்து மூவரசர்படைகளுமழிந்தபின்பு ஓவானென்னுமரசன் றன்னுமத்தாற் போர்தொந்துகளையும்படி வல்லமையுடையான் மேகமோ வில்லையோவென்று மயங்கும்படி யுயர்ந்தகரியமதயானையின் மேலான் மின்னலைக்கொப்பளிக்கும் வேலையேந்திய கையான்றேர் கரி பரி காலாளென்னு நால்வகைப்படைகளோடுவணயூகம்வகுத்துத்தன் படைசற்றுமுறியாம லுறுதியாய்நிற்பதுகண்டு தேர்மேலே சோசுவனு மவனோடுவில்வின்வல்ல வீரருந் திரண்டு ஓவான்மேலேமுடுகி விழுந்தெதிர்த்தாரென்க. (௱௰௧)

முடுகிவரும்வேகமுடனுவணவிருவண்சிறகு முரியவரு
தாக்கிலமர்தாக்கக்
இடுகில்வரும்வாளிபுடைவிலகவழல்மீதெழுக இடுகிடெனமா
ரிபொழிநாளில்
வடுகிவரும்வாரிவிசைமறையமறையோரெதிர வயவிரதம்யா
னைபரிவீழ்ந்தே
கடுகிவருசாபமழைகருடனிறகீர்த்திகல்வர் கடிதெவனுமோ
ரொரணிவீழ்ந்தார்.

உரை.—அங்ஙனஞ்சோசுவனு மற்றவீரரு முடுகிவந்தவிசையோடுவகுத்த வுவண யூகத்தில்விரித்துவைத்த விரண்டிறகுமுறியும்படி வேங்கையின்கூட்டம்போல யூதர்தாக்கினதினால் விட்டவம்புகள் கேடகங்களிற்பட்டு மின்னினாற்போல

த் தித்திரளாய்ப்பறியாநிற்க மாரிகாலத்துப் பெருகினகங்கையில்வரும் வெள்ளத்தின்விசையைமறைக்கும்படி வேதத்தாராகிய யூதர்திரண்டு விசையோடெதிர்த்தவீற் றோர்களும் யானைகளுங்குதிரைகளு மழிந்துவிழ யூதர்விட்டவம்பின்மாரியாற் கருடனாகிய வுவணயூகத்தினிரண்டிறகு மற்றுப்போய அணியணியாயெங்கும்பகைவர்செத்து விழுந்தாரென்க.

(௱௨௰)

வருடலெனயூகவிருபுடையிலுளயாவுமற வயவிருதர்வீ
ழ்த்தபினர்மீளக்
கருடனகல்மார்புலவுகணையிலவர்மாற்றரசு கரியிலுறைபோ
ணியெதிர்த்தார்
புருடனினும்விஞ்சரிவையயனையவிகலெண்ணமில பொருள
னிவைகண்டுமனநோகக்
குருடனொருகாட்சியுமினெனவதிசயித்துமலை குவடதிரவார்
த்தசனியொத்தான்.

உரை. — அங்ஙனமந்தயூகத்தி னிருபக்கத்திருந்தபடையெல்லாந்தடவினாற்போல யூதர்முறித்துவீழ்த்தபின்பு மீளவுங்கருடன்மார்பிலேபாய்ந்தவம்புபோல வவர் பாரான்யானைமேலிருந்தபேரணியைத்தாக்கினர். அப்பொழுது தன்புருடனுக்குமிஞ்சினபெண்டாட்டி யொன்றுமெண்ணாதது போலப் புறப்பகையையெண்ணாதிருந்தபாரா னதைக்கண்டு மனதிலேநொந்து பிறவிக்குருட னிருந்தாற்போலே கண்டிறந்துபார்த்தாற்போலத் தானதிசயப்பட்டு மலைகளினுச்சியதிரும்படிமுழங்கி யிடிபோலநின்றானென்க. (௱௨௧)

கொடிகளறவானிறவழ்குடைகளறமேகமறு கொடிக
ளொடுதேருமறயானை [றமன்னர்
யடிகளறவாசியறநெடியசிலைநாணியற வரணமொடுமார்புமு
முடிகளறமுங்கமறவணிகமறமள்ளரற முனையுமொருசோசு
வனொடாரா
ரிடிகளறவேகமரிலெழுதுகணையோடுகணை யெழுதவெதிர்நி
ன்றவருளுய்ந்தார்.

உரை.—அங்ஙனந் தன்வீரரோடு சோசுவன் பேரணியை த்தாக்கியவளவிலே கொடிகளுங் குடைகளு மேகத்தையளக்குங்கொடியோடு தேர்களும் யானைகளுங்குதிரைகளு நாணியோடு வில்லுகளுங் கவசத்தோடுமார்புகளு மரசர்குடியமுடிகளோடுதலைகளு மணியணியோடுபடைவீரரு மிவையெல்லாமற்றுப்போய் மடியாநிற்கப் போர்செய்யாநின்ற சோசுவ னிடியினுங்கொடியதாய் விட்டவம்பின்முகத்தெதிர்ந் தம்பினையெய்தவருள் மடியாம லுயிர்வாழ்வாருண்டோ வில்லையென்க. (௱௨௨)

கடியகணைசென்றவிசைகடுகுமிடிமின்னலினை கவசமற
மீதில்முல்பொங்கக்
கொடியகருவஞ்சரராமுலவியுறையென்றுநிறை குருதியுகவி
ண்டணையர்வீழ
நெடியவரைவிண்டுபகவுருவுமுருமென்றுநெடு நிகழிகரிமா
ர்புலவிவீழ்த்த
விடியமுகில்மின்னிவிவனிரதமுடனெல்கியுயி ரிறுதியுறவெங்
குமமர்செய்வான்.

உரை.—யூதர்விட்டகடுங்கணைகள் விசையோடுசென்று பகைவருடுத்த கவசத்தையறுத்தலின் மின்னினூற்போலத் தீப்பறிந்து மீளவுங் கரியவஞ்சகராகியபகைவர்மார்பிலே யவ்வம்புகள்பாய்தலின் மின்னியபின்பு மழைபெய்தாற்போல விரத்தமோடி யப்பகைவர் கரியமேகங்கள்போலச்செத்துவிழவு நெடுமலைகளைப்பிளந்து தகர்த்துள்ளுருவின விடிகள்போல நீண்டவம்புகள் யானைகள்மார்பிலேபாய்ந் தவற்றை வீழ்த்தவு மிடித்திடியைவிடும்படி மேகமின்னினூற்போலச் சோசுவன் முழங்கிய தேரின்மேலிருந் தோயாமற்சூழத்திரிந் தெங்குமுயிரைக்கொன்று போரைச்செய்வானென்க. (௱௨௩)

உருளுமுயர்காலுமிலகடவுபலபாகரில வொளிறுமுயர்
பாருமிலபாய்ந்து
மருளுசுழிவாசியிலவடிவினிமிர்கூம்புமில வயிரவுயர்தேர்ப
லவுநிற்ப

வெருளுபரிகாலுமிலவணிகளொருவேலுமில விசையுறவில்
நாணியிலவெம்போ
ரருளுமிவரூமிலநடுவையணிபேரணியு மழியமுனைசோசு
வனுழைந்தான்.

உரை.— பலபலதேர்கள் சுழலுமுருளையில்லாதனவு நட த்தியபாகரில்லாதனவும் விளங்கியமேற்பரப்பில்லாதனவும் பாய்ந்து சுழலுங்குதிரைகளில்லாதனவும் வடிவுள்ளநிமிர்ந்த கொடிஞ்சியில்லாதனவு மழிந்துகிடப்ப மற்றக்குதிரைகள்கா லுமின்றிச் சேவகராயுதமுமின்றி வில்லுகள்நாணியுமின்றிக் கிடப்ப யூதருமோயாமற்போர்செய்ய நடுவிலிருந்தபேரணி யுமழிந்து சோசுவனுள்ளேநுழைந்தானென்க. (௱௨௪)

தீப்புறம்வளைப்பநடுவயிரவரணுத்தபயர் செறியவி
டைநின்றவரசோவான்
காய்ப்புறவயத்தபடைகடவிநுழைவீரர்முனர் கடுகிவடிசெம்
புனல்களத்தீ
யேய்ப்புறவவித்ததெனவெரியைவிழிவாய்பொழிய விழியும
தமால்களிறுதூண்டிப்
போய்ப்புறமழித்துநுழைதருமனெதிர்வந்தசனி பொருவும
யிலேந்திநணுகின்றான்.

உரை.— அப்பொழுதுசூழவக்கினிக்கோட்டையாகப் ப டைவீரர்நெருங்காநிற்க நடுவிலேநின்றவரசனுகியவோவான் வலக்கைகாய்ப்புறும்படி யிடைவிடாமல் யூதர்விட்டபலப டைகள்செய்தவழியாக வவர்நுழைந்து சிந்தினவிரத்தமி குதியாற் சூழக்கோட்டையாகவைத்த தீயவிந்ததுபோலச் சூ ழநின்றவீரர் மடிந்ததுகண்டு கண்வழியாகத் தீப்பறியும்ப டிகோபித்து மதயானையைத்தூண்டிச் சூழ்ந்தவணியையழி த்து நுழையுந்தருமனுகியசோசுவனுக்கெதிர்வந் திடியோ டொத்த வேலையேந்திக்கிட்டினனென்க. (௱௨௫)

கடவுமழலோடுகெடம்வடியுகரிநாணநனி கதறியிடமேற்
பொலியவெத்தீச்

சூடவுமழலோவிடம்வடியுமயில்நின்றிருகை துறவியெதிர்
கோவுராமுரைத்துப் [மதிவாளி
படவுமழல்தாவுவிசையெறியவெறிவேலசனி படுமுனிவனுரு
விடவுமழல்மேற்பறிபவெளியிலுயர்பட்டதுணி விழியகல
வோச்சினன்வில்வல்லோன்.

உரை. — சென்றவுடனே வேரவான் றீயையுமத்தையுங் கலந்துபொழியாநின்ற தானைமினயானைதாணும்படிமுழங் கியதட்டி யதின்மேற் காலூன்றிநின்று தீயுஞ்சுடும்படி யழலையுநஞ்சினையும்வடித்த வேலை யிரண்டுகைகூட்டிப்பிடித் தெதிர்நின்ற சோகவன்மார்பிலேபாய்ந்துபடும்படி குறிவைத்தழலாக மிக்கவிசையோ டெறிந்தான், எறிந்தவேலிடி போலவந்துபடுமுன்னர் வில்வல்லோனாகியசோகவனிளம்பிறைபோல வளைத்தவேரம்பெய்து மேலேதீப்பறியும்படியறுத்தவேலின் றுண்டுகளாகாயத்திற் கண்ணுக்குமறையும்படி யெறிந்தானென்க. (௱௨௬)

நீறுபடநெட்டயிறுணித்தரசனோடிவனுநீண்டனுவெடுத்தெவருமஞ்ச
வீறுபடவார்த்துநிமிர்கார்முகமவீந்தமழை விண்டலமுமண்டலமுமொய்ப்ப
மாறுபடமுட்டுசரமாறுபடுகின்றவிசை வன்னியெழமின்னிவிழிகூச
ஆறுபடவோர்கணைபடாதுபுவியூறுபட வோரிருவில்போர்படுமுடன்றே.

உரை. — அங்ஙன நீறும்படி நெடியவேலையறுத்தசோகவன்வில்லுக்கெதிரோவானும் வில்லெடுத்திருபடையுமஞ்சும்படி யிருவருமிகமுழங்கி வளைந்துநிமிரவரிருவில்லுகள் பொழியுமம்புமாரியால் வானமும் பூமியு மொய்த்திருக்கத் தம்முள்ளெதிர்த்துமாறுபட்டவம்புகள் பட்டவிசையாற் றீயெழக் கண்கூசும்படி மின்னி யவ்விருவருடலிலொருகணையும்படாமற் பூவுலகமஞ்சி யிடையூறுபடும்படி யவ்விருவில்லுகள் கொடியபோராச்செய்தனவென்க. (௱௨௭)

உரைத்தகணைமேற்கணைதடுப்பதுதடுப்பிலது மொரண்
கவசமேலுதிரியெங்கும்
விரைத்தநிலைசோசுவனுணர்ந்தொராறுபத்திருப தைம்பதரு
ம்வெம்பகழிவேகத்
திரைத்தசிலைக்காலெரியவோரோர்தொடையேவின னிகற்சி
லையுமால்களிறுமம்பொன்
வரைத்தவயிரக்கவசமுந்துணிபடப்படுபெல் வாளியுரமூழ்கி
விழவோவான்.

உரை.— அங்ஙனம் விட்டவம்புகளெல்லாமொன்றி லெதிர்வருமம்புகளாற் றடுக்கப்படவுமொன்றிற்கவசத்தின்மேற்பட்டுதிரவும் பயன்படாம லெங்குஞ்சிதறிவிரைத்தாற்போல வம்புகள்கிடப்பதுகண்டசோசுவன் மிக்ககோபத்தோடு தொடைதொடையாயாறும் பத்துமிருபது மைம்பதுஞ்சேர்த்திக் கொடியவம்புகளைச் சீக்கிரத்தால் வில்லின்கால் தீப்பற்றியெரியும்படியெய்தான். அத்தனையு மோவான்றாங்கமாட்டாம லவன் சிலையுமற்றப்போ யவனேறினயானையுஞ்செத்துத் தொடுத்தபொன்வயிரக்கவசமுந் துண்டாகி யவன்மார்பிலேபலவம்புகள்முழுகினதினால் விழுந்தானென்க. (௱௨௮)

வெருவிமுறியாதபடைமுறியமுரிதற்குலகில் வெருவுத
ருதான்விளியநீகொள்
பெருவிலதுசெய்தொழில்கொலுவலமையிலநின்கடவுள் பெ
றுவலியிதென்றலறியோவான்
செருவிலுயிர்தந்துதிரமுழுகுநிலைகண்டிவனோர் சிலையொடு
பொரப்புவியிலாரார்
மருவியெதிர்வாளிதொடமடிவரலதுய்வனோ மருளியெவரு
ங்கடிதகன்றார்.

உரை.—அங்ஙனம்விழுந்தவரசனாகியவோவான் சோசுவனை நோக்கிச்சொன்னான்: இந்நாள்வரைக்கும் பயந்து முறியாதவென்படையுமுறியும்படி யுலகெல்லாமுறிந் தஞ்சவதற்குக் காரணமாய்நின்றநானு மிறக்கும்படி நீவளைத்தவில்வின்றொழிலோ வல்லவே யுன்கடவுளின்வல்லமை யிதுவென்று

கூப்பிட் டோவானுயிரைத்தந் துதிரத்துள்ளேயமிழ்ந்தினு ன். இதெல்லாவற்றையுங்கண்டவெல்லாருஞ் சோசுவனொரு வில்லைக்கொண்டு போர்செய்ய வவனோடெதிர்த் தம்பினையெ ய்தவர்கெட்டாரொழிய விப்பூவுலகிற் றப்பிவாழ்ந்திருப்பவ ராரென்று மயங்கிச் சூழப்படையெல்லாமுறிந் தோடினு னென்க. (௱உகூ)

அகலவவர்பூதரெதிரகலமுறவந்தரிக நகலமுலவச்சுரு திவாய்மைப் [ரிபதாதி
புகலனையவாடரியகொடியகணையேவலொடு புரவிகரிதேர்வி யிகலவரினால்வகைகள்சிவையொடறவீர்த்தவள வெதிரமரினு லரசர்வையம் [ர்த்தான்.
நகலமடிவாயபழியழலவுளமுந்திரத நடவியதுனீசதனெதி

உரை.—அங்ஙன மஞ்சிப்பகைவரோடவின்பூதரெதிராக வோடிப் புறந்தந்தவர்மார்பினைக்காணும்படி வளைத்துவந்து கண்டபகைவர்மார்பிலே யுலாவும்படி வேதத்தின்றப்பாத சொல்லைப்போலத் தப்பாதகொடியவம்புகளை யோயாமலெ யிதவிற் பரிகரிபிரதங்காலா ளென்னும் பகைவர்நால்வகைத் தானைகளை வேரோடீர்த்தழித்துவருகையி லெதிர்த்தவைந்தர சருள் மிகவும்பெரிய வரசனாகிய அதுனீசதனென்பவ னன் றொருபோரிலே யுலகநகைக்கும்படி நாலரசருமடிந்துவந் தபழி தன்னுள்ளம்வேகும்படி தன்மனதிலேயுறைத்ததனாற் சீறித் தானேறினதேரை நடத்தி யெதிர்த்தானென்க. (௱௩௰)

வேறு.

சிறைபதிதேரினன் றீப்பெய்வில்லினன்
பிறைபதிமுடியினன் பெயர்செய்வாகையன்
னறைபதிதொடையின னளிபன்மன்னவ
ரிறைபதியடியினனெந்தன்றெஞ்சினன்.

உரை. —அங்ஙன மிறகுகொண்டாற்போலப்பறக்குந்தே ரு மழலையெய்யும்வில்லு முடியின்மேல்விருதாக விளம்பி றையுந் தன்பெயரோ தனக்குச்செய்யும்வெற்றியும் வாசமா

றுதமாலையுங் கூட்டமாய்ப்பலவரசர்வந் திறைகொடுத்து வ ணங்கப்பட்ட பாதமு மிச்சிறப்பெல்லாவற்றையுமுடைய அதுனீசத னன்று நாலரசர்தோர்த்து மடிந்ததுகண்டு மன திலேநொந்து மெலிந்தானென்க. (௩௧)

ஓரிருநூ றுற மொருமுன் னூறுடை
யீரிருவகைப்படை யீட்டினன்பினர்
பேரிருசிறகெனப் பிரித்ததற்குவெம்
போரிருவரியென விருவர்போக்கினன்.

உரை.—மெலிந்தர்னு மொருகணத்திற் போர்முகத்திலே மடிந்ததொழியச் சிதமிநின்ற தன்னாலுவகைத்தானைக ளறுப தினாயிரங்கூட்டினன். மீளவுமதிலே யிரண்டுசிறகுபோலவி ரண்டுவகுப்புபிரித்து வகுப்புக்கொருதலைவனாகப் போர்மு கத் திருபுலியொத்தவிரண்டுவீரரைப்போக்கிவிட்டானென்க. (௩௨)

இடச்சிறைத்தலைவனென் றிகுலனுய்வலம்
படச்சிறைத்தலைவனுய் நிகலற்பாத்திபன்
விடச்சிறைக்குயிர்நடு வணியில்வேய்ந்துதான்
றடச்சிறைத்திகிரிமேற் சினந்துதாக்கினன்.

உரை.—அங்ஙன மிடச்சிறை வகுப்புக்குத்தலைவனாக விகு லனென்பவன்போய் வலச்சிறைவகுப்புக் கிராசாநிகலனெ ன்பவனைவிட்டுத் தானிரண்டுசிறைக்குயிராக நடுவேயிருந்த பேரணியிலிருந்து வலியபறவைத்தேரின்மேன் மிகவும்வெகு ண்டுதாக்கினனென்க. (௩௩)

பெரியவர்கேண்மைபோற் பீடையிற்றிளைத்
தரியவைகண்டெழு மடவிற்சோசுவன்
கரியவல்லியானையர் கனையன்சச்சுத
னுரியிருவகுப்பில்விட் டுருமின்முட்டினன்.

உரை.—அதைக்கண்டவளவிலே பெரியோர்நட்புப்போ லத் துன்பத்திலேவளர்ந்துசெய்தற்கரியவற்றைக்கண்டு மே லுயர்ந்தெழும் வீரத்தையுடையசோசுவன் றானும்பிரித்த

ஷிரண்டுவகுப்புக்கிரண்டுமதயானைகள்மேலிருந்த கனையனெ
ன்பவனையுஞ் சச்சுதனென்பவனையும்விட்டுத் தானடுவினின்
றிடிபோலப் போரைத்துடங்கினனென்க. (௱௩௪)

கார்விளைமுழக்கமுங் காலொடுங்கட
லீர்விளைமுழக்கமு நிகரிலாதவெம்
போர்விளைமுழக்கமேற் பொருமிப்பொங்கவிற்
பார்விளைகலக்கநாற் றிசைபரந்ததே.

உரை.—அங்ஙனமிடித்தமேகமு மடித்தபெருங்காற்றும் பொங்கியகடலு மிவையெல்லாங்கூடிச் செய்யுமுழக்க நிகராமற் கொடியதாயெழுந்தபோர்முழக்கம்விம்மிப் பொங்கிப் பூவுலகினாற்றிசையுங் கலங்காநின்றனவென்க. (௱௩௫)

போர்முகங்காண்டலும் புனைந்தவாகையின்
சீர்முகங்கோடலுஞ் சேர்ந்தொன்றாய்ப்புக
ழார்முகத்தகுமறைக் கரசனன்றுதன்
கார்முகங்குனிமுகத் தெதிர்கண்டானரோ.

உரை.— இந்நாள்வரைக்கும் வேதத்தரசனாகியசோசுவன் றன்படையோடிறங்கிப் போர்முகத்தைக்காணலுஞ் சிறந்தவெற்றிமுகமெதிர்கொள்ளலு மொன்றாகி மிக்கபுகழ்ச்சியையுடையனா யன்றுதன்வில்லுவளைந்தமுகத்திற் கெதிர்கண்டு வெற்றியைக்கொள்வதற்குத் தாமதங்கண்டானென்க.
(௱௩௬)

ஆரிருணெடுமையா ராடூசல்போற்
பேரிருபடைதமுட் பிரிந்துசேர்ந்துவெம்
போரிருமுகமுறி வின்றிப்போர்செய்வா
ரோரிருபுனலென வுதிரமோடவே.

உரை.— அங்ஙன மிருள்நிறைந்த கூந்தலையுடையமகளிரூசலாடினாற்போல வவ்விருபெரும்படையுந் தம்முட்பின் வாங்கிப்பிரியவு மெதிர்த்துக்கலந்துதாக்கவு மிருமுகத்திற்கு முறிவின்றி யிரண்டாறாக வுதிரங்களோடும்படி பொருதாரென்க. (௱௩௭)

இடமுகத்திகுலனார்த் தெரித்தகணையிற்
றடமுகத்தெழும்படை தாக்குந்தன்மையிற்
படமுகத்தெதிர்த்தனர் முரியப்பார்த்துமால்
கடமுகத்திபத்துயர் கணையன்சீறினான்.

உரை.—அங்ஙன மிருமுகத்திற்றேர்வையின்றிப் போர்நடக்கும்பொழுதே அதுனிசதனிடச்சிறைக்குத் தலைவனாகவிட்டவிகுலன் மிகவுமுழங்கிச் சேனைகளுக்குச்சொன்னவுறுதிகளா லெரித்தகணைபோல வவர் வீரங்கொண்டு பொருதவிசையின்றன்மையைத் தாங்கமாட்டாமல் யூதர்படைமுறியத்துடங்கினது, அம்முகத்துப்படைக்குத்தலைவனாகிய முன்சொன்னகணைய னதைக்கண்டு மதயானைமேனின்று கோபித்துச் சீறினானென்க. (௱௫௮)

நானலங்குலநல நொனித்தபோர்நலந்
தானலம்படச்சொலித் தானைமீட்டுவேய்க்
கானலஞ்சினந்ததீக் கனன்றுமேய்ந்தென
வேனலம்பகைவனை வெம்பித்தூற்றினான்.

உரை.—அங்ஙனஞ் சீறினகணையன் றன்படைக்கு வேதத்துவேண்டிவந்தபோராகையின் றம்வேதத்தினன்மையும் யூதர்குலத்தின்மாட்சிமையு மந்நாள்வரைக்குந் தாஞ்செய்த போர்களின்சிறப்பு மவருக்குறுதியாம்படி தானேசொல்வி முறியாநின்றபடையைமீட்டான். மீளவு முலந்தமூங்கிற்காட்டிலே பெருந்தீக்கோபத்தோடு நுழைந்து எல்லாவற்றையு மெரித்தாற்போலத் தான்பகைவர்படையைச் சினந்துவெட்டியழித்தானென்க. (௱௫௯)

எரிகெடச்சினந்தவில் லெறிந்தமாரிமுன்
பரிகெடப்பரிபுனை பறந்ததேர்கெடக்
கரிகெடப்படையெலாங் கலங்கிப்போர்கெட
நரிகெடச்சினத்தரி நலத்திற்கோறினான்.

உரை.—அங்ஙனஞ் சொன்னகணையன் றீயினுஞ்சினந்த வில்லைவளைத்தெய்தவம்பின்மாரிமுகத்துக் குதிரைகளும்பூட்

டியகுதிரைவிசையாற் பறக்குந்தேர்களும் யானைகளுங்கெட்டுப் பகைவர்படையெல்லாங்கலங்கிமுறியும்படி நரிகள்கூட்டத்துட் சினந்துபுகுந்தசிங்கம்போல வெல்லாவற்றையும் வெட்டிக்கொல்வானென்க. (௱௪௰)

முரிந்ததன்றானையை முனிந்தும்மீட்டிலான்
கரிந்தகைகடித்திடித் திகுலன்காற்றென
வரிந்தவிற்கனையனை நோக்கிவந்தெதிர்
சொரிந்தமும்மதகரி தூண்டினனரோ.

உரை.—அங்ஙன முறிந்தோடினபகைவர்படையை யதற்குத்தலைவனாகியவிகுலன் மிகவுங்கோபித்தாலுமதைத்திருப்பமாட்டாமலோடினதினாற்கோபமிகுதியாற்றன்றன்கையைக்கடித்துமுழங்கித் தன்படையைமுறித்தகனையன்மேலே காற்றுபோலவோடித் தன்மதயானையைத்தூண்டி யெதிர்த்தானென்க. (௱௪௧)

வேறு.

பொன்னாணினர்மணிவில்லினர் பொறியம்பினர்புகையுஞ்
சொன்னாவினர்சயநெஞ்சினர் சுடுகண்ணினர்சுடர்பூண்
மின்னாறினர்புலைநாறின விறல்வாளினர்மதமார்
கொன்னாளியினிருமாவுயர் கொலையீரிமர்பொருதார்.

உரை.—அங்ஙனஞ் சோசுவன்படைத்தலைவனாகியகனையனும் அதுநீசதன்படைத்தலைவனாகிய இகுலனும் பொன்னான்முறுக்கியநாணியும் வயிரத்தாற்றிரட்டினவில்லு மக்கினியைப்பொழிந்தவம்புகளுங் கோபத்தாற்புகைந்தசொல்லு மிரும்போடொத்தகொடியநெஞ்சுந் தீப்பறியுங்கண்ணும் விளங்கியபூண்களால்மின்னொத்தவொளியும் புலால்நாறுதற்குக்காரணமாகியவெற்றிவாளு மிவையெல்லாந் தாழ்வின்றியிருவருடையராய்க் கொடியவிருயாளிகளோடொத்த மதத்தைப்பொழிந்தவிருயானைகளின்மேனின் றிரண்டியமனாப்போலப் போரைத்துடங்கினாரென்க. (௱௪௨)

சொல்வாயுகுசுடுதீயொடு சுளிகண்ணழ லுகநீர்ச்
செல்வாயுகுவிடியார்ப்பொடு சினவாயுயிருண நீள்
வில்வாயுகுகணைமாரியின் விரிபோரிருமுகமுங்
கொல்வாயுகுகறைதாறில கொடிதாயமரொழுமால்.

உரை.—அங்ஙன மிருவர்சினந்தசொல்லுங் கோபித்தக ண்ணுந்தீயாகப்பொங்காநிற்கப் பெய்யுமேகத்தினிடிமுழக் கம்போலத்தோன்றி நீண்டவிருவில்வளைந்தவா யுமிழ்ந்தவம் பின்மாரி சினந்தவாய்கொண் டுயிர்களையோயாம லுண்ட மையா லிருமுகத்துச்சேனையும் படுங்கொலைமிகுதியா லளவி ன்றியுதிரமோடும்படி கொடியபோரைச்செய்தாரென்க.
(௩௪௩)

தடவித்திரியயமத்கிணை தடவிற்குனிகணையன்
னடவித்திரிமதவத்தியி னடுமத்தகநுழையக்
கடவித்திரிகணைதைத்தன களியுற்றனனிகுலன்
சுடவிற்றிறல்கணைமட்டில தொடைவிட்டனனவனே.

உரை.—அங்ஙனங் கூற்றுப்போல வெல்லாவற்றையுந்த டவிக்கொண்டு வலிய வில்லையோயாமல்வளைத்தகணைய னடத் தியமதயானையின் மத்தகத்தினடுவே மூன்றம்புகள் கடாவித் தைத்ததனு லவற்றையெய்தவிகுலன் களியைக்கொண்டான், அ தைக்கண்டு கணையன் றன்வில்விசையினுற்சுடும்படி தொடை தொடையாயளவிறந்தவம்புகளையெய்தானென்க. (௩௪௪)

இசையுண்டுறுகணையும்பட விகுலன்றனுவொடியக்
கசையுண்டுறுமுரமும்பக வளவொன்றிலகணைகள்
விசையுண்டுறவளையம்பட விசையந்தனுவளைய
வசையுண்டுறவொலிபொங்கின மடிவின்முகமறவே.

உரை.—அங்ஙனங் கணையன் றொடையாய்விட்டவம்புகள் பட் டிகுலன்வில்லொடிந்ததே, அதைக்கண்டகணையன் கவசத் தையணிந்த பகைவன்மார்பினையும்பிளக்கும்படியெண்ணப் படாதவம்புகளைவிட் டாசைமிகுதியா லம்புகள் மிக்கவிசை கொள்ளும்படி வட்டமாகத்தன்வில்லைவளைத்தான், அங்ஙனம்

வளைத்தவளவிலே வசையாம்படி மிக்க வோசையெழும்பத் தன்வில்லுமுறிந்ததென்க. (௱௪௫)

பதமேற்படப்பவளத்தொடு பதிமுத்தெனவிருவ
ரிதமேற்படவெயிறுய்த்தன ரெறிபற்படையிலராய்க்
கதமேற்படவயரெட்டிரு கதையிட்டிருசனல்போன்
மதமேற்படவுமத்திகள் மறலைத்தமுள்விடுவார்.

உரை. — அங்ஙனங் கனையனு மிதலனும் வில்லிருவர்க்கு மொடிந்ததனால் மிகக்கோபித்து வரிசைபடப் பவளத்தின் மேலழுத்திய பலமுத்துகள்போல விருவர் தம்முதட்டின் மேற்றம்பல்லழுந்தும்படிவைத்து வாயைமடித்து மீளவு மெறியாயுதங்கள்வேறில்லாமையாற் கோபமிகும்படி யிருவரோறினயானைக் கிரண்டுநீண்டகதாயுதத்தைத்தந்து மதமிகு ந்திருநெருப்புபோலச்சீறிநின்றயானைகளைப் போருக்குவிட் டாரென்க. (௱௪௬)

இருகார்பலவெரியேறுக விளையாடினவெனவே
செருவார்களமிடையாடுக திரடியெழவலறிப்
பொருயானைகள்கதைவீசிய பொருவாவிசைபடலோ
டருகாயினபடையாவையு மடிநூறினபொருதே.

உரை. — இரண்டுமேகங்களெரியும் பலவிடிகளைவிட்டுச் சூழத்திரிந்து விளையாடினாற்போலப் போர்க்களமாடவுந் தீத்திரளெழும்பவு மலறிப்பொருத விண்டியானைகள் பிடித் தகதாயுதத்தை வீசினவிசையினா லருகிருந்தபடைகளெல்லா வற்றையு மடியோடுநூறியழித்தனவென்க. (௱௪௭)

திரிகின்றனவிருதீநிகர் திரிகின்றனவெவணு
மெரிகின்றனவெதிர்யாவது மிரிகின்றனவொவரும்
பிரிகின்றனவெதிர்சீறின பிளிர்கின்றனவழலே
விரிகின்றனகதையேய்மிசை விசைவெங்கதைபடவே.

உரை. — அங்ஙனமவ்விருயானைக ளிரண்டுதீப்போலத்தி ரிந்தவிடமெல்லா மெதிர்பட்டதெல்லாமெரிந்தன, மற்றெ

வ்ரு மிரிந்தோடினர், அவ்வியானைகள் தம்முள்பிரிவன வெறி ர்த்துச்சீறுவன கொப்பளித்தவழலைப்பரப்பின கதைமேற்க தைபடவென்க. (௩௪௮)

அழலக்கதையழலக்கரி யழலக்கரிமிசையார்
சுழலக்கதையிகுலற்கரி சுழல்தற்கதைபறிபட்
டெழவிட்டிசையுறமற்றது வெதிர்பட்டிடுகதைமேல்
விழமத்தகமடியிற்பக விழுமக்கரிபடவே.

உரை. — அங்ஙன மிருகதாயுதங்கள் தீப்பறிந்துவேகவு மிருயானைகள் பொருதுவேகவும் யானைமேலிருவர்சினந்து வேகவு மிருகதைகளைச்சுழற்றிப்பொருதுவருகையி லிகுல னேறினயானைபிடித்த கதாயுதம்பறிபட் டாகாயத்திலெழும் பிப்பறந்தது. மீளவுங் கனையன்யானை யெதிர்த்து விசையோ டுகதையாலடித்து மற்றயானையின் மத்தகநேராகப்பிளந்து இகுலன்யானை பட்டுவிழுந்ததென்க. (௩௪௯)

கிரிநின்றிழிபுலியென்றெரி கிளர்வெஞ்சினவிகுலன்
கரிநின்றிழிதரமின்றவழ் கனல்மண்டசியொடுபோய்த்
தெரிகின்றிழிகதைமுன்விழ வெயிறுள்ளுரமுருவிச்
சொரிகின்றிழிகறைசிந்துக சுழல்கொண்டெறிதருமே.

உரை. — அப்பொழு திகுலன் மலையினின் றுபாயும் புலி யைப்போலப் பட்டயானையினின்று வெகுஞ்சினத்தோடு நி லத்திற்பாய்ந்து மின்னியவாளையுருவியேந்திக் கனையன்மே லேபாய்தலிற் கனையனேறினயானைவீசின வழன்றகதைபட் டுவிழுந்தான், விழுந்தவுடனே யவ்வியானை யவனைமார்பிலே கொம்புகளுருவக்குத்தி யவனையெடுத்துச் சூழவிரத்தமழை சொரியும்படி சுழற்றியாகாயத்திலெறிந்ததென்க. (௩௫௰)

வேறு.

இடிமுழங்கினமுகிலொடுங்கட விணைமுழங்கினவொ
லியெனத் [தகாற்
துடிமுழங்கினதொனியெழுந்திவர் துறுவிவெஞ்சமர்பொரு

படிமுழங்கினவொலிநிகர்ந்தில பருபதங்களுமதிரவே
கடிமுழங்கினவலமுகஞ்சமர் கனல்சினந்தெனவிளையுமால்.

உரை.—அங்ஙன மிடமுகத்திலே யிகுலன்படவுங் கனைய
ன்செயங்கொள்ளவு மிடித்தமேகமு மெழுந்தகடலுங்கூடி
முழங்கினாற்போலப் பலவாச்சியங்கள்முழங்கிச் சொன்ன
படிபோராகையில் வலமுகத்திலும் பூவுலகிலொவ்வாத முழ
க்கத்தோடு பெருமலைகளுமதிரும்படி நெருப்புசினந்தாற்
போலக் கொடிதாய்ப்போர்விளைந்ததென்க. (௩௫௧)

கரியதட்டியசினமிரட்டிய கடியசச்சுதனிடைவிடா
தெரியதட்டியகொடியவத்திர மிடையிடைக்களவிலவிடப்
பரியதட்டியவிரதவெற்புகள் பரிகளத்திகள்சிதறவெய்
யரியதட்டியகரியினத்தெதி ரரிகருட்குறிமுரிவரால்.

உரை.—அம்முகத்திலே சோசுவன்விட்ட படைத்தலைவனா
கியசச்சுதன் றானேறினயானையையதட்டிச் சினந்துமுழங்கி
யெரியைக்கோபித்தகொடியவம்புகளை யிடைக்கிடைவிடாம
லளவின்றியெய்தவிற் றேர்களுங் குதிரைகளும்யானைகளுஞ்சி
தறிச் சிங்கஞ்சினந்ததட்டியமுகத்தில் யானைகள்முறிந்தன த
ன்மையா லெதிர்ந்தபகைவரெல்லாரும் வெருவிமுறிந்தாரெ
ன்க. (௩௫௨)

பணையிலாடியபரிகள்யானைகள் பரவுதேர்களுமிவை
யெலா
மிணையிலாதறவுயருவாமலை யிடையிலோடியவளவிலாக் [ண்
கணையின்வாரிமுனடையல்சாய்வன கறையளாவியபிணமிர
டணையினேறினகுருதிநீர்நிறை யருவியோடினவெவணுமே.

உரை.—அங்ஙனஞ் சச்சுதன்செய்யும் போர்முகத்துப்
பந்தியிலுமாடாநின்ற புரவிகளுமதயானைகளும் பரவினதே
ர்களு முன்சிதறிப்பின்பழியும்படி யவனேறினயானையாகிய
மலையினின்றோடு மவனெய்த வளவிறந்தவம்புகளாகியவெள்
ளத்தின்முன் னெதிர்ந்ததெல்லாஞ்சாய்ந்துவிழுந்தன, மீளவு
மிரத்தத்தைச்சிந்தியபிணங்க ளிருகரைபோலக்குவியாநின்ற
திலே நிறைந்தவாறாகக்குருதியோடினதென்க. (௩௫௩)

எதிரெழுந்துயரிரதநின்றம ரிடவுடன்றஊநிகலனுங்
கதிரெழுந்தெரிகனலழுந்திய கதமலிந்தடுமுழுவைபாய்ந்
ததிரெழுந்துயர்வரைநடுங்குப வரிதுடன்றெனவிடியிடித்
துதிரெழுந்தழலுமிழ்சரங்கொடு வுயிர்விழுங்கினனெவணு
மே.

உரை.—எதிர்முகத்தி லதுனிசதன்படைத்தலைவனாகியநிகலனு முயர்ந்ததேர்மேனின்று கொழுந்துவிட்டெரியுங் கனலழுந்தும்படி கதத்தோடுயிர்களைக்கொல்லுங் கொடியவேங்கைபாய்ந்து மலையுமதிர்ந்துநடுங்கும்படி யரிதாய்ப்பொருதாற்போலத்தானுமிடியெனவிடித்துமுழங்கியழலையுதிர்த்துமிழ்ந்தவம்புகளைவிட் டெங்கு மட்டில்லாதவுயிர்களை விழுங்காநின்றானென்க. (௱௫௪)

சொரியிரத்தமொடெரிபிலிற்றிய சுளியெயிற்றடலரி
ருமோ
ரரியிரட்டியவமர்முகத்தெதி ரழலுடற்றியவதைவளர்
வரியெதிர்த்தெனவலியசச்சுதன் வருமுகத்தெதிர்நிகலன்வந்
தெரியெரித்தனவுலவுமுட்கழை யிருசரத்தெனவமர்செய்
வார்.

உரை.—அங்ஙனமிருவர் பொருதுவருகையிலிரத்தமுமழலும் புறப்படச்சொரியுமெயிற்றோடிராநின்றசிங்கத்தின்மேற்கனன்றகோபத்தின்மிக்க வேங்கையெதிர்த்தாற்போல வலியசச்சுதன்மேலே நிகலனெதிர்த் துலர்ந்தவிரண்டுமூங்கிற்கானத்தையிரண்டுநெருப்பு புகுந்தெரித்தாற்போல விருவரும்பொருதாரென்க. (௱௫௫)

இருமுகத்தெதிர்படைகள்சிந்திட விருவர்வெஞ்சமர்
பெருகவின்
வருமுகத்தெதிர்நிகலனின்றெறி வளையுடன்றுமியிடிமுகிற்
கருமுகத்திடைமதிநுழைத்தென வெதிரவன்கடவியகரி
செருமுகத்திடையுரநுழைந்துயிர்சிதையவுண்டதுகிரியே.

உரை.—அங்ஙனமிருமுகத்துப்படைகள் கெட்டுமுறியும்படி யிருவர்செய்யும்வெம்போர்பெருகிவருகையி னிகலனெ

திர்வந்து தானெறிந்தசக்கராயுதங் கோபித்தாற்போலவந்து இடித்தகரியமேகத்துள்ளே பூரணவட்டச்சந்திர னுழைந்ததுபோல வெதிராகச்சச்சுதனடத்தினயானை பொருதுவருகையி லதின்மார்பிற்பட்டுருவி யுண் ணுழைந்தசக்கர மதினுழிழையுண்டதென்க. (௱௫௬)

சூரியவுச்சியமுகிலின்மின்னொடு கனலுமிழ்ந்திழியிடி
யெனு
வரியசச்சுதனிபமிழிந்தழ லிசுழன்றவனிரதமே [லா
லரியநச்சரவெனவிவர்ந்தவ னுடல்பிளந்தெதிர்படையெ
யிரியவச்சமோடுளமுடன்றவ னிரதமூர்ந்தினனடவினான்.

உரை.—அங்ஙனம்யானைகெட்டுவிழுந்ததனாற் கரியமேகத்தினின்று மின்னலோடிடிகனன் றுபாய்ந்தாற்போல வீரசச்சுதனெரிவாளைச்சுழற்றிக் கரியயானையினின்றுபாய்ந்து நிகலனிருந்ததேரின்மேற் பறவைப்பாம்புபோல வெய்தெனக்குதித்தேறி யவனையிரண்டாகப்பிளந்துவெட்டி யப்பாலெதிர்ந்து பகைவரெல்லாருமஞ்சி முறியும்படி யத்தேர்மேலிருந்து நடத்தினானென்க. (௱௫௭)

வேறு.

இருமுகத்தினைவிவரவினடுவுள வெரிமுகத்திருநிருபரு
மெதிரெதிர்
பொருமுகத்தெழுமுரசொலிவளையொலி புரவியிக்கொலிக
ரியொலிகுயவொலி
செருமுகத்தினைவமருளியவெருவொடு சிலைவளைத்தொலியெழ
விழுமழையொலி
யொருமுகத்தினு நிகரிலமுரிவில வுளமுகத்தடையளவிலவ
மர்செய்வார்.

உரை.—சொன்னபடி யிருசிறகிலுள்ள படைமுகத்திற் போராகையி னடுவேநின்றபேரணியிலே சோசுவனுமதுனிசதனு மென்னுமிரண்டரசர் தம்முள்ளெதிர்த்து முரசுஞ்சங்கு மற்றப்படைவாச்சியங்களோடுமுழங்காநிற்கப் பாய்ந்

தகுதிரைகளு மதம்பொழிந்தயானைகளுஞ் சுழன்றுதிரிந்த தேர்களு மிவையெல்லாமுழங்கி யொருங்குடன்கூடி வெருவ்னையிடாநிற்க வோயாமல்வளைத்தவில்வினோசையும் விவ்வினின்றோயாமற்பொழிந்த வம்பின்மழையோசையு மிகாநிற்க் விருமுகத்திலொப்புமின்றி முறிவுமின்றிச் சொல்லுந்தன்மைத் தளவுமின்றி யிருவர்பொருதாரென்க. (௱௫௮)

சுழலெழத்திரியிடிகளொடிருமுகில் சுளிமுகத்தெனவ
ரவிருவிரதமு [மழைவிழப்
மழலெழக்குனியிருசிலைமுடிவில வழல்பணித்தெனவிடுகணை
புழலெழப்படுகணிகணைவழிவழி புனலெனக்கறைகுமிழிக
ளெழவிழ
நிழலெழப்புயலொடுகுயிலினமென நிரைநிரைத்தெதிருப
டைமெலியவே.

உரை. — அங்ஙன மவ்வரசரிருவரு மேறினவிருதேருஞ் சுழன் றிடிகளொடுதிரியுமிருமேகம்போலத்தோன்றித் திரியாநிற்க, அவரிருவரழல்மேற்பறியும்படி விசையோடுவளைத் தவிருவில்லு முடிவின்றியழலைப்பெய்தாற்போல விட்டெய் தவம்பின்மழைவிழுதலிற் றுளைத்தபுண்ணும்படிபட்டுப் புதைத்தவம்புகள்வழியாகவழிந்த புனல்போல வுதிரங்குமிழிகளோடோடாநிற்க விருளைக்கொண்டுவிடு மேகமுகத்திற் குயில்கள்மெலிந்தாற்போல விருவர்சிலையாகிய விருமேகமுகத்திலணியணியா யெதிர்த்தபடைகள் பட்டுமெலிவனவென்க. (௱௫௯)

வலமிடத்துறும்விசையொடுவளியென வருமிடத்தெழு
மொலியொடுகடலென
நிலமிடத்திடும்வெருவொடுமிடியென நிறைபணித்திடுகணை
யொடுமுகிலெனப்
பலவிடத்திடுகொலையொடுநமனெனப் படைமுகத்திவரிருவ
ருநெடிதமர்
சலமிடத்தடும்வினையெனமலியன சவமிறித்தெழுமலைமிசை
மலைகுவார்.

உரை.—அங்ஙனமிருவர்தேர்மேனின்று வலத்திலுமிடத்திலும்வரும்விசையினாற் காற்றுப்போலவு மவர்வருமிடத்தெழுந்தவோசையாற் கடல்போலவு மெங்கு மிட்டவச்சத்தாவிடிபோலவு மோயாமலெய்தவம்புகளான் மேகம்போலவுஞ் செய்யுங்கொலையினா லியமன்போலவு மிருவர்போர்முகத்திற்றோன்றித் தணியாமுனிவோடுயிரைக்கொல்லுந் தீவினைபோலத் தாமுநிறையக்குவித்த பிணமலையை மிதித்தேறிப்போர்செய்வாரென்க. (௱௬௰)

வெளிமுகத்தெழுகணைமழையிருளிட விளிமுகத்தெழு
      கொடிதொலிசெவியட [வருஞ்
வளிமுகத்தெழுநதிபதியலையென வதையுடற்றியநரபதியிரு
சுளிமுகத்தெழுவயவருமுரிவில துணையறச்சமர்பொருதவி
      னொருவன்வந் [ன்னலறினான்.
திளிமுகத்தெழுசிறைமுரிவனவென விளமதிப்பிறைமுடியி

உரை.—அங்ஙன மாகாயத்தின்மொய்த்தவம்புகள் மேகம்போல விருளைச்செய்யவுஞ் சாவாரிடத்தெழுந்தவோசையிருசெவியையடைக்கவும் போராகிக் காற்றுமுகத்திலெழுந்தகடலலைபோல வரசரிருவர்முகத்துமுன்னேநின்ற படைவீரருமுறியாம லொப்பில்லாத போரைச்செய்துவருகையிலொருவன்வந்து இருசிறகிலிருந்தபடைகள் கெட்டுமுறிந்தனவென்றுசொல்ல விருதாகவிளம்பிறைபதித்தமுடியையுள்ளவதுனீசத னார்தலறிக்கோபித்தானென்க. (௱௬௧)

குதமிகப்படரிரதமுமதிர்குப கழல்புடைத்தன்மழவெ
      ழுவளவறப் [ளையுமுன்
பதமிகத்தனுவளையவுமிருதுணி படமறுத்தடலொருசிலைவ
சதமிகப்பதிமறையாசிடுகணை சுடுதிதைத்தனவளவிலவுட
      லெலா. [கருவான்.
மதமிகக்கரியெனவொலியிடவவன் மருளிமுட்கிரிகிடியுருநி

உரை. — அங்ஙனமிருபக்கத்துந் தனதிருபடைமுறிந்ததனாற் கோபமிகுதியா லதுனீசதன் றன்னிரதமதிரவு மழல்

ஞேற்பறியவும் வலியகாலாற் றேணாப்புடைத்து மட்டின்றி வளைத்தவில்விருதுண்டாகவொடியவும் வேறொரு வலியவில் லையெடுத்துப்பூட்டி வளையாமுன்னே யாண்டவன்றந்தவே தத்திற் கரசனாகியசோசுவ னொருசதத்திலுமிக்கவம்புகளை யெய்தான், எய்தவம்புகள் துனீசதனுடலெல்லாந்தையாநிற் க வவன்மதயானையிலுஞ் சீறிமுழங்கி யொருமுட்பன்றியை ப்போலத்தோன்றி நின்றானென்க. (௱௬௨)

குருதிமிக்குகமலைமிசைதுகிரது கொடிமுளைத்தெனவு
யரியவிரதமேற் [மூ
கருதிமிக்குநிலைபலபயனில கதறிநிற்பவன்விழிவழியழலெ
விருதினாய்த்தனபிறையுனுமரவென விடுசரத்தொடுமறவி
ழமறுகணை [றமுணரிலைறவனே.
பருதிமொய்க்கடல்முழுகெனவொளிமுடி பரியவிட்டனன

உரை.— மீள்வுமுடலெல்லாந் தைத்தவம்புகளைப் பறித் தோடிய விரத்தமிகுதியால் மலைமேற் பவளக்கொடிமுளைத் ததுபோல வுயரிரதத்தின்மே லதுனீசதன்றோன்றித் தானி னைத்தபோர்வகைபலவு முதவாமைகண்டு கண்வழியாகத்தீ யெழும்படி கோபித்துமுழங்காநிற்க வறத்தினையுணர்ந்து போர்செய்யுமாசனாகியசோசுவன் விட்டவம்பா லவன்வி ருதாகமுடிமேல்வைத்தபிறை பாம்புவந்துண்டாற்போல வ ற்றுவிழுந்தது. மீள்வுஞ் சூரியன்கடலிலேமுழுகினாற்போல வதுனீசதன்சூழ்ந்தமுடி கவிழ்ந்துவிழும்படி சோசுவன் ம றுகணையெய்தானென்க. (௱௬௩)

பிறைபுதைத்தனமுடிவிழவுளமறு பிணிபுதைத்தனவி
றையவனலறிநன் [வெகுளியின்
னறைபுதைத்தனசிகழிகைமெலிதா நனியுரத்தழலெழமிகு
கறைபுதைத்தனவிடநுனிவசிமிகு கணையெடுத்துனதுயர்மு
டிபுனைவலென்
றறைபுதைத்தனமுகிலெனவுருமிவில் லுடல்புதைத்தெழவி
சையினொடெழுகினான்.

உரை.— அங்ஙன மதுனீசதன்பிறைபதித்திருந்த தன்முடியையிழந்ததனுன் மனதிற்புதைத்ததுன்பம் பொறுக்கமாட்டாமலலறியணிந்தவாசமாலை தீந்துவாடும்படி நெஞ்சினின்றழல்புறப்படக்கோபித்து இரத்தமுநஞ்சுந்துவைத்த நுனிக்கூர்மையின் மிக்க வோரம்பினையெடுத் தினிநா னுன்முடியைப்புனைவேனென்று துளிமேகமிடித்தாற்போலமுழங்கி வில்லுக்குள்ளே யம்பினுனிபுதைத்துமறையும்படி மிகவும்வலித்துவாங்கி விசையோடு புறப்படவிட்டானென்க.

(௱௬௪)

தினையுதைத்தனதனு முழுதகல்முனர் சரமுதைத்தறவெ
திர்சரமெழுதினன் [புனைகெனமறு
முனையுதைத்தனவரியெனவெதிரிலன் மொழிமறுத்திதுமுடி
கனையுதைத்தனபிறையெனவளைவுள கணையுதைத்திட நுத
லொடுதலைபக [னபடைகளே.
வினையுதைத்தனவுயிர்விடுமிறையவன் விழவுதைத்தெனமுரிவ

உரை.—அங்ஙன மதுனீசதன் விசையோடெய்தவம்பு தன்னையுதைத்துவிட்ட வில்லின்புருவத்தை முழுதும்விட்டுப்பிரியுமுன்னே யவ்வம்பினையுதைத்தழிக்கும்படி போரையுதைத்தசிங்கம்போல வெதிரில்லாதசோசுவ னெதிராகவம்பினைவிட்டான். மீளவு மவன்முன்சொன்னதற்கு மறுமொழியா யிது முடியாகப்புனைவாயென்று பிறைபோலவளைத்த வோரம்பினை யொலியெழும்படி விசையோடெய்தவி னதுனீசதன்றலை நெற்றிக்குநே ரிரண்டாகப்பிளந்து அவன்றன்வினையா லுதைக்கப்பட்டுயிரைவிட்டுவிழுந்தான், அவன்படைகளுமுதைக்கப்பட்டாற்போல முறிந்தோடினவென்க.

(௱௬௫)

உழையெனப்படைமுரிதரவரியென வுடறிமொய்த்த
னமறையினரிடையிடை
மழையெனத்தொடுகணையொடுபலபடை வழிவகுத்துயிரள
விலவனிலமுன்
றழையெனப்படவுதிரமுமலையொடு தகையவிட்டிசையிறை
யவன்வெகுளிமுன்

பிழையெனப்படைவகைவகைமடிவன பெருகுதற்கொருநிக
ரிடவளவதோ.

உரை. — அங்ஙன மான்கூட்டம்போலப் பகைவர் படை முறிதலிற் சிங்கங்கள்போல வேதத்தாராகியயூதர்திரண்டு சீறி யிடைக்கிடைவிட்டவம்புமாரியும் வீசினபலவாயுதங்களுந் தந்தவழியாகப் பெருங்காற்றுக்குமுன்னே தழைகளுதிர்ந்தாற்போல வளவின்றிப்பலவுயிர்கள்பட்டுவிழவுங் குருதிகளலைகொண்டு மலிந்தோடவும் வான்கடவுட்டிருமுகத்திற் குற்றங்கள்கெட்டழிவதுபோலப் பகைவருள்ள நால்வகைப்படைகள்கெட்டமிகுதியை யுவமித்துரைக்கும்படி யளவுள்ளதல்லதென்க. (௱௬௬)

வினைமுடிக்கியபகையவரிரிதர விசையமுற்றனகளியெ
ழுமிறையவன் [மரிதமர்
முனைமுடிக்கியதமரமர்தொடர்கில முனைநிறுத்தியபொழுதினு
தனைமுடிக்கியகடவுடன்வயவலி தருசினத்திறமறிகுவர்வெரு
வுறிக் [லைசெய்தான்.
கனைமுடிக்கியகடலுடையகல்புவி கடிநடுக்குறவிரிபடைகொ

உரை. — தம்வினைகளான் முடிக்கப்பட்டபகைவ ரங்ஙன மோடவின் வெற்றியைக்கொண்டு களிகூர்ந் துள்ளத்திலெழுந்தசோசுவன் பகைவரைவெட்டி முடிக்கின தன்படையினித்தொடராதபடி போரைநிறுத்தினான். அங்ஙன மவன்போர் நிறுத்தினகாலத்துங் கடவுடானே தனியேபோரைத்தொடங்கித் தன்னளவில்லாதவல்லமையுள்ள கோபத்தின்றன்மையைக் கண்டறிந்தவரெல்லாரும்வெருவி முழங்கினகடலையுடைத்த வகன்றபூவுலகெல்லா மிகநடுங்கவுந் தானேயோடினபகைவர் படையைக்கொன்றானென்க. (௱௬௭)

வேறு.

முரிதருபகையவர் முழுதடவவர்மிசை
விரிதருவலைகவிழ் வனவெனவெகுளிடி
யெரிதருகருமுகி லிடையிடையொருகணம்
பரிதருமுனருயர் பரவினவெளியெலாம்.

உரை.—கடவுளெங்஖ன நந்தனிப்போர்செய் துபகைவரைக் கொன்றுனென்னில்-முதிர்ந்தோடியபகைவரை யொருங்குட ண்கொல்லும்படி யவர்மே லகன்றவலையைக்கவிழ்த்தாற்போ ல வெகுண்டவிடிகளால்வெந்த கரியமேகங்களெங்கு மொரு கணமுடியுமுன்னே யாகாயத்திற்பரந்தனவென்க. (ரசுஅ)

மூனைமுதிர்படையெழ முரசதிரொலியெனச்
சினைமுதிரிடியொடு செருமுதிர்சினமெழக்
கனைமுதிரரவொடு கருமுகில்பரவலின்
வினைமுதிருளமென வெளிமுதிரிருளதே.

உரை.—போர்முகத்துப் படையெழும்படி முரசுமுழங் கினாற்போலக் கருவாகக்கொண்ட விடிகளோடு சினமெழுந் து போர்முற்றி மிக்கதிர்ந்தமுழக்கத்தோடு கரியமேகங்கள் பரந்ததனுற் றீவினைநிறைந்தமனம்போல வெங்கு மிருண்ட தென்க. (ரசுகூ)

முடியொடுமுடிபட வரைமுனைவனவென
விடியொடுசினமுதி ரெரிமுகிலெதிர்பொரும்
படியொடுபிரிபரு பதமெனவசனியின்
வெடியொடுமழையென விழுவனவுபலமே.

உரை.— பலமலைக ளுச்சியோடுச்சிபடும்படி தம்முட் பொருதாற்போல விடிகளையிடித்த சினத்தெரிந்தமேகங்கட ம்முள்ளெதிர்த்துப் பொருந்தன்மையா லம்மலைக டம்முள் மோதித் துண்டாகவொடிந்துதிர்ந்தாற்போல விடிமுழக்கத் தோடுமழையாகத்திரண்டபெருங்கல்லுக்கள் பெய்தனவெ ன்க. (ரஎ0)

தூறுவனவலியகல் துகளெழவிரதமு
மிறுவனகரிபரி யினமினமடிவன
வறுவனபடையின மழிவனர்பகையவ
ருறுவனவிடிகளொ டுடனவையெரிவன.

உரை.— அங்஖னநெருங்கிப் பலத்தகல்லின்மழை பெய் தலாற் றூளாகத்தேர்களொடிந்தன; யானைகளுங்குதிரைகளு

மொழிந்தன, பலவாயுதங்களெல்லாமுறிந்தன, பகைவருங் கெட்டழிந்தனர். மீளவும் விழுந்தவிடிகளாலவையெல்லாமெரிந்தனவென்க. (௱௭௧)

கடியொலியெழவிழு கலினுறைபடுமொலி
யிடியொலியிடியினு மிறுமிரதமதொலி
மடிகரியெழுமொலி மடிபரியெழுமொலி
முடிவிலவிளிகுவர் முறிரொலிநிகரில.

உரை.— அங்ஙன மிக்கவோசையோடு விழுங்கல்லின்மழைகீழேபடுதலினெழும்புமோசையு மிடிகளிடித்தவோசையு மிடியினு மொடியுந்தேர்களினோசையும் யானைகளுங்குதிரைகளுஞ் சாதலினிடுமோசையு மட்டின்றி யெங்குஞ்சாவாரலறிவிடுமோசையு மிவையெல்லா மொருங்குடன்கூடியொப்பின்றித் திரண்டுமுழங்கினவென்க. (௱௭௨)

சிந்தினசிலைமழை சிந்தினசிலைகணை
சிந்தினபலபடை சிந்தினகரதலஞ்
சிந்தினவிருகழல் சிந்தினதலைமுடி
சிந்தினவுடலுயிர் சிந்தெரிநரகுற.

உரை.—அங்ஙனங் கல்லின்மழைபெய்தலால் வில்லுகளுமம்புகளும் பலவாயுதங்களுங்கெட்டுக் கையுங் காலுந்தலையும்வேறுக வுடல்களழிந்து மெய்பானவேதத்தைப் பகைத்தவராகையி லவருயிர்கள் தீக்கடலாகியநரகத்தில் விழுந்தனவென்க. (௱௭௩)

தப்பிலகளிறுக டப்பிலபுரவிக
டப்பிலவடையவர் தப்பிலதலையவர்
தப்பிலகுருசிலர் தப்பிலவனையவர்
தப்பிலவெமதிறை தப்பிலவமர்செய.

உரை.— அங்ஙனந் தப்பாதவல்லமையுடையவெமதுகடவுடானே தப்பாதபோர்செய்தமையால் யானைகளும்புரவிகளும் வீரரும் படைத்தலைவருமரசரு மற்றெவருந் தப்பாமலழிந்தாரென்க. (௱௭௪)

வானவரானவரு மலைமலியுலகுள
வேனையரானவரு மிதையமுள்வெருவுறீ
யானவைபுரிதலொ டளவிலிறையவன்
மேனிவாருமிடல் விழைவொடுபுகழுவர்.

உரை.—அங்ஙனம் வானுலகத்தோரும் பூவுலகத்தோரு மனைவரு முள்வெருவி யன்றங்கே யானதெல்லாவற்றையு மறிந்தளவிறந்தகடவுளுடைய மேலானவரியவல்லமையையா சையோடு துதியாநின்றாரென்க. (௱௭௫)

வில்லொடுவயவரு மிடவிடுமரல
தெவ்வொடுபிரிகில விரவியுமமர்செய
வல்லொடுதவிரின சிலவுயிர்மடிதரக்
கல்லொடுமழைபொரு திறையதுகதமென.

உரை.—இவ்வெற்றிவகையறிந்தோ ரெங்ஙனந் துதிப்பரென்னில் வில்வின்வல்லார்செய்த போரன்றிச் சூரியனுந்தன்கதிர்பெயராம லொருநாளுநின்றுபோர்செய்ய மீளவுமிவர் போரின்மடியாமற் றப்பினசிலவுயிர்கள் தவிராமற்கெடும்படி கல்லின்மாரியைப்பெய்த மேகங்களும் பொருதலாலாண்டவன்கோபமிகுதிதோன்றிற்றென்பாரென்க. (௱௭௬)

ஞைகுவருமொருசிலை கணையெழவளைமுகத்
தைவருமொருபக லழியினபினரினி
மொய்வருசினமொடு முதல்வனமர்செயி
னுய்வருமெவரென வெருவுறியுருகுவார்.

உரை.—சோசுவன்றன்கைப்பிடித்த வொருவில்லோசையெழும்படி வளைந்தமுகத் தரசரைவரு மொருநாளெல்லையினழிந்திறந்தபின்ன ரினிப் பெரிதுசினந்தகடவுள் போர்செய்யுங்காலத் தெவர்வாழ்வரென் றுவெருவி யுள்ளுருகாநின்றாரென்க. (௱௭௭)

வலியவர்பகைமுனர் மடிவிலருளொனின்
மெலியவரெதிரினும் வெகுளியபலநவை
மலியவரெனினிறை வயவமர்சினமுனர்
பொலியவரெவரென வளவில்புகழுவர்.

உரை.—வல்லமைகொண்ட பகைவரெதிர்த்த போர்முகத்துக் கெடாமலுள்ளவராயினு மெலிந்தவர்போர்செய்யுங்காலத்துந் தாம் பலதீவினையுள்ளவராயி னப்பொழுதாண்டவனும் வல்லமையொத்த சினங்கொண்டுபோர்செய்தமையாற் கெடாமற் பொலிவாகநிற்ப வல்லவரொவருண்டோ வில்லையென் றளவின் றிக்கடவுளைத் துதியாநின்றாரென்க. (௱௭௮)

வேறு.

ஊன்முகஞ்செறித்தவெம்போ ருடன்றிவையனைத்து
ஞ்செய்தோன்
வான்முகஞ்செறித்தவாழ்க்கை வகுப்பவீங்கிளவலாகத்
தேன்முகஞ்செறித்தபைம்பூந் திருமுகைமுகத்திற்றோன்றித்
தான்முகஞ்செறித்தவன்பின் றகவுகுமிவன்றானென்றான்.

உரை.—அங்ஙன மூனிறைப்பொழிதற்குக் காரணமாகிய சொன்னவெம்போர்முகத் திவையெல்லாவற்றையுஞ்செய்த நாதனாரென்னில் வானத்திலுள்ளவழியாதவாழ்க்கை பூவுலகினோர்க்கிடும்படி யிங்கேகுழந்தைவடிவாகத் தேனைப்பொழிந்த பூவரும்பின்முகத்தோடுதோன்றித் தானேதன்முகத்திலேயளவில்லாதவன்பின்றயைக்காட்டாநிற்கு மிவன்றானேயென்றான் மிக்கயேலென்க. (௱௭௯)

புண்கனிந்தாற்றினாற்போற் புன்கணீத்துவப்பச்சூசை
பண்கனிந்திசைத்ததேபோற் பாகினுமினியசொல்லாற் [ல்
கண்கனிந்துவப்பத்தெள்ளார் கதிர்க்கிழிபொறித்ததேபோ
விண்கனிந்தாயகரதை விரித்தடிபணிந்தான்வானோன்.

உரை.— அங்ஙனம் புண்ணோகாமலினிதாயாற்றினாற்போல்ச் சூசையுள்ளடைந்ததுன்பத்தைத்துடைத்து மனமலர்ந்துவக்கும்படி வீணைபேசினாற்போலப் பாகினுமினியசொல்லைக்கொண்டு கண்ணுங்களிகூரக் கதிரைத்தெளித்துச் சித்திரத்தையெழுதிக்காட்டினாற்போல முன்னாளிலே வானுலகமகிழும்படி யாயவிச்செய்தியைமிகவும்விரிவாகச்சொல்லி வானோனாகியமிக்கயேல் திருக்குமாரன்பாதத்தை வணங்கினானென்க. (௱௮௰)

நாமஞ்சாலுயர்ந்தவீர நாயகனெளியகோலங்
காமஞ்சாலுருத்தவன்பிற் கனிந்தெடுத்துதித்தபாலால்
வாமஞ்சால்பொறித்தபைம்பூ மலரடிவணங்கியுள்ளத்
தேமஞ்சாலின்பமூழ்கி யிருவரும்வியப்பின்மிக்கார்.

உரை.—அங்ஙனம் பேர்பெற்றுயர்ந்த புகழுடையவீரமுள்ள நாயக னிந்நாளி லெளியகோலத்தையெடுத்து நம்மேல் வைத்தவாசையின் மிக்கவன்பினாற்கனிந்து மனிதனாய்ப்பிறந்ததன்மையையாராய்ந்து கதிராலெழுதப்பட்டமலர்ப்பாதத்தைவணங்கி மரியுஞ்சூசையுமென் றிருவர் மிக்கவின்பக்கடல்மூழ்கி யதிசயப்படாநின்றாரென்க. (௱௮௧)

மருமணித்தொடையாமேந்தி மரகதமணித்தாள்வைத்
பருமணிக்காந்தட்கையாற் பயிரளிகிளைபோற்கீதந் [த
தருமணிநரம்பின்மேலெண் டகுமிசைகிளப்பவானோர்
திருமணிச்சாயற்றாய்தன் சிறுவனைப்பாடினாளே.

உரை.— அங்ஙன மிருவருவந்ததன்மைத்துச் சூழநின்ற வானவர் வாசமணிப்பூமாலையணிந்த வீணைகளையெடுத்தேந்தி மரகதமணியொத்ததாளின்மேற்பூத்த வழகிற்பெரிய கார்த்திகைப்பூவொத்தகைகளா லினியகுரல்வண்டினங்க ளொத்தனவாய்ச் சங்கீதந்தருதற்குக்காரணமாகிய பலமணி நரம்புகளின்மே லெட்டுவகையி னிசைகள் கிளம்பும்படிவாசியாநிற்பத் திருமணிச்சாயலாய்நின்ற தாயாகியமரியென்பவள் தன்றிருக்குமாரனைநோக்கிப்பாடினாளென்க. (எண்வகை யிசைகளாவன: படர்த லுலாவல் வடித்த லுந்த லுறழ்த லுருட்ட றெருட்ட லள்ளலென வெண்வகை யிசைகளென்க.)
(௱௮௨)

வேறு.

மருடருவலியுருவே மருளறுசினவுருவே
யருடருதயையுருவே யளவறுதிருவுருவே
தெருடருகலையுருவே செயிரறுமனுவுருவே
பொருடருமணியுருவே பொழிமணவடிதொழுதேன்.

உரை.—பிறரஞ்சிமயங்குதற்குக் காரணமாகியவல்லமையுடையோனே, தான்மபக்கமின்றிச் சினத்தைக்கொண்டோனே, அருளின்மிக்க தயையுருவோனே, அளவிறந்தசெல்வத்தின்மிக்கோனே, தெளிந்தகல்வியினுருவே, பூவுலகங்கொண்ட பாவவினையறும்படி மனுக்கோலத்தையெடுத்தோனே, பொன்னிற்பதித்த மாணிக்கவடிவோனே, உனதுவாசமலர்ப்பாதத்தைத்தொழுதேனென்றுளென்க. (௱௮௩)

உரையிலகலைநிலையே யுயரறமடையுரையே
கரையிலபடர்கடலே·கதியுயிர்பெறுகரையே
வரையிலசுகநிலையே வளர்தவமடைவரையே
புரையிலமனுமகனே பொதிமலரடிதொழுதேன்.

உரை.—காதிற்குப் புலனாகிய வொலியைக்கொண்ட வுரையொன்றின்றிக் கல்வியெல்லாமுணர்த்துநிலையே! உயர்ந்தவறமொன்றேயடையுமுரையே, கரையில்லாத சகலநன்மைநிறைந்தகடலே, கதியிற்சென்றவுயிர்களடையுங்கரையே, மட்டில்லாதசுகவானந்தநிலையே, வளர்ந்ததவமொன்றேசேர்ந்தடையுமலையே, ஒப்பில்லாததன்மைத்து மனுமகனானவனே, உனது பொதியாய்மலர்ந்ததிருப்பாதத்தைத் தொழுதேனென்றுளென்க. (௱௮௪)

மருமலிமலர்நிழலே மறைமலியுயர்பயனே
திருமலிகாரமுகிலே சிவமலிதனிமுதலே
யிருமலியுலகுளரோ யிணரொடுதொழுமடியே
குருமலியறநெறியே கொழுமலரடிதொழுதேன்.

உரை.—வாசமலர்ச்சோலையொத்த வருளா னிழல்செய்தளித்தவனே, வேதநமக்குப்பயன்றரும்படிவந்தவனே, செல்வநன்மைகளைப்பொழியு மேகமொத்த கையுள்ளவனே, மோட்சத்தைத்தருந் தனிமுதலோனே, வானுலகத்தோரும் பூவுலகத்தோரு மலரைச்சாற்றிவணங்கப்பட்ட திருப்பாதத்தையுடையோனே, ஈங்கவதரித்துக் குருவாகவந்து நல்லறத்தின்வழுவாநெறியே, உனதுதிருமலர்ப்பாதத்தைத் தொழுதேனென்றுளென்க. (௱௮௫)

வேறு.

காய்முகத்துறைநீர்போலுங்கங்குவின்விளக்குப்போலு
நோய்முகத்துலன்றநெஞ்சார் நுனித்தெழவிவையங்காகிச்
சேய்முகத்துயிரிற்கான்ற செழுங்கதிர்தெளிப்பமாந்திப்
போய்முகத்தெதிர்ந்தநாடு புக்குநீணெறியேபோனர்.

உரை.—அங்ஙனம் பூமிகாய்ந்தவிடத்து நிறையப்பெய்த மழைத்துளிபோலவு நிறைந்தவிருளிடத்தேற்றிய விளக்குப் போலவு நொந்துலன்ற காய்ந்தநெஞ்சினையுடையமரியுஞ் சூசையு நன்றாய்க்குளிர்ந்துவத்தோங்கும்படி யிவையெல்லா மங்கேயாகையித் றந்திருக்குமாரன் முகத்தினின் றுயிராகப் புறப்பட்டகதிர்களைத் தாமுள்ளேதெளியும்படி கண்கள்வா யாலுண்டுநடந்துபோ யெதிர்நின்றநாட்டிற்புகுந்து நெடு ம்வழியேநடந்தாரென்க. (௱௮௬)

ஒழித்தெனச்சுடர்நீர்மூழ்கவுலகிருட்போர்ப்பக்கஞ்சந்
தெழித்தெனக்கதவடைப்பச்செழும்பொழிற்பறவையார்ப்ப
விழித்தெனக்கண்களாக மீனலம்வானம்பூப்பக்
கழித்தனநெடுஞ்செல்வப்பாற் களரிமாபுரத்திற்சேர்ந்தார்.

உரை.—அங்ஙன நடந்துபோய்ச் சூரிய னொழிந்துபட் டாற்போலக்கடலிலேமுழுகவும்பூவுலகமிருளாகியபோர்வை தன்மேற்போர்த்துக்கொள்ளும்படி யிழுக்கவு மதைக்கண்டு தாமரைகள் கோபித்தாற்போலத்தம்மிதழாகியவீட்டுக்கதவை யடைக்கவுஞ் சோலைகடோறுமடையும்பறவைகள் முழங்க வும் விழித்துப்பார்த்தாற்போல வானுலகு கண்களாக மீன்க ளைப்பூத்துக்காட்டவு மிவையெல்லாமாகு மாலைநேரத்திலே யவர்நெடும்வழியைக்கடந்து களரிமாபுரத்திற்குச் சேர்ந்தா ரென்க. (௱௮௭)

சோசுவன் வெற்றிப்படல முற்றும்.

ஆகப்படலம்-௰௩-இ-விருத்தம்

௲௫௱௯௰௨.

பதினாறாவது.

சேனையோன்வெற்றிப் படலம்.

இணைநிலைமுரசமார்ப்பக் கீதயாழ்தெளிப்பவெளிற்
பிணைநிலைக்கரிகள்சீறப் பிரிநிலைக்கறவையேங்கப்
பணைநிலைப்புரவியாலப் படரொலிக்களிமூதூர்த்
திணைநிலைப்புறத்திலன்னார் சிறந்தமண்டபத்தினின்றார்.

உரை.—முற்சொன்னபடி மாலைக்காலத்து மரியுஞ்குசை
யுந் திருக்குமாரனையேற்றிக்கொண்டு களரிமாபுரத்திற் செ
ன்றவளவிலே யந்நகரிடத்துப் பலவாச்சியங்களோடுமுரசா
ர்ப்பவும் வீணைகளோடுசங்கீதங்க டெளிந்தொலிப்பவுந் தூ
ணிற்கட்டின மதயானைகள்சீறிமுழங்கவும் பிரிந்துநின்றகன்
றைநினைத்தகறவைக ளேங்கிக்கலையவும் பந்தியினின்ற குதி
ரைகளாடிக்கனைப்பவும் படர்ந்தபலவோசைகளின்மிக்க வந்
நகருட்புகாம லிவர்புறத்துநின்று சிறந்ததோர்மண்டபத்திற்
றனியேநின்றாரென்க. (க)

தாளுறுவருத்தமோம்பித் தலைவிரிகதலிமுற்றி
நீளுறுகனிகண்மாந்தி நெடும்பசிப்பரிவுமாற்றி
வாளுறுகதிராலெங்கு மல்கியவிருளைப்போழ்ந்து
கோளுறுதிங்கள்வான்மேற் குளிர்முகங்காட்டிற்றன்றே.

உரை.— அம்மண்டபத்தினின்றவர் நடந்துவருந்தியகா
லிளைப்பாற்றியபின்பு வாழைகள்முற்றிப்பழுத்துத் தந்ததீங்
கனிகளையுண்டு நெடுங்காலத்துப் பொறுத்தபசியுமாற்றிச்
சந்திரன்முளைத்துத் தன்கதிர்வாளா லெங்குநிறைந்தவிருளை
வெட்டிப்பிளந்து வானத்திற் றன்குளிர்ந்தமுகத்தைக் காட்
டினதென்க. (உ)

கோள்கடைந்தழுத்தினாற்போற் கொழுமணியழுத்தி
வைத்த [ல்
தாள்கடைந்தழுத்திப்பைம்பொற் றவழ்கதிர்ப்பவளத்தூணி
வாள்கடைந்தழுத்தினாற்போன் மதிசொரிபசும்பாற்கற்றை
மீள்கடைந்தழுத்திப்பாயும் பெருங்கதிர்சூசைகண்டான்.

உரை.—அங்ஙனஞ் சந்திரன்முளைத்தவளவிலே நவக்கிர கங்களைக் கடைந்தழுத்தினாற்போல நவமணிகளைச்சூழப்பதி த்துப் பசும்பொன்னாலடிகடைந்து கதிர்களைவீசி யங்கிருந் த பவளத்தூணினுட்புதைத்த வொளிபுறப்படும்படி வாளை க்கொண்டு கடைந்தாற்போலச் சந்திரன்சொரிந்த பசும் பாலொத்தவிளங்கதி ரத்தூணிவழுந்தியதன்மையா லங்கேநி ன்றெழுந்த பெருங்கதிர்பரவக்கண்டான்சூசையென்க. (௩)

மணிநிலைப்புரத்தின்வாயின் மணிக்கதிர்த்தூணுநிற்ப
வணிநிலைப்பவளத்தூண்மே லவிர்மணிப்பாவைநின்று
பணிநிலைப்பசும்பொற்காளம் பதிமணித்தீபமோடு
துணிநிலைப்பசும்பூங்காந்தட் டுணைக்கையிருங்கக்கண்டான்.

உரை.—மணியாலழகுபெற்ற களரிமாபுரத்தின் வாயின் முன்னே சொன்னமணித்தூணிற்ப வத்தூணின்மேன் ம ணியாற்செய்த வழகியவொருபெண்ணின்று விளங்கியபசிய கார்த்திகைப்பூவொத்த தன்னிருகையி லாபரணமாக வூதும் பொற்காளமு மணித்தீபமு மேந்திநிற்பது சூசைகண்டா னென்க. (௪)

கதிரொழுமுருவினின்ற கபிரியறன்னைநோக்கிப்
பொதிரொழும்பவளத்தூண்மேற் பொன்மணித்தீபங்காள
மெதிரொழுமணிப்பொற்பாவை யேந்தியதுனாமேரவென்ன
ப் [ன்.
பிதிரொழுங்கதிரின்வானோன் பிழிமொழிபிலித்திச்சொன்னு

உரை. — சூசையதைக்கண்டவளவிலே கதிர்வீசியமேனி யோ டண்டையினின்றவானோனாகியகபிரியலைநோக்கியங்கே நின்றபவளத்தூண்மே லெதிராய்நிற்கும் பொற்பாவை தீப

த்தையுங் காளத்தையு மேந்திநிற்பதேதோவென்று சொல்வாயாகவென்று கேட்டவளவிலே விளங்காநின்றவானோன் மதுவுரைகொண்டு மறுமொழிசொன்னானென்க. (௫)

வான்முழுதிறைஞ்சுநாயகன் வலிமையினுருவமாகத்
தேன்முழுதுமிழ்பூந்தண்டார்ச் சேதையோன்மறைபகைத்
தூன்முழுதுடன்றவேலா ரொருங்கழிந்தறவெம்போரில் [தீ
வன்முழுதிலகைக்கொண்ட விளக்குங்காளமுமிதென்றான்.

உரை. — கபிரிய லெங்ஙன மறுமொழிசொன்னானென்னில் வானுலகில்வணங்கப்பட்ட வாண்டவனுடையவல்லமையைக்காட்டும்படி தேன்மாலையணிந்த சேதையோனென்பவன் முன்னாளிலேவேதத்தைப்பகைத்த கொடியவேலேந்தியபெரும்படைக ளொருங்குடனழிந்துகெடும்படி வெம்போர்முகத்திலவன் வேலொன்றின்றிக் கையிலேந்தியதீபமுங் காளமு மிவைதாமென்றான் வானவனென்க. (௬)

வான்சுவைத்தகவிற்றேவ வாழ்த்திருசெவியின்வாயாற்
றான்சுவைத்தல்லதல்லற் றரும்பசியாற்றுநீரா
னூன்சுவைத்துடன்றபோரி லுற்றதுசொன்மினென்னத்
தேன்சுவைத்துமிழ்தீஞ்சொல்லாற் செப்புதலுற்றான்வா
னோன்.

உரை. — அதைச்சூசைகேட்டவளவிலே வானுணவின் றன்மையாற் றேவபுகழ்ச்சிகளைத் தன்னிருசெவியாகிய வாயினாலுண்டாலொழியத் துன்பமென்னும்பசியை யாற்றமாட்டாதகுணத்தோனாகையிற் சொன்னபோரி லானதெல்லாஞ்சொல்வாயாகவென்று சூசையுரைத்தவளவிலே வானவனாயகபிரியலுந் தேனுண்டுகொப்பளித்தாற்போல வினியவுரைகொண்டானென்க. (௭)

வேறு.

சொல்வழங்கியதகுதியாற் சுருதிநூல்வழங்கச்
செல்வழங்கியதுளியினுங் கொடையொடுசினந்த
வில்வழங்கியவிசையமா சோசுவன்வென்ற
வெல்வழங்கியவிருமுடியரச ரெண்ணரிதே.

உரை.—மிக்கயேல் முன்சொன்னபடி வேதம்வழங்குதற் பொருட்டு மேகத்துளியினுமிக்க கொடைதானமழையுஞ் சினந்த வில்லின்மழையும் வழங்கினவலக்கையுடையவெற்றிச் சோசுவனென்பவன் முன்னாளிற் றான்வென்ற விளங்கியமுடியைச்சூழ்ந்த வரசரையெண்ணுவதரிதென்க. (௮)

சாரனாப்பகன் றாப்புவன்பெத்திலன்றாபிர்
தோரன்யாக்கனன் சுடர்முடியிலேபுவனெரிக்கோன்
றெரிசானொடு தேனகன்காசரனாபரன்
னேரிமானவ னேருசலனெரிதன்யெரிமான்.

ஏதிலேபிர னிலக்கனனெகிலன்சிமேரோன்
காதனாயரன் கலகலன்காதரனுதுலன்
மாதனாசுரன் மச்சதனக்கிசன்மகத்த
னேதுபேருள முப்பதோரரசர்வென்றொழித்தான். (†)

இவையிரண்டுமொருதொடர்.

உரை.—அங்ஙனமாண்டவன் வல்லமைகாட்டும்படி சாரனு மாப்பகனுந் தாப்புவனும் பெத்திலனுந் தாபிருந் தோரனும் யாக்கனனு மிலேபுவனு மெரிக்கோனுந் தெரிசானுந் தேனகனுங் காசரனு முபரனு மேரிமானு மெருசலனு மெரிதனும் யெரிமானு மேபிரனு மிலக்கனனு மெகிலனுஞ் சிமேரோனுங் காதனு மாயரனுங் கலகலனுங் காதரனு முதுலனு மாதனு மாசுரனு மச்சதனு மக்கிசனு மகத்தனு மென்றிம்முப்பத்தொரு முடிசூடியவரசரையுஞ் சோசுவனொருவன் வென்றுகொன்றானென்க. (௰)

ஒழிந்தமாற்றல ருறைந்தபல்லூழித்தொறுமுறைந்தா
டழிந்தமாரியி னிருந்திருயூதர்கள்பின்னாள் [ண்
விழிந்ததேவனை மேவவினறமொடுவிரத
மழிந்தயாண்மையா லடலழிந்தொளியழிந்தழிந்தார்.

உரை.— அங்ஙன மடிந்தபகைவராகிய முப்பத்தோரரசராண்டதேசங்களெல்லாம் யூதராண்டுகொண்டுபெய்தமழையின்றன்மையானிறைந்தசெல்வங்களையுடையராயபின்புமெ

(†) Josue, cap. XII. vers. 9... 24.

யைக்கடவுளைவிட்டுப் பொய்யானதேவர்களை வணங்கத்துடங்
கி நல்லறமு முன்காத்தவிரதமு மழிந்ததனாற் றமக்கிருந்தவ
ல்லமையுங்கீர்த்தியுமழிந்து தாமுமழிந்தாரென்க. (௰௧)

அறமகற்றினு ரறப்பயத்தாண்டவனளித்த
திறமகற்றினர் சிதைவுறவறிவுறீக்கொடிய
மறமகற்றினர் வணங்கியவிறைவனுஞ்சிறுமை
புறவகற்றினன் பொருவிலவலித்திறம்விளங்க.

உரை. — அங்ஙனம் யூதர்நல்லறநெறியைவிட்டவளவிலே
யறத்தின்பொருட்டாக வாண்டவ னவர்க்கு முன்றந்தவல்ல
மையுமிழந்து தம்பகைவர்கீழ்ப்பட்டு மிக்ககேடுகளையடைந்தா
ர், அடைந்தகேடுகளா னல்லறிவுமடைந்து செய்தகொடிய
பாவங்களைவிட்டு மீளவுமண்டிவணங்கினதாதன் மனமிரங்
கி யவர்கொண்டசிறுமையைநீக்கித் தனக்குள்ளநிகராதவல்ல
மைவிளங்கச்செய்யும்படி திருவுளமானானென்க. (௰௨)

ஆளுங்கோனில வடற்படைவீரருமில்வெந்
நாளுங்கொடிய கோற்பொறைசுமந்திறைபிறர்க்கு
நீளுங்கோடணை நிந்தையோடழிவுடைநலத்தோர்
மீளுங்கோதறு மிடவினோனுழுநனைத்தெரிந்தான்.

உரை. — அங்ஙனம் யூதர்குலத்தி லாளுமிராசாவுமின்றிப்
படைவீரருமின்றி பெற்நாளும்வளர்ந்த கொடுங்கோலின்
கொடியபாரத்தைச்சுமந்து தாம்பிறர்க்குத்திறைகட்டி நெ
டுநாள்தந்து கொடுமையோடுநிந்தைபட வழிந்தனராகியவ
ர்சிறுமைமீளும்படி குறையின்றி யளவிறந்தவல்லமையுடை
யநாதனுழுநர்தொழிலைச்செய்திருந்த வொருவனைத்தெரிந்
துகொண்டானென்க. (௰௩)

ஓதையோங்கிய களத்துநெல்தெளித்தெடுத்துறைந்த
சேதையோனிடைச் சென்றவான்றூதுமைப்பகைத்த
கோதைவேலினர் கொல்லவெம்போரமைகெனவிப்
பேதையோபகை பெயர்த்திடவெனவயிர்ப்புற்றான்.

உரை. — செந்நெல்லைத்தெளிக்குங்கிடாக்களை யதட்டுவாரோதையும் வைக்கோலைநீக்கி நெல்லைப்புடைப்பா ரோதையு மிரப்போரோதையுங் கொடுப்போரோதையு நெல்லைப்பகுப்பாரோதையும் வண்டில்கள்மே லேற்றிக்கொண்டுபோவாரோதையு மிவ்வோசைகள்முதலியனவு மிக்க களத்திற் செந்நெல்லைத்தெளித்துச் சேர்த்திக்கொண்டிருந்த சேதையோனென்பவனிடத் தாண்டவன்விட்ட தூதாகிய வொருவானவன்சென்று நம்மைப்பகைத்தபடைவீரரைக் கெடுத்துக்கொல்லும்படி போரைச்செய்வாயாகவென்றான், அதைக்கேட்டசேதையோ னுழவர் தொழில்செய்யும் பேதைநானேபகைவரைக் கெடுத்துக்கொல்லுவேனென்று சந்தேகப்பட்டானென்க. (௰௪)

அரியவோர்தொழி லாண்டவனேவியகாலை
யுரியவோர்தக வுளத்திடுந்தகுதியா லூக்கம்
புரியவோர்மதப் புகர்முகமெனவெழுந்தையம்
பரியவோர்குலப் படைமுகம்பண்ணுகவென்றான்.

உரை. — ஆண்டவனொருவற்குச் செய்தற்கரியதோர்தொழிலை யேவினகாலத் ததற்குரியகுணத்தையு மவற்கிடுவதுமுறைமையாகையிற் சேதையோனென்பவற்கிட்ட தொழிற்குரியவூக்கத்தைத்தந்தமையா லவன் முன்னினைத்த சந்தேகமெல்லாம்போ யொருமதயானையைப்போலவெழுந்து தன்குலத்தாரைப் படையாகக்கூட்டினானென்க. (௰௫)

வேன்முகந்திவர் வெஞ்சமர்க்கமைதவனொன்றே
மீன்முகத்தொளி விரிமணிமுடிப்பலவரச
ரூன்முகந்தகோட் டுவாப்பரிதேர்பவபண்ணி
நான்முகத்தகு ஞாலமுநெளிதரத்திரண்டார்

உரை. — அங்ஙனம் யூத ராயுதமேந்திப் போர்செய்யும்படி கூடுவனொன்றறிந்து விளங்கியமுடியைச்சூழ்ந்த பலவரசருங்கூடி மதயானைகளும்பாய்பரிகளு முயர்ந்ததேர்களு மொருகணத்திற்சேர்த்திப் பூவுலகினுதிக்குகளு நெளியும்படி மட்டின்றித் திரண்டாரென்க. (௰௬)

வேறு.

துதியாவிகராவலியான்சுடுமேருவில்லான்
றிதியாவுமெரிந்துகெடத்தழறீக்குகண்ணான்
மதியானெனுமாபெயரால்வரையாதவெண்ணிற்
பதியாதபடைக்கடல்பண்ணியதிர்ந்தெதிர்த்தான்.

உரை.—அங்ஙனம் பூதனைப்பகைத்துக்கூடிய பலவரசரு ட் புகழ்தற்கரியவல்லமையுடையனு மிடிகளையெறியும் வில்லை வளைத்தவனாய்ப் பகைத்ததிக்குகளையெரிக்குந் தீக்கண்ணனாய் மதியானென்பவ னெண்ணிக்கைக்குள்ளடங்காத கடலொத்த படையைக்கூட்டி முழங்கியெதிர்த்தானென்க. (௰௭)

மலையீன்றமணிப்புயமாபுலியீன்றமார்பன்
கொலையீன்றகரங்கொடிதீன்றவழற்கொடுங்கண்
சிலையீன்றசரத்திடிகொண்டெரியீன்றசீற்றத்
தலையீன்றபடைத்திரளோடமலேக்கெதிர்த்தான்.

உரை.—மீளவு மலையோடொத்தபுயங்களுஞ் சிங்கத்தோ டொத்தகொடியமார்புங் கொலைத்தொழிற்குரியகையுங் கொ டியதீயோடொத்தகண்ணுந் தன்வில்லெய்யுமிடிகளோடொ த்தவம்புகளு மிவையெல்லாவற்றையுமுடையனு மெரிந்தசெ ந்தீயைப்பொழியுங் கோபத்துடனே கடலோடொத்தபடை யைக்கூட்டி யமலேக்கென்னுமிராசாவுமெதிர்த்தானென்க. (௰௮)

வாளித்திரளோங்கிய தூணிவளர்ந்ததோளார்
கூளித்திரளோவடுகூற்றதுதோமர்கொல்வேலா
யாளித்திரளோவவிர்கீழ்த்திசையாவுமாளு
மோளித்திரளோருமொருங்குதிரண்டுடன்றார்.

உரை.—மீளவு மம்புநிறைந்த தூணியோ டோங்கியதோ ளுடையராய்ப் பசாசுகள்கூட்டமோ வியமனது தோமரோ யாளிகளின்றிரளோவென்னும்படி கீழ்த்திசையிலாண்டயா னைகளைத் திரளாயுடையவரசரெல்லாருங்கூடிக் கோபித்துவ ந்தாரென்க. (௰௯)

தாமக்கவினிம்முடியாரொடுசாய்ந்தசாலைத்
தூமக்கணெரித்தனதானைகளோதுளித்த
காமக்கடமார்கரியோபரியோகவின்கொள்
சேமக்கடிதேர்த்திரளோவெவர்செப்பவல்லார்.

உரை. — அங்ஙனம் விளங்கிய முடியைச்சூடிய விவ்வரச ரோடுகூடச்சாய்ந்துவந்த புகைந்தகண்ணெரிக்குஞ் சின த்தகாலாட்டானைகளு மதத்தைத்துளித்தயானைகளும் பாய்புர விகளு மழகியபொற்றேர்களு மிவ்வளவென்றுசொல்லும்படி வல்லவனுண்டோவில்லையென்க. (௨௰)

கரியேகுகவேகிலகாற்கடறானைகாலாள்
வரியேகுகவேகிலவாய்ந்தெழுதேர்தடந்தேர்க்
கிரியேகுகவேகிலகேழ்கிளிவாசிபாயும்
பரியேகுகவேகிலதோல்படர்வெள்ளமட்டோ.

உரை.—அங்ஙனங் கூடியபடைமிகுதியாற் றம்முன்னெ ருங்கியானைப்படைநடக்கையிற் காலாள்நடக்கமாட்டாமலு ங் காலாள்நடக்கையிற் றேர்நடக்கமாட்டாமலுந் தேர்நடக் கையிற் குதிரைகள்நடக்கமாட்டாமலுங் குதிரைகள்நடக்கை யில் யானைகள்நடக்கமாட்டாமலுங் கூடியபடைகளின் வெ ள்ளமட்டில்லதாயிற்றென்க. (௨௧)

நாட்டங்கணிமைப்பினடிப்புநடத்துபாய்மாக்
கூட்டங்கதிகொண்டகுரத்துகள்கோவிசும்பின்
மோட்டங்கணொளிக்குமெனுமதமூற்றியானை
யீட்டங்கடமாரிவழங்கமுனேகவிட்டார்.

உரை.—அங்ஙனந் திரண்டபடைபோகையிற்கண்ணிமை த்தமாத்திரையி லாடிக்குதித்துப்பாயுங் குதிரைத்திரள் தங்கு ளம்புகளாற்கிளப்பிய தூசிகள்மிகுந்து வானுச்சியைமறைக் குமென்று அத்தூசிகளெழாதபடி மதமூற்றிய யானைத்திரள் மதமழையைப்பெய்து வழிநனையும்படி படைக்குமுன்னே யானைகளைப்போகவிட்டானென்க. (௨௨)

கார்வென்றனபோர்முரசார்ப்பொலிகாளகார்பெய்
நீர்வென்றனதோன்மதநீருகளென்னிலச்சொற்
சீர்வென்றனபாய்பரிமாதிசையாங்கணும்பற்
போர்வென்றனபொற்பொறைவென்றபுயத்துவீரர்.

உரை. — அங்ஙனம் பலபறைகளோடு முரசினொலி மேகத்தின் முழக்கத்தைவெல்லவு மம்மேகம்பெய்துளியை யானைகள் பெய்தமதமழைவெல்லவும் பாயென்றேவிய சொல்முடியுமுன்னேபாய்ந் தச்சொல்லைக் குதிரைகள்வெல்லவும் பல திசைகள்முகத்திலாய பலபோர்களை வென்றவராய்ப் பொன்மலையினுந் திண்ணியபுயங்களையுடைய வீர ரெதிர்த்தாரென்க. (உ௩)

கட்டாவியதீக்கனவிக்கடருனைசெல்ல
விட்டாவிவிழுங்கயில்வேலுடைசேதையோன்றன்
னூட்டாவியதேவருளூக்கமொடோங்கியோர்நான்
கெட்டாயிரஞ்சேவகரைக்கடிதீட்டினான்.

உரை. — அங்ஙனந் தம்மைப்பகைத்து மட்டின்றித் திரண்டுகண்வழியாற் தீப்பொழியாநின்ற கடலொத்தபடைகள் வருவதைக்கண்டு மாற்றாருயிர்களைவிழுங்குதற்குரிய வேலையேந்திய சேதையோ னுண்டவனூட்டந்த மனவூக்கத்தாலோங்கி யூதர்களி லொருமுப்பத்தீராயிரஞ்சேவகரை விரைந்துகூட்டினனென்க. (உ௪)

வேறு.

கவிமதத்துயர்வலிக் கடவுள்கண்டுனி
குவிமதத்திபமுதற் கொலைப்படைக்கடல்
செவிமதத்துருவுறச் சிதைத்துநான்வெலச்
சவிமதத்தெழுந்தவித் தானைவேண்டுமோ.

உரை. — அங்ஙனஞ் சேதையோன்கூட்டியபடையைக் கவிஞர்கருத்தைக்கடந் துயர்ந்தவல்லமையுடைய நாதன்கண்டுசொன்னான்: நிறைந்தமதத்தைப்பொழிந்த யானைமுதற்கொண்டு நாலுவகையாய்க் கடலொப்பப் பகையவர்கூட்டி

யபடையைக் கேட்டோர்செவிமிக்கஞ்சும்படி நான்கெடுத்துவெல்லுதற்கு நீகூட்டியவழகினற்பொலிந்தவிப்படையெனக்குவேண்டுமோவென்றுனெனக. (உரு)

சுட்டழற்சமர்க்குளந் துவளவஞ்சுவார்
விட்டழற்சினமுதிர் வீரர்நிற்பவென்
றிட்டழற்கதத்தெழுந் திரையாயிரங்
கட்டழற்றிறவினோர் கனிநின்றாரரோ.

உரை. — மீளவுங்கூடினபடைகுறையும்படி சுடும்போர்முகத்திற் றுவண்டுள்ளஞ்சினுரெல்லாரும்போகவிட்டு வெஞ்சினத்துத்தளராதவீரர்மாத்திர நிற்பக்கடவாரென்று நாதனேவியதன்மைத் தஞ்சினவிருபத்தீராயிரம்போய்ப் பதினுயிரந்திறத்துயர்ந்தோர் நின்றுரென்க. (உசு)

வாகைமிக்கொளியெனக் காகமற்றுநாள்
வேகமிக்குமிப்பகல் வேலையாற்றிடை
தாகமிக்கக்கனின் றன்மைநீருண்பார்
போகமிக்கள்ளியுண் பொருனர்சேர்க்கென்றான்.

உரை. — மீளவும் பதினுயிரமிகுதியென்று வெற்றியைக்கொண்ட கீர்த்தி யெனக்காம்படி நாளைவேகத்துடனேபடையைநடத்தி யுச்சிப்பகனேரத் தாற்றங்கரைசேர்ந் தங்கேதாகமிகுதியா லுய்ப்போலேவிழுந்து நீரையுண்பாரெல்லாரும்போகவிட்டுக் கையாணீரையள்ளியுண்ணும் வீரரைமாத்திரஞ் சேர்ப்பாயாகவென்று னுதனென்க. (உஎ)

நீர்முகத்துண்டமுந் நூறுநின்றபின்
பார்முகத்தொழும்பிரான் பார்த்துநும்பகைப்
போர்முகத்தகுஞ்சய மினிப்பொலிந்தவென்
சீர்முகத்தகுந்திறல் சிறப்பிற்றுமென்றான்.

உரை. — ஆண்டவன்கட்டளையிட்டபடி சேதையோன்செய்து கையாணீரையள்ளியுண்டவர் மூந்நூறுசேவகர்மாத்திரநின்றார், நின்றபின்பு பொதுவற்றுப் பூவுலகில்வணங்கப்ப

ட்டநாதன்பார்த்து இனி யிம்மூந்நூறுசேவகரைக்கொண்டு மட்டின்றிக் கூடியபகைவர் படைகளைவென்று நான்றரும் வெற்றியுன்வல்லமையாலானதென்று தோன்றாமலென்னை வில்லாதவல்லமையே தோற்றுவிக்குமென்றானென்க. (௨௮)

வவ்வொருவேவில மங்குறைப்பணிற்
கவ்வொருகாளமட் கலம்விளக்கிவை
யொவ்வொருவற்கிடு கெனவுரைத்தனன்
செவ்வொருதிருவிளை யாட்டுத்தேவனே.

உரை. — மீளவு மிம்மூந்நூறுபேரு மாயுதம்பிடித்துப் போரவும்வேண்டா நடுவிராத்திரியி லொவ்வொருவனுக் கொருகாளமு மொருமட்கலமு மொருதீபமுங் கையிலே கொடுப்பாயாகவென்றனாரோரிடத்துவிளையாடினாற்போலத் தன்றிருநீதியைக்காட்டுநாதனென்க. (௨௯)

செம்முகம்புதைத்தொளி சிகன்றபின்செயம்
நும்முகத்தகுமென நூறுநூறுமாய்
மும்முகம்பிரித்துமூன் றிட்டுமொய்ப்பகை
யம்முகம்வாய்விடா தணுகினாரரோ.

உரை. — ஆண்டவனேவியபடி சூரியன்றன்சிவந்தமுகத்தைக்கடலிற்புதைத் தொளிமாறியிருண்டபின்பு சேனையோன் றன் சேவகரைப்பார்த்து வெற்றியுமதாயிற்றென்று தேற்றியவரை நூறுநூறாக மூவ்வகுப்பாய்ப்பிரித் தொவ்வொருவ க்குக் காளமுமட்கலமுந் தீபமுமென்னு மூன்றினையுங் கையிற்றந்து பகைவரிருந்தவிடத்து வாய்விடாமற் கிட்டிப் போனானென்க. (௩௰)

வேறு.

எதிரெழுந்தபகையவருறைந்தவிடை யிவரெழுந்தரவமி
லவுறிக் [மொடு
கதிரெழுந்தசுடரொளிமறைந்துதிசை கவிழுகின்றபலகல
பொதிரெழுந்தவிருடலைபரந்துவிரி புவிமறைந்தநிசிநடுவவி
முதிரெழுந்தவிறையவனறைந்தவிதி முறையணிந்தசமர்முய
ல்குவார்.

உரை.— அங்ஙன மெதிர்நின்றபகைவரிடத்துச் சத்தப்ப டாமற்சென்று கையிற்பிடித்தெரியுந் தீபங்கள்விட்ட வொ ளிகாணாதபடி யவற்றைமட்கலத்தான்மூடிமறைத்து நிறைந் தவிருள்படர்ந்து பூவுலகெல்லா மூடாநின்ற விருண்டவிராவி னடுவிலே யளவிறந்தவல்லமையுள்ள நாதனேவினமுறையோ டரியபோர் துடங்கினதென்க. (௧௧)

வீறுவீரனியைதாழிநூறியிடு வேலைவேகமுடனூறெறு
நூறுநூறுகலநூறிநூறுமொடு நூறுநூறுசுடர்தோன்றநூ
றேறுநூறுமொடுநூறுதாரையொலி யீறிலாதுமெழவானின்
மேற்
சீறுமேறுபலகோடிகோடியதிர் சீறொலிதிசைகூசவே.

உரை. — அப்பொழுதி லாண்டவனேவலால் வீரசேனை யோன் முன்வைத்திருந்த தீபத்தைமூடினமட்கலத்தைக் கி ட்டநின்றவன் கலத்தோடுமோதியுடைத்தான், அவனதையு டைத்தவளவிலே மூந்நூறுபேரு மூந்நூறுகலங்களையுடைக் கமூந்நூறுதீபங்கள்கதிரைவிட்டுத்தோன்ற மூந்நூறுகாளங் களை யூதாநிற்க வுலகின் நாற்றிசையுங்கூசும்படி கோடாகோ டிவிடிகள் வானத்தினின்றுமுழங்கிவிழுந்தாற்போலத் தோ ன்றிற்றென்க. (௧௨)

கனவுடைந்தமருளிரவடர்ந்தவிருள் கலமுடைந்தவொ
விசுடரிடும் [ருளிவெம்
வினவுடைந்தவொளிமவிமவிந்தவொலி வெருவியசுறவிவைம
மனமுடைந்தபதைபகையுடன்றபடை வயமுழங்கிவளர்மு
கிவிடி
யினமுடைந்தபடிகரியினங்களுயர் பரியினங்களுயரேறினர்.

உரை.— அங்ஙனம் பகைவர் துடுக்கெனவிழித்து நித்திரை க்கலக்கமு மிராவிருள்மயக்கமு மட்கலங்களுடைந்த வரவ மும் கண்கூசியறிவுமயங்கும்படி மூந்நூறு தீபங்களிட்ட வொளிமிகுதியு மூந்நூறுகாளங்க ளூதினமுழக்கமு மிவை யெல்லா மொருங்குடன்கூடியமையாற் பகைவர்படையெல் லா மனமுள்ளுடைந்து பதைத்துச்சீறி வலிதாய் முழங்கிய

விடிகளினுமுழங்கி யானைகளின்மேலுங் குதிரைகளின்மேலு மேறிக்கொண்டானென்க. (௩௩)

மருள்முதிர்ந்தவெருவொடுவினைந்தவினை வடுவளர்ந்த
பொழுதனுவெனத் [யவர்தலைமை
தெருள்முதிர்ந்தமறையவர்கலந்ததென செருமுதிர்ந்தபகை
யிருள்முதிர்ந்தவிரவெரிமுதிர்ந்தசின மொடுதுமிந்துகொலை
யிடவிட [ய்வார்.
வருள்முதிர்ந்தவிறையவனனந்தவய வடல்விளங்கவரிதமர்செ

உரை.—சொன்னபலகாரணங்களாற் பகைவர்க்குவந்தமயக்கமு மச்சமுமிகுதியாகியவர்செய்ததீவினைவளர்ந்து முற்றி விளையுங்காலமதுவென்று தம்முணர்வுமயங்கிக்கெட்டு மறையோராகியபூகர்வந்து தம்பாலையத்துண்ணுழைந்து கலந்துநிற்பாரென்றுநினைத்து மிக்கிருண்ட விரவினடுவிலெரிந்தகோபத்தோடு பகைவர் தாந்தம்மைவெட்டிக் கொன்றழித்தருளின்மிக்க நாதனுடைய வனந்தநீதிவல்லமைவிளங்கும்படி யரியபோராத் துடங்கினரென்க. (௩௪)

இடியெழுந்தவொலிமுகிலெதிர்ந்ததென விழிமுதிர்ந்த
மதகரிபொர [ளைசெயக்
முடியெழுந்தவரையுயர்பறந்துபொரு முனையிணைந்திரதமு
கடியெழுந்ததிரையெறிசினந்தகட லெனவெதிர்ந்தகதியிவு
ளிகள் [லையளவதோ.
துடியெழுந்தபறையொலிமுழங்கவமர் தொடருடன்றகொ

உரை.—அங்ஙன மிடியிடித்தபலமேகங்க டம்முட்பொருதாற்போல மதத்தைப்பொழிந்த கரியயானைக டம்முட்பொரவு முயர்ந்தவுச்சிமலைகள்பறந்து தம்முட்பொருதாற்போலவுயர்ந்ததேர்க டம்முட்பொரவுங் கடல்சினந்தெறிந்த திரைக டம்முட்பொருதாற்போலக் குதிரைகள்பாய்ந்து தம்முட்பொரவும் பலபடைவாச்சியங்கள்முழங்கும் போர்க்களத்திலாயகொலை மட்டல்லவென்க. (௩௫)

பறைமுழங்கமதகரிமுழங்கவய பரிமுழங்கவிடுபகழிக
ளுறைமுழங்கவவரவர்முழங்கவிக லுழவவொன்றுதமமொழி
தா [ரெனப்
நிறைநுகர்ந்தமதுவெறிமுதிர்ந்தநெறி யிலருடன்றவமர்நிக
பிறைநுகர்ந்தவிருளொடுமயங்கியவர் பெரிதுமிழ்ந்தவுயிர
ளவதோ.

உரை.— அங்ஙனம் பலபறைகள்முழங்கவு மதயானைகள் முழங்கவும் புரவிகள்முழங்கவு மெய்தவம்பின்மாரிமுழங்கவு மவரவர்சீறிமுழங்கவுந் தம்மைப்பகைத்த வீரராகியயூத வொன்று தமர்தாமொழிந்துகெடும்படி நிறையக்கள்ளையுண்டநீசர் வெறிமயக்கத்தோடு தம்முட்செய்தபோர்போலப் பிறையொளியின் றிமிக்கவிருளோடவருமயங்கிப் பொருத்தன்மையிற் சிந்தினவுயிர்கள் மட்டல்லவென்க. (அந்நாளிலே வளர்பிறையாகையிற் போர்துடங்கின நடுயாமத்துமுன்னே யப்பிறை யத்தமித்ததனாற் பிறைநுகர்ந்த விருளென்றுரைெ ன்க.) (௫௬)

வண்டுபட்டனவிபங்கள்பட்டன வயங்கள்பட்டனவள
ர்ந்ததேர் [ண்
துண்டுபட்டனகரங்கள்பட்டன துமிந்துபட்டனபதங்கடி
டண்டுபட்டனசிரங்கள்பட்டன சடங்கள்பட்டனதடிந்த
வாள் [ங்களே.
கொண்டுபட்டனர்குணுங்கர்பட்டன குணுங்குபட்டிலநய

உரை.—அங்ஙனம் பட்டவம்புகளால் யானைகளுங்குதிரைகளும் பட்டன, தண்டாயுதங்களா லுயர்ந்ததேர்களுந் துண்டாகமுறிந்தன, காலுங்கையுமழிந்தன, கூர்ந்தவாள்களாற் றலைகளு முடல்களும்வெட்டுண்டு நீசரைப்போலப் பகைவர் பட்டுப் படாதவின்பமும் பேய்கள்பட்டனவென்க. (௫௭)

உழையினங்கடமைபடவெதிர்ந்தவய வுகிருடன்றவரி
யெனவுமுட் [வுமென்
கழையுலந்தவனமிடைநுழைந்துநுகர் கனலுடன்றகதமென

மழைநிகர்ந்தகணைகணைமலிந்தவசி வசிமுனிந்தவயினுழையி
டும் [மே.
புழையகன்றவழிவழிசிவந்தபுனல் புறமறைந்தமருளிரண

உரை.—அங்ஙனமான்கூட்டத்துட்பாய்ந் தவற்றைக்கொல்லும்படி வலியவுகிர்களைக்கொண்டு கொடியவேங்கைகள் பொருதாற்போலவு மூலந்தமூங்கிற்கானத்துநுழைந்த செந்தீ மிக்ககோபத்தோ டெல்லாவற்றையு மேய்ந்தாற்போலவுங் கொடியபோராகிப் பெய்தமழைத்துளியொப்பவிழுமம்புகளும் வானதிரும்படிவீசியவாள்களுஞ் சினந்தகூர்மையின்மிக்கவேல்களு மிவையெல்லா நுழைந்து செய்யும்பெரும்புண்வழியாகவழிந்த விரத்தத்தின்புனலான் மயக்கப்போர்க்களமெல்லாமூடி மறைந்ததென்க. (௩அ)

வேறு.

மூருடொடுமுரசமாதி முனிந்தபற்பறைகளார்ப்ப
விருடொடுநிசியிலாதி யிறைவனைப்பகைத்தபாலான்
மருடொடுதலைவராதி மற்றவர்தமிற்றுந்தம்மை
யுருடொடுமிரதமாதி யுளபடைசிதைத்துமாய்த்தார்.

உரை.— அங்ஙன மூருடு முரசமுமுதற்கொண்டு பலபறைகள் கோபத்துடனேமுழங்கியார்ப்ப விருண்டவிராவிலே யாதிக்கடவுளைப்பகைத்தவராகையின் மயக்கங்கொண்டு படைத்தலைவர்முதற்கொண்டு மற்றவருந் தம்முட்பொருதுருளபெருந்தேர்கள்முதலுள நால்வகைப்படைகளு மழிந்துகெடும்படி தாமேதம்மைவெட்டிக்கொன்றொன்க. (௩௯)

கூடன்பிறையெயிற்றமாபோற் கொற்றவரிருவர்தம்மைத்
தேன்பிறழலங்கன்மார்பிற் சேதையோனென்னவெண்ணி
வான்பிறையுறழ்வில்வாங்கி மறங்கொடுமயங்கித்தம்மே
லூன்பிறழ்பகழிமாரி யுதிர்த்தரிதமரினேர்ந்தார்.

உரை.— அங்ஙன மெல்லாருமயங்கிப் பொருதுவருகையின் மதியானும்மமேலக்கு,மென் னு மிரண்டரசரெதிர்பட்டு ம

யக்கமிகுகியாத் றேன்மாலையணிந்த மார்புடையசேதையோ
னெதிர்ப்பட்டானென் றிவனும்வனுமெண்ணிப் பிறையோ
டொத்தவில்வாங்கிச் சேதையோனென்று தம்மேற்பகழிமா
ரியைவிட் டரியபோரி லொருவற்கொருவன் றாழ்வின்றி நே
ராகப்பொருதாரென்க. (௪௰)

கடுவுண்டவெண்ணிற்பல்லங் கதழுண்டவமலேக்கெய்
தான்
கடுவுண்டவெண்ணிற்பல்லங் கான்றவைமதியான்காத்தான்
வடுவுண்டபிறையின்வாளி மறமுண்டமதியான்கோர்த்தான்
வடுவுண்டபிறையின்வாளி வகுத்தவையமலேக்கீர்த்தான்.

உரை. — அங்ஙனம் அமலேக்கென்பவ னஞ்சுதோய்ந்த
வெண்ணப்படாதவம்புகளைச்சினந்துவிட்டான். அத்தொகை
யிலொத்தவம்புகளைவிட்டு மதியா னவற்றைவிலக்கினான், மீள
வு மிவன்றேய்ந்தபிறைபோல வளைத்தவம்புகளை வில்விற்கோ
ர்த்தெய்தான், எய்தவம்புகளை யமலேக்கெதிராய்விட்ட வவ்
வகையம்புகளாலறுத்தானென்க. (௪௧)

பொறிப்படப்பகழிமாரி போக்கினானமலேக்கற்றை
பொறிப்படப்பகழிமாரி புகுத்தியமதியான்றீர்த்தான் [ப்
கறிப்படப்பகுவாய்ப்புங்கம் கதத்துடனிவனுமேவக்
கறிப்படப்பகுவாய்ப்புங்கம் கடைத்தவையவனுங்காத்தான்.

உரை.—மீளவும் அமலேக்கென்பான் றீயெழும்படிவி[illegible]
யோடெய்த பகழிமாரியை மதியானொத்தமாரியால் விலக்கியு
யிரையுண்ணும்படி யகன்றவாயுள்ளவம்புகளைச் சினந்துவி
டவே யொத்தவாயுள்ளவம்புகளை யெதிராகவவனுமேவி யவ
ற்றைக் காத்துவிலக்கினானென்க. (௪௨)

நச்சரவொக்கும்வாளி நடுக்குறமதியான்றூவ
நச்சரவொக்கும்வாளி நவிழ்த்தவைவிலக்கிமீட்டு
முச்சிரமொய்க்கும்வாளி முடுக்கினானமலேக்கற்றை [ன்.
முச்சிரமொய்க்கும்வாளி முனிந்துவிட்டறுத்தான்முன்பா

உரை.—மீளவு மதியான்சூழவருநடுங்கும்படி நஞ்சுமிழும்பாம்போடொத்த வம்புகளைவிடவே யவற்றையொத்தவம்புகளைக்கொண்டுவிலக்கி மீளவு மமலேக்கெய்த முத்தலையம்புகளை யவ்வகையம்புகளா லறுத்துவிலக்கினன் முன்னின்றமதியானென்க. (சுங)

ஓரிருமுகிலினெப்ப வொலித்திருதடந்தேரோடிப்
பேரிருவசனியொத்தார் பெருஞ்சினத்துடற்றியார்ப்ப
நேரிருவயவிற்கோலி நேரலாற்றமிழுழ்வின்றி
யீரிருதிசைகள்கூச வியன்றபோருரைக்கும்பாலோ.

உரை.—அங்ஙன மிடித்தவிருமேகங்கள் பொருதாற்போல முழக்கமெழும்படி யவரேறின விருபெருந்தேர்கள்திரிந்தோடி யவ்விரண்டரசரு மிரண்டிடிகளைப்போல மிக்கசினத்துடனே பொருதுமுழங்காநிற்ப வவர் நேரா யிருவலியவில்லுகளைவளைத்துத் தம்மிலொருவற்கொருவன்றாழ்வின்றி நாற்றிசையுங்கூசும்படி செய்தபோர் சொல்லத்தகுந்தன்மையல்லவென்க. (சுச)

மைம்மணித்தேரின்சித்தி பகழியாலமலேக்கீர்த்தான்
மைம்மணித்தேரின்சித்தி வாளியான்மதியானற்றான்
செய்ம்மணித்தேரின்சாரன் சிரங்கவிழ்த்திவனுங்கொய்தா
னைம்மணித்தேரின்சார னகலமற்றவனுமாய்த்தான்.

உரை.—அங்ஙனம் பொருதுவருகையி லமலேக்கென்பானெதிர்தேரின்மேவிட்ட விடக்கியத்தையறுத்தான், மதியானுடனே யவன்றேரிடக்கியத்தையறுத்து மீளவு மவன்றேர்ப்பாகனைத்தலைவெட்டினன், அமலேக்கென்பவனு மவன்றேர்ப்பாகன்மார்பினைப்பிளந்துகொன்றனென்க. (சுரு)

சாரர்சார்பிழந்தவாசி தழற்படத்தவழ்த்தாவித்
தேரர்தேருளத்திற்சீறிச் சியமுமுருமுந்தீயு
நேரர்நேரலரிலாது நெடுமருளறுதும்வீர
போரர்போரியற்றமாறு புகன்றிடலரியவாறே.

உரை.— அங்ஙன மிருவர்தேர்ப்பாகர் மடிந்துநடத்து வாரின்றித் தேரிற்பூட்டியகுதிரைக ளழலெழும்படி தவறிக் குதித்துப்பாயா நிற்பத் தேரின்மேலிருவர்சீறிச் சிங்கமுமிடி யுந்தீயுமொப்பவெகுண்டு பகைவரெதிர்ப்பின்றித் தம்முள் ளே முன்வந்தமயக்கந்தீராமற் சேதையோனோடு பொரு துவதென்றெண்ணிச் செய்தவீரபோரின்றன்மை யொருவ ராற்சொல்லத்தகாதென்க. (௪௬)

எரிக்கொன்றுஞ்சினக்கண்சேப்ப விளைத்தவில்குனிய
வாங்கிக்
சரிக்கொன்றங்கதத்தவீரர் கடுத்திளம்பிறையின்வாளி
பரிக்கொன்றுமொன்றவேவிப் பகப்படுபரிகள்வீழ்க
வரிக்கொன்றுஞ்சீற்றத்தொண்டேர சலமேலிருவர்காய்ந்தார்.

உரை.—நெருப்புப்போலச் சினந்தகண்சிவப்ப முழங் கும்வில்லை யிருவர்மிகவளைத் திருமதயானைகள்போலச்சீறிச் சந்திரபாணங்களொவ்வொருகுதிரைக்கொன்றெய்து விருவ ர்தேரிற்பூட்டியபுரவிகள் வெட்டுண்டுமடிந்துவீழ்தலான் ம லைமேற்சீறிய விருசிங்கங்களைப்போல வுயர்ந்ததேராகியமலை மே லிருவர் மிகவுங்காய்ந்துமுழங்காநின்றாரென்க. (௪௭)

நிலையுண்டதேரிற்செந்தீ நிலையுண்டமதியான்சீறிச்
சிலையுண்டபகழிபோக்கித் திறத்துண்டகவசமீர்த்தான்
மலையுண்டகவசமீர்த்தான் மறமுண்டவிழித்தீயோடு [பான்.
கொலையுண்டகணையொன்றேவுங் கூற்றுண்டவமலைக்கென்

உரை.—அங்ஙனம் பூட்டியகுதிரையெல்லாஞ்செத்து நிலை த்ததேரின்மேற் செந்தீயினுங் கொடியதாய்ச்சீறிக் கோபித் தமதியானோரம்பினைப்போக்கி யமலைக்குடுத்தவலியகவசத் தையீர்த்தான், இவனுங்கூற்றினுங்கொடிதாய்ச்சினந்த கண் விட்டதீயோடு கொடியதோரம்பினைவிட்டு அவன்மலையோ டொத்த மார்பிலணிந்தகவசத்தைப்பறுத்தானென்க. (௪௮)

மேவனிகர்வடிவைவாளி வில்விடையவன்கோர்த்தெய்ய
வாளிகர்விலங்கற்றன்னை வானுருமறுத்தாற்போலத்

தோனிகரமலேக்காகந் துளைத்தகோ லுருவியப்பாற்
கானிகர்மூடர்க்கோதுங் கலையெனப்போயிற்றன்றே.

உரை.—அப்பொழுது மதியான் வேலோடொத்த கூர்ந்
துவோரம்பினை வில்லிலேற்றியெய்தான் எய்தவம்பும் வானத்
திற்பாய்ந்தமலையை விழுந்தவிடிபிளந்தாற்போல மதயானை
யொத்த அமலேக்கென்பவன்மார்பினைத் துளைத்துருவி நீச
ருக்குச்சொன்னகல்விபோல வங்கேதங்காமற் காற்றினொத்த
விசையோடப்பாற்போயிற்றென்க. (௪௯)

தினம்பழுத்தமலேக்கேங்கித் தன்னுயிருயிர்க்கும்வே
லினம்பழுத்துயிரைத்தாங்கித் திங்களின்பாதிகோர்த்துக் [லை
கனம்பழுத்திழியெறுத்த கணையொடுமுயிரும்போக்கி
மனம்பழுத்தெதிர்ந்தோன்சென்னி வலித்தறுத்திருவர்மாய்
ந்தார்.

உரை.— அங்ஙனம் பட்டுருவினவம்பினால் வருந்தாநின்ற
வமலேக்கென்பவன் றன்னுயிர்தன்னைப்பிரிந்துபோகையி ல
தைக்கோபத்தின்வல்லமையாற் சற்றுநேரத்துப் போகவொ
ட்டாமற்றாங்கி யோர்சந்திரபாணத்தை வில்வாயிலேற்றிப் ப
ழுத்தமேகத்தினின்றிழியுமிடிபோல வப்பாணத்தையுந்தன்
னுயிரையும்போக்கி மனவூக்கத்தோங்கி யெதிர்நின்றமதியா
ன்றலையையறுத்தொருங்குடனிருவருமாய்ந்தாரென்க. (௫௰)

மாயிரவிடையிற்றம்பின் மயக்கொடுவீரரோர்நூ
றுயிரரோடுநாலை யாயிரான்றியங்கண்
டீர்வாசிற்சூழ்ந்த சுடிகையோர்மடிந்துமூவை
யாயிரரின்னுதிற்ப வளிர்சிகன்மூளைத்ததன்றே.

உரை.—அங்ஙன மிருண்டவிராநடுவின் மயக்கமிகுதியா
ற் றம்மிலொரு நூற்றிருபதினாயிரவீரரன்றிச் சந்திரன்போ
லவிளங்கிய முடியைச்சூழ்ந்தவரசரு மடிந்தபின் பின்னம்
பதினையாயிரம்பேருமடியாமனிற்பக் கீழ்த்திசையில்வெள்ளி
முளைத்ததென்க. (௫௧)

வேறு.

மண்மாமகள்போர்த்தவிருளின்போர்வை வாங்கிடத்தன்
னொண்மாவொளிக்கரத்தைநீட்டிவெய்யோ னுதித்தனகாற்
கண்ம யிருள்கொண்டமயக்கந்தீர்ந்த கடும்பகைவர்
விண்மாவிறையோன்றன்வலிமைகண்டு வெருவுற்றார்.

உரை.—அங்ஙனம் விடியற்காலமாகிப் பூவுலகமேற்போர்த்த விருளென்னும் பிடவையைவாங்கும்படி சூரியன்றன்கதிராகியகைகளை நீட்டி யுதித்துவருகையிற் பகைவருள்மடியாமனின்ற பதினையாயிரம்பேருங் கண்மாயைபோலமுன்கொண்டமயக்கத்தைவிட்டு யூகருள்ளொருவனு மெதிர்த்துப் போர்செய்யாமற் றந்தம்மைவெட்டினதென்றுகண்டு வான்கடவுள்காட்டிய வல்லமையிதென்றறிந்து மிகவும் வெருவியஞ்சாநின்றாரென்க. (௫௨)

நீவைவேலாடாவெருவியேங்கித் திறங்குழைந்தம்
மூவையாயிரருமோடயூகர் முடுகியவர்
மீவைவாளிதொடுத்தொருங் குமாய்த்தார் வியந்தெவரு
நாவையையிரட்டியடையாவண்ண நடுக்குறவே.

உரை.—அங்ஙனநின்ற பதினையாயிரம்பேரு மச்சமிகுதியாற்போர்செய்யவேந்தியவாயுதங்களைசையாமற்பிடித்துவெருவியேங்கித் திறங்குழைந்தோடத்துடங்கினார், அப்பொழுதியூத ரவரைத்துடர்ந்து மேல்விட்டவம்புமாரியா லொருங்குடன்வரைக்கொன்றார், இச்செய்தியைக் கேட்டோரெல்லாரு மதிசயித்துநடுங்கி யடைந்தவச்சஞ்சொல்லும்படி யைம்பதுநாக்குளதாயினும் போதாதென்க. (௫௩)

ஏமப்போர்க்களமிதென்னவிவ்வூர் களரியென்றார்
தாமத்தீபமொடுகொளந்தந்த சயமதும்வார்
வாமப்பாவையவையேந்தியெற்றை வளமறவா
றாமத்திறல்காட்டவைத்தானென்று னவிவாறேன்.

உரை.—அங்ஙன மயக்கமிகுதியாற் போர்செய்தகளமிது
வாகையி லிவ்வூருக்குப் போர்க்களமென்னுங் களரிமாபுர

மென்றுபேரிட்டார், மீளவுந் தீபமுங்காளமுங்கொண்டு பகைவரைமயக்குவித்து நாதன்பூதருக்கு வெற்றியைத்தந்ததனால் வெற்றிதானே விசையையென்றொருபெண்ணாக வத்தூணிலேற்றித் தீபமுங்காளமுங் கையிற்றந்து முன்னாண்டவன்காட்டியவளமை பிற்காலத்துமறவாதபடி யவன்றிருநாமவல்லமையைக் காட்டற்பொருட்டு வைத்தாரென்றானழகிய வாணிலுள்ள கபிரியலென்க. (௫௪)

மாலைத்தூணுச்சிவிரித்தநீல மணிப்பட்டத்து
வேலைத்தரளமெனவிளங்குமீன்பூம் பந்தர்க்கீழ்
பாலைக்கதிர்மதியந்தீபமேந்தப் பணித்தூண்மேற்
சாலைக்கடவுடிறற்கண்டகூசை தகவுற்றான்.

உரை. — அங்ஙன நடந்தகாதையை வானவன்சொல்ல நிலாவெளிச்சத்துக் கூசைகண்ட தூணின்குறிப்பறிந்தமையாவிராவொருதூணைக்கொண் டதினுச்சியில்விரித்த நீலமணியாற்செய்த மேற்கட்டியோடு கடலிலுள்ள வெண்முத்துக்களோடொத்த விளங்கியமீன்களாவிட்ட வழகியபந்தற்கீழே பாலோடொத்தகதிர்களை யழகிதாகவீசியசந்திரன் மணிவிளக்கேந்தாநிற்க வந்நகர்வாசல்முன்னே மணியாலலங்கரித்த தூண்மேலாண்டவன் முன்மிகக்காட்டிய வல்லமையினடையாளங்களைக்கண்டு மகிழ்ந்தோங்கினனென்க. (௫௫)

மாற்றருடற்படத்திலவர்தங்கையால் வடியுதிரத்
தேற்றாறித்தேற்றவரிதுன்னாண்மை யெழுதியபின்
றேற்றுறொனவருந்தித்துன்பத்தின்றுன் றிருவுடலத்
தாற்றுவன்பினிலைவரைந்தாயோவென் றடிபணிந்தான்.

உரை. — அங்ஙன மனத்தோங்கியகூசை தேவதிருக்குழந்தையைநோக்கிச்சொல்வான்: நீயேமுன்னாளிலுன்னைப்பகைத்தவருடலைப் படமாகக்கொண்டு அவர்தங்கையாற் சிந்தினதமதுதிரத்தை மையாகக்கொண்டுன்னைவணங்காதவருமறித்துவணங்கும்படி யுன்னரியவல்லமையை யெழுதிவைத்தபின்னரிந்நாளிலேதேறமாட்டாதவருள் ளொருவனைப்போல நீயேவருந்தி வருந்தியதுன்பத்தின்கையா லுன்றிருமே

னியென்னும்படத்தின்மே லாற்றாத வுன்றயையின்றன்மை
யை யெழுதவந்தருளினாயோவென்றிரங்கித் திருப்பாதத்தை
வணங்கினானென்க. (௫௬)

தணியாவலித்திறத்தையுலகங்கண்டு தாடுதிப்ப
மணியாரிவழ்சுடர்செய் தூண்மனனார வைத்துயர்த்தார்.
கணியாநயன்செய்யுனார்வங்காட்டுங் கம்பமென
வணியார்திருமேனியணித்தாயோவென் றடிபணித்தான்.

உரை.—தாழ்வில்லாத வுன்வல்லமையின்றன்மையை யுல
கெல்லாமறிந் துன்பாதத்தையெவரும்வணங்கும்படி யன்ற
வர் மணியார்க்கதிரைவிடுமித்தூணை யேற்றிவைத்தாரோ, இப்
பொழுதோவென்னில் நினையாதநன்மை யெமக்குவருதற்கு
க் காரணமானவுனதுகருணையைக்காட்டும்படி பூவுலகிலேற்
றிய பொற்றூணாகவழகிய வித்திருமேனியை யவதரித்தெடுத்
தாயோவென்று மீளவுங் குசைதிருப்பாதத்தை வணங்கினா
னென்க. (௫௭)

வினையங்கடனீந்திவழியென்றறியார்மிளிர்பைம்பொன்
மனையங்கதியடையநாட்டிவைத்த மணித்தூணே
நனையந்திருவடிநான்பிரியாவாழ்க நறும்பைம்பூ
வனையங்கதிர்மேனியணிந்தாயோவென் றடிபணிந்தான்.

உரை.—வினையாகிய பெருங்கடலைநீந்திக் கதியைச்சேரு
ம்வழியையறியாதமனிதர் வழிதப்பாமற் பொன்னுலகின்வீ
டாகியபரமகதியை யடையும்படி யடையாளமாகவிவ்வுலகி
னாட்டிவைத்த மணித்தூணீயே, பூவரும்போடொத்தவுன்றி
ருப்பாதத்தைவிட்டுப்பிரியாம னான்வாழும்படி வாசமலரா
த்தாய்விளங்கிய திருமேனியையெடுத்தவதரித்து மனிதனா
னாயோவென்று வாழ்த்திப் பாதத்தைவணங்கினானென்க.
(௫௮)

தானோர்களிப்பெருக்கிற்பலவுங்குசை சாற்றியபின்
வானோரவைகேட்டகளிப்பிற்பொங்கி மணிப்பண்யாழ்
தேனோரிசைதளிர்ப்பத்தாமும்பாடிச் செயிர்நீக்க
வீனோருடற்கொண்டோனெடிதுவாழ்த்தி யிசைசெய்தார்.

உரை.—அங்ஙனஞ் சூசை தானோரின்பப் பெருக்கத்தினு லோங்கி யிவற்றையும் பலவற்றையுஞ் சொன்னபின்ன ரவற் றைக்கேட்டுச் சூழநின்ற வீரையாயிரவானவர் மிகமகிழ்ந்தத ன்மையாற்பொங்கி மணிவீணைக ளினியவிசைகளைத் தளிர்த் தெழுவிப்பத் தாமும்பாடி மனிதர்பாவவினைகளைத்தீர்ப்ப ம னுவுடலையெடுத் தவதரித்தநாதனை நெடிதுவாழ்த்திச் சூசை சொன்னதற் கிசைகளைப்பாடாநின்றாரென்க. (௫௯)

சிறந்ததிருப்புகழார்கீதங்கேட்ட செழுந்தவத்தோன்
திறந்தமணிக்கதவம்புக்கம்வீட்டிற் சென்றவன்போன்
மறந்தமெய்யுருகமங்குலெல்லாம் வழிவருத்தந்
துறந்ததுயிலாகத்தொடுத்ததேவ துதிவிள்ளான்.

உரை.—அங்ஙனம் வானவரினிதாய்ச் சிறந்ததிருப்புகழா கப்பாடிய சங்கீதத்தைக்கேட்ட நற்றவத்தோனாகிய சூசை த னக்குமோட்சவாசலின் மணிக்கதவுதிறந்ததா யதினுட்புகு ந் தழகியபரமகதிவீட்டிற் சென்றவனைப்போலவடைந்தவி ன்பமிகுதியான் மறந்தமெய்யுருகாநிற்க வழிநடந்தவருத்த த்தையாற்றுதற்கு நற்றுயிலிடமாகத் தொடுத்த தேவதுதிக ளை யிராவெல்லாம்விடாதிருந்தானென்க. (௬௰)

சேதையோன் வெற்றிப் படல முற்றும்.

ஆகப்படலம் - ௰௬-இ-விருத்தம்

௩௬௱௫௨.

பதினேழாவது.

காசைசேர்படலம்.

வேறு.

பள்ளியத்தாமரைப் பறவையார்ப்பெழத்
தெள்ளியம்வைகறை தெளிப்பவாரணம்
வெள்ளியன்றுதித்திருட் படத்தைமேதினி
தள்ளியம்முகத்தரத் தடங்கொண்டேகினர்.

உரை. — அங்ஙனமரியுஞ்சூசையுந் தேவதிருக்குமாரனை வைத்துக்கொண் டிராவெல்லாங்களரிமாபுரத்தண்டைக்கொரு மண்டபத்திலிருந்தபின்ன ரழகிதாய பள்ளியிடமாகிய தாமரைப்பூமலர்மேற் றுஞ்சியபறவை வாய்விட்டார்ப்பவுந் தெளிந்தவிடியல் யாமமாயிற்றென்று கோழிச்சாவல்கள் கூப்பிட்டுச்சொல்லவும் வெள்ளிமீனுதித்துவிளக்கவும் பூவுலகமேற்போர்த்த விருளின்போர்வையைத்தள்ளிநீக்கி யழகிய முகத்தைக்காட்டவு மப்பொழுதவர் புறப்பட்டுப்போகத்துடங்கினரென்க. (க)

புதையொளிப்பவளக்காற் பொலியநீட்டிய
ததையொளிமரகதப் படத்துத்தைத்திருள்
வதையொளிப்பலமணி மானவாயெலாந்
துதையொளிப்பலமலர்ச் சோலைவண்ணமே.

உரை. — அவர்போகிறவழிகடோறும் விளங்கியபவளத்தூண்கள்மேல் விரித்தகதிர்செய் மரகதமணிப்படத்திற் றைக்கப்பட்ட விருளைக்கொல்லுமொளியைவீசிய பலமணிகளைப்போலத்தோன்றின வெங்குங்கிடந்த வொளிர்ந்த பலமலர்பூத்த பலசோலைகளென்க. (உ)

திறைசுமந்தடிதொழுந் தெவ்வர்போன்மது
நறைசுமந்திணர்க்குடஞ் சுமந்ததாண்மலர்
நிறைசுமந்திரும்பொழி னெரிந்தபுள்ளினம்
பறைசுமந்தடித்தெனப் பாடுமோதையே.

உரை. — மீளவும் பகைவர்வந்துதிறைகட்டற்குக் கொண்டுவந்தவற்றைக் கையிற்சுமந்து மன்னவன்பாதத்தை வணங்காநின்றதுபோல மதுவாய்விட்ட வாசனைநிறைந்தபூவிதழாகியகுடங்களையொத்த மலரைச்சுமந்துநிற்கு முயர்ந்தசோலைகடோறு மிராவிலொடுங்காநின்ற பறவையினங்க ளவர்போகிறநேரத்துச்சுமந்தபறையையடித்தாற்போலப் பாடியவோசை மிகவு முழங்கிற்றென்க. (௩)

தேமொழிக்கிளியுஞ் செழும்பொற்பூவையும்
பாமொழிக்கையிலும் பண்செய்தேனொடு
பூமொழித்தும்பியு மருளிப்பொங்கொலி
நாமொழிக்கீதம்போ னரலப்போயினர்.

உரை. — அங்ஙன முழங்கியபலபறவைகளுள்ளு மினிய சொற்கிளிகளு மழகியபூவைகளும் பாநிகராய்ப்பாடியகுயில்களும் வீணையிசையின்முரலும் பெண்வண்டோடு பூங்காவிற்பாடு மாண்வண்டுகளு மிவையெல்லாமொருங்குடன்கூடித் தளிர்த்தவினியவோசைகள் பாடுவர்வாய்ச்சங்கீதமொப்பமுழங்கிவருகையி லவர்போனரென்க. (௪)

அள்ளிலைக்கமலமே லணிச்சங்கின்றமுத்
தொள்ளிலைக்குவளைகண் விழித்துகுத்ததே
னள்ளிலைப்புறத்திழி நழுவப்புள்ளொழக்
கள்ளிலைக்கொழுந்தடங் கடந்துபோயினர்.

உரை. — நெருங்கியவிதழ்த்தாமரைமே லழகியசங்குகள் முன்னீன்றுகிடந்தமுத்துக்களும் விளங்கியகருங்குவளைகள் கடாகம்விழித்த கண்களாகமலர்ந் துமிழ்ந்த தேன்றுளிகளு நடுவிதழ்களினின்று கீழ்வீழ்வதற்குக்காரணமாக வங்கேயி

ருந்தபறவைக ளிவர்வருவதைக்கண்டு வெருவியெழும்பிட மதுமலர்த்தடாகத்தைக்கடந்து போனாரென்க. (௫)

நவிவரிநகுலமு நாவிப்பிள்ளையுங்
கவிவரிநிபுடமுங் கானக்கோழியுஞ்
சவிவரிநவிரமுங் களபத்தந்தியுங்
குவிவரிமலைச்சரி குதிப்பப்போயினார்.

உரை.—அங்ஙன மவரப்புறம்போ யழகிதாகப்பொறித்த கீரிகளு நாவிப்பிள்ளைகளு நெருங்கியகுரங்குகள்கூட்டமுங் கானக்கோழிகளு மயில்களும் யானைக்கன்றுகளு மிவையெல்லாங் கூட்டங்கூட்டமாய் மலைச்சாரலிற் குதித்துவிளையா டாநிற்ப வச்சாரலினருகே யிவர்போனாரென்க. (௬)

மட்டிடையலர்ந்தைய மலர்பெய்சோலையு
நட்டிடையணிவய னாடுங்குன்றமு
நெட்டிடைநெறிகளு நீந்திக்கான்பொழி
மொட்டிடைநிழற்பொழின் முழைக்கணெய்தினார்.

உரை.—அங்ஙன நடந்துபோய் மதுநிறைந்ததடாகங்களையு மலர்ந்தசோலைகளையு முடிநட்டுப்பசும்பயிரழகுடைய வயலினாட்டையு மலைச்சாரலையு நீண்டபலவழிகளையுங்கடந்து வாசமலரைப்பூத்து நிழல்செய்யுஞ்சோலையிடத்துச் சென்றாரென்க. (௭)

நண்பகனெற்றிவா னடக்குங்காலையாழ்
மண்பகவூன்றிமேன் மலர்ந்தபூஞ்சினைச்
செண்பகநிழற்றிய மணற்றிண்ணைமே
லொண்பகலொத்தொளிர்ந் துவந்தனைகினார்.

உரை.—சூரியன் வானத்துச்சியினடக்கும்வேளையி லங்ஙனமவர் நிழற்சோலையிற்சென்று ஆழமாய் நிலத்தைப்பிளந்து வேரையூன்றியதன்மைத் துயர்ந்து மலரைப்பூத்தணிந்தகொம்புகளைவிரித்த சண்பகமரங்கள்செய்தநிழலாற் குளிர்ந்தமணற்றிண்ணையின்மேற் சூரியனையொப்ப விளங்காநின்றவரிருந்தாரென்க. (அ)

அணிமுகத்தளியின மலம்பியாழ்செய
மணிமுகக்குயிலின மகிழ்ந்துபாடவொண்
பிணிமுகத்தினஞ்சிறை பிரித்தங்காடவிற்
பணிமுகக்கதலிநற் பழன்கண்மாந்தினர்.

உரை.— அங்ஙன மவரிருந்தபின் பழகிதாகவிரிந்தவண்டினங்கள்முழங்கிவீணைசெய்யவும் வனப்பின்மிக்ககுயிலினங்களினிதாய்ப்பாடவும் விளங்கிய பிணிமுகத்து மயிலினங்களெழுதப்பட்ட தந்தோகையைவிரித்தாடவும் பணிந்தாற்போலத் தலைகுனிந்து வாழைகள்தந்த தீங்கனிகளையுண்டாரென்க. (௯)

தேஞ்சினைமலர்மதுத் தின்றவண்டரு
காஞ்சினையொசிந்தினி தலம்புந்தன்மைபோற்
குஞ்சினைமலர்த்தொடை தாளிற்பெய்துபைம்
பூஞ்சினைமுகத்திருப் புதல்வன்வாழ்த்தினர்.

உரை.— அக்கனிகளை யங்ஙனமுண்டபின்பு வாசமலரிடத்து மதுவையுண்டவண்டுகளதினருகுள்ளகொம்பிலொசிந்து நன்றாகப்பாடுமாப்போலே மரியுஞ்சூசையும் பூவரும்புகளைமாலையாகக்கட்டித் திருப்பாதத்திலணிந்து பைம்பூவரும்பொத்த முகத்தோடுநின்ற தேவதிருக்குமாரனைப் புகழ்ந்துவாழ்த்தினரென்க. (௰)

நானிலங்கடந்தவர் நண்புகழ்க்கிசை
மீனிலத்திசையினோர் விரும்பிப்பாடலின்
வானிலங்கலந்துயர் மதிளின்பொன்முகங்
கானிலங்கொடியினோன் கனிகண்டானரோ.

உரை.—அங்ஙன மிருவரொந்நாற்றிறத்தையுங்கடந்து நுணிதாய்நினைத்த திருப்புகழ்களைச்சொன்னதற் கிசைகளைப்பாடினாற்போலச் சூழநின்றவானவர் விரும்பிப்பாடிக்கொண்டுவருகையில் வாசப்பூங்கொடியுடையசூசை யப்பாலொசிந்துபார்த்து வானத்திற்கலந்துயர்ந்த பொன்மதிலின் றோற்றத்தைக் கண்டானென்க. (௰௧)

தேனிரைத்தலர்ந்தபொற் குன்றச்சென்னியின்
மேனிரைத்தொழுகிய வெள்ளியாறென
வானிரைத்துயர்மணி மாடநெற்றிகட்
கோனிரைத்தசைகொடிக் கோட்டம்யாதென்றான்.

உரை.—குசை யம்மதிலைக்கண்டவளவிலே நிரைநிரையாய்த் தேன்மலரைப்பூத்தபொன் மலையுச்சிமேனின் றிழிந்தொழுகும் வெள்ளியாறுபோலத்தோன்றும்படி யொழுங்குபட வானத்துயர்ந்த மணிமாடங்கடோறு முச்சிமேனிரைத்து வைத்தபொற்காம்புகளிலெழுந்தாடியகொடிகளைவிரித்த வந்நகரேதென் றருகுநின்றவானவரைக்கேட்டானென்க. (௰௨)

வேறு.

ஆசைகொண்டறைந்தமாற்ற மறஞ்சயனென்னும் வானோன்
பூசைகொண்டிறைஞ்சிக்கேட்டுப் பொழிமதுவுரையிற்சொல்லும்
மாசைகொண்டொளிர்குன்றன்ன வயங்குமந்நகரமுன்னோர்
காசையென்றனர்முன்னாளென் காவலூரவ்வூரென்றான்.

உரை.—அங்ஙனங் குசையாசையோடுசொன்னதையறஞ்சயனென்னு மருகுநின்றவொருவானவன் வணக்கத்தோடுகேட்டு மதுவைப்பொழிந்த வினியவுரைகளைக்கொண்டு சொல்வான்: பொன்னொளியைவீசிய மலையோடொப்ப விளங்காநின்ற வந்நகரை முன்னோர் காசையென்றார், தானு முன்னாளிலேயாண்டவனேவலா லவ்வூருக்குக்காவலாக நின்றேனென்றானென்க. (௰௩)

தோடுண்டமணிப்பைம்பூந்தார்க் குசையேநீயுந்திங்கட்
கோடுண்டபதத்தினானுங் குழவியாய்ப்பேணுநாத
னீடுண்டதிறமும்பெண்மை யின்பமென் றிருட்டுமாசை
கேடுண்டதிறமுங்காட்டக்கிளைத்ததீங்குரைப்பல்கேண்மோ.

உரை.—மணிச்சாயலாய் மலரைப்பூத்த கொடியையேத்தியகுசையே! நீயு மிளம்பிறைமிதித்த பாதத்தையுடைய மரி

யென்பவனும் பேறுநிற்குங் குழந்தையாய்ப்பிறந்தநாதன் வல்லமையிற்கொண்ட பெருந்திறத்தையும் பெண்மையின்பமென்று மயக்குவிக்குமாசையினால்வந்தகேடுகளின் றன்மையையுங்காட்டும்படி முன்னிங்கேநடந்தசெய்திகளை நான் சொல்லக்கேட்பாயாகவென்றானென்க. (௰௪)

சேமஞ்சால்திறத்துநாதன் சிறுமையிற்பெருமைகா
ட்ட
வாமஞ்சால்மணியிற்சென்னி மயிர்ப்புலந்தொத்தித்தந்த
தாமஞ்சால்திறத்தினாண்மை தாங்கியசஞ்சோனென்பா[ன்.
னாமஞ்சால்வழங்கத்தோர்வை நவைபெறுவரம்பெற்றான்

உரை.—அங்கேநடந்தகாதை யாதெனில் தன்வயத் தளவிறந்தவல்லமையுடையநாதன் சிறியவற்றைக்கொண்டு தன் பெருமைகாட்டும்படி நீலமணியின்சாயலாய் விளங்கியதலைமயிரிடத் தொத்தித்தந்த நிறைந்ததிறத்தினாண்மையைக்கொண்ட சஞ்சோனென்னுமொருவன் றன்னாமம்வழங்கும்படியெக்காலத்துந்தோர்வைபடாமல் வெற்றிகொள்ள வரத்தோடுபிறந்தானென்க. (சஞ்சோனென்பவற்குத் தலைமயிருக்குமளவும் வல்லமை பாடின்றிவழங்கவு மம்மயிரழிந்தகாலத்து வலித்திறமழியவு மாண்டவ னவற்குவரந்தந்தமையாற் றலைமயிர்ப்புலத்தொத்தித்தந்த வரமென்றானென்க.) (௰௫)

வல்லரிக்குழவிபோன்றே வயத்தொடுபிறந்ததோன்றல்
செல்லரிநடவேலொடோங்கிச் சிறுவனாய்ச்சிறுமையின்றிப்
புல்லரிதகன்றகானிற் புடைத்துணையின்றிப்போகிற் [வான்.
கொல்லரியெதிர்ப்பக்கையாற் கொறியெனவகிர்ந்துகொல்

உரை.—அங்ஙனஞ் சிங்கக்குட்டிபோல வல்லமையின்வரத்தோடுபிறந்தசஞ்சோ னடைதற்கரிய திறத்தோடுவளர்ந்து தான் சிறுவனாயினுஞ் சிறுமையொன்றின்றிப் போதற்கரிய வகன்றகானத்துத் துணையின்றிப்போகையிற் சிங்கங்களெதிர்த்தாலு மவற்றைக்கையாற்பிடித்துவகிர்ந்துகொல்வானென்க. (௰௬)

நனித்திருத்தகவொன்றந்த தனித்திறல்வன்மாற்றார்மே
வினித்திருத்திடனன்றென்ன வீங்குண்டபீவித்தேயர்
பனித்திருத்தடுத்ததந்த பழமறைபகைத்தாரென்ன [தார்.
முனித்திருத்திறத்தசஞ்சோன் மொய்செயவளவின்மாய்ந்

உரை.—அங்ஙனஞ் சஞ்சோன்வளர்ந்தவளவிலே தலை மிரோ டரியவாண்மையும் வளர்ந்தமையாலதை யொப்பின்றித்தனக்குத்தந்த தனிப்பெருஞ்செல்வமுடையநாதனைப் பகைத்தவர்மே வினியென்வல்லமைசெலுத்துவது நன்றென்று முன்னிற்நாட்டிலிருந்தபீவித்தேயர் குளிர்ந்தசீனயிமாமலையின்மே லாண்டவன்றந்த பழையவேதத்தைப் பகைத்தாரென்று அவர்மேற்போய் வலியசஞ்சோன்முனிந்து போர்செய்தவளவிலே யவர்மட்டின்றி மடிந்தாரென்க. (௰௭)

கதிர்படும்வயலிற்செந்நெல்காய்த்தனநாளிலோர்நா [ட்
ளெதிர்படுநரிகண்மூந்நூ றிவன்பிடித்திரண்டாய்ச்சேர்த்தி
பொதிர்படும்வாவில்வாலைப் புணர்த்தவோ டெரிதீப்பந்தம்
பிதிர்படும்பொறிகள்சிந்தப் பிணித்திகலூட்டில்விட்டான்.

உரை.—அங்ஙனஞ் சஞ்சோன் பீவித்தேயரைப் போர்முகத்துக்கொன்றதுமல்லாமே வயல்கடோறுங் கதிராவிட்டுச் செந்நெல்பழுத்தநாளிலே யொருநாள் மூந்நூறுநரிகளைப் பிடித் திரண்டிரண்டாய்ச் சோடாகச்சேர்த்தி வாலோடுவாலைப்பிணைத்துத் தீப்பொறிகள்சிந்தும்படி யெரிந்தபந்தங்களைவாலிலேகட்டிப் பகைவர்நாட்டிலே விட்டானென்க. (௰௮)

எண்டிசைசம்புமோட வெண்டிசைபொறித்தீச்சிந்த
மண்டிசைவளியும்வீச மண்டிசைகொழுந்துத்தீயால்
விண்டிசைமலர்த்தண்காவும் விண்டிசைதவழ்நெற்போரும்
பண்டிசைபகைவர்நாடும் பழிபழுத்தெரிந்ததன்றே.

உரை.— அங்ஙனம் விட்டநரிக ளெண்டிக்கிலுமோடி வாலிற்கட்டின தீப்பந்தங்கள் பொறிகளைச்சிந்திவருகையிலெழுந்த பெருங்காற்றின்முகத்துக் கொழுந்துவிட்டெரிந்ததீயினா லுயர்ந்தமலர்ச்சோலைகளு மேகத்துட்கலந்த நெற்

பேர்களும் பீலித்தேயர்பழநாடெங்கு மிக்கபழியாம்படி யெரித்ததென்க. (௰௯)

மூனிப்பட்டார்பீலித்தேயர் மொய்ப்படையின்றியோர்நாள்
தனிப்பட்டான்சஞ்சோனென்னத் தாம்வயவரிகள்போல
வினிப்பட்டானென்றுசீறி யெண்ணிலாரவனைச்சூழ்ந்து [ர்.
தொனிப்பட்டார்த்தரியபோரைத் துடங்கினார்வயிரத்தோளா

உரை.—அங்ஙனந் தந்நாடெரிந்ததென்று மிகவுஞ்சினந் தபீலித்தேய ரொருநாள் கையாயுதமொன்றுமின்றிச் சஞ் சோன்றனியேநின்றானென்றுகேட்டவருள் வயிரத்தோளு டையமட்டில்லாதார் கொடியபுலிகளைப்போலமொய்த் தினி யவன்பட்டானென்றார்முழங்கி யவனைச்சூழ்ந் ததிர்த்தார்த் துக் கொடும்போரைத்துடங்கினாரென்க. (௨௰)

வீங்கினான்வெறுங்கைச்சஞ்சோன் விளிந்தவேசரிவாயென்பும்
வாங்கினான்வயிரத்தண்ட வயப்படையென்னச்சீறி
யோங்கினானரும்போராக வொன்னலர்படைகளெல்லாந்
தாங்கினானரியேறன்ன தாக்கினான்பகைவர்மாள்க.

உரை.—அங்ஙன மவர்வருவதைக்கண்டு வெறுங்கையோ டுநின்றசஞ்சோன் கோபமிகுதியா லிருபுயங்களோங்கி யங் கேகிடந்தசெத்தகழுதையின் வாயெலும்பையெடுத் ததுவே வயிரத்தண்டாயுதமாகக்கொண்டு மேலோங்கிமுழங்கித்தன் மேல்மொய்த்துப் போர்செய்து பகைவரெறிந்த பலவாயுத ங்களையத்தாலேதாங்கிச் சிங்கவேறுபோல வவர்மடிந்துகெ டும்படிதாக்கிப் பொருதானென்க. (௨௧)

அதிர்த்தனன்றிரவான மார்த்தனன்றனிவல்மொய்ம்
பிதிர்த்தனனரியதண்டம் வீசினனெண்ணிலாவி [பான்
யுதிர்த்தனனுதிரவெள்ள மோடவெங்கதக்கண்வாயுங்
கதிர்த்தழலோடவோடிக் கதக்கனத்துருமின்மிக்கான்.

உரை.—அங்ஙன மொப்பில்லா தவலியோனாகிய சஞ்சோன் வானமதிரும்படி தானதிர்த்தார்த்தான், சொன்னவரியதண்டாயுதத்தையசைத்துவீசி யெண்ணப்படாதவுயிர்களை யுதிர்த்துச்சிந்தினான், வெள்ளமாகக் குருதிகளெங்குமோடும்படி தன்கண்வழியாகச்சினந் தழல்புறப்படவிட் டங்கங்கே யோடிச் சினந்தமேகத்தினின் றிடித்துவிழுமிடியினுமிக்கானென்க. (௨௨)

இந்திணை குனிவில்சிந்த வீர்க்கடைபகழிசிந்தக்
கத்திணை கரங்கள்சிந்தக் கரியநெய்மூளை சிந்தப்
பத்திணை சிரங்கள்சிந்தப் பல்லுயிருடலஞ்சிந்தச்
சிந்தினையெவருஞ்சிந்தச் சிந்தினகுருதிச்சிந்தே.

உரை.—சஞ்சோனங்ஙனம்பொருதமுகத்துப்பிறைபோலத் தன்மேல்வளைத்தவில்லுகளு மெய்தவம்புகளு மழிந்துகெடவு மூட்டினைவிட்டுக் கைகளற்றுப்போகவுங் கருங்குருதியோடு மூளைகள்புறப்பட்டுச்சிந்தவு மெறிந்தபந்துகள்போல வாகாயத்திற்றலைகள்பறக்கவு முடலைவிட்டுயிர்கள்பிரியவு மனைவருஞ்சிந்தனைகெட்டுமயங்கவு மாறுகக்குருதிகளோடினவென்க. (௨௩)

ஆயினதன்மைத்தங்க ணாயிரமுருமிற்பாய்ந்து
பாயினவிடங்கடோறும் பரப்பினான்பிணத்தின்குப்பை
வீயினபகைவரங்கண் விழுந்தவாயிரருமன்றி
யோயினவமர்விட்டோடி யுடற்குறையிலருமுண்டோ.

உரை.—சஞ்சோனொருவன்போர்செய்யும்விசையையாராய்ந்தகாலத் தாயிரமிடிகள்போர்செய்தனவென்னும்படியவ னங்கங்கே விசையிற்பாய்ந்து பாய்ந்தவிடமெல்லாம் பிணத்தின்குப்பைகளைப்பரப்பினான், அங்ஙனஞ் செத்தப் போர்க்களத்தில்விழுந்தபகைவ ராயிரம்பேருமன்றிப் போரைவிட்டோடினவருள்ளு முடற்குறையில்லாதவ ரில்லையென்க. (௨௪)

புறத்துணைகடந்தவல்லோன் போர்க்களத்தொருவனின்று

திறத்துணைவனாத்தோள்வீங்கித் திசைதிசைசுளித்துநோக்கி
மறத்துணை துணையென்றுற்ற வஞ்சகரோடக்கண்டே
யறத்துணைபெற்றுற்பெற்ற தழிவுண்டோவிடையிலென்றான்

உரை.—அங்ஙனம் பீலித்தேயர்மடிந்தவரொழிய மற்றவ ரோடவி ஞெருப்பில்லாத வலியோனாகிய சஞ்சோனொருவன் போர்க்களத்திலே தனிநின்று மலையோடொத்ததிறத்த தன் னிருபுயங்களை யசைத்தோங்கிச் சூழக்கோபத்துடனேநோ க்கித் தம்மறமேதுணையென்றெண்ணித் தன்மேல்வந்த வஞ் சப்பகைவரோடக்கண்டு நல்லறமேதுணையாகக்கொண்டவ ற் கிடையிலேயழிவொன்றுண்டோ வில்லையென்றானென்க. (௨௫)

கார்த்திரளனையவார்த்த கதத்தொடுகனலும்விம்மிப்
போர்த்திரளியற்றினுட் புலத்தெழுந்தாகமாற்றாச்
சூர்த்திரள்பயத்ததண்டஞ் சுனையினூற்றெனவென்பின்வாய்
நீர்த்திரளோடச்சால்பின் னிமலனைவாழ்த்தியுண்டான்.

உரை.—அங்ஙனம் பலமேகங்கள் திரண்டிடித்தாற்போ லச் சஞ்சோன் மிகவுமுழங்கினகோபத்தோடு மிக்கெழுந்த வனலினாலு நெடுங்காலத்துக்குதித் தலதிப்பாய்த்து செய்த போர்மிகுதியாலு முள்ளேகிளம்பியதாகமாற்றமாட்டாமை யிற் பகைவனைக்கெடுத்து வெற்றிதந்த தண்டாயுதமாகியசெ த்தகழுதைவாயெலும்புதானே யொருசுனையினூற்றதாகவதி னின்று திரளாய்த் தண்ணீர்புறப்பட்டோடவி ஞண்டவன் றந்ததென் றவனைவாழ்த்திநிறையவுண்டானென்க. (௨௬)

வேறு.

மலைமூழ்குந்திண்டோளான்மன்னூர்வைகு மந்தகருள்
ளலைமூழ்குஞ்சுடர்போயோர்தாள்புக்கானென் றறிந்தன்னூர்
விலைமூழ்குமணிக்கோட்டக்கதவம்பூட்டி விடிந்தனபின்
கொலைமூழ்குமுயிர்ப்பழியைக்கொள்வதென்னக் கூர்த்துவ
ந்தார்.

உரை.—இவையெல்லாமாயபின் பொருநாள்மலையினுந் திணியபுயத்தையுடையசஞ்சோன் பீலித்தேய ரந்நாளிலிரு

ந்த காசையாகியவந்நகரினுட் சூரியனத்தமித்தபின்புவந்து புகுந்தானென்று அவரறிந்து விலைமதியாதமணிநகர்வாயிற் கதவைநன்றாய்ப்பூட்டி மறுநாள்விடிந்தபின் னவனைவளைத் துக்கொல்வோமென்று மிகவுமகிழாநின்றாரென்க. (௨௭)

நற்றொழில்செய்தாயினபின்னன்றான்போகத் தாமம
ணிக் [றார்
கற்றொழில்செய்வாய்க்கதவமடைத்ததென்னக் கண்டோன்
புற்றொழில்செய்வலியிதுவோவென்னநக்குப் பொற்கதவ
மற்றொழில்செய்புயத்தெடுத்தம்மலைமேலுய்த்தான் மயிர்த்
திறத்தான்.

உரை.—சஞ்சோ னவ்வூரிலே தான்செய்யவேண்டியவற்றை முடித் திராவிலேதானேபோகையின் மணிக்கல்லாற்செய்யப்பட்டவாசற்கதவு பூட்டினதென்றுகண்டு பகைவர்வல்லமைசெய்யத்தகும் புற்றொழிலிதோவென்று மிகவுநக்குப் பூட்டழியா திருகதவுகளை யொன்றாய்ப்பேர்த்து வலியதன்றோள்மேலெடுத்துப்போ யங்கேதோன்றியவம்மலைமேலே கொண்டுவைத்தான் மயிர்ப்புலத்தரியவலியுடைய சஞ்சோனென்க. (௨௮)

போர்முகத்துநிகரின்றிப்பொலிந்தவெற்றி புனைந்து
யர்ந்தோன்
கார்முகத்துமணிக்கூந்தல்வலைபட்டோர்பூங் கவினல்லா
ளேர்முகத்துவயங்குழையச்சிதைந்ததன்மை யினிக்கேட்
டோர்
பார்முகத்துப்பெண்மையினோர்பழியுங்கேடுமில்லையென்பார்.

உரை.—அங்ஙனம் போர்முகத் தெதிரின்றித் தோல்வியின்றி யரியவெற்றிகளைக்கொண்டுயர்ந்தசஞ்சோ னதற்குப்பின்பு மேகமொத்த நீலமணிக்கூந்தலாகிய வலையுட்பட்டுப்பூஞ்சாயலி னழகியதொருபெண்முகத்துமுன்னே தன்வல்லமைகுழைந்து தானுங்கெட்டதன்மை யினிக் கேட்டவரெல்லாரும் பூவுலகிற்பெண்மைவிடப் பெரும்பழியுங் கேடுமில்லையென்பாரென்க. (௨௯)

கடம்புனைந்தவளையுருட்டும்பெருஞ்சீர்ச்செங்கோற் க
டிவளமுஞ் [ரான்
சடம்புனைந்துபெண்ணாசைச்சழக்கிற்கோது மென்றுண
விடம்புனைந்தநலம்பொறித்தவிலைமாதென்னுந் தாவிலையோ
ர் [தான்.
நடம்புனைந்தவரிவையின்மேனவையுற்றெஞ்ச நசைவைத்

உரை.—பெண்ணாசையினாற் சஞ்சோனெங்ஙனங்கெட்டழிந்தானென்னில் நீதிநன்முறைகொண்டசக்கரத்தையுருட்டாநின்ற பெருஞ்செல்வத்துயர்ந்த செங்கோலின்வளமையுமுதலாய்ப் பெண்ணாசைவிளைவிக்குங்குற்றங்களாற் கொடுமைகொண்டவளையுமென் றவனினையாமல் நஞ்சினைக்கொண்டழகிதாகவெழுதிய விலைமாதாய நாடகக்கணிகையாயொருத்திதாவிலையென்பவளைத் தான் றீவினைகொண்டுகெடும்படி விரும்பினானென்க. (௫௰)

காதளவுநீண்டலவுங்களிக்கண்மாமை கனிந்துண்ட
போதளவுகாதலுளங்கோட்டியன்னாட் புணரியினாழ்
கோதளவுமனமூழ்கிநிலையுங்கொள்ளாக் குழைந்தலைதன்
றீதளவுமனமயங்கிச்சிறைபட்டத்தீச் சிறைவிள்ளான்.

உரை.—அவனங்ஙனங்காதளவாகநீண்டுலாவிக் களிகூர்ந்தவவளிருகண்வடிவினைத் தானின்பமென் றண்டுவருகையி லுள்ளெழுந்தவாசை மனத்தைவளைத்துக் கடலினுமாழமுளதாய்ப் பாவநிறைந்ததா யவள்மனத்திற்றான்முழுகியதிலேநிலையுங்கொள்ளாமற் குழைந்தலைந்து தீதளாவிய தன்மனமயங்காநிற்பச் சிறைபட்டவனைப்போலவாகி யத்தீயசிறையுந் தான்விடமாட்டாதிருந்தானென்க. (௫௧)

அண்ணிப்பற்றன்பறிந்தவரிகர்பொற்சால்பளித்தன்னா
ணண்ணிப்பற்றருந்திறத்தின்னிலைகேளென்ன நனிகேட்டா
ளெண்ணிப்பத்தங்கையிடுமேலவைநட்பு மியற்பிறப்புங்
கண்ணிப்பற்றுதென்னைகடிதிற்செய்யாள் பெண்பிறந்தாள்.

உரை.—அடிக்கடியங்ஙன மவளண்டைக்குச் சஞ்சோன்போ யவளைப்பற்றிவைத்தவன்பினை யறிந்தபகைவராகிய பீ

வீத்தேயர்தாலிலையிட்டப்போய் வெகுதிரவியங்களைக்கொடுத்து நாம்வெல்லப்படாதபடி சஞ்சோனுடைய வருந்திறத்தாண்மைவகையைக்கேட்டுச் சொல்வாயாகவென்றுமிகவுங்கேட்டார், பத்துமாத்திரமே யெண்ணிக்கையிலேபோட்டகாலத்து நட்பும்பிறப்பு மொன்றாமெண்ணாம வுடனேயென்ன செய்யாள் பெண்ணாய்ப்பிறந்தவளென்க. (௩௨)

கோற்கலந்தகண்விருப்பங்குளிரக்காட்டிக் கொல்லக
 த்தாள்
பாற்கலந்தநஞ்சன்னபணித்தீஞ்சொல்லாற் பகைக்கெஞ்சா
மேற்கலந்தவலிநிலையெங்கென்றாள்காதல் வெறுப்பாற்றா
மாற்கலந்தவன்பிறலைமயிர்க்கணென்றான் மதிகெட்டான்.

உரை.—தாலிலையோவென்னிற் பீலித்தேயர் கேட்டபடி செய்யற்பொருட்டுத் தன்னண்டைக்குச் சஞ்சோன்வந்தவுடனே யம்பொத்த தன்கண்களால்வன்மனங்குளிரும்படி விருப்பத்தைக்காட்டாநின்று மனதிலேகொலைத்தொழிலினைத்த வஞ்சகத்தாளாய்ப் பாலோடுகலந்த நஞ்சினையூட்டினாற்போல வினியகுதலைச்சொல்லைக்கொண்டு உன்பகைவர்கெடுக்கப்படாத மேலானவல்லமை யுனக்குநிற்பதெங்கேயென்றாள், அதைக்கேட்டசஞ்சோ னவளாசைவெறுக்கமாட்டாமலன்பின்மயக்கத்தினான்மதிகெட்டு என்றலைமயிரிலே நிற்பதென்றானென்க. (௩௩)

முதிர்சூலும்பெண்காதின்மொழியுநில்லாமுறையிலவள்
கதிர்சூழுமுதயத்தன்றொன்னார்க்கெல்லாங் காட்டியபின்
பொதிர்சூழும்பின்னிரவின்பத்தன்னாள் பூமடிமே
லெதிர்சூழுங்கேடுணரான் முஞ்சமயிரீர்த் திமிழ்த்தனளே.

உரை.—முற்றியகருப்பமும் பெண்காதிலேவைத்தசொல்லு முடனேவெளிவாராமனில்லாதென்றமுறையோடவளுஞ் சூரியனுதயத்திற் பகைவர்கிட்டப்போய்ச் சஞ்சோன் சொன்னதெல்லாவற்றையுஞ் சொல்லிக்காட்டினாள், அதின்பின்பு சஞ்சோன்முறையின்படி யிராவிலே யவளண்டைக்கு

வந்தினிதாயவள்பூமடிமேல்வருங்கேடணராமற் றூங்காநிற்பப் பகைவர்வந்து அவன்றலைமயிரறுத் தவனைக்கட்டினரென்க. (௩௪)

மின்னிருளெனவெரிக்கண்விழித்தியாக்கை விடமேற்று
முன்னினாள்கொலைநட்பில்வஞ்சித்தாளென் றுளத்தெஞ்சித்
துன்னினார்பழம்பழியாருவப்பிலார்த்துச் சுடுநகைச்சொற்
பன்னினார்விழிகுடைந்தார்பன்னாட்கோறச் சிறைவைத்தார்.

உரை.—அங்ஙனந் தலைமயிருமறுத் தவனையுங்கட்டிப் பகைவ ரின்னம்பயந்தொளியாநிற்ப மேகமிடித்தற்கு மின்னினாற்போலச் சஞ்சோன் றன்னெரிக்கண்ணைவிழித்து மயிரில்லாமையால் வலியுமின்றிக் கட்டினகயிற்றினையறுக்கமாட்டாம லிவளென்னைக்கொல்லநினைத்தாளே நட்பிற்குவஞ்சனைசெய்தாளேயென்று மனதிலேநொந்து மெலியாநிற்பதைக்கண் டொளித்திருந்த பழம்பழியுடையபிலித்தேயர்புறப்பட்டு அவன்மேன்மொய்த்துமண்டி யுவந்தார்த்து நகையாகச் சுடுங்கொடியசொல்லால்வைது அவனிருகண்ணைப்பிடுங்கிக் கொடுமைமிக நெடுநாளிற் கொல்லும்படி யவனைச்சிறைச் சாலையில்வைத்தாரென்க. (௩௫)

பன்னாளிற்பன்னகையிற்பழியினசைப் பற்றமர்ந்த [து
பின்னாளிற்பகைத்தனநா டொருப்பட்டொன்னார்பெரிதுவந்
முன்னாளிற்செய்தவோர்மண்டபத்தில்வைகிமுற்கொணர்கெ
ன் [தான்.
றன்னாளிற்றிறஞ்சிகையோடுடைச்சஞ்சோனு மாங்கடைந்

உரை.—அங்ஙனம் பலநாளிலேபலநகைசெய்து தம்பழியாசைதீர்ந்தபின்பு சூழப்பகைத்தநாடெல்லாரு மொருங்குடன்கூடிப்பெரிதுவந்து மிக்கவிசாலத்து முன்செய்திருந்தவோர்மண்டபத்திலிருந்து தம்முன்னேயவனைக்கொண்டுவரச்சொல்லியந்நாளிலே தலைமயிரும்வளர்ந்து வல்லமையுமடைந்திருந்தசஞ்சோ னங்கேவந்தடைந்தானென்க. (௩௬)

மண்கவிழ்ந்தவானமெனவரைந்தமாமை மண்டபத்தி
கண்கவிழ்ந்தசிகரந்தாங்கடுத்தவிருபொற் கம்பமிடை [ன்

கண்கழிந்தசிகைத்திறத்தோனிற்பநக்குக் கதங்காட்டி
விண்கழிந்ததெய்வமனையின்றேகாட்டுன் மிடலென்றார்.

உரை. — எல்லாருங்கூடிநின்ற பெரியமண்டபமெங்க ண மிருந்ததென்னிற் பூவுலகின்மேல் வானங்கவிழ்ந்ததுபோ ல வழகிதாகவெழுதிய மண்டபத்தின்மேற் கவிழ்ந்தசிகரத் தை நடுவிலொன்றோடொன்று நெருங்கிவைத்தவிருபொற் றூண்டாங்கநின்றன, எல்லாருக்கு நடுவினிற்கும்படி யத் தூண்களண்டையிற் கண்ணில்லாமல்வளர்ந்தமயிரால் வல்ல மையின்மிக்கசஞ்சோ னிற்பப் பீலித்தேயர் மயிர்வளர்ந்தகு ட்சியைப்பாராமற் கோபத்தோடவனைநகைத்து வானுலகி னின்றிழிந்த தெய்வமொத்தவனே யிப்பொழுதுன்வல்லமை காட்டுவாயாகவென்றாரென்க. (௧௭)

பகைவிளைத்தவினையுதைப்பநிற்யாருண்டோ பாரிலெ
னச் [த்து
சிகைவிளைத்ததிறமிக்கோனிருதூண்டன்கைத் திறத்தொடி
நகைவிளைத்தமேற்சிகரம்வீழ்த்தியெண்ணின் னள்ளரோடு
மிகைவிளைத்ததானுந்தன்வினைபட்டொன்னார் வென்றொழிந்
தான்.

உரை. — பீலித்தேயர் நகைத்துரைத்ததற்குச் சஞ்சோன் மறுமொழிசொல்லிப் பகைவிளைதற்குக் காரணமாகியதன் தீவினை யொருவனையுதைக்குங்காலத்து விழாமனிற்கும்ப டி வல்லவரீங்குண்டோவென்றுசொல்லி வளர்ந்தமயிரோடு வலியின்மிக்கோனாகி முற்சொன்னவிருதூண்களைத் தன்கை யாற்றழுவியசைத்தொடித்து நகைவேலையா யவற்றின்மேனி ன்றசிகரத்தையும்வீழ்த்தி யெண்ணப்படாத பகைவரையு மொருப்படக்கொன்று தானுந்தனக்குவருத்தம்விளைவித்த த ன்றீவினையுட்பட்டுத் தன்பகைவரை வென்றவளவிலே தா னுமடிந்துசெத்தானென்க. (௧௮)

இத்திறத்திவையெல்லாமிந்நாட்டிவ்வூ ரிடத்தாகி
மெய்த்திறத்திற்கடவுணலம்விளங்கிற்றென்ன விண்ணவன்ற
கைத்திறத்திற்றொழுதுநிற்பவன்னார் கலிந்தெழுந்து [ன்
மைத்திறத்திற்கலந்தமகிட்காசைமூதூர் மருவுகின்றார்.

உரை.—இங்ஙனமிவையெல்லா மிந்நாட்டி லிவ்வூரினடத்து தப்பாதவல்லமையுடைய நாதன்றன்மை விளங்கினதென்று வானவனாகிய அறஞ்சயன்சொல்லித் தேவதிருக்குமாரன் பாதத்தைக் கைகூப்பித்தொழாநிற்ப மரியுஞ்சூசையுமகிழ்ந்தெழுந்துபோய் மேகத்துட்கலந் துயர்ந்தமதிலுள்ள காசையென்னுமாநகரை மருவிச்சேர்ந்தாரென்க. (௩௯)

வேறு.

திலங்குன் றுநிழறேன்மலர்பூப்பநீர்ப்
புலங்குன் றுமழைபொய்யில தூவமே
னலங்குன் றுநகர்நாடுநயந்தெழ
வலங்குன் றுதவர்மாநகரெய்தினார்.

உரை.—அங்ஙனங் குறையாதவல்லமையுடையமரியுஞ் சூசையுந் திருக்குமாரனையேந்திக்கொண்டு அந்நாட்டிலுள்ள சோலைகள்குறையாதநிழல்தந்து தேனைப்பொழிந்தமலரைப் பூப்பவு நீர்ச்செல்வங்குறையாமற் பொய்யாமழைபெய்யவு மேலானநன்மைநிறைந்த வந்நகருமந்நாடுங் களிகூர்ந்தோங்கவுங் காசைமாநகரையடைந்தாரென்க. (௪0)

புறத்துறைப்புலம்போய்நகர்வாயிலோர்
திறத்துறைப்புலம்புக்கனர்தேர்ந்தநூ
லறத்துறைப்புலமுங்கடந் துண்ணகர்க்
கறத்துறைப்புலமாயினரெய்தினார்.

உரை.—அங்ஙன நல்லறத்தின்றுறையாயினமூவரு நகர்ப் புறங்காவலிடங்களும் வாசல்காத்த திறத்தோரிருந்தவிடமும் பலநூல்களைப்படிப்பிக்குமிடங்களுங் கடந்து நடுநகரிற்சேர்ந்தாரென்க. (௪௧)

வேலைமாமணிப்பீடிகைவீதியுஞ்
சாலைபூம்புகைவீதியுந்தாண்டிநற்
பாலையாழிசைபாடினர்வீதியுண்
மாலைமாடத்தமூன்றூர்கேட்டனர்.

உரை.— நடுநகர்சேர்ந்தபின்பு கடல்தரும்பலமணிவிற்கு
ம் கடையின்வீதியும் பலபூம்புகைமண்டியவீதியுங் கடந்து
நால்வகைவீணைக்குரற்கிசையாகப் பாடினரிருக்கும்வீதியிற்
போகையி லழகியமாடத்தினின்றழுமோசைபுறப்படக் கே
ட்டானென்க. (௪௨)

திரிசுமந்திலதீபமொத்தாவிபோ
யரிசுமந்தவணைக்கிடந்தன்னைசூழ்
வரிசுமத்தவிளமயின்மானவைத்
தெரிசுமந்தகணாரழுதேங்கினார்.

உரை.—அங்கேகேட்ட வழுகைக்குரலேதென்னிற் றிரியி
ழந் தவிந்தவிளக்குப்போல வுயிர்போய்ச் சிங்கங்கள்சுமந்த
மெத்தைமேற் செத்துக்கிடந்ததாயைச் சூழவெழுதியதோ
கையுடையவிளமயில்கள்கிடந்தாற்போல வைந்திளம்பெண்
மக்கள் சிவந்தகண்ணாலழு தேங்காநின்றாரென்க. (௪௩)

ஆங்குநானநெய்ப்பூவளகங்கெட
வீங்குநாயினிலத்தில்விழுந்தடித்
தேங்குமோதையைக்கேட்டவிணர்க்கொடி
யோங்குகுசையுளத்திவிரங்கினான்.

உரை.—அங்ஙன மவ்வைந்திளமங்கைய ரங்கே நானநெ
ய்பூசினதம்பூங்கூந்தல் சிதறிக்குலைந்துகெடும்படி யடை
ந்ததுக்கமிகுதியா னிலத்தில்விழுந்தடித் தொலியெழமோதி
யேங்கி நொந்தழுமோசையைக்கேட்ட பூங்கொடியேந்திய
குசை தன்மனத்திரங்கினானென்க. (௪௪)

கொம்பிலாக்கொடிபோலிளங்கோதையார்
பம்பியார்த்தழும்பாசறைநோக்கென
நம்பிநாதனைவேண்டவினல்லுயி
ரெம்பிராணிடுமேவவின்மீண்டதே.

உரை.—அங்ஙன மனதிவிரங்கின நம்பியாகியகுசை திருக்
குமாரனைப்பார்த்துச் சொல்வான்:கொழுகொம்பிழந்துதுவ

ளும் பூங்கொடிபோலத் தாயிழந்திவ்விளமங்கையர் வலிதாய் விம்மியழும்பெருந்துயரை யிரக்கம்புரிந்து நோக்காயோ வென்று நாதனைவேண்டினவளவிலே யெம்பிரானாகியதிருக் குமாரன்மனமிரங்கி யேவினதனாற் பிரிந்தவுயிர் மீண்டு விட்டவுடலுட் புகுந்ததென்க. (௬௫)

தாயெழுந்துவரந்தருகைபெரு
ஞாயெழுந்தவியப்பிலனைவருந்
னூயெழுந்தகளிப்பொடுதுள்ளிவான்
மீயெழுந்தவிமலனைவாழ்த்தினர்.

உரை.—அங்ஙனஞ் செத்துக்கிடந்ததா யுயிர்பெற்றெழுந்தவளவிலே யவ்வரந்தந்தகை யின்னதென்றறியாமன் மிகவுமதிசயித் தெல்லாருமனநிறைந்தெழுந்தகளிகூர்ந் துயர்வான் மீதாளுநாதனைத் தொழுதுவாழ்த்தினரென்க. (௬௬)

விண்ணுளோர்பணிவேலையைக்கொள்பவர்
மண்ணுளோர்மிடிமாண்புறவந்நகர்க்
கண்ணுளோர்வறியோரெனக்கையிரந்
தெண்ணுளோர்பகல்மூன்றிருந்தாரரோ.

உரை.—அதெல்லாமாயபின்பு பதினாயிரம்வானவர்விடாமற்சூழ்ந்து செய்யும்பணிவூழியத்தைக்கொள்ளுந் தகவோராயினு மனிதரடைந்ததாரித்திரம் பெருமைகொள்ளும்படி தாமேயந்நகரிடத்து வறியோர்போலக் கையேற்றிரந்து மூன்றுநாளிருந்தாரென்க. (௬௭)

வருத்திக்கையொடுகால்வழங்காதனள்
பொருத்திக்கைக்கொடையுய்த்தவர்பூமுகந்
திருந்தித்தீட்டியதேவருட்கண்டென்றே
யிருந்திற்றூற்றுமருந்திலையோவென்றாள்.

உரை.—அங்ஙன மவரிரந்துவருகையிற் கையுங்காலும்வழங்காமல் வருந்தாநின்றவொருத்தி யருட்புரிந் தவர்க்கீகை தந்தவளவிலே யவர்பூமுகத்திலழகிதாகவெழுதப்பட்ட தேவ

வருளின்சாயலைக் கண்டமையரா லவரறியாததுண்டோவென் றெண்ணி யென்னோயைத்தீர்க்கு மருந்தில்லையோவென்று ளென்க. (சஅ)

அணங்குதேவமகன்முகத்தாறுமென்
றணங்குபேயுறவார்தவத்தோனறைந்
தணங்குதீர்ந்தவள்வாய்ப்புகழ்க்கஞ்சின
ரணங்குமின்னெனவாங்கொளித்தாரரோ.

உரை.— அவள்சொன்னதைக்கேட்டுப் பேயினமஞ்சுதற் குக்காரணமாக நிறைந்ததவத்தையுடையகுருசை மறுமொழி சொல்லி யிவ்வுலகிலொருபெண் மகனைப்பெற்றநாதன் திரு முகத்தின்முன்னே யுன்னோயாறுமென்றான், என்றவுடனே கையுங்காலும் வழங்கும்படி நோயெல்லாந்தீர்ந்ததனு லவ ள்மகிழ்ந் தவளை வாழ்த்திச்சொல்லும் புகழ்ச்சிக்கஞ்சினாற் போல விளைந்தொல்கி மேகத்தொளித்த மின்னல்கள்போல வவருமொளித்தாரென்க. (சகூ)

மாலைவாய்மணம்போலவும்வாசபூஞ்
சோலைவாய்நிழல்போலவுந்தூயறச்
சாலைவாயினர்தங்கியமுப்பகற்
காலைவாய்ந்ததுகாசறக்காசையே.

உரை. — அங்ஙனம் பூந்தொடைமாலை வாசனைவிட்டது போலவு மணமலர்பூத்தசோலை நிழலைச்செய்ததுபோலவு ந ல்லறச்சாலையொத்தவாயையுடைய மூவரு மங்கேதரித்த மூ ன்றுநாட்காலத்துச் செய்தநன்மையாற் குறையொன்றின்றி மாட்சிமைநிறைந்தது காசைமாநகரென்க. (ருய)

காசைசேர்படல முற்றும்.

ஆகப்படலம்-௰எ-இ-விருத்தம்

௲எஈஉ.

பதினெட்டாவது.

சீனயிமாமலைகாண் படலம்.

வேறு.

கோபுரமணியொளி குன்றப்பேரகழ்
நூபுரம்புலம்பமேற் கொடிநுடங்கநீண்
மாபுரஞ்சிறுமையின் வாடப்போயினர்
மீபுரங்குடியென் மாட்சிமேன்மையார்.

உரை.—அங்ஙனங் காசைமாபுரத்தின் மூன்றுநாளிருந்த பின்னர் வானத்துள்ள பொன்னகர்க்குடியொப்ப மாட்சியின்மேன்பாடுடைய மரியுஞ் சூசையுந் தேவதிருக்குமாரனையேந்தி யீராயாயிரம்வானவர்புடையில்வர வங்கிருந்து போகையி னுழைந்தகோபுரவாயிற் பதித்தமணிகள்தம்மொளிகுறையவு மதிலடிவைத்த வெள்ளிச்சிலம்பொத் தகன்றபேரகழலைத்துபுலம்பவு மாடங்கடோறும் விரித்தகொடிகள் துவண்டுநுடங்கவு மம்மாநகரெல்லாஞ் சிறுமைகொண்டுவாடவு மதைவிட்டகன்றுபோயினரென்க. (க)

கோன்றெளித்தெழுதிய தெனநற்கொள்கையார்
மின்றெளித்தெழுதிய செல்வம்விட்டெனப்
பொன்றெளித்தெழுதிய புரமுநாடும்விட்
டின்றெளித்தெழுதிய விவரன்றேகினர்.

உரை. — அங்ஙனமொளிமுகங்காட்டி பொல்கியொழிய மின்னலோடொத்த பூவுலகின்செல்வங்களை வீணெனவெழுதப்பட்டவழகென் றுயர்ந்தகுணத்தோ ரவற்றை யொருங்குவிட்டுத் துறவுகொண்டாற்போல வினிதாயெழுதப்பட்ட மேன்

மையுடையவிவரு மழகிதாகப் பொன்னாலலங்கரித்த வந்நக ரு மந்நாடும்விட்டுக் குறிஞ்சிநிலத்தைநோக்கிப் போனாரெ ன்க. (௨)

சூழ்விளையேனலும் பரியுந்தோரையுங்
கூழ்விளைகுலுத்தமு மிறுங்குங்கோத்திரு
நீழ்விளைநிரைத்தபற் காவுநீங்குராய்க்
காழ்விளைபழுவமுங் கடந்துபோயினார்.

உரை.—குறிஞ்சிச்சார்பிற் சூழவிளைந்ததினையும் பருத்தியு மலைநெல்லுங் கூழாகுதற்குரிய கொள்ளுஞ் சோளமும் வர குமிவையெல்லா மொழுங்குபட நிரைநிரையாய் விளைந்தப லகொல்லைகளைக்கடந்த பின்பு வயிரம்பாய்ந்த பெருமரத்து யர்ந்தகாட்டையுங் கடந்துபோனாரென்க. (௩)

நறவுசேர்பொழில்களு நாரையஞ்சமோ
டுறவுசேர்தடங்களு முவந்தவோகையின்
அறவுசேர்மடங்களுந் துணைதணப்பரும்
புறவுசேர்வனங்களுங் கடந்துபோயினார்.

உரை. —அப்புறம்போகையில் வாசனைபொழிந்த சோலை கள்பலவு நாரைகளு மன்னங்களு மொருப்படவிளையாடின தடாகங்களுந் தவமேயின்பமென்று வந்ததுறவோரிருக்கும் பள்ளிகளுந் தந்துணைபிரியாத புறாக்கள்திரியும்வனங்களு மி வையெல்லாங்கடந்து போனாரென்க. (௪)

பூணெறியொளியொடு புடைவிண்ணோர்வர
நீணெறிகடந்துபோய் நீண்டநெற்றியாற்
சேணெறிதவழ்மலை செல்லச்சேர்ந்திரு
கோணெறியும்பர்வந் தெதிர்கொண்டாரரோ.

உரை.—அங்ஙன மணிந்தபூணொளிபோலச் சூழிருமருங் கில் விளங்கியவுருவங்காட்டி வானவர்வரவே நெடுவழிகடந் துயர்ந்தெழுந்தவுச்சியோ டுயர்வானத்திற்றவழு மலையைக்கி ட்டிச்சென்றவளவிலே யிருமீனொப்பச்சேர்ந் திருவானவர் வந்தெதிர்கொண்டாரென்க. (௫)

பொன்னினீர்மிளிர்திருப் புதல்வன்றாளினை
மின்னினீரவர்தொழ வீழ்ந்துகுசையுள்
ளுன்னிநீரெவர்சொன்மி னுற்றதென்றலுந்
துன்னிநீர்ச்சட்சதன் றொழுதுசொற்றினான்.

உரை.— அங்ஙன மெதிர்வந்தவிருவானவர் பொன்னோ டொப்ப விளங்கியதிருக்குமாரன்பாதத்தைவணங்கி மிருமின்னல்போல விருவரும் விழுந்தபின்பு குசையிதேதென்றெண்ணி நீர்யாரென்றும் வந்ததுசொன்மினென்றுங் கேட்டவளவிலே யவருள்ளொருவன் சட்சதனென்பான் வணக்கத்தோடுமருவி மறுமொழிசொன்னானென்க. (௬)

திரைநிரைமணிகொழித் தொளிசெய்சேண்செலும்
வரைநிரைவளர்நலங் காக்கவான்றொழும்
விரைநிரைமலருரு வேய்ந்தவிப்பிரா
னுரைநிரைவதிந்தநா மென்னவோதினான்.

உரை.—சட்சதன்மறுமொழி யெங்ஙனஞ்சொன்னானென்னில் உச்சிநின்றிழியுமருவி நீரையிற் பலமணிகொழித்து விளங்கி வானுயர்செல்லுமிம்மலையிடத்து நிரைத்துவகுத்த செல்வங்களைக்காக்கும்படி வானுலகில்வணங்கப்பட் டிங்கவதரித்து வாசனைநிரையின் மலர்ந்தபூவொப்ப மனுவுருவெடுத்தவிக்கடவுளேவியமுறையி லிம்மலையிருப்பவர் நாமென்றுசொன்னானென்க. (௭)

எம்பரநாயக னேவலாலுல
கம்பரநான்கையு மமரர்காத்தவி
லும்பரவிம்மலைக் குரிமையாதெனாப்
பம்பரவுளன்சொல வமரன்பன்னினான்.

உரை.—அதைக்கேட்டகுசை யெம்பரமநாதனேவலினுலகிலுள்ளநாற்றிசையும் வானவர் காவல்செய்திருக்கையிலுயர்ந்தவிம்மலையிடத்து விசேடமேதென்று மிகுந்தவாசையோடு குசைகேட்கச் சட்சதன் மறுமொழிசொன்னானென்க. (௮)

பானயிலுருக்கொடு பரமனெய்திய
கானயில்மலர்முடிக் காயகாட்சியான்
மீனயில்வானினு மிகப்புகழ்ந்தன
சீனயிமாமலைச் சிறப்பிஃதாமரோ.

உரை.—மறுத்துச் சட்சதன்சொன்னதேதென்னிற் சூரியனுருவங்காட்டி யாண்டவனெழுந்தருளி வாசம்பொழிந்த மலரைப்பூத்த விம்மலைமுடியின்மேலிருந்து தந்தவரியகாட்சியினா லொளிமீனவிழும் வானுலகத்தினு மிகவும்புகழப்பட்ட சீனயிமாமலைச் சிறப்பிதென்றானென்க. (௯)

தினத்திடையெழுத்தென ஞானத்தன்மையான்
மனத்திடையெழுதிய மறையினூல்பினர்
கனத்திடையொலியெழக் கல்வின்றீட்டிய
புனத்திடைகுளிர்மலைப் பொலிவிதாமரோ.

உரை.—ஆண்டவ னம்மலைமுடிமேற்றந்தகாட்சியைச் சட்சதன்வகுப்பறாத்துணைப்பத்துடங்கினானையின் முன்னாளிலே பொற்றகட்டெழுதினாற்போல வவனவன் மனதிலே ஞானத்தின்றன்மையா லெழுதியிருந்தவேதநூல் பின்னாளிலே மேகமுழக்கத்தோடு கல்வின்மேலெழுதப்பட்ட திடமாகையில் விழுநீரருவிமிகுதியான் மிகக்குளிர்ச்சிபெற்ற பெருமலையிதுவேயென்க. (௰)

ஏர்கெழுமணிவள ரெசித்துநீக்கவிற்
கார்கெழுகுவட்டுவான் கலந்தவிவ்வரை
நேர்கெழுயூதர்தந் நிரைத்தசேனைகள்
பார்கெழுவணியெனப் பரப்பிநின்றவே.

உரை.—யூதர்முன்னாளிலே யழகியமணியால் வளமைபெற்ற வெசித்துநாட்டைவிட்டுவருகையின் மேகஞ்சூழ்ந்தவுச்சியோடு வான்மேற்கலந்த விம்மலையடிநேராகநிரைத்த வவர்பெருஞ்சேனைகள் பூவுலகிற்கோராபரணம்போலப் பரப்பிநின்றனவென்க. (௰௧)

தேனிமிர்தொத்தணி திமிசுஞ்சாந்தமும்
வானிமிர்கோட்டணி வகுத்தமால்வரை
மேனிமிர் நாயகன் விளிப்பயூதர்தங்
கோனிமிர்மோயிசன் குவட்டிலேறினான்.

உரை.—அங்ஙன மிம்மலையடியில் யூதர்சேனைகளிருக்கையிற் கொத்துக்கொத்தாய் மதுமலரணிந்த வேங்கையுஞ் சந்தனமும் வானத்துயர்ந்தமுடிக்கணியாக நிரைத்துவைத்த விம்மலைமேலெழுந்தருளினநாத னழைத்தவேவலினால் யூதருட்பெருஞ்சீர்ச்செங்கோற்செலுத்தாநின்ற மோயிசனென்பவன் மலையினுச்சியேறினானென்க. (௰௨)

வேறு.

கோணிகந்தாள்வானிறைவனேவல்கொண்டக் குலக்
கோமான்
சேணிகந்தான்சேண்சென்றகுன்றத்துச்சி செல்லுகின்றா
னாணிகந்தான்றுயிலிகந்தான்வானோரொத்தாங் குறைந்தன
கான்
மாணிகந்தார்மனம்போலவிருண்டியாவு மருண்டனவே.

உரை.— அங்ஙன, நீதிக்கோல்வளைவின்றி யுலகங்கள்யாவையுமாளும் வானுலகாண்டவனிட்டவேவலைக்கொண்டு யூதருக்கரசனாகியமோயிச னெடுவழிகடந்து வான்சென்றுயர்ந்த விம்மலையுச்சியிற்சென்றான், சென்றவளவிலே யுண்ணாமலுந்தூங்காமலும் வானவரோடொருவனைப்போல வங்கேயிருந்தபோது மாட்சிமையில்லார்மனத்தைப்போல வெங்கு மெல்லா மிருண்டுமயங்காநின்றனவென்க. (௰௩)

கோடொளிப்பவெழினியெனவெழிலிமொய்ப்பக் கு
டக்கிரவிச்
சேடொளிப்பவிராவன்னவிருள்சூழ்மண்டித் திரண்டவிரு
ளீடொளிப்பவிளக்கிட்டதேபோன்மின்னி யெரிவாய்மின்
னாடொளிப்பவொல்கியிடித்துலகமெல்லா மொலித்தனவே.

உரை — அங்கே மலைமேன் மோயிசன் சென்றவுடனே ம
லையினுச்சி யொளிக்கும்படி திரைச்சீலையிட்டதுபோல மே
கங்கள் சூழ மொய்த்தமையான் மேற்றிசைசென்ற சூரியன்
றன்னொளிவடிவையொளித்துவந்தவிரவுபோல விருளுமண்
டிப்பரந்தது, பரந்தவிருளை நீக்கப் பலவிளக்கிட்டாற்போல
மின்னி யெரிவாய்காட்டித் தோன்றினமின்னு மேகத்துள்
ளொளித்திடியிடித் திடைவிடாமையா லுலகமெல்லாமுழங்
கிற்றென்க. (௰௪)

புழுங்கியவாயெரிசெந்தீப்புரிசைசூழ்ந்தாற்போன்றே
யாத்
தழுங்கியவாய்முகின்மின்னியெண்ணைந்நாளுந் தாழ்வரு
மழுங்கியவாய்மெலிந்தஞ்சவிறைவன்றாட்சேர்ந் தார்த்தமிர்
தம் [ல்.
விழுங்கியவாய்மோயிசனேவாழ்ந்தவண்ணம் விளம்பரிதா

உரை. — அங்ஙனம் வாய்சினந்தெரித்த செந்தீக்கோட்
டையாகச் சூழவளைத்தாற்போல வோய்வின்றிமுழங்கினமே
கங்கள்மின்னுநிற்ப நாற்பதுநாளுங் கீழ்நின்றவரெல்லாரு
ம் வருந்தி மனமெலிந்தஞ்சியிருக்கையி லாண்டவன்றிருவ
டிசேர்ந்தமோயிசனோவெனிற் றேவமிர்தத்தை நிறையவுண்
டவனாய்மகிழ்ந்து வாழ்ந்ததன்மையை விரித்துரைப்பதரிதெ
ன்க. (௰௫)

கண்டகாவினியனவுமெவர்க்குங்காண்டற் கரியனவு
முண்டகாலாங்கண்ணுனுண்டவின்ப முயர்வீட்டைக்
கொண்டகாலதற்குவமைகுணிப்பரல்லாற் கொங்கலர்க்கோல்
விண்டகால்வரம்பூண்டோய்மதியாரிங்கண் மேதினியார்.

உரை.—அங்ஙனந் திருவடியடைந்தமோயிசன்காணும்ப
டி யெவர்க்குமரிதாய்க்கண்டபின்பு பேரின்பத்தைப்பயக்கு
ங்காட்சியைக்கண்டான், கண்டவற்றைமனதிலுண்டபோ த
வனங்கேநுகர்ந்தவின்பத்தின்றன்மைக் கோருவமை மனித
ர்நினைக்கும்படி பரமகதிவீட்டிற் கவர்சேர்ந்தபின்பு கூடு

மொழியப் பூவுலகிலிருக்குமளவு மதிக்கமாட்டார், வாசபூங் கொடி யுன்கையின்மலர்ந்தவளவிலே மட்டிலவரங்களை யடைந்தணிந்தருளைசையேயென்க. (௰௬)

முறைகெழுநற்கேள்வியினாற்புலமைமிக்கமோயிசனுங்
குறைகெழுநற்கணத்துலகங்கடந்துநிற்ப வொளியணிவான்
றுறைகெழுநற்காட்சியினொடின்பப்பவ்வத்தோய்ந்துவப்ப
மறைகெழுநற்பயனுரைத்தவிறைவனிச்சொல்வழங்கினனால்.

உரை.—அங்ஙன நன்முறைபற்றியகேள்வியா லடைந்த நூலெல்லாங்கடந்த வுணர்வின்மிக்கமோயிச னம்மலைமுடி மேற் றனிபெய் மேகமண்டலங்கடந்திருந் தழகணியாக வொளிநிலமாகிய வானத்தின் றுறையில் வழங்கியகாட்சியுமடைந்து நிறைபேரின்பக்கடலின்முழுகிக் களிகூர்ந்திருந்த வளவிலே வேதப்பயனை யுரைத்துத்தந்த நாத னிவற்றைச் சொன்னானென்க. (௰௭)

பல்லுயிரைவியவனெனப்படைத்தபின்னர்பார்த்திபர்போ
னல்லுயிரையடைந்தமனுக்குலத்தோராக்கி நல்வினையும்
புல்லுயிரையடும்வினையுமறிந்திரண்டிற் புலன்றேற
வல்லுயிராயீந்துரிவேண்டுதல்வேண்டாமை வகுத்தனனே.

உரை.—ஆண்டவன் மோயிசற்குரைத்ததேதென்னில் மனிதரொழியப் பூவுலகுள்ளபல்லுயிர்களை மனிதர்க்கேவல்செய்வோர்போல ஊழியஞ்செய்யும்படி நானேபடைத்தபின்ன ரவ்வுயிர்களையாளும்படி யரசர்போல நல்லுயிர்பெற்றமனுக்குலத்தோரையுளவாக்கி நல்வினையும் புல்லறிவாளருயிரைக்கொல்லுந்தீவினையுமறிந் தவ்விருவினையுட் டீயவைநீக்கி நல்லவையடையும்படி யுளந்தேறுதற்கு வல்லமையுந்தந்து அதற்குரிதாய்நினைத்தவற்றை வேண்டுமென்பவும் வேண்டாமென்பவும் வல்லமனத்தைக்கொடுத்தேனென்க. (௰௮)

தினத்தெழுதிவைத்ததெனவுறுதிஞானத் தகுதியினோன்
மனத்தெழுதிவைத்தமறைமறையத்தீமை மல்கியதாற்
கனத்தெழுதிவைத்தமினலொத்தவாழ்க்கை காதலித்துப் [ர்.
புனத்தெழுதிவைத்தபொருளொத்தவ்வேதம்புறத்தொழிந்தா

உரை.— தானேபொற்றகட்டெழுதினாற்போல ஞானமென்னுமெழுத்தினான் மனிதர்மனத்தி லவரையுண்டாக்கினபொழுதே யெழுதிவைத்தவேதம் பின்புமறையும்படி யவர்செய்தபாவங்கள் மிகுந்ததனால் மேகத்தின்மேலெழுதப்பட்டமின்போலொளிதந்தொழியுமிப்பூவுலகின்வாழ்க்கை விரும்பி மலைநின்றிழியு மருவிமணல்மேலெழுதிய கல்விப்பொருளழிந்ததுபோ லவ்வேதநூலழியும்படி யதைவிட்டொழிந்தானென்க. (௰௧)

மருள்மொய்ப்பத்தீவினையுமிருளுமொய்த்து மனுக்குலத்தோ [ராப்
பிருள்மொய்ப்பமனத்தெழுதிவைத்தநுண்மா ணெழுத்துண
பொருள்மொய்ப்பத்திரிந்தந்தோகுருட்டால்வீழ்வர் புதவிலென [ன்றான்.
வருள்மொய்ப்பக்கல்விடையம்மறையைத்தீட்டி யளிப்பலெ

உரை.— அங்ஙன மயக்கமிகுதியாற் பாவங்களு மத்தோடுளத்தினிருளுமொய்த்து மொய்த்தவிருளாகியவக்கியானத்தான் மனிதர்தம்மனதிலே நுண்மையாகவெழுதப்பட்ட வேதநூலெழுத்துக்கண்டுபிடிக்கமாட்டாமற் செல்வப்பொருள்களைமாத்திரந்தேடி யக்கியானக்குருட்டினா னோரு ளைமயோநரகத்திலேவிழுகின்றாரென் று நான்றயைமிகும்படி யவ்வேதநூலைக் கல்வின்மேலெழுதித்தருவேனென்று னண்டவனென்க. (௨௰)

மின்னல்லாணிகர்ப்பரிதோரொழுத்துத்தீட்டி விதித்திருகல்
லென்னல்லாவிறைமையுளாருமக்கில்லாவீ ரொனமெய்மை
தன்னல்லாற்சாட்சிவையீர்திருநாளாடித் தவிர்கில்லீர்.
மன்னல்லாரணமிதுவென்றெருகல்கொள்மூவ் வாசகமே.

உரை.— அங்ஙனநாதன் சொன்னவளவிலே மின்னெப்பொழிய வுவமையில்லா தழகிய தோரொழுத்தெழுதியவிரண்டுகல்லைக்கொடுத்தான், நிலைகொண்டநல்வேதமாக முதற்கல்லிலேமூன்றுவாசகமெழுதப்பட்டன, அவற்றுண் முதலா

வது: என்னையொழியத் தேவத்துவத்தையுடையோ னென்று வேறொருவரு முமக்கில்லாதேபோவதாக. ௨-வது. ஆணையைக்கொண்டு மெய்ப்பொருட்கொழியப் பொய்ப்பொருட்கென்னைச் சாட்சிவையாதிருப்பீராக. ௩-வது. என்னையாராதனைசெய்யும்படி குறித்த திருநாட்களைக்கொண்டாடத் தவிராதிருப்பீராக. இம்மூன்றுங்கடவுளைநோக்கி முதற்கல்லிலே யெழுதியவேதவிதிகளென்க. (௨௧)

தந்தைதாய்வணங்குமினீர் கொலைமேயசெய்யீர் தவிர்காம
நிந்தையாயூடில்லீர்கரவீர்போய்யீர் நிலைப்பிறரில்
சிந்தையாயிரீர்பிறர்கைப்பொருளைவெஃகீர் தீங்கிதுவென்
றெந்தையாய்ந்திரண்டாங்கல்தீட்டிவைத்த வேழ்விதியே.

உரை.—இரண்டாங்கல்லிலோவென்னி லேழுவாசகமெழுதப்பட்டன, அவற்றுண் முதலாவது: பிதாவையுமாதாவையுஞ் சங்கித்திருப்பீராக. ௨-வது. கொலைசெய்யாதிருப்பீராக. ௩-வது. தன்றாரமொழிந்துதவிர்ந்தகாம நிந்தையென்று புணராதிருப்பீராக. ௪-வது. களவுசெய்யாதிருப்பீராக. ௫-வது. பொய்யைச்சொல்லாதிருப்பீராக. ௬-வது. பிறர்தாரத்தைவிரும்பாதிருப்பீராக. ௭-வது பிறர்கைப்பொருளை யபேட்சியாதிருப்பீராக. இவையேழு மனிதர்தம்மைநோக்கிச்செய்கடன்முறைகளாக விரண்டாங்கல்லிலெழுதிய வேதவிதிகளென்க. (௨௨)

மின்முகத்துப்பொறித்தவணியிருகல்லேந்தி வெஞ்சுடர்போ
னன்முகத்துமோயிசன்வில்வீசிவெற்பின் னயந்திழிந்தான்
புன்முகத்துமனுமகனிந்நாதனந்நாற் புரிந்தமையாற்
றன்முகத்துத்தாட்பணியவுற்றதென்றான் சட்சதனே.

உரை.— அங்ஙனம் பத்துவாசகமாக மின்சாயலினழகுபெற வன்றெழுதிய வவ்விருகல்லையாண்டவன்றரக் கையிலேந்திச் சூரியன்போல மோயிசன்றன்முகத்தொளியைவீசி யம்மலையுச்சியினின் றுளமகிழ்ந்திறங்கினான். இக்காலத் துங்களிடத்துப் புன்முகங்காட்டி மனுமகனையவிக்கடவுடானே ய

க்காலத் தவ்வேதநூலைவிதித்தவனாகையி லவன்றிருமுகத்திற்
சென்று மலர்ப்பாதத்தைவணங்கவந்தோமென்றான் சட்சத
னாகியவானவனென்க. (௨௩)

வேறு.

பண்ணென்றுபாடலொத்த பயனெலாமினிதிற்கேட்டுக்
கண்ணென்றுமகனுந்தாயுங் கண்ணிமையொன்றிக்காத்த
மண்ணென்றுபைம்பூங்கோலான் மகவினைவாழ்த்தியாரும்
விண்ணென்றுவெற்புவேத வெற்பெனவணங்கிச்சேர்ந்தார்.

உரை.—அங்ஙனம் வீணையோடிசைபடப்பாடினாற்போலச் சட்சதன்சொன்னவுரைப்பயனெல்லாவற்றையு மினிதாய்க்கேட்டுத் தனக்கிருகண்களாகத் திருக்குமாரனையு மவனையீன்றபரமதாயையுந் தான்கண்ணிமையாக வோம்பிக்காத்தவலங்கரித்தபூங்கொடியேந்தியகுசைமகிழ்ந்து திருக்குமாரனைவாழ்த்தி யொருங்குடன்கூடி வானத்தொன்றிவளர்ந்தமலையினடியிலே வேதமலையென்று வணக்கத்தோடுசேர்ந்தாரென்க. (௨௪)

நீர்தவழ்தழலிற்கஞ்ச நிரைத்தநீள்வாவியங்கண்
ணேர்தவழ்முகைகடண்டா திழிந்தந்தேனினிமைவெஃகி
வார்தவழ்முரசுவாட்டி வண்டொடுதேனுமார்க்குங்
கார்தவழ்சினைகணீண்ட காவிடைவதிந்துநின்றார்.

உரை.—சீனயிமாமலையடியிற்சேர்ந்து நீரிற்றவழு நெருப்புப்போல வொழுங்குபடச் செந்தாமரைமலர்ந்த நீண்டதடாகத்தப்புறத்தழகியவரும்புகள் விரித்த குளிர்ந்தபூந்தாதுமிழ்ந்த மதுவின்மதுரத்தைவிரும்பி வார்கட்டியமுரசொலியினு மாண்வண்டும் பெண்வண்டுமொய்த்து முழங்காநிற்பமேகங்கள்தவழ்ந்துசூழு முயர்ந்தகொம்புகளைநீட்டியசோலையிடத்து வந்திருந்தாரென்க. (௨௫)

பார்கெழுமடந்தையீன்ற படர்தருகைத்தாயரம்வான்
கார்கெழுமுலைதழீய கரமெனச்சினைகணீட்டி

நீர்கெழுபா லுண்டப்பா னிழன்றுதன் றாயைக்காக்க
வேர்கெழுகைத்தாய்நோக விகன்றொளியொளிக்குங்காவே.

உரை. — அவரங்கிருந்த வப்பூஞ்சோலைவனப் பெத்தன்மைத்தென்னிற் பூமியாகியமடந்தைபெற்ற மரங்களைவளர்த்த கைத்தாயென்று வானமாகி யம்மரங்கள்வளர்ந்து கைத்தாயாகிய வானத்தின் முலையென்னு மேகங்களைக் கையாற்றழுவினாற்போலக் கொம்புகளை மேகத்துள்ளேநீட்டி யம்முலையாகியமேகங்கள்பொழிந்தபாலாகிய மழைநீருண்டு செல்வத்தோங்கியபின்பு தம்மைப்பெற்றதாயாகிய பூமியைக்காத் ததற்குநிழலைச்செய்யும்பொருட்டுத் தம்மைவளர்த்தவழகியகைத்தாயாகியவான மனநோகும்படி யதைப்பகைத்துவானொளிதோன்றாதபடி மறைத்தொளிக்குஞ் சோலையதுவென்க. (௨௬)

சிலைவளர் நாணிற்கையின் சேர்ந்தடர்ந்திறுகப்பின்னிக்
கலைவளருணர்வினோங்கிக் கள்ளுண்டார்தலையினாடி
விலைவணர்மகளிர்நெஞ்சின் வெயிற்பகலிருளிற்றாகி
யலைவளரொலியினார்க்கு மலர்முகத்தலர்ந்தகாவே.

உரை. — மீளவும் வில்லினாணிபிடித்த விரற்போற்கிட்டித் தம்மி லடர்ந்திறுகப்பின்னப்பட்டுக் கற்றோருணர்வுபோலுயர்ந்து, உயர்ந்தவுச்சியிற்கள்ளையுண்டவர்போலத் தலையயாடி விலைமாதர்நெஞ்சினைப்போல வுச்சிப்பகலினுமிருண்டதாகிக் கடலொலிபோலவண்டுகளாலும்பறவைகளாலு மிடைவிடாமன்முழங்காநிற்கு மகன்றபூஞ்சோலையதுவென்க. (௨௭)

பூவிடையளிகடுஞ்சப் பொதும்பிடைமயில்கடுஞ்சக்
கோவிடையன்னந்துஞ்சக் கொம்பிடைக்குயில்கடுஞ்ச
மாவிடைமுசுகடுஞ்ச மருளிடையிரவுதுஞ்ச
நாவிடையுரைகடுஞ்ச நலமெலாந்துஞ்சுங்காவே.

உரை. — மீளவுமப்பூஞ்சோலையிற்பயமின்றிப் பூவிடத்து வண்டுகளு மரப்பொந்திடத்துமயில்களு மங்கங்கேமாறுது நின்ற நீரிடத்தன்னங்களுங் கொம்புகளிடத்துக் குயில்களு

மாவிடத்துக்கரிய குரங்குகளு மிவையெல்லாமினிதாய்த்துயில்
கொள்ளவே தன்பகையாகியகதிரொளிநுழையப்படாத வி
டமாகையி லிருளின்மயக்கத்திடத்துப் பயமின்றியிராத்தூங்
கவு மனிதரண்டாதவிடமாகையில் வாய்மொழிகிளம்பாமற்
றூங்கவும் பலவழகெல்லாங்குடியாய்நின்றதூங்குஞ் சோ
லையதுவென்க. (௨௮)

இணங்கியமலர்க்காவங்கண் ணெரிமுகத்தனுங்கிற்றன்
வுணங்கியதருவைக்கண்டா ருவந்துதாம்வதிந்தபின்ன [ன
ரணங்கியந்திலையும்பூவு மணிந்தவத்தருவேதம்மை
வணங்கியதன்மைகோலி வனப்பரிதணியக்கண்டார்.

உரை.— அத்தன்மைத் தலர்ந்தசோலைக்கப்புறத்தருகேதீ
ப்பட்டெரிந்து வாடினாற்போல வுணந்ததொருமரத்தைக்
கண்டார். மீளவு மவரங்கிருந்தபின்ன ரழகியவிலையும்விட்டுப்
பூவும்பூத்த வம்மரந்தானே தம்மைவணங்கினாற்போலத்தலை
யைவளைத்து மிக்கரியதோர்வனப்போடு நிற்பக்கண்டாரெ
ன்க. (௨௯)

தீய்நிறப்பவளக்கொம்பின் மரகதவிலைகடளிர்ந்து
தூய்நிறத்தரளமொட்டுந் தூய்மணிமலரும்பூத்துக்
காய்நிறத்திலங்கவெண்பொன் கனகநற்கனிகள்காய்த்து
மீய்நிறத்தருவின்வண்ண மீவளர்வண்ணம்போன்றே.

உரை.—அம்மரமணிந்த வரும்வனப்பெங்ஙனமென்னில்:
தீப்போற்சிவந்த பவளக்கொம்புகடோறு மரகதமணியே
யிலைகளாகத்தளிர்த்துத் தூயவெண்முத்துக ளரும்பாகவுமா
ணிக்கமணியேபூவாகவும்பூத்து வெள்ளியாற்காயும் பொன்
னாற்கனிகளும்பழுத்து மேலெழுந்துயர்ந்தவம்மரத்தழகுவா
னத்தில் வழங்குமழகின்றன்மைத்தாயிற்றென்க. (௩௰)

நளிவளர்மலர்க்கோற்குசை நயந்திவைவியந்துநோக்கி
களிவளருவப்புமாறக் கதத்தவான்றிசைகளுன்றில் [ற்
வளிவளர்பகையில்வீச மரங்குழைந்தழுங்கிவாடி
வெளிவளர்கிளைகளூறி வீழ்வதுபோலக்கண்டான்.

உரை.—குளிர்மலர்ப்பூங்கொடியேந்தியகுசையதிசயித்து ளமகிழ்வெய்தி யங்ஙனமரிதழகணிந்தமரத்தைப் பாராநின்ற வளவிலே யவனுட்கொண்டமகிழ்ச்சிமாறும்படி நாற்றிசை யில் வானங்கோபித்தாற்போல மிக்கபகையோடுபெருங்காற் றதிர்ந்தடித்தமையா லம்மரங்குழைந்து பொலிவழிந்தொரு ங்குவாடி மேல்வளர்ந்துயர்ந்தகொம்புகளெல்லா முறிந்துவி ழுந்தாற்போலக்கண்டானென்க. (௩௧)

படம்புரைபொறித்தமாலை பட்டறவிலையுமின்றி
விடம்புரைபட்டகாலால் வியன்றருக்கெட்டதென்னா
வடம்புரைதவத்தைப்பூண்டோன் மதித்துளத்தனுங்குங்காலை
சடம்புரையனிலங்கையாற் றகைத்தெனநின்றதன்றே.

உரை.— எழுதப்பட்டசித்திரப்படம்போ லம்மரத்தழ கெல்லா மங்ஙனம்பட்டறும்படி யிலையுமின்றித் தீண்டினந ஞ்சுபோலப்பட்டகாற்றினா லம்மரங்கெட்டதென்று மணிவ டமாகத்தவத்தைப்பூண்டகுசை மனத்திலெண்ணிவருந்தாநி ற்பக் கொடுமையோடடித்தகாற்று கையாற்றடுத்துமறிபட் டாற்போலநின்றதென்க. (௩௨)

அற்றதென்றலைந்தசாகி யனிலமற்றொழிந்தபோழ்து
செற்றதென்றரிந்தகீடந் தீண்டியகனிகளல்லான்
மற்றதென்றொன்றுங்குன்றா வனப்பெழீயிலங்கக்குசை
யுற்றதென்றுணர்த்தியென்றா னுவந்துசட்சதனுஞ்சொன்
னான்.

உரை.— அங்ஙன மடியற்றழிந்ததென்று நின்றமரமேகா ற்றுநின்றொழிந்தவளவிலே கெடும்படி குடைந்தபுழுதீண்டி னகனிகள்விழுந்தனவொழிய மற்றொன்றுங்கெடாமன் முன் னிருந்தவழகோடம்மரம் விளங்காநிற்பக்கண்டகுசை யிதே தென்றுசொல்வாயாகவென்றுகேட்பச் சட்சதன்மறுமொழி சொன்னானென்க. (௩௩)

வேறு.

எல்லுடைச்சரங்களிரவறவெழுதி யிரவிசேருதயமாம
லைபோன்

றல்லுடைப்பாவமருளறப்பரம னருளியசுருதிநூலுதித்த
செல்லுடையணிந்தெங்கணும்பெயர்சிறந்த சீனயிமாமலைச்
சாரிற் [தாமன்றே.
றெல்லுடைச்சுருதிமாண்பிபல்காட்டத் தோன்றியதருவி

உரை.— சட்சதன்சொன்ன மறுமொழியாதெனில்: இராவிருள்கெடும்படி வெங்கதிர்ச்சரங்களைத்தொடுத்துச்சூரியன்வந்துதோன்றினவுதயகிரியேபோலப் பாவத்தால்வந்தமயக்கத்திருளேகெடும்படி பரமநாதனருளிச்செய்தவேதநூல் ஞானவொளிவிட்டுதித்தவிடமாய் மேகங்கள்போர்வையாகச்சூழ்ந்தெங்கும்பெருஞ்சிறப்பின்வழங்கிய சீனயிமாமலைச்சாரிலேமுளைத்துலகோடிபிறந்த வேதத்தரியமாட்சியியல்பினைக்காட்டும்படி தோன்றினமரமிதுவென்றானென்க. (௫௪)

நீட்டியவிருகல்லேந்திமோயிசன்போய்த் திசைகணான்
குரைத்தநன்மறைநூல் [த்தருவு
காட்டியநெறிசென்றெழுகமன்னுயிர்கள் களிப்பிவிக்காவிவி
நீட்டியசிவைவிட்டுறைமுகிணக்கி நிகர்ப்பரிதெழுதியமாமை
யீட்டியமணிப்பூஞ்சினைகளைப்பரப்பி யிருநிலநிழற்றிநின்ற
துவே.

உரை.—அம்மரமெங்ஙனம் வேதத்தியல்பினைக்காட்டினதென்னில்: முன்சொன்னபடி நாதனெழுதினவேதக்கல்லிரண்டும் கையிலேந்திமோயிசனிம்மலையினின்றிறங்கி நாற்றிசையினுஞ் சொன்னவத்திருவேதநூல்வழி மனிதரெல்லாரும் வழுவாமலொழுகிவந்தமகிழ்ச்சியா விக்காவிடத் திம்மரமுமக்காலத்து நீளமாய்த்தாழவேர்விட்டு நிகரில்லாதழகிதாக வெழுதப்பட்ட மணிப்பூங்கொம்புகளைத் துளிபெய்மேகங்களை நக்கினாற்போல வுயர்ந்துபரப்பிப் பூமியைக்காத்த குளுநிழல்செய்யாநின்றதென்க. (௫௫)

இன்புறவுயிர்செய்யித்தருக்கனிக ளியாமுணப்பிறர்கை
யிலிரந்து [ஞ்சகுங்கா
துன்புறப்போவலென்னெனப்பலருஞ் சூழ்ந்துதங்காவின

யன்புறவினிதென்றருத்தெனப்பலபொய் யாரணமெங்கணு
ம்விதித்த [மாதோ.
பின்புறமலர்த்தவித்தருநொந்த பெற்றிபோன்மெலிந்தது

உரை.—பலநாள்கழிந்தபின்பு மனிதர்பலரு முயிர்தருமிம்மரத்தினியகனிகளையுண்ணும்படி நாம்பிறர்கையில்வற்றையிரந்துவாங்க வருந்திப்போவதென்னவென்று தங்காட்டிலே காய்த்தநச்சுக்காய்களையாசையோடின்பமென்றுண்டாற்போலத் தாமேபலபொய்ச்சமயங்களை வேதமென்றுவிதித்தபின்பு மலர்த்தவிம்மர நொந்தாற்போல மெலிந்ததென்க. (௬௬)

மனத்தெழுஞ்சுருதிமெலிந்தனவளவில் வனப்பெலா
மொழிந்துதாமெலியக் [ன்மாக்க
கனத்தெழுங்கொம்பர்வாடலேகண்டோர் கருணையோடிப்பிரா
னினத்தெழுந்தெங்குமிம்மறைவழங்கு மென்றிவனெய்தியமு
கத்திற் [ண்டோர்.
றனத்தெழுமலருங்கனிகளும்பூத்துத் தருவெலாமுவந்ததுக

உரை.—அங்ஙனமனிதர்மனதிலே வேதமெலிந்தவளவதாக விம்மரந் தானுந் தன்னழகொழிந்து மெலிவுகாட்டி நீர்வரும்பொழுது மேகத்துயர்ந்தகொம்புகள் வாடாநின்றனவென்றுகண்டோரல்லோ? இனிநற்கருணைபுரிந் திக்கடவுளவதரித்து மனிதனுயகன்மையா லிவ்வேதமெக்கும்பரம்பி வழங்குமென்றதனு விவன்வந் திங்கே தன்றிருமுகத்தைக்காட்டினவுடனே யிம்மரமும் பொன்னழகொத்தமலரும்பூத்துக் கனிகளும்பழுத்து மகிழ்ச்சியடைந்ததுகண்டோரல்லோவென்க.

(௬௭)

செல்வின்மேல்வரையிவ்வரைந்தநூலிவன்றான் றீட்ட
வோர்விலங்கலுமேறிக் [யினச்சுருதி
கல்வின்மேல்வரைந்தவெழுத்தொழிந்தாகக் கண்டருந்தயை
யெல்வின்மேல்மிளிர்தன்னுடலமேடாக விருப்பயிலாணியாற்
பொறித்து [லேசெய்வான்.
வில்வின்மேல்விர்செம்புனலின்மையிட்டு மெலிவறவிளங்க

உரை.— அவதரித்தகடவுளால் வேதமெங்ஙனம் பரம்பு
மென்னில்: முன்னாளிலே மேகங்களைக்கடந்த விம்மலையுச்சி
மேலெழுதப்பட்டவேதநூ லிக்கடவுடான் மீட்டெழுதும்ப
டி தானுமொருமலையுச்சிமேலேறிக் கல்லிலேபதித்தவெழுத்
துகளொழிந்தனவென்று கண்டு தான்றமையபுரிந்து சூரிய
னொப்பவிளங்கிய தன்றிருமேனியேயேடாகக்கொண்டு கூர்
ந்தவிருப்பாணிகளா லவ்வேதநூற்பொறித்தெழுதிச் சிந்தி
ன தன்றிருக்குருதியென்னும் விளங்கியமையையிட்டுப்பிற்
காலத்துமெலியாதபடி வேதம்விளங்கவே செய்வானென்க.
(௫௮)

நுனைமுகத்துவந்துநக்கவித்தருப்போ னரதெய்வகுமா ர
னிங்கருளும் [ளியெழுந்து
வினைமுகத்தெழியமறைவனப்பெய்தி வெகுண்டநாற்றிசைவ
முனைமுகத்தடித்ததன்மையின்மறையை முருக்கிடப்பலமத
த்தாருங் [ப்பனவே.
கனைமுகத்துலகுமலகையுமுடனுங் கதத்தநாற்பகைகள்மொய்

உரை.— அங்ஙன மிவன்றிருமுகத்து மலர்ந்துமகிழ்ந்தவி
ம்மரம்போல நரதேவனாகியவித்திருக்குமாரன் செய்யுமருளி
ன்வினைகளாற்பொலிவுபெற்றவேதமு மரும்வனப்படையவே
கதத்தோடு நாலுதிசையிலெழுந்த பெருங்காற் றரும்போர்
பொருதாற்போலவடித்ததன்மையா விவனால்வழங்கியவேதத்
தைக்கெடுப்பதற்கெதிர்த்த நாலுபகைகளாகப் பலபுறச்சம
யத்தாருமுலகின்றீயவியற்கையும் பாவம்விளைவிக்கும்பசாசுக
ளும் பெண்ணாசை பூணாசையென்றிருபுறத்துவழுவி நன்னெ
றிநிற்பதறியாவுடலுமென் றிவைநான்குமொய்த்து வேதத்
திற்குப்பகைசெய்வனவென்க. (௫௯)

வேரறவடித்தவளியெனவெங்கும் விளைத்தபற்பகையிவ
ன்றருளா [ற்
னேரறநீங்கிக்கிருமிதீண்டியகாய்நிகர்த்தபற்றெஞ்சினரல்லா
பேரறநல்லோர்சிதைவுறுவாழ்ந்து பெயர்கிலமறையொடு
பொலிந்து [ன்றன்.
சூரறநிற்பாரித்தருப்போன்றித் தோன்றல்செய்யுறுதியாலெ

உரை. — அங்ஙன மந்நரன்கு மிவ்வேதத்தைப்பகைத்தா
லும் வேரோடிம்மரத்தைப்பிடுங்கும்படி யடித்தபெருங்கா
ற்றுநின்றதுபோல வெங்கும்விளைந்த வேதப்பகையெல்லா
மிவன்றன்றலையயானீங்கிப் பலபுழுத்தீண்டின காயொன்றே
க்காற்றுமுகத்துவிழுந்ததுபோல வேதத்தின்மேலுறுதிபற்று
தலில்லாதவரொழிய நல்லறவியல்பினே ரொருவருங்கெடா
மல்வாழ்ந் தெக்காலத்தும்விட்டுப்பிரியாதவேதத்தோடுபொ
லிவடைந் திம்மரம்போல வித்திருக்குமாரனுதவியாற் குளிர
மலர்ந்து துன்பமின்றிநிற்பாரென்றான் சட்சதனென்க. (௪௰)

இனையனகேட்டவிருந்தவத்திறைவ னேந்தியமகவினை
நோக்கித் [லுரைத்தி
தனையனவுலகம்படைத்திநின்கருணை தளிர்ப்பநற்சுருதிநூ
யனையனபோராமைந்தனாயுதித்தியம்மறைவழங்கநோயுற்றி
முனையனவுலகத்தோருனைப்பகைத்து முதிர்துயராழ்ந்துறிய
ந்தோ.

உரை. — சட்சதனென்றும்வானவனுரைத்த யாவையுங்
கேட்டநற்றவத்திறைவனாகியகுலேச தானப்பொழுதேந்திய
தேவகுழந்தையைநோக்கிச்சொன்னான்: திருக்குமாரனே! நீ
யே யுலகங்கள்யாவையு முண்டாக்கினாய், நீயே யுன்றயைதளி
ர்த்துமிகும்படி வேதநூல்விதித்துரைத்தாய், இவையெல்லாம்
போதாதென்று நீயே யிக்காலத்தவதரித்து மகனாய்ப்பிறந்
தாய், இனிநீ யையோ வவ்வேதம்வழங்கும்படிநோய்கொண்
டுவருந்திச் சினந்தவுலகத்தோருன்னைப்பகைத்துப் பெருந்
துயர்க்கடலில்மிழ்ந்துவாயே யென்றானென்க. (௪௧)

இன்னொளிமகவேநினைப்பகைக்கினுநீ யீந்தநூற்பகை
க்கினுங்கயவர் [ப்பெருகி
பொன்னொளிசுடரச்சொரிந்தமலனைப் புன்கணாற்பொலிவுற
தின்னொளிகுன்றநின்மறைகுன்ற நினைத்தநின்னருட்டொழி
ல்முடிப்பாய் [ப்புனைந்தான்.
மன்னொளிமதலைகையோயெனக்கண்ணீர் மலரடிக்கணியென

உரை.— இன்பஞ்செய்கதிர்வீசிய திருமுகமகனே! அங்ஙனம் பாவிகளுன்னைப்பகைத்தாலு நீயுரைத்தவேதத்தைப் பகைத்தாலு நெருப்புச்சுடச்சுடச் சுடரும்பசும்பொன் போலவவர்களால்வந்ததுன்பங்களைக்கொண்டு பொலிவாகப்பெருகிவளருமுன்றனொளிப்புகழுங்குறையாது, உன்வேதத்தியல்புங்குறையாது, நீ நினைத்ததையின்றொழிலை யிடையூறின்றிமுடிப்பாயே, நிலைகொண்டுயர்ந்தபுகழின்மிக்க வல்லமையுடையோனே யென்று குசைதாரைமுத்துகுத்த கண்ணீரோ யவன்திருமலர்ப்பாதத் தாபாரணமாகப் புனைந்தானென்க. (௪௨)

வேறு.

சினைவருங்கனிதீஞ்சுவையுண்டபின்
னனைவரும்பொழினின்றுநடந்துபோய்க்
கனைவருங்குளிர்கால்சவரஞ்செயச்
சுனைவருஞ்சுருதிக்கிரிநீங்கினார்.

உரை.— இவையெல்லாமாகிக்கொம்பிற்பழுத்த வினியகனிகளையுண்டபின்பெழுந்து மலர்பூஞ்சோலையினின்றுபோயொலிபடக்குளிர்ந்து வீசினதென்றல் வெண்சாமரையாகச் சுனையூற்றெழுகிய வேதமலையை நீங்கினானென்க. (௪௩)

நீங்கியாயினயாவையுநீங்கில
ளோங்கியார்வமுணர்ந்துபூண்டனள்
பாங்கியாழிளகிப்பரிவோதைகொண்
டேங்கினாலெனவேங்கியியம்பினாள்.

உரை.— அங்ஙனஞ் சீனயிமாமலைநீங்கியகாலத்துமங்கே யாயதெல்லா மறவாமற்றன்மனத்தோங்கியவன்பினையுணர்ந்து வான்மீன்களைமுடியாகச்சூழ்ந்த மரியென்பவள் வீணை நரம்புகளிளகித் துக்கவோசையோடேங்கினாற்போலவவளு மனதிலேங்கிச் சொன்னாளென்க. (௪௪)

நாதனேகியநன்மறைநாகமேற்
சாதவாரணச்சாகியென்கோவியா

னாதலையின பூம்பொழிலாங்குள
தேதமீறுயிர்ச்சாகியென்கோவியான்.

உரை. — நாங்கண்ட வழகிற்சிறந்தமரமே பரமநாதனுரைத்த வேதமலையிலுள்ள மெய்யானவேதமர மென்பேனோ, முன்னாளிலாதிமனிதனாகியவாதனென்பவ னிருந்தபூங்காவனத்திலுள்ள குறைதீர்ந்தவுயிர்மரமென்பேனோ வென்றுளென்க. (ஆதனிருந்தபூங்காவனநடுவில் வைத்தவொருமரத்தின்கனிகளையுண்பவ னெக்காலத்துஞ்சாவின்றி வாழ்வனென்றதற்குயிர்மரமென்னும் பெயராயிற்றென்க.) (௪௫)

உம்பரின்சுவையிக்கனியுண்டுநீள்
கொம்பரின்னிழற்கீழுறைகோதிலா
ரம்பரின்புறுமண்டவனென்கோவியா
னிம்பரின்னுயிர்வாழ்வனென்கோவியான்.

உரை.—வானவரமிர்தச்சுவைபோ லினியவிவ்வேதமரத்தின்கனிகளையுண்டு நீண்டுபரந்தவதின்கொம்புகள் செய்யு நன்னிழற்கீழிருக்குங் குறையற்றவனெல்லாரையு மவ்வுலகில் வாழும் வானவனென்பேனோ? இவ்வுலகிலினிதாய்வாழ்பவனென்பேனோ வென்றுளென்க. (௪௬)

அறத்துச்செவ்வழியாரணமெந்தைகைத்
திறத்துத்தீட்டியசீர்பெரிதென்கனோ
மறத்துத்தேரிலமாக்களதுட்கொளாப்
புறத்துப்போக்குபுரைபெரிதென்கனோ.

உரை.—நல்லறத்தொழுக்கம்வழுவா நன்னெறிபாகியவேதநூலை யாண்டவன் றன்கையாலெழுதித் தந்ததையினன்மைபெரிதென்பேனோ? செய்தபாவமயக்கத்தாற் றெளியமாட்டாத மனித ரங்ஙனமெழுதிய வேதமுட்கொள்ளா ததைப் புறத்து நீக்கியபாவம் பெரிதென்பேனோ வென்றுளென்க. (௪௭)

தொல்வின்றம்மனத்தாசறத்தோன்றிய
வெல்வினெண்மறையிற்றொழிந்தானைச்

செல்வின்னோங்கியவின்னசிலம்புமேற்
கல்வின்றீட்டியவாண்டகைகாட்டினான்.

உரை.—முன்னாளிலவனவன்றன்மனதிலே குறையின்றித் தோன்றிக் கதிரினும்விளங்கியவேதத்தை யவர்விட்டொழித்தாரென்று மீளவுமதை மேகமண்டலங்கடந்த விம்மலையுச்சியி விருகல்லின்மேலெழுதியநாதன் மனிதர்க்கதைக்காட்டினானென்றானென்க. (இது நாதன்றயையைக் காட்டற்குரைத்ததென்க.) (௪௮)

தீட்டிக்காட்டியதிவ்வியநூல்புற
நாட்டிற்கற்றதெனாநரர்பற்கதை
பூட்டிப்போற்றருநூலெனப்பொற்பறங்
கோட்டிக்கோதுலகார்ந்தனகொள்கையே.

உரை.—அங்ஙன நாதனெழுதிக்காட்டின தேவநூலாகிய வேதம் புறநாட்டிலேபடித்தநூலென் றதை நிந்தையாகத்தள்ளி மனிதர்தாமே பலவீண்கதைகளைப்பூட்டி யதுவேபோற்றற்கரியவேதநூலென்றுசொல்லி நல்லறம்வளைந்துகெடும்படி பூவுலகிற்பாவங்கணிறைந்தனவென்றானென்க. (இதுவேதமுட்கொள்ளாத பாவத்தின்மைகாட்டற் குரைத்ததென்க.) (௪௯)

நஞ்சிதேயமுதிஃதெனநாடுதற்
கஞ்சியேநரர்தேறிலராதலா
னெஞ்சிலேயருணேரியவெந்தைநீ
யெஞ்சியேமறைகாட்டிடவெய்தினாய்.

உரை.— அங்ஙன நாதனுரைத்த வேதமொன்றொழிய மனிதர்பூட்டிய பலகதைகளும் வேதமென் றுவழங்கினதினால் வற்றுள் நஞ்சாகியபொய்யிது வமிர்தமாகியமெய்யிதுவென்றொன்றினைத்தேடுதற்கஞ்சி மனிதர்தெளிவின்றித் தேறமாட்டாமையி னீயே யென்னாண்டவனே! மனதிலருளைநினைத்து மெலிந்தாற்போல மனிதனாய்ப்பிறந்து அப்பலவேதங்களின் மெய்வேதமின்னதென் றுகாட்டும்படி வந்தாயே யென்றானென்க. (௫௰)

பொய்யைக்காட்டியநின்னையும்பொய்யற
மெய்யைக்காட்டியவேதமுநாக்கினர்
கையைக்காட்டியுரைப்பவர்காதையே
மையைக்காட்டினுநூலெனவவ்வரோ.

உரை.—அங்ஙனம் பொய்யானவேதங்களைக்காட்டிய வுன்னையும் பழுதில்லாமெய்யைக்காட்டிய வுன்வேதத்தையுமனிதர்தள்ளித் தமக்கேதாகிலுந்தரச்சொல்லிக் கையைக்காட்டிச் சிலர் தம்மூதியத்தைப்பற்றிச்சொன்ன வீண்கதையை யதிலேகுறையுண்டென்றுகண்டாலும் வேதநூலென்று மனிதர்கொள்வாரோ வென்றுணர்க. (௫௧)

காவிவாட்டியகண்மணிக்காதலே
யோவிவாட்டியவுன்னுடல்புண்பட
வாவிவாட்டியகோடையின்மானிட
ராவிவாட்டியடும்பகைசெய்வரோ.

உரை.—பூங்கருங்குவளைமலரினு மழகியகண்மணியாகியவென்னன்பே! உன்றிருமேனி வருந்தி வாடிப்புண்படும்படி தடாகங்கள்வற்றுதற்குக் காரணமாகியகொடுங்கோடைபோல வெஞ்சினங்கொண்டமனிதருன்னுயிர்வாட்டிக்கொல்ல மனம்பொருந்தி யுன்மேற்பகைவைப்பாரோ வென்றுணர்க. (௫௨)

சுடரப்பொன்சுடுந்தீயெனத்தொன்மறை
படரப்பொங்கிவரும்பகைப்பாசறை
யடரப்பொன்றிலவாரணமெங்கணுந்
துடரப்பொம்மிவளர்ந்துதுளங்குமே.

உரை.—ஆகிலும் பொன் னொளிபெறும்படி சுடுந்தீப்போலத் தொல்லையுள்ளவேதம் படருங்காலத்துப் பொங்கிவரும்பகைசெய்யுந் துன்பவிடையூறுகளடர்ந்துமிகவே யுன்மொழிவேதங்கெடாம லெங்குந் தொடைத்துடர்பாகப் பரந்துவளர்ந்து துளங்குமேயென்றுணர்க. (௫௩)

வேண்டியாவையும்வேண்டுவதன்மைபா
லீண்டிலாக்கியவீடுளநின்னருட்

டாண்டிமாற் றுவரீங்கிலதாரணி
யாண்டியாருமளிக்குமினேவென்றாள்.

உரை.—வேண்டுமெல்லாவற்றையும் வேண்டுமென்றமா த்திரத்தி லுடனேயாக்குதற்கு வல்லமையுடைய வுன்றயை யைக்கடந்துமாற்றும்படி வல்லவ ரிங்கேயொருவருமில்லை, ஆகையா லென்றிருக்குமாரனே! தயையாற் பூவுலகாண்டு கொண் டெல்லாரையுங் கரையேற்றி யிரட்சிக்கும்படி செய் வாயாகவென்று மரியென்பவள் தன்றேவகுமாரனை வண ங்கினளென்க. (ருச)

அன்றொளித்தகறவையினின்னண
நன்றொளித்தநமக்கினைநந்தாய்க்கதிர்
நின்றொளித்தவினேயியுமெய்ம்மறை
யென்றொளித்தமனத்தினிருண்டதே.

உரை.—மரியென்பவ ளிவற்றைச்சொல்லி யொளித்ததன் கன்றை நினைத்திரங்கினகறவைபோல விங்ஙன நன்மையிழந் தநமக் கவளிரங்கினபொழுதே சூரியனத்தமித்தொளித்தத னாற் பூவுலகும் மெய்யானவேதத்தைவிட் டறியாதவர்மனம் போல வெங்குமிருண்டதென்க. (ருரு)

அணிநிறத்தசினைப்படத்தாரொளி
மணிநிறத்தலர்ப்பந்தரில்வந்துமே
ரணிநிறத்தமரர்புடையார்ந்தரும்
பணிநிறத்தறம்பற்றினர்வைகினார்.

உரை.—அத்தமித்தவிடத்துச் சூழெங்குமூரில்லாமையா லழகிதாகத் தளிர்த்தமரக்கொம்புகள் விரித்தம்மேற்கட்டியாக விளங்கியமணிச்சாயலின் மலர்ந்தபூம்பந்தற்கீழொ துங்கிப் பேரணியாகப் பதினாயிரம்வானவர்சூழக் காத்திருக்க வரிய தோராபரணமாக நல்லறமெல்லாம்பற்றி யணிந்த விம்மூவ ரவ்விராவிலே யிருந்தாரென்க. (ருசா)

சீனயிமாமலைகாண்படலமுற்றும்.

ஆகப்படலம் - ௰அ - இ - விருத்தம்

ருளாருஅ.

பத்தொன்பதாவது.

பாவஸ்புகுபடலம்.

வேறு.

காமொழுநிசிகோன்மை கடியவில்லொளியம்பாற்
றேமொழுசுடர்வெம்போர்ச் செங்கொடியுயர்தோன்றப்
பாமொழுகளமெங்கும் பரவைகள்முரசார்ப்பப்
போமொழுபொழுதாகப் புலரிவந்திவர்போனார்.

உரை.—அங்ஙனமரியுஞ்சூசையுந் தேவதிருக்குமாரனை வைத்துக்கொண் டொருமரத்தடியி விராவெல்லாமிருந்தபின்ன ரிருண்டவிராவின்கொடுங்கோன்மைகெடும்படி செங்கதிராகிய வம்புகளையேந்தித் தேர்மேலெழுந்து போர்செய்யவருஞ் சூரியன்முன்னர் சிவந்தகொடிகளையேந்தி முற்பாளையந்தோன்றினாற்போலக் கீழ்திசைவானஞ்சிவக்கவும்போர்க்களமாகியபூமியெங்கு முரசடித்தாற்போலப் பறவைகள் முழங்கவும் போர்க்காலமாகியவிடியற்காலம் வந்தவளவிலே யிவரொழுந் தப்பாற்போனாரென்க. (க)

வான்பயில்மதியேத்தும் வடிவடிவடிவானுந்
தேன்பயில்மலர்வாகைத் திருமறையறையோனு
மூன்பயிலுருநாத னொளியடிதொழுதேத்திக்
கான்பயில்மலர்பூத்த கடிவனநெறிபோனார்.

உரை. — அங்ஙனம் வானத்திற்றோன்றியசந்திரன் றலைமேலேந்தியவடிவுள பாதத்தழகின்மிக்க மரியென்பவளுந் தேன்மலர்பூத்த கொடியையேந்தி வேதம்வாழ்ந்திருத்தற்கமைத்தவறையாகியசூசையு மூன்பொழியுடலையுடுத்து மனிதனுப்பிறந்தநாதனைவணங்கிக்கையிலேந்தி வாசமலலர்பூத்தவழியே போனாரென்க. (உ)

துயிலெனவிரிபூங்காத் தும்பிகள்குழலாகக்
குயிலினமுழவாகக் குளிர்பொழிலரங்காக
மயிலினநடமாடு மதுவழிவழிநீக்கி
யயிலெனவழல்வீசு மருஞ்சுரநெறிபோனார்.

உரை.—எழுதியநற்பூம்பிடவை கீழ்விரித்ததுபோ விடைவிடாமலர்ந்த பூங்காவிலிலங்கும் வண்டுகள்வீணையாகவுங் குயில்கள் பலவாச்சியங்களாகவுங் குளிர்ந்தபூஞ்சோலைகள் நாடகசாலையாகவு மயில்களாடாநின்ற மதுவைப்பொழிந்தவழியைவிட்டுக் கொடியவேலொத்தவழலையெறிக்கும் பாலைசேரருஞ்சுரத்துப் போனாரென்க. (௩)

நண்ணியபொருணீங்கி நல்குரவெதிருற்ற
புண்ணியமரபோருட் புலனயர்விலர்போன்றே
மண்ணியவனநீங்கி வசுகுடியுறைகானங்
கண்ணியநெறிபோகக் கண்டழுதனகாவே.

உரை.—அங்ஙன முன்னிருந்தசெல்வப்பொருள்போய்த் தரித்திரமெதிரேகொண்டவறவோ ருள்ளே மயங்காததுபோல விவருமகிழ்வோடு மலராலலங்கரித்தபூஞ்சோலைவழியைவிட்டு நெருப்புக்குடியாயிருக்குங் கானத்தைநோக்கிப் போவதுகண்ட பூங்காவெல்லா மிரங்கியழுதனவென்க. (௪)

பூவிடையழவண்டு பொதும்பிடையழமஞ்ஞை
காவிடையழவம்பூக் கடிமலர்தவழ்யாறு
தாவிடையழவந்தோ தகாதெனவழயாவுங்
கோவிடையரசாள்வோர் கொடுவனமருகுற்றார்.

உரை.—அங்ஙன மிரங்கிப் பூவிடத்தொதுங்கிய வண்டுகளழவு மரப்பொந்திடத்தொதுங்கிய மயில்களழவுங் காவிடத்தெங்குமலர்ந்தபூவினமழவும்வாசமலரிடத்தொழுகித்தவழுமாறுபாய்ந்தவிடமெல்லா மொல்லெனவழவு மையோபாலைவழிதருந்துன்ப மிவர்க்குத்தகாதென்று மற்றெல்லாமழவும் வானுலகரசுடையோரிவர் கொடியபாலைநிலத் தண்டினாரென்க. (௫)

வேறு.

மேற்சபையாகவானோர் விருப்பெழுமருங்கிற்சூழ
நூற்சபையாகக்கற்றோர் நுதலியபுகழின்மிக்கோர்
கோற்சபையாகமூவர் கொடுந்துயர்குடியாய்வைகும்
பேற்சபையென்னுங்கானம் பெற்றுளந்தளராப்புக்கார்.

உரை.—அங்ஙன மீரையாயிரம்வானவர் விருப்பத்தோடிருமருங்கிற்சூழ்ந்துவரவே கற்றநூலோ ருணர்ந்தபுகழின்மிக்க விராசகோத்திரத்திம்மூவர்கொடிய துயரெல்லாங்குடியாயிருக்கும் பேற்சபையென்னும் பாலைவனத்துள் மனமயங்காமற் புக்காரென்க. (௬)

காட்டியவிரலைத்தீக்கக் கண்டகண்விழியைத்தீக்கச்
சூட்டியகொடியகானஞ் சுடுமெனிலெனும்வாய்தீக்க
வீட்டியவழலையெண்ணி லெண்ணியமனத்தைத்தீக்கக்
கோட்டியமனத்திற்றீக்குங் கொடியதோர்சுரமதன்றே.

உரை.—அங்ஙன மவர்புக்க வனத்துக்கொடுமை யெத்தன்மைத்தோவென்னில்: அதை விரனீட்டிக்காட்டினாற் காட்டிய விரலைச்சுடவுங் கண்டாற்கண்டகண்ணைச்சுடவு மதுசுடுமென்று லென்றவாயைச்சுடவு மங்கேகூடியசெந்தீ மிகுதியை நினைத்தா னினைத்தமனத்தைச்சுடவும் வஞ்சத்தால்வளைந்த கொடியர்மனத்தைப்போல வேகுங் கொடியசுரமதுவென்க. (௭)

புனப்பசையிழந்தகானிற் பொழிதுளியுள்ளிவந்தாற்
கனப்பசையிழந்துதாமுங் கார்த்திரள்கனன்றுவேக
வினப்பசையிழந்ததீயோ ரிரவலர்தம்மைக்கண்டு
மனப்பசையிழந்தகோர மானியசுரமதன்றே.

உரை.—நீரில்லாவப்பாலைவனத்தின் மேகங்கள் நீர்த்துளி பொழியும்படிவந்தாற் றாமுமீரமின்றித் தீந்துவேகவு மினத்தன்பில்லாததீயோ ரிரப்போரைக்கண்டவளவிலே மனத்தீரமின்றிக் காட்டியகொடுமையோடொத்த சுரமதுவென்க. (௮)

தீய்வயிறூர்ந்தகாலுஞ் செஞ்சுடர்க்கதிருஞ்செந்தீ
மேய்வயிறூர்ந்துவேகும் விரிமணற்பரப்புந்தீயாய்
நோய்வயிறூர்ந்தகான நுடைநலமாதர்வஞ்சங்
காய்வயிறூர்ந்தவாயுங் கண்களுமனமும்போன்றே.

உரை. — அவ்வனத்திடத்துத் தீநிறைந்துண்டு வீசியகா
ற்றுஞ் சூரியன்விட்டகதிரு நிறைவயிறுண்ட கொடுந்தீயாற்
சுடும்விரிவாய்ப்பரப்பினமணலு மிம்மூன்றுந் தீயொத்தன
வாகையிற் றுன்பநிறைந்தகானக மெத்தன்மைத்தென்னில்
விலையாம்படி யழகினைப்பேணிய மாதர்போலாகி நிறைந்த
வஞ்சத்தாற்சுடு மவர்வாய்ச்சொல்லொத்ததக்காற்று மவர்
கண்பார்வையொத்த தக்கதிரு மவர்மனமொத்த தம்மணலு
மென்க. (௯)

போர்முகத்தழன்றவீரர் புகைந்தெனப்புகைந்தகான
மோர்முகத்தெழுந்தமூவ ரெய்தியவேலைதானுந்
தார்முகத்துவந்தமன்றற் றரும்புதுமகளிர்போன்று
நீர்முகத்திவரன்பார்ந்த நெஞ்செனக்குளிர்ந்ததன்றே.

உரை.—அங்ஙனம் போர்முகத்தழலெழு வீரர்கோபித்தா
ற்போலப் புகைந்தெரியுமவ்வனமே யழகியமுகத்திம்மூவர்
வரக்கண்டு தானு மாலையணிந்து புதுமணஞ்செய்தமகளிர்
போலுள்ளுவந்து தயைநிறைந்தவிவர்மனம்போல நீர்கொ
ண்டுகுளிர்ந்ததென்க. (௰)

அயின்றெழும்விளைவாய்த்தாழை யலர்மடற்பள்ளிப
ன்றுட்
டுயின்றெழுமிளநல்வேனில் துதித்தபங்குனியிற்செல்லக்
குயின்றெழுங்குயில்கள்காட்டக் கோதறமகிழ்பூங்காவிற்
பயின்றெழும்புகழின்மிக்கோர் பணிமுகத்துவந்தபாலே.

உரை.— அம்மூவர்வந்தவளவிலேயவ்வனமெங்ஙனமுவந்
ததென்னில்: உண்டவாசனையெழும்படி வாய்மலர்ந்ததாழை
ப்பூமடற்பள்ளியிடத்துக் கூதிர்காலத்துறங்கின பின்பெழுந்
தெவரும்புகழ்கின்ற பங்குனிநாளிலேயிளவேனில்வரவேவந்

தசெய்தியைக் கூவியகுயில்கள்காட்டாநிற்பக் குறையொன்றின்றிமகிழ்வெய்திமலரும் பூஞ்சோலையொப்பச் சொல்விலடங்கியபுகழினுயர்ந்தமூவர்வந்து காட்டியவழகியமுகத்தைப் பாலையுமுவந்ததென்க. (௴௧)

மைவ்வினையழன்றநெஞ்சின் மருவியவருளின்மாட்சி
செவ்வினைபுக்கபாலாற் றீதறச்சிறந்ததன்மைத் [ச்
தவ்வினைசெகுத்தமூவ ரணிமுகத்தருளினாலே
வெவ்வினையுடன்றகானம் விரைமுகத்துவந்ததன்றே.

உரை.— மீளவுங் கொண்டதீவினை கொடுமையாலழன்று மெலிவுடைநெஞ்சத்திடத்திற் றேவதிருவருள்வந்தமையான் மாட்சிமைபொருந்திய நன்னெறியொழுக்கமுட்புக்கதன்மையாற் றீதொன்றின்றியநெஞ்சருஞ்சிறப்புற்றதுபோலத் தீவினைகெடும்படிவந்தமூவர் தம்மழகியமுகத்தையங்கேகாட்டியவருளினால் வேகாநின்றவனம் வாசமலர்முகத்துக்குளிர்ந் துவந்ததென்க. (௴௨)

நிறைமலரொழுக்கத்தாட்கீழ் நித்திலப்பரப்பிற்றூய
நறைமலர்பரப்பினாற்போ னளிர்படவொழுகிச்சூழ
வுறைமலர்மணவாய்த்தென்ற லுரைத்தமங்கலத்தின்வீச
மறைமலர்பூண்டமரர்பர் மகிழ்வவர்மனத்திற்போனார்.

உரை. — அங்ஙன மாறினவனத்தி னீதியொழுக்கநிறையின்மலர்ந்தவிவர்திருப்பாதத்தின்கீழ் முத்துக்களைப்பரப்பிய தின்மேற் றூயவாசமலரைப்பரப்பினாற்போலப் பாதங்குளிர்ப்பநடந்து சூழமலர்ந்தபூவிடும்வாசனைகொணர்ந்து மணக்கும்வாயுள தென்றல் மங்கலவாழ்த்துரைத்தாற்போலவீசி வேதமேமலர்மாலையாகவணிந்தமார்புடைமூவர் மகிழ்ச்சியான் மனமலர்ந் துவந்துபோனாரென்க. (௴௩)

மின்னிறக்கொடியைச்சூட்டி விளங்கியமணியின்வில்செ
நன்னிறத்தாரம்பூண்டு நாடிவந்தணியிற்றேன்றுஞ் [ய்
சென்னிறக்குடையிற்கொன்ற தெழித்தசெங்கதிரின்வெப்பத்
தின்னிறக்குளிர்பூநீழ லியங்கியசிறப்பிற்போனார்.

௴௪

உரை. — மீளவு மின்னென்னு மழகிய கொடியைச்சூடி யொளிசெய்மணியோடொத்த வான்வில்லென்னு நல்லணிப் பூணையணிந்து விருப்புட னிவரை நாடிவந்தொழுங்குபடமே ற்றோன்றிய மேகங்களென் னுங்குடையினான்மறைத்த சினந் தசூரியன்கதிரகோரத் தினியகுளும்பூநிழலே கூடநடக்குஞ் சிறப்போடுபோனாரென்க. (௰௪)

பாகிளஞ்சுவைபெய்வில்லார் பவளவாய்த்துறையில்
நாகிளந்தரளங்காட்டி நகைதருமடந்தைபோல [வைத்த
வாகிளம்பனிப்பூங்கானத் தழகணிசெய்தாலென்ன
வாகிளஞ்சுடர்செய்மேனி வானவர்காட்டிநின்றார்.

உரை. — மீளவு மினியசுவைச்சொல்லுமிழ்ந்து விளங்கும்பவளவாய்த்துறையிடத் தொழுங்கில்வைத்த சங்குகளீன்ற விளமுத்தொப்பப் புல்லெயிறுகளைக்காட்ட வொருநன்மடந்தைநகைகொண்டாற்போல நின்றவிளம்பனிதோய்ந்த புதுப்பூமலர்ந்த வவ்வனங்கொண்ட வழகிற்குமேலலங்காரமிட்டாற்போலச் சூழநின்றவரூபியானவானவர் பதினாயிரரு மழகியசுடராவிடும் பலவுருவங்களை யெடுத்துக்காட்டி நின்றாரென்க. (௰௫)

ஈரெழுவகுப்பிற்றேர்ந்த வினமணிநல்யாழ்வாங்கி
யோரெழுகுரலினோதை யுரிக்கிளைதளிர்ப்பப்பாகின்
னேரெழுமிடற்றினோதை நெறிகள்மூன்றியக்கிக்கூட்டிப்
பாரெழுநடங்கள்வாட்டப் பாடினர்சிறப்பின்வானோர்.

உரை.—கண்ணுக்கின்பமாம்படி யங்ஙனமுருவோடுதோன்றியவானவர் மீளவுங்காதிற்கின்பமாம்படி பதினால்வகைமணிவீணைகளைவாங்கி நாவின்முறையி லுழைமுதலேழிசைகிளைத்துத்தளிர்ப்ப விசையுட னோசையெல்லாங் கடைபிடித்தேற்றித் தேன்பாகொப்ப வினியமிடற்றினோசை மெலிவும் வலிவுஞ்சமனுமென் றிம்மூன்றெறி வேறுவேறாய்நடத்தியு நாற்படியொருப்படக்கூட்டியும் பலவீணைகளோ டிசைபடப்பாடலேயியற்றிப் பூவுலகேற்றிய நாடகசாலைவனப்புமின்பமுமாறிமறைக்கும்படியே பாடாநின்றாரென்க. (௰௬)

காமஞ்சால்வியப்பிலோங்கக் கண்டவையுள்ளிப்பைம் [ன
பூந்
தாமஞ்சால்கொடியோன் விண்ணோர் தளங்களுடலைவனென்
வேமஞ்சாவின்பத்தோர்ந்த விரும்புகழ்களிர்த்துத்தேவ
நாமஞ்சால்வழக்கநல்யாழ் நடையொடுபாடினானே.

உரை.— இவையெல்லாமாகையிற் காண்டவினுசைமிக்க வதிசயத்தோங்கியமனதி லிவற்றையாராய்த்தெண்ணி மலர்க் கொடியேந்தியகுசை சொன்னவானவர்தளங்களுட் டாறெ ருதலைவன்போலவுள்ளுண்டவின்பமிகுதியி லுணர்ந்ததிருப் புகழ்தளிர்த்துத் தேவதிருநாமங்கள்வழங்கும்படி வானவ ரோற்றிய வீணையிசைகளினடையேமாறு தவனும்பாடாநின் றானென்க. (௰௭)

வேறு.

பாலையின்வெப்பம் பனிமருதத்தாக்கினையே
மாலையின்றூமத் தருணீஇவல்லோ
யருணீஇவல்லோ ன்டிசென்றூரிங்கண்
டெருணீதிநீங்காதார் தீதிடும்பைநண்ணாரோ.

உரை. — தீச்சுடும் பாலையினிலத்தைப் பனியிற்குளிர்ந்த மருதவேலியின்றன்மைத்தாக்கினையே, மாலையினெழுங்குப டத்தம்முட்டேர்புவிடாத்தயையு நீதியுமுடையவல்லோனே, இவ்வல்லமையுடையோன் திருப்பாதத்தை யடைந்தவரெல் லாரு மிவ்வுலகிற்றெளிந் தறநீதிநெறியிற்றளராமற் றீதுசெ ய் துன்பங்களை யெக்காலத்துமடையாரென்றூவெனன்க. (இச் செய்யுள்முதல்மூன்றும் வெண்பாவிற்குரியசெப்பலோசை யோடுவருவனவென்றறிக.) (௰௮)

வீங்கோதநீர்நிலையாம் வெய்யநஞ்சின்னமுதா
மீங்கோதவொப்பிறந்த வெந்தையடிசென்றூ
வெந்தையடிசென்றூ ரெங்குமிடர்மொய்த்துலவச்
சிந்தைமகிழத்தார் தீதிடும்பைநண்ணாரோ.

உரை. — பொங்கலைக்கடலு நிலைக்களமாகும், கொடியநஞ்சுமுயிர்தருநல்லமுதாகும், நாமிங்கே சொலலும்படியொப்பில்லாத என்னுண்டவன்பாதத்தைச் சென்றோமாயின அப்பாதத்தைச்சென்றயாவரும் பூவுலகெங்கு மிடையூறுகள் வெள்ளமாகப்பரந்துமூடினகாலத்து மவருள்மகிழ்ந்துதீது செய்துன்பங்களை யடையாரொன்றுமெனெனக. (௰கூ)

வானவாழமரர் வணங்கித்தலையேற்றுந்
தேன்வாழடிசென்றார் தீதிடும்பைநண்ணுரோ
தீதிடும்பைநண்ணுவரிச் சீரடியைநாடாதால்
வாதிடும்பைவாழ்க்கை வழுக்கிவறுந்தீயோரே.

உரை.— வான்மேலுலகில்வாழும்வானவர் விடாமல்வணங்கித் தலைமேலேற்றியதேன்பொழிவன்மலர்ப்பாதத்தைச் சென்றவர் தீதுசெய்துன்பங்களையடையாரோ, அத்துன்பங்களையடைவா ரித்திருப்பாதத்தைத்தேடாம லாங்காரத்திடும்பைவிளைவிக்கு மிப்பூவுலகின்வாழ்க்கையின் பொய்யானதன்மைகளைவிரும்பின பாவிகளென்றுமெனெனக. (உ௰)

வேறு.

ஏழிசைக்குழலினோ டினியபண்டொனியினோடிசை
விடாத [ன்
யாழிசைக்கிவையெலா மிணர்நறுங்கொடியினேனைமையநாத
கேழிசைத்தொளிறுதாள் கெழுவவம்பலர்நறுமழையைவா
ரிச் [னர்.
சூழிசைத்திடையுலாந் தொகையிழந்தமரரேதொழுதுபோ

உரை. — அங்ஙனம் வாசமலர்க்கொடியேந்தியசூசை யிவையெல்லாம் வானோர்வாசியாநின்ற வேழிசைக்குரியவேழுதுளையுள்ளகுழலு மினியபண்ணு மிவற்றோடிசைந்தவீணையு மிவையெல்லாங்கிளைத்துத்தரும் பலவோசையோ டிசைபடத் தானும்பாடவியற்றிச்சொன்னபின்ன ரவதரித்தநாதனிறப்பட வொளிசெய்திருவடிமேல் மது வாசமலர்மழைபொழிந்து சூழிருபுடையிற் றொகையின்றியுலாவிய வானவரோயாமல்வணங்கிவர வவர்நடத்துபோனுரென்க. (உக)

இன்னவாய்மருதமொத் திணர்நறுவுமிழ்வனத்திவர்கள்
பன்னாட்
டுன்னவானுலகினிற் றுறவினோரனையவுட்சுவையில்விள்ளா
வுன்னவாய்மகிழ்வுதுய்த் துணவுணாநினைவுமற்றொழுகியோர்
நா
ளன்னவாயமரருற் றணுகிவானுரிவிருந்தமைதல்செய்தார்.

உரை.— அங்ஙன மருதநிலத்தொத் தலராப்பூத்து வாசனைபொழியாநின்ற பாலைவழி யிவர் பலநாட்செல்ல வானுலகடைந்துவாழ்பவரைப்போல விடாதபேரின்பத்து மனத்தின்வாயால் மகிழ்ச்சியையுண்டதொழிய வுடற்கேற்றவுணவின்றியதின்மேனினைவுமின்றி நடந்துவருகையி லொருநாளங்கே சிலவானவர்வந்தணுகி வானுலகிற்குரியதோர் விருந்தினையமைத்துக் கொடுத்தாரென்க. (உஉ)

கொழுநிலாமரகதக் கொடியின்மேன்மணிகள்பூத்தய
ருபந்தர்
விழுநிலாவிளையுமுத் தனையமீன்விரிவுசெய்விரிவிதானத் [ச்
தெழுநிலாமணிநிரைத் தெழினிவீழ்ந்திணர்நறுவமளிபாய்த்தி
செழுநிலாமணிமுகத் திருவினோரமளியிற்பொலியநின்றார்.

உரை. — அவர்க்குவானவ ரவ்வனத் தெங்ஙனம் விருந்தினையமைத்தாரென்னில் விளங்கியமரகதமிளிர்மணி கொடியாய்ப்படர்ந்து பலநிறமணிகளை மலராய்ப்பூத்துப் பந்தலாய்த்தோன்றி யதின்கீழ் நன்னிலாமுத்துகளொப்ப வான்மீன்பரவப்பதித்து வகுத்தமேற்கட்டியைவிரித்து மிக்கொளிமணிகளைநிரைத்துச்செய்த நெடுந்திரைச்சீலை சூழத்தூங்கி நடுவேவாசமலர்ப்பூமெத்தைபரப்பி யதின்மே லழகிய மணியின்சாயலாய் வில்வீசியமுகத்தோ டவர்பொலிந்திருந்தாரென்க. (உ௩)

விற்கலத்துருநிலா விலகவிட்டமரர்சூழ்வியவராகப்
பொற்கலத்தலர்நறுப் புனலுமிழ்த்தகிலவாபுகையுமாட்டிப்
பற்கலத்தமிர்தமே பலசுவைக்கமையவானவர்பரப்பிச்
சொற்கலத்திணையிலாச் சுவையிலத்தகவினோர்துதியொடுண்
டார்.

உரை. — அங்ஙனமங்கவரிருந்தபின் னொளிக்கலமணிந்து கதிரைப்பரப்பிவீசியவானவ ரேவல்செய்வோர்போலச் சூழ்த்திரிந்து பொற்கலத்தேந்திய வாசபன்னீராட்டி வெந்தழல்தந்தபுகையைச்சூழக்காட்டிப் பலமணிக்கலங்களிற் பலசுவைதோன்றும்படி பலவிதத்தமைத்த வமிர்தத்தை வானவர் முன்னேபரப்பிச் சொல்லிலடங்காதவின்பத்தோ டப்பெருமையோராகிய மரியுஞ்சூசையு மாண்டவனைவாழ்த்தியுண் டாரென்க. (௨௪)

சால்வருந்தனையுணர்ந் தினிதுண்ணும்பொழுதருந்தகு
திவானோர்
கால்வருங்கவரியுங் கமழ்வரும்புகையையுங்கனியவாரி
நால்வருங்கலநரம் பிசைநயந்தெழநறுநளினவாயாற்
பால்வருஞ்சுவைவரும் பலநரம்பிசையொடும்பாடினாரே.

உரை.— மரியுஞ்சூசையுமங்ஙனந் தமக்குநாதன்காட்டிய விருந்ததனையுணர்ந் தினிதாயுண்ணும்பொழுதே யாசாரத் தோடுநின்றசிலவானவர் வெண்சாமரைவீசவுஞ் சிலர் வாசபு கைகளைக்காட்டவுஞ் சிலர்நால்வகைவீணைகளைத்தரித்து நரம் பின்வழி யேழிசைகள் கடைபிடித்திசைந் துவந்தெழுப்ப வுஞ் சிலர் வாசதாமரைவாயினாற் பாலோடொத்த வினியமி டற்றினோசை வீணையோடிசைபடவேற்றிப்பாடாநின்றாரெ ன்க. (௨௫)

வேறு.

தன்றோலுரித்தபாம்பொத்த தவத்தின்வாளாற்பொறி
யைந்துங்
கொன்றோனுளம்பற்றிருள்புக்காக் குன்றாச்சீலவிளக்கேற்றி
நின்றோனருங்கால்கடந்துரைக்கு நிறைசொல்வல்லோன்
பாப்புகழும் [வே.
வென்றோனெனவியமாமுனிவன் விருந்துண்டுவந்தவனமிது

உரை. — தன்றோலைப் பாம்புரித்தாற்போல வாசையெல் லாங்கழற்றிவிடுதற்குக் காரணமாகிய வருந்தவத்தை வாளாக

க்கொண்டு பஞ்சேந்திரியங்களைக்கொன்றவனா யாசைபுகைந்து செய்யுமிருளுட்புகாதபடி யவியாதசீலமென்னும் விளக்குள்ளேற்றிநின்றவனாய் வருங்காலத்தைக்காட்சியாற்கடந்து வரும்பொருளைச்சொல்லிக்காட்டுந் தப்பாத நிறைசொல்லுடையனாய்ப் பாவலர்சொல்லும்புகழைவென்று மேனின்றவனா யெலீயமாமுனியென்போன் தானும்விருந்துண்டு மகிழ்ந்தவனமிதுதானென்றுணர்க. (௨௬)

கான்வாழ்சுவைத்தேன்றுளிநக்கிக் கதிவாழ்மாறாவாழ்
வொழிந்து [கண்டு
வான்வாழிறையோன்றனைமறுத்து வசைப்பற்றேவர்தொழக்
தேன்வாழ்காவுமன்னுயிருந் தேம்பிவாடமூவ்வருடந் [யே.
தான்வாழுறைகொள்முகின்முகமுந் தகைத்தசாபமாமுனி

உரை.—சொன்னவெலீயமாமுனி யெத்தன்மைத்தானென்று வானோர்காட்டத்துடங்கினாராகையில் அம்முனியிருந்த நாட்டி லெல்லாருங் காட்டி லுள்ளதேன்றுளிநக்கினாற்போல விவ்வுலகுள்ள நீசவாழ்வுகளைவிரும்புவதொழியப் பரமகதியிலுள்ள மாறாதவாழ்வுகளைவிட்டிழந்து வானத்தில்வீற்றிருக்கின்ற மெய்க்கடவுளைமறுத்து நீச பலபொய்யானதேவர்களைவணங்கினார், அதைத்தான்கண்டு அந்நாட்டிற்காக்கினையாகச் சூழக்காடெல்லாமு மெல்லாவுயிரு நொந்துவாடும்படி தான்மூன்றுவருடமு மழைமேகமுகமுங்காணாதபடி மழையைத்தடுத்த சாபவல்லமாமுனியவனாமென்றுணர்க. (௨௭)

அன்னாளெல்லாந்தானுழைவா யசலமுழையுட்புக்கு
றைந்த
பன்னாளெல்லாமுறைதவிராப் பறந்தோர்காகமுணவுய்ப்ப
முன்னாளில்லாவரத்துயர்ந்து முதல்வனடிசேர்ந்தானென்ன
வென்னாளெல்லாங்கோடாத வியல்பிற்சீலமாமுனியே.

உரை.—அங்ஙனமழையில்லாதமூன்றுவருடமு மவனோர்மலையி னுழைவாய்க்குகையுட்புகுந் தங்கிருந்தநாள்மட்டு நாடோறுந் தப்பாம லொருகாக்கைபறந்துவந் துணவுகொடுக்க முன்னவொருவரு மடையாவரங்களைப்பெற்றுயர்ந்

தாண்டவன்றிருப்பாதத்தைச் சேர்ந்தவனைப்போலக் களிகூர்ந் தென்ஞான்றும் வழுவாதவியல்போடு நற்சீலமாருத மாமுனியவனுமென்றோர்க. (௨௮)

பிழையிற்கொடுங்கோன் றுறவரெலாம் பின்றுச்சினத்துக்கொன்றபினர்
முழையிற்கிடந்தவிம்முனியு முரிக்கக்கொணர்மினெனவிட்ட
வுழையிலொருமூவைம்பதுவே ழுழவரொருங்கும்வாய்மொழியான்
மழையிற்கனலைவான்பொழிய வைதென்றெரித்தமாமுனியே.

உரை.—அக்காலத்திறைமுறைபிழைத்தகொடுங்கோன் மழைபெய்யாததைக்கண்டு பின்வாங்காதவெகுளியிற்பொங்கித் தன்னாட்டிவிருந்த மற்றமுனிவரெல்லாரையுங் கொன்றபின்பு முன்சொன்னபடிகுகையிற்கிடந்த வெலீயமாமுனியையுங்கொல்லக் கொண்டுவாருங்களென்று ஐம்ப தைம்பதாகமுவ்வகுப்பாய்விட்ட சேவகரெல்லாரையுந் தன்வாய்மொழியாற்பெய்வித்த நெருப்புமாரியோடேயெரித்த மாமுனியவனு மென்றோர்க. (௨௯)

கொழுகொம்பிழந்தகொடியன்ன கொழுநனிழந்தவிளங்கைமை
செழுகொம்பன்னவூன்றுதற்குத் திதியினின்றவோர்மகனும்
விழுகொம்பன்னவீழ்ந்திறந்து விம்மியழுந்தாய்நனியுவப்ப
வெழுகொம்பன்னவம்மகனை யெழுப்பித்தந்தமாமுனியே.

உரை.—மீளவுங் கொழுகொம்பிழந்த கொடியைப்போலப் புருடனையிழந்த விளங்கைம்பெண்ணொருத்தி தானூன்றுங்கொம்பாகத் தன்னண்டையினின்ற வொருமகன்றானும் பூங்கொம்பொடிந்து விழுந்தாற்போல விழுந்திறந்தமையால் விம்மியழுதிருந்ததாய் களிகூரும்படி விழுந்தகொம்பெழுந்துதளிர்த்ததுபோலச் செத்தமகனையெழுப்பித் தாய்க்குத் தந்தமாமுனியவனுமென்க. (௩௰)

வலம்புங்கவனிமாமகடன் மருங்குல்மணிநீண்மேகலையோ

இலம்பும்பசியபொற்சிலம்போ சிறந்தசோர்தானதிசேர்ந்து
புலம்புந்திரையைக்கம்பளத்தாற் புடைப்பவரிதிற்பிரித்துந
ளிர்ந்
தலம்புந்திரையிலடிதோயா தப்பாற்கடந்தமாமுனியே.

உரை.— மீளவும் வல்லமையி னுயர்ந்த பூமிமாமக ளிடையிலணிந்த நீண்டமணிமேகலையோ! காலிலணிந்த வொலிப் பொற்சிலம்போவென்றுதோன்றிச் சிறந்த சோர்தானென்னுமாற்றில்வந்து முழங்கிச் சுருண்டோடுந் திரைகளைத்தானேந்திய கம்பளியாலடித்ததன்மையா லொலித்ததிரையிரண்டாய்ப்பிரித் தவற்றுட் கால்தோயாமலப்புறங்கடந்தமாமுனி யவனுமென்றாெனக. (௯௧)

அப்பால்கடந்தபோழ்திருளை யகற்றிவீசுஞ்சுடர்கண்
டால்
வெப்பாலிரவியிரதமென வேய்ந்துகுளிர்ப்பவிடுங்கதிரி
னெப்பால்மதிதன்னிரதமென வுயர்நின்றிழிந்ததேரேறி
யெப்பாலனைத்துமணுகாதோ ரிடத்திற்சேர்ந்தமாமுனியே.

உரை.—அங்ஙன மவ னந்நதியைக்கடந்தபின்ன ரிருளை நீக்கிப்பரப்பின செஞ்சுடர்மிகுதியாற் சூரியன்றேர்போலவுமக்கதிரின்குளிர்ச்சியாற் சந்திரன்றேர்போலவும் வானத்தினின்றிறங்கின பொற்றேரையேறி யெத்திசையோர்க்குமண்டாதவிடத்துச் சேர்ந்திருக்கின்ற மாமுனியவனுமென்றொன்க. (௯௨)

இன்னுமிந்நாணன்னுயிர் நின்றியின்பக்கடனின்றேன்
பின்னுமிறைவன் றனிற்குணித்த பின்றூடனிவ்வுலகெரிந்து
மன்னுமுயிரோடுகமுடிதல்வருங்காலக்கால்மீட்டொளியான்
மின்னுமுருவோடிவ்வுலகில் விளங்கத்தோன்றுமாமுனியே.

உரை.—அங்ஙன மண்டாவிடத்துப்போ யொளித்திருக்கின்றவ னின்னு மிந்நாள்வரைக்குஞ் சாகாமலின்பக்கடலினின்றவனு யினியாண்டவன்குறித்தநாளிலே யுலகெல்லாமெரிந்து மனிதரெல்லாருஞ்செத்துக் கடையுகமுடியுங்காலத்துத்

திரும்பியொளிவடிவா யிவ்வுலகிற்றோன்றவரு மாமுனியவனு மென்றுணர்க. (௩௩)

ஒல்காத்தவத்தின்வரத்தொகையோ ரொருநாள்சுடுமிவ்
வனத்திடையே [தி
செல்காற்றளர்ந்தோர்வானவனுஞ் சென்றுதந்தவடையருந்
யல்காத்திறத்துநாற்பதுநா ளருந்தாப்பசியாநெடுநெறிபோ
ய் [ன்.
நல்காத்திருநல்கியமலைவா னண்ணிமுகிற்றோய்முடிசேர்ந்தா

உரை. — அங்ஙனந்தளராதருந்தவத்தடைந்தவரத்தொகையின்மிக்க விம்முனி யொருநாளிப்பாலைவழிவரும்போது பசியாலும் வெப்பத்தாலுந்தளர்ந்துகிடக்க வொருவானவன்வந்து தந்தவடையையருந்தினான், அருந்தினவுடனே குறையாததிறத்தையடைந்து வேறொன்றுண்ணாமலும் பசியாமலு நாற்பதுநாளோயாமல் நெடும்வழிநடந்து மற்றெங்குமில்லாதசெல்வங்களைவிளைத்துச் சிறந்தவோரேபுமாமலையின்வான்மேல் முகிலிற்றோய்ந்தவுச்சியின்மிசை யேறிச்சேர்ந்தானென்க. (௩௪)

எஞ்சாத்திறத்தையம்முனிக்கன் றீந்தோனிங்கணின்று
மக்கே [யாரோ
துஞ்சாத்தலையின்வான்விரும்புஞ் சுவையிவ்விருந்தீந்தவன்
யஞ்சாத்திறத்தின்மூவுலகு மாண்டும்மிடத்துமகனாகி
விஞ்சாத்துதிமேனின்றதலை விளைக்குமிவன்றானெனத்தொ
ழுதார்.

உரை. — அங்ஙனமன்று குறைபாததிறத்தை யம்மாமுனிக்குத்தந்து மீளவுமிங்கேதானே யின்றுமக் கென்றுந் தூங்காததலையோடு வானுலகத்தோர்விரும்புஞ் சுவையுளவிருந்தினைத்தந்தவனாரென்னில்: எப்பகைக்குமஞ்சா தொருவனாயளவிறந்தவல்லமைகொண்டு மூவுலகங்களனைத்தையு மாண்டவனு யுங்களிடத்தவதரித்து மகனாகி யெத்துதியுமாத்தாலு மிஞ்சாமலும் போதாமலு மதின்மேனின்றதலையை விளைவி

கீகு மித்தேவகுழந்தைதானேயென்று வானவரவன்றிருப்பா தத்தைவணங்காநின்றனரென்க. (௩௫)

வேறு.

தேன்பிறத்தின்னவை செவியிற்கேட்டனர்
வான்பிறத்தின்புறி வையநாதனென்
றூன்பிறத்திளவலை யாகியோதினர்
கான்பிறத்தையெழு காதம்போயினர்.

உரை.—அங்ஙனம்வானவர் தேனின்பத்துரைத்தயாவையுங்கேட்ட மரியுஞ்சூசையும் வானுலகுரியபேரின்பத்தை யடைந்து உலகநாதனு யவதரித்தெடுத்தவுடலின்வகையாற் குழந்தையாய்நின்றதிருக்குமாரனை மிகவும்வாழ்த்தி யெழுந்து போய்ப் பாலைவழியின் முப்பத்தைங்காதநடந்துபோனாரென்க. (௩௬)

ஐயெழுகாவத மேகியப்புறங்
கையெடுசூலத்துக் கவர்க்குமுந்நெறி
பொய்யெழுவழியெனப் போதல்கண்டுளி
மெய்யெழுமிக்கயேல் விளம்பினனரோ.

உரை.—அங்ஙன முப்பத்தைங்காதங்கடந் தப்புறத்துப் போர்முகத்தேந்தியசூலம்போலக் கவராய்ப்பிரியு மூன்று பாதை யொருமுகமாயிராமற் பொய்யானது பலவழிபிரிவதுபோலப் போகிறதைக்கண்டார், அப்பொழு தருவங்காட்டிநின்ற மிக்கயேலென்னும் வானவன் சொல்லத்துடங்கினனென்க. (௩௭)

நீர்விளைமாரமு நிழல்செய்யோமையு
மோர்விளைமுகத்திடங் கிடந்தவிந்நெறி
பார்விளைவாழ்வெனப் பனிமுகத்தழற்
சூர்விளைகொடியதோர் சுரமதாமரோ.

உரை.—மிக்கயேல்சொன்னதேதென்னில்: நீரில்விளையுங் கடம்பும் படர்ந்து நிழல்செயுமாமரமு மழகுபடமுன்முக

த்திற்றேன் றியிங்கேயிடத்திற்கிடக்கு மிவ்வழிபூவுலகுள்ளவா ழ்வுகள்போலக் குளிர்ந்தமுகத்தைக்காட்டித் தீயாற்சுடுந்து ன்பங்களைவிளைவிக்குங்கொடியசுரத்தின்வழி யதாமென்று னென்க. (௩அ)

வலம்படக்கிடந்தவவ் வழியுமுன்னிலை
நலம்படக்காட்டிய சிறியர்நட்பென
வலம்படச்செலச்செல வலிக்கோறுமாத்
திலம்படப்புகுந்துகற் சிலம்பிற்செல்லுமால்.

உரை.— மீளவும் வலத்திற்கிடக்கு மவ்வழிதானுமுன்னி லையி னன்மைகாட்டிய கீழ்மக்கள் நட்புபோல முன்னகன் றமைந்த வவ்வழிபோகப்போக மிகவுங்குறைந்து நெருங்கி யுயிரைக்கொல்லும் பலகொடியமிருகங்களிருக்கும் பெருங் காட்டிடத்திற்புகுந்து கொடுங்கல்மலையிற் செல்லவிடும்வழி யதாமென்றுனென்க. (௩௯)

நிலத்திடத்தரசர்கைக நீதிக்கோலென
வலத்திடத்தெங்கணும் வழுவிலா நடுப்
புலத்திடத்துறைவழி பொருள்பொய்யாமறை
நலத்திடத்தெசித்தினை நல்குமாமென்றான்.

உரை.— மீளவும் பூவுலகிடத்து நீதிமுறைபிழையாவரச ரோச்சுஞ்செங்கோல்போல வலத்திலு மிடத்திலும் வளை யாம லவ்விரண்டிற்குநடுவேகிடந்தவழி பொருள்பொய்யா மற் சொன்னதைத்தப்பாத வேதம்போல வழுவாமலெசித்து நாட்டிற்கொண்டுவிடும்வழி யதாமென்றான்மிக்கயேலென்க. (௪௰)

செவ்வழியுளத்தினோர் சிறந்துசெவ்விய
வவ்வழிநடத்தொளி யரசன்றாழ்ந்துபோய்
மெய்வ்வழியொளிதரச் சூழ்ந்தவிண்ணவர்
மைவ்வழியிராவொரு மரத்தொதுங்கினர்.

உரை.— வளையாதமனத்தையுடைய மரியுஞ்சூசையு மிக்க யேல்சொன்னதைக்கேட்டுச் செம்மையிற்கிடந்த நடுவழியி

டித்துநடந்து சற்றுத்தூரம்போனபின்பு சூரியனத்தமித் திருண்டவிராத்திரியெல்லாஞ் சூழநின்ற பதினாயிரம் வானவரொளிசெய்திருக்கத் தாமொருமரத்தின்கீ ழொடுங்கினாரென்க. (௪௧)

பாலைபுகுபடலமுற்றும்.

ஆகப்படலம்-௰௯-இ-விருத்தம்

௲௭௱௯௰௯.

இருபதாவது.

சித்திரக்கூடப்படலம்.

மாயிருள்விழுங்கவான் வாயங்காந்தெனச்
சேயிருந்தைந்திரி தெளிந்தகாலெழீத்
தாயிருகரத்தெழுந் தனையற்போற்றினர்
போயிருபுடைநிழற் பொலிசெல்வேகினார்.

உரை. — அங்ஙன மரியுஞ்குசையு மங்கேயிராவெலாம் போக்கியிருளைவிழுங்கும்படி வானந் தன்வாய்திறந்தாற்போலக் கீழ்திசைசிவந்துதெளியுங்காலத் தெழுந்து தாய்கையிலேந்தியதிருக்குமாரனைவணங்கி யிருபக்கத்து நிழலைப்பொருந்தியவழியே போனானென்க. (க)

ஊன்வழங்கியபிரா னுறவிற்போற்றல்போல்
வான்வழங்கியதரு வளைத்தநெற்றியிற்
றேன்வழங்கியகனி கலந்ததேமலர்
கான்வழங்கியபொழி லெதிர்கண்டாரரோ.

உரை. — அங்ஙனம்போகையி லுடலெடுத்தவதரித்தநாதன்வருவதைக்கண்டு வணங்கினாற்போல வானிலுயர்ந்தமரங்கள்வளைத்த வுச்சிக்கொம்புகடோறுந் தேனைப்பொழிந்தகனிகளும் வாசம்பொருந்தியமலர்களு நிறையாநிற்ப மணவாய்ப்பெருஞ்சோலையெதிராநிற்பக் கண்டானென்க. (உ)

பொற்கலத்தலர்முகை பொழிந்தவாசனை
தற்கலத்துயிர்த்தன தண்ணங்காலெதிர்
சொற்கலத்திமிழெழுந் தாதுரைத்தென
விற்கலத்தெழினலோர் விளிப்பவீசியே.

உரை.— அங்ஙன மப்பூங்காடவர்கண்டவுடனே யங்கேநின்றுபுறப்பட்டெதிர்வந்த குளுந்தகாற்று வழங்கியவிதழைமல

ந்த வரும்புகள்விட்டவாசனைதான்கொண்டுவிட்டது, அதெ
ங்ஙனமிருந்ததென்னி வினியசொற்கொண்டு தூதுசொல்லவ
ந்து விளங்கியவழகியமுகத் திம்மூவரையழைத்தாற்போலத்
தோன்றிவீசினதென்க. (௩)

தேரொழுமரசெனச் சிலைத்ததெண்டிரை
நீரொழும்பருதிதன் னெடுங்கதிர்க்கணை
யாரொழுமிருட்கெதிர் பரப்பியோட்டவிற்
கர்ஃழுமிருளெலாங் கரந்தகாவதே.

உரை.— அவர்சென் றடைந்தபெருங்கா வெத்தன்மைத்தோவென்னில்: தேரின்மேலெழுந்தவிராசாவைப்போலவொலித்தகடலின்மேலெழுந்தசூரியன் விடியற்காலத்துநெடியதன்கதிராகிய வம்புகளைப் பூமியிற்படர்ந்த விருளின்மேலெய்த்தனையோட்டிவருகையிற் கரியவிருளெலாமஞ்சி யொதுங்கி யொளித்திருக்குங்காவதுவென்க. (௪)

கள்ளுறமலர்ந்தகாக் கலந்தநீழலோ
டள்ளுறமலியிரு ளிருகண்ணட்டதாற்
றெள்ளுறவுளத்தெழீத் திளைத்தஞானக
முள்ளுறத்தவங்கனிந் துறையுங்காவதே.

உரை.— மீளவுந் தேனைப்பொழிந்துமலர்ந்த வப்பூங்காவிலுள்ள நிழலின்மிகுதியா லடர்ந்தவிரு ளிருகண்ணைக்கொல்லு மதனாற் றெளிந்தமனதிலெழுந்தஞானவறிவோடு தவமேயினிதாய்க்குடியிருக்குங்காவதுவென்க. (௫)

சீர்விளைபுவியெழின் முகத்தின்சீர்மையா
லோர்விளையெசித்துநாட் டருகிலேந்திய
தார்விளைகுழலெனக் கமழ்தண்டாதவிழ்
கார்விளைநிழலொடு சரியகாவதே.

உரை.— மீளவுமக்கர வெசித்துநாட்டெல்லையி லுளதாதலின் செல்வப்பூமியி னழகியமுகம்போலத்தோன்றிய வெசித்துநாட்டிற்கருகே யம்முகத்தின்மேற்பூமாலைசூடினகூந்த

லைப்போலத் தோன்றும் குளிர்ந்தமல்லைப்பூத்து நெருங்கிய நிழலைச்செய்யுங் கரியகாவதுவென்க. (௬)

காழகத்தள்ளிருட் கதிர்குளித்தொளி
வாழகத்தெழுந்தமா மதிப்புத்தேளெனச்
சூழகத்திருண்டகாத் தோன்றல்தோன்றியன்
பாழகத்தகவினோர் நுழைந்துள்ளாயினர்.

உரை.— அங்ஙனங் கருமையினெருங்கிய விராவிருளினடுவே தன்கதிர்குளிக்கும்படி யொளிமுகத்தெழுந்தவிளம்பிறை போலச் சூழிருண்டகாவிடத்துத் தேவதிருக்குமாரன்றோன்றியன்பினுழ்ந்த தகைமையுடையமரியுஞ்சூசையு மக்காவினுள்ளே நுழைந்தாரென்க. (௭)

இழையிடைக்குளித்தத மிளவலேந்தினர்
மழையிடைக்குளித்தமின் னென்னவந்துபூந்
தழையிடைக்குளித்தனர் மலர்ந்ததாதுதேன்
கழையிடைக்குளித்திழி கள்ளொத்தோடவே.

உரை.— அங்ஙன மிருவர்சீலைசுருட்டித் திருக்குமாரனை யேந்தி மேகத்துள்ளொளித்தமின்னலைப்போலத்தழைந்துபூத்தகாவிடை நுழைந்தார், நுழைந்தவளவிலே கரும்பினின்றிழிந்தசாறுபோலப் பூந்தாதுகள் தேனைப்பொழிந்தனவென்க. (௮)

கண்சிறைபடுத்திய நிழல்செய்காவிடை
மண்சிறையொழித்தற வந்தமூவரைப்
பண்சிறைபடுத்திசை பாடிவாழ்த்தின
வொண்சிறையுடைத்தபுள் ளுவந்தவீட்டமே.

உரை.— நிழலின்மிகுதியாற் கண்களைச்சிறைபடுத்து மக்காவிடத்துப் பாவத்தாற் பூவுலகங்கொண்ட சிறையைத்தீர்க்கவந்த விம்மூவர் நுழைந்தவளவிலே யழகியசிறைகளையுடைத்தபறவையெல்லா மகிழ்வெய்தி வீணையைச்சிறைபடுத்தினாற்போல வீணையினுமினியகுரலோ டவரைவாழ்த்தினவென்க. (௯)

பனிவளர்பூந்துறை பருகுந்தேனுகத்
தொனிவளர்யாழெனப் பாடத்தும்பிகள்
கனிவளர்சினைதொறுங் கரியயூகங்கள்
நனிவளராரிய நடஞ்செய்தேகினார்.

உரை.—அங்கவர் நுழைந்தவளவிற் குளுமைபொருந்திய
பூந்துறையிலிருந் துண்டதேனைவிடும்படி வீணையோசையோ
டினிதாய் வண்டுகள்பாடாநிற்கக் கனிகள்பழுத்த கொம்புக
டோறுங் கரியகுரங்குகள் களிமிகுந் தொருகொம்பிலிருந்
தொன்றிலேபாய்ந் தாரியக்கூத்தாடிவருகையி லிவர் நடந்து
போனாரென்க. (௰)

வேறு.

பரவக்கதிர்வீசுமுகத்திம்மூவர் படர்பூங்காக்
கரவக்கடிதேகக்கனிகள்கொய்தங் கண்டிரிந்த
குரவத்துகிற்குளித்தகுரம்பைமுனிவ ரெதிர்கொண்டு
விரவக்கனிவோங்கவிருந்தோம்பினர்போல் விளம்புகின்றார்.

உரை.—அங்ஙனம் பரந்தகதிரைவீசி விளங்குமுகத்திவர்
மூவரு மகன்றவப்பூங்காவிடத்துமறைந்து விரைந்துபோ
கையி லங்கே கனிகளைப்பறித்துத்திரிந்த பேரீந்தினாற்பின்னி
ன சீலையுள்ளொளித்த மேனியையுடைய விருமுனிகளெதிர்
பட்டு விருந்தோம்பினாரைப்போல மிகவுமினியவன்பினைக்
காட்டிச்சொன்னாரென்க. (௰௧)

மண்சேரினஞ்சேராவனத்திற்சேர்ந்த வான்வடிவீர்
விண்சேரினந்தானோமாக்கட்குலமோ விழைவோங்கிப்
பண்சேரிசைப்பறவைபாடித்தவஞ்சேர் பதிசேர்ந்து
கண்சேரணிகடந்தகவினீர்சொன்மின் வந்ததென்றார்.

உரை.— அவ்விருமுனிகள்கேட்டதேதென்னில்: பூவுலகு
ள்ளோர் சேராதவனத்திற்சேர்ந்துவந்த வானுலகுரிய வடி
வினையுடையோரே! நீர்வானுலகத்தாரோ? மக்கட்கூட்டமோ?
மீளவுமகிழ்வெய்தி வீணையினிசையோடு பறவைகள்பாடாநி

ற்கத் தவமேகுடியாய்நிற்கும்பதியாகிய விப்பூங்காவிடத்துக் கண்ணுற்காணப்பட்ட வழகெலாங்கடந்த வடிவத்தையுடையநீர் வந்ததேதென்றுசொல்வீராகவென்று கேட்டானென்க. (௰௨)

நசைசேர்வான்பதியோர்நாமேயுடல்சேர் நடலையரு
வசைசேர்மண்பதியோர்நாமேயூதர் மண்டிலத்தின்
மிசைசேர்பிரான்பணியாலெசித்துநேடி விரும்பியபுள்
ளிசைசேர்வனஞ்சேர்ந்தோமென்றான் பூந்தா தெழிற்கொடி
யான்.

உரை.— முனிவர்கேட்டதற்குச் சூசையெங்ஙனமறுமொழிசொன்னானென்னில்: எங்களாசையைப்பார்க்கில் வானுலகத்தோர்நாங்களே, இவ்வுடற்குரிய துன்பங்களை விடாதுநுகர்தலைப்பார்க்கில் வசையுளபூவுலகத்தோர்நாங்களே, மீளவும் யூதர்தேசத்தினின்று வானுலகநாதனேவலினா லெசித்துநாட்டைநோக்கிவருகையிற் களிகூர்ந்தபறவைபாடு மிவ்வனத்திடத்துச்சேர்ந்தோமென்று பூமலர்ந்தழகுபெற்ற கொடியையேந்தியசூசை சொன்னானென்க. (௰௩)

ஐவத்ததிருவீங்குமெசித்துநாட்டின் வாயிலிதே [ன்
பொய்த்தவழிகாட்டிப்பொழிற்கண்மயங்காப் புடைவம்மி
றுய்த்தவருளுமிழ்முகநல்லீரென்று சொற்றிமலர்
மொய்த்ததேன்றுளிக்கும்வழியம்மோனர் முன்னடந்தார்.

உரை.— அவற்றைக்கேட்டவவ்விருமுனிவர்மீளவுஞ்சொன்னார்: செல்வச்சிறப்பிற்பொலிந்தவெசித்துநாட்டிற்குவாசலிதுதான், ஆயினும் பொய்யானபலவழிகளைக்காட்டு மிக்காவிடத்து மயங்கிப்போகாதபடியுள்ள நுகர்ந்தவருளை முகத்திற்கொப்பளித்துவீசு நல்லோரே! எங்களைச்சேர்ந்து வாருங்களென்றுசொல்லிப் பூத்தமலர்வாய் துளித்ததேனாற் குளிர்ந்தவழியே யவ்விருமுனிவர் முன்னே நடந்தாரென்க. (௰௪)

கானார்மலர்முகைக்கண்விழித்துநோக்கிக் கனிநகைத்த
தேனார்காவினெடுநெறிபோய்த்தீஞ்சொல் செல்துறைய

மாணார்மனமெனமுள் மலிந்தவேயார் வனங்கடந்து
பாணார்கதிர்கண்டவெளியேகண்டு பரிவற்றார்.

உரை.—அங்ஙனம்போகையில் வாசவரும்புகளாகியகண்களைவிழித் திவரைநோக்கிச் சிரித்தாற்போல மலர்ந்து மதுப்பொழிபூங்காவிடத்து நெடும்வழிநடந்து தம்முட்சொல் லினியமொழிகளால் வழிதுலைந்து பகைவர்மனத்தைப் போல முள்ளுநிறைந்தமூங்கிற்காடுங்கடந்துசூரியன்கதிரைக்கண்ட வெளியைக்கண்டு வழியின்றுன்பத்தைத் தீர்த்தாரென்க. (௰௫)

கழுகும்படர்கதலிக்கனிகணக்குங் கரும்பொருபால்
கமுகும்பூகமுமார்கனிமுத்தணிந்த காவொருபா
லமுதுஞ்செங்கமலவாவியொருபா லணிசெய்க
வழகுஞ்சித்திரநற்கூடஞ்சென்றா ரத்தகவார்.

உரை. — அவ்வெளிகண்டபின்பு உச்சியிற்பழுத்தவாழைப்பழங்களை நக்காநிற்குங் கரும்பின்றோட்ட மொருபாலுங் கமுகுகளுங் கூந்தற்பனைகளுங் காய்த்தபழங்களை முத்தணியாகவணிந்ததோட்டமொருபாலு நீரில்விளைசெந்தாமரைக் குளமொருபாலு மழகாகநிற்ப நடுவேநின்றவழகியசித்திரக் கூடத்தை யப்பெருமையுடையோர் சென்றாரென்க. (௰௬)

வினைகள்மாறியவண்டவஞ்செய்மோனர் விழைந்திருப்
பச்
சுனைகள்கண்குவளையிமையாநோக்கச் சுனைக்கரைமேற்
சினைகளாகியவாயிர தூணாட்டிச் சித்திரங்கள்
நனைகள்தெளித்தெழுதிவனைந்தகூட நடுவிருந்தார்.

உரை. — அக்கூடமெத்தன்மைத்தோவென்னில்: வினைகளைத்தீர்க்கு நற்றவத்தைச்செய்யுமுனிவர் விரும்பிவந்திருக்கும்படி மலர்ந்தகருங்குவளைகள் பூந்தடாகத்துக் கண்களாகிமையாமனோக்காநிற்ப வத்தடாகத்தின்கரைமே லிறப்பாகவாயிரந் தூண்களைநாட்டி யெடுத்தசுவரிடத்துப் பூவரும்புகளைத்தெளித் தவற்றைக்கொண்டழகுபெறச்சித்திரங்களையெழுதியலங்கரித்த வக்கூடத்துநடுவே யிருந்தாரென்க. (௰௭)

வேறு.

குடம்புரையிற்றேன் றமதி கொழித்தகற்றைதெளித்து மணி
வடம்புரையிற்சித்திரங்கள் வரைந்துதோன் றும்வடிவமதோ
படம்புரையிற்றீட்டியபொற் பாங்கார்தோற்றபான்மைய தோ
சடம்புரையிற்றேன்றியவான் றளமோதேறல்சால்பரிதே.

உரை. — அச்சித்திரங்களையெழுதின வடிவேதென்னில்: பாற்குடமொப்பத் தோன்றியசந்திரன் விரித்தகதிர்களைத் தெளித்துக் கோர்த்தமணிவடமொப்பச் சித்திரங்களையெழுதியகோலந்தானோ சித்திரப்படத்தின்றன்மையா லெழுதிய வழகுளமேனிய ரசையாமற் றவஞ்செய்யும் பாவனைதானோ வரூபியாய்நின்ற வான்றளங்களுருவத்தையெடுத் தங்கேவந்திருக்குந்தன்மைதானோவொன்றிலேதேறிச் சொல்லுவதரிதென்க. (௰௮)

காவியங்கண்கிளர்வியப்பா னிமையாநோக்கிக்கனி வோங்கி
யாவியங்கண் ணுண்டெனினு நெடுநாள்மோனாண்டியதா
லோவியங்கண்மோனமுறி யவைகண்டாருமோவியமாய்
மேவியங்கண்பிறழாது விளைத்தவின்பால்வியப்பவரே.

உரை.—மீளவு மச்சித்திரங்களையெழுதிய நுண்மையா லவைநிமையாமலும் பேசாமலு மிருந்தாலுமுயிரில்லையென்று சொல்லக்கூடாமற் றோன்றினதன்மையேதென்னில்: அச்சித்திரங்கள் தம்முளொன்றொன்றினைப்பார்த்துப் பட்டவிசயத்தாற் கருங்குவளையொத்தகண் ணிமையாதென்றும் நெடுநாட்பேசாதமுனிவரோடுபழகி நல்லுயிரங்கேயிருந்தாலு மச்சித்திரங்களு மவுனமாய்ப்பேசாதென்றுந் தோன்றியவற்றைக்கண்டவருஞ் சித்திரங்களைப்போலத் தோன்றும்படி யாசையோடங்கேயசையாமலு மதிசயித்துநிமையாமலு நிற்பாரென்க. (௰௯)

அணிச்சாயலீரறஞ்சேர்த் தணிந்தமார்பேந்தருந்தவ
த்தோன்
பணிச்சாயல்வரைந்தவுருப் பலவுஞ்சூழப்பார்த்தனகாற் [ள்
பிணிச்சாயல்வாட்டியமெய்ப் பிணைவின்மாண்பார் நூறடிக
துணிச்சாயல்மலர்முகத்துத் துன்னியாசிசொற்றினரால்.

உரை.— அங்ஙன மாபரணவடிவினெழுதப்பட்ட வப்பலவுருவுகளை மணிமாலையாக வில்லறமுந் துறவறமுமென்றீரறங்களைச்சேர்த்தி மார்பிலணிந்த வருந்தவத்தோனாகியசூசை பார்த்துக்கொண்டுவருகையிற் பிணியால் வாடினாற்போலத் தவத்தான்மெலிந்தவுடலோடு பெருமாட்சிமையுடைய நூறு முனிக ளொளியோடுமலர்ந்தமுகத்தோடண்டி யாசியைச் சொன்னாரென்க. (௨௰)

துன்புமிகவைம்பொறியைத் துமித்ததன்மைசுடர்ஞா
தன்புமிகப்புடைசூழ்ந்த வரியமோனரருந்துதிசொன் [னத்
இன்புமிகக்கனிந்தகனி யிளந்தீங்கந்தத்தோடளித்த
பின்புமிவ்வருள்மூத்தோன்பெயர்ந்தநாடெந்நாடென்றான்.

உரை.—அங்ஙனம்வந்தமுனிவர் மிகவும்வருந்திப்பஞ்சேந்திரியங்களைத் தவத்தாற்கொன்றதன்மைத் தெழுந்த தெளிந்தஞானத்தளவி லன்புமுள்ளேமிகுந்து சூழநின்று வினியகனிகளையு மிளங்கிழங்குகளையுந்தந்து பசியாற்றுங்களென்று பின்பவருள்ளருளினோங்கிய மூத்தோனொருவன் அதிட்டனென்பா னீர்வந்தநாடெந்நாடென்று கேட்டானென்க. (௨௧)

திருப்புகழேபுகழ்மறையே திருவேநூலேகுடிவைகும்
மருப்பொழிலேவிரைப்பணையே வளர்யூதேயநாட்டிவிருந்
திருப்புகைவெம்வனச்சுரம்வந் துவப்பவிங்கண்சென்றன
மென்
இருப்பெனவேமறையுந்துமிரதமார்பன்வளன்சொன்னான்.

உரை.—அதிட்டன்கேட்டதற்குச் சூசைமறுமொழிசொல்வான்: நற்புகழும் புகழப்பட்டவேதமுஞ் செல்வமு மற்ற

றூல்களுங் குடியாய்நின்று வாசபூஞ்சோலைகளும் வ்ரசமல ர்வயல்களும்வளர்ந்து சிறப்புசெய்யும் பூதேயநாட்டிவிரு ந்து புகைத்துவேகும்வனத்துவழிவந் துளங்குளிர்ந்துவக்கு ம்படி யிக்கேசென்றேமென்று தனக்குரியிடமென்று வே தமெழுந்திருக்கு மிரதமொத்தமாரபிளையுடையகுகை சொ ன்னனென்க. (உஉ)

நாகத்தாலுண்டமதி நாளுக்குன்று நவையெய்ப்ப
மோகத்தாலுண்டமனம் முதிர்பற்செல்வமுரிந்துகெடும்
போகத்தால்விளை நசைத்தீப்பொறுதுதண்காப்புக்கணமென்
றுகத்தாரருள்மிக்க வதிட்டனென்பானறைகின்றன்.

உரை.—அப்பொழுது மூத்தோனகியவதிட்டன் றுமு ம்க்காவிடத்துவந்திருந்தகாரணஞ்சொல்வான்: கரும்பாம்புண் டுமிழுங்கியசந்திர ஞெளியைவிடாதுகெடு மதுபோல மோ கத்தால்மிழுங்கியமனமு மூற்கொண்டவருட்செல்வம் பொ ருட்செல்வங் கல்விச்செல்வ மிவையெலாங் கெடுமென்று போகநுசர்ச்சியால்விளையு மாசையின்வெப்பம் பொறுக்க மாட்டாமல் நாங்களு மிக்குளும்பூங்காவிடத்து நுழைந்து வந்தோமென்று மனநிறைந்தவருளின்மிக்க அதிட்டன்சொ ன்னனென்க. (உ௩)

சிக்குருவைவித்தியபின் திண்காழாச்சாவிளைவாமோ
சொக்குருவையுண்டுண்டு துகளோடாசைவளர்ந்தனபின்
னிக்குருவைக்காட்டியபூ வெழுதுங்காவுஞ்சுடுமன்றே
வொக்குருவையொழித்துநசை யொழியுமென்றுன்மலர்க்
கொடியாள்.

உரை. — மோகநுகர்ச்சியால்வந்த வாசைவெப்பத்தை யாற்றக் குளுங்காவிடத்துவந்தோமென் றதிட்டன்சொன் னதற்குச் சூகைசொல்வான்: முருங்கைவிளையைவிைத்து-ஆ ச்சாவயிரம்விளையுமோ? அழகியவுருமேனிகளைக் கண்ணுவ ண்டுண்டு பாவமுமாசையும்வளர்த்தபின்பு தேனைப்பொழித் த பூங்காவிடத்துவந்தாலு மதுவுமுட்சுடுமே, தன்னுடலை மொக்கவிட்டகாலத்தாக்கு முட்கொண்டதீயவாசையு மொ

ழித்துவிடுமென்றான் பூங்கொடியோன் ருசையென்க. (ஆ
சையாற் பாவத்திற்பழகாமலுந் தீயவாசையிற்பழகாமலுந்
தவஞ்செய்யல்வேண்டுமென்பதுகருத்து.) (௨௪)

பிறந்தநாள் துயரொக்கப் பிறந்துபேராத்துணைவகிச்
சிறந்தநாட்கலாநூற் றிறங்கொண்டாசையகன்றனரோ
விறந்தநாளுய்வரலா விருந்தநாட்டிற்றுயராற்றார் [ன்பான்.
பறந்தநாள்கூண்டொழியும் பறவையென்றான்றிட்டனெ

உரை. — மனிதர்பிறந்தபோது துன்பமுங்கூடப்பிறந்து பெயராததுணையாகநின்று நாட்டிலிருந்தநாள்மட்டுமாசையுட்கொள்ளாதிருப்பாரில்லை, இருந்தாலுமவர்செத்தபோது துன்பமொழிந்துவாழ்வரொழிய நாட்டிலிருந்தநாள் மட்டுந் துயராற்றமாட்டார், பறவைகள் முதலாய்ப் பறக்கும்பருவம்வந்தவுடனே தங்கூட்டைவிட்டுப் போவனவென்றானதிட்டனென்க. (ஆசையான் மனிதராசைப்படாதிருப்பதுமரிது, கொண்டவாசையாறக் காட்டில்வருவதும் நல்லதென்பதுகருத்து.) (௨௫)

நிசைபட்டுநசைகடந்த நயஞ்செய்வான்றாளணுகின்
மெய்ப்
பசைபட்டுவாழ்வரலாற் பசைத்தபாரில்வதிந்தனநாள்
வசைபட்டுவாழ்பவரோ மழுநீர்சூழ்ந்தமலைநண்ணி
யசைவட்டுநிலைபெறுதலன்னவென்றான்மறைவடிவான்.

உரை. — நாட்டிலாசையின்றியிருப்பது துன்பமிகுமென்றதற்குச் ருசைசொல்வான்: ஆசையைக்கொன்றநீக்கியாசையைக்கடந்த பேரின்பத்தைத்தரு நாதன்றிருப்பாதத்தையணுகினுலவருடலைவிட்டுச்செத்தபின்பு பெரும்வீட்டில்வாழ்வாரொழியப் பசைத்தபூவுலகிடத் தவிருந்தநாளும் வசையொன்றின்றிவாழ்வார். அஃதங்ஙனமென்னில் நீர்க்கடல்சூழ்ந்த வுயர்மலையையண்டினவ ரலையின்றி நிலைபெற்றிருப்பதுபோலவென்றான் வேதவடிவாகநின்ற ருசையென்க. (௨௬)

பேரேத்திப்பகைத்தனபோற் புணரிபன்றாட்புடை
புடைப்ப

வாரோந்திமுகிற்புதைத்த வயிரக்குன்றங்குன்றுமன்றோ
தாரேந்திவசையேந்துஞ் சடத்தமண்ணோர்தளிர்த்தபகைச்
சூரேந்திநிற்பரோவர் சொன்மினென்றான்றேல்லுணர்வான்.

உரை.— நாட்டிவிருந் தாசையில்வார் கடலாற்சூழ்ந்த மலையை யண்டினூர்போல நிற்பரொன்றாயே, ஆயினும் போர் பொருதாற்போலப் பலநாளுங் கடலலைபுடையின் மோத மோத மேகத்தோடுகலந்த வுயர்ந்த வயிரமலையுங்கரைந்து கெடுமே, அத்தன்மையான் மாலையோடு வசையணிந்த வஞ்சகமார்புடையபாவிக ளறத்தோரைப்பகைத்துத் தளிர்த்ததுன்பத்துநிற்பவருண்டோவென்று னல்லுணர்வுடைய மூத்தோ னிட்டனென்க. (உஎ)

நீரோந்திமலர்மிதக்கு நிகராவல்லோன்கையருளின்
சீரேந்தியெவர்நில்லார் தெறுநர்தெவ்வுந்திருப்பயத்த
லேரோந்திவரைந்திட்ட வின்னகாதைகாட்டுமென்றான்
பாரேந்தியணிதிலத மெனநற்சீலப்படலையினான்.

உரை. — நீர்மலரொல்லா நீர்மேன்மிதக்கும்போல நிகரா வல்லமையுடையநாதன் றன்றயைக்கையா னம்மையேந்திய காலத் தெவர்நில்லார், சத்துருக்களொருவற்குச் செய்யும்பகைமுதலாயாண்டவனுதவியா லவற்குச்செல்வங்களைப்பயக்குமென்று - இங்கேயழகுபெறவெழுதப்பட்ட கதைதானே காட்டுமென்றான் பூவுலகணிந்ததிலதம்போலநின்று சகல நற்சீலங்களைக்கோர்வையாகவணிந்த சூசையென்க. (உஅ)

பொற்சாயலரிதங்கண் பொறித்தகாதையென்றனகா
விற்சாயல்கண்கனிய விரும்பிநோக்கிமதிப்புத்தே [ல்
டற்சாயல்மதிவல்லோய் தளிர்த்தவையத்தீர்சிறிது
புற்சாயல்சொல்வலெனப் புகல்மீண்டுற்றான்றவமூத்தோன்.

உரை.—அங்ஙனம் பொற்சாயலாகவரிதி லங்கேயெழுதப்பட்ட சித்திரக்கதையென்று சூசைசொன்னவளவிலே யதிட்ட னின்பத்தாற் றன்கண்விளங்க விருப்பத்தோடு சூசையைப்பார்த்துப் புதுவாய்முளைத்த திருச்சந்திரனைப்போல

ழுதிவல்லோனே! என்மனதிற்றோன்றிய சந்தேகந்தீரும்படி நான்புற்சொல்லாற் சிறிதுசெய்தியைச்சொல்வேனென்று மீளவுஞ்சொல்லத்தொடங்கினான் றவத்தின்மூத்தோனதிட்டனென்க. (௨௯)

வேறு.

புதிவளர்திங்கட்கோட்டுப் புனைவளரசனிவில்லான்
க்திவளர்வளிமுன்பாய்மா கடந்தபோர்முகத்தேறன்னா
னிதிவளர்மகுடம்பூண்ட நீபகனென்னுங்கோமான்
றுதிவளர்துறவுவெஃகித் துணர்வளர்காவில்வந்தான்.

உரை.— அதிட்டன் சொல்லத்தொடங்கின கதையேதென்னில்: வளரிளம்பிறைக்கொம்பொப்ப வளைவாகவளர்ந்து வானிடியொப்பக்கொடியவம்புகளையெய்யும் வில்லையுடையனாய்ப் பலவகைநடைகொண்டு காற்றுமுன்னேபாயுங் குதிரைவிட்டுக் கடந்தபோர்முகத்தரியசிங்கத்தொத்தவனாய்ப் பொன்முடிசூழ்ந்தவரசனாய நீபகனென்பான் புகழப்பட்டதுறவினாசையான் மலர்ந்தவிக்காவிடத்துவந்தானென்க. (௩௰)

நீளரிமதர்க்கண்ணார்தம் நெடும்பகைதுறத்தலுள்ளி
வேளரிதமர்ந்தபோரில் வெற்றிகொண்டுவந்துமீண்ட
கோளரிநடப்பதேபோற் கோன்மையுநகருநீக்கி
வாளரிதிடையிற்பூட்டி வந்திவண்டனித்துச்சேர்ந்தான்.

உரை.—சிவந்தவரியிற்பொறித்த நீண்டகளிக்கண்மாதரிவற்காசைவிளைவித்து நெடுநாள்செய்தபகையைத் துறக்கும்படி மன்மத னரிதாய்த்தனக்குச்செய்தபோரில் வெற்றியைக்கொண்டு மகிழ்வோடுதிரும்பினாற்போலச் சிங்கநடையாற் செங்கோலரசுந் தன்னகருநீக்கி யிடையில்வாளைக்கட்டித் தனியே யிவ்விடத்து வந்துசேர்ந்தானென்க. (௩௧)

தெள்ளுறமின்னியார்த்த செல்லுறும்படர்ந்தநெற்றி
கள்ளுறமலர்ந்தகானங் கண்டருகுறுங்கால்வேட்கை
யுள்ளுறப்புதியதென்ற லுந்துவேளெதிர்கொண்டன்ன
வள்ளுறவாசங்கான்ற வனிலமாங்கெதிர்கொண்டானே.

உரை.— அங்ஙனம்வருகையிற் றெளியமின்னிமுழங்குமே கங்களுட்கலந்த வுச்சிக்கொம்புகளின் மதுப்பொழியமலர்ந்த விப்பூங்காவை யவன்கண் டருகணுகிவருகையில் வேட்கையைமனதினுள் விளைவிக்கப் புதியதென்றலாகிய தேரேறி வந்தமன்மத னெதிர்பட்டாற்போலப் பூமலர்வாசனை மிகவுமூமிழ்ந்துவருங் குளிர்காற்றெதிர்கொண்டானென்க. (௯௨)

புலம்புரைகேட்டுநண்ணிப் பூம்பொழிலொருங்குஞ்சு
ரலம்புரைமுகைத்ததேன்பூ வலரிருகரையில்விம்மிச் [ழ்ந்தீ
சிலம்புரைசிலம்பியோடத் தீந்திரைசுருட்டுங்கங்கை
கலம்புரைமணிப்பொன்மார்பன் கண்டதைக்கடக்கலாற்றான்

உரை.— அங்ஙன நீபகன்கிட்டவருகையிற் காவினுட்புலம்பினோசையைக்கேட்டுவந்து நுழையும்வழிவிடாமலிக்காவெல்லாம்வளைத்துச் சுற்றியணிந்த விருபூமாலைபோலப் பூத்தவிரண்டுகரையினுட் சிலம்பினோசையின்முழங்கித் தீந்திரைசுருட்டியோடிவருமோராற்றைக்கண்டு கலவிமார்த்தன்ற மணிமார்புடையநீபக னதைக்கடக்கமாட்டாதேநின்றானென்க. (௯௩)

அவாவறிநொந்துநிற்ப வம்புலிக்குழவிவெண்கோட்
டுவாவுறியமைவநோக்கி யுரங்கொடுவுந்தியப்பா
விவாவுறியிழிந்தபின்ன ரியைந்ததன்மதத்தமாவைச் [ன்.
சுவாவுறிவிழுங்கல்கண்டான் றுளங்குபொற்குன்றத்தோளா

உரை.—இக்காவினுள்வர வாசைப்பட்டவனாற்றைக்கடக்கமாட்டாம ஞெந்துநின்றவளவிற் பிறைபோலவளைத்த வெண்கொம்புள்ளவொருயானைவந்து தானேறும்படியமையக் கண்டுவீரமோங்கியதின்பிடரிமேலேறி யாற்றைக்கடந்தப்பாற்சென் றிறங்கினபின்பு தானேறிவந்தமதயானையை யோரெறும்பு விழுங்கினதுகண்டான் விளங்கியபொன்மலையொத்ததோளா னீபகனென்க. (௯௪)

மலைபுறங்கண்டமார்பன் மனம்வியந்தயிர்ப்பினோக்க
வலைபுறங்கண்டகங்கை யரவெழவளவில்விம்மிச்

சிலைப்புறங்கண்டகூலஞ் சிவணிமேற்பிரளக்கண்டே
யிலைப்புறங்கண்டகாவுள் ளியைந்தவாளேந்திப்புக்கான்.

உரை. — அங்ஙன மலையினுந் திண்ணியமார்பனீபக ன திசையித் தயிர்ப்பேரடிபோராநிற்பத் தான்முன்கடந்ததிரைகளைச்சுருட்டிவரும்புனலொலிமிக வளவின்றிப்பொங்கிக் கற்களைகிடி மேற்பிரண்டோடக்கண்டு துணிவோடு தழைத்தபூங்காவினுள் வாளையேந்தி நுழைந்தானென்க. (௫௫)

பொற்கலத்தரிட்டமேந்திப் பூத்தகா நுழையும்போ
ழ்திற்
சொற்கலத்தினியபாடல் துடர்ந்தகின்னரம்பண்மற்றப்
பற்கலத்தெழுந்தவோதை பரிவுறவிழிற்கேட்டு
விற்கலத்தலர்ந்தவிக்கா விரும்பிவந்தனராஒன்றான்.

உரை. — அங்ஙன மவன் பொற்பாத்திரத்து மதுவையேந்திருற்போல மதுபொழிந்து மலர்ந்தவிக்கா நுழையும்போது டனிதர்குரலா லினியபாடலு மப்பாடற்கிசைபடக் கின்னரமும் பண்ணு மற்றப் பலவகைவீணைவாயெழுந்தவோசையு மகிழ்வெய்திக்கேட்டு வொளிமுகத் தினிதுன்மலர்ந்த விக்காவிடத்துவந்தவராஒன்று னீபகனென்க. (௫௬)

காவெலாமுகைத்துப்பூப்பக் காலெலாஞ்சவரம்வீசப்
பூவெலா நறுந்தேன்றாவப் புள்ளெலாம்விளித்துப்பாடக்
கூவெலா நிசராவண்ணக் கோலநீணெறிபோயப்பால் [ன்.
மேவெல்லாவனப்புவாட்டும் வியன்றவோர்வெளியுட்சென்று

உரை. — அங்ஙன நீபகன் றுணிவோ டிக்காவினுள்வருகையிற் காவெல்லா மரும்பின்வாய்மலர்ந்துபூக்கவுஞ் சூழவீசினகாற்றெல்லாம் வெண்சாமரையிரட்டவு மலர்ந்த பூவெல்லா மதுவைப்பொழியவும் பறவையெல்லாம்வரச்சொல்லியழைத்தாற்போலப்பாடவும் பூவுலகினிகராத வண்ணக்கோலத் தழகுபெற்ற நெடியதோர்வழிகடந்தபின்பு விரும்பின வலங்காரமெல்லாம் வென்றவழகினோ டகன்றவோர்வெளியையடைந்தானென்க. (௫௭)

மோட்டிளந்தேறல் தூவி முகைத்தருவொழுங்கிற்சூழ
நாட்டிளம்பிடியார்சாயல் நகைமயிலகவியாடச்
சேட்டிளஞ்சினைகடோறுந் திருமணிச்சாயற்பைம்பூ
வேட்டிளம்விழிகள்விண்ட விளந்தருநடுவிற்கண்டான்.

உரை.— நடுக்காவிடத்து நீபகன்கண்ட வெளியெங்ஙன மிருந்ததென்னில்: உச்சிக்கொம்புகளிடத்தி விளமதுப்பொழியு மலரைப்பூத்த பலமரங்களொழுங்குபடச் சூழநிற்பவு நாட்டிளம்பெண்களின்சாயலாக வழகியமயில்கள் கூப்பிட்டாடவு நடுவேயழகியவிளங்கொம்புகடோறு மணியின்சாயலாய்ப்பூத்த வாசமலர்கள் தம்மிதழாகியகண்ணை விழித்து நோக்கினாற்போல மலர்ந்தவோரிளமரமேநிற்பக் கண்டானென்க. (௫௮)

மீனிறத்தலர்ந்தபைம்பூ விரைநிறத்தொழுகத்தீந்தேன்
கோனிறத்திடையில்வாய்ந்த கொழுந்தருவணுகிநோக்கிக்
கானிறத்தலர்ந்தசாந்தக் கடிமரமென்றுநிற்பப்
பானிறத்தினியபண்சேர் பாடல்கேட்டொல்கிப்பார்த்தான்.

உரை.— அப்பொழுதவன்போய் வான்மீனொப்பமலர்ந்த பூவெலாம் வாசத்தீந்தேனைப்பொழியாநிற்ப மரங்களுள் ளிராசாபோல நடுவேசிறப்பிற்பொலிந்துநின்றமர மெம்மரமென்றறியக் கிட்டப்போய்ப்பார்த்தவளவிலே மணவாய்மலர்ந்த சந்தனமரமதுவென்றுகண்டு நிற்கும்போது சூழப்பாவின்பத்தினியவீணையோ டிசைபடப் பாடலைக் கேட்டுச் சீக்கிரமாய்த் திரும்பிப்பார்த்தானென்க. (௫௯)

சூழகமரங்கடோறுஞ் சூலுளைந்தீன்றதேபோற்
காழகம்பிளந்துசாய்ந்த காழகமுகிவிற்கூந்தல்
கேழகவுடுக்கண்மின்னிற் கெழுநுசுப்பணித்தூசேந்தி
வாழகமலர்ந்தநாலு மாதரோவருவகண்டான்.

உரை.— திரும்பிப்பார்த்த நீபகன்கண்டவதிசயமேதெனில்: அவ்வெளிசூழ வொழுங்குபடநின்றமரங்களெல்லாஞ் சூலுளைந்துபிள்ளையைப்பெற்றாற்போல வயிரமுள்ளவடிமரம்

பிளந்து பிளந்தவழியால் நூறுபெரியபெண்மாத ரிருண்ட
மேகத்தொத்தகூந்தலையு நிறவான் மீனோடொத்தகண்களையுமி
ன்னலேரொத்த நுண்ணிடையையு மழகியபொன்னுடை
யையுமிவையெல்லாவற்றையு மணிந்தேத்தி மகிழ்வோடு மன
மலர்ந்துகிட்டிவரக்கண்டானென்க. (௬௰)

நீழலெடுத்துலவுவிண்மீ னிறைமதிசூழ்ந்ததேபோ
லழலெடுத்தெரிக்குங்கண்ணா ரரசனைவளைத்துவீணை
குழலெடுத்தினியவோதை குயிலெனக்குயிலநூறுங்
கழலெடுத்தாடிப்பாடிக் கனிவெடுத்தினையசொன்னார்.

உரை. — ஒளியைவிட்டு வானிலுலாவியமீன்கள் முழுமதி
யைச்சூழ்ந்தாற்போல நெருப்பினைவீசி யுயிரையாசையாலெ
ரிக்குங்கண்ணையுடையம்மாத ரங்ஙனங்கிட்டவந்து நீபகனை
ச்சூழவளைத்து வீணையுங்குழலுமற்றனவுங் கிளைத்தவேழி
சையோசையோடிசைபடக்கடைபிடித்தேற்றிய பலகுரலோ
சை குயிற்குரலாகவினிதாய்க்கிளம்ப நூறுபேரும் காலெடுத்
தாடிப்பாடி யின்பமா யிவற்றைச்சொன்னாரென்க. (௬௧)

தூசனைமரங்கள்சூழ்ந்த துணர்ப்பொழின்முன்னில்
காசனைவிருப்பம்பூண்ட கருத்தனைமறவாவெஃகுஞ் [செய்
சாசனையுவப்பவந்தாய் சாசனையுவப்பிற்காவு
மீசனைக்கண்டதேபோ வின்பெழக்காணாயென்றார்.

உரை.— அவர்சொன்னதேதென்னில்: மன்னனே! நீமுன்
னேயன்புவைத்திருந்த சாசனையென்பவள் பொன்மணியா
டையுடுத்தாற்போல மலர்ந்தமரங்களாற்சூழ்ந்த விப்பூங்கா
விடத்துனக்குமுந்திவந்து விளங்கியமணியாக வுன்மேல்வை
த்தவிருப்பத்தைவிடா தணிந்தகருத்தோ டவளுன்னைமறவா
மல் விரும்பினவளாகையி லவள்மனமகிழும்படி நீயிங்கே
வந்தாய், அவள்மகிழ்ந்தவின்பத்தல்லோ விக்காவுஞ் சுவாமி
யைக்கண்டாற்போல வுன்னைக்கண்டவளவிலே மலர்ந்துகளி
கூரவும் பாரென்றாரென்க. (௬௨)

பாரெனறியிவற்றைப்பாடப் படர்ந்தசந்தனமும்வீதி
வாரெனறிப்பழித்தநீண்கண் மடந்தையேபுறப்பட்டெய்த

வேணெறியொழுகித்தான்முன் விழைந்தசாசனையின்சாயற்
கோணெறிமுகத்திற்கண்டு குலைந்தயிர்ப்புற்றுநின்றான்.

உரை.— அங்ஙன மாடிய நாலுபேரும் பாவாக விவற்றைச்சொன்னபின்பு நீபகனருகுநின்ற சந்தனமரமு மடியிற்பிளந்து வாளின்கொடுமையைப்பழித்த நீண்டகண்ணையுடையவோர்மடந்தை புறப்பட்டுவருகையின் மீனொத்தமுகத்தையுற்றுப்பார்த்த நீபகன் றான் முன்மன்மதன்காட்டிய காமவழியாலன்புவைத்திருந்த சாசனையின்சாயலென்றுகண்டு மனதிற்குலைந் தையப்பட்டு நின்றானென்க. (௪௩)

வாளணிகயற்கண்மின்ன மணியணிக்குழைவில்வீச
நீளணிதயங்கிநாற நிறத்துகிலொளிகள்விம்மக்
காளணியெறிவேற்சாயற் கனிவுகுத்துயிருண்டஞ்சொல்
வேளணிதிலதமொத்தாள் வீணைநற்குரலிற்சொன்னாள்.

உரை. — அங்ஙனஞ் சந்தனமரத்திற் புறப்பட்டபெண்ணேவென்னில்: வாளையேய்ந்தியகயல்மீனொத்தவிருகண் மின்னவு மணியாலழகுபெற்றகாதணி யொளியைவீசவு நீளமாய் மார்பிற்றூங்கியமணிவடங்க ளசைந்துவிளங்கவுமுடுத்தபொன்னுடை சுடர்களைச்சூழவிடவுநிற்ப நஞ்சுதோய்ந்த வெறிவேலொப்பவின்பத்தைக்காட்டியுயிரைக்கொல்லுமினியசொல்லைக்கொண்டு மன்மதனணிந்த நெற்றித்திலதமொத்தவள் வீணைபேசினாற்போல விவற்றைச்சொன்னாளென்க. (௪௪)

மடங்கலேறன்னையென்றோர் மடங்கலிற்கொடியனானாய்
தடங்கையேகொலையில்விஞ்சித் தளர்ந்தவென்னுயிர்கொன்றாயென்
குடங்கையேமறந்தாயுன்னைக் குணித்துநான்றேடமுன்னி
முடங்கலேவிளைகான்வந்தேன்முற்றவோவிரங்காயென்றாள்.

உரை.— அவள் நீபகனைநோக்கிச் சொன்னதேதென்னில்: சிங்கராயனுன்னையென்றோ சிங்கத்தினுங்கொடியனானாய், உன்றடக்கையே போர்முகத்துயிர்களையுண்டுகொலையிற்பழகியிப்பொழுதுமிஞ்சித் துன்பத்தாற்றளர்ந்த வென்னுயிரையு

ங்கொன்ருயே, இனிதாய்நீ மூன்சாய்ந்திருந்த வென்குடங்கையைமறந்தாயே, நானுன்னைமறவாமற்றேடி மூங்கில்சூழ்ந்தவிக்காவிடத்துனக்குழந்திவந்தேனே, நீயோமுற்றமுடிபோக வெனக்கிரங்காதிருப்பாயோ வென்ருளென்க. (சரு)

மட்டுயிர்ப்பதுமவாயாள் வயிரக்குன் றுருகத்தேம்பி
நெட்டுயிர்ப்புயிர்த்துவிம்மி நெய்த்திடைதுவண்டுவாட
வட்டுயிர்ப்பசையுண்பேய்க ளருந்தவந்தவிர்க்கமாயை
நட்டுயிர்ப்பனவென்றெண்ணி நரபதிதேறினனே.

உரை.—மதுவுக்குயிர்தருந் தாமரைவாயையுடையா ளிவற்றைச்சொல்லி வயிரமலையுமுருகும்படிதேம்பிப் பெருமூச்சுவிட்டழுது நொந்தநுண்ணிடைதுவண்டுவாடாநிற்ப நரபதியாகியநீபகன் சாசனையிங்கேவந்ததேதென்று நல்லுயிருண்ணும் பேய்களாக்கு நானினைத்ததவத்தைத்தவிர்க்கும்படியிவற்றைநட்டுச் செய்தமாயைவித்தை யிதுவென்றெண்ணி மனதிலேதேறினனென்க. (சசு)

தேறினன்சுழற்றும்வாளாற் சிதைவுகமுளைத்தசாகி
நூறிநான்றுமிப்பலென்ன நுண்ணிடையணங்குந்தீந்தே
னூறிநான்றெரிந்தசாந்த மொழியவேசெய்வாயென்று
கூறினளொருங்குகையாற் கொழுந்தருத்தழுவினளே.

உரை.—அங்ஙனந்தேறியநீபகன் வாளைச்சுழற்றி யெனக்குக்கேடுவிளைவிக்கும்படி முளைத்தவிம்மரத்தையழித்துவெட்டுவேனென்றான், என்றவுடனே யருகுநின்றநுண்ணிடைப்பெண்ணு நானிருக்கும்படிதெரிந்த தீந்தேனூற்றதாகியசந்தனமரத்தை வெட்டுவாயோவென்றுசொல்லிப்போய் வெட்டாதபடி யம்மரத்தை யொருங்குடனிருகையாற்றழுவினளென்க. (சஎ)

பூங்கணையுழுதநெஞ்சம் புண்படவுருவிப்பின்னர்
பாங்கணைமரங்கொய்தொக்கப் பகைத்தசாசனையுங்கொல்வாய்
தீங்கணைகொடியோயென்றுள் செல்வனுநகைத்துன்மாயை
யீங்கணைகொடுமைகற்றே னென்றுவாள்வீசினனே.

உரை. — அங்ஙன மன்னாள் கையான்மரத்தைத்தழுவிச் சொல்வாள்: உன்னைவேண்டி மன்மதன்முன்னெய்த பூவம் புகளாலுழப்பட்ட வென்னெஞ்சு புண்ணும்படி யதில்லையு ங்வாள்பட்டிருவினபின்ன ரழகியவிம்மரத்தைவெட்டியொ ருங்குடனீபகைத்த சாசனையாகியவென்னையுங் கொல்வாயாகத் தீயகொடியோனேயென்றாள், அவற்றைக்கேட்ட நீபக னகைத்துநல்லதுன்மாயை யிங்கேசெய்யநினைத்தகொடுமை யை நன்றாய்க்கற்றேனென்று துணிவோடுமரத்தடிமேல்வா ளைவீசினானென்க. (சஅ)

நாறுசெம்மணியின்சாயல் நயப்பெழநின்றாள்கொண்
கீறுமையுருவங்காட்டிக் கிளைத்ததோளிருநூறாக்கி [மூ
நூறுகைவடிவாள்வீச நூறுகைகிடுகையேந்தச்
சீறுநெய்யெயிற்றுநீண்கூன் றிங்களேதோன்றநின்றாள்.

உரை. — அங்ஙன மவள்நயங்காட்டியவளவி லவன்மனங் கலங்காமையாற் பயங்காட்டினு லவன்மனங்கலங்குமென்று விளங்கியசெம்மணிச்சாயலாக மகிழ்வினைச்செய்யும்படி நி ன்றவள் பயமிடும்படி மேகங்களைச் சென்னியாற்கீறு முய ர்ந்தகரியவுருவத்தைகாட்டினளாய்க் கிளைத்தவிருநூறு கை யையோங்கினளாய் வலக்கைநூறு நூறுவாள்களைவீசினளா யிடக்கைநூறு நூறுகேடயங்களையேந்தினளாய்ச் சீறுவாயி னளா யூனொழுகுமெயிற்றினளாய் வளைந்தபிறையொத்த பெ ரும்பல்லைக்காட்டிநின்றாளென்க. (சகூ)

பண்கிளைத்திசையிற்பாடல் பணித்தமற்றரிவையாருங்
கண்கிளைத்தெழுந்தசெந்தீக் கதுத்தநூறரக்கராகி
விண்கிளைத்திடியேறெஞ்ச விபுலைசூழ்நடுங்கவார்த்துப் [ர்.
புண்கிளைத்தொழுகுநெய்த்தோர் பொழிபடையேந்திநின்றா

உரை.—வெருவிடுமுருவோடு மவளங்ஙனநிற்ப வீணைவா ய்கிளைத்தபற்பலவிசைபிடித்தேற்றிய வினியபாடல் முன்னி யற்றிநின்ற மற்றநூறுமாதருங் கண்வழிகிளைத்துத் தெரித்த செந்தீயுமிழுங்கோபத்து நூறிராக்கதனைப்போலவாகி மே கங்களைக்கிழித்துப் பலவாயிடித்துவிழு மிடிமுழக்கங்குறை

யப் பூவலெல்லா நடுங்கும்படி வலிதாயார்த்துப் புண்வழி யோடினவிரத்தத்தைக் கொப்பளித்த பலவாயுதவகைகளையே ந்திச் சூழநின்றானென்க. (௫௰)

காரெழுந்தன்மைவான்செய் கதிர்புதைத்திருளவான்
போரெழுந்தன்மைமின்னிப்புயற்கிழித்திடிகளார்ப்ப [மேற்
நேரெழுந்தன்மைபூங்கா நிரையமேர்வெருவுவீங்கச்
சூரெழுந்தன்மைத்தஞ்சாத் துளங்கினான்வயிரநெஞ்சான்.

உரை. — அவரெல்லாருமங்ஙனம் வெருவிடச்சூழநிற்பக் கருமுகமேகங்களெழுந்து வானொளியெல்லாத்தையும் புதைத்துச் சூழிருள்மிகவும் வான்மேற் போர்பொருதாற்போல மின்னி மேகங்களைக்கிழித் தெண்ணப்படாத விடிகள்விழுந் துமுழங்கவு மதற்குநேர் பூங்காவெல்லா நரகம்போலமிகவும் வெருவிடநிற்பவு மிவையெலாமிங்ஙனமாகியு மிவ்வகைத் துன்பமெல்லா மெழுந்தவளவிற் கவனும் வீரத்தெழுந்தஞ் சாமல்விளங்கிநின்றான்வயிரநெஞ்சுடைய நீபகனென்க. (௫௧)

உன்னியதவத்தைப்பேண வொழிந்ததீயினிமைவெஃ
கேன்
றுன்னியவிடுக்கணஞ்சேன் சுருதியிதெனக்கென்றோங்கி
மன்னியதுணிவிற்றேர்த்த மண்ணைகள் நரகில்வீழ்க
மின்னியவடிவைவாளால் வியன்றருவீழக்கொய்தான்.

உரை.—அங்ஙனங் கலங்காதிருந்தநீபகன் றேறிச்சொல்வான்: நானினைத்ததவத்தைக் குறையின்றிப்பேணி முடியும்படி நான்முன்விட்டொழிந்த தீயவின்பங்களை யினிவிரும்பாமலும் வருந்துன்பங்களுக்கஞ்சாமலுமிருப்பமிதே யெனக்கு வேதமாகநிற்கு முறுதியிதுவென் றுமனதிலோங்கிக் கொண்டவசையாததுணிவினாற் றேர்த்து முன்சொன்னதெல்லாங் காட்டவந்தபசாசுகள் நரகத்தில்விழும்படி யவன்றன்வாளா லச்சந்தனமரத்தை விழத்தாட்டிவெட்டினானென்க. (௫௨)

தொல்வினையலகைபோய்த்தற் கொள்கையிற்கான்றீ
தோன்றிப்

புல்வினையறுப்பநோற்றான் பொலிந்தநீபகனென்பானே
நல்வினைபகைத்தபேய்கள் நயமொடுவெருவுகாட்டி
மல்வினையொழிக்கவோர்ந்த மாயையேயின்றுமெஞ்சா.

உரை.— அங்ஙனமெல்லாமாயைவித்தையாற்காட்டவந்த வுயிரைக்கொல்லும்பசாசுகள்போயிப்பூங்காவு முந்தின வரியவழகுமின்றிப் பின்றின வெருவுவடிவுமின்றித் தன்சுபாவத்தன்மையாற்றோன்றிப் புல்வினையாகிய தீவினை கெடும்படி யருங்குணத்துயர்ந்தநீபக னிங்கே தவத்தைச்செய்தான், நல்வினைகளைப்பகைத்த பசாசுகள் நயமும்பயமுங்காட்டி மல்வினையாகிய வவன்றவத்தைக்கெடுக்கும்படி யன்றுநினைத்த மாயைத்தொழிலே யிந்நாளையிலுங் குறைவின்றிச் செய்து கொண்டுவருவனவென்க. (௫௩)

வெங்கணேரிரவியொத்த விடலையேநெடுநாணோற்ப
விங்கணேயுறைந்தபோழ்தி லிவையெலாம்வரைவித்தானு
லங்கணேபொழிற்பார்த்தல்லா லறிகிலேமறிதியேல்வெண் [ன்.
டிங்கணேர்தெளிந்தநூலோய் செப்புதியென்றான்மூத்தோ

உரை.— அங்ஙனம் வானத்திற்கொரு வெங்கண்ணாகநிற்குஞ் சூரியனையொத்தமன்னனாகியநீபக னிங்கேயிருந்து நெடுங்காலத்துத் தவஞ்செய்திருக்கும்பொழுதி லவன்றானிச்சித்திரங்களையெழுதுவித்தானும், நாங்களோவெனி லெழுதினவழகினைப்பார்த் ததிசயப்படுவதல்லா தெழுதிய சித்திரங்கள் காட்டியசரிதை யின்னதென்றறியோம், சந்திரன்பொழிந்த பாற்கதிரொப்பத் தெளிந்தவுணர்வினையுடையோய்! நீயச்சரிதையறிந்தாயாகிற் சொல்லுவாயாகவென்றான் மூத்தோனாகிய வதிட்டனென்க. (௫௪)

வேறு.

பண்காவிசைபடுத்திப் பகர்ந்தவுரைவளன்கேட்டு
மண்காவலற்காய முறையிலறமவிநீரார்
விண்காவலனருளால் வினைகொள்ளாவெனக்காட்டத்
தண்காவெழுதியவை சாற்றுதுமென்றுரைகொண்டான்.

உரை.—அங்ஙனமதிட்டன் வீணைவாயெழு மின்னிசைக
ளைவென்ற வின்பத்துரைத்தபாவையுஞ்சூசைகேட்டு மன்ன
னாகியநீபகன் றனக்குவந்தமுறையரன் மலியறத்துயர்ந்தோர்
வானரசனாகியகடவுள்செய்யுந் தயையினுதவியால் வினைகொ
ள்ளாரொன்றாகாட்டும்படி யிக்குளுங்காவிடத்தெழுதுவித்தக
தையை நான்சொல்விக்காட்டுவேனென்று சூசைசொல்லத்
தொடங்கினானென்க. (௩௫)

மின்னார்கதிர்தெளித்தீங் கோவியமாய்வேந்தெழுதிப்
பொன்னார்மணிக்குப்பை போன்றுநிழலுமிழ்ந்திலங்கு
மின்னாரொன்குலத்து முந்தையராமிவர்சரிதை
முன்னோர்மொழிபிறழா மொழிகுதுநான்கேண்மினென்றான்.

உரை.—மின்னல்வாயொழுகும் கதிர்களைத்தெளித்துச் சி
த்திரமாகத்தோன்றும்படி யெழுதப்பட்டுப் பொன்னிடத்த
ழுத்திப் பதித்தமணிகளின்குப்பைபோலச் சுடர்பொழிந்
தொளிரு மிவரெலாமென்குலத்தின்முன்னிருந்த பிதாக்க
ளே, இவர்கதை முன்னோர்சொன்ன முறைதப்பாம னான்
சொல்லக்கேட்பீராகவென்றான் சூசையென்க. (௩௬)

ஐயைஞ்ஞூறுதொடர் நானூற்றுருண்டுமுனர்
பொய்யைநூறுபுகழ் பொலிவேதநெறிவழுவா
மெய்யைநூறுதவம் விளைத்தவரும்வரத்தொகையான்
மையைநூறுவப்பில் வாழ்ந்திருந்தான்யகோபென்பான்.

உரை.— இரண்டாயிரத்துத் துளாயிரத்தாறுவருடமுன்
னே பொய்யையொழித்துப் புகழிற்பொலிந்த வேதநெறியி
ல்வழுவாம லுடலையுருத்ததவத்தால் விளைந்த வரங்கள்மிகுதி
யான் மயக்கமில்லாத மகிழ்ச்சியோடு வாழ்ந்திருந்தான் ய
கோபென்பவனென்க. † (௩௭)

சீரார்புகழ்மிக்கோன் செய்தவத்தான்முற்கொண்ட
தாராரணங்களித்த தனையருமீராந்துபினர்
காரார்பிற்குழலாள் களித்தீன்றவிருவரினுள்
ளேரார்முதுனனு யாணரனென்றிவன்றனே.

† Genesis cap. 37. சனிப்பாகமத்து-௩௭-ம். அதிகாரம்...

உரை.—அங்ஙனம் பெருஞ்சீர்ப்புகழின்மிக்கோன்யகோபென்பவன் செய்ததவத்தினான் முதற்றாரந்தந்த பத்துமக்களையன்றிப் பின்புகொண்ட மேகக்கூந்தலா ளிருபிள்ளைகளைப்பெற்றாள், இவ்விருவருள்ளே மூத்தவனாகிய ஆணரனென்பவ னிவன்றானென்று விரலாற்சித்திரங்களுக்குள்ளே காட்டினான்குருசையென்க. (ஆணரனெனினும் வடமொழியாற் சேப்பனெனினு மொக்கும்.) (௫௮)

அறங்கொண்டிவன்வளர்ந்தே யாங்குவளர்ந்திட்டன
னுறங்கும்பொழுதீரைந் தொருமீனுமிருசுடரு [போ
மிறங்குந்தன்மையில்வந் திறைஞ்சுவபோலிணைத்தன்றாள்
பிறங்குங்கதிர்தவழும் பெற்றியைக்கண்டேனென்றான்.

உரை.—சொன்னவாணரனென்பா னல்லறத்துணையாய் வளர்ந்தபின்ன ரங்கே யெழுதினபடி தானுறங்கும்போது வான்மீன்பதினொன்றுஞ் சந்திரசூரியனும் வானத்தினின்றிறங்கித் தன்னிருபாதத்திற் பெருங்கதிர்தவழும்படி தன்னைவணங்கினாற்போலக்கண்டான், அங்ஙனங்கண்டேனென்று மற்றவர்க்குச் சொன்னானென்க. (௫௯)

தெரியாதாந்தந்தை தாயுனையோ தெண்டனிட
வெரியார்சுடர்தொழுத தெனப்பகைத்தார்முதுனரோ
பெரியாருடைச்செல்வங் காண்சிறியார்பெரும்பகையே
யுரியாராவரென வுரைத்தார் நூலுடைநீரார்.

உரை.—ஆணரன்கண்டகனவைக்கேட்டவனண்ணன்மாரெல்லாருங்கோபித்து இதேதோ மதிகெட்டு நாங்களு மெந்தாய்தகப்பனு முன்னைத் தெண்டனிடுவோமென்றதுபோலவோ நீயவ்வான்மீன்களு மிருசுடர்களுமுன்னைத்தொழக் கண்டதென்றாயென்று மிகவும்பகைத்தார், அங்ஙனம்பெரியோர்கொண்ட செல்வங்களைக் கண்டசிறியோர் பெரும்பகைகொள்வாரென்றார் நூலிற்பெரியோரென்க. (௬௰)

மீதுருப்பகைமுற்றித் திலத்தவனைவரக்கண்டே
யீருய்க்கண்டகன வெவன்செய்யுங்காண்மினெனு

வாளுச்சடத்தன்று ரவனையடவோர்ந்துபினர்
கோறுக்கொல்வதற்குக் கூவவினுள்வீழ்த்தினரே.

உரை. — அங்ஙன மவர்கொண்டபகைதேறுமன் முற்றி யொருநா ளாணரனைக் காட்டிலேவரக்கண்டு சிறிதுநாளி முன்னே யிவன்கண்டகனு வென்னசெய்யுமென் றுபாருங்க ளென்று நகைத்து மாறுதவஞ்சனையுடையரா யவனைக்கொல்லநினைத்தார், பின்பு கொல்லாமற்கொல்லும்படியவனைப்பாழாய்நின்றவொருகிணற்றினுட் போட்டாரென்க. (சுக)

அழுவான்டிவிழுவா னயர்ந்தொருங்குகைகூப்பித்
தொழுவானனிதுதிப்பான் சுழன்றேங்கிவிம்முவனும்
விழுவானெனவுதைத்து வேங்கையனார்வெகுண்டறநால்
வழுவானைத் தூக்கி வற்றியதாழ்குழியெய்தார்.

உரை. — அப்பொழுதாண ரன்முவா னவரடிமேலேவிழுவா னேத்தேங்கி முழுதுங்கைகூப்பி யவரைவணங்குவான் றுதிப்பா னேங்கிவிம்முவான் றம்மடியில்விழும்போ தவரவனை யுதைத்துக்கொடியபுலிகளைப்போலக்கோபித்து நல்லறவழியில்வழுவாத வாணரனைத்தூக்கி வற்றிய தாழ்ந்தகிணற்றிற் போட்டாரென்க. (சுஉ)

இப்பால்வனாந்தகிணற் றுணரனையிட்டனபின்
னப்பால்வரித்தபடி யதர்வரவாணிகர்கண்டு
துப்பாலீங்கொழித்தாற் றறும்பொரவிசையாதிவர்க்கு
விப்பாமெனவெடுத்து விற்றளித்தாரக்கொடியார்.

உரை. — விரலாற்சித்திரங்களைக்காட்டி யிங்கேயெழுதப்பட்டகிணற்றி லாணரனைப்போட்டபின்ன ரங்கேயெழுதினபடி சிலவாணிகர்வழிவரக்கண்டு இவனுணவின்றியிங்கேசெத்தா னமக்குவருமிலாபமென்ன வருகின்றசெட்டிகள்கையிலேவிற்றுப்போடுவோமென் றவனையெடுத் தக்கொடியரிருஞ்சிறுர் வாணிகர்க்குவிற்றுக்கொடுத்தாரென்க. (சுங)

நித்தைக்கஞ்சாதா ராணரன்முன்னீடுடுத்த
வித்தைக்கெழுதியது சிற்றுதிரமேற்சிதறித்

தந்தைக்கதுகாட்டித் தம்பியுடையோவிதெனச்
சிந்தைக்கிரங்கினர்போற் சினப்புலியோசெறித்ததென்றார்.

உரை.— அங்ஙனந் தம்பியைவிற்றபின்பு நிர்தைக்குச்ச ற்றுமஞ்சாதவ ரவன்முன்னீளமாயுடுத்திருந்த வழகுபெற வெழுதினசட்டையைக்கிழித் தங்கங்கே யிரத்தத்திறற்றேய்த் தகனைத்தகப்பனுக்குக்காட்டி யிதுவெந்தம்பியுடுத்திருந்த சட்டைதானோவென்று தாமுநொந்திரங்கினாற்போல வை யோகொடியதோர்புலி யவனைக்கொன்றதோவென்றானென்க. (கூச)

ஆங்குபொறித்தபடிக் கலைகேட்டமுதிர்தாதை
தீங்குபொறித்ததுகில் திளைப்பக்கண்ணீர்பொழியப்
பாங்குபொறித்தமுகப் பாலனுக்கன்றிரங்கியழு
மீங்குபொறித்தமுறை காண்மினென்றாணிணர்க்கொடியாள்

உரை.— அவரங்கேயெழுதினபடிசீலையுங்காட்டிச் சொன்னதைக்கேட்டவயதின்முதிர்ந்ததாதை யவர்கொடுமைகொண்டிரத்தத்தாலெழுதப்பட்ட சீலையைக்கையிலேந்தி விட்ட கண்ணீரால்முழுது நனைத்து வழகினாலெழுதப்பட்டமுகத்தையுடையபாலனுக் கவனன்று தன்றமனதிலேயிரங்கி யழுத்தன்மை யிங்கேயெழுதினசித்திரத்திற்பார்ப்பீராகவென்று சொன்னதை விரலாற்காட்டினன் பூங்கொடியேந்தியகுசையென்க. (கூரு)

வேறு.

ஏங்கெழுமொலியோடியாவருமிரங்க வினமணித்தவிசின்மேலெழுந்து [ழல்குழையப்
தூங்கெழுநுரையம்பூந்துகில்குழையத் துளிமதுப்புயற்குழல்குழையப்
பாங்கெழுமணிகள்குழையவாய்குழையப் பதுமவாண்முக நலங்குழைய [ளன்சொன்னான்.
வாங்கெழுதியபொற்சாயலாளரொன் றதிட்டன்கேட்டிலைவள

உரை.— அங்ஙனஞ்சொன்னதைக்கேட்டுச் சூழநின்றவிருடிகளெல்லாரு மொலியெழவேங்கி யிரங்காநிற்ப வதிட்ட

ன் குசையைநோக்கிச்சொல்வான்: ஐயா நவமணியாற்செய்
தலங்கரித்த மெத்தையின்மேலெழுந் துடுத்த நுரையின்மெ
ல்லியபூந்துகில் தூங்கிக்குழையாநிற்பவு மதுவைத்துளித்த
மேகத்தொத்தகூந்தலு மழகுசெய்யத் தூங்கினமணிவடங்க
ளும் வடிவுளவாயுந் தாமரைமுகத்தினழகு மிவையெலாங்
குழையாநிற்பவு மங்கேபொற்சாயலாகவெழுதப்பட்டவ ளி
யாரையாவென் றுகேட்பச் குசை மறுமொழிசொன்னானெ
ன்க. (௬௬)

விரையுமிழ்நெடுங்கான்வாரணிகர்கடந்து விளைதிருவெ
சித்துநாடடைந்து [ர்தன்னிற்
வரையுமிழுயிர்ப்பென்றகிற்புகையுமிழ்ந்த மாடநீள்கோனக
சிரையுமிழ்கனிசொல்லாணரன்சென்று திருத்தகும்பூத்திபா
ற்காளாய்ப் [வளர்த்தான்.
புரையுமிழ்துயர்நீத்தறத்துணைபிரியாப் புவிநுதற்றிலதமாய்

உரை.— முன்சொன்னபடி யாணரனைவிலையாகக்கொண்
டவணிகர் வாசமலர்ப்பூங்கானகவழியைக்கடந்து செல்வங்
களைவிளைவிக்கு மெசித்துநாட்டிற்சேர்ந்து பொன்மலைபெ
ருமூச்சிட்டாற்போல வகிற்புகையுமிழு முயர்ந்தமாளிகை
ச்சிறப்பி னீண்ட விராசதானிநகரில்வந்து வீணைநரம்பின்
வாய்க்குரலொத்த கனிந்தசொல்வி னாணரனங்கே பெருஞ்
சீர்ச்செல்வத்துயர்ந்தபூத்திபானென்பவற்கடிமையாகிப் பா
வத்தால்வருந்துன்பமின்றி யறநற்றுணையைப்பிரியாமற் பூவு
லகிற்கு நுதலணிதிலதமாக வளர்ந்தானென்க. (௬௭)

திடம்புனைந்தமைந்தவறத்தரும்பயனே செய்தவர்க்க
ன்றியுமவர்தம் [தெனத்தகுமால்
புடம்புனைந்தவர்க்கும்வான்சுடரொளிபாற் பூமியுமொளிர்ந்
படம்புனைந்தென்னவாணராணரனப் பதியகத்தெய்தியபி
ன்னர் [னடைந்தான்.
தடம்புனைந்துயரப்பூத்திபான்றனுஞ் சால்புயர்திருப்பய

உரை.— வான்மேற்றிரியுஞ்சுடர்களினொளியா விப்பூவுல
கும்விளங்குவதுபோல வுறுதிவிடாதோங்கிய நல்லறவினை

த்தபயனே யவ்வறத்தைச்செய்தவர்க்கல்லாமலு மவரைச்
சேர்ந்தவர்க்குந்தருமாம். அங்ஙனஞ் சித்திரமெழுதினவழி
கோடுதோன்றிய வாணர னம்மனையிடத்துச் சேர்ந்தபின்பு
அவனையடிமையாகவைத்திருந்த பூத்திபானு மாட்சிமையிற்
பொலிந்துயரும்படி செல்வப்பெரும்பயன் மிகவுமடைந்
தானென்க. (௬௮)

பாணெறிவழுவாதாடலேயின்பம் பயக்குமாறுடவர்க்
குப்போலக் [மாட்சி
கோணெறிவழுவாதிலங் கறத்தொகுதி. குணிக்கருமாணரன்
சேணெறிவழுவா நாய்கனேகண்டு சிறந்தவன்பியல்பிலோர்
மகவின் [பணித்தான்.
மாணெறிவழுவாத்திருந்தியசெல்வ மனையெலாமவன்கையிற்

உரை.— பாடலோடுவழுவாம வியன்றுடலே யாடமாட்
டாதருமுடவர்க்கு மின்பத்தைப்பயக்குமாறுபோல வான்மீ
னெப்ப வழுவாமல்விளங்கிய வறத்தின்றொகுதியா னினைப்ப
தற்கரியமுறையி லாணரன்காட்டியமாட்சிமை நெடுநாளு
ம்வழுவாததென் றவனாயகனாகிய பூத்திபானுங்கண்டு மகி
ழ்வெய்தி யவனையடிமையென்றெண்ணாம லன்பின்சிறப்பி
னாலொருமகனாக விடாதபெருமையோடுநடத்தித் திருந்திய
செல்வநிறைந்த தன்வீடெல்லா மவன்கையிலொப்புக்கொடு
த்தானென்க. (௬௯)

தோள்கடைந்தழுத்தியணிமணிச்சாயற் றுளங்கியவா
ணரன்மாமை [த்தை
வாள்கடைந்தழுத்திமதர்விழிநாயகி மருளுறக்கண்டுகண்டுள
வேள்கடைந்தழுத்தியேவியகணையால் விருப்புறிக்கற்பெழி
ல்சோர [ட்பாவையோடொத்தான்.
கோள்கடைந்தழுத்திக்கொழுஞ்சுதைக்கோலங் கொண்டம

உரை.— அங்ஙனமாணரனடந்துவருகையி லவன்றோளிர
ண்டையுங்கடைந்து மணிகளையழுத்திவைத்ததுபோல விள
ங்கிக்காட்டியவழகினை யவனாயகி மயக்கமுறும்படி வாள
ழுத்திய தன்கண்ணாற்பார்த்துப்பார்த்துநிற்க மன்மதனவ

னுள்ளத்தைக்கடைந்தாற்போல வப்பொழுதவள்மேல்விட்ட வம்புகளா லாசையுட்கொண்டு கற்பினழகுசோர்ந்தழிய வழி ல்லாமையான் மீன்களைக்கடைந்தழுத்திச் சுதையாலொப்ப னைசெய்த மட்பாவையைப்போல நின்றாளென்க. (எ௰)

பணிநிறத்தருகின்மருவிடவிளித்துப் பணித்தனவயவன்
செயுங்காலை [ஞ்சாற்
மணிநிறத்தலர்ந்தவாணரன்முகத்தின் மயனிறத்தருந்தியந
பிணிநிறத்தெழுந்தவிரகநோயாற்றாப் பெண்மையின்காணி
யாநாண [பொடுசோர்வாள்.
மணிநிறத்தமைந்தசால்பினாற்பேசா வயர்ந்துநெட்டுயிர்ப்

உரை.—அங்ஙன மவளுட்கொண்டவாசையாற் பணிபூழி யமிட்டபாவனையாக வடிக்கடி யாணரனைக் கிட்டவரவழைத் துப் பணித்தவேலையை யவன்செய்யும்பொழுதின் மணிநி றத்தொளியிட வலர்ந்தவாணரன்முகத்திலே மயக்கத்தோடு ண்டநஞ்சினாற் பிணியைக்கொண்டாற்போல வுட்கொண்ட விரகநோயாற்றாமற் றன்மணிவடத்தொப்பப் பெண்மையி ன்காணியாகிய நாணத்தைக்கொண்டமிகுதியாற் பேசக்கூ சிவருந்திப் பெருமூச்சுகளைவிட்டுச் சோர்ந்துநின்றாளெ ன்க. (எக)

வீங்கியவுயிர்ப்பிற்பொங்கியகாமவெந்தழல்வீக்கலுமா
ற்று [யிற்சாய்ந்து
தேங்கியதன்மைவிரைகமழ்மதுப்பெய் யிளமுகைச்சேக்கை
தாங்கியதோட்டியழுத்திவெல்பாகன் சாய்த்துவீழ்த்துவா
வெனநாண [ந்தான்.
நீங்கியவவாவுட்பொங்கலின்விளித்த நினைவுணராதவன்சேர்

உரை. — அங்ஙனமவளயர்ந்துவிட்டபெருமூச்சினா லூ தினாற்போலப் பொங்கியகாமச்செந்தீமிகுதியைப் பொறுக் கமாட்டாதவளேங்கி வாசமதுப்பொழி யிளம்பூவரும்புக ளாற்செய்த மெத்தையின்மேற்சாய்ந்தனளாய்க் கையிலேந் தியவங்குசத்தை மத்தகத்தழுத்திப் போர்முகத்தருஞ்செயங் கொள்ளும்படி நடத்திவரும்பாகனைக் கீழேவீழ்த்தினமதயா

னைமுறிந்தாற்போலப் பாகனாகியநாணத்தைப்போக்கிய யா
னையாகியகாமத்தாசை யுட்பொங்கி மூறிவாகநின்று வரச்
சொல்வி யாணரனையழைத்தா ளழைத்தநினைவினையறியாம
லவனும்வந்தானென்க. (௭௨)

பார்த்தனள்பார்த்தவுவப்பொடுநாணிப் பகைத்தநா
ணமுஞ்சினந்தாற்போற்
கூர்த்தனல்பொங்கிமுகமெலாஞ்சிவந்து குயிலினுங்குழலி
னுமினிதாய் [ச்சொன்னு
நீர்த்தனகுதலைச்சொற்கொடுநெடுநா ணினைத்தவைமறைவற்
ளார்த்தனவிடிபட்டனையநின்றனபின் பாணரனுணிநொந்
துரைத்தான்.

உரை.— அங்ஙனம்வந்தவாணரனையினிதாய்ப்பார்த்தாள்,
பார்த்தவின்பத்தோடுள்ளே நாணினாள், பின்னை தன்னினைவி
னைப்பகைத்தநாணத்தைக் கோபித்தாற்போல மனதிலேயழ
ல்பொங்கிமுகமெலாஞ்சிவந்து மாங்குயிற்குரலினும் பேசு
ம்வீணைக்குரலினுமினியமழலைச்சொல்லாற் றனெடுநாளுமம
னதிலேநினைத்த காமவுணர்வினை மறைவின்றிச்சொன்னாள்,
சொன்னவளவிலே யவன்முழங்கிவிழு மிடிபட்டதுபோல
வொன் றுமுரையாமனின்றபின்பு நாணிநொந்துசொன்னு
னென்க. (௭௩)

ஆர்முகத்தெனக்கோராயனுநாய்க ன‌னைத்துமேயுனை
யலாவளித்த [ன்றிப்
சீர்முகத்தின்றுதவற்குநான்கருதச் சிந்தையுமியனுமோவெ
போர்முகத்தோடியொளித்தனர்வெற்றி புணர்ந்துய்வாரெ
ன்னவுட்டேறிக் [னுன்மாதோ.
கார்முகத்தொளித்தமின்னெனவொல்கிக் காந்துய்யல்கருதி

உரை.— அப்பொழுதாணர னெங்ஙனமறுமொழிசொ
ன்னுனென்னில்: அன்பினிறைந்தமுகத்தைக்காட்டியெனக்கு
த்தகப்பன்றன்மைத்தாகிய நாயகனுன்னையல்லாது மனையிலு
ள்ளயாவையு மென்கையிலேதந்ததன்மைத்து நானவற்குப்
பொல்லாங்குசெய்யும்படி நினைவாயினும்வருமோவென்று

ன், மீளவுங்காமப்போரிடத்தோடியொளித்தவர் வெற்றியை
க்கொள்வாரென்று மனதிற்றேறி மேகத்துள்ளொளித்தமின்
னலைப்போல வொல்கியொளித்துப்போக நினைத்தானென்க.
(௭௪)

பூங்கணையாயென்னெஞ்சமீர்த்தனபின் புகர்விழியொ
ளிப்பவோவென்று
வோங்கணையையென்றெழுந்துபாய்ந்தவன்றன் றுடைத்து
கில்சிக்கெனப்பிடித்தாள்
பாங்கணைதுகிலும்பகையெனவெறிந்துபகழியும்பின்றமுன்
றோடித் [றான்.
தீங்கணைமடவாட்கிரங்கியதல்லாற்செயிர்நகைக்கிரங்கிலாதா

உரை. — அங்ஙன மாணரனொளித்தோடும்படி திரும்பு
கையி லவள் நயங்காட்டிக் கோபித்தாற்போல - உன்னெழிற்
கண்ணே மன்மதனெய்யும்பூங்கணையாகி யென்னெஞ்சினை
ப்புண்படுத்தியபின்ன ரக்கண்ணை யிப்பொழு தொளிப்பா
யோவென்று சீக்கிரமாயிருந்த வுயர்பூமெத்தைநீக்கிக் கீழே
குதித்தன ளவனுடுத்தசீலையைச்சிக்கெனப்பிடித்தாள், அப்
பொழுதவ னஞ்சி யிச்சீலையுமெனக்குப் பகையோவென்
றதனையெறிந்து வில்வின்வாய்விட்டவம்பும் பின்றிறகத் தா
னதற்குமுன்றோடித் தீவினை நினைத்தமடந்தைக் கிரங்கின
னொழியத் தீயவாசைக்குச் சற்றுமிடங்கொடா திருந்தானெ
ன்க. (௭௫)

நகைத்தனதன்மைத்தொளித்தனனென்று நகைகெடப்
பெரும்பகைவீங்கி
முகைத்தனதன்மைத்தென்முகம்வெறுத்து முயங்கலுமறுத்
ததீக்கொடியான்
பகைத்தனதன்மைத்தென்னையேயெண்ணிப் பணிகுவானெ
னக்கொடிதுணர்ந்தா
ளகைத்தனதன்மைத்தன்பிற்கும்பகைக்கு மளவிலாப்பொங்
குவர்மடவார்.

உரை. — அங்ஙன மாணரன்போனபின் பவள்வெட்கிப்
போ யிங்ஙனமோ வவனென்னை நகைத்தாற்போல வொளித்

தானென்று முன்வைத்தவாசைகெட்டு மனதிலேபெரும்ப
கைபொங்கித் தன்னிற்சொல்வாள்: புதிதாய்ப்பூத்த மலரென
வழகினன் மலர்ந்தவிவன்முகத்தைவெறுத்துத் தானென்னை
த்தழுவமாட்டாம லென்மொழிமறுத்த தீயகொடியோ னி
னி நானவன்மேல்வைத்தபகையா லென்னையெண்ணி யென
க்குப்பணிவானென்று கொடியதோ ருணர்வினை நினைத்தாள்.
அங்ஙனமல்லோ மடந்தையரெல்லாருந் தாமன்புகொண்
டாலும் பகைகொண்டாலு நீதிமுறைமுறிவாக மட்டொன்
றறியாரென்க. (௭௬)

வேட்கையுஞ்சிதைந்தநாணமுஞ்சோர்ந்த மேனியே
யறத்திற்சோர்ந்தென்னப்
பூட்கையுமெஞ்சக்கொடியவெஞ்சினத்தாள் புருடன்முன்
குழனலஞ்சிந்திப்
பீட்கையுமிருகண்புதைத்தழுதிந்தோ பிரியநின்றொழும்ப
னேயெத்தம் [னென்றாள்.
வாட்கையும்புகழுமெஞ்சவின்றென்னை வழுவுறநினைத்தன

உரை. — அவளுள்நினைத்த கொடியவுணர்வினைச்செலுத்
தும்படி காமவேட்கையினு மழிந்தநாணத்தாலுஞ் சோ
ர்ந்ததன்மேனியே கற்புணர்ந்தவறநினைவினுஞ் சோர்ந்ததெ
ன்றுகாட்டி வெஞ்சினத்துணர்வினுள் முகவடிவம்வாடாநிற்
பத் தன்புருடன்வந்தவுடனே தலைமயிர்க்குழையச்சிந்தி விள
ங்கியகையா லிருகண்ணைப்புதைத்து மூடிவிம்மிநொந்தழு
து ஐயாவிந்தோ வுன்பிரியவடிமையாகிய வாணானின்று ந
மதுவாழ்க்கையுங் கீர்த்தியுங்கெடும்படி யென்னையிகழ்ச்சி
செய்யநினைத்தா னென்றாளென்க. (௭௭)

மூற்றுபுகனன்றமுகத்தெழும்வெகுளி முரட்கொடுந்
த்திபாலூர்த்துப் [னையென்னச
பற்றுபுசிறையிற்கதுமெனப்பெய்மின் பகைவரிற்கொடிய
சொற்றுபுகொடியார்மாசிலாணரனைச் சுளித்தடித்திழிவுறக்
கச்சிற் [னப்புக்கான்.
சுற்றுபுகொடுபோய்ச்சிறையினுட்டிங்கள் சூளிமுகிற்புக்கெ

உரை. — அவளங்ஙனஞ் சொன்னதைக்கேட்ட பூத்திபா
ணழன் றமுற்றி முகத்திலெழுந்த கோபத்தார்த்துமுழங்கிப்
பகைவரினுங் கொடியவனைப்பிடித்துத் தாமதமின்றிச்சிறை
ச்சாலையிற் போடுங்களென்று சொன்னவளவிலே சிலகொ
டியநெஞ்சார்வத்து குற்றமில்லாதவாணரனைக் கோபித்தடித்
து நீந்ல்தபடக் கச்சுகளாற்கட்டிக்கொண்டுபோய்த் தூயச
ந்திரன் றுளிகொள்மேகத்துட்புகுந்தாற்போலத் தானுஞ்சி
றையினுட்புகுந்தானென்க. (எஅ)

மின்னிறத்திங்கணெழுதியமங்கை விளம்பியமங்கைதா
னங்கண் [முதி
கன்னிறத்தரியிற்கொடியரோசிறைசெய் கசடிலவாணரனெ
மின்னிறத்திலங்கக்காண்மினீரென்ன விவைவளனிசைத்துளி
யெவருஞ் [ர்கொடியதேயென்றார்.
சொன்னிறத்தழன்றபெண்மையைப்பெண்மை சொற்றிலீ

உரை. — இங்கே மின்னலையொப்ப வெழுதப்பட்டமடந்
தை யிப்போதுநான்சொன்னமடந்தைதானே, அங்கே கல்
லொத்தநெஞ்சினையுடையசிங்கத்திலுங்கொடியார் சிறைசெ
ய்யு மாசில்லாதவாணர னெழுதப்பட் டினிதாய்விளங்கின
தன்மை யதோபாருங்களென்று சித்திரங்களிடத் திவையெல்
லாவற்றையும் விரலாற்காட்டிச் சூசைசொன்னவளவிலே சூ
ழநின்றயாவரும் பலவுஞ்சொல்விக் கோபத்தழன்று பெண்
மையையினிப்பெண்மையென்கவொண்ணாதுகொடியதோர்
பொருளென்னத்தகுமென்றானென்க. (எகூ)

மடநடைபெண்மைநட்பெனவுரைத்தார் வளருணர்வு
யரியநீரார் [ன்
தடநடைநிகராணிழிவுறியெஞ்சச் சால்பவளன்புகாட்டியபி
விடநடைவஞ்சத்தடும்பகைசெய்தாள் வினையிதேவினிதென
ப்பெண்மை [ன்றன்.
படநடையெழிலைவிரும்பிலீரென்னப் பாணிகமாமுனிசொ

உரை. — அம்முனிகளினுட் பாணிகமாமுனியென்பவன்
சொல்வான்: மடந்தையர்நட்பு மடநடையா யறிவில்லாநட்

றென் றுயர்ந்த வுணர்வின்மிக்கபெரியோர் முன்சொன்ன ரே, ஆயினும் பெருமையினிகராதவாணர னிகழப்பட்டுக் குழையும்படி யம்மடத்தை முன் மிகுந்தவன்பினைக்காட்டி னபின்பு நஞ்சினையுமிழும் வஞ்சநெஞ்சத்தா னவனைக்கொல் லும்படி பகைவைத்துச்செய்தவினையிதென்னி லினி யவன வன் கேடுறுதபடி பெண்மையின்பமென்று படத்தின்றன் மையாலெழுதப்பட்டவழகினை விரும்பாதிருக்கக்கடவதென் றான் பாணிகம்ரா முனியென்க. (௮௰):

மூற்படவுணர்த்ததன்மையினல்லோ முழுவதுநாடொழி
ந்தல்லால்
விற்படவழங்கவளம்பெறலரிய வினையெனவதிட்டனுங்கூறி
மற்படநிமலன்செய்யருடன்னால் வரும்பகைதிருநலம்பயத்
தல் [றான்.
நற்படவருளிக்கேண்மினீரென்ன நறுமலருயர்த்தனன்வின்

உரை.— அப்பொழு தம்முனிவர்மூத்தோனாகிய வதிட் டனுஞ்சொல்வான்: நான்முன்சொன்னபடியல்லோ முழு துநாட்டைவிட்டொழிந்தாலொழிய வொளிபடவழங்கிமா ட்சிமைபெறுவதரிதென்றான், என்றதற்குக்குசை நாம்வல் லமையடையும்படி நமக்காண்டவன்செய்யுந்தயையினால் வ ந்தபகையு நன்மைபயக்குமென்று காட்டுதற்கு நீர்மனம் பொருந்திக்கேட்பீராகவென்று மீளவுஞ்சொல்வான் மலர்க் கொடியையேந்திய குசையென்க. (௮௧)

வேறு.

நறைபட்டாவிசெய்நல்லகில்வெந்தகால்
இறைபட்டச்சிறைபட்டிலதேரறத்
துறைபட்டாணரன்றனுந்துளங்கினான்
குறைபட்டாரவர்க்குங்குறையாற்றினான்.

உரை.— வெந்தகாலத்தல்லோ வகிலங்கட்டை வாசநற்பு கையைவீசும், அத்தன்மைத்தே யாணரன்சிறைபட்டிருந்து மச்சிறையிற் சிறைபடாதுயர்ந்து தேர்ந்தவறத்துறையாக நி

ன்றா தானும்விளங்காநின்றா ன்ச்சிறையினுட் குறைபட்டுநி
ன்றயாவர்க்குந் தானேகுறைதீர்த் தாதரவாகநின்றானென்க.
(௮௨)

தேரெழுஞ்சுடர்சேரிடமவ்விடம்
பேரெழுங்கதிர்பெற்றுவிளங்குமா
லேரெழுங்கதிவீட்டினின்னுறை
சூரெழுஞ்சிறைதோன்றியதாமரோ.

உரை. — தேரின்மேலெழுந் துதித்தசூரியன் சேர்ந்தவி
டமெலாம் பெருங்கதிர்பெற்றுவிளங்குவதுபோல ஆணர
னிருந்த துன்பத்திடமாகியசிறையு மழகியமேற்கதிவீட்டி
ன்றன்மையாய்த் தோன்றினதென்க. (௮௩)

ஒளிபடப்பசும்பொன் னுலைபெய்தெனத்
தெளிபடச்சிறைபெய்தனவாணரன்
களிபடக்கருத்தேந்தியகாட்சியா
லளிபடக்கனிந்தும்பரொத்தாயினான்.

உரை. — பொன்செய்கொல்லர்பசும்பொன் மிகவொளி
பெறும்படி யதனையுலையிற்போட்டதுபோல மிகத்தெளிவுறு
ம்படி சிறையிற்போட்டவாணரனு மயக்கமின்றிக்களிகூர்ந்
தகருத்திலோங்கி யடைந்தவுணர்வின்காட்சியால் வான்மேல
ன்போடினிதாய்வாழுமும்பரொப்பநின்றானென்க. (௮௪)

நீர்புதைத்தொளிநேமியெழுந்தவிர்
சீர்புதைத்தசிறைநெடுநாளுறி
யேர்புதைத்தவிவ்வோவியத்தீங்கவன்
கார்புதைத்தமினொத்தெழக்காண்மினே.

உரை. — மீளவு மத்தமித்துக் கடலிற்புதைத்தவிரவியின்
றேருதயத் தக்கடல்விட்டொளிசெய்வதுபோல நெடுநா
ள்ச்சிறையிற் புதைத்திருந்தவாணரனு மச்சிறைவிட்டழகு
பெறவிங்கே யெழுதினபடி மேகத்துட்புதைத்திருந்தமின்
னலெழுந்துதோன்றியவொளியோ டவனுமெழுந்து விளங்
குந்தன்மைபாருங்களென்க. (௮௫)

மன்னனன் றுமனங்கெடக்கண்டவை
சொன்னதன்மையிற்றொல்லுரைநூலினர்
தன்னமைச்சர்தபோதனர்கேள்விய
ரின்னதென்றுகண்டெய்திலராயினர்.

உரை. — ஆணரன் சிறைவிட் டொளிபெறவெழுந்ததன்மை குறைசொல்லத்துடங்கினன். அதெத்தன்மைத்தோவெனில்: அந்நாளிலே யங்கேயாண்ட வரசன்றன்மனங்குழைந்துகெடும்படி கண்டவதிசயத்தைத் தான் சொல்லிக்காட்டினவளவிலே நூலுரைப்போருந் தன்மந்திரிமாரு முனிவரு நற்கேள்வியுடையோரு மட்டின்றிக்கூடி யாராய்ந்தவிடத்தி லதின்னதென்று கண்டுபிடிக்கமாட்டா திருந்தாரென்க. (௮௬)

குலையமன்னவனூற்குரவர்தமின்
மலையமுன்சிறைவைகியமைக்குணன்
கலையதிந்தெனவாணரன்கண்டறிந்
துலையவேண்டிலவென்றுமற்றோதினன்.

உரை. — அரசனங்ஙனமஞ்சாநிற்க நூலுடைப்பெரியோர்தம்முள்ளொவ்வாமற் பொருதாநிற்கவதற்குமுன்சிறைச்சாலையிலிருந்த மைக்குணனென்பவ னங்கேயாணரன் சந்திரன்கலையினுந் தெளிந்தவுணர்வுடையனாகக் கண்டறிந்தமையாலஞ்சிவருந்தவேண்டாவென்று மீளவுஞ் சொன்னானென்க. (௮௭)

தூயதன்மையுளத்துறுங்காட்சியா
லாயதன்மையிலாவதறிந்துளாய்த்
தீயதன்மையிலாச்சிறைபட்டுறை
நேயவாணரற்கூவுமினீரென்றான்.

உரை. — தூயதாகத்தெளிந்த மனத்திலோங்கியகாட்சியாற் போனபொருளையறிந்ததன்மையோடு வரும்பொருளையறிந்தவனாய்க் குற்றமொன்றின்றிச் சிறைச்சாலையுட்கிடந்தவனா யென்னோடுசிநேகமுள்ளவனா யாணரனென் றொருவனை யழையுங்களென்றான் மைக்குணனென்பானென்க. (௮௮)

மன்னனுட்படவையகம்வாழ்வுற
வன்னவத்தெழுமெல்லியொத்தாணரன்
சொன்னவச்சிறைநீத்துத்தொழக்கலன்
மின்னமிக்கெழும்வேந்தன்விளம்பினன்.

உரை. — மைக்குணன்சொன்னதற் கரசன்சம்மதித்த மையாற் பூவுலகெல்லாம்வாழும்படி கடலைவிட்டெழுந்தபருதியைப்போல வன்றுசொன்னசிறையைவிட்டாணரன்வந்து மன்னவனடியைவணங்காநிற்க வணிந்தவாபரணங்கள் மின்னும்படி சிங்காசனத்தெழுந்திருந்த வரசன்சொன்றனென்க. (௮௬)

ஒளிபட்டொள்பளிங்கொத்திழிவின்றிநீ
களிபட்டேற்றியதேவன்செய்காட்சியாற்
றெளிபட்டிங்கிவர்தேரிலகண்டவை
வெளிபட்டோதவிளம்புவல்கேளென்றான்.

உரை.— அரசனெங்ஙனஞ்சொன்னானென்னில்: செஞ்சுட்டொளிபட வொளிவிடுங்கண்ணாடியொப்ப நீகுறையின்றிமகிழ்ந்துவணங்கிய கடவுள்தந்தகாட்சியாற் றெளிந்தவுணர்வுடையோனே! இவரெல்லாரு மொருங்குடன்கூடியுணராவழிநான்கண்டவற்றைநீவெளியாக்கும்படி நான்சொல்லக்கேட்பாயாகவென்றானென்க. (௯0)

பூமலிந்தபொழிற்கணின்மேய்ந்தவே
றாமலிந்ததுகண்டதவ்வாவெலா
மீமலிந்துமெலிந்தபின்னேழ்பசு
காமலிந்துவிழுங்கல்கண்டேனென்றான்.

உரை. — பூமலர்மலிந்தகாவிடத் தேழுபருத்தபசுக்களை மேயக்கண்டேன், அதின்பின்ன ரீமொய்த்த வேழிளைத்த பசுக்கள்வந்து முன்கண்டநல்லபசுக்களெல்லாவற்றையு மிழுங்கவுங்கண்டேனென்றானரசனென்க. (௯௧)

பொழுதெலாந்தனக்கோர்பொழுதாயெலாம்
பழுதிலாவுணரும்பரநாதன்செய்

வழுதிலாத்தெருளால்வகுப்பேனெனாத்
தொழுதவானரன்பின்னிலைசொற்றினான்.

உரை. — அரசன்சொன்னதைக்கேட்டவானர னவனை வணங்கிமறுமொழிசொல்வான்: நிகழ் வெதி ரிறப்பென்னு முக்காலமுந் தனக்கொருகாலமாகப் பழுதொன்றின்றியெ ல்லாவற்றையுந் தெளிவோடறிந்தபரமநாதன்றந்த பொய் யாததெருட்சியோ டிங்ஙனநீகண்ட தின்னதென்று சொ ல்லுவேனென்று மீளவுஞ்சொன்னானென்க. (௬௨)

பருத்ததென்றுமுன்பார்த்தவேழாவெனிற்
கருத்தரும்புயல்காலம்பொய்யாமையா
திருத்தகாவிளைவோங்கியேழாண்டொரு
வருத்தமின்றியும்வாழுமிந்நாடன்றே.

உரை. — நீமுன்கண்ட பருத்தவேழுபசுக்க ளேதென்னி ல்: மழைகருவாகக்கொண்டமேகங்கள் பொய்யாமற்பெய் து காடெல்லாமிகவுமேழுவருடமாய்விளைந்து வருத்தமொ ன்றின்றி யிந்நாடெல்லாம்வாழுமென்று காட்டினவென்க. (௬௩)

மெலிவொடுற்றபின்னேழ்நிரைவேய்ந்துதா
மலிவொடுற்றமுன்னேழ்நிரைமாந்தலாற்
பொலிவொடுற்றவேழாண்டுளபூரியைச்
சலிவொடுற்றவேழாண்டுகெடுக்குமால்.

உரை. — மீளவும் பின்புகண்டமெலிந்தவேழுபசுக்கள் வ ந்து முன்றோன்றிய வேழுபருத்தபசுக்களை விழுங்கினதனா ல் விளைவிற்பொலிந்த முன்சொன்னவேழுவருடத்துப் பெ ருஞ்செல்வமாகவிளைந்து மிஞ்சினதெல்லாவற்றையும் பின்பு விளைவின்றிப்பஞ்சமுகமாய்வரும் வேறேழ்வருடமுண்ணு மென்று காட்டினதென்க. (௬௪)

கண்டதெண்ணிக்களங்கமற்றுற்றவே
மண்டவண்மையின்மன்னரியல்பரோ
வண்டமன்னனளித்தவிக்காட்சியைக்
கொண்டதன்மையிற்கோதறவாண்டினே.

உரை. — கண்டவத்தறைமனதிலெண்ணிக் களங்கா ததற்கு ரியதாயகாரியங்களை நடத்தலே மிக்கவல்லமையுள்ள வரசர்க் கியல்பாம், வானரசாகியகடவுளுனக்குத்தந்த விக்காட்சியைக் கொண்டு குறையின்றி நடத்தாள்வாயாகவென்க. (௬௫)

மலிந்தவாண்டினிலீட்ட லுமற்றவை
மெலிந்தவாண்டில்வகுத்தலு மிக்குறும்
பொலிந்தவாண்மைபொருந்திடத்தேருதி
வலிந்தநாட்டுயிராயமன்னுவென்றான்.

உரை. — அக்காட்சியைக்கொண்டெங்ஙன நடத்தல்வேண் டுமென்னில், மலிவோடுமுன்வருமேழுவருடத்தில் மிஞ்சின தைக்கூட்டவு மீனவுங்கூட்டியவற்றை மெலிவோடுபின்வரு மேழுவருடத்தில் வகுக்கவும்வேண்டு மித்தன்மைத் துனக்கு வரும்பொலிந்தவாண்மையின்மாட்சிமையடையும்படி தெ ளிவாயாக வாண்டுதாங்கியநாட்டிற்குயிராகநிற்கு மன்னவ வென்றுசொன்னு னரசனென்க. (௬௬)

வேறு.

நூல்வழியுரைத்தநீஞ்சொல் றொய்யிதழ்விழ்த்ததேன்
போல்
வேல்வழிமின்கைவேந்தன் வியப்பினேடிமிழிற்கேட்டுப்
பால்வழிநுரையம்பைம்பூப் பழித்தபொற்றுகிலைப்போர்த்து
நால்வழியணிகள்பூட்டி நயப்பெழத்தழுவினானே.

உரை. — அங்ஙன மாணரன்றேவநூலின்வழியா லறிந்து சொன்னவினியசொற்களை மலர்ந்தபூவிதழ்கொப்பளித்ததே னெப்பாக வேந்திய வேலின்வா யொளிவிடுங்கையின்வேந்த னதிசயப்பட் டினிதாய்க்கேட்டுப் பாலினுரையினு மழகி யபூவினு மெல்லியபொன்னுடையாணரன்மேலேபோர்த்து நால்வகையாபரணங்களைப்பூட்டி மகிழ்வெழ மார்போட ணைத்துத்தழுவினனென்க. (நால்வகையணிகளாவன: காத ணி, மார்பணி, கையணி, காலணியென்னுமிவைநான்குமெ ன்க.) (௬௭)

உன்னலால்தெய்வமல்லா லுணர்வரும்பயன்கள்சொ
ன்னாய்
நின்னலால்பிறர்கள்யாரே நிறைத்திவைசெலுத்தும்பாலா
ரென்னலால்பிறர்கள்யார்க்கு மிறைவனீயுலகங்காக்க [ன்.
மன்னலாவெலவையுற்றத்தேன் வாய்ந்தநூல்வடிவோயென்றா

உரை.—அங்ஙன மாணரனைத்தழுவி யரசன்சொல்வான்: உன்னையல்லாமலு மொருதெய்வமல்லாமலு மொருவ னறிதற்கரிய வுரைப்பயன்களைச் சொன்னாயே யினியுன்னையல்லா திவற்றை நிறைவேற்றும்படி வல்லவரொவருண்டோவில்லை, ஆகையா லினிநாளுண்டவுலகமெங்கு மென்னைத்தவிர மற்றவர்க்கு மிராசா நீயேயாகி நன்றாயுலகங்காக்கும்படியரசொழிய மற்றதெல்லாவற்றையு முன்கைவசமாக்கித்தந்தேன் மாட்சியிற்சிறந்த நூலின்வடிவாக நின்றவனே யென்றா னரசனென்க. (௯௮)

வார்வளர்முரசிற்சாற்றி வளர்சிறப்பியற்றிப்பின்னர்
போர்வளர்சேனைசூழ்கப் புகர்முகத்தெருத்திற்பைம்பொன்
னீர்வளர்தவிசினேற்றி நிரையினிங்கெழுதப்பட்ட
சீர்வளர்வண்ணத்தங்கண் சிதைவிலான்றோன்றினானே.

உரை.— அங்ஙன மரசன்சொன்னதை யெவருமறியும்படி பறையடித்தெங்குமறிவித்து மிக்கசிறப்புகளை யாணரற்குச்செய்ததற்பின்பு போரிற்சிறந்ததானை புடையிற்சூழ்ந்துவர மதயானையெருத்தத்துப் பசும்பொன்னணையின்மே லவனையேற்றி யொழுங்குபட விங்கேயெழுதப்பட்டபடி சிதையாமரபிற்சிறந்த வாணரனங்கே விளங்கித்தோன்றினானென்க. (௯௯)

அருளொன்றுஞ்சார்ந்தநல்லோ னருஞ்சிறைபட்ட
போழ்தும் [லிந்தபோழ்தும்
பொருளொன்றுஞ்செங்கோலோச்சிப்பொருனாய்ப்பொ
மருளொன்றும்புலம்பல்தானு மகிழ்வுமுட்டோன்றலின்றித்
தெருளொன்றுமுணர்வின்மிக்கோன் றிருவுளமெனவுட்டே
ர்ந்தான்.

உரை. — இவையெலா மிங்ஙனமாகையி லாண்டவன்செய்யுத்தலையொன்றிலே மனஞ்சார்ந்த நல்லோனாகியவாணரன் குற்றமின்றிச் சிறையிற்கிடந்தபொழுதும் பின்பொளிர்ந்த பொற்செங்கோலேந்தியானுஞ் சிறப்பிற்பொலிந்த பொழுது முள்ளமயங்க முன்புலம்பாமலும் பின்மகிழாமலுந் தெளிந்தவுணர்வின் மிக்கவனாகி யத்துன்பமு மிவ்வின்பமு மிரண்டொன்றாகத் திருவுளமென்று மனதிற்றெளிந்தானென்க. (௰)

பொலந்தருவளர்த்ததன்மை புடையெலாநிழற்றும் போல
நலந்தருமணிசெய்பைம்பொன் னற்றவிசுயர்ந்ததானும்
வலந்தருசெல்வத்தன்பும் வளர்த்தெலாவுயிர்கள்பேணி
நிலந்தருமினிமையுண்டு நின்றதேழாண்டுசேர்த்தான்.

உரை. — அப்பொழு துயர்ந்தபூமரம்வளர்த்ததன்மைத் தெங்கு நிழலைச்செய்வதுபோல வாணரனுந் தானமருமெபரும்படி மணியாற்செய்த பசும்பொற்சிங்காசனத்துயர்ந்து வல்லமையோடு தனக்குச்செல்வம்வளர்த்தவளவிற்குத் தயையும்வளர்த் துயிரெல்லாவற்றையும்பேணிக் குறையின்றியேழுவருடமும் பூமிவிளைந்து மிகவுந்தத்தவினிமையெவரும் நிறையவுண்டு மிஞ்சிநின்றதெல்லாவற்றையுஞ் சேர்த்திவைத்தானென்க. (௰௧)

பால்கலத்துணுமேழாண்டாய்ப் பசியுயிருணுங்காலா [கிக்
கால்கலந்தொழுகுமாரி கான்றவோர் துளியுமின்றி
ஞால்கலத்துனைத்தவண்ண நொந்துயிரெவையுமெஞ்சச்
சேல்கலந்திழிநீர்நாட்டிற் சேர்த்தவைவகுத்தல்செய்தான்.

உரை. — அங்ஙனம் பாலோடுண்டமவிந்தகாலத் தேழுவருடமுமாகிப்போனபின்பு வுயிர்களையுண்ணும்பசிக்காலம் வந்து காற்றோடுபொழியு மாரிக்காலத்தருமழைத்துளி யொன்றின்றி யாணரன்றேவ நூற்படி முன்சொன்னதன்மைத் தெல்லாவுயிரு நொந்துநைந்துமெலியாதிற்க வப்பொழுதவன் முன் மச்சங்கள்குதித்தோடு நீர்ப்புனற்பெருக்கத்துமிக

விளைந்த வந்நாட்டிடை தான்சேர்த்தியயாவையுமுறையோ
டெவர்க்கும் வகுக்கத்தொடங்கினனென்க. (௱௨)

பார்முழுதுண் ணுங்கூர்த்த பசிதனையுண் ணுமன்னன்
சீர்முழுதகன்றவன்பிற் சிறப்புறவளித்தநாடே
சூர்முழுதழுங்குமற்றத் தொலைத்தநாடெய்யவெய்தித்
தார்முழுதிலங்குமார்பன் றலைமைபாங்கிருவருற்றார்.

உரை. — அங்ஙன மந்நாளிலே பூவுலகெல்லாத்தையும் பசிதானுண்ணுநிற்க வப்பசியையுண்ணுமாணர னளவிறந்தவன்பின்சிறப்பிற்றுணண்டளித்த வெசித்துநாட்டைநாடிப் பசித்துன்பத்தால்வருந்திய மற்றத்தொலையினின்ற நாடெல்லாருமுயிர்பிழைக்கும்படிவந்து மணிமாலையணிந்திலங்கிய மார்பனாகியவாணரன்றனது தமையனருள் ளிருபேரும்வந்தாரென்க. (௱௩)

உற்றவர்தம்மைத்தானேயுணர்ந்துகண்டிருப்பத்தன்னை
மற்றவருணர்கிலாமை மதித்தனனெவர்நீர் நும்மைப்
பெற்றவனொவ்வொந்நாடு பிறந்ததெத்துணையென்றேத [ன்.
விற்றவர்கேட்டுத்தானை யிறைஞ்சவீழ்ந்தொருவன்சொன்ன

உரை. — அங்ஙனம் வந்ததமையனரையாணர னறிந்து-அவர்தன்னையறியாதொன்று மனதிலெண்ணித் தானுமறியாதவனைப்போல நீங்களாரென்று நுங்கள்தாய்தகப்பனாரொன்று மிருந்தநாடெந்நாடென்றும் பிறந்தவரெத்தனையென்று மவன்கேட்க விதெல்லாங்கேட்டவ ரவன்பாதத்தைவணங்கி யவருளொருவன் சொன்னனென்க. (௱௪)

எற்கொண்டகனயநாட்டி லியூதர்நாமியாக்கோவென்
பான்
முற்கொண்டகுழலாளீன்ற முளைகளீராறுமானோம்
பிற்கொண்டநல்லாடந்த பிள்ளையொன்றகன்றான்பின்னர்
விற்கொண்டதரளமொப்ப மீளவொன்றுதித்ததென்றான்.

உரை. — ஆணரன்கேட்டதற் கொருவ னிங்ஙனமறுமொழிசொன்னனென்னில்: நாமடைகியகனயநாட்டிலிருக்கு.

ம் யூதர்குலத்தோ ரெங்கள்பிதா யாக்கோபென்பவன்கொண்டமுதற்றார மீன்றபத்துமக்களினுட்பிறந்தோ நாங்களிருவருந் தகப்பனுக்குவந்த பின்றாரத்துப்பிறந்த வொருபிள்ளைகாணாதேபோனா னவன்போனபின்பு விளங்கியமுத்துப்போலவேறேபிள்ளைபிறந்ததென்றானென்க. (௱௫)

இனையனகேட்டுத்தன்னை யீன்றனள்பின்னரீன்ற
தனையனைக்காண்டவெஃகித் தந்தபின்மகன்வந்தல்லா
றினையனநாட்டிற்போக்கே னுணவினியளியேனென்று
வனையனசெல்வன்கூறி யழுங்கமற்றொருவன்போனான்.

உரை. — சொன்னதெல்லாவற்றையுமரணரன்கேட்டுத் தன்றாய் பின்புபெற்ற தம்பியைக்காணவேணுமென் றாசையினான் மறுமொழிசொன்னவனைப்பார்த்துரைப்பான்: எல்லாருக்கும் பின்புபிறந்தபிள்ளை யிங்கேவந்தாலொழிய வுன்னையந்நாட்டிற்குப் போகவொட்டேன் மீளவுமுங்களுக்குவேண்டியவுணவுகளையு மினிக்கொடேனென்றான், செல்வனாகியவாணரன் சொன்னதைக்கேட்டு வேறொருவன்வருந்திப்போனானென்க. (௱௬)

வெதிபட்டார்மதுவினாட்டில் விளைந்தநோய்கேட்ட
தந்தை
பொறிபட்டாலலர்பூவையும் போலுளமழுங்கவாடி
மறிபட்டான்மீட்கவேண்டு மறுவுணவனையலவே
வெறிபட்டாருயிர்பேர்த்தென்னவிளமகன்போதவென்றான்.

உரை. — அங்ஙன மொருவன் றன்மனையிற்சென்று வாசனைபொழி மதுநிறைந்தவெசித்துநாட்டி னோய்விளைதற்காரணமாகநடந்தசெய்தியைக்கேட்டுமுதிர்ந்ததாதைதீயிற்போட்ட பூமலர்றையுமாறுபோலத் தானுமனதில்வருந்திவாடி யங்கேமறிபட்டவனை மீட்கவுந் திரும்பித்தமக்குவேண்டியவுணவுகளையடைப்பிக்கவும் வேண்டி யெறிந்தகூர்ந்தவேல்பட்டு நிறையுயி ருடலைவிட்டுப்பெயர்ந்தாற்போல விளமகனைப்போகட்டென்றான் றகப்பனென்க. (௱௭)

எஞ்சநொந்தழத்தாய்தந்தை யிரிந்ததந்நாளில்வந்த
பெஞ்சமினென்னுந்தோன்றல் பெயர்ந்துபோய்ப்பவளக்
யஞ்சமின்முகத்துநிற்ப வாணான்முகமனோக்கி [குப்பை
விஞ்சவன்புருகிப்பின்னர் விருந்திவர்க்கோம்பினானே.

உரை.— அங்ஙனந் தாய்தகப்பன்மெலிந்துநொந்தழாநிற்கச் சாய்ந்ததம்வயதிலேவந்த விளமகனாகியபெஞ்சமினென்பான் சிலதமையனாரோடுகூடப்பெயர்த்துபோ யெகிப்துநாட்டிற்சென்று பவளக்குப்பையினும் விளங்கியமுகத்திலாணரன்முன்னேவந்துநிற்ப வவனையாணரனினிதாய்நோக்கி மனதிற்பொங்கிய வன்பினாலுருகித் தானின்னானென்று காட்டாம லவர்க்கு விருந்தோம்பினானென்க. (௱௮)

ஓம்பியவிருந்தில்வைத்த வொளிமணிக்கலமுமன்னார்
சாம்பியவிலையின்பொன்னுந் தம்பிகண்ணொளித்துவைப்பக்
காம்பியவவரும்போகிற் களவர்கைப்பிடியினென்னக்
கூம்பியபடைவர்மொய்ப்பக் குழைவுறக்குலைந்துநின்றார்.

உரை.— அங்ஙன மாணர னவர்க்கோம்பியவிருந்திலே வைத்திருந்தமணிப்பாத்திரமு மவருணவுகளைக்கொள்ளும்படி விலையாகக்கொண்டுவந்தபொன்னுந் தன்றம்பிகிட்ட வவனுமறியாம லொளிவாகவைக்கச்செய்து - அவரையனுப்பியொடுங்கி யவரும்போகையிற் சேவகரைவிட்டுக்கள்ளரைப் பிடியுங்களென்று சேவகர்மேலேமொய்ப்ப வவர்குழைந்தஞ்சிநின்றாரென்க. (௱௯)

புரந்தநாடொழியேமென்பார் பொதியெலாநோக்கீ
ரென்பார்
கரந்தநாமல்லவென்பார் களவனைக்கொண்மினென்பார்
பிரந்தமானவர்சூழ்நாடிப்பெஞ்சமினிடைக்கள்வுண்டாய்ப்
பரந்தமாமுகில்விட்டேறு பட்டெனமயங்கிநின்றார்.

உரை.— அங்ஙன மவருளத்தஞ்சிநின்றபின்பு வுணவுகளைத்தந்துதம்மையிரட்சித்த விந்நாட்டைவிட்டினம்போ

னில்லையே யென்பார், எங்கள்பொதிகளைச் சோதித்துப் பாருங்களென்பார், திருடினகள்ளர் நாங்களல்லவென்பார், கள்ளனகப்பட்டாலவனைக்கொல்லுங்களென்பார், இவையெலாஞ் சொல்லிக்கொண்டுவருகையிற் கூப்பிட்டுத்திரிந்தசேவக ரெல்லாவற்றையுஞ்சோதித்தவளவிற் பெஞ்சமினென்னுமிளையவனிடத்துக் களவிருந்ததனாற் பரந்தமேகத்தினின்று விழுந்தவிடிபட்டாற்போல வெல்லாரு மயங்காநின்றாரென்க. (௱௰)

தீணர்ந்தவிம்மகனும்போகிற் றாதைதாயுய்யாரென்பார்
புணர்ந்தவெங்கொடுமையால்முன் புலம்பியாணரன்கையே
ற்றி [மென்பார்
யுணர்ந்தசொற்கேளேமென்பா ருயிர்கொல்லாக்கொன்றேம
மணர்ந்தவெஞ்செயிர்க்கிதென்பார்வந்ததீங்குரியதென்பார்.

உரை.— வந்தசேவக ரவரெல்லாரையும்பிடித்தாணரன்முன்பாகக்கொண்டுவிடப்போகையிலவர்தம்முட்பேசிமுன்னாணரன்போனதினான் மிகவும்வருந்தின தாய்தகப்ப னிவ்விளையமகனும்போனாலவர்பிழைக்கமாட்டாமற் சாவாரென்பார் ஐயோ! முன்னே நாஞ்செய்தகொடுமையானொந்து புலம்பியெங்கள்தம்பியாணரன் கைகூப்பி நம்மைவணங்கிச்சொன்னவார்த்தைக்கிரங்காமற் கேளாதிருந்தோமேயென்பார், அவனுயிரைக்கொல்லாமலன்றுகொன்றோமேயென்பார், அன்றுசெய்தபாவத்துப்பயனிதுவென்பார், வந்தவிப்பொல்லாங்கெல்லாநமக்குரியதாய்த் தகுமென்பாரென்க. (௱௰௧)

பேர்நலம்பொறித்தகுன்றிற் பெருவிளக்காகப்பைம்
பொன்
னூர்நலம்பொறித்தசீய வணையிலாணரனின்றோங்கத்
தார்நலம்பொறித்தமார்பிற் றழற்சினம்புழுங்கினாற்போற்
கூர்நலம்பொறித்தவன்பிற்கொடுத்தநன்றொழிந்தீரென்றான்

உரை. — அங்ஙன மவரெல்லாரு மாணரன்சந்நிதியில் வந்துநிற்ப, அழகுபெரிதுற நன்றாய்ப்பொறித்த மலையினுச்சிவைத்த பெருஞ்சுடர்விளக்குப்போலப் பொன்னாலெழுத்

திட்டாற்போல மணியலங்கரித்தசிங்காசனத்துயர்ந்துபொ லிந்தசிறப்பிலாணரனிற்ப, ஒளிமணிமாலையு மதுமலர்மா லையுங் கலந்தவடிவோடெழுதப்பட்டதன்மார்பிலே யழன்ற கோபமெழுந்து புழுங்கினதன்மைகாட்டி நானுங்களுக்குக் காட்டிய மிக்கவன்பிற்பொங்கிச் செய்தநன்மையொழிந்து மறந்தீரோவென்றா னாணரனென்க. (௱௰௨)

உய்வகையின்றியண்ண ருயிரிலாதடிவீழ்ந்தேற்றிப்
பொய்வகைச்செயிரேதேனும் புகரிலோர்தம்பிநோக
மைவகைக்கொடுமையால்யாம் வஞ்சமேமுடித்தபாவ
மெய்வகைப்பயத்ததீமை விளைந்ததின்றையாவென்றார்.

உரை.—அங்ஙனங் கோபித்தவாணரன்முகத்து- அவனைய றியாமலண்ணன்மாரெல்லாருந் தப்பிப்பிழைக்கும்வகையி ன்றி யுயிர்கெட்டாற்போலவேங்கி யவன்பாதத்தில்விழுந்து வணங்கி, ஐயா விக்குற்றமெங்கள்மேலிராமற் பொய்யான குற்றமிதுவென்றும் முன்னாளிலே குற்றமில்லாதவெங்கள் தம்பியொருவன் மிகவுநோம்படி மயங்கி நாங்கள்கொடிய தாயவர்க்குவஞ்சனைசெய்து நாமன்றுமுடித்த மெய்யானபா வம்பயத்த பொல்லாங்கு நீதியின்படி யின்றுவிளைந்ததென் றாரென்க. (௱௰௩)

மணித்திறத்தெழுந்ததோளான் மயங்கிவர் துயரங்கண்டு
பிணித்திறத்திசைத்தசொல்லும் பெட்பெழக்கேட்டுத்தானு
மணித்திறத்திலங்குமார்பி லன்பினையொளிக்கலாற்றாத்
துணித்திறத்தலர்ந்தபூங்கண் டுளித்தநீர் தூவிற்றன்றே.

உரை.—அப்பொழுதொளிமணியாற் றிரண்டுயர்ந்ததோ ளானாணரனண்ணன்மார் மயங்கிவருந்தாநிற்குந் துயரத்தை க்கண்டும் பொங்கியநோய்மிகுதியா லவர்சொன்னதையன் போடுகேட்டுந் தானு மெரிமணிமாலையால் விளங்கியமார்பி லந்நேரமட்டு மொளிவாகவைத்த வன்பினை யினித் தானொளி க்கமாட்டாம லொளிமுகத்தலர்ந்த மலரொத்ததன்கண்கள் துளித்தநீ ரவ்வன்பினைப் புறத்துக்காட்டித் தூவிற்றென்க. (௱௰௪)

அட்டெனநீவிர்விற்ற வாணாளனவன்றானென்
றிட்டெனத்துணுக்கென்றன்ன ரிடித்தகார்கிழித்தவேறு
பட்டெனவுயிர்பட்டாற்போற் பாசுறைகுளிப்பவின்னீர்
மட்டெனமலர்க்கண்டேவ மார்புறத்தழுவினானே.

உரை.—கொல்லுறதன்மையானீங்கள்விற்ற வாணாளனன்றா னேயென்றவன்சொன்னவளவிலேயவ்வில்லாளுந் துணுக்கெனவஞ்சி யிடித்தமேகத்தைக் கிழித்துவீழு மிடிபட்டதுபோல வுயிர்கெட்டுத் துன்பசாகரத் தமிழ்ந்திநிற்ப மதுவின் றன்மையான்மலர்ந்த தன் கண்ணினிதாய் நீரைப்பொழிய வாணாளனவனைமார்போடணைத்துத்தழுவினானென்க. (௱௰௫)

ஈதுநீர்விதைத்தவேலி செல்வநீர்விளைத்ததன்றே
கோதுநீர்நினைத்தவண்ணங் கோதுநான்குணிக்கல்செய்யேன்
றுதுநீரொழுகுஞ்சாகி தனைக்கொய்வார்நிழற்றும்போல
யாதுநீரஞ்சல்வேண்டா வியல்புறவளிப்பனென்றான்.

உரை.—ஆணரனங்ஙன மவனைத்தழுவிச்சொல்வான்: என்னைக்கெடுக்கநீங்கள் நினைத்தவழியே செல்வத்துடையனானேனென்றாற்போல நீங்கள்பொல்லாங்கு விளையாகக்கொண்டு விளைத்தவயலே செல்வத்தின்றன்மைவிளைத்ததல்லோ, நீங்களெனக்குத்தின்மைசெய்யநினைத்தபடி யுங்களுக்குநான் தின்மைசெய்யேன், பூத்தமலர்வாய்மதுப்பொழிமரமே தன்னைவெட்டுவார்க்குங் குளிர்நிழற்செய்வதுபோல நீங்களொன்றிற்குமஞ்சவேண்டா நானுமினிதாயுங்களைரட்சிப்பேனென்றானென்க. (௱௰௬)

தூம்புடைத்தடக்கைமாவுந் துரகமுந்தசமுஞ்சாடுங்
கூம்புடைக்கொடிஞ்சித்தேருங்கொடிகுடைபலவும்போக்கி
வீம்புடைப்புலமைநீரான் விளித்ததாய்தாதைதந்தாள்
தேம்புடைக்கண்ணிசாற்றித் தெண்டனிட்டுவப்பச்செய்
தான்.

உரை.—அங்ஙன மாணரன்சொல்லி யவர்க்காறுதலைச்செய்தபின்னர் துளைத்தகையுடையயானைகளுங்குதிரைகளுந் தன்

டிகைகளும் வண்டில்களு மொட்டுயர்ந்தகொடிஞ்சித்தேர்களுங் கொடிகளுங் குடைகளுமிகுதியாய்ப்போகவிட்டு மேன்மையிற்சிறந்த வுணர்வுடையாணரன் றாய்தகப்பனை யழைப்பித்து வந்தவர்பாதத்து வாசமதுமலர்மாலையைச்சாற்றித் தெண்டனிட்டு மனமகிழும்படிசெய்தானென்க. (௱௰௭)

தான்மலர்முகத்திலோடித் தாதைதாய்தமர்கள்யாருங்
கோன்மலரடிமுன்காட்டிக் கோன்றமராகநோக்கித்
தேன்மலர்மருதவேலிச் சிறப்பெழுநாட்டைத்தந்து
கான்மலர்விரிகாவன்ன கடவுள்செய்நிழலில்வாழ்ந்தார்.

உரை.—மீளவுமாணரன் மகிழ்ச்சிமலர்ந்தமுகத்துடனே போய்த் தன்றாய்தகப்பன்கூடப்பிறந்தாரெல்லாரையு மிராசாமலர்ப்பாதத்திற்கொண்டுவிட்டுக்காட்டியவளவிலேயிராசாவு மவரைத்தன் னுறவின்முறையாரைப்போல வினிதாய் நோக்கி மதுப்பொழிமலரவிழ் மருதவேலிச்சிறப்பிற்பொலிந்த நாட்டைத்தந்து வாசமலர்பூத் தகன்றசோலையின்றன்மையா லாண்டவ னவர்க்குச்செய்தநிழலிலே மகிழ்வோடுவாழாநின்றாரென்க. (௱௰௮)

பணிமுகத்துளைத்தநீராற் பைங்கதிர்தெளித்தகோலான்
மணிமுகத்தெழுதப்பட்ட வளங்கதையொழுங்கினோக்கீர்
பிணிமுகத்திறைவன்செய்யும் பெரும்பயனருளினாட்டி
லணிமுகத்தொருவன்செய்த வறமுலகளித்ததென்றான்.

உரை.— நான்சொல்லிக்காட்டியதன்மைத்துக் கதிரைத் தெளித்தாற்போலச் சித்திரக்கோலா லிங்கேமணியின்சாயலாயெழுதப்பட்ட விக்கதையாவையு மொழுங்குபடப்பார்த்துக்கொள்ளுங்களென, அங்ஙனந் துன்பநோய்வந்ததன்மைத் தாண்டவன்செய்யுந்தயையின் பெரும்பயனாலல்லோ, நான்முன்சொன்னபடி நாட்டிலிருந்தொருவனழகுபெறச்செய்தவறமே யுலகெலாங்காத்ததென்றான் குசையென்க. (௱௰௯)

வேறு.

சேற்றுறைதாமரை விரிசெவ்வேடுவான்
வீற்றுறைவெங்கதிர் விழுங்கிற்றுமென
நூற்றுறைப்புலமையோ னுண்டன்வாயுரை
யூற்றுறையினிமையம் முனிவருண்டுளார்.

உரை:— அங்ஙனம் விரிவாகக் குசைசொன்னதெல்லாவற்
றையு மம்முனிவ ரெங்ஙனம் விரும்பிக்கேட்டாரென்னில்:
சேற்றிற்கிடந்த தாமரை தன்செவ்விதழ்வாய்திறந்து வான்
வீற்றிருக்கும் பருதியின்கதிரையுண்டதுபோல நூலின்று
றையாம் புலமையிற்சிறந்தகுசை தன்வாயவிழ்ந்த நுண்ணு
ரையூற்றதாகி யுமிழுமின்பத்தை யங்கேயிருந்தமுனிகளெல்
லாருமுட்கொண்டு விரும்பிக்கேட்டாரென்க. (௱௨௰)

உண்டதேனருகுநின் றுகுத்தியாழொலி
கொண்டதேனினிதிசை பாடுங்கொள்கைபோற்
கண்டதேயுணர்ந்தெனக் கனிந்துகேட்டன
பண்டதேயுணர்ந்துபற் றலவுமோதினர்.

உரை.— அங்ஙனமவர் குசைவாய்மொழியினிதாய்க்கேட்
டபின்னர் மலர்வாய்மதுவையுண்டபின் பதினருகேநின் றம்
மதுவைக்கொப்பளித்தாற்போல வீணைவாய்க்குரலோடுவண்
டினமினிதாய்ப்பாடுந்தன்மையா லம்முனிவருங்கண்டறிந்
தாற்போலத்தெளிவோடுகனிந்துகேட்டபழங்கதையையுண
ர்ந்து பற்பலவுஞ்சொல்லத்துடங்கினரென்க. (௱௨௧)

கோன்செயுந்துணையுயிர் கொல்லுங்கூற்றமாங்
கான்செயும்வனஞ்சுடு மமிழ்துங்காளமாம்
வான்செயுமருளிலான் மனத்ததுள்ளதே
ஊன்செயுங்கோட்டிடை யுய்வதாமென்பார்.

உரை.— அம்முனிவரெங்ஙனஞ் சொல்லத்துடங்கினரெ
ன்னில்: வானுலகாண்டவன்றன்றயை யுதவியில்லாதாயிற் பூ
வுலகரசராதாவுதவாம லதுதானுயிரைக்கொல்லுங் கூற்ற

றுமே, வாசமதுமலர்ச்சோலையுங் குளிராமற்சுடுமே, நல்ல மிர்தந்தானு நஞ்சாமே, ஆண்டவனருளுண்டாயி னானையுமி ழு மதயானைக்கொம்புகளுனியிற்பட்டும் பிழைத்துத்தப்பு ம்படி வழியுண்டாமென்பாரென்க. (௱௨௨)

வீடுறவேண்டில்நீ விதித்த நூலலாற்
காடுறவொளிக்குதல் கயங்குளிக்குதல்
நீடுறவிழுசடை நீட்டல்மற்றவை
யீடுறப்பயனிலா வெளிமிதாமென்பார்.

உரை.— மீளவும் பரமகதிவீட்டைச் சேருதற்காசையு ண்டாயி னீசொன்னவிதிநூலன்றிக் காட்டில்வந்தொளித்த லு நாண்முறைபலமுறை பலநீர்குளித்தலும் பெருஞ்சடை நீண்டு தூங்கவளர்த்தலு மித்தன்மைத்துள்ள மற்றவையு மா ட்சிமைபெறும்படி பயனில்லாதறியாத்தன மதுவென்பா ரென்க. (௱௨௩)

சடைவளருருக்கொடு தவிர்கினீர்குளித்
தடைவளர்வனத்திடை யகன்றிலாத்திரித்
திடைவளர்கனிகளோ டிளங்கிழங்குணு
முடைவளர்கரடிகள் முனிவரோவென்பார்.

உரை.— நீள்சடைவளர்ந்த வுருவனவாய்த் தப்பாதுநீரா க்குளித்தனவாய்த் தழைத்தகாட்டிலகலாதுதிரிந்தனவாயிடை யிலுள்ளகனிகளையு மிளங்கிழங்குகளையுமுண்டனவா யூத் தைநிறைந்தகரடிகளுமதனான்முனிவரெனவோ வென்பாரெ ன்க. (அறத்தினால்வரு மனமாட்சிமையில்லாதாற் சடைமுத ல் மற்றதியாவும் பயனில்லனவெனக் காட்டலேகருத்து.)
(௱௨௪)

சுரத்திடைத்தழலொடு துறும்புறுக்களு
மரத்திடைத்தூங்கிநற் கனியுண்வாவலு
முரத்திடைத்துறவரோ வுளத்தின்மாண்பலாற்
பரத்திடைக்கிளர்வினை பரியுமோவென்பார்.

உரை.— மீளவுஞ் சுடும்வனத்திடத்து நெருப்போடுநின் று திரியும்புறுக்களு முயர்ந்தமரத்திடை தலைதாழத்தூங்கிக்

கனிகளையுண்ணும் வவ்வால்களும் வல்லமைபொருந்திய துறவோரானவோ? மனத்திற்கறத்திருவ்வரு மாட்சிமையின்றி முன்கொண்டபாவவினைகளொழிந்து கெடுமோவில்லையென்பானென்க. (௱௨௫)

செம்பொறிச்சினத்தபோர்ச் செறுநர்க்கஞ்சலாற்
பைம்பொறியெயிலின்வாய் படியப்பூட்டியுள்
வெம்பொறியெழத்தமை வெட்டிவீழ்த்தெனு
மைம்பொறியடக்கியுள் ளவாக்கொண்டாலென்பார்.

உரை.—மீளவுமொருவன் றன்பஞ்சேந்திரியங்களையடக்கிமனதிலாசைவைத்திருந்தால் மிக்கசினத்தோடுபோர்செய்யவந்தபகைவர்க்கஞ்சிப் பொறித்தமதிலின் கோட்டைவாசலெல்லா நன்றாய்ப்பூட்டினபின்பு தாமேயுள்ளிருந்து பொறியெழக்கோபித்துத் தம்மை வெட்டிக்கொண்டாற்போலவாகுமென்பானென்க. (௱௨௬)

கோலமேவீண்டா குளித்தல்வீண்டா
சூலமேவீண்டா துறவுவீண்டா
காலமேமந்திரங் கதைத்தல்வீண்டா
சீலமேகெடநசை செருத்திலாலென்பார்.

உரை.—முன்னுரைத்தவைமெய்யாகையி லறத்தின்சீலங்கெடும்படி மனத்திலெழுந்தவாசையை யறுத்துவிடாதிருந்தகாலத்துக் கொக்கிறகணிந்து மக்குமணிவடந்தரித்தும் பீவிப்பிச்சமேந்தியு நீறுபூசியுஞ் சடையைவளர்த்து மற்றப்பலமுறையோடு பலகோலங்களெல்லாம்வீணே, பலதுறைநீராக்குளித்தலும்வீணே, சூலமேந்தலும்வீணே, எல்லாவற்றையுந்துறத்தலும்வீணே, காலமேயெழுந்து பலமந்திரங்களையோதலும்வீணே யென்பானென்க. (௱௨௭)

புரைவளர்பகைநமைப் புழுங்கிப்போரிடு
விரைவளர்வனத்திலும் வினைசெய்துட்சுடுங்
கரைவளர்கடற்கணுங் கலக்கமில்லதால்
நிரைவளருளத்தருள் நிறைந்தகாலென்பார்.

உரை.—பாவத்தால்வளர்ந்த பகையேமூற்றி நம்மைக்கோபித்தரும்போர்செய்யுங் காலத் தலர்முகத்துமிழும் வாசபூவனத்தொ துங்கியிருந்தா லுமுளத்தைச்சுடுமே, நல்லொழுக்கத்துயர்ந்தமனதிற் றேவதயையி னருள்நிறைந்திருந்தகாலத்தோவெனி லிருங்கரைசூழ்ந்த பெருங்கடலிடத்துங் கலங்காம னிலைகொண்டிருக்கலா மென்பாரென்க. (௱௨௮)

பன்னெறியிசைத்தசொற் பயன்கண்டேவளன்
முன்னெறியொழித்தவம் முனிவர்யாவரு
நன்னெறியடைத்தன நயப்பிற்கோதறு
மன்னெறியுறுதிகள் வகுத்துக்காட்டினான்.

உரை.— அங்ஙனம் பலமுறையோ டவர்சொன்னபயன்களைக்கண்டு குசையம்முனிவரெல்லாரு முன்பிடித்த பொய்த்தவநெறியைவிட்டு நன்னெறியடைந்தாரென்று தானுற்ற மகிழ்ச்சிமிகுதியாற் குறையின்றி நிலைபெற்றவறநெறியுறுதிகளைச்சொல்லிக்காட்டினானென்க. (௱௨௯)

காட்டியவுறுதியுங் கதிர்தெளித்தவண்
மூட்டியசரிதையுஞ் செய்தஞானமுள்
ளூட்டியநயத்தவ ருளங்குளிர்ந்தெனக்
கோட்டியகதிர்கள்போய் நிலங்குளிர்ந்ததே.

உரை.—அங்ஙனஞ் குசைசொல்லிக்காட்டிய வுறுதிகளுங் கதிர்தெளித்தங்கேயெழுதப்பட்ட வாணரன்கதையும்பயத்த ஞானமே யவர்க்கூட்டினவின்பத்தினா லவர்மன மினிதாய்க் குளிர்ந்ததே, அவர்மனங்குளிர்ந்ததன்மையாற் சாய்ந்தபருதியின்கதிர்போ யத்தமித் துலகெலாங்குளிர்ந்ததென்க. (௱௩௰)

அவ்வியமொழிந்தவ ரசைவுதீர்ந்தனர்
வவ்வியநெறிவிடா மனநிலைப்பெற
நவ்வியமுகத்துறை நாதன்வேண்டினான்
செவ்வியவுளம்புணா தேன்பெய்கோவினான்.

உரை.— அங்ஙன மனக்கோட்டமொழிந் தம்முனிவரெல்லாரு மசைவுதீர்த்து துயிலைக்கொண்டார், செம்மையிற்சிற

ந்த தன்மனம்போலத் தேனைப்பொழி மலர்க்கொடியையே
ந்திய குசையோவென்னி லன்றம்முனிவர்பிடித்தநன்னெறி
விடாமல் மனநிலைகொள்ளும்படி யழகியமுகத்தோடுநின்ற
வவதரித்தநாதனுகிய தேவகுழந்தையை வேண்டிக்கொண்டு
நின்றுனென்க. (௱௬௧)

ஞானமேதெளிந்திவர் மனத்தின் ஞாயிறு
வானம்மேலெழுந்தொளி வழங்கிற்றுயபின்
னீனமேயொழித்திஎன் றெவருமேற்றியக்
கானமேகழிப்பநேர் வழியைக்காட்டினுர்.

உரை.—அங்ஙன மிராவெலாம்போயடைந்தஞானத் தம்
முனிவர் மனந்தெளிந்தொளிர்ந்ததுபோலச் சூரியன்வானத்
திலெழுந்து கீழ்திசைவிளக்கினபின்ன ரம்முனிவரெல்லாரு
மொருங்குடன்கூடி நீயேயெங்கள்குறைகளைத் தீர்த்தாயெ
ன் றுபசாரங்களைச்சொல்லிச் குசையைவணங்கி யப்பூங்
காவனத்தைக்கடக்கும்படி செவ்வுவழியைக்காட்டப்போனு
ரென்க. (௱௬௨)

தொன்முகத்தஇட்டனுந் தொகைத்தமோனரும்
பொன்முகத்தடைந்தவிம் மூவர்போதலான்
மின்முகத்திடியென வரற்றிவிம்மிமேற்
சென்முகத்தெழுந்தகாக் கடந்துசெல்கின்றுர்.

உரை.—அவருள் மூத்தோனுகியவதிட்டனு மற்றமுனிவ
ரியாவரு மழகியமுகத்துவந்த விம்மூவர்பிரிந்துபோகையின்
மின்னியிடித்தாற்போல விம்மிநைந்தழாநிற்ப மேகத்துட்
புகுந் துயர்ந்தபூங்காவனத்தை மூவருங்கடந்துபோனுரெ
ன்க. (௱௬௩)

சித்திரக்கூடப்படலமுற்றும்.

ஆகப் படலம்-உ௰-இ-விருத்தம்
௩௲௱௬௰௨.

இருபத்தோராவது.

நீர்வரமடைந்தபடலம்.

வேறு.

கார்முகத்தகன்றதிங்கள் கதிர்செய்போறோன்றல்தோன்றப்
போர்முகத்தளிகளார்க்கும் பொழிலகன்றிருவர்போகிப்
பார்முகத்திருகணைத்தார் படர்வழிகடந்தபின்னர்
நீர்முகத்தரும்பொன்சிந்து நெடும்புனலெதிர்கொண்டுற்றார்

உரை.—பூவுலகிற்கிருகண்களாகநின்ற மரியுஞ்சூசையுமுன்னுரைத்த மேகமுகத்தைவிட்டகன்றதிங்க ளொளியைவிடுவதுபோலத் தாமேத்தியதிருக்குமாரன் றோன்றும்படி பொருதவண்டுகள் முழங்காநிற்கு முன்சொன்ன பூஞ்சோலைவிட்டு நெடும்வழிநடந்து கடந்ததற்பின்னர் கொழித்தவலைகளோடு பசியபொன்னைச்சிந்து மொருநீள்புனலை யெதிர்கொண்டடைந்தாரென்க. (௧)

பொய்செலச்செல்லும்வாயிற் பொலிவொடுபெருகும்போல
மைசெலச்செல்லும்வாரி மருளிவந்தளவிற்பொங்கி
மெய்செலச்செல்லு நன்றொத்தெக்கணும்விளைவுய்த்தோடி
பைசெலச்செல்லு நாகப் பரிசெனச்செல்லுமாறே. [ப்

உரை.—அவ்வாறெத்தன்மைத்தோவெனில்: ஒருவனுரைத்தபொய்யைப் பலர்கேட்டுரைப்பப் போகப்போகவுவன் வன்வாயிலேயப்பொய்பெருகுமதுபோல. மேகங்கள்வந்து பெய்தவளவிலே யோடிவரும் பல்வாரிகள் வழியிற்கலந்து கூடியதனலாறும்போகப்போக வளவின்றிப்பெருகிப்பொங்கி யுரைத்தமெய் யெங்குநன்மைதருவதுபோல வப்புனல்தானுஞ் சென்றவிடமெலாம்விளையும்படியினிதோடிப் பட

த்தைவிரித் தூர்ந்தொழுகும் பாம்பின்றன்மையாய் வளைந் தோடுமாறதுவென்க. (உ)

விரைவளர்மலர்விள்சோலை வெயிலறநிழற்றிக்கவ்வுங்
கரைவளர்புனலைக்காட்டிக் கபிரியேல்தொழுதுகூற
வரைவளர்மாடத்தேந்தல் வைகுமாபுரங்கண்ணேடித்
திரைவளர்மணியும்பொன்னுஞ் சிந்துகையாறிதென்றான்.

உரை.— அப்பொழுதவரைச்சூழ்ந்துவரும் பதினாயிரம் வானவருள்ளே கபிரியேலென்பவன் வாசமலர்ப்பூஞ்சோலைகள் வெயிலைமறைத்து நிழலைச்செய்து கவ்வாநிற்கு முயர்ந்தகரையுளபுனலை யிவர்க்குக்காட்டிச்சொல்வான்: மலையோடொத்தமாளிகையிடத் தெசித்தாளு மன்னவனிருக்குமிராசதானிமாபுரத்தண்டையிலோடிவந்து தன்றிரையிடத்துவளருமணிகளையும் பொன்னையுஞ்சிந்தாநிற்கும் கையாறிதுவென்றானென்க. (௩)

நூனெறிவழுவாயூதர் நொந்தெசித்துறைந்தகாலை
கோனெறிவளைத்தகோனக் குலத்தினைப்பகைத்ததன்மை
சூனெறிபிறந்தமாந்தர் துணிக்குமினென்றுதந்தாய்ப்
பானெறியுயிருண்ணுமுன் பகைநெறிசிந்துவாரால்.

உரை.—இவ்வாற்றின் முன்னடந்தொருகதை கபிரியேல் சொல்லத்தொடங்கினானுகையில் வேதநூல்காட்டியவழியில் வழுவா தியூதர்நடந்து முன்னரொசித்துநாட்டில்வருந்தியிருந்தநாளில்லை யக்காலத்து நீதிச்செங்கோல்வளையும்படி கொடிதா யங்கேயாண்டவரசன் யூதர்குலத்தின்மேல்வைத்தபகையா லவர்க்குச்சூலின்வழியா யினிப்பிறக்குமாண்மக்களெல்லாரையும் வெட்டிக்கொல்லுங்களென்றேவினான். அவ்வண்ணமே யதின்பின் பக்குலத்திற்பிறந்த வாண்பிள்ளையெல்லாந்தமது தாயார்முலைப்பால்வழியே யுயிரையுண்ணுமுன்னர் பகைவர்கையி லவ்வுயிரைச்சிந்தாநின்றாரென்க. † (௪)

காவினுட்கொடியின்பூவோ கமலமேலன்னப்பார்ப்
போ

† Exodi cap. II. புறப்பாடாகமம், உ-ம். அதிகாரம்.

பூவினுட்டிரண்டதேனே பொன்வலம்புரியுண்முத்தே
வாவியுட்பதுமமொட்டோ வானுலாங்கோளினென்றே
கூவினுட்டனிநீர்த்தன்றக் குலத்திலோர்குழவிவேய்ந்தான்.

உரை. — அங்ஙன மரசனேவல்கடந்தவருகையில் பூகர்குலத்திலொருபிள்ளைபிறந்து பூங்காவிடத்துப் பூங்கொடிபூத்த மலரைப்போலவோ தாமரையிதழ்மே லன்னத்தின்குஞ்சுபோலவோ மலர்த்தபூந்தாதிடத்துத் திரண்டதேன்றுளி போலவோ வலம்புரியிடத்துமுத்துபோலவோ தடாகத்திடத்துக் கமலத்தினரும்புபோலவோ வானிடத்துலாவியநவக்கிரகங்களிலொன்றுபோலவோ பூவுலகிடத்து நிகரின்றித் தனியழகுள்ளமுகத்துத் தோன்றினனென்க. (௫)

அங்கதிர்மணியின்சாய லத்திருமகனைநோக்கி
வெங்கதிர்வேலினுந்தாம் வெட்டவும்விடவுந்தேற்றாச்
செங்கதிர்திரைமூழ்கன்ன செய்தமஞ்சிகத்துட்பெய்தே
யிங்கதிர்புனற்கணுய்கென் றிரங்கிவிட்டேகினாரால்.

உரை. — அங்ஙன மொளியைப்பரப்பின மணியின்சாயலா யழகுபெற்றவப்பிள்ளையைநோக்கி வெங்கதிர்வீசும்வேலையேந்தியசேவகரவன்முகத்தழகினுலிரங்கி யவனைவெட்டிக்கொல்லவு மரசன்கொடுமையாலஞ்சி யவனைக்கொல்லாது விடவுந்துணியமாட்டாமற் சூரியன் கடலின்முழுகியொளித்ததுபோலச் செய்தவொருபேழையினுளப்பிள்ளையையொளியவைத்து இங்கேயதிருமிப்புனலிடத்துப் பிழைக்கக்கடவதென்று மனதிலிரங்கி விட்டுப்போனாரென்க. (௬)

தாளெழுங்கமலநீரிற் றளம்பியதென்றேமுத்தம்
பிளெழுஞ்சங்கமென்றே பேழைமேலலைந்துபோகிற்
றாளெழும்புரத்தின்கண்ணே தாமொழுநாணல்மாட்டி
வாளெழுங்கணினுளீன்ற வண்ணநற்குழவிநின்றான்.

உரை. — அங்ஙனம் பிறந்தகுழந்தை யொருபேழையிலேவைத் தாற்றிலேவிட்டவளவிலப்பேழை நெடுந்தாள்மேலெழுந்ததாமரை நீர்மேற் றளம்பும்போலவோ, முத்துக்கு

லாக்கொண்ட சங்கு நீர்மேன்மிதந்தாற்போலவோ வலைமி ன்மேன்மிதத்தலைந்துபோகையிற் றேர்டரியான மனிதர் நெருங்கிய புழக்கத்தாற்றூசியிக்கெழு மிராசதானிமாபுரத்த ன்னடையிலே தூரிதுயர்ந்தநாணவின்மாட்டிக்கொண்டு வா ளொத்தகண்ணையுடையாள்பெற்ற வழகியவக்குழந்தை பே ழையோடங்கேநின்றதெனென்க. (எ)

அன்றொளித்திங்களுண வங்கதிர்முகத்துநல்லாள்
குன்றொளித்திடுந்திண்டோளிற் கோணினிதீன்றகோதை
சென்றொளித்திரையைமாதர் திரளிலேறுடிமிழிலாட
நின்றொளித்திருந்தபேழைநிமிர்த்துகண்டெடுமினென்றாள்.

உரை.— அப்பேழையாற்றிலேயோட்டு நாணவிலேமா ட்டிநின்றவன்றதானே ஒளியைவீசியமுழுமதி நாணும்படி யதிலும்விளங்கியமுகத்து நல்லாளொருத்தி மலையைமறைக் குந்திண்டோளுடைய மன்னவனீன்றகுமாரத்தி யங்கேவந் து தெளிந்துவிளங்கியவாற்றுநீர் பலமடந்தையரோடாட நிற்ப வங்கேயொளித்திருந்தபேழையை யவள்தானே நிமிர் த்துபார்த்தவிடத்திலேகண்டு அதையெடுத்துத் தாருங்களெ ன்றாளென்க. (அ)

எடுத்தமஞ்சிகத்துநோக்கி யிளமதிமுகத்திற்றண்ணீர்
விடுத்தபைம்டணியோகஞ்சம் விள்முகத்துதிர்த்தமுத்தோ
கடுத்ததுன்பாற்றுக்கண்ணீர் கான்றகால்முகத்தைக்கண்டு
தொடுத்ததன்னணிகள்பெய்தென் றேன்றவென்றாசிகொ
ண்டாள்.

உரை.— அவளேவினபடியெடுத்துக்கொண்டு முன்வை த்தபேழையைத்திறந்துள்ளேபார்த்தவிடத்தி விளம்பிறைமு கத்திற் குளிர்ம்பனியொழுகினாற்போலவு மலர்த்ததாமரைமு கத்திலுதிர்த்த முத்துப்போலவும் பேழையுள்ளிருந்த குழந் தைதன்றுள்ளங்கவித்துயர்களைப்பொறுமற் கண்ணீர்வெ ட்டுமாறின்ற வழகியமுகத்தை யிராசகுமாரத்திகண்டு மகிழ் வோடுகொண்ட வன்பின்மிகுதியாற்றன்றொடுத்திருந்த வா பரணங்களை யக்குழந்தைக்குப்போட்டு இவனென்மகனெ ன்றுகைக்கொண்டாளென்க. (௯)

பானலமுலையினுளைப் பாலனுக்கழைமயினென்றுத்
தானலமரடத்தெய்தித் தையலார்கமழ்நீராட்டிச்
சேநலமெழப்பொன்னாழி சிலம்புகிண்கிணிகள்பூட்டி
மீனலமணிந்தநாகு விதுவெனத்தோன்றினனே.

உரை.—மீளவு முலைப்பாலுள்ள வொருத்தியைப்பிள்ளையை வளர்க்கும்படி கூட்டிக்கொண்டுவாருங்களென் றவ்விராசகுமாரத்தி சேவகரைவிட்டுத் தானுடனே தனது மாளிகைக்குவந்து பலமடந்தைய ரப்பிள்ளையையெடுத்துப் பூங்கமழ்நீரையாட்டி யுள்ளவழகுமிகும்படி யொளிப்பொன்னாழியும் பொற்சிலம்போடு பொற்கிண்கிணிகளு மவற்குப்பூட்டி வான்மீன்களாற்சூழப்பட்ட விளம்பிறைபோலக் குழந்தைதோன்றினனென்க. (௰)

தாயெனவுணராத்தாயைத் தனையனைவளர்க்கக்கூட்டிச்
சேயெனவிமிழிற்கண்டாள் செறிந்துதன்னுளத்திற்றைத்த
நோயெனவறுத்தொன்றென்று நுனித்தவன்பியல்பிற்பன்
தூயினமணியின்சாயற் றோன்றலைவளர்த்திட்டாளே. [றுள்

உரை.—முலைப்பாலுடையவொருத்தியைத் தேடப்போனசேவகரோவெனில், தாயென்றறியாம லக்குழந்தையைப் பெற்றவளைத்தானே கூட்டிக்கொண்டுவந்துவிட்டார், அவள்வந்து தன்பிள்ளையென்றுகண்டு முன்னவனைவேண்டித்தன்மனத்திற்றைத்த மிக்கதுயரை நீக்கி யவன்றன்பிள்ளையென்றொன்றுஞ்சொல்லாமன் மிகுந்தவன்புடன் பலநாளுந் தூயமணியின்சாயலாகநின்ற பிள்ளையை யினிதாய் வளர்த்தாளென்க. (௰௧)

வளர்ந்தவெண்மதியொத்தன்னான் வளர்ந்துமோயிச
னென்றேறித்
தளர்ந்ததன்குலத்தையோம்பத் தற்பரன்பணிப்பவங்க
ணுளர்ந்தபன்முயற்சியாவு மொழுங்கினீருணர்தீரன்றே
கிளர்ந்தநல்லறிவினோர்க்குக் கிளர்க்கநானுரைப்பதென்னே.

உரை.— அங்ஙனம் வளர்பிறைபோலவளர்ந் தவன் மோயிசனென்னும்பெயரும்பெற்று அதின்பின் பவன் றன்குல

த்தையோம்பும்படி யாண்டவனேவலினு லெசித்துநாட்டி லே நடத்தியகாரியமெல்லா மொழுங்கோடு நீரறிந்திருப்பீ ரொழிய நிறைந்தவுணர்வினையுடையவுங்களுக்கு நான்சொல் லுவதென்னவென்க. (௰௨)

ஐயெடுத்தொளிரத்தோன்றற் கன்பெடுத்துயிரைக்காக்
கையெடுத்தளித்ததென்றிக் கங்கையைக்கையாறென்று [கக்
மெய்யெடுத்திசைத்தநாம விதியிதேயென்றான்வானோன்
மையெடுத்திரைத்தயாறு வலத்திவிட்டவரும்போனார்.

உரை.— அங்ஙன மழகோடுவிளங்கிய வக்குழந்தைக்கன் புகாட்டி யவனுயிரைக்காக்கும்படி கைதந்தேந்தினாற்போ ல விவ்வாறவனைக்காத்ததென்று முன்னோரிப்புனலைக் கையா றென்று மெய்யானகதையைக்காட்டும்படி யிப்பெயர்வந் தகாரணமிதுவென்றான் கபிரியேலென்னும்வானோன், அவ ருங்கருத்திரைசுருட்டிமுழங்கியோடுமப்புனலை வலத்தில்வி ட்டுப் போனாரென்க. (௰௩)

வேறு.

மீன்சொரிந்தமுடிவேய்ந்தொளிர்தாயுந்
தேன்சொரிந்தகொடியந்திறலோனு
நான்சொரிந்தநவைதீர்மகவேந்திக்
கான்சொரிந்தசுனைகண்டருகுற்றார்.

உரை.— அங்ஙனமவர்நடந்துபோய் மீன்முடிசூடிவிள ங்கியதாயாகியமரியென்பவளுந் தேன்பொழி மலர்க்கொடி யேந்திய திறலோனாகியசூசையு நாஞ்செய்தபாவங்களைத்தீ ர்க்கவந்த திருக்குமாரனையேந்தி நெடுவழிநடந்ததற்பின்னர் வாசமலர்ப்பூந்தடாகத்தைக்கண்டு கிட்டினாரென்க. (௰௪)

மிக்கடங்குவடுநீத்தவர்வைகிச்
சொக்கடங்குசுதனைத்துதிபாட
பிக்கடங்குகுயில்பாடவின்விள்ளி
யிக்கடங்குமலரின்புறல்கண்டார்.

உரை.—அங்ஙனம் வண்டகளையின்கணாமேன் மனிதர்பாவத்தைத்தீர்க்குமிம்மூவர்வந்திருந்து சூழநின்றமரங்கள்மேலிருந்தகுயில்க ளழகிற்பொலிந்ததிருக்குமாரனைத்துதித்தாற்போல வினிதாய்ப்பாடிவருகையிற் பூவெல்லாந்தேனைக்கொண்டதந்தாதுகளைவிரித் தின்புறக்கண்டாரென்க. (௰௫)

கரைகிடந்தவிவர்காட்டருளன்ன
திரைகிடந்தநிழனீண்டருவெல்லாம்
விரைகிடந்தமலர்விள்ளியகாலை
நுரைகிடந்தனகள் நுண்மணலார்ந்தே.

உரை.—அங்ஙனங் கரைமேலிருந்த மூவர் நமக்குக்காட்டுந்தயையின்றன்மையா லொழுங்கினின்று நிழலைச்செய்த நீண்டமரமெலாம் வாசமலரைப்பூத்தவளவிலே கீழேகிடந்த மணலெல்லா நனைந்து நுரைநுரையாய்விழுந்தமதுக் கிடந்ததென்க. (௰௬)

கோளையுண்டகுழல்மென்கொடியீன்ற
காளையுண்டவதனக்கவின்காண
வாளையுண்டசுனைவாவிமலர்ந்தே
தாளையுண்டமலர்தன்விழியாமால்.

உரை.— மீளவு மொளிவான்மீன்களைச்சூழ்ந்த மென்கொடியாகிய மரியென்பவளீன்ற திருக்குமாரனது முகத்தழகினைக்காணும்படி வாளைமீன்றிரியுந் தடாகந்தன்விழியாகத் தாளின்மேலெழுந்த தாமரையாம்பல் கருங்குவளை மற்றப் பூவெலாமலர்ந்தனவென்க. (௰௭)

சொற்கலத்திலுயர்வோர்சுவைமாந்தப்
பொற்கலத்திலமுதேபொழிவார்போல்
விற்கலத்திலொளிர்பூவிரிதாது
நற்கலத்தினிறைதந்தனதேனே.

உரை.—அங்ஙனம் விரிந்தநீர்மலரெல்லாஞ் சொல்லுந்தன்மைத்துயர்ந்தமூவரினிதாயருந்தும்படி பொற்பாத்திரத்

திலமுதினையேந்தித் தந்தாற்போல வொளிமுகத்தலர்ந்த பூ
வெல்லாந் தந்தாதென்னுங் கலத்தின்மேற் றேனைநிறையவு
மிழ்ந்து தந்தனவென்க. (௰௮)

நான்கலந்தநவைதீரருணல்லோர்
கான்கலந்தகனிகட்கனிவுண்டு
வான்கலந்தவுடுமான்மலர்கான்ற
தேன்கலந்ததெளிதீங்கயமுண்டார்.

உரை. — அப்பொழுதிங்கே நாஞ்செய்தபாவங்களை யறுக்கும்படி தயையோடுவந்த நல்லோராகிய மரியுஞ்சூசையும் வாசகனிகளையுண்டபின் வான்மீனொத்ததாமரைமுதற் பல நீர்மலருமிழ்ந்த தேன்கலந்து தெளிந்ததடாகத்தினியதண்ணீரையுண்டாரென்க. (௰௯)

மணிநிறத்தவெழின்மைந்தனைமூடு
மணிநிறத்தநுரையந்துகிலாடை
பணிநிறத்தவொளிர்பாணியினல்லாள்
புணிநிறத்தமலர்பூஞ்சுனைதோய்த்தாள்.

உரை. — அதின்பின் பாபரணநகைபொப்பவிளங்கு மழகியகையையுடையாள் மரியென்பவள் மணியின்சாயலாய்நின்ற தன் திருக்குமாரனை மூடிவைத்திருந்த வழகிற்பொலிந்த நுரையொத்தசீலையை மணிமுடிசூழ்ந்தாற்போலச் சூழமலரைவிரித்த வப்பூந்தடாகத்திற்றோய்த்தாளென்க. (௨௰)

தோய்ந்ததன்மையொடுமச்சுனைநன்னீர்
மேய்ந்ததன்மையொடுவெம்பிணியாவும்
வாய்ந்ததன்மையொடுமாறவுநாத
னீய்ந்ததன்மையுளதின்றுமதெஞ்சா.

உரை. — அங்ஙனந் திருக்குமாரனைமூடியசீலை யங்கே தோய்ந்ததனாலச்சுனைத்தண்ணீரையுண்டமாத்திரத்திற் பிணிநோயெல்லா நன்றாய்த்தீரும்படி யதற்குநாயகன்வரத்தைத் தந்தான், தந்தவர மிந்நாள்மட்டுங் குறையாமல்நடந்துவருமென்க. (௨௧)

அருளின்வீங்குவரமஃதெனவோர்ந்து
தெருளின்வீங்கிநறுதீங்கயவாவி
சுருளின்வீங்குதிரைசூழ்கரைமோதிப்
பொருளின்வீங்குமடிபோற்றுவபோன்றே.

உரை.— அங்ஙன மிக்கவருளினோ டாண்டவன் றனக்குத்தந்தவ்வரத்தை யறிந்தாற்போல வாசதெண்ணீர்த்தடாக நன்றியறிந்துசுருட்டினவலைகள் கரையின்மோதும்படியலைந்து மூவர்பொற்பாதத்தில்விழுந்து வணங்கினதன்மைபோலத் தோன்றிற்றென்க (௨௨)

அலையொருங்குதமுளரடியபால
விலையொருங்குவிரியேரலராடத்
தலையொருங்குமிலைசதன்கரமேந்து
நிலையொருங்குசுனைநீரியதோற்றம்.

உரை.— மீளவுந் தண்ணீரெல்லாமலைந்துவருகையின் மலர்ந்தபூவெலா மொருங்குடனாடாநிற்ப வவரைவணங்கும்படி தன்கையெல்லாந்தலைமேலேற்றின தன்மைபோலத்தோன்றிநின்ற தத்தடாகமென்க. (௨௩)

வேறு.

பானேரிளநிலவூறிய பணிமாமதிமுகமுன்
வானேரிளபனிமாவிய மதுமாதருவடியத்
தேனேரிளகுரலோடிள வளிபாவிசைதிருக
மீனேரிளசிறைமாமயி னடமாடினமிகவே.

உரை.—அக்குளத் தாண்டவன் றந்தவரத்தா லெல்லாமுங்களிகூர்ந்தனவெனப் பாலொத்த விளங்கதிருமிழு மழகிய மாமதிமுகத்தில் வான்றருமிளம்பனிவிழுவதுபோலக் கரைமேலிருந்த மரமெலாந் துளிதுளியாய் மதுவைப்பொழியாநிற்பத் தேனொத்தினியவோசையோடு வண்டுகள்பாடாநிற்ப மீன்பதித்ததன்மையி லழகியதோகையைவிரித்தமயில்கள்மிகவு நாடகமாடினவென்க. (௨௪)

கயலொத்தனவிழியுற்றன களிமாதர்கள்கருவிட்
புயலொத்தனதிரையுட்களி விளையாடினபுரைகண்
டியலொத்தனகயமுட்டிரி யிறகாருயிரினமும்
வியனுற்றனசிறைவிட்டயல் விளையாடினவினிதே.

உரை.— மீளவு மன்னமுத னீர்வாழும்பறவையெல்லாங் கயல்மீனொத்த கண்ணையுடையமாதர்கள்வந்து கரியமேகமொத்ததண்ணீரில்முழுகி யினிதாய்விளையாடின்தன்மையைப் பலநாளுந்தாங்கண்டபடித்துக் கண்டதன்மைத்துத் தாமுந் தஞ்சிறகைவிரித்து ஏவர்காண வருகேநின் றினிதாய்விளையாடினவென்க. (உ௫)

புள்ளும்பலகுருகும்பக வினமுங்கவின்பொருவா
விள்ளும்பரிசனமும்பகை விலகுங்களிவிளைபோ
ருள்ளும்படிகுறுகும்படி யுகளும்படியுளவே
துள்ளும்பரியெனவந்தெதிர் தொடர்கின்றவைதுறமால்.

உரை.— அங்ஙனம் பலபறவையன்றி நாரைகளுங்கொக்குகளு மழகிற்பொருவாது மலர்ந்தவிறகுடையன்னங்களும் பகையில்லாமன் மகிழ்ச்சியால் விளைந்தவரும்போருள்ளவுந் தம்முட்குறுகவுங் குதிக்கவுஞ்செய்து துள்ளிப்பாயுங்குதிரைகளைப்போலத் தாமும்வந்தெதிரெதிராய்த் தம்மைத்தொடர்ந்து வருவனவென்க. (உ௬)

தேங்காவியொடுளமற்றலர் திளைதேறலையுணவந்
தாங்காயினவளிபற்பல வரவத்தொலியதிரத்
தூங்காவொலிமுரசொத்தெழு தொனியிற்றமுடேர்போர்
நீங்காதனபறவைக்குல நிகருஞ்சமர்நெடிதே.

உரை.—அங்ஙனம் பறவைகளொருங்குடன்கூடி யணியணியாய்வருகையிற் கருங்குவளைமுதன் மற்றநீர்மலர்நிறைந்துளதேனை யுண்ணும்படி திரண்டங்கே கூடினவண்டுதம்பலவினங்களும் வாய்விட்டார்த்துச்செய்யுமுழக்க மோயாதமுரசினோசையாக வெழும்பத் தம்முட் டேர்ந்த விளையாட்

டுப்போர் விடாமற் பறவையெல்லா நெடுங்காலஞ்சமனாய்
ப்பொருதனவென்க. (௨௭)

இரியும்பலகுறுகும்பல வெதிரும்பலவிறகை
விரியும்பலவறையும்பல மெலியும்பலகிளையோர்
புரியும்பலமுரியும்பல பொலியும்பலபுடையிற்
பிரியும்பலகுமுறும்பல தொனியும்பரம்பெறவே.

உரை. — அங்ஙனமணியாய்த்திரியவுந் தம்முட்குறுகவு மொன்றொன்றோ டெதிர்க்கவு மிறகினைவிரிக்கவு மடிக்கவும் போரின்மெலியவும் போர்விளைவிக்கவு முறியவும் வெற்றி கொண்டாற்போலப்பொலியவும் பக்கத்திற்சாய்ந்து பிரிய வு மிக்கொலிமுழக்கவும் பற்பலமுகத்துப் பற்பலபறவை செய்துவருகையில் வானமட்டுமோசையெழும்பின வென்க. (௨௮)

பறைசிந்தினவொலிசிந்தின பகைசிந்தினபறவை
நறைசிந்தினமலர்சிந்தின நனைசிந்தின நறுதே
னுறைசிந்தினவிதழ்சிந்தின வுயர்சிந்தினவுணுநீர்
முறைசிந்தினமுனைசிந்தன முயல்சிந்திடமுடிபா.

உரை.—அங்ஙனம் பறைவாயோசையொப்ப முழங்கிப் பகைத்தாற்போலப் பொருதபறவைகள் வாசம்பொழிந்து மலர்ந்தபூவு மலராவரும்புஞ்சிந்தித் துளியாய்நறுந்தேனை யுமிழும் பூவிதழ்களைக்கிழித்துச் சிந்தி மூக்கான்முகத்தநீ ரை யுயரவுஞ்சிந்திச் சிந்தனைகெட்டாற்போல முறையை த்தவிர்த்து செய்தவிளையாட்டுப்போர் முடிவொன்றில்ல தென்க. (௨௯)

வந்தோடியவொருகோவன மதுவோடியமலரின்
னந்தோடினிதலகோடது கவர்வாயினவளவின்
முந்தோடியபெடைமீமிசை முருகார்துளிமுடிகெப்
பந்தோடியையமணநீர்களி மடவார்விடுபடியே.

உரை. — அங்ஙனம் பலபுள்ளினங்கள் விளையாடிக்கொ ண்டுவருகையி லோரசன்னம்வந்தோடி மது பொழி[illegible]

லிபு தாமரைமலரை மூக்கார்க்கவ்வி முன்னோடினபெடைமே
ல் வாசநீர்த்துளிநிறைபச்சிதறும்படிவீசி வட்டத்தருக்கி
யான் மணப்பன்னீர்வீசி மடந்தையர்விளையாடினதுபோ
லத் தோன்றிற்றென்க. (௰)

பெடைநாணினதென நாணறை பிளிர்தாமரைநெடுங்
கடைநாண்ணினயனமேவுபு கரவாயினமூறைகண் [காக்
கிடையாயினபல்பூமகை யினநக்கெனமலா
நடையாடினபறவைக்குல நனியார்த்தனநகவே.

உரை.— அங்ஙன மப்பேடையன்னநாணினாற்போலவா
சம்பொழிந்த தாமரைநெடுங்காட்டின்முடிவிலே யவ்வன்
னம்போயொளித்ததென்றுகண்டதனு விடையிலிருந்தமல
ராதவரும்புகள் சிரித்தாற்போலமலர்ந்தன, குழக்கூத்தாடா
நின்ற மற்றப்பறவைகளு மிகவுமுழங்கிச் சிரித்தன வென்க.
(௧௧)

பந்தொத்தனபனிமுற்றலர் பறவைக்குலமெறியச்
சந்தொத்தனமதுரத்துளி சரியப்புயறருநீர்ச்
சிந்தொத்தனசிதறிப்பினர் தெளியத்தடமதனூ
டிந்தொத்தன வுடுவொத்தன விணர்மற்றதுமியலே.

உரை.— மீளவும் பறவைகளெல்லாம் பூம்பந்தொத்த ப
னிநிறைந்த பெரும்பூமலரை யடியிற்கிழித்து மேலேவிசை
படவெறிதலிற் சந்தனத்துளிபோல வம்மலரினின்று வாசப
னித்துளிவிழவு மேகங்கள் தூறினாற்போல வத்துளியெங்குங்
குதியாய்ச்சிதறவு மதின்பின்பு வானத்தினின்றுவிழுந்த சந்
திரனைப்போலவும் வான்மீன்களைப்போலவு மேலெறிந்தம
லரெல்லா மப்பூந்தடாகத்துநடுவே விழுவனவென்க. (௧௨)

அளியாரலரரவேபட மனையாட்டினபலவுங்
களியால்விரிசிறைபூட்டு கரவாற்றினபலவுந்
துளியார்முகிலுறமீவிசை துறவோட்டினபலவு
தளியாரலர்விளையாடின நயமெல்லியுமிலையால்.

உரை.— மீளவும் பலபறவை நிறவண்டுகள் நிறைந்திருக்
கு மலரைக்கோதிக்கொய்து மூக்கிற்கவ்விப் பொறியுளபாம்பின்ப

டத்தைப்போல மேலாட்டினவும் பலபறவைகளிகூர்ந்தெடுத்த மலரை விரித்ததஞ்சிறகினுள்ளொளித்தனவும் பலபறவை வானத்துலாவிய மேகங்களைச்செல்லும்படி விசைபடவெடுத்தமலரை மேலேயெறிந்தனவு மங்ஙனங் குளுந்தமலரைக்கொண்டு விளையாடினமகிழ்ச்சி மட்டின்றிமிக்கனவென்க. (௩௩)

பேனின்றெருநடநோக்கினர்விரிவண்புகழொலிபோல்
வானின்றகல்கரைசூழ்நிழன் மரமூந்திய பறவை
தேனின்றலர்சுனையாடின திறநோக்கியகளியாற்
பானின்றினிதிசைபாடின பரிசே.

உரை. — இவையெலாங் குளத்திடத்தாகையின் மேலாங்கிடத்துநின்று கீழேயினிதாயாடினகூத்தைப்பார்த்தவர் புகழுமோசைபோல வானத்துயர்ந்தகொம்புகளாற் கரைசூழநிழற்றினமரங்கள்மே லேறியிருந்த பறவைகளோவென்னிற் றேன்பொழிந்தலர்ந்ததடாகத் தாடினமுறையைக்கண்டமகிழ்ச்சியாற்பாலொத் தினியவிசைகளைப்பாடவி னுடினநீர்ப்பறவைகளைப் புகழ்ந்துபாடினதன்மையிற் றேன்றினதென்க. (௩௪)

வேறு.

பற்றலாற்செயிர்பற்றிருண்மாக்களே
கற்றநூற்பயனின்றியுங்காசினி
யுற்றநாதனைத்தாழுணராமையி
னிற்றெலாமறிவில்லவைசெய்தவே.

உரை. — அங்ஙனமாசையால் வரும்பாவத்தைப்பற்றி வந்தவிருளைக்கொண்டமனிதர் தாம்படித்தநூலின் பயனொன்றின்றித் தம்மையிரட்சிக்கப் பூவுலகில்வந்தநாதனைத் தாமறிந்துவணங்காதிருக்கையி லறிவொன்றில்லாதபொருளாகிய வப்பறவைகளிதெல்லாவற்றையுஞ்செய்தனவென்க. (௩௫)

அறிவிலாவுயிர்தாமறிந்தாலெனச்
செறிவிழாவணியிற்சிறப்பாடின

நெறிவிடாக்கனிநோக்கியநேரிலார்
முறிவிலாசிமொழிந்தெழுந்தேகினார்.

உரை. — அங்ஙன மறிவில்லாதவுயிராயினு மப்பறவை நாதனையு நாத னக்குளத்துத்தந்தவரத்தையு மறிந்ததன்மை யிற் றிருவிழாநடத்தினாற்போல விளையாடினதன்மையை யினிதாய்ப்பார்த்திருந்தமூவர் குறையாதவாசீர்வாதத்தைத்தந் தெழுந்துபோனாரென்க. (௬௬)

ஏய்ந்தநல்வரத்தேந்தியவாவிநின்
றாய்ந்தமாண்பினர்போகையிலல்லலுட்
பாய்ந்ததன்மையிலப்பறவைக்குலம்
வேய்ந்தவாறுறவார்த்தனவிம்மியே.

உரை. — அங்ஙன நாதன்றந்தவரத்தினாற் பெருமையிற் பொலிந்ததடாகத்தினின்று தேர்ந்தபெருமையுடைய மூவர் போகிறதைக்கண்டு தம்முளத்துவருந்தினாற்போல வப்பற வையெல்லாம்விம்மி யழுததன்மையில் வானத்தொலியெழு ம்படியே மிகவுமார்த்துமுழங்கினவென்க. (௬௭)

நீர்வரமடைந்தபடலமுற்றும்.

ஆகப் படலம் - உக - இ - விருத்தம்

௫௯௱௬௯.

இருபத்திரண்டாவது.

எசித்துசேர்படலம்.

வேறு.

அருளுலாவுமிதயத்திலிருந்தே யன்பியற்றியரிதாயெ
னையாளு [ர்
யிருளுலாவுமுயிர்யாவுமளிப்ப வின்பியற்றியுலகெய்தியமூவ
தெருளுலாவுமவர்பூவடிசூடத் தெள்ளியற்றியவர்பாவிசைகூ
றப் [கல்கிற்பேன்.
பொருளுலாவியவெசித்தெனுநாடு புக்கியற்றியவையானிபு

உரை.—யேசுமரிசூசையென்னு மூவர்செய்தயையானி
றைந்த வென்னிதயத்திற் றமிருந்தன்புகாட்டி யரிதிலெ
ன்னையாண்டு பாவத்திருண்ட மனிதருயிர்கள்யாவையு மிரட்
சிக்கும்படி யின்பங்காட்டிப் பூவுலகிற் றோன்றினவராகித்
தெளிவோடுபூத்த வவர்பாதத்தின் மலரை யென்றலைமேற்சூ
டியவர்தாமெனக்குத் தெளித்தபாவிசைகளைத் தருவாரொன்
று செல்வத்தோங்கிய வெசித்துநாட்டி லவர்புகுந்தங்கேசெ
ய்தவை சொல்லுவேனென்க. (எசித்துநாட்டி லம்மூவர்வ
ந்திருந்தநாளினடந்த வதிசயச்செய்திகளைப் பற்பலபடல
மாகவகுத்து விரிவாய்ச்சொல்வானென்றமையா லீண்டுமீள
வு மருமைபற்றிப் பாவமுமின்றி நன்றாய்முடியும்படி கடவு
ள்வாழ்த்துரைத்ததென்க.) (க)

மீமலிந்தசுடர்மூன்றணிமீன்போல் விண்மலிந்ததள
மூவரைநண்ணக் [த்
காமலிந்தமணம்வீசியதீந்தண் கள்மலிந்தமலரோடிணைவிள்ள
தேமலிந்தகனியார்தருயாவுஞ் செண்மலிந்ததலைதாழ்ந்துவ
ணங்கப் [றூர்.
பூமலிந்தநெறிமூவருமேகிப் புரைமலிந்தவினைதீர்க்குவைப்பா

உரை.—சந்திரசூரிய னக்கினியென்னுமுச்சுடரை யொ ளிவான்மீன்கள்சூழ்ந்தாற்போல வான்றளமாகிய பதினுயி ரம்வரனவ ரிம்மூவரைநண்ணிச்சூழ்ந்துவரவுங் காவினுள் ளவாசமதுப்பொழிபூவெலாமலரவு மினியகனிகளைக்காய்த் தமரமெலா மேகங்கள்தவழுந் தம்முச்சிக்கொம்புகளைவளை த்து மூவரைவணங்கவும் பூந்தடத்தவர்போய்ப் பாவத்தால் வந்த வினைகளைத்தீர்க்கும்படி நடந்துபோனரென்க. (உ)

மிக்கடங்கியதிறந்தகுவேந்தன் வெருவினுவெனவொ ளிக்குபுவந்து [தியநாதன்
தொக்கடங்கியவெசித்துயிர்யாவுந் துகளொழிப்பவவணெய் திக்கடங்கினுமருதருள்செய்யச் செவ்வனுயவழிகூட்டிவர் நாடு [ேனர்.
புக்கடங்கியபுரம்பலசேரும்புடைவளைந்தவழிகாட்டினர்வா

உரை.—அங்ஙனம்போகையி லளவிறந்ததிறத்தின் மிக்க வேந்தனுகிய வத்திருக்குமார னெரோதனென்பவற் கஞ்சி ஞற்போல வொளித்துவந்து எசித்திலுள்ளமன்னுயிர்யாவு ம் பாவத்தைநீக்கியுய்யும்படிவந்த நாதனுகையி லங்கேநாலு திக்கி லெங்குங்குறையாதவருளைச்செய்யும்படி வழியைக்கா ட்டி முன்போகிறவரானேர் செவ்வுவழியி லவரைக்கூட்டிக் கொண்டுபோகாம லந்நாட்டிற்புகுந்ததற்பின்பு பற்பலநக ரிற்சேரும்படி சுற்றினவழியைக்காட்டினரென்க. (௩)

வேறு.

விண்மேலெழுவைகறைவெங்கதிரோ
மண்மேலெரிகோடைவருந்துளியோ
பண்மேலுமாயோர்பனிமேலருளோ
ரெண்மேலெழநாடவணெய்தினரால்.

உரை.—அங்ஙனம்விடியற்காலத்து வான்மேலெழுந் திரு ளைநீக்குஞ் சூரியனைப்போலவுங் கோடைநாளிலே காய்ந்தபூ மிமேல்விழு மழையைப்போலவும் வீணைவாய்க்குரலினு மி னியசொல்லையும் பனியினுங்குளிர்க்குந்தயையையுமுடையவ

ன்று ரந்நாடெண்ணப்படாதசெல்வத்துயரும்படி யங்கே சென்றாரென்க. (௪)

ஈனந்தவிரீரறமீரமருள்
ஞானந்தகவூக்கநயம்புகழ்சீர்
தானந்தவநூல்பொருடந்தனபின்
வானந்தருவாழ்வுகவெய்தினரால்.

உரை.— அங்ஙனமவ ரந்நாட்டிற்குறைபாடெல்லாந்தீர்க்கு மில்லறந்துறவறமென் றீரறங்களு மிரக்கமுந்தயையும் ஞானமும்பெருமையு மனத்தினூக்கமு மகிழ்ச்சியும்புகழுஞ்செல்வங்களுந் தானமுந்தவமும் வேதநூலோடுபலநூலும்வேண்டியபொருள்களுங் குறையொன்றின்றி வழங்கும்படிதந்தபின்பு வான்வீட்டி லுள்ள முடியாதவாழ்வுகளை யாவர்க்குங் கொடுக்கும்படி யங்கேசென்றாரென்க. (௫)

துணைமஞ்சுபொயாதுகயம்பொழிய
நனைவிள்வயல்நான்குபயன்விளைய
வினைநொந்தழவெம்பகைநீங்கியழ
வனையாதவராங்கடி வைத்தனரால்.

உரை.— மீளவுமிடித்துமுழங்கியமேகங்கள் பொய்யாமற் பருவத்துப்பெய்யவு மலர்த்தவயல்களெல்லாம் வருடந்தோறு நாலுபயன்களைத்தந்து விளையவுந் தீவினையழியுங்காலமிதென்றுநொந்தழவு முயிர்ப்பகையெல்லா நீங்கியழாநிற்கவு மிவையெலா நன்றாம்படி நிகரில்லாதமூவரு மங்கே தம்மடிவைத்தாரென்க. (௬)

அடிவைத்தனவன்பினொடாங்கெவணுங்
கடிவைத்தனபூமலர்கான்றமதுப்
பொடிவைத்துவழிப்புடைசேறலவ
விடிவைத்தனகாரிணை தூறினதே.

உரை.—அவரங்கேயடியைவைத்த வன்பினைப்பற்றியெங்கும்வாசமலர்பூத்துப் பொழிந்தமதுவின்றிரளே பொடி

யாய்க்கிடந்தவழியெலாஞ்சேரும்படி யிடித்தமேகம்பொழி ந்ததுளியின்றன்மை தூறிற்றென்க. (எ)

காேனந்தியகாவுகடோறுமயில்
மீனேந்தியதோகைவிரித்துலவி
யூனேந்தியநாதனுறப்பறவை
த்தேனேந்தியதீம்புகழ்பாடுவன.

உரை.—மீளவு மலர்ப்பாத்திரத்தேந்திய வாசனைவீசாநி ற்கும்பூஞ்சோலைகடோறு மயில்கள்மீன்களொத்தகண்களை யேந்திய தமதழகியதோகைகளைவிரித்தாடி யுலவாநிற்க ஆ னுடலேந்தி யவதரித்தநாதன்வருவதுகண்டு மற்றப்பறவைக ள் தேனின்பத்திசைகளையியற்றி யவனைப்புகழ்ந்தாற்போல ப் பாடுவனவென்க. (அ)

இயல்பாய்ந்துகளக்கமலங்கிழியப்
டயல்பாயொளிமுத்தறலோடொழுகி
வயல்பாய்ந்துநெல்முத்தமொடேமருளி
யியல்பாய்நிலமின்புறநக்கெனவே.

உரை.—மீளவுங் களிகூர்ந்தகயல்மீன்கள்பாய்ந்து குதி க்கையிற் கிழிந்ததாமரையினின் றருகேவிழுந்த வொளியை ப்பரப்பினமுத்துக்கள் தண்ணீரோடுபோய்க் காய்த்தவயலி லேபாய்ந்து செந்நெல்லின்முத்துக்களோடு கலந்துகிடக்க வந்நிலமெல்லாங் கொண்டகளிப்பினுன் முத்துக்களாகியவெ யிறுகளைக்காட்டிச் சிரித்தாற்போலத்தோன்றிற்றென்க. (௯)

கண்டாரெவருங்கனிகண்வழியா
வுண்டார்நிறையின்பமுளத்திலெனத்
தண்டார்மிசைசாயளிமொய்த்தனபோன்
மண்டாரறவோர்மிசைமல்கியகண்.

உரை.—மீளவு மிவனைக்கண்டயாவரு மினிதாய்க் கண்ணி ன்வாயானிறைந்த பேரின்பத்தையுண்டமையா லெல்லாக்க ண்ணுங் குளிர்ம்பூமாலையின்மேலே வண்டுகள் சாய்ந்துமொ

ய்த்தாற்போல மலிந்தவறத்திற்சிறந்த விம்மூவரின்மே னெருங்கிவிழுவனவென்க. (௰)

நீர்மேலெழுமாவினெடுங்கதிர்முன்
பார்மேலெழுநீளிருள்பட்டொழியுஞ்
சீர்மேலெழுமூவர்கள் சித்தருளாற்
சூர்மேலெழுதீதுதுடைத்தனரே.

உரை.—அங்ஙனமெல்லாருந் தம்மையன்போடுநோக்க வினிவருங்கடலின்மேலெழுந்தசூரியன் பரப்பின கதிரின்முன்னே பூமியைமூடின விருள்பட்டொழியுந்தன்மையின் மேலும் வந்தமூவர் தம்முகத்தில்வீசினவருளினாற் றுன்பம் விளைவிக்கும்பாவத்தைத்துடைத்து நீக்கினாரென்க. (௰௧)

வேறு.

நீணெறிகடந்தங்குய்ப்ப நினைத்தவான் பயனைநல்கக்
கோணெறிமுகத்துநாதன் கூர்ந்தருள்தளிர்த்தலுள்ளிச்
சேணெறியிறங்கிக்காத்த தேவராய்த்தொழுதபேய்கள்
மாணெறிசிறந்தநாட்டின் வயின்றேறுமோட்டினானே.

உரை.—அங்ஙனம்போலகையி லவதரித்தெடுத்தவுடலோடு நவக்கிரகங்களிலொன்றுபோல விளங்கியமுகத்து நாதன் நெடுவழிகடந்து எசித்துநாட்டிற்செய்யும்படி முன்மனதிலேகுறித்தநன்மைகளை யிப்பொழுது செலுத்தற்காரணமாகத் தன்றயைதளிர்த்துவிளைவிக்கு நினைவினைக்கருதி வானுலகினின்றிறங்கி யுயிரைக்காத்த தேவனென்னும்பெயர்பெற் றங்கே வணங்கப்பட்டபசாசுகளெல்லாவற்றையும் பெருமையிற்சிறந்த வந்நாட்டினின்றுபோக வெங்குமோட்டினானென்க. (௰௨)

புரந்தருந்தயையைக்காட்டிப் புரைதருநரகிலுய்ப்ப
வரந்தருந்தேவராக வணங்கியவலகையீட்ட
மூரந்தருந்திறத்திற்றம்மை யுதைத்தனன்றியாதெஞ்சி
நரந்தரும்வேகத்தோடி நரகிடைப்புதைத்ததன்றே.

உரை. — அங்ஙன மனிதரையிரட்சிக்குந்தன்மையிற் ற
னையனைக்காட்டித் தாம்விளைவிக்கும் பாவமேதரும் நரகத்தி
ல்வரைக்கொண்டுவிடும்படி யங்கேவரந்தருந்தேவனொன்றுவ
ணங்கப்பட்டபசாசுகளெல்லா மளவிறந்தவல்லமைகொண்
டு தம்மையுதைத்துத்துரத்தினவனென்றறியாம லுள்ளே
மெலிந்து மிகவுமஞ்சினதன்மைத்துவிரைந்தோடிக் கீழ்நர
கிடத்துப் புதைத்தனவென்க. (௰௩)

கொன்னொளித்திறத்தினின்ற குணுக்கினநரகில்வீழ்க
பொன்னொளிக்கோயில்யாவும் பொதிர்மணியுருவுந்தேரு[ப்
மின்னொளிச்சாயற்கெட்டு வீழவுங்கண்டயாரு
மன்னொளித்திறத்தநாதன் வழியுறவியந்துநின்றார்.

உரை.—அங்ஙனம் பயனில்லாதவொளியைக்காட்டி நின்
றபசாசுகள் நரகத்தில்விழுந்தவளவிலே யவற்றைவணங்கக்க
ட்டின பொற்கோயில்களு மணியுருவங்களு முயர்ந்ததேர்க
ளு மின்னலொளியைக்காட்டி முழுதுங்கெடுவதுபோலவடி
யோடுகெட்டுவிழுந்தன, அவற்றைக்கண்ட வெசித்தாரெல்லா
ரு நிலைகொண் டசையாதவல்லமையுள்ளநாத னிவற்றைநடத்
தினவழியையறியாம லதிசயப்பட்டுநின்றாரென்க. (௰௪)

நம்பியவுயிரைக்கொல்ல நாட்டியதேவராக
வெம்பியபகையிற்றீய வினைவிளைத்திருந்தபேய்கள் [இ
பம்பியமுகத்தின்முன்னர் பதைப்பவீழ்ந்தொளிப்பநோக்
யம்பியமலர்வாய்க்கோலரனகத்துணுஞ்சுவையின்விள்ளான்.

உரை.—அங்ஙன மவையெலாந்தகர்ந்துவீழ்ந்துதம்மைந
ம்பினவரைக்கொல்லும்படி யங்கேநாட்டினதேவனென்றும
னிதரைப்பகைத்துத் தீவினைவிளைதற்காரணமாயிருந்த பசா
சுகளெல்லாந் தம்மைக்கோபித்த நாதன்முகத்தி னிற்கமாட்
டாமற் பதைத்துப் பதறிவிழுந்து கீழ்நரகிடத்தொளித்தன
வென்றுகண்டுமது மலர்பூத்தகோலாளுமியனுசை மகிழ்ந்தம
னத்தி லுண்டபேரின்பத்தைவிடாதிருந்தானென்க. (௰௫)

பொய்த்திறத்தரசற்கஞ்சிப் போதல்போலொளிப்ப வெய்தி
யத்திறத்துணர்ந்தகுட்சி யருட்பயனிதுவோவிங்கண்
ணித்திறத்தன்பின்மாட்சி யெய்துவருண்டோவென்னக்
கைத்திறத்தலர்த்தாணீவிக் கண்ணினீராட்டினானே.

உரை.— அங்ஙன மகிழ்ந்தகுசை திருக்குமாரனைநோக்கிச்சொல்வான்: பொய்யானவல்லமையுள்ள ஏரோதனாகியமன்னவற்கு நீபயந்தோடிப்போவதுபோல வொளித்துவந்த தன்மைத்துணர்ந்தகுட்சியா னீகுறித்ததயையின்பய னிதுதானோ? இத்தன்மைத்தரியவுன்னன்பின்மாட்சியை யிவ்வுலகிடத் தெவர்கண்டுபிடிப்பவல்லவரொன்று திருக்குமாரன்மலர்ப்பாதத்தைத் தன்கையாற்றடவி யின்பத்தாலுமிழ்ந்தகண்ணீராற்கழுவினாளென்க. (௰௬)

சோலையினிழல்வாயன்பு துளிர்த்தபூமுகத்தினாதன்
மாலையின்றுமைத்தங்கண் வயின்றொறுநிறைப்பவீந்த
வேலையினிறைந்தநன்றி விளைத்துநாடுலவிப்போன
காலையினெருமென்றோர் கடிநகரண்மினாரே.

உரை.— அங்ஙன நெடும்பூஞ்சோலை நிழற்றுந்தன்மைத் துயிரெலாங்குளிர்ப்ப வன்பென்னுந்துளிராவிட்ட பூமுகத்தைக்காட்டினநாதன் பூமலர்மாலைகோத்ததுபோல வொழுங்குபடத் தான்சென்றவிடங்கடோறுஞ்செய்த கடவினுநிறைந்தநன்மைவிளையும்படி யந்நாடெல்லா முலாவிப்போகையி லெருமுமாபுரமென்னு மொருநகரிடத்துச்சென்றாரென்க. (௰௭)

மின்முகம்புதைத்தகொண்மூ விரும்பிமேறவழவானின்
னன்முகம்புதைத்தமீன்போ னறைமுகத்தலர்ந்தபைம்பூத்
தன்முகம்புதைத்தபாலாற் றயங்குமோர்மாமேயங்கண்
பொன்முகம்புதைத்தவாயிற் புறத்தெழிற்பொலிந்ததன்றே.

உரை.— மின்னல்கள்புதைத்திருக்குங் கரியமேகங்களுச்சிக்கொம்புகளைச்சூழவிரும்பித் தவழாநிற்க வானத்திற்புதை

த்தமீன்களைப்போல மதுப்பொழிந்தலர்ந்த பூமிகுதியான் மரத்தின்முகத்தைப் புதைத்ததுபோலத்தோன்றி விளங்கி யவொருமர மந்நகரிற் பொன்னாலலங்கரித்த வாசற்புறத்து வடிவினாற்பொலிந்துநின்றதென்க. (௰அ)

பேர்நலமேன்மையானும் பெயரறியாமையானு
மார்நலமரத்தின்சாயற் காங்குவேறிலாமையானுங்
கூர்நலம்வியந்தபின்னர் கொழும்புகைகாட்டிநன்னாற்
சீர்நலமொழிந்தவன்னார் தேவனென்றிறைஞ்சினாரே.

உரை.—அம்மரம் பெரிதாய்க்காட்டிய வழகின்மேன் மையினாலு மதின்பெயர்தாமறியாததினாலு மவ்வழகுள்ளம ரத்தின்சாயலாய் வேறொருமரமங்கேயில்லாததினாலு மந்ந கரத்தாரெல்லாரு மதினழகதிசயித்துப்பார்த்தபின்பு படித் தநூற்பயனின்றிமயங்கிப் பலவகைப்பூம்புகை யருச்சனை யாகக்காட்டி யம்மரமொருதெய்வமென் று வணங்காநின்றா ரென்க. (அறிவுயிரில்லாதமரமே மனிதரையிரட்சிக்குந் தெ ய்வமென்பது கல்விக்கு நல்லறிவுக்குமொத்திராமையா லம் மரத்தைத் தேவனென்றுவணங்கினவர்நன்னூற்சீர்நலமொ ழிந்தனரென்றாரென்க.) (௰கூ)

மடநடைகண்டபேயும் வடுவளரமைதியென்னத்
தடநடைவளர்ந்தபைம்பூந் தருவிடைக்குடியாய்வைகிப்
படநடைபொறித்தநச்சுப் பாந்தளினுருவிற்கான்ற
விடநடைநெடுநாள்யார்க்கும் விடைமொழிகூறிற்றன்றே.

உரை.—தேவனென்றுமரத்தைவணங்கி யறியாமனிதர் காட்டின மடமைகண்டபசாசு பாவங்கள்வளர்தற்குச் சம யமிதுவென்றெண்ணி மாட்சிமைபெறவளர்ந்த வப்பூமரத் தினிடத்துத்தானே குடியாயிருந்து பொறியுளபடத்தைவிரி த்தநச்சுநாகத்தினுருவத்தையெடுத்து மரத்திலிருந்து தன் னஞ்சினையுமிழ்ந்தாற்போல நெடுங்காலத்துவந்து வினாவின வர்க்கெல்லா மறுமொழி சொல்லிக்கொண் டிருந்ததென்க. (உ௰)

கொழுந்தனமுகத்துநாதன் குறுகவொன்றறியாச்செ
விழுந்தனபேயுநீங்கி வினையரிந்துவந்ததேபோ [ந்தீ
லெழுந்தனமரந்தன்னெற்றி யிறைஞ்சியதிறத்துமூவர்
செழுந்தனவடியிற்செல்லச் சிறப்பொடுவளைத்ததம்மா.

உரை.—அத்தன்மைத்திருந்த மரத்திற்கணுகி யரும்பொன்னொளி முகத்தெழுந்ததிருக்குமாரன் வருகையிற் காரணமொன்றுமறியாமற் றள்ளுண்டு செந்தீநரகத்தி லங்கேபாம்பினுருவாய்நின்றபசாசு விழுந்துபோனபின்பு தன்றன்பவினையெலாநீங்கிப்போய் மகிழ்வடைந்தாற்போல வம்மரந்தன் னுயர்ந்தவுச்சிக்கொம்புகள் மூவர்பொற்பாதத்திற்செல்லும்படிவணங்கினதன்மையால் வளைத்ததென்க. (௨௧)

ணைமவ்வகைத்திறப்பேய்மாக்கள் வளங்கெடத்தெரிந்த.
யுய்வ்வகைத்திறத்தில்வாய்ப்ப வுயர்வரங்கடவுளீந்த [சாகி
மெய்வ்வகைத்திறத்தி லுண்ட விரிந்தபாசிலைநோயாவுங்
கொய்வ்வகைத்திறத்திற்நாளுங் குன்றிலாவிளங்கிற்றம்மா.

உரை.— அப்பொழுதாண்டவணுகியதிருக்குமாரன் மயக்கத்தின்வகையாற் றிறத்தைக்கொண்டபசாசு மனிதருயிர்கெட் டவர்பெருமைகெடும்படி தெரிந்துகொண்ட மரந்தானே யவரு-ஆம்பிழைக்கும்படி வல்லதாய்ச் சிறப்புறும் பொருட்டுத் தானதற் கப்பொழுதுதந்த வரத்தின்றன்மையா லினிலையுண்டமாத்திரத் தெப்பிணியாவு மறுத்துநீக்கும்வல்லமைபெற்றுப் பெற்றவிவ்வர மிந்நாள்மட்டுங்குறையாமல் விளங்கிற்றென்க. (௨௨)

நடையொடுவிளக்கிவான்மேல் ஞாயிறுநடப்பதேபோ
புடையொடுவானோர்மல்கப் போயிவர்திறந்தவன்பின் [ற்
மடையொடுபோய்ந்தநன்றின் வளைவிலநீத்தமெங்குந்[றே.
தொடையொடுவளர்ந்தயாப்போற் றடர்பருவழங்கிற்றன்

உரை.—அங்ஙன நடந்ததன்மைத் தெல்லாவற்றையும் விளக்கிக்கொண்டு சூரியன்வான்மேனடப்பதுபோல விவருமெசித்துநாட்டிற் பதினாயிரம்வானவர் புடையிற்சூழ்த்து

வரும்படிபோலசையிற் றமதன்பாகியமடையைத்திறந்து த
ந்தவழியிற் பாய்ந்தோடின வளையாதநன்மையின் வெள்ள
மெடுத்ததொடையே மாறுதினிதாய்வரும்பாட்டியல்புபோ
ல விடைவிடாதெங்கும் வழங்கினதென்க. (௨௩)

வேறு.

வான்முகத்துவந்தனம் வட்டமிட்டபின்
றேன்முகத்தலர்த்தடஞ் சேர்ந்தபான்மையாற்
கான்முகத்தலர்ந்தநா டெலவிக்காசணி
நான்முகத்தொளிநடு நகர்சென்றாரரோ.

உரை.—அங்ஙனமகிழ்ச்சிகொண்டவளவிலே யன்னங்களெழுந்து வான்மேற்பறந்து சூழவட்டமிட்டுவந்தபின்பு வாசமதுமலர்பூத்ததடாகத்திடத் திறங்கிச்சேர்வதுபோல விம்மூவரும் வாசபூமலர்ந்தநாடெலா முலாவிச்சுற்றினபின்பு பதித்தமணிகளா னாலுமுகத்திலுமொளிவிடநடுநாட்டிருக்குநகரிற் சேர்ந்தாரென்க. (௨௪)

தாமஞ்சூழ்மணிநிரைத் தரிகடாங்கணை
வாமஞ்சூழ்முடியணி மன்னன்வீற்றுறை
யேமஞ்சூழெயிற்பொலீ யிரவிமாபுர
நாமஞ்சூழழகெழு நகரதாமரோ.

உரை.—அந்நகரெந்நகரோவெனில்: ஒளிசூழ்தவழுமணிகளையொழுங்குபட நிரைத்தழுத்திச் சிங்கங்கள்தாங்கிய வாசனத்தின்மேல்விளங்கிய பொன்முடியைச்சூழ்ந்த வந்நாட்டரசன் வீற்றிருக்கும் பொன்னாலெடுத்தமதிளிற் பொலிந்த இரவிமாபுரமென்னும் பெயரையுடையதா யழகினோடுயர்ந்த நகரதுவென்க. (௨௫)

கார்செயுங்குழனலங் கவிழ்ந்தகோபுரத்
தேர்செயுமுகமலர்ந் தெயிலின் தூசுமேற்
சீர்செயும்பயோதரா ஞாஞ்சிற்சேர்த்தகழ்
நீர்செயுமேகலை யணிந்துநீர்த்ததே.

உரை.—மீளவுங் குழலாகியகருமேகங்கள்கவிழ்ந்துநிற்கு
ங் கோபுரமாகிய வழகியமுகமலர்ந்துசூழ மதிளாகிய வுடுத்த
சீலையின்மேற்றோன்றி யழகுசெய்யுங்கொங்கையாகிய பொ
ம்மைகளைச்சேர்த்தி யகழின் றெண்ணீராகியமேகலை யிடை
யிலணிந்து செல்வக்குணம்பெறு நகரதுவென்க. (௨௬)

கேழ்முகநகரடி கிளர்சிலம்பென
வேழ்முகம்பிரிந்தநீ லென்னுந்தீம்புனல்
சூழ்முகநிலங்கெடப் பேய்முன் கொண்டவேழ்
காழ்முகவரவெனக் கவர்கொண்டோடுமால்.

உரை. — நிறமுகத்துயர்ந்த வந்நகரடிச் சிலம்பொப்ப
வொன்றாய்ப்பிறந்து பின்பேழுமுகமாய்ப்பிரியு நீலமாந
தியென்னுந் தீம்புனல் முன்னாளிலே பசாசிவ்வுலகங்கெடுக்
கத் தாமெடுத்தவுருவமாகிய வேழுநச்சுத்தலைப்பாம்பொப்
பக் கவர்கவராயத்நகரைச்சுற்றியோடு மாறதுவென்க. (௨௭)

வரையுயிர்ப்பெனப்புகை மாட[illegible]ற்றிமே
னுரையுயிர்ப்பெனவிடா நுடங்கும்பூங்கொடி
யுரையுயிர்ப்புறுதென வொளிர்கைநீட்டியே
விரையுயிர்ப்பொடுமிவர் விளித்தல்போலுமால்.

உரை. — அத்தன்மைத்துள்ள நகரை மூவரண்டினபொ
ழுதே பொன்மலைவிட்ட மூச்சுபோல வகிற்புகைவிட்ட வு
யர்ந்தமாடங்கடோறுந் தம்முச்சிமேனுரையினாவிபோலவி
டைவிடாதாடிய வழகியகொடிகளெத்தன்மைத்துத்தோன்றி
னவென்னில்: மூவரையழைக்கும்படி வாய்விட்டுக்கூப்பிட்
டாலு மவரிருக்குந்தூரத் துரைத்தசொல் செல்லாதென்று
அக்கொடிகளாடிச்செய்யு மணம்வீசியதென்றலைப்போக்கி
யுந் தம்மழகியகைகளைநீட்டியு மூவரைவரச்சொல்லி யழை
த்ததன்மைபோலத் தோன்றினவென்க. (௨௮)

நீரகம்பொதிர்மணி நிறத்தகாரெனப்
பாரகங்குளிர்ப்பவான் பயன்பெய்தேகியன்
பாரகத்துகைத்திவர் நடந்தெல்லைம்பதா
யோரகங்கிளர்பதி தங்கவேகினார்.

உரை.— அப்பொழுதவரு நீர்ப்புனற்சுமந்து நீலமணியி ன்சாயலினிறத்தமேகம்போலப் பூவுல கினிதாய்க்குளிரும்ப டி வானுலகுள்ள பயன்களைப் பொழிந்துபோ யன்பினுனி றைந்த தம்மனம்வருந்தும்படி துன்பநிறைந்தவழியே யை ம்பதுநாளுநடந்தபின்ன ரழகியநகரிற் பதியாய்த்தங்கியி ருப்பப்போனுரென்க. (உ௯)

சீர்வளரறந்தவந் தியாகமற்றநன்
னீர்வளர்மறைபுடை புக்குநீணகர்
வார்வளர்முரசொலி வழங்கப்புக்கன
ரேர்வளர்முகத்தினு மிலங்குமாண்பினோர்.

உரை.— அந்நகருள்ளிருப்பப் போகையிற் செல்வங்கள் விளைதற்காரணமாகிய வறமுந் தவமுந் தானமு மற்றநன்மை யெல்லாம்விளைவிக்கும்வேதமு மவர்புடையிற் கூடப்புகுந் து முரசுமுழங்கா நிற்க வழகிய தம்முகத்தொளியினும் விள ங்கியமனத்தின்மாட்சிமையுடையமூவரு நீண்டநகருட்புகு ந்தாரென்க. (௩0)

பால்வழிசுவையெனப் படத்தைத்தீட்டிய
கோல்வழியழகெனக் குறையிற்கேள்விசெய்
நூல்வழிபுகழென நுழையன்னூர்புடை
மேல்வழிவளமெலாம் விளையப்புக்கனர்.

உரை.— அங்ஙனம் பால்வழியாக வின்பம்விளையும்போ லவுஞ் சித்திரங்களையெழுதுங் கோல்வழியாகப் படங்களழ குபெறுவதுபோலவுங் குறையாக்கேள்விதந்த நூல்வழியாக மிகும்புகழ்வளர்வதுபோலவு மந்நகருள்ளே நுழைந்த மூவ ர்வழியாக மேலானபெருமையெல்லா மங்கேவிளையும்படி யுட்புகுந்தாரென்க. (௩க)

கொடியொடுகுடைபொருங் கொள்கைத்தாரிருள்
முடியொடுபொதிர்மணி முனிந்தங்கீர்த்தலால்
வடிவொடுபகல்செயு மாடநீங்கியோர்
மிடியொடுகுறுமனை விரும்பிப்புக்கனர்.

உரை. — அங்ஙன மத் நகரினுட்புகுந்து அங்கேவிரித்த கொடிகளு மேந்தியகுடைகளுந் தம்முள்நெருங்கி யொன் றொன்றோடுபொருததன்மையிற் சூரியனைமறைத்து நிறைந் தவிருளைமொய்ப்ப மாடங்கள்முடிமே னெருங்கிப்பதித்த மணிகள்விட்டவொளியா லவ்விருளைக்கோபித்தீர்த்துக்கொ ன்றதனால்வடிவுளபகலைச்செய்யுமந்நகருள்ளமாளிகைகளை, அம்மாளிகைகளெல்லாவற்றையுங் கடந்துநீங்கிவெறுத்துத்த ரித்திரம்பொருந்திய வொருசிறுமனையிற் றமேபுகுந்தா னென்க. (௩௨)

தான்வளர்கதிரழற் றுங்கிறைதருக்
கான்வளர்நிழற்கொடு வெவருங்காத்தென
வான்வளர்வாழ்வினை வகுப்பநாதன்வந்
தூன்வளர்பாசறை யுவந்துநாடினான்.

உரை. — அங்ஙனமதுமலர்பூத்த வுயர்ந்தமரந்தான்வாடி நையும்படி மேற்சூரியன்விட்ட வெங்கதிரகோரத்தைத் தா ங்கி வாசனைவீசுநிழலையெல்லாருக்குஞ்செய்துகாத்ததுபோ லப் பரமநாதனாகிய வத்திருக்குமாரனு மனிதனென்னப்ப ட்டயாவர்க்கும்வான்வீட்டுள்ள முடியாவாழ்வுகளைத்தந்தெ ல்லாரையுங் காத்திரட்சிக்கும்படிவந்து தானவதரித்தெடுத்த வுடலின்வழியே தரித்திரமுதற் றுன்பங்கள்யாவையு மின்ப மென்றுவிரும்பித்தேடித் தனக்குத்தெரிந்துகொண்டானெ ன்க. (௩௩).

எசித்துசேர்படலமுற்றும்.

ஆகப்படலம் - ௨௨ - இ - விருத்தம்

௨௩௨.

இருபத்துமூன்றாவது.

குணுங்குமந்திரப்படலம்.

வேறு.

மின்றிடித்தெறிந்தன்ன வெருவிப்பதறிப்பாய்ந்து
ருண்டன்
றின்றுவிளக்கும்பேயினங்க ளெசித்துநீங்கித்திரையம் [ற்
பன்றுடியரிவெண்மடங்காய்ப் பனிப்புற்றார்ப்பவீழ்ந்தனகா
றன்றுடையர்வுற்றயர்ந்தரசன் றருமினுற்றகொடிதென்றான்.

உரை. — அங்ஙனந் தேவதிருக்குமாரனேவவினு லெசித்தார்வணங்கிய தேவராகநின்று பாவம்விளைவித்தபசாசுகளெல்லா மின்னுமவிடித்துவிழுந்தவிடிபோல வெருவிப்பதறிப்பாய்ந்துருண் டன்றுவொருங்குடன்கூடி யெசித்தினின்று செந்தீ நரகம் பலநாளநுபவித்ததுயரிலு மெண்மடங்காய்நொந்துநடுங்கி வலிதாய்முழங்கும்படி யங்கேவிழுந்தவளவிலே நரகரசனுகியமுதற்பசாசு தன்னுட்டைந்த வருத்தத்துத் தானும்வருந்தி வந்தகொடியதேதென்று சொல்வித்தாருங்க ளென்றுனென்க. (தம்மைப்பகைத்துத்துரத்தினவனுெொன்றறியாமலு மவ்விடையூறுவருமுன்னே யடையாளமொன்றறியாமலு மிருந்தாப்போலே விழுந்ததினுன் மின்னுமவிடித் திடிவிழுந்ததுபோலப் பசாசுகள்விழுந்தனவென்றுரென்க. -மீளவும்பசாசஃறிணையாயினு மிங்கேயாண்பாலுருவு மாண்பாற்பெயரு மெடுத்தமையா லாண்பால்வினையுமுரைப்பது முறையேயென்க.) (க)

தெள்ளுண்டமுதாரெசித்திறைஞ்சுந் தேவர்யாமேமே
ல்வயத்தாற் [லால்
றள்ளுண்டெரிவாய்நரகிடத்திற் சரிந்தோமென்னவறிந்தத

வள்ளுண்டெம்மைச்சிதைத்தழித்த வலக்கையறியோமன்ன
வெறு [மே.
வுள்ளுண்டுமிழ்ந்தசினத்தலறி யுரைசெய்தனவக்குணுக்கின

உரை.—பேய்களரசன்கேட்டதற் கங்கேவிழுந்தபசாசு கள்சொல்லுவன்: தெளிந்தவமிர்த மூறுதற்காரணமாகியவெ சித்துநாட்டில் வணங்கப்பட்டதேவர் நாங்களே, அங்கிருந் தொரு மேலானபெலத்தினாற் கீழேதள்ளுண்டு செந்தீயெரி வாய்நரகத்தில் விழுந்ததறிவோமொழிய வல்லமைகொண் டெங்களைக்கெடுத்துத் துரத்தினவலக்கையை யறியோமை யாவென்று மனதிற்கொண்ட கோபத்தை யுமிழ்ந்தாற்போ ல வலறியார்த்து மறுமொழிசொல்லினவென்க. (௨)

பின்ருவஞ்சத்தரிதுண்டோ பெயர்க்குந்திறங்காணுதி
ரிந்து
குன்ருவஞ்சத்தென்வலியுங் குணிக்கிலீரோவெனச்சினந்து
பொன்ருவுணர்விற்றிறன்காணப் போவல்யானென்ருர்த்தெ
சித்திற் [கோனே.
சென்ருன்சிதைவெங்கணுஞ்சிந்தச் சிந்தைசிந்தாக்கொடுங்

உரை.—அதைக்கேட் டரசன்பின்வாங்காதவஞ்சனை யுள் ளதாயிற் செய்தற்கரியதுண்டோ வுங்களைப்பெயர்த்துத்துர த்தினகாரணமுங்காணுமற் பதறிவிழுந்து குறையாதவஞ்சத் தெனக்குளவலிமையுமெண்ணுநிருந்தீரோவென்று மிகவுஞ் சினந்து மீளவு நானே தளராத வென்னுணர்வின்மிகுதியா லிவ்விடையூறு வந்தகாரணமேதென்றறிய வங்கேபோவே னென்றுமுழங்கிப் புறப்பட் டொருகணத்தி லெசித்துநாட் டிற்சென்ருன் கேடுகளை யெங்குஞ்சிந்தும்படி தீயநினைவி னைவிடாத கொடுங்கோனென்க. (௩)

அண்டாதனயாலவயுமண்டி யாய்ந்தான்கண்டான்
றேவுருவும் [கீ
பண்டாயினதேவாலயமும் பணிப்பொற்றேருந்துகளென்ன
கண்டான்பலரோர்கடவுடனைக் கருதிவணங்கக்கண்டான்க
ண் [ன்.
டுண்டாயினவேவர்காரணமு முணராதெரிதீவீழ்ந்தயர்ந்தா

உரை. — பேயரசனெசித்துநாட்டிற் சென்றவளவிலே யுண்டாதனவிடங்கள்யாவையு மண்டியாராய்ந்தான், பார்த்தான், பார்த்தவளவிலேதேவருருவங்களு மவர்க்குப்பழமையிற்கட்டின கோயில்களு மணிப்பொற்றேர்களுந்தகர்ந்துவீழ்ந்து புழுதியோடுபுழுதியாய்க்கிடப்பதுகண்டான், பலருமிதைக்கண்டு பொய்யானதேவர்வணக்கத்தைவிட்டு-ஒன்றுனமெய்க்கடவுளை வணங்கக்கண்டான், கண்டவளவில் தானுமதற்குக் காரணமொன்றுங்காணுமலெரிதிநாகில் விழுந்து மிகவும்வருந்தினுனென்க. (௪)

இருவாயுருவும்பேயினத்திற் கில்லாதெனினும்வேண்டுநிலைக்
குருவாய்த்தோன்றவுளவயத்தா லருவாங்கெடுத்தகடிக்கரசன்
பொருவாவுருமின்னுர்த்தலறிப் பொருக்கென்றலகைப்பொருனரெலாம்
வெருவாயுளைதன்மனமெரிக்கும் வினைதீர்ப்பதற்குவிளித்தனன்.

உரை. — அங்ஙனநாகில்விழுந்தபேயரசன் பஞ்சேந்திரியங்களுக்குரிய விருவகையுருவமும் பசாசுகளுக்கில்லாதாயினுந் தாம்வேண்டுந்தன்மைத்துருவாய்த்தோன்றும்படி தமக்குளவல்லமையினு லன்றங்கே யவனுருவத்தை யெடுத்துப் பொருவாதபடி வானிடியினுமுழங்கியஞ்சி யுளைந்த தன்மனத்தையெரிக்கும் வினையைத் தீர்க்கும்படி சீக்கிரமாய்ப் பசாசுகளிற்பெரியோரெல்லாரையு மழைத்தானென்க. (இருவகையுருவங்களாவன: மனிதர்முதற் பலவுயிர்க்குள சனிப்பின்வழியாய்த்தோன்றியபழியு முருவமுஞ் சூரியன்முதலியன பொருள்களுக்குள்ள வழியா தொருநிலைநிற்குமுருவமுமென் றிருவகையுருவமென்க.) (௫)

திருகிமேடமருப்பீரேழ் செறிசெஞ்சடைநீட்டேழ்சிரத்தான்
பருகியெரியைக்காவிரத்தப் பருதித்தடத்தவிழிக்கண்ணன்
னுருகியொழுகுதஞ்சுமிழ்மா லோங்கநெடுங்கைத்துண்டத்தான்.
பெருகியழலோடேன்பிளிரும் பிறைக்கூனெயிற்றுவாயுருவா

உரை.—அன்றுபேயாசனெடுத்துக்காட்டினவுருவ மெத்தன்மைத்தோவெனில்: செம்மறிக்கிடாய்க்கொம்பொப்பத்திருகிக்கோணிப் பெருங்கொம்புகளோர்பதினறும் நெருங்கிநீண்டசெஞ்சடையுமுள்ள வேழுதலைகளு மூண்டசெந்தீயைக்கொப்பளியாநிற்கு மிரத்தம்பாய்ந்த வட்டப்பெருங்கண்விழியு மதமாகநஞ்சுருகிவிடு மதயானைத்துதிக்கையொப்ப நீளமாய்த்தூங்கும் பெருமூக்கும் பெருகிப்புறப்பட்டோடும்படி யழலையுமூனையுமுமிழும் பிறையொப்பவளைந்தபெரும்பல்லின்வஃயுமென் றித்தன்மைத் துருவந்தோன்றும்படி நின்ருனென்க. (௬)

வேனோர்நிறவிவேசரிநேர் விரிந்துதிளைத்தமயிர்ச்செவியா [ன்
ஞானேரொழுகிப்பிணக்குப்பை யுதட்டுநாறும்பகுவாயா
கானேர்நெருங்கித்தெங்கிலைநேர் கழுநீள்சிவந்ததாடியினுன்
ருனேரிலமாசொருங்கனைத்துந் தரித்தகுரக்குமுகவடிவான்.

உரை.—மீளவும் வேலைப்போலச் செம்மையாய்நிறவிக்கழுதைக்காதைப்போலவிரியாநின்று மயிர்கணிறைந்த செவிகளு மூத்தையொழுகும்படி யுதட்டிடத்துப் பிணங்கள்குப்பையாய்த்தூங்கித் துர்க்கந்தநாறு மகன்றவாயும் பெருங்காடுபோலநெருங்கித் தென்னிலைகளைப்போலச் செவ்வேநீண்டுசிவந்ததாடியுந் தனக்கொப்பில்லாதபடிக் கருவருப்புள்ளமாசெல்லாந்தரித்த குரங்கின்முகவடிவுமென்று தோன்றும்படி யுருவத்தைக்காட்டிநின்ருனென்க. (எ)

விண்டிக்கிழந்தபழியுளத்தான் வியன்நீக்குடியேற்றருங்கதத்தான் [த்தா
மண்டிக்குயிலாச்சிதைத்துண்ண வஞ்சம்விளைக்குநெஞ்சகனெண்டிக்கசைக்குமானையினு னிப்பார்நடுக்குஞ்சூலத்தான்
பண்டிற்போர்த்தவுருவெனவேம் பகுவாய்ப்பாற்தட்கேதனத்தான்.

உரை.—அவ்வுருவெடுத்துத்தோன்றின பசாசெக்குணத்ததென்னில், தான்முன் வானுலகிழந்தபழியைவிடாத மனமு

மகன்றநரகிற்குடிகளையேற்றும்படி யுரியகோபமும் பூவுலகுள்ள மனிதருயிர்களைக்கெடுத்துண்ணும்படி வஞ்சனைவிளைதற்காரணமாகியநெஞ்சு மெண்டிக்குகளு மொருங்குடனசைப்பவல்ல வாளையும் பூவுலகெல்லா நடுங்கச்செய்யுங் கையிற்சூலமு முலகத்துவக்கினநாளிலே தானெடுத்தவுருவென்று வகன்றவாய்ப்பாம்பின்கொடியுமென் றிவையெல்லாவற்றையுமுடைய வப்பேயரசனென்க. (௮)

இன்னானின்னவுருக்காட்டி யெரிசூழ்பீடத்தெழுந்தோ
ங்கி
யுன்னாதனயாவையுமுன்னி யொத்தவுருவோடிடைசூழ்ந்து
துன்னாழுவம்போற்கடிக்குழுவைச் சுளித்துநோக்கிச்சூளை
யின்வா [றைந்தான்.
யன்னான்கொழுந்துவிட்டெரிக்கு மார்ந்தவழல்கான்றார்த்த

உரை.—சொன்னதன்மைத் தங்கே தோன்றிநின்றபேய்க்கரச னெருப்பினாற்செய்தபீடத்தின்மே லெழுந்திருந்து முன்னினையாதவெல்லாவற்றையு மன்று நினைத்துத் தன்னுருவோடொத்தவுருவுகளையெடுத்துச் சூழவொழுங்கொன்றில்லாமையா னெருங்கியகாடுபோல நெருங்கிநின்றபேய்களின்கூட்டத்தைச் சினந்துநோக்கி யெரியுஞ்சூளை வாய்திறந்தாற்போலக் கொழுந்துவிட்டெரியுஞ் செந்தீப்புறப்படும்படி வாய்திறந்து வலுவாயார்த்துச்சொன்னானென்க. (௯)

வேறு.

பீடுடைவரத்திலொவ்வாப் பெருந்தகைநாம்வான்வா
ழ்ந்த
வீடுடைப்பெருஞ்சீர்மாட்சி விட்டிழந்தெரிதீத்தாழ்ந்துங்
கேடுடையனுமொன்றெண்ணாக் கிளர்வயத்துணர்வின்பாலா
வீடுடையரசும்பேரு மெடுத்துவீற்றிருந்தேனென்றே.

உரை.—வல்லமைபொருந்தியடைந்தவரங்களானிகரொன்றின்றிப் பெருமாட்சிமையோடு நாமுன்வாழ்ந்திருந்த

வான்வீட்டினுள்ள பெருஞ்சீர்ச்செல்வங்களையிழந்து தீ யெரிநரகிற்றாழ்ந்தானு மிதுநமக்குவந்தகேடென்றாந்துன் பமென்றுமனதிலெண்ணும மிறைந்த வெனதுவல்லமையு மூணர்வின்சூட்சியு முதவியதன்மையாற் பெருமையுள்ளவ ரசும் பெருங்கீர்த்தியுமடைந் திந்நாள்வரைக்கும் வீற்றிருந் தேனல்லோ வென்க. (௰)

ஓரொன்பான்பகைசெய்தானு மூலகின்பாற்கொற்றங் கொண்டேன் [டே
சீரின்பால்வணக்கங்கொண்டேன் றிருமணிச்சிகரங்கொண்
காரின்பால்மின்னின்மின்னுங்கனகவாலயமுங்கொண்டேன்
பாரின்பாவின்றென்றுண்மை பகையிலாக்குறையக்கண் டேன்.

உரை. — அங்ஙனமொன்றுனகடவு ளெனக்குப்பகைசெ ய்தானு நானேபூவுலகிடத்துவெற்றியைக்கொண்டேன், ம னிதரென்னைவணங்கச்செய்தேன், மணியாற்செய்தசிகரமே கத்துட்பாய்ந்து மின்னலொப்பவிளங்கின பொற்கோயில் களையெனக்குக்கட்டச்செய்தேன், இவையெலா மிங்ஙனமா யபின் பின்று பூவுலகிடத்துப் பகையின்வழியைக்காணும மென்வல்லமை குறையக்கண்டேனென்க. (௰க)

கதிருண்டமணியிற்சீர்த்துக் களியுண்டவெசித்துநாட்டி லெதிருண்டபகையொன்றின்றி யியலுண்டாண்டொருவ னின்றேன்
முதிருண்டவிறைவராக முயலுண்டவணக்கங்கொண்ட [ன்.
பொதிருண்டவெனதுசேனை பொருக்கெனவிரியக்கண்டே

உரை. — விளைந்தவொளிசெய்மணியாற் சிறந்துகளிகூர் ந்தெழுந்த வெசித்துநாட்டி லெதிரும்பகையுமின்றி யியல் பெறநானொருவனாளநின்றேன், இப்பொழுதங்கேபழமை யிற் றேவராகவணங்கப்பட்ட வெனது நிறைந்தசேனைக ளெல்லாந் துணுக்கெனவெருவி யிங்கே விழவேகண்டேனெ ன்க. (௰உ)

கார்தவழ்வரைகடோறுங் கடிமலர்ப்பொழில்கடோறு
மேர்தவழ்புரங்கடோறு மெண்ணருமிடங்கடோறுஞ்
சீர்தவழ்சிகரத்தோங்கிச் சிறந்தவாலயங்கள்யாவும்
போர்தவழ்களங்கடுவும் பூழியென்றாகக்கண்டேன்.

உரை.—மீளவு மேகங்கள்தவழுமலைகடோறும் வாசமலராப்பூத்தசோலைகடோறு மழகிற்பொலிந்தவூர்கடோறு மற்றெண்ணப்படாத பலவிடங்கடோறு மழகுபெறக்கட்டியிருந்த சிகரத்திற்சிறந்தகோயில்கள்யாவும் போர்க்களத்தெழு நுண்டூசியொப்பத் தகர்ந்து தூளாய்ப்போனதாகக்கண்டேனென்க. (௰௩)

பொன்முகத்தொளியைத்தும்மும் பூஞ்சுதையுருவும் பூண்ட
மின்முகத்தெறிக்குங்கற்றை விரிமணிமுடியுந்தாரு
மன்முகத்தணிப்பொற்றேரு மற்றணிசிறந்தயாவுங்
கொன்முகத்தலகையோடுங் குழைந்தழிந்தாகக்கண்டேன்.

உரை.—மீளவும் பசும்பொன்வாயாலொளியைத் தும்மியழகுபெற நற்சுதையாற்றீர்ந்த தேவருருவங்களு மவ்வுருவங்களணியாய்ப்பூண்ட மின்னிவிளங்கிய மணியொளிமுடிகளு நெடுமணிவடங்களு மங்காதழகுளபொற்றேர்களு மற்றச்சிறந்தவணிகள்யாவும் வீணாய்ப்போ யிங்கேவிழுந்த பேய்களோடுந் தாமும்விழுந்தழிந்ததாகக்கண்டேனென்க. (௰௪)

நரந்தருங்குலைவினைந்து நாடொழிந்தோடினாரை
வரந்தருந்தேவராக வணங்கவோவென்னையாருஞ்
சரந்தரும்பூவுஞ்சாத்தாச் சாந்தமும்புகையுங்காட்டாப்
பரந்தருங்கமழ்நீராட்டாப்பணிதலொன் றினையுங்காணேன்.

உரை.—மீளவு மெசித்துநாட்டி லுள்ளவரெல்லாரு மானதைக்கண்டு பயந்து மெலிவெய்தி நாட்டைவிட்டோடினவரா யினிநாம் வரந்தருந்தேவரென்றெண்ணவும் வணங்கவுஞ்செய்வோமோவென்று நமக்கு மதுமலர்மாலைகளைச்சாத்தாமலுஞ் சந்தனமும் பூம்புகைகளையுங்காட்டாமலு முன்

னேபோலவரசநீராட்டாமலு மொருவணக்கத்தையுநடத்
தக்கானேனென்க. (௰௫)

பணிமுகத்துயிர்கட்கேடாய்ப் பண்டுளியெருமுபோற்
யணிமுகத்தலர்ந்தசாகி யரிதெலாப்பிணிகடீர்ப்ப [றி
மணிமுகத்திறைவன்றந்த வரத்துறைந்தனபேயோடித்
துணிமுகத்திவையோர்ந்தன்னார் தொழுதல்விட்டிருப்பக்க
ண்டேன்.

உரை.— மீளவும் எருமுமாபுரத்தண்டையிலிருந்தமரத்திற்குச்செய்தவணக்கத்தா லுயிர்கள் பாவங்கொண்டுகெடும்படி நெடுநாள்வர்வணங்கி யழகிதாகமலர்ந்தமரமே யிப்பொழுதரிதாய் நோய்ப்பிணியாவையுந்தீர்க்கும்படி யதற்காண்டவன்றந்தவரத்தினா லம்மரத்திற்குடியாய்நின்றபேயுமோடி யிவையெல்லாவற்றையுந் தெளிவாகவவராராய்ந்து அம்மரத்தையும்வணங்காமலிருப்பக்கண்டேனென்க. (௰௬)

இத்திறத்தெவணத்தாரு மென்னநகைத்திகழ்ச்சிகூற
மைத்திறத்துயரொன்கோன்மை வசையினோடழியக்கண்டே
யத்திறத்தனைத்துமாக்கி யடும்பகையணுகிப்பார்க்கின்
மெய்த்திறத்துயரொன்காட்சி மெலிதரவொன்றுங்காணேன்.

உரை.—இவையெலாமாகையி லெவ்விடத்தாருமென்ன நகைத்து நிந்தையைச்சொல்லும்படி மனிதனாமயக்குவிக்குந்திறத்திற்பொலிந்த வெனதுகோன்மை வசைபடவழியவுங்கண்டு, அங்ஙனமத்தனையுஞ்செய்த நம்மைக்கொல்லும்பகையையறியும்படி யங்கேபோ யாராய்ந்துபார்த்தவிடத்துத் தப்பாதவெனதறிவாண்மை மெலிவெய்தி யொன்றுங்காணேனென்க. (௰௭)

காட்சியாறெளிந்துபார்க்கிற் காரணமியாதோநாடி
மாட்சியாலுயரந்நாட்டில் வந்திருபூதர்கண்ட
சூட்சியானவழிதொன்றே துளங்கறத்துயர்ந்தோரோனும்
பூட்சியாலுளந்தோராகிப் புரியுமோர்கருமமுண்டோ.

உரை.—அங்ஙன நானென்னறிவின்கூர்மையா லெல்லாவற்றையு மாராய்ந்துதிரிகையி லேதோகாரணத்தைப்பற்றி மாட்சியிற்பொலிந்தவெசித்துநாட்டி லிரண்டுயூதராகிய மரியுஞ்சூசையும்வந்ததாக வென்சூட்சியா லங்கேகண்டநாதனமிதொன்றே யவ்விருயூதர்விளங்கியவறத்திறனுயர்ந்தோர்தானேயாயினு மவர் தரித்திரரா யுடல்மெலிந்துளைந்துதிரிவராகையி லவராலாவதுண்டோவென்க. (திருக்குமாரனையறியாமையா லவனையெண்ணாம விருயூதரென்றானென்க.) (௰௮)

நான்விளைவஞ்சத்தொல்கா நஞ்செனவின்பம்வெஃகா
தூன்விளைதுயரிற்குன்றா வுளைவிளைபுகழினோராக்
கான்விளைதவத்திலொவ்வாக் காத்தமாண்பிருவரேனும்
வான்விளைபகைக்குந்தீதவ வயத்தலாலஞ்சேனானே.

உரை.—அவ்விருயூதரைப்பார்க்கும்போது நானவரைக் கெடுக்க நெடுநாள்செய்த வஞ்சதந்திரங்களுக் கசையாமலு நஞ்சினைப்போலப் பூவுலகுள்ளவினியவாழ்வுகளைவிரும்பாமலுஞ் சரீரத்தைப்பற்றிவருந் துன்பங்களின் மனங்குழையாமலுஞ் சொல்லத்தகும்புகழின்மேலாய்க் காட்டிற்செய்யப்படுந்தவநிகராமற் றம்மனத்தையு மைம்பொறிகளையுங் காத்ததவத்தின்மாட்சியையுடையவ ரிருவருந்தானே யாயினும் வானுலகுள்ளோர்முதலா யென்னைப்பகைத்தாலு மாண்டவனுக்கொழிய வெவர்க்குமஞ்சேனானென்க. (௰௯)

ஆயினுமன்னயாவு மாயினவழியும்வாயு
மாயினுமறிகிலா நா னனைவருமழைத்தல்செய்தேன்
வீயினுங்கொடியநெஞ்சீர் விளைந்தவித்துயர்வீயாதும்
வீயினும்புரியுந்தன்மை விளம்புதீரென்றான்வேந்தே.

உரை.—இவையெலாமிங்ஙனமாகியு மவையெலாம்வந்த வழியுந் தன்மையு மாராயினு நான்கண்டறியாமையா லும்மையெல்லாரையுமழைத்தேன், இனிக்கொல்லும்புலியினுங் கொடியநெஞ்சினையுடையோரே வந்தவிவ்விடையூறெல்லாந் தீராதாயினுந்தீர்ந்தாயினுஞ் செய்யவேண்டியகருமஞ்சொல்லிக்காட்டுவீராகவென்றான் பேய்க்கரசனென்க. (௨௰)

கடாவியவசனியன்ன கவலைகொள்ளரசைநோக்கித்
தடாவியசரணமேத்தித் தரணியாவையுமேய்த்தேய்க்கப்
படாவியந்தரத்துள்வஞ்சம் பழுத்தகூரறிவின்வல்லான்
சிடாவியனென்னுங்கூளிதீயுமிழ்ந்துரைமுன்கொண்டான்.

உரை.—அங்ஙனஞ்சொல்லி நெஞ்சிலேகடாவினவிடியைப்போலப் பெருங்கவலையுட்கொண்டு நின்றவப்பேய்க்கரசனைநோக்கி யவனடிகளைத்தடவிவணங்கிப் பூவுலகெல்லாமேய்த்துத் தாமேய்க்கப்படாதபேய்களினுண் மிக்கவஞ்சத்தாற்பழுத்ததுபோலக் கூர்ந்தவறிவின்வல்லவனாய்ச் சிடாவியனென்னுமொருபேய் வாய்வழியாக வழலைத்திரளாயுமிழ்ந்து முன்னேயுரையைக்கொண்டானென்க. (வியந்தரமென்பது பேய்தானென்க.) (உக)

வேறு.

ஐயங்கொண்டார்கண்டவையெண்ணிக் குறையென்
றய்யங்கொண்டாலாரறிவெஞ்சி யரிதுய்வார் [று
மொய்யங்குண்டாய்வானிழிநாளின் முறிவென்றோ
வய்யங்கொண்டாரேற்றியகோவின் வலிகொண்டோய்.

உரை.—சிடாவிய னெங்ஙனஞ்சொன்னானென்னில் வஞ்சனையுடையார் கண்டயாவையு மனதிலெண்ணிப்பார்ப்பாரொழிய வவற்றாற் றமக்குக்குறைவந்ததென் றுமயங்கார், அச்சங்கொண்டுமயங்கினா லறிவும்மயங்கி யவர்தப்பிப்பிழைப்பதரிது, முன்னாளில் வானுலகத்திலாய போர்முகத்தி னுந்தோற்றுவிழுந்ததினால் வந்தகேடென்ன? அதின்பின்பல்லோ பூவுலகெல்லா முன்னைவணங்காநிற்கப் பெருஞ்சீர்ச் செங்கோலேந்தி வல்லமையோ டாண்டுகொண்டிருக்கின்றானென்க. (உஉ)

மையின்வாயாறம்மறிவெஞ்ச மயலுய்க்கு
மெய்யின்வாயாலீனமவிந்த வினைமாக்கள்
பொய்யின்வாயாற்பொங்கடலானும் புரிகின்ற
மொய்யின்வாயானிற்பவர்கொல்லோ முறியாதார்.

உரை. — உளத்திருள்மொய்த்தவழியாற் றம்மறிவொளியேகெடும்படி மயக்கத்தைக்கொண்டுவிடுமுடலைப்போர்த்ததனு வீனமும் வினையு நிறையக்கொண்ட மனிதராகையிற் பொய்யைக்காட்டியதன்மையிற் பொலிந்தவல்லமைகொண்டு நாமவர்க்குச்செய்யும்போர்முகத் தவரோமுறியாமனிற்பாரென்க. (ஆகையி லெசித்திடைவந்தகேடு மீட்பதெளிதென்பதுகருத்து.) (௨௩)

ஆய்ந்தாய்ந்தெல்லா நீயறியாதொன் றறைவேனோ
மாய்ந்தான்மைந்தனென் றரிதையன் மனம்வாடக்
காய்ந்தார் துன்பந்தீர்ப்பமகன்றன் கவினொப்ப
வேய்ந்தான்வாய்ந்தோர் நல்லுருவன்பின் வினையாற்றான்.

உரை. — மனிதர்தங்குணத் தீனங்காட்டும்படி சடாவியன் றன்னாலாகியசிறிதுசெய்தியைச் சொல்லத்துடங்கினான்: மன்னவ நீயெல்லாவற்றையுமாராய்ந்தமையா லறியாததொருசெய்தியு முனக்குநான் சொல்லவோ? ஆகிலுஞ்சிறிதுகேட்பாயாக, முன்னாளிலொருவன் றன்மகனிறந்தானென்று மனத்தைவாட்டிக் காய்ந்ததுன்பமாறுமென்று பிள்ளைமேல்வைத்த வன்பின் றுயரையாற்றும விறந்தமகனழகொப்ப வழகியவோருருவத்தைச்சமைத் தலங்கரித்தானென்க. (௨௪)

ஐயக்கண்டேவற்செய்பவர்தாதை கடிதுற்ற
மைக்கண்டுள்ளந்தேறுமெனத்தாம் வழிபாடாய்ப்
பொய்க்கண்டேனும்பூவொடுவாசப் புகைசாத்தி
யைக்கொண்டோர் நற்றெய்வதமென்றா ரறிவற்றார்.

உரை. — இறந்தமகற் குருச்சமைத்தபின்பு கையூழியத்தைப்பற்றித் தகப்பனுக்கேவல்செய்திருந்தவரோவென்னிற் றகப்பன்வருந்திக்கொண்ட மயக்கத்தைக்கண்டு - அவன்மனமகிழ்ந்துதேறும்படி யவர் தேவபூசையாக மதுமலர்ப்பூவும் வாசம்பொழிபூம்புகையு மவ்வுருமுன்னேகாட்டிப் பொய்யிதென்று தம்மனமறிந்து மதிகெட்டவரா யழகியவோர்தெய்வமிவனென்றுசொல்லத்துடங்கினாரென்க. (௨௫)

செல்லுந்தன்மைத்தாயவைகேட்டுத் திருவல்லோன்
வெல்லுந்தன்மைத்தையனையேத்த விரிபார்மேற்
சொல்லுந்தன்மைத்தர்ச்சனைவிஞ்சத் துகளாக்க
மொல்லுந்தன்மைத்தோரிறையோனை யொழிகின்றார்.

உரை. — அங்ஙனமிவைநடந்துவருகையின் மகனுக்குத் தகப்பன்செய்தவற்றைக்கேட்டுச் செல்வமிக்கோ னொருவ னிதிலுஞ் சிறப்புபெறத் தானிறந்ததன் றகப்பனுக்குநடத்தி யவனைவணங்காநிற்பச் சொன்னதன்மையா னுள்வட்டத்தி லே விரிந்தபூவுலகிற் பலவிடங்களிலே பலவர்க்காராதனைமிக வுநடக்கையிற் பாவம்விளையுந் தன்மைத்து மனிதர் துணையி லா மிக்காருமின்றி யொப்பாருமின்றி யொன்றாய்நிற்குமெ ய்க்கடவுளை மறந்தாரென்க. (௨௬)

எய்யாமாக்கட்டையுறநானே யெளிதிவ்வாய்
மெய்யாதாதன்றன்னைமறுத்தே வினையுய்க்கும்
பொய்யாவஞ்சத்துய்த்தனபொய்யம் பலதேவர்
கொய்யாவண்ணத்தெங்கணுமேத்துங் குழுகண்டாய்.

உரை. — அங்ஙன மறிவில்லாதமனிதர் தீநரகில்விழும்ப டி நானே யிவ்வழியோடெளிதாய் மெய்யானகடவுளுக்குமா த்திரஞ் செய்யவேண்டிய வாராதனைமறுத்துத் தப்பாமற் றீவினைவிளைவிக்கு மென்வஞ்சத்தினாற்கொண்டுவிட்ட பல பொய்யானதேவர்களைவிடாமலிப்பொழு தெங்கும் கூட்ட ங்கூட்டமாய்வணங்கக்கண்டாயேயென்க. (௨௭)

ஊன்றேய்மாக்கட்டங்குணமிஃதே லுளவென்றே
கான்றேய்பைம்பூஞ்சோலையெசித்தார் கசடற்று
வான்றேய்பின்போலொல்குபுநின்றாள் வலியேத்த
நான்றேய்வஞ்சஞ்சால்பெனச்சொன்னா னவைமிக்கான்.

உரை. — அங்ஙன முடலைக்கொண்டமாக்கட்குணத்தின மித்தன்மைத்தாயி னிப்பொழு தெசித்திடத்தாயவை கண்டு குழைவானேன்? வாசமதுமலர்ச்சோலையிற்பொலிந்த வெ சித்துநாட்டிலுள்ளயாவரு மீளவுந் தீவினைகொண்டு மின்

னவொல்குஞ் சீக்கிரத்துத்தம்மனந்திரும்பியுனதடிவல்லமை யையவணங்கும்படி நாவொருவனுள்ளவஞ்சமே போதுமெ ன்றான் பாவம்விளைவிக்குஞ் சிடாவியனென்க. (உ௮)

என்றனன்றனென்றவைகேட்டா ரினிதென்றார்
வின்றனெர்பான்விஞ்சியமாயை வினைவல்லா
னின்றன்முன்பானென்றதிகழ்ந்து நிறைநக்குப்
பொன்றவின்றுபூணரசேத்திப் புகலுற்றான்.

உரை. — அங்ஙனஞ்சிடாவியன்சொல்லச் சொன்னதைக் கேட்டயாவரு நல்லதென்றார், வின்றனென்னு மொருபே யோவென்னின் மாயைவித்தையிற்பொலிந்து வினைவிளைவத ற்கு மிகவும் வல்லவனாய் முன்னவன் சொன்னதைநிந்தையா க மிகவுநகைத்து முடியாததீவினையெல்லா மணியாகவணிந் த மன்னவனைவணங்கிச்சொன்னனென்க. (உ௯)

வேறு.

கார்நடந்துளிவாவியைக்காத்தபுள்
நீரகன்றுளிநிற்பதுகாண்பரோ
சீரடைந்துளிமானிடர்செய்யறஞ்
சூரடைந்துளிதோமொடுமாற்றுவார்.

உரை. — மனிதரைவெல்லுவதரிதோ வவர்குணமெங்ஙன மென்னில், மாரிகாலத்து நிறைந்ததடாகத்திடத்துக் காத்திரு ந்தபறவை நீரெல்லாம்போய்வற்றினபின்பு அங்கேநில்லாம ற்போவதுபோல மனிதருஞ் செல்வக்காலத்துச் செய்யுங்க மங்களைத் துன்பக்காலம்வந்தவளவிலே விட்டுப் பாவமாக மாற்றுவாரென்க. (௩௰)

மைத்திறத்துயிரெய்த்ததுவண்மையோ
மெய்த்திறத்திறையோன்விறலெய்த்தெனக்
கைத்திறத்துயிர்காத்திடத்தான்செயு
மத்திறத்துயிர்க்கேடுறவாக்கினேன்.

உரை.— சிடாவியன்சொன்னபடி பாவத்திருளே மெய்த்தவுயிரையுள்ளமனிதனையேய்ப்பது வல்லமையென்பவோ? நானே மெய்யின்வழியா னிகரிலதிறத்தையுடையகடவுளின் வல்லமைதன்னை யேய்த்தாற்போல வவன்றன்வல்லமைகொண்டு மனுக்குலத்துயிர்களை யிரட்சிக்கும்படி தான்செய்ததைக்கொண்டு நானவ்வுயிர்களுக்குக்கேடுவரும்படிசெய்தேனேயென்க. (௩௧)

நிழன்றசோலையெசித்தினை நீங்கிவந்
தழன்றகானுறியூதரறைந்ததீத்
தழன்றசொற்கிறையோன்றருமேவலாற்
சுழன்றராவுயிர்துய்த்தனசால்பரோ.

உரை.— சொன்னதையெங்ஙனஞ் செய்ததென்றுசொல்லத்துடங்கினான்: நிழலிற்பொலிந்த சோலைகணிறைந்த வெசித்துநாட்டைவிட்டுத் தீச்சுடுங்கானத்துவழி யூதர்வருகையிலாண்டவற்குக்குறையாக முறைப்பாடுகளைச் சொன்னதினாலவன்சினந்தேவினபாம்புகள் திரளாய்வந் தவரைக்கடித்துமிகவுங்கொன்றனவென்க. (௩௨)

ஓவியேங்கியுளைந்திறைவேண்டினார்
மேவிவேண்டினர்மேவுகின்றண்டகை
யேவிமோயிசனீண்டொருபாந்தளைச்
சாவிலாம்படிதாம்பிரத்தாக்கினான்.

உரை. — ஆண்டவனேவவினான் மொய்த்தபாம்பின் கடியாற் றிரளாயிறப்பதுகண்டு நொந்தேங்கி யாண்டவனை வேண்டினார், அங்ஙனந் தன்னையண்டிவேண்டினார்மேலிரங்கின கடவுளேவினதினால் யூதர்க்குத்தலைவனாகியமோயிசன் சீக்கிரமாயினியொருவருஞ்சாகாதபடி செம்பினாலொருபாம்புருவத்தைச்செய்தானென்க. (௩௩)

ஆக்குகின்றவராவொருகம்பமேற்
றாக்குகின்றனன்றாக்கியபாந்தளை
நோக்குகின்றனர்நாயகிநஞ்சினை
நீக்குகின்றுயிர்நீங்கிலருய்வரே.

உரை.—அங்ஙன மோயிசன் செம்பினாற்செய்தபாம்பினை யொருகம்பத்தின்மேலேற்றிவைத்தான், அங்ஙன மேற்றிய பாம்பினைப் பார்த்தமாத்திரத்திற் பாம்புகளாற்கடிபட்ட யாவரும் கடித்தபாம்பினஞ்சுபோய்ச் சாகாமற் பிழைப்பாரென்க. (௩௪)

வாய்ந்தநன்றிமறப்பதுதீதென
வாய்ந்ததன்மையராவழியாதுபின்
றேய்ந்ததம்மகர்க்காண்டகைமேவிமுன்
னீய்ந்தநன்றியிதென்றவர்சாற்றுவார்.

உரை. — அங்ஙன மாண்டவன் றமக்குச்செய்தநன்றியைமறப்பது தீதென்றெண்ணி யதைமறவாதபடி யாண்டவனேவிச் செம்பினாற்செய்யப்பட்டபாம்பினை யழியாமலவ்விடையூறு போனபின்னும் வைத்திருந்து பின்காலத்துவந்த தம்மக்கட்கதைக்காட்டி முன்னாளிலே கடவுளதைக்கொண்டு தமக்குச்செய்தநன்றியின்னதென்று சொல்விக்காட்டுவாரென்க. (௩௫)

புரைதருந்தடமீதெனப்புக்குநா
னிரைதருங்கடனீதியிதென்றவர்
விரைதரும்புகையும்வெறிமாலையு
முறைதரும்புகழோடிடநாட்டினேன்.

உரை. — இவையெலாங்கண்டு நான்பாவநுழையும்வழியிதென்றெண்ணி யுட்புகுந்து நீதிநிரையாமென்று நான் சொல்லவ ரப்பாம்புருவின்முன்னே வாசபுகைகளையு மணமலர்மாலைகளையுஞ்சாத்திப் பலபுகழ்களைப்பாடும்படி முறையைநாட்டினேனென்க. (௩௬)

முன்னிருந்தனர்காலமுடித்தபின்
பின்னிருந்தனர்பேரொழிற்பாந்தளுக்
கென்னிருந்தனிச்சூட்சியினேவலான்
மன்னிருந்தனமந்திரமாக்கினர்.

உரை. — அங்ஙன முன்னிக்கதையெலா நடந்தகாலத் திருந்தவரிறந்து பின்னேநின்றவர் நிகராதவென்னரியசூட்சி

யினேவலின லவ்வழகுள்ள பாம்பினுருவத்துக்கோருயர்ந்த பொற்கோயிலேக்கட்டினுரென்க. (௩௭)

மாகநாதன்வனேத்தலைமாற்றியந்
நாகமாக்கியநன்றியதென்றுநா
ஞகநாதனெனும்பெயர்நாட்டிக்கே
டாகநாகத்தருச்சனையாயதே.

உரை.— அப்பொழுதுபாயமாய் நானுமைழந்து வானநாதனுகிய கடவுளே செய்தநன்றியைமாற்றி யத்நாகத்தானே மூன்னேளாயிரட்சித்துச் செய்தநன்மையதென்று நாகநாதனென்னும்பெயரு மதற்குநாருட்டி யதனுல்வர்கெடும்படிபாம்பினுராதனே நிலெகொண்டாயிற்றென்க. (௩௮)

நாகநாதனே நம்பவினுகவா
யாகமாறுமென்றாகமம்போன்றுதற்
பாகமாய்விடம்மூடியபற்கதை
யாகமாநிலத்தர்ச்சனே நாட்டினேன்.

உரை.— மீளவு நா னப்பாம்புக்கு நாகநாதனென்னும் பெயரை நாட்டினபின்ன ரந்நாகநாதனே நம்பினுற் கடித்த பாம்பினஞ்சுமாறுமென்று சொல்லிச் சருக்கரைமேலேபூசி நஞ்சினைமூடினதன்மையால் வேதநூலாகமம்போலப் பல கதைகளேயுங்கொண்டுவிட்டுப் பூவுலகெங்கு நாகநாதற்காராதனே நாட்டினேனென்க. (௩௯)

ஆண்டங்காயிரத்தைம்பத்திரண்டுபோய்
மாண்டகோனெசைக்கியன்மனம்பொருப்
பூண்டபாத்தனேப்பூழியையாக்கினு
மீண்டவ்வர்ச்சனே பற்பலர்விட்டிலார்.

உரை. —அங்ஙன மாண்டவனேவலினுன் மோயிசனப் பாம்புருவத்தை யுண்டாக்கினபின்ன ராயிரத்தைம்பத்திரண்டுவருடம்போய் யூதர்நாட்டையாண்டிருந்த மாட்சியிற் பொலிந்தவெசைக்கியனென்பவ னவ ரப்பாம்பினேவணங்கி

னதைக்கண்டு மனம்பொறுமற் கோபித்து மிக்கலங்கரித்தவ
ப்பாம்பினுருவத்தையழித்துத் தூளாக்கினுன், ஆயினுமி
ன்னமன்றுதொட்டுவந்த நாகநாதனுகிய பாம்பின்வணக்க
த்தைப் பலரும்விடாமற் சிலதேசங்களில் வணங்குகின்றுரெ
ன்க. (சு௰)

அறம்வழங்கிடவன்பொடுநாதனைப்
புறம்வழங்கியவின்னவைபொய்யொடு
மறம்வழங்கிடமாற்றியபின்னரொன்
றிறம்வழங்கிலசீருமுண்டோவென்றுன்.

உரை. — அங்ஙன நல்லறம்வழங்கும்படி யன்போடுகட
வுள் யூதரிடத்துநடத்தின விவைவெல்லாவற்றையு நான்பொ
ய்களைக்கலந்துமாற்றிப் பாவம்வழங்குதற்காரணமாகச் செய்
தபின் பெனக்குள்ளவல்லமைக்காகாததுண்டோ வென்றுன்
வின்றுனென்க. (சுக)

பித்தனுகமம்பேசியதன்மையி
லத்தனு துரைகேட்டரும்பட்டிமை
மொய்த்தநாளிமுகத்தரில்முற்றிய
சத்தனுசெனும்பேயிவைசாற்றினுன்.

உரை. — அங்ஙனம் பித்தன் வேதநூலாகமங்களைப்பேசி
னற்போலவின்றுனெடுமொழியோடு சொன்னதைக்கேட்டு
மனதிலேவஞ்சநிறைந்த கிழநாய்முகத்துருவெடுத்து நின்ற
வனுய்ப் பாவத்தின் முற்றியமனத்தனுய்ச் சத்தனுசென்னு
மொருபேய் சொல்லத்துடங்கினுனென்க. (சுஉ)

வேறு.

நீரிறவழ்மொக்குளெனநேர்பொருதகான்முன்
றேரிறவழ்சித்தியெனவேழுதிரைசீற்றக்
காரிறவழ்மின்னலெனநேர்கருதிநில்லாப்
பாரிறவழ்மன்னுயிர்கடம்பரிசிதன்றே.

உரை. —முன்சொன்னபடி மனிதர்குண மெத்தன்மைத்
தோவெனில்: நீர்மேலாடுங்குமிழிபோலவு மெதிர்த்துவீசிப்

பொருதகாற்றின்முன்னர் தேரின்மேலோடு மிடக்கியம்போலவு மிடிகளைத்திரளாய்க்கொண்ட சினத்தோடு மேகத்திடத்துத்தோன்று மின்னல்போலவு மனிதருமொழுங்குபடவொன்றினை நினைத்தகாலத் ததிலே நிலைகொள்ளாமற் றிரும்பியாடலே பூவுலகிலுடலோடு தவழுமுயிர்களாகக்கொள்ள வவர்குணமிதுவென்றனென்க. (௪௩)

இப்பரிசினுயிரமனத்தவரையேய்த்து
மைப்பரிசினெங்குடிலமாயையடல்பொய்யாப்
பொய்ப்பரிசினுமுலகுபுக்கினிதிலாண்டோ
மப்பரிசினிப்பொழுதமைப்பதரிதையா.

உரை. — சொன்னதன்மைத்து நொடிக்கொருமனமாக வாயிரமனமாய்த் திரும்பிநிற்கு மனிதரையேய்த்து மயக்கத்தின்றன்மையால் வல்லமைகொள்ளு நமது கொடியமாயை தப்பாமற் பொய்யின்வழியே நாம்பூவுலகிற்புகுந் தினிதிந்நாள்வரைக்கு மாண்டதுள்ள துதானே யாயினு மினி யித்தன்மைத்தாவ தரிதையாவென்றனென்க. (௪௪)

நோமவியவந்தபலநூதனமுநோக்கில்
வீமவியசன்றதலைமேதினியிலண்டாத்
தீமவியிருட்செறியுமித்திசையிலாண்டு
நீமவிநின்வஞ்சனைநிகழ்த்தனலதென்றான்.

உரை.— நாமெல்லாரு மிகவும்வருந்தும்படி யிக்காலத்து வந்த பலநவங்களைப்பார்க்குமிடத்தில் மலராப்பூத்து விரிந்த பூவுலகிலண்டாமற் செந்தீநிலமா யிருளேநிறைந்த விவ்விடமாகிய நரகத்தி னீயாண்டுகொண் டுன்வஞ்சனையிங்கேதானே நடத்துவது நல்லதென்றனென்க. (௪௫)

நாய்முகனவின்றவைநகைத்திவனைநாளும்
காய்முகனெடுங்கருதிநோக்கியகதத்தான்
போய்முகமுடன்றெரிபுகைந்தெழுவதிங்கட்
டேய்முகவெயிற்றெதிர்கிரங்கரனுரைத்தான்.

உரை.—நாய்முகத்துருவோடு நின்றசத்தனாசு சொன்னதைநகைத்துக் காய்முகத் திவனை யெப்பொழுதும்பலகைத்துத் திருகிநோக்குங்கதத்தையுடைய திரங்கரனென்னும் பசாசுபோய் முகத்தி லெரிபுகைந்தெழும்படி மிக்ககோபத்துடனே தேய்ந்தபிறையோடொத்த நீண்டபல்லுகளைக்காட்டிச்சொன்னானென்க. (௬௬)

வஞ்சினரொருங்குதொழுமன்னரசமாயை
யெஞ்சினனிளைத்தனனிளைத்தவொருகைமைக்
கஞ்சினனறைந்தவையமைந்தயரவேண்டா
துஞ்சினர்துளங்குவர்கொலென்றுரைதுவைத்தான்.

உரை.— வஞ்சினரெல்லாரும் வணங்குமிராசாவே மாயையின்மெலிந்தவனா யிளைத்தவனா யிளைத்தவொருகைம்பெண்ணுக்கு மஞ்சினனாய்நிற்குஞ் சத்தனாசு சொன்னதற்குப் பொருந்திச்செய்யவேண்டாம், அஞ்சிச்சோம்பினவ ரெக்காலும்விளங்குவரோவென்றான் றிரங்கரனென்க. (௬௭)

என்றலொடுநொந்தழுகிலீன்றவுருமென்று
நின்றவனிகழ்ந்தெனைநிகர்த்தபிணநீயோ
குன்றவெறிகொள்ளொளிகுணுங்கெனமுளைத்தாய்
வென்றரவளர்ந்தமிடலோயெனவுரைத்தான்.

உரை.—அதைக்கேட்டசத்தனாசு மேகநொந்துயிர்த்தவிடியைப்போல வந்துநின்று என்னைநிந்தைசொல்லும்படி யென்னோடொத்தபேய்நீயோ? பேயினங்கொண்டகீர்த்தி குறையும்படி பேயாய்முளைத்தாயே முறிந்துமுழுகுதரும்படி மாத்திரம் வல்லமையுடையோனே யென்றானென்க. (௬௮)

அரங்கவுமிவற்கவனவற்கிவனெள்ளொத்த
தரங்கமெனவோங்கிவிழிதத்துதழலுக்கத்
திரங்கரனுடன்றுதிருகுஞ்சினமோடார்ப்ப
வுரங்கடிதுகுத்தினனெருங்குடல்பதைப்ப.

உரை.—அங்ஙனமொருவற்கொருவன் மனதிலழுந்தும்படி மிகநிந்தையைச்சொல்லிவைதலிற் கடற்றிரைபோலப்

பொங்கிக் கண்வழியாகவழலைவீசத் திரங்கரன்வந்து சீறிய வெகுளியோடார்த்துச் சத்தனுசை மார்பிலே யுடலெல்லாம்ப தைக்கும்படிகுத்தினனென்க. (௪௯)

பதைத்தவுடல்பத்திருதனைக்குமுயர்பாய்ந்தவன்
றுதைத்தவரிதோர்ப்பவெதிர் துள்ளியிருகாலா
லுதைத்தனனுதைப்பவுருமொப்பவவனார்த்துப்
புதைத்தனவெயிற்றிரிவபுண்புனல்கடித்தான்.

உரை.—அப்பொழுது சத்தனு சுடல்பதைக்கும்படி குத்தப்பட்டுத் தானிருபதத்தனை யுயரப்பாய்ந்து மொய்த்தசிங்கத்திலுங் கொடிதாய்த்துள்ளியெதிர்வந் திருகாலாற்றிரங்கரனையுதைத்தான், உதைத்தவளவிலே யவனுமிடிபோலமுழங்கிச்சத்தனுசுடலிற் புதைத்ததன்பல்லின்வழியா யிரத்தப்புனலோடும்படி யவனைக்கடித்தானென்க. (௫௰)

கடித்தவுடல்செங்கறையின்மாரிநிறைகால
விடித்தவிருகாரெனவெதிர்த்திருவர்தம்மைத்
துடித்தெழவுடற்குவடழற்றுறவிறுக்கிப்
பிடித்தனர்கடித்தனர்விழுத்தினர்பிரண்டார்.

உரை.—அங்ஙனங் கடிபட்டசத்தனுசுட விரத்தமாரியைப்பெய்யாநிற்க விருவரு மிடித்தவிருமேகங்களைப்போலமுழங்கி யெதிர்த்துத் தாமிருமலைகள் குதித்தாற்போல மேற்குதித்தெழவுஞ் செந்தீச்சூழப்பறியவுந் தம்மையிறுகப்பிடித்துக்கடித்துக் கீழேவிழத்தள்ளிப்பிரண்டாரென்க. (௫௧)

பிரண்டனர்சுழன்றனர் பிரிந்திலர்பிரிந்தார்
திரண்டனர்திரிந்தனர் சிதைந்திலர்செறிந்தார்
மிரண்டிலர்வெதிர்ந்திலர் மெலிந்திலர்முனைந்தா
ரிரண்டனவ்விசும்புமென மீண்டெதிரெழுந்தார்.

உரை.—அங்ஙனமிருவரும் விழுந்தவிடத்துப் பிரண்டு சுழன்று ஒருவனொருவனை விட்டுப்பிரியாமலுஞ் சிறிதோர் பொழுதுபிரிந்தும் பின்பு திரண்டுகூடித்திரிந்து தோர்வையின்றி நெருங்கியஞ்சாமலுங் கலங்காமலு மெலியாமலு

நெருப்பினைக்கொண்ட விருமேகங்களைப்போலவெழுந்து மீளவுமெதிர்த்துபொருதானென்க. (௫௨)

எழுந்திருவர்வவ்விய மருப்பிணைகைவிள்ளா
வழுந்திருபடிக்கொடு வகத்திணையுதைப்பக்
கழுந்திருகுகொம்பிருவர் கையொடுபெயர்ந்தே
விழுந்திருவர்வீழ்ந்தனருள் வெள்கினர்வெகுண்டார்.

உரை.— அங்ஙன மெழுந்தபின்ன ரொருவற்கொருவ னிருகொம்புகளைச் சிக்கெனப்பிடித்துக் கைவிடா தொருவற்கொருவ னிருகாலழுந் தும்படிகுதித்து மார்பிலேயுதைப்பத் திருகிநெருங்கிய வவன்கொம்புகளிவன்கையிலே யிவன்கொம்புகளவன்கையிலேபெயர்ந்துகிடக்க விருவரும் விழுந்து வெட்கிமுழங்கிக் கோபியாநின்றனரென்க. (௫௩)

வேறு.

நக்கனகண்டபேய்கள் நக்கனவென்றவேந்தன்
மிக்கனசினத்துநோக்கி விளைந்தபோர்கையாநீக்கித்
தொக்கனபிணங்களஞ்சத் தொகையிலவிடிபோலார்த்துத்
தக்கனவினைகள்கக்கச் சத்தருசுரைகொண்டானால்.

உரை.— அவ்விருபேய்கள் கொம்புகளின்றிவீழவே கண்டமற்றப்பசாசுகள் மிகவுநக்கன, பேய்க்கரசனேவென்னிற் றன்பமிகுதியாற் றனகமாட்டாமலு நக்கமற்றப்பேய்களைமிக்ககோபத்துடனேநோக்கியவ்விருவருள்விளைந்தபோரையுங் கையாணிறுத்தினான், அப்பொழுதங்கே திரண்டிருந்தபசாசுகளெல்லா மஞ்சும்படி மட்டின்றியிடித்த விடிகளைப்போலமுழங்கி மனதிற்கொண்ட வினைகளைக்கக்கும்படி சத்தருவென்னும்பேய் மீளவுமுரைகளைக்கொண்டானென்க. (௫௪)

வெலத்தொழிலெஞ்சவஞ்சி விதலையினிளைத்தேனென்றான்
குலத்தொழில்வஞ்சம்பொங்கக் கூவிடத்தவனுஞ்செய்த

வலத்தொழிலிருவர்கூற வலியனாரென்பீரென்னச்
சலத்தொழிலரசன்மூரற் றந்துமீண்டவன்சொன்னானே.

உரை.— வெற்றியில்லாதபடி நானஞ்சி யொருகைம்மெண்ணினு மிளைத்துப்போனேனென்று திரம்சரன்சொன்னானே, இப்பொழு தவனு நானும்பேய்க்குலத்தரிய வஞ்சமிகுதியாற் பூவுலகிடத்துச் செய்த வல்லமையின்றொழிலை யிருவருஞ்சொல்லிக்காட்ட விருவருள்வலியனாரென்று நீங்களே சொல்வீரென்று சத்தனாசு சொன்னவளவிலே பொய்விளைவிக்கும் பேய்க்கரசன் சம்மதித்ததுபோலப் புன்னகைகாட்டவின் மீளவுஞ்சத்தனாசு சொன்னான். (௫௫)

ஆசுலாங்கடலினீருங் காருலாம்வரையுஞ்சூழ்ந்த
தேசுலாஞ்சிந்துகீறந் தேயமேயெனக்குத்தந்தா
யாசுலாங்குடிலத்தங்கண் ணறிவறவிருளையுய்த்து
மாசுலாந்தேயமாக்கி வணக்கமேயுனக்குக்கொண்டேன்.

உரை.— சொன்னமுறையிற் சத்தனாசு தான்செய்தவலத்தொழிலைக் காட்டத்துடங்கினான். மணிகளைக்கொழித்தகடலொருபாலு மேகங்கள்தவழு மலைகளொருபாலுஞ்சூழ்ந்திருக்கப் பொன்னைக்கொழித்த புனல் நடுவேகிறியோடாநின்ற தேசத்தைக்கெடுக்கும்படி மன்னவ நீயெனக்கல்லோதந்தாய், நானோவென்னிற் பாவம்விளைதற்காரணமாகிய வென்வஞ்சனையினா லங்கே யறிவுகெடும்படி யிருளாகியமயக்கத்தைக்கொண்டுவிட் டதைமாசுநிறைந்ததேசமாகச்செய் துன்னைவணங்கவுஞ் செய்தேனென்க. (௫௬)

ஏற்றியதேவரெண்ணில் லெண்ணுவர்கலங்குவாரும்
போற்றியதேவரொப்பப் புரிகுவர்புகர்கொள்வாரு
மாற்றியதேவர்காணத யறைகுவர்வெள்குவாருஞ்
சாற்றியதேவர்பூண்ட தகவுளோர்தமைக்கொல்வாரும்.

உரை.— நானங்கேவணங்கச்செய்ததேவரை யெண்ணவேண்டி னெண்ணிக்கையுளடங்காமையிற் கணக்கொல்லாருங் கலங்கவும் வணங்கியதேவரொப்ப நடந்தவரெல்லாரும் பாவிகளாகவு மத்தேவர்செய்தவற்றைச்சொல்ல வேண்,

டின் சொல்லுவரொல்லாருநாணவு மீளவு மவர்வணங்கியதேவர்க்குள்ள குணத்தின்றன்மைத் தவருக்குள்ளே நடப்பாரைக்கண்டா லவரைக்கொல்லவுஞ் செய்வாரென்க. (ஆகையான் மனிதரிடத்துப் பொறுக்கப்படாத குற்றங்களையுடையவரைத் தேவராகவணங்கச்செய்த வருமையைக்காட்டுவது கருத்து.) (௫௭)

புனைநிலாவணியில்லாளைப் போக்கலாலரந்திமாழ்கல்
மனைவியாலடிபட்டோடல் மனைவியைத்தலையிற்றாங்க
லனையள்கால்பினிற்றூச்செந்நீ ரணியெனநுதலிற்பூச [ன்.
வினையெலாம்பூசித்தேவர்க் கியலுமோர்விளையாட்டென்றே

உரை.—மீளவு மழகிய தன்மனையாளைப் போக்கியதனுலழுதுவிம்மி மயங்கலுந் தன்மனைவிகையா லடிபட்டோடலு மவளைத்தன்றலைமேலேசுமத்தலு மவளது சூதகச்செந்நீரை யணியாக நெற்றியிற்பூசலு மிவையெலாம் பலஞாயங்களைச்சொல்லி மறையப்பூசித் தேவர்க்கேற்றவிளையாட்டுகளென்றேனென்க. (௫௮)

பொதுமுறைமகளிர்நாடல் புறமனைவிழைதல்தண்ண
மதுநறைமலருட்புக்கு மதுசகன்கணைவெப்பாற்றல்
விதுமுறைகுனிவிற்கஞ்சி வென்றரவொளித்துநாண
விதுமுறைமறையினாட்டி யிறையவர்க்கிலீலையென்றேன்.

உரை.—மீளவும் விலைமாதரைத்தேடிச்சேரலும் புறதாரங்களைவிரும்புதலு மன்மதன் தன்மேல்விட்டவம்புகளாலுள்ளெழுந்த காமவெப்பினையாற்றும்படி குளுமதுமலருட்புகுதலும் பகைவர்தன்மேற் பிறையைப்போலவளைத்த வில்லின்முகத்தஞ்சி முதுகுதந்தொளித்துநாணலு மிவையெலாம் வேதமாகநாட்டித் தேவர்க்கேற்ற விலீலையென்றேனென்க. (௫௯)

குய்யமேவிழியாய்த்தாங்கல் குய்யத்துளொளித்தல்கோ
கையம்வேயூழ்த்துவீழ்தல் மருவியகுமியிரண்டும் [சம்
வையமேயாகப்பூணல் காட்டரும்பலவுநாட்டி
யையமேயின்றித்தேவர்க் கானதோர்முறைமையென்றேன்.

உரை.—மீளவுங் கண்ணாகவுடலெலாங்குய்யமாய்த்தோன்றலு மொருவன்வைதுதிட்டியசனாற் கோசமழிந்துவீழ்ந்து மிருகுமிகள்புணர்ச்சியிற்றிரண்டுசேர்த்தித் தேவனியா வணிதலு மித்தன்மையிலுங் காட்டற்கரியபலவற்றையுநாட்டி யவையெலா மையமொன்றின்றித் தேவர்க்குரியமுறைமையென்றேனென்க. (௯௧)

ஏமஞ்சேர்மாலையாக விழிபடக்கழுதைசேர்ந்தோன்
காமஞ்சேர்சங்கத்தொன்றிற் கடந்தவாயிரமாண்டுள்ளோ
னேமஞ்சேர்மனையாரொண்ணீ ராயிரமிமிழிற்கொண்டோன்
சேமஞ்சேர்வலியிலோங்குஞ்சிறப்பெழுந்தேவனொன்றேன்.

அன்னையேமனைவியாக வமைந்தவன்றேவனென்றேன்
பின்னையேசுதையைப்புல்லப் பெட்டவன்றேவனென்றேன்
றன்னையேபழித்துக்காமந் தணித்தவன்றேவனென்றே
னென்னையேயறைவேனென்ற யாவுமேவழங்கச்செய்தேன்.

இவ்விரண்டொருதுடர்.

உரை.— மீளவுஞ் சுடுகாட்டில்விழுந்தமாலைபோல விகழ்ச்சிபடும்படி கழுதையோடுசேர்ந்தவனு மொருகாமச்சங்கத்திலாயிரம்வருடங்கிடந்தவனும் பதினாறாயிரம்பெண்டாட்டிகளைக்கொண்டவனும் வல்லமையிற்பொலிந்த தேவனொன்றேன். மீளவுந் தன்றாயைமனைவியாகவைத்திருந்தவனுந் தன்னிளமகளோடு புணரும்படிவிரும்பி யவளைத் துடர்ந்தவனும் காமம்பொறுக்கமாட்டாமற் றன்னைத்தா னழித்தவனுந் தேவனொன்றேன். மீளவுஞ் சொன்னதெல்லாமென்சொல்லேன் சொன்னயாவும்வழங்கவுஞ்செய்தேனென்க. (௯௨)

உடல்விளையீனமாக்க வுணர்கவுநாணுங்காதை [னக்
மிடல்விளைகளிப்பிற்செய்தோர் விண்ணின்வாழ்தேவனொன்
கடல்விளையரவத்தன்னூர் களிவிழாவணிகொண்டாட
வடல்விளைவஞ்சத்தங்க ணருமுறைநாட்டினேனே.

உரை.— அங்ஙனங் கொண்டவுடலினீனத்தையுடைய மனிதர் நினைப்பதற்குமுதலாய்நாணும்படி யருவருப்புள்ள

அபத்தங்களைக்கொழுப்பின்களிப்போடுசெய்தவனா வான்
வாழ்தேவனொன்றெண்ணி யம்மனிதர்தாமே கடலொலியொ
த்த வாரவாரத் தக்கதைபற்றித் திருவிழாவுகளைக்கொண்டாடு
ம்படி வல்லமையுள்ள வஞ்சத்தானானே யெங்குமுறைமை
நாட்டினேனென்க. (௬௩)

சேண்முகம்புதைத்தகோயிற் றீட்டியதேவர்காதை
வாண்முகம்புதைத்தநீண்கண் மடந்தையர்கண்டகாலை
நாண்முகம்புதைத்தபின்றை நாணமற்றதைச்செய்தோரைப்
பூண்முகம்புதைத்தமையற் பொலிவொடுவணங்கச்செய்தே
ன்.

உரை.—மீளவும் வான்முகத்திற்புதைத்த கோயில்களிடத்துச் சித்திரமாகவெழுதப்பட்ட வத்தேவருடையகதைகளை வாளுட்புதைத்த நீண்டகண்ணையுடைய குலத்துமாதர்கள்கண்டால் வெட்கிப்போய்க் கையானாணின தம்முகத்தைப்புதைத்து மூடினபின்பு தாங்காண்பதற்கு நாணுங்காரியங்களைவெட்கமின்றிச்செய்தவனைத் தேவனொன்றெண்ணி யவற்றின்மேற்போட்ட வாபரணங்கள்செய்யு மயக்கமிகுதியாற் கையெடுத்தவனைவணங்கச்செய்தேனென்க. (௬௪)

என்வலத்தொழிலிதைய விவனும்வந்தமைத்தயாவுந்
தன்வலத்தொழிலென்றோதத் தாவரும்வலியோனென்றும்
புன்வலத்தொழிலோனென்றும் பொருத்தலிற்றோன்றுந்
தோன்றி [ன்.
மன்வலத்தொழிலோனுன்னால் வரிசைபெற்றுய்வானென்று

உரை. — அங்ஙன நானென்வல்லமையினாற் செய்ததொழிலிதுவையா, இவனும்வந்து தன்வலியாற்செய்தயாவையுஞ் சொன்னால் வலியோனென்றும் வலியில்லாதவனென்றுமெதிரிலேதானேதோன்றும், இருவருள்வலியோனுன்னால்வரிசைபெற்றேங்கக்கடவானென்றான் சத்தனாசென்க. (௬௫)

கூடுடைமாக்கள்காமக் குணமெனநாடிநாடுங்
கேடுடைகாமமூடக் கெழுமியதேவர்காமப்

பீடுடையாரென்றுன்னல் பெரும்புகழ்பெற்றவாண்மை[ன்.
யீடுடைதொழிலென்பாயோவெனத்திரங்கரன்முற்பாய்ந்தா

உரை. — சத்தனு சிவையெல்லாவற்றையுஞ் சொன்னத ற்கெதிர்மொழி திரங்கரன்சொல்வான்: கொண்டசரீரத்தின்ற ன்மையான் மிகவுங்காமத்தைக் குணமென்றுமனிதர்விரும்பி னதனுற் றும்விரும்பின கேடுள்ளகாம நிந்தையென்றுதோ ன்றும லதைமூடும்படி தேவருங்காமத்தமிழ்ந்திப் பெரு மைகொண்டாரென் றம்மனிதர்நினைக்கும்படிசெய்வதுபெ ரும்புகழ்பெற்ற வல்லமையின் றொழிலென்பாயோ வென் று தானுந் தன்வல்லமைகாட்டும்படி முன்னேபாய்ந்தான் றிரங்கரனென்க. (௬௬)

முகிற்கிழித்திடித்தவேற்றின் முகத்தழற்கதத்தவேகத்
துகிர்க்கிழிக்கணிச்சிகாட்டி யுற்றவச்சவத்தைப்பாந்தட்
டுகிற்கிழிக்குணுக்குவேந்தன் சுளித்தகிர்த்ததட்டிப்பாய்ந்த
சிகிக்கிழித்தடத்தகண்ணான் செப்பலும்விலக்கினனே.

உரை. —அங்ஙன மேகத்தைக்கிழித்திடித்துவிழுமிடிபோ ல முகத்தழல்புறப்படக் காய்ந்தகோபத்துடனே கீற்றுக்கீ ற்று யானைக்குடரிபோல்வளர்ந்த நகங்களைக்காட்டி முன் னேபாய்ந்துவந்த பேயாகிய திரங்கரனைப்பாம்பின்கொடி யையேற்றிய பேய்க்கரசன்கண்டு கோபித்ததட்டி யக்கினி ப்படமாகச் சிவந்ததடத்தகண்ணனாகிய திரங்கரன்மறுமொ ழிசொல்லாதபடி விலக்கினனென்க. (௬௭)

இற்றைநீசெய்தபோதேயெமதுபேரினத்துக்கோனன்
மற்றைநீதலைவனுகி வாழிசத்தனுசேவஞ்சத் [ன்ன
தொற்றைநீருடையநீயென் றொற்றைகொம்பளித்தேனெ
வற்றைநீடலையினுப்ப ணமைத்துநாட்டினன்பேய்வந்தே.

உரை.— அங்ஙனந் திரங்கரன்பேசாதபடி யமர்த்தினபி ன்பு பேய்க்கரசன் சத்தனுவைநோக்கி நீயிவையெல்லாவற் றையுஞ்செய்தபோதே பேய்க்கெலாமரசனுனே, நீ தலைவனு ய்வாழ்வாயாகச்சத்தனுவே, மீளவு நீ வஞ்சத்திலே நிகரின்றி

யொற்றையாகையி லதற்கடையாளமாக வொற்றைக்கொம்
புனக்குத்தந்தேனென்றுசொல்லிப் போர்முகத்திரண்டுகொ
ம்புகளிழந்த சத்தனுசின் றலைநடுவிலே யொருபெருங்கொம்
பினைவைத்துநாட்டினான் பேய்க்கரசனென்க. (௬௮)

எப்புறத்தனைத்துமுன்ன ரியன்றதன்கோலந்நாட்டிற்
கப்புறத்தியலாதென்னு மதற்குளத்துணர்ந்ததன்மை
செப்புறத்தானேகண்ட சிறப்பெனவரசன்கேட்பத்
தப்புறத்தனித்தீவஞ்சச் சத்தனுசறைதலுற்றான்.

உரை.—மீளவு முன்னமொங்குஞ் செல்லாநின்ற தன்கோ
லினி நரகத்தப்புறத்துச் செல்லாதென்று சத்தனுசுமுன்சொ
ன்னானே, அங்ஙனஞ் சொல்லுதற் கவன் மனதிலேநினைத்த
காரணம்வெளியாம்படி யவன்கண்டவிசேடமென்ன பே
ய்க்கரசன்கேட்டவளவிலே பாவம்விளையும்படி நிகரில்லாத
கொடியவஞ்சனையுடையசத்தனுசு மறுமொழிசொல்லத்து
டங்கினானென்க. (௬௯)

வேறு.

வான்விளைவாழ்விழந்திங்கண் மருண்டெரிநாம்விழுங்
காலுந்
தேன்விளைகான்முதன்மகனே தீதுறநாஞ்செயுங்காலு[வன்
மூன்விளையாக்கையினும்மை யொழிப்பலெனவுரைத்திறை
முன்விளையாகுலக்காலந் தானிதெனத்தோன்றுமையா.

உரை.—சத்தனு செங்ஙனஞ்சொன்னானென்னில், வானு
லகுள்ள வாழ்வுகளையிழந்து மயங்கி நாந்தள்ளுண் டங்கேநி
ன்று நரகில்விழும்போதுந் தேனைப்பொழிந்த பூங்காவ
னத்திருந்தவாதிமனிதன் விலகினகனியைத்தின்று பாவத்தி
ல்விழும்படி நாஞ்செய்தபோதும் தானவதரித்தினியெமக்
கு மனுவுடலினின்றுங்களைக்கெடுப்பேனென்று நமக்காண்
டவன் சொன்னானல்லோ? அங்ஙன மவனால்வரத்தகுந் துன்
பக்காலம்வந்ததென்று தோன்றுமையாவென்க. (௭௰)

ஞாரொழுவெண்டிங்களுமுன் னீரிருதண்டிங்களுமுன்
போரொழுவெம்பகைசெய்த பொருத்தலரைக்காணுநாம்

காரொழுவெங்கதத்திடிபோற் கடிதிங்கண்வீழ்ந்தடைந்த
சூரொழுவெங்காரணமுந் தோன்றிலதுட்குற்றனமே.

உரை. — ஆண்டவனவதரித்துதித்தானென்பதற்குக் காரணங்காட்டத் துடங்கினான். ஆகையிற் பதினாலுமாசமுன்னு நாலுமாசமுன்னு நம்மைப்போர்செய்து பகைத்தவரைக் காணுமனுமேகத்தினின்றுவிழுந்த இடிகளைப்போலத் துணுக்கெனநரகில்விழுந்துவந்ததுன்பத் தொருகாரணமுந்தோன்றுமலஞ்சிக்கிடந்தோமல்லோவென்க. (பதினாலுமாசமுன்னே திருவவதாரமு நாலுமாசமுன்னே திருக்குமாரன் பிறந்ததுமாகி முன்சொன்னபடி யவ்விருகாலத்தும் பூவுலகிருந்தபேயெலா நரகில்விழுந்தனவென்க.) (௭௧)

மீண்டெழுந்துநான்மதிமுன் மேதினியிற்போயங்க
மாண்டெழுந்துவந்தநவ மதித்தாய்ந்தேயன்றிரவி [ண்
யீண்டெழுந்துமும்மடங்கா யிலங்கிநிசியிருளஃகி [ம்.
யாண்டெழுந்துவையமெலா மழகுமிக்கேழ்த்ததுகண்டோ

உரை. — நாலுமாசமுன்னே யங்ஙன நரகில்விழுந்தவுடனே திரும்பியெழுந்து பூவுலகிற்போ யங்கேமாட்சிபொருந்தி வந்தநூதனமென்ன பார்த்தவிடத்தே யன்று சூரியனுதயகாலத்துமுந்தியெழுந்து மூவத்தனையொளியைப்பரப்பியன்றிராக்காலமுங்குறைந்து பூவுலகெல்லாம்பொலிவெய்தியழகுபெற் றிலங்கக்கண்டோமல்லோவென்க. (௭௨)

தேன்வயிறூர்மலர்பூத்த செழுஞ்சோலைபருவமில
கான்வயிறூர்கனிநலமுங் கலந்தன்றுகளிப்பெய்தி
வான்வயிறூர்சுவையமிர்தம் மண்ணுலகிற்பெருக்கதென
மீன்வயிறூருலகொப்ப மேதினியன்றெழக்கண்டோம்.

உரை. — மீளவுமன்றுபருவமில்லாதாயினு நிறைதேன் பொழிமலர்களையும்பூத்து மலரோடுகலந்த வாசமலிந்தகனிகளையுங்காய்த்துப் பலசோலைகள் மகிழ்ந்தனபோலத்தோன்றி வானுலகிடத்து நிறையவோடிய வமிர்தவெள்ள மன்று

பூவுலகில்வந்து திண்டாற்போலவாகி வானுலகொப்பப் பூவுலகெழுந்து மாட்சியிற்பொலியக்கண்டோமென்க. (௭௩)

அருள்காட்டியவதரித்தா ஞண்டகையோவன்றென்றேத்
தெருள்காட்டிப்பெத்திலத்தோர் சிறுவனுதித்தனனென்றே
னிருள்காட்டிமல்கிரவி லொளித்தெய்தானிறையென்றீர்
வெருள்காட்டிமீண்டிவையாய்ந் தம்மகன்வான்வேந்தென்றான்.

உரை. — அவையெலாமாகையி லன்று தயைபயைப்புரிந்து நாதனவதரித்துவந்தானேவென்றேம், அன்று பெத்திலமாநகரிடத்துத் தெளிந்தவொளியோடொருபிள்ளைபிறந்ததென்றேன், அதற்கு நீராண்டவ னிருண்டவிராநடுவிலேயொளித்து வாரானென்றீர். மீளவுநாம்வெருவும்படி யிப்பொழுதுவந்தவற்றையாராய்ந்தா லன்றுபெத்திலமிடத்துப்பிறந்தபிள்ளை யவதரித்தநாதன்றானென்று தோன்றுமென்றான் சத்தனுவெசன்க. (௭௪)

நாய்முகத்துநின்றனபேய் நவின்றவைகேட்டகீதத்த
வீய்முகத்துவியப்பெய்தி விளம்பியதேதிடமென்றான் [ன்
றீய்முகத்துநகைகாட்டிச் சீதாய்வுமறுத்துரைக்கு [பானே.
நோய்முகத்துவிலங்குறையுண் ணுழைந்திறையோன்பிறப்

உரை. — அங்ஙன நாய்முகத்துருவாய்நின்ற சத்தனுசசொன்னவற்றைக்கேட்ட வகிதத்தன் றனெடுத்தவேங்கைமுகத்தி லதிசயங்காட்டி யிவன்சொன்னது சத்தியமென்றான், சீதாய்வென்னும்பேயோவென்னிற் றீமுகத்துநகையைக்காட்டி யவன்சொன்னதைமறுத்துச்சொல்வான், நீசொன்னபடி யன்று பெத்திலநகரிடத்துப்பிறந்தபிள்ளை மிருகமொடுங்கு மிடமாகிய குகையிற்பிறந்ததே, அத்தன்மைத்தாண்டவனவதரித்துப்பிறப்பானோ வில்லையென்றானென்க. (௭௫)

மிடிகொண்டானுளேர்தழப்பல் வினைகொண்டானிந்தையொடும் [ட
படிகொண்டான்பகைகொண்டான் பகர்வரியவனூர்கொண்

குடிகொண்டான்புறநாட்டிற் கூரிடுக்கண்கொண்டானே
முடிகொண்டாய்மூவுலகோர் மூவிரலாற்கொண்டானே.

உரை.—அங்ஙனம் பெத்திலமென்னுமூரிலேபிறந்தபின்
னை தரித்திரத்தைக்கொண்டான், நொந்தழும்படி பலவினைக
ளைக்கொண்டான், இகழ்ச்சியோடு பூமியினுதித்தான், உட
னேதன்னைப்பகைத்தவனாக்கொண்டான், சொல்லப்படாத
துன்பங்களைக்கொண்டவரிடத்திற் பிறந்தான், தன்குடிமறந்
து புறநாட்டிற்போயலைந் தரியதுயர்களை மிகுதியாய்க்கொ
ண்டான், இத்தன்மைத்தானே முடியைச்சூழ்ந்து மூவுல
கங்களை மூவிரலாற்றாங்காநிற்குமாண்டவனென்ப தல்லவெ
ன்றேனெனக. (மூவிரல்களாவன: திற நீதி ஞானமென்க.)
(௭௬)

என்றன்றெனத்திசைத்திசைப்ப வெரிப்பலபேய்பேய்
க்கரசன்
கன்றுநற்கன்னிவயிற் கடவுளுலகுதிப்பனெனக்
குன்றுமெய்ச்சுருதிபதாய்க் கொழுநனுளமரியென்பா
ளன்றுவற்கீன்றமக னண்டகையோவன்றென்றான்.

உரை. —சீதாய் வங்ஙனஞ்சொன்னவளவி ல்தற்கொத்
ததாய்ப் பலவற்றையும் பலபேய்கள்சொன்னபின்பு பேய்
க்கரசன்சொல்வான்: குழையாதகன்னிமாருமலொருத்திவ
யிற்றிற் கடவுளவதரித்துப்பிறப்பானென்று தப்பாதவேதத்
திற்சொல்லியிருக்கையிற் புருடனையுள்ள மரியென்பவள் ச
த்தியஞ்சுசொன்னபடி யன்றுபெத்திலநகரிடத்தீன்றபிள்ளை
யாண்டவனென்னலாமோ வவனல்லவென்றானென்க. (௭௭)

கலைபுறங்கண்டொளிர்ஞானங் கடந்திறையோன்கன்னி
த்தாய்க்
கிலைபுறங்கண்டவருயர்த்தோன் கணவனெனவீந்தனகாற்
கொலைபுறங்கண்டிகற்குணுங்கிற் கிவையொளிப்பக்குணித்த
னனே
நிலைபுறங்கண்டாண்டகைமுன் னிவைத்தபயனின்றுளதால்.

உரை. — அங்ஙன மாகையிற் படித்த நூல்களைக் கொண் டொளிரு ஞானத்தைக்கடந்த வறிவுடைய நாதன் றன்னைப் புடைனுதவியின்றிக் கன்னியழியாம லீன்றதாய்க்கு மலர்ந்த பூங்கொடியையேந்திய சூசையை மணத்துணைவனாகத்தந்த போது தானவதரித்தசெய்தியைக் கொல்லும்பகையுள்ளப சாசுக்கொளிக்கும்படி நினைத்தம்மணத்தைமுடித்தானல்லோ? அன்று நாத னிலைக்கும்படி நினைத்தபய னின்றுகண்டசென் க. (மரியென்டவள் புருடனுள்ளவளாகையிற் கன்னியல்ல வென்று பசாசெண்ணியாகையாலவளீன்றபிள்ளையு நாதன ல்லவென்று நிச்சயித்தமையா லாண்டவனினைத்தபயன்கண் டதென்றுனென்க.) (எஅ)

தேற்றுதோரரும்பொருளை யிருட்டறையுட்டேடுவர்
லாற்றுதோர்மந்திரத்தி னலகையினநிலைகாணு [போ
மாற்றுதோர்வெருட்கடலை நீந்தறியாமருண்டலையப்
போற்றுதோர்துயர்விள்ளாப் புகைந்தரசன்புகலுற்றான்.

உரை.—அங்ஙனந் தெளியாதா ரரியதோர்பொருளையிரு ண்டவறையினுட் டேடினாற்போலவன்றப்பேயெலாமுடி யாதவாலோசனையைச்செய்து நிலையுங்காணுமன் மாற்றப் படாதவச்சக்கடலை நீந்திக்கடக்கமாட்டாமன் மயங்கியலை யாநிற்பத் தன்னாற்காத்து விலகப்படாததுன்பத்தைவிடாமற் புகைந்து சினத்தைக்காட்டிநின்றபேய்க்கரசன் சொன்னு னென்க. (எகூ)

வேறு.

ஐயமீட்பதன் பொருட்டகத்தலைநினைவகன்மின்
வையமீட்பதன் பொருட்டெமால்மவிந்தனவஞ்சப்
பொய்யைமீட்பதன் பொருட்டிறைபிறந்திலனின்ன
மெய்யைமீட்பதன் பொருட்டொருவிளக்கமுமிலதால்.

உரை. — பேய்க்கரசனெங்ஙனஞ்சொன்னுனென்னில், ஆண்டவனவதரித் துலகிற்பிறந்தானே வில்லையோவென்னு ஞ் சந்தேகத்தைத்தீர்ப்ப வல்லந்தபலநினைவுகளைவிடுங்கள், பூ

வுலகிரட்சித்து நம்மால்வளர்ந்த வஞ்சம்பொருந்திய பொய்யைமீட்கும்படி நாதன்மனிதனாய்ப்பிறந்தவனல்ல, இதேமெய், இதைமறுக்கும்படி ஞாயமொன்றுமில்லை யென்றானென்க. (௮௰)

திடங்கொடார்புலன் றெளிந்தநாமறிகிலாமனுவாய்த்
தடங்கொடாண்டகை தரணியிலுதிப்பனோவிதுவே
மடங்கொடாயின வழூதெனவந்தநோய்மறுப்ப
விடங்கொடாகுவ தியாதெனவியம்புதீரொன்றான்.

உரை.— மீளவுந் தப்பாதவறிவின்றெளிவுடையநா மறியாம லாண்டவன்வல்லமைகொண்டு மனிதனாய்ப்பூவுலகிற்பிறப்பானோ வில்லை, இதுவறியாதார்சொல்லும் பொய்யென்றுநிச்சயித்து நமக்குவந்ததுன்பத்தைத்தீர்க்கும்படி யிடம்பொருந்திச்செய்யு முபாயமேதென்று சொல்லுவீராகவென்றான்பேய்க்கரசனென்க. (௮௧)

சிரகமாயிரு மருப்பிடைடைத்துயர்செகுத்த
வுரகமாடிய வுருக்கொடுமேழகமுகத்தா
னரகமாதிர நயப்புறவிரகநோய்நல்கும்
விரகவாயுவு வெடிப்பநக்கியம்புதல்கொண்டான்.

உரை.— பேய்க்கரசன்சொன்னதைக்கேட்டுத் தன்னிருகொம்புகளினடுவே தலைச்சீராவொப்பப் படத்தைவிரித்துச் சினந்தாடாநின்ற பாம்பினுருவத்தைவைத்துக்கொண்டு செம்மறிக்கிடாயின்முகத்துநின்றவனாய் நரகத்திற்குநயந்தரும் விரகநோய்விளைவிக்குங்குணத்தவனாய் விரகவாயுவென்னும் பேய் மிகவும்வெடிப்பச்சிரித்துச் சொல்லத்துடங்கினானென்க. (௮௨)

நாமநாடிய வுருவுமொண்கோயிலுந்துகளாய்ச்
சேமநாடெனச் செழுமெசித்திழந்தனசிதைவால்
வீமநாடிய வெருக்கொடுமயங்குவதென்னோ
காமநாடிய காலரிதெமக்குளதுண்டோ.

உரை. — எசித்திடத்தருச்சனையாகப் பூம்புகைசூழ்ந்த விவமதுருவங்களு மொளிர்ந்தபொற்கோயில்களுந் தகர்ந்து தூளாகி யெங்காவலாய்நின்றவத்நாட்டை நாமிழந்துவந்த துயர்களா லஞ்சிவெருவிமயங்குவானேன்! காமமொன்றேவ நீங்கச்செய்தா னமக்கரியதொன்றுண்டோ வில்லையென்க. (௮௩)

சிலைவல்லார்களுஞ் சிறப்பெழுநெடும்புகழ்நிலை நூற்
கலைவல்லார்களுங் கடிநிதித்திருக்கொடுபெருங்கோ
னிலைவல்லார்களு நிறுவியமற்றவல்லாரு
முலைவல்லார்களின் முயலினுன்முரிவிலாருண்டோ.

உரை. — காமத்தின்றிறத்தா லாகாததில்லை யென்பதற்குப் போர்முகத்தஞ்சாதவீரத்து வில்வின்வல்லவருஞ் சிறப்பிற் பொலித்து நெடியபுகழையுள்ள நிறைந்த கல்வியின்வல்லவரு நிதிப்பெருஞ்செல்வத்துயர்ந்த கோலோச்சி யாண்டபூமியில்வல்லவரும் பொலிந்த மற்றயாவருங் காமத்தமிழ்ந்தினகாலத் தவருட்கெடாதவருண்டோ வில்லையென்க. (௮௪)

காரிழந்திழி துளியென நாடொறுங்கனவிற்
பாரிழந்திழி பல்லுயிரியாவையும்பார்க்கி
னீரிழந்திழி நிறைதவிர்காமதரல்லாற்
சீரிழந்திழி செயிரினரெண்ணுவதரிதோ.

உரை. — மேகத்தினின்றுபொழியுந்துளிகளைப்போல நாடோறுமட்டின்றிப் பூவுலகினின்று தீநரகில்விழும்பலமனிதருயிர்களைப்பார்க்குமிடத்தில் நிறைதவிர்ந்த காமத்தமிழ்ந்தியபாவிகளல்லாதே மற்றக்குற்றங்களால்விழுமனிதர் கொஞ்சமாகையி லெண்ணுவதரிதல்லவென்க. (௮௫)

என்னியம்புவ னியானினியிவெலாமொருங்கு
முன்னியம்பிய முரட்டொழிலியாவையுநோக்கிற்
கொன்னியம்பினர் காமநாட்டினனெனக்கூறப்
பின்னியம்பிடப் பிழைசெயுந்தொழிலியாதுண்டோ.

உரை. — காமத்தால்வருங்கேடுகளைக்காட்டும்படி நானினி விரித்துச்சொல்லுவானேன்? முன்பேசின மற்றப்பேய்க

ளெல்லாம் வீணாய்விரித்துக்காட்டின தம்வலத்தொழிலை யா ராய்ந்தவிடத்துக்காமத்தைநாட்டிவழங்கச்செய்தோமென் றொருமொழியா லெல்லாவற்றையுமடக்கிப் பின்பு பாவத் தைவிளைவிக்கும்வேறொருதொழிலையுஞ் சொல்லவேண்டுமோ வில்லையென்க. (அசு)

வேட்பதோர்வினை விலக்கினர்மானிடராயின்
மீட்பதோர்வினை விழைந்துலகழிக்கும்பற்றொழிலைக்
கேட்பதோர்வினை கிடைத்திட்டப்பயனிலாவாசை
கோட்பதோர்வினை குணிப்பநாங்கொற்றமாமென்றான்.

உரை.— இவையெலா மந்நனமாகையின் மனிதர்காமத் தாசையைவெறுத்தாராயின் மீளவும் பூவுலகினைக்கெடுக்கும் படி யேற்றதொழிலாவதென்றுகேட்பது வீண்டானே, கா மத்தின்மேலாசையொன்றே நிறைதவிர்ந்து வளையும்படி யு பாயநினைத்து நாஞ்செய்தால் வெற்றியாகுமென்றான் விரக வாயுவென்க. (அஎ)

பெய்யெஞ்சாவுரை வியந்துகேட்டலகைகளார்ப்ப
மையெஞ்சாவரை வரையினைத்தழுவியவண்ணம்
பொய்யெஞ்சாவிறை புகன்றவற்பொறைப்புயத்தழுவி
மொய்யெஞ்சாநிறை வஞ்சகமுயல்வினைமொழிந்தான்.

உரை.—விரகவாயுவுசொன்ன தப்பில்லாதவுரைகளை யதி சயப்படக் கேட்ட மற்றப்பேய்கள்முழங்காநிற்ப மேகங் கள் விடாதுதவழு முயர்ந்தமலை மற்றொருமலையைத்தழுவினா ற்போலக் குறையாதபொய்வல்ல பேய்க்கரச னவையெலாவ ற்றையுஞ்சொன்ன விரகவாயுவின் மலையொத்தபுயங்களைக்க ட்டிக்கொண்டு போர்முகத்துக்குறையாதவஞ்சனைக்கேற்ற சி றிதுமுயற்சிகளைச்சொல்லத்துடங்கினனென்க. (அஅ)

தாங்கரும்பொறை தரிமடுத்தெடுத்தெனவஞ்சத்
தோங்கருந்தொழி லுதவிகொண்டொளித்தவேலெறிந்த
நீங்கரும்பகை நிறையுயிருண்டெனநீயுந்
தீங்கரும்படை யொளித்தியேற்செயிர்புகவெல்வாய்.

உரை.—விரகவாயுவுக்குப் பேய்க்கரசன் வஞ்சனைக்குரியவுறுதிகளை யெங்ஙனஞ்சொன்னனென்னில், தாங்கப்படாதபாரத்தைத் தடிகளைக்கட்டாயம்போட்டெடுப்பாரைப்போல நீயும்வெல்லும்படி யரியவஞ்சத்தொழில்களை யுதவியாகக்கொள்வாய். மீளவுங் காட்டாம லொளித்தெறிந்த வேலை மாற்றான்காத்துவிலக்கமாட்டாமற் றப்பாதவனுயிரையுண்பதுபோல நீயும்பாவமென்றுதோன்றாதபடி பாவமென்னு மாயுதத்தையொளித்தாயாகிற் பாவமேவிளைந்து செயமேகொள்வாயென்க. (௮௯)

கொல்வதற்கருங் குணத்துளத்திறையவன்புதைத்த
வெல்வதற்கரு நாணமதொன்றினை வென்றா
லொல்வதற்கரு முளமுனக்கமைந்துபாமுகத்திற்
சொல்வதற்கருந் தொடையெனத்துடர்வனதுகளே.

உரை.—அழிப்பதற்கரியதன்மைத் தாண்டவன் மனிதர் மனதிற்புதைத்துவைத்த வெல்லும்படி யரியநாணமொன்றினை வென்றாயாகிற் பொருந்தியிணங்காதமனமுமுனக்கிணங்கிச் சகலபாவங்களும் பாமுகத்திற் றொடைகளைப்போலத்துடர்ந்துவரவுங் காண்பாயென்க. (௯௰)

நங்கைநம்பியு நாடியவன்பெனநாட்டிச்
சங்கையம்பல சாதிநன்முறையெனப்புகுத்தி
யங்கையங்கனை பழகினீயகலினுமரிதுன்
வங்கையின்புற வன்னிமுன்வையெனவழல்வாள்.

உரை.—சொன்னநாணத்தை வெல்வதற்குபாயமேதெனில், தங்கைச்சியுமண்ணனும் பற்றிய வன்பென்னும்பெயரைநாட்டித் தம்முட்சங்கையென்னுஞ் சாதிமுறையென்னும் பலவிளையாட்டுகளைப்புகுத்தி யங்ஙனநாணமழியும்படி பெண்பிள்ளைபழகினளாகி னீயகன்றுபோனாலு முன்பகைகளிகூரும்படி தீமுன்வைத்தவைக்கோல்போல வவள் காமத்தீயில்வேகவுங் காண்பாயென்க. (௯௧)

மால்கலந்தவா வளரவென்பணியினுற்கவிஞர்
நூல்கலந்தவாய் நுனித்ததேனெனத்தகுங்காமஞ்

சால்கலந்தபாச் சாற்றவுங்கேட்பவுஞ்செய்வாய்
பால்கலத்தகாற் பருகியநஞ்சுமீட்பரிதே.

உரை. — மீளவு நாணத்தைவெல்லும்படி மயக்குவிக்குந் தீயவாசைவளரும்பொருட்டு மூன் னென்னேவவிலுற் கல்வி வல்லோ ரரியநூற்படி வாய்மனுட்பொழிந்ததுபோல வினி தாய்ப்பாடிக் காமவிகாரநோய்மிகவுங்கலந்து சொன்னபாட் டுகளை மற்றவர்வாயாற்சொல்லவுங் காதாற்கேட்பவுஞ்செய் வாய், பாலோடுகலந்த நஞ்சுகுடித்தாற் றிரும்பாததும்பால் வினியபாவோடு மனதிற்கொண்ட காமத்தாசையு மீளாதெ ன்க. (௩௨)

ஒருவருஞ்செயி னுரைப்பவுங்கேட்பவுஞ்செய்தா
விருவருஞ்செயி ரின்றியுநாணமேவெல்வாய்
மருவரும்புகர் பழகவேவழங்கியமுறையாற்
தெருவரும்புலி சீறினுஞ்சிறுவரும்வெருவார்.

உரை. — மீளவு மங்கங்கே யொருத்தனொருத்திசெய்தகு ற்றம் பலரேசொல்லவுங் கேட்பவுஞ்செய்தாயாகிற் பிறர்குற் றத்தைச்சொன்னவனும் பொருந்திக்கேட்டவனு மென்றி ருவர்செய்யுங் குற்றமுமல்லாதே மற்றவர்நாணமழியும்படி வெல்லுவாய், அதேதெனென்னிற் கிட்டாதகுற்றமேகிட்டி யண் டையிற்பழகின விவனவன்செய்ததை நானுஞ்செய்தாலெ ன்னவென்றதுபோல் வக்குற்றம்வழங்குமுறையாம், அதெங் ஙனமென்னிற் றெருவேதிரியுங்கொடும்புலி சீறினும் பழ க்கத்தினாற் சிறுபிள்ளைகள்முதலா யஞ்சாரென்க. (௩௩)

அஞ்சினொனி லமைதிரோர்முறையென்பாய்வஞ்சத்
தெஞ்சிலாயெனி லிணங்குவரிணங்கியபின்றை
நஞ்சிலாநவை நறுமையென் றுணர்ந்துநிற்பவரோ
மஞ்சில்வாழுயர் வரைபெயர்ந்திழிந்தகல்போன்றே.

உரை. — இவையெலாமாகியும் பாவத்துக்கஞ்சினாரகி லொருமுறைமாத்திரஞ்சம்மதிப்பீராகவென்பாய், இங்ஙனங் குறையாதவஞ்சத்தோடு பலநாள்சொல்லிக்கொண்டு வருவா

யர்கி லிணங்குவார், ஒருமுறையிணங்கினபின்பு செய்த வவ்வொருபாவத்தால்வந்த கேடொன் றுங்காணுமையா னஞ்சில்லாதபாவ மின்பமென்றெண்ணி மீளவும் பலபாவங்களில் விழாமனிற்பாரோ வில்லையே. அதெங்ஙனமென்னின் மேகத்துள்வாழு முயர்ந்தமலையினுச்சியினின் றுபெயர்க்கரியபெருங்கல்லு பெயர்ந்தபின்ன ரொருவனாலுந் தாங்கப்படாமலுருண்டு விசையோடுவிழுவதுபோல வவருமொருபாவத்தினின் றொருபாவத்தி லுருண்டுவிழுவாரென்க. (௯௪)

நம்பியோடெழி னன்மணத்துணைவியுந்தம்முள்
வெம்பியோர்பகை விளைந்தகாற்காமமும்விளைவாந்
தும்பிசூழலர்த் தொற்கொழுகொம்பிழந்தடுத்த
கொம்பிலேறிய கொழுங்கொடிபோல்வதுகாண்பாய்.

உரை.—மீளவும் புருடனு மழகியமணத்துணைவியு மன்போடுசேராமற் றம்முட்கோபமும் பகையும்விளையச்செய்வாய், செய்தாயாகிற் புறத்துக்காமநாடிப் பாவமும்விளையும். அதெங்ஙனமெனி னின்பமென்று முன்வண்டுசெணுடியமலரைப்பூத்த தனது பழையகொழுகொம்பினையிழந்த பூங்கொடி யண்டையிலுள்ளகொம்பின்மே லேறிப்படருந் தன்மைத்தாகக் காண்பாயென்க. (௯௫)

பெண்ணங்காணியும் பெருமையும்பேரொளிப்பிறப்
திண்ணம்வாழ்க்கையுஞ் சிதையுமென் றிணங்கிலராகில் [புந்
வண்ணந்தீர்ந்துளம் வளர்ந்துதீநசையுறச்செய்வாய்
தண்ணம்வேர்கெடிற் றருவெலாஞ்சாய்தலுமரிதோ.

உரை.— மீளவும் பெண்மைக் கழகியகாணியாகியகற்பும் பெருமையும் பெருங்கீர்த்தியுள்ள குலத்தின்பிறப்பும் வலியிற்பொலிந்த தம்வாழ்க்கையு மிவையெலாம்பாவத்தாற் கெடுவனவென் றொருமுறையாயினும் பாவத்துக்கிணங்காராகிற் குணமிழந்தமனமாகிலுங் கோணிப் பொருந்திப் பாவத்தாசையைக்கொள்ளும்படி செய்வாய், செய்தாயாகி லவர்பாவத்தை முடிக்கச்செய்வதுமெளியதாம், அதெங்ஙன

மென்னிற் குளிர்ந்தவேர் காய்ந்துகெட்டபின்பு மரமேலா
மொருங்குடன் றானேசாய்தலு மெளிதென்க. (௯[illegible])

மைமுகத்திவை வகுத்தரும்பழிகொலைகளவும்
பொய்முகத்துறும் புரைபலவிளையுமாறுணர்த்தி
நைமுகத்துயிர் நவையுறிக்கேடுறவரசன்
மொய்முகத்தரு முரட்டொழினெடிதுகாட்டினனால்.

உரை.— அங்ஙனம் பேய்க்கரசன் மனிதரைமயக்குவித் தற்குரியவிவற்றைச்சொல்லி மீளவும் பழிகளுங் கொலைகளு ங்களவுகளு மற்றப்பற்பலபாவங்கள் பொய்வழியாகவிளையுந் தன்மையுமுணர்த்தி மனிதருயிர்கள்குறைந்து குற்றங்களைக் கொண்டுகெடும்படி யரியபோர்த்தொழில்களை நெடிதாய்ச் சொல்லிக்காட்டினானென்க. (௯௭)

வேறு.

கைமுகம்புதைத்தநாகநீன்முகத்தான் கரோதரனக்கி
வைசொல்லும் [தவாயாவு
பொய்முகம்புதைத்தவஞ்சனைத்தொழிலாற் புரையுறவுணர்ந்
மெய்முகம்புதைத்தநூல்விளக்கெய்தி விளங்கினேற்பயனி
லாதன்றோ [திடமென்றான்.
மைமுகம்புதைத்தபொய்யறங்காட்டல் வடுப்புகும்பெருந்

உரை.— அங்ஙனம் பலவகைப்பாவங்கள் விளைவிக்கும்ப டி யெடுத்தவாலோசனைகளைக்கேட்டுக் கையுள்ளநாகமாகிய யானைமுகத்துருவெடுத்துநின்ற கரோதரனென்னும்பேய்ந கைத்துச்சொல்லும்: சொன்னபொய்களாலொளித்த வஞ்ச னைத்தொழிலைக்கொண்டு பாவம்விளையும்படி நினைத்தவழியெ லா மெய்விடாதவேதநூல் விளக்காகக்கொண்டு வெளியா மாகிற் பயனுமில்லதாமல்லோ? நானினைத்தவாலோசனையோ வென்னிற் பாவமறைக்கும்படி பொய்யானபுண்ணியங்களை ப்படிப்பித்தா லதுவே பாவங்கள்திரளாய்ப்புகும்பெரும் பாதையாமென்றானென்க. (௯௮)

நிறைதவிர்தீயகயவருநரகி னிலைதவிர்ந்தின்பவீடடவின்
சிறைதவிர்காலையெய்தலும்விழைவார் செல்கதியெளிதெனக்காட்டி
முறைதவிரறங்கணம்புளிதாமே மூழ்கிய துகளினுழ்ந்தஞ்சா
மறைதவிரறத்தால்வீடுறவுள்ளி மாய்ந்தெரிநரகிடைவீழ்வார்.

உரை.—பொய்யறங்காட்டல் பாவம்புகும்வழி யெங்ஙன மாமெனில், நீதிநிறைதவிர்ந்தொழுகும் பாவிகள்முதலாய் நரகத்தில்விழாம லின்பவான்வீட்டை யிறக்கும்பொழு தடைதலே விரும்புவாராகையிற் செல்கதியடைத லெளிதென்று பொய்வழியைக்காட்டினன், முறைதவிர்ந்தபொய்யானவறங்களை நம்பிப் பாவஞ்செய்தாலுங் கரையேறுவோமென் றெண்ணித் தாமேபாவத்தமிழ்ந்தி யஞ்சாமல்வேதவிதிதவிர்ந்த வறத்தின்பயத்தாற் றப்பாமல்வான்வீட்டைச்சேருவோமென்றெண்ணிச் செத்துநரகிலென்றென்றைக்கும் வேகும்படிவிழுவாரென்க. (௯௯)

நீர்விளைசிறந்தபற்றுறைமூழ்க னீர்த்துளியிறைத்துயர்வாரல் [ளர்த்தல்
பேர்விளையோதல்பெருமணிதரித்தல் பெருஞ்சடைநீடுறவ
சூர்விளையழலைகொன்றநீறணிதல் துஞ்சினர்க்கெள்ளமுதிறைத்த [ன்றே.
வேர்விளைகதிசேர்வழியெனிற்பாவ மியன்றுறுந்தடமதாம

உரை. — பலவிசேட நீர்த்துறையாடவுங் காலமேயுயரநீரையிறைக்கவும் பலபெயர்களையோதவும் பலவகைப்பெருமணிகளைத்தரிக்கவும் பெருஞ்சடைநீளவளர்க்கவுஞ் சுட்டசாம்பலைப்பூசவுஞ் செத்தவர்க் கெள்ளும்பாலு மிறைக்கவு மித்தொகைப்பட்டவற்றைச் செய்தமாத்திரத்திற் கோடிபாவஞ்செய்திருந்தாலுந் தப்பாமல் வான்மேற்கதியைச்சேரலாமென்றெண்ணினகாலத்துச் சகலபாவந் துடர்ந்துவரும் வழியாமல்லவோவென்க. (௱)

இவ்வழியெளிதிற்புரையெலாந்தீரு மென்றுளிபுரையின்மேற்சாய்ந்து

செவ்வழியொழிந்தமன்னுயிர்கெடவோர் செயிர்வழிகாட்
டவோவேண்டு
மொய்வ்வழியருவிமுன்னுளவிழியின் மூழ்கிவந்தோடவுநா
மோ [டுஞ்சடத்தான்.
வவ்வழிகாட்டல்வேண்டுமென்றுரைத்தானறிவளவருங்கொ

உரை.—சொன்ன பொய்யானவறத்தின்வழியாற்செய்த வெண்ணப்படாத பாவமெல்லா மெளிதாய்த்தீருமென்று நிச்சயமாய்நினைத்தபின்பு பாவத்தின்மேற்சாய்ந்த குணத்தோடு செவ்வுவழியைவிட்டொழுது மனிதரெல்லாருங் கெடும்படி பாவத்தின்வழியைக்காட்டவேணுமோ வில்லையே, அதெங்ஙனமென்னி லோடிவரும்புனல் தனக்குமுன்னுள்ள பள்ளத்திலேவீழ்ந்து மூழ்கியோடும்படி நாம்வழியையதற்குக்காட்டவேணுமோ வில்லையென்றான் கூர்ந்தவறிவினைத்த கொடியவஞ்சனையுள்ள கரோதரனென்க. (௱௧)

சடக்கலியெனும்பேய்மற்றெலாங்களிப்பிற் சருக்கொ
டுகெருங்கடலோதம் [மசனி
படக்கவிதளிர்ப்பவுகளிமுன்பாய்ந்தான் படரிருண்முகிறரு
யடக்கவியெடுத்தார்த்தறிவறைபோக்கி யழலறையலகைகா
ணெஞ்சங் [றெசித்திடைகாணேன்.
கெடக்கவியென்றேமருட்டுணர்வென்றோ கேதமொன்

உரை.—இவையெலாமாகையின் மற்றப்பேய்கள்களிகூர்ந் தாங்காரமாய்க் கடலினொலியினுங்கடிதார்த்திருப்பச் சடக்கலியென்னும்பேய் குதித்துமுன்னேபாய்ந்து மேகத்திடியினுமுழங்கிச்சொல்லும்: அறிவினிறைமயங்கிச் சினத்தழன்றபேய்களே நெஞ்சுபிளந்துகெடும்படி முழக்கமுமென்ன? மனநோம்படிமயக்கமுமென்ன? எசித்திடத்துநமக்கொருகேடும்வந்ததுகாணேனென்றானென்க, (௱௨)

மதிவளருணர்வற்றெசித்தனர்முன்னாள் வதைவளர்நரகி
டைவீழ்ந்தார் [ங்குலாக்குந்
நிதிவளர்கோயில்வீழ்ந்துநாம்வீழ்ந்த நிலைமையுஞ்சூசையா

அறிவளர்மறையுமுணர்ந்தபின்வீழ்ந்து துகளுமெண்மடங்
கெழச்சுடவான் [மென்றான்.
புறிவளரிறைவர்க்கிகழ்ச்சியுநமக்கோர் பழிவளர்களிப்புமா

உரை.—இப்பொழுதெசித்திடத் தெமக்குக்கேடுவாராம லுத்தேடினபாவத்திலாபமாயிற்று;அதெங்ஙனமெனின்று ன்றுனிலெசித்தா ரறிவின்றிநரகத்தில்விழுந்தார், இனிநமக் குக்கட்டியிருந்த பொற்கோயில்களுந்தகர்ந்து-அவர்வணங் கிய தேவராகியநாமும் விழுந்தோடினதன்மையுமறிந்து-அ ங்கேசேர்ந்தகுசைமாமுனி யவர்க்குச்சொல்லிக்காட்டும் பு கழப்பட்ட மெய்யானவேதத்தின்றன்மையுமறிந்து நரகில் விழவே யவரறிந்துகட்டிக்கொள்ளும்பாவமெட்டத்தனைய திகமாகி வான்மேவந்தனுகியகடவுளுக் கிகழ்ச்சியுநம்மவர்மே ல்வைத்தபழிக்களவாக நமக்குமகிழ்ச்சியுமாமல்லோ வென் றானெனக. (௩௩)

ஐவகைப்பொறியும்வாட்டியகுசைை யறையுநூலுறுதி
யாலன்றூர் [னவரசன்
மெய்வகைத்தவத்துநிலைபெறினின்பம் விளையுமோநமக்கெ
பொய்வகைச்சடத்துநான்புகுந்தெசித்தார் புரையுறவவன்
மொழிபழித்துச் [வியீண்டே.
செய்வகைத்திறத்துநிற்பரோவென்னச் செப்பினான்சடக்க

உரை.—அவற்றைக்கேட்டுப் பேய்க்கரசன் பஞ்சேந்திரி யங்களைவாட்டிய குசைமாமுனி யெசித்திலேசொல்லிக்கா ட்டும் வேதநூலுறுதியைக்கொண்டவர் மெய்யிற்றெளிந்து தவத்திலேநிலைகொண்டாராகி லப்பொழுது நீசொன்னபடி நமக்குமகிழ்ச்சியாகுமோ வில்லையென்றான். என்றதற்குச் சடக்கவி பொய்யிற்பொலிந்தவஞ்சனைவழியானனங்கேயோ யவர் மீளவும்பாவத்தில்விழும்படி யக்குசைசொல்லுமுறு திமொழிகளைப்பழித்துவருகையி லென்றிறத்தெதிராகவிழா மனிற்பாரோவென்று மீளவுஞ்சொன்னானெனக. (௩௪)

தொக்கணிமுடியுங்கொடிச்சடைச்சிரமுங் குண்டல
ச்செவியுங்வெண்பலியை

மிக்கணிநுதலும்பொறியடுத்தவத்து மெலிவொடுவாடியமு
கமு [ணைபத்
மக்கணிமார்புந்தண்டொடுகரக வங்கையுமிவற்றொடுமறை
தொக்கணிவேடமுனிவரனெனநான் றோன்றியாங்கெவரை
யும்வெல்வேன்.

உரை.— சூலைசொற்படி யெசித்தார் நன்னெறிநில்லாததற்குச் சடக்கவிநினைத்தவுபாயஞ் சொல்லிக்காட்டத்துடங்கினான், நானே கொக்கிறகுகளைமுடியாகச்சூடி நீண்டசடையைவளர்த்துச் செவிகளி லிருகுண்டலங்களு நெற்றியி னிறைவிபூதியு மைம்பொறிகளைக்கொன்ற தவத்தின்சாயலாய்மெலிந்து வாடியமுகமும் மார்பிற்றூங்கிய வக்குமணித்தாவடமுங் கையிற்றண்டுகோ லுங்கரகமு மிவற்றையொருங்குடன்றரித்து வேதத்தின்சாயலாய்த்தோன்றிய மாரிஷியாக நானேயங்கேதோன்றி யெல்லாரையு மேய்த்துவெல்லுவேனென்க.
(௱௫)

தொல்லையிலளித்ததேவனை நீங்கித் தொழுபவோபுது
விறையென்பே [தோவென்பே
னெல்லையின்முன்னோரொழுகியநெறியே யிழிவுறும்பழுதெ
னொல்லையினெடுநாட்டவப்பயன்பேதை யுரைகள்கேட்டொ
ருவவோவென்பேன்
கொல்லையின்முளைத்தகளையெனப்புல்லர் கொடுமுறைகொய்
மினீரென்பேன்.

உரை.—எசித்தாரையேய்க்கும்படி பழமையிலுங்களை யிரட்சித்துவந்ததேவனைக் கைவிட்டுப் புதிதாய்முளைத்த தேவனொருவனை வணங்கவோவென்பேன், மட்டின்றிமுன்னிருந்தபெரியோர் நடந்தவழி பழுதோவென்பேன், நீங்களே நெடுநாட்செய்ததவத்தினா லடைந்தபலனெலா மிப்பொழுதொருகணத் தறிவிலா தொருவன்சொன்னதைக்கேட் டிழந்துபோகவோவென்பேன், கொல்லையிற் பசும்பயிரிடத்துமுளைத்தகளைகளைவெட்டியெறிந்ததுபோல வுங்களிடத்துமுளைத்த நீசரது கொடியமுறையைப் பிடுங்கிவிடுங்களென்பேனென்க. (௱௬)

புற்குலத்துதித்துப்பொலிசையற்றெய்திப் புறத்துநா
ட்டிரந்துசேர்ந்தொருவன்
சொற்குலத்திழிவிற்பிதற்றியகதைகள் சுருதியோநான்மலி
நாட்டின்
னற்குலத்துதித்தநீர்புறநீச நவமுறையொழுகவுநன்றோ
தற்குலத்திழிவிதென்றுளமருட்டுஞ் சடத்தொழிற்கரிதுண்
டோவென்றான்.

உரை.— மீளவுஞ் குசையைப்பழித்து நீசர்குலத்திற்பிற
ந்து பிழைப்பின்றிப் புறநாட்டிலிரந்துவந்த வொருவன்றீர்
க்கமா யுங்கள்மொழிகளையுச்சரிக்கமாட்டாமற் பிதற்றிக்கா
ட்டியகதைகளை வேதமென்றெண்ணவோ வெல்லாநாளும்
பொருந்தியநாட்டின் மேற்குலத்திற்பிறந்தநீங்கள் புறத்து
வந்த நீசநவமுறைகளைக்கொண்டுநடப்பதுநல்லதோ விதுவ
வன்வன் றன்குலத்திற்கீனந்தரும்வழியென்றுசொல்லி யுள்
ளமயக்குவிக்கவல்ல வென்வஞ்சனைக்கரியதுண்டோ வென்
றான் சடக்கவியென்க. (௱எ)

பொய்நிறத்துரைத்ததிழிவுறவெளியாய்ப் பூதலத்தொ
ருப்படப்பிறந்து [டிவேந்தர்
மெய்நிறத்துயர்தொல்வேதமேதென்றும் விரியொளிமணிமு
செய்நிறக்குலத்தோனம்முனியென்றுந் திருப்புகழ்கலைநி
றைமாட்சி [னன்வேந்தே.
பெய்நிறத்தவருடென்றுமாங்குணர்கிற் பிழையுனக்கென்ற

உரை.— சடக்கவிசொன்னதற்குப் பேய்க்கரசன்சொல்
வான், நீபொய்யாகச்சொன்னதெல்லாம்வெளியாகி யவ்வ
தம் பூவுலகுண்டாக்கப்பட்டபொழுது கூடப்பிறந்து ப
ழையமெய்யானவேத மதுவேயென்றும், நீபழித்தகுசை
யொளியைப்பரப்பிய மணிமுடிசூழ்ந்தவரசர்குலத்திற்பிறந்
தமுனியேயென்றுமவன்பிறந்தநாடு செல்வமும்புகழுங்கல்
வியுநீதியு மாட்சியு மிவையெலாம்வளருஞ் சிறப்பிற்பொலி
ந்தநாடதுவென்று மெசித்தாலெப்படியாகிலு மறிந்தாராகி
லுனக்குக்கேடல்லோவென்றான்பேய்க்கரசனென்க. (௱அ)

எண்வழிதவறியுள்ளியகுட்சி யிதுவெனவெறியொடா
மிரட்ட [ம்பேய்
விண்வழியசனியொலியெழநக்கு வெவ்வினைச்சடக்கவிவிள
கண்வழியுற்றவுணர்வின்மூன்மாக்கட் காதிடுமுணர்வெவன்
செய்யுந் [வென்றான்.
தெண்வழியுவரிச்சுறவுதன்காதை தெரிகிலேற்கேண்மினே

உரை.— பேய்க்கரசன்சொன்னதற்கொப்ப விதுவெண்ணமற் றவதிநினைத்தகுட்சிதானென்று மற்றப்பேய்களெல்லாமுழங்காநிற்பச் சடக்கவிவாணிடியிடித்தாற்போல வெடிப்பநக்குச்சொல்லும்: கண்டவைமூன் மனிதர்கேட்டது நிற்குமோ தெண்கடல்வாழுஞ்சுறாவின்கதையை யறியீராகி னான்சொல்லக்கேளுங்களென்றானென்க. (௱௯)

வெள்ளமேலெதிர்த்தவிளஞ்சுறாக்கூவல் விழவெவணீ
யெனக்குழிமீன் [நீண்புணரி
கொள்ளமேற்கரையுமளவுமற்றாழ்த்து கொழுமணிகொழித்த
யுள்ளமேற்சிறப்புக்கூறவிக்குழியோ டொத்ததுண்டோவெ
னநகவிப் [மென்றதுவே.
பள்ளமேயுறையுங்காலைநீருரைத்த பழியெலாஞ்செல்லு

உரை.—ஒருநாள்வெள்ளமோடிவருகையி லெதிர்த்துவந்தசுறாவின்குஞ்சு பிரண்டவாற்றுநீரோ டொருகிணற்றில்விழுந்ததாம், அங்கேயிருந்தமீன்கள் நீயெவ்விடத்தவென்றுகேட்க வச்சுறா கரையுங்காணாதகன்று-அளவுமில்லாதாழ்ந்து விளங்கியமணியினங்களைக்கொழித்த நீண்டகடலினுள்ள சிறப்பின்மேன்மையைச் சொல்லிக்காட்டினவிடத் தம்மீன்கள்சிரித்து இக்கிணறுபோலச் சிறந்தநீரிடமுண்டோவென்று நகைத்தவளவி லச்சுறா நானிக்கிணற்றில்விழுந்தமையா லுனிங்கேகிடக்குமளவுஞ் சொன்னவிகழ்ச்சியெல்லாஞ் செல்லுமல்லோவென்றதென்க. (ஆகையாற் குடை முடிசூடிய வரசர்குலத்தோனாயினு மவனுரைத்தநூலகத்தோடுவக்கி மெய்யானவேதமாயினு மவன்பிறந்தநாடு பெருமையிற்சிறந்ததாயினு மவன்புறநாட்டிலிருக்கு

மீளவு மிவையெலாஞ்செல்லாமற் சொன்னநிந்தைசெல்லு
மென்பதுகருத்து.) (௱௰)

மீளவுங்கருவித்தழியவுமழியா வெண்ணெயிற்றிரண்ட
பின்கெடவு [றுங்கான்
நீளவுங்கெடாதுபிறந்துமாய்ந்திடவு நின்றுநற்கலைத்துறையு
மாளவுமாளாநோயிநீந்திறவு மக்களைவருத்திநான்செயுங்கா
லாளவுஞ்செய்வேனத்துயர்தீர வருச்சனைவழங்கவுஞ்செய்
வேன்.

உரை. — மீளவு மெசித்தாரிடத்துக் கருப்பங்கூடாதபடிவித்தழியவுஞ்செய்வேன், அங்ஙனம்வித்தழியாமல் வெண்ணெய்போலத்திரண்டாலுந் திரண்டபின்புகெடவுஞ்செய்வேன், அங்ஙனங் கெடாமனெடுநாணின்று பருவத்துப்பிள்ளைபிறந்தாலும்பிறந்தவுடனேசாகவுஞ் செய்வேன், அங்ஙனஞ் சாகாமலிருந்து கல்வியடையும்பருவத்துச்சாகவுஞ்செய்வேன், அங்ஙனஞ்சாகாதாயின் நோயிற்நீந்துமெலியவுஞ் செய்வேன், இவ்வருத்தங்கள்யாவையு மவர்மக்களிடத்து நான்செய்யுங்காலத்து நாமேயங்கேயாளவு மத்துயர்களைத்தீர்க்கும்படி நமக்காராதனை திரும்பிவழங்கவுஞ் செய்வேனென்க. (௱௰௧)

இற்றைநான்செய்யாவாண்டவன்விலக்கி வியன்றுறு
நோய்துயரிடுக்கண் [ந்தவையென்பே
மற்றையாவையுந்தாமொழிந்ததொற்றேவர் மனச்சினத்தபா
னற்றைநான்செயுங்காலம்முனியுய்த லரியதாய்வீழ்ந்தவர்ச்
சனைகொண் [மாதோ.
டொற்றையாழியினீயாளுவாயென்ன வுரைத்தனன்சடக்கவி

உரை. — மீளவு மிவையெல்லாவற்றையு நான்செய்யாதபடி யாண்டவன்விலக்கினான் மழையின்மை தீப்பற்றல் பயிரழிவு குடிப்பகைமுதலாகிய பலகாரணத்தியல்போடு தானேவரு நோய் துன்ப மிடையூறுகளெல்லாவற்றையுந் தாங்கைவிட்டுவணங்காதபழையதேவர் கோபித்துச்செய்ததாகச் சொல்வேன். அங்ஙன் நான்செய்யும்பொழுதே யம்முனியாகியகுருசை பிழைக்கவுமரிதாகி விழுந்தவாராதனைமீளவுங்கொ

ண்டு நீயேயெதிரின்றித் தனியங்கேயாளுவாயென்று சொ ன்னான் சடக்கவியென்க. (௱௨௨)

வேறு.

மஞ்சொடுகடலொலி மயங்கவார்த்தபேய்
நஞ்சொடுவளர்சட நடையிவின்னவா
யஞ்சொடுமும்மதி யளவும்போக்கிவெந்
நெஞ்சொடுவளர்பழி நினைக்குந்தன்மையோ.

உரை.— அங்ஙன மேகத்தொலியுந் தெண்கடலொலியு மயங்கும்படி பேயெலாமுழங்கி நஞ்சோடுவளர்ந்த வஞ்சனை நடையாலாராய்ந்தாராய்ந் தெண்மாதமும்போக்கிச் சொன்னவாலோசனையி லப்பேய்நெஞ்சிலேவளர்ந்த கொடிய பழி நாநினைக்குந்தன்மையல்லவென்க. (௱௰௩)

இழுக்கியைசெருக்கெழ வின்னயாவையும்
வழுக்கியைகளிப்பொடு கேட்டமன்னவ
னொழுக்கியைசெவிகளை யொதுக்கிக்கொம்பசைத்
தழுக்கியையெயிற்றுவா யவிழ்த்துக்கூறினான்.

உரை.—பின்னுக்கிழுக்குபட வுளத்தாங்காரமெழும்படி யிவையெல்லாவற்றையும் வழுக்குளமகிழ்ச்சியோடு கேட்டபேய்க்கரசன் ஒழுக்குபடநிறுவி நீண்ட தனதுசெவிகளை யொதுக்கியுயர்ந்ததன்கொம்புகளை நயந்தசைத் தழுக்குநிறைந்தவெயிற்றுவாயைத்திறந்து சொன்னானென்க. (௱௰௪)

செயற்கடல்கடந்தவெம் வஞ்சச்சேனைகாள்
மயற்கடல்கடந்தநும் மந்திரத்தலு
ரியற்கடல்கடந்துநா னீந்தியின்புறும்
பயற்கடல்கடத்தெனப் பரிவற்றேங்கினேன்.

உரை.—செய்யுந்தன்மையெல்லாங்கடந்த வஞ்சத்துயர்ந்தவெஞ்சேனைகளே மயக்கமின்றி நீங்கள்சொன்னவாலோசனையாற் றுன்பக்கட்லைநீந்திக்கடந்து நானின்பத்தின்பயனையடைந்து குறையின்றியோங்கினேனென்க. (௱௰௫)

காட்சியுங்கருத்தெலாங் கடந்தமாயைதன்
சூட்சியுங்கிளைத்தநீர் துணையெற்காகவென்
மாட்சியுங்கோன்மையு மறுக்கலரவதோ
தாட்சியுங்கலக்கமுந் தணந்தகூளிகாள்.

உரை.—அங்ஙன நிறைதெளிந்தகாட்சியுங் கருதப்படாத மாயையின்சூட்சியு மிக்கடைந்த நீங்க ளெனக்குத்துணையாக நிற்கவே யென்மாட்சியுங் கோன்மையுமழியுமோ தாழ்வுங் கலக்கமுமொன்றில்லாத பேய்களேயென்க. (௱௰௬)

இன்புறப்பாற்கலந் தேதமூட்டுதீர்
துன்புறவெருட்டுதீர் துதியையாடுதீ
ரன்புறவணுகுதி ரனைவருங்கனற்
பின்புறவருந்துதீர் பிழைப்பெமக்கிதே.

உரை.—அங்ஙன மாலோசனைதீர்ந்தபடிபோ யின்பங்காட்டிப் பாலோடுகலந்த பாவத்தின்மையை யெவர்க்குமூட்டவு மோரோரிடத்தவர் வருந்தும்படி யச்சங்காட்டவு மோரோரிடத்தவர் மகிழும்படிபுகழவு மன்புகாட்டியணுகி யெவரும்பின்பு நரகில்விழும்படிவருந்துவீராக, நமக்குப்பிழைப்பிதேயென்க. (௱௰௭)

உள்ளியவஞ்சனை யுதவவவ்விரு
தெள்ளியவறிவினோர் திறம்பிலாத்தவம்
விள்ளியமுறையொடு வினைகொண்டாலலா
லெள்ளியுகசடுகுத் தெசித்திலாளவோ.

உரை.— ஆகிவு நினைத்தவஞ்சனை வீணாய்ப்போகாம லுதவும்படி யங்கேயிருக்குந் தெளிந்தவறிவுடைய விருபேருமாகியகுருசையுமரியு மென்றுங்குறையாத தந்தவமழிந்து தாம்வினைகொண்டாலொழிய நிந்தைக்குக்காரணமாகியபாவங்களைச்செலுத்தி நாமெசித்திடத்தி லாளமாட்டோமென்க. (௱௰௮)

இத்திறத்தாங்குறை யிரண்டுபூதர்கள்
மைத்திறத்துளங்கெடின் வழங்கும்வெற்றியென்

றெத்திறத்தினுமொருங் கியன்றநாமெலாம்
பொய்த்திறத்தவரைமுன் பொருதல்வேண்டுமால்.

உரை.—ஆகையாலங்கேயிருக்குமுன்சொன்ன விரண்டு பூதராகிய மரியுஞ்சூசையுமயங்கி யுள்ளே கேடுறும்படிசெய்தாலெசித்தெலாமெளிதாய்வெல்லலாமென்றமையானு மெல்லாருமொருங்குடன்கூடி யெத்திறத்தாயினும் பொய்யைக்கொண்டவ்விருபேர்மேலே முந்திப் போராத்தொடங்கல்வேண்டுமென்க. (௱௰௯)

அனைவருமோரணி யாகவாகவ
நினைவருமுரத்தொடு நிகர்த்தநீர்மையால்
வினைவருமுகத்தவர் மெலியவென்றபின்
னனைவருமெசித்தெலா நயப்பவெல்லுவாம்.

உரை.—நாமெல்லாருமங்ஙனமோரணியாகவவர்மேலரியவல்லமைகொண்டு போராச்செய்யும்பொழு தவர்வினைகொண்டுளத்துமெலியும்படி யவரை நாம் வென்றபின்பு மதுமலர்பூத்த வெசித்துநாடெலா மெளிதாய்வெல்லுவோமென்க. (௱௨௰)

புல்வதற்கருஞ்சடம் புணர்ந்தசூட்சியால்
வெல்வதற்கருஞ்சமர் வினைசெய்வார்க்கெலா
மொல்வதற்கரும்பய னுதவுவேனெனுச்
சொல்வதற்கருஞ்சினத் தரசன்சொற்றினன்.

உரை.—அங்ஙனமடைதற்கரிய வஞ்சனைச்சூட்சியால் வெல்லப்படாத போராச்செய்தவரொல்லாருக்கு நானேகிடைப்பதற்கரிய வரிசைகளைச்செய்துதவுவேனென்று சொல்லிலடங்காத கோபத்துடனே பேய்க்கரசன்சொன்னனென்க. (௱௨௧)

அழுந்துவிட்டிரளிடி யனையகொம்புகள்
கொழுந்துவிட்டழன்மர சடியிற்கூர்பட
விழுந்துவிட்டிரள்கெட வெறியொருங்குமார்ப்
பெழுந்துவிட்டிரட்டின வெரியுங்கூசவே.

உரை. — பேய்க்கரசன் சொன்னதைக்கேட்டு மற்றப்பே யெலா மொருங்குடன்கூடி யிடிகள்திரளாய் விழுந்தழுந்தி னற்போல வரசனடியின்மேற் றங்கொம்புகள் கொழுந்து விட்டெரிந்து மிகவுந்தைக்கும்படி யவனடியில்விழுந்து திர ண்ட மேகமுழக்கத்திலுங் கொடியதாயார்த்தெழுந்து நரக மெல்லாங்கூசும்படி முழங்கினவென்க. (௱௨௨)

கொக்கரித்திரட்டிடக் குதித்துவப்புறு
மிக்கரித்திரட்பட வெற்றிவெற்றியென்
றெக்கரித்தழற்றுளி யிறைத்திறைத்தன
நக்கரித்தெயிற்றெரி நகுத்தபேயெலாம்.

உரை.—அங்ஙன நினைத்தவற்றை நிறைவேற்றினாற்போல வன்றுபேயெலா மழுக்கினாற் பச்சைநிறத் தெயிற்றுவழியா லெரியைக்கொப்பளிக்க மிகவுநக்குக் கொக்கரித்துமுழங்கி த்துள்ளி மகிழ்ந்து திரண்டசிங்கங்களினுங் கொடிதாய் வெ ற்றிவெற்றியென்று கூப்பிட்டுப் பூமழையாகச் சூழநெருப் பினையிறைத்தனவென்க. (௱௨௩)

புகழ்ச்சிவந்துற்றகாற் பொலிந்தமாண்பினு
ரிகழ்ச்சிவந்திக்குமென் றெண்ணிப்போற்றுவார்
நிகழ்ச்சிவந்துதிப்பது நினைக்கிலாதபேய்
மகிழ்ச்சிவந்துவந்தன கடையின்மாழ்கவே.

உரை. — உயர்ந்தபெருமையுடையோர் புகழப்பட்டகா லத் துள்ளஞ்சிதரும மினியிகழ்ச்சிவருமாக்குமென் றெண் ணி வாராதபடி பாதுகாப்பாரல்லோ? நீசர்குணத்தையுடைய பேய்களோவென்னிற் றமக்குக்கேடுவரும்வழியைப் பாரா மற் பின்புமுடிவின்மயங்கி மெலியும்படி யன்றுமட்டின்றி மகிழ்ந்தனவென்க. (௱௨௪)

குணுங்குமந்திரப்படலமுற்றும்.

ஆகப்படலம் - ௨௩ - ௫ - விருத்தம்

௨௲௱௨௰௬.

இருபத்துநான்காவது.

சோகுதோர்வைப்படலம்.

வேறு.

காமவியலர்க்கோலானுங் கன்னியர்துணைவியாளுந்
தாமவிதவத்தினிஞ்சி தளர்ந்திடைக்கதுவிட்டெஞ்சத்
தீமவிகுணுங்கெலாமேழ் செயிர்க்குரியணிகளேழாய்ப்
பூமவிநடுக்கிற்கூசப் புதவொழிந்தனபோரோர்ந்தே.

உரை.—முன்சொன்னபடியே பூங்கொடியேந்திய சூசையுங் கன்னியழியாத வவன்றுணைவியாகியமரியு மென்றிருவருடைய நிறைந்ததவமாகிய கோட்டைதளர்ந்து நடுவில் வாய்விட் டிடிந்துவிழும்படியவர்மேற்போரைச்செய்ய நரகத்துள்ளபசாசுகளெல்லா மொருங்குடன்கூடி யேழுபிரதானபாவங்களுக்குரிய வேழணிகளாகப் பூவுலகெல்லாமிகவு நடுங்கிக்கூசும்படி நரகத்தினைவிட்டொழிந்தனவென்க. (ஏழுபிரதானபாவங்களாவன: ஆங்காரம், உலோபம், காமம், கோபம், காய்மகாரம், ஆகாரப்பொம்மல், அறத்தளர்ச்சியிவையேழென்க.) (க)

வெருவெனுமதத்தயானை வெள்ளமேவளராங்காரத்
தருவெனுங்கொடிஞ்சியோங்கச் சமைத்ததேரிரட்டிகோப
செருவெனுங்கவினப்பாய்மாத் தேரினுமிரட்டியாசை [ச்
யுருவெனுமெண்ணிற்காலா ளுடையபேய்ப்படைகடோற்
றம்.

உரை.—போர்க்குவந்தபேய்ப்படை யெங்ஙனமென்னில், அச்சமென்னுமதத்தயானைக ளொருவெள்ளமு 'மாங்காரமென்னு முயர்ந்ததேர்களிருவெள்ளமுங் கோபமென்னு ங்குதிரைகள் நாலுவெள்ளமும் பலவாசைகளென்னுங் கா

லா ளுங் கணக்கின் றிக்கூடித்தோன் றின பேய்ப்படைகளெ ன்க. (௨)

தீய்விளைகாமமம்பாய்ச் சீற்றமேவயிரவாளாய் [காய் நோய்விளைகுரோதம்வேலாய் நொறிக்காத்துலோபமெஃ வாய்விளைபொய்நீண்கோலாய்மடிநெடுங்கதையாயேந்திப் பேய்விளைசமரிற்கைக்கொள் பெரும்படைக்கலங்களன்றே.

உரை. — அப்பேய் கையிற்பிடித்த வாயுதங்களோவெனி ல், காமமேயம்பாகவுஞ் சினமேவயிரவாளாகவு நெட்டூர மேவேலாகவு மடக்கினகையுள்ளவுலோபமே சக்கரமாகவு ஞ் சொல்லும்பொய்யேயீட்டியாகவுஞ் சோம்பலேநீண்ட கதாயுதமாகவுமேந்திப் பேய்செய்யத்தகும்போரிற் கைப்பி டித்த வாயுதவகைப்பலவிவையென்க. (௩)

நீரணியுலகமாட நெடுங்கடலொடுங்கிப்பொங்கக்
காரணிவானம்விம்மக் காரணமறியாமாக்கள்
சூரணியுளத்திற்கூசச் சுடுநரகலகையாவும்
பேரணியாகச்செல்லப் பேய்க்கரசெழுந்ததன்றே.

உரை. — அத்தன்மைத்தாகியபடையோடு கடல்சூழ்ந்த பூவுலகாடவுங் கடலொதுங்கிப்பொங்கவு மேகந்திரியும்வா னுலகிரங்கவுங் காரணமறியாமனு மனிதரெல்லாரு மனதி ல்வருந்திக்கூசவு நரகப்பேயெலாம் பெரும்படையாக விரு புடையிற்சூழ்ந்துவரப் பேய்க்கரச னரகினைவிட்டெழுந்த தென்க. (௪)

எழுந்தழவிடியேறன்ன வேழெரிவாய்கொண்டார்த்துக்
கொழுந்தழல்விழிகடும்மிக் குணுக்கினத்தரசனெஞ்சத்
தழுந்தழன்முனிவின்மற்ற வலகையோடெழுவகண்டு
விழுந்தழவுளத்துண்டென்ன விண்ணவரிரங்கிநொந்தார்.

உரை. — அங்ஙனம் பேய்க்கரச னரகத்தைவிட்டெழுந் திடியைப்போலத் தன்னேழுவாய்கொண்டு மிகவுமுழங்கிக் கண்வழியா லழற்கொழுந்துகளைத்தும்மி நெஞ்சிலேயழுந்

திய சினத்திலெழுந்ற மற்றப்பசாசுகளோடேபுறப்பட வான்
வர்கண்டு தம்மனதிலேசெந்தீவிழுந்ததுபோல மிகவுமேக்கி
ரங்கினொந்தாரென்க. (௫)

ஐவகைப்பொறியின்மொய்த்த வைம்பகைகொலையிற்
சூழ்ந்து
மெய்வகைத்திறத்திவீனம் விளைந்துளந்தெளியாமாக்கள்
பொய்வகைச்சடத்திலாண்மை பொலிந்தபேய்திரண்டுசெ
மைவகைச்சமரினிற்பர் வையகத்தெவரோவென்பார். [ய்யு

உரை.—அவற்றைக்கண்டவானவர் மனிதர்க்கெங்ஙன மி
ரங்கினாரென்னில், பஞ்சேந்திரியங்களாகிய வைந்துபகைக
ளுமேயாம உயிரைக்கொன்றுசூழ்ந்திருக்கக் கொண்டவு
டவினு வீனங்கொண்டுதெளிவின்றிமயங்கு மனிதராகையிற்
பொய்யைக்காட்டியவஞ்சனையோடு மிக்க வல்லமையுள்ள
பேயெலாமொருங்குடன்கூடிமயக்குவித்துச்செய்யும்போ
ர்முகத்து மனிதருள் ளார்ரோநிற்பா ரென்பாரென்க. (௬)

திக்கெலாநடுங்கிஞானந் தெருடவமறத்தின்சீல
மிக்கெலாமொதுங்கிநீங்க வெகுண்டவித்தன்மைபாரிற்
புக்கெலாவெறிகள்சேர்காற் பொய்கொலைகளவுகாமந்
தொக்கெலாம்பரந்துமாக்கட்டொகையிலாருய்வரென்பார்.

உரை.— மீளவும் பூவுலகுள்ளதிக்குகளெல்லாநடுங்கி ஞா
னமுந்தெளிவுந் தவமு மற்றவறத்தின்சீலங்களெல்லா மப்பு
றத்தொதுங்கிப்போம்படி யிங்ஙனம்பசாசெல்லாங்கூடி மி
க்கசினத்துடன் பூவுலகில்வந்தகாலத்துப் பொய்யுங்கொலை
யுங்களவுங்காமமுமொருப்படப்பரந்துவருகையின் மனித
ருட்கெடாமற் பிழைப்பவ ராரென்பாரென்க. (௭)

செவ்வினைநாட்டப்பாரிற் சிறுவனாயுதித்தநாத
னிவ்வினையனைத்துநீக்கி யிரங்கிலான்கொல்லோவென்ன
நவ்வினைவிடாநல்லாரு நறுங்கொடியோனும்வெல்ல
வெவ்வினையுணர்பேய்நோக்கும் வினைவெனக்கண்டுநக்கார்.

உரை.—செவ்வொழுக்கத்தைப் பூவுலகினுட்டும்படியவ
தரித்தவக்குழந்தையாய்ப்பிறந்தநாதனாகிலும் பசாசுநினைத்
தப்பகையை நீக்கி மனிதர்க்கிரங்கானோவென்று வானவர்வரு
ந்தியிரங்கும்பொழுதே தவத்தைவிடாத நல்லாளாகியமரியு
ம் வாசமலர்க்கொடியேந்தியசூசையு மென்றிவ்விருவரைத்
தாம்வெல்லும்படி தீவினையுணர்ந்தபசாசுகள் நினைத்ததெ
ன்றுகண்டறிந்தவானவர் மிகவுமகிழ்ந்து நக்காரென்க. (௮)

அருண்முகத்துதித்தநாத னவனெனவறியாவண்ணத்
திருண்முகத்துவந்துவெற்றி யெளிதெனவுணர்பேய்சோதி
தெருண்முகத்திரவொத்தாற்றுச் சிதைவுறிவெருவுற்றெஞ்சி
மருண்முகத்தெரியில்வீழ்ந்துமாள்வனவொருங்குமென்பார்

உரை.—அளவிறந்ததயையோ டவதரித் தங்கவரிடத்துப்
பிறந்தகுழந்தை யாண்டவன்றானென் றறியாமையாலல்லோ
தெளியாநெஞ்சிலேயுவந்து வெற்றியெளிதென் றுணர்ந்தப
சாசுகள், சூரியன்றன்னொளிமுகத் திராவிருள்கெடுவதுபோ
ல வப்பசாசுகளுமாற்றாது கெட்டு வெருவி மெலிந்து மய
ங்கி நரகின்மீளவும்விழுந்து தாமினி மட்டின்றி மயங்காநிற்
பனவென்பார் வானவரென்க. (௯)

மன்றலர்க்கொடியின்வாச மண்ணையைமருட்டுமென்
துன்றலர்க்கோதைகன்னி சுடவெறிமுரியுமென்பார் [பார்
என்றலர்ச்சுடிகைசூடி யிருவிசும்பெங்குநிற்பார் [பார்.
நின்றலர்த்தொடைகளேந்தி நிகர்த்தபேய்த்தோர்வைகாண்

உரை.—மீளவும் வானவர்மகிழ்ந்து தம்முட்சொல்வார்:
இனிச் சூசைமாதவனேந்தியபூங்கொடிவீசுந் தருமவாசனை
தானே பசாசுகளைமயக்குவிக்குமென்பார், அவனையடுத்த து
ணைவியாகிய பூங்கோதையொத்த மரியென்பவளது மாறுத
கன்னிநலந்தானே பேய்களைச்சுடச்சுட வப்பேய்ப்படை
யேமுறியுமென்பார், இவற்றோடுபலவையுஞ்சொல்லி மகிழ்
ச்சியாற் பூமாலைகளைமுடியாகச்சூடி யாகாயத்திலெங்குநின்
றுசூசையுமரியும் கொள்ளத்தகும்வெற்றிக்குப் பூமழைபொ

றியும்படி மதுமலர்மாலைகளை யேந்திப் பசாசின் றோர்வலு வையக்காண நிற்பாரென்க. (௰)

கான்மலிகொடியிற்கன்னிகடிமலரொணக்கையேந்தும்
வான்மலிமகவின்மாமை வடிந்ததேனுணும்வண்டொப்பத்
தேன்மலிகொடியோனின்பந் திளைப்பவுட்சுவைத்தகாலை
கூன்மலிசடத்தபேய்கள் குனித்தபோர் துடங்கிற்றன்றே.

உரை. — அங்ஙனம் பசாசுகளெல்லா மெசித்துதேசத்தி லேபோய் வாசபூங்கொடிபூத்தமலரைப்போலக் கன்னித்தா ய் கையிலேந்திய வானுலகுள்ள திருக்குமாரன் றன்னழகிய முகத்தில்வீசியபேரின்பத்தை வடிந்ததேனை வண்டுண்டாற் போலப் பூங்கொடியோனாகியசூசை நிறையவுட்கொண்டுசு வைத்திருக்கையின் மனக்கோட்டத் தரிய வஞ்சனையுடைய பேய்கள் நினைத்தபோர் துடங்கினதென்க. (௰க)

வேறு.

ஈங்கொருவிழாவணி யென்னமூவரே
யீங்கொருமகிழ்வருட் சுவைவிள்ளாமையி
லாங்கொருகாவத மகலநின்றபே
யோங்கொருவயந்தடுத் தொருவிற்றென்னவே.

உரை. — அங்ஙன மிங்கேதிருக்குழந்தையு மரியுஞ்சூசை யு மொருதிருவிழாவின்றன்மையாற் றம்முண்மிகுந்தமகிழ் ச்சியோடு தேவருளினானந்தசுவையைவிடாம லுட்கொண் டிருக்கையி லங்கே யவர்மேற் போர்செய்யவந்தபசாசுக ளொருகாதத்தூரத்துநின்று கிட்டாதபடி மிக்கொருமேலா னவல்லமை யவற்றைத்தடுத்துத் தள்ளினதென்க. (௰உ)

அஞ்சலேதப்புறத் தணுகிலாத்திறத்
தெஞ்சலேதிரந்திரு மைந்தரீடிவண்
விஞ்சலேதுலகெலாம் வென்றவஞ்சனை
துஞ்சலேதெனவெறி சுளித்துச்சீறின.

உரை.— தம்மைத்தடுத்த வல்லமை யறியாதபேய்கள் கோபித்து நாமஞ்சுவதேதென்று மப்புறம்போகமாட்டாமலத்திறத்தினாண்மைகுறைந்ததேதென்று மிரந்துதிரியுமிரண்டுமனிதர்வல்லமை யிங்கேநமக்குமிஞ்சுவதேதென்று முலகெலாங்கெடும்படி யிந்நாள்வரைக்குமென்றவெமது வஞ்சனை யிப்பொழுது மெலிந்ததேதென்றுஞ்சொல்லி மிகவுஞ் சினந்து சீறினவென்க. (௰௩)

மின்னுளவிடியினார்த் தழல்கண்விட்டதிர்
பின்னுளகுணாக்கினம் பெரிதுதைத்தலின்
முன்னுளவெறியெலா முழங்கியப்புறங்
கொன்னுளவயஞ்செலாக் குலையநின்றவே.

உரை.— அங்ஙன மின்னியிடித்தாற்போலவார்த்துக்கண் வழியாகவழலைக்கொப்பளித்ததிர்ந்து பிறகேநின்றபேய்களப்பாற்பெயராது முன்னின்றபசாசுகளை மிகவுமுதைத்ததனா லவைமுழங்கி யப்புறம்போக வீணாய்ப்பிரயாசப்பட்டுத் தமக்குள்ளவல்லமையுதவாமலஞ்சிநின்றனவென்க. (௰௪)

காலொடுபிணித்தபல் லுழுவைகாய்கதச்
சாலொடுதொடர்கடித் தலறித்தாவின
பாலொடுமப்புறம் பாயலாற்றிலா
மாலொடுவெகுண்டபேய் சமர்வளர்த்தவே.

உரை.— அப்புறம்போகக்கூடாமையாற் றாணோடுகட்டின பல கொடுவேங்கைகள் மிகக்காய்ந்தசினத்தோடு சங்கிலியைக்கடித்தலறிச் சூழத்தாவினதன்மையா லப்பேய்களு மப்பாற்பாயமாட்டாமையான் மயங்கிச்சினந்து அங்கேநின்று போர்வளரும்படி துவக்கினவென்க. (௰௫)

பரியுருத்தகருப் பகடுருப்பகைக்
கரியுருக்கரத்துருக் கவியுருக்கதத்
தரியுருக்கரடிகோட் டரிகணாய்வரி
திரியுருத்தோற்றின சினந்தபேய்களே.

உரை. — அப்போர்தொடங்கும்படி குதிரைகள்போலவுங் கிடாய்கள்போலவுங் கிடாக்கள்போலவும் பகைத்தமதயானைகள்போலவுங் கழுதைகள்போலவுங் குரங்குகள்போலவுஞ் சினந்தசிங்கங்கள்போலவுங் கரடிகள்போலவும் பன்றிகள்போலவு நாய்கள்போலவும் புலிகள்போலவும் பல்வுருவங்களையெடுத்துக்காட்டிநின்றன வப்பேய்களென்க. (௰௬)

ஈட்டமும்வேறுமா யேந்தும்வேலெலாம்
வாட்டமும்வெருவுமாய் வையமாடவுட்
கோட்டமும்வினைகளுங் குணித்தபேய்கள்போ
ராட்டமுமுழக்கமு மளவற்றுயதே.

உரை. — அங்ஙனந்தோன்றினபசாசுக ளொருங்குடன்கூடியுந் தனித்தனித்துந் தாமேந்தியவாயுதங்களெல்லாவற்றையு மெலிவும் பயமுமுட்கொண் டுலகெலாமாடும்படி மனக்கோட்டமுந் தீவினையும் வளரும்பொருட்டு நினைத்ததன்மையாற் போராட்டமு முழக்கமு மளவின்றியாயிற்றென்க. (௰௭)

ஒளிமுகத்திடமுநீ ருலகுநீறுமென்
றிளிமுகத்தெங்கணு மெரிசெந்தீயெழச்
சுளிமுகத்ததிர்ந்தபேய் தொடுத்தவேலெலாம்
வெளிமுகத்திடையினீ றுகவீழ்ந்தவே.

உரை. — வானுலகும் பூவுலகுநீறுமென்றாற்போல வெங்குமிணங்கிச் செந்தீயெழும்படி சினந்ததிர்ந்தபேய்களெறிந்தவராயுதங்களெல்லா நடுவழியாகாயத்தி னீறுகவழிந்து விழுந்தனவென்க. (௰௮)

சூரதமேகவசமாய்த்தேவ தூய்தயை
யிரதமேயெழுந்தவவ்விருவர்தம்புடை
விரதமேகதுவிடாப்புரிசைமேற்படப்
பிரதமேவெறியுறப்பிதிர்ந்தவேலெலாம்.

உரை. — அப்பொழுது மரியுஞ்சூசையுமென்றிருவர் கல்வியின்காட்சியைக்கவசமாகக்கொண்டு கடவுளவர்க்குச்செ

ய்யூந் தேவதயையை யிரதமாகவேறிநின்று தம்மைச்சூழ்ந்த வாய்விடாதகோட்டைமதிளாகத் தவத்தைக்கொண்டு போரிலெறிந்தவேலெலா மக்கோட்டைமதிளிற்பட்டுப் பசாசுகள் கலங்காநிற்கும்படி கீழேயுதிர்ந் தழிந்தனவென்க. (௰௯)

புறத்தளவகல்திருப் புதல்வனுண்மையா
லறத்தளவுயரினோ ரழிவுற்றெஞ்சுக
திறத்தளவறிவுள பேய்கள்செய்ததீ
மறத்தளவமர்வகை வரைவிலாயதே.

உரை.— அங்ஙனம் புறத்துவமையின்றி யத்திருக்குமாரன்கொண்ட வளவிறந்தவல்லமைகொண்டு அறத்தின்றன்மையா லுயரியகுணத்தோராகிய மரியுஞ்சூசையு முள்ளழிந்த றமெலிவடைதற்பொருட்டாக மிக்கதிறத்தினளவோ டறிவின்கூர்மையுள்ளபசாசுக ளன்றுதம்பகைக்களவாகச் செய்தபோர் பலவகைகளு மட்டொன்றில்லனவென்க. (௨௰)

உள்ளியசமரெலா மொழிந்துளங்கெட
வெள்ளியகுணுக்கின மேங்கிவிம்மவுந்
தெள்ளியமரபினோர் செருவெண்ணுதுளம்
விள்ளியமகிழ்வரு விளங்கினாரரோ.

உரை.— அங்ஙனம் பசாசுகளாராய்ந்தெடுத்த பலபோர்வகையெலா முதவாமலொழிந்து தாமுட்கெட்டு நிந்தைபட்டேங்கி விம்மாநிற்கும்படி காட்சியிற்றெளிந்தகுணத்து மரியுஞ்சூசையும் பேய்செய்தபோரைச் சற்றுமெண்ணுமனமலர்ந்துட்கொண்ட மகிழ்ச்சிவிடாமலும் விளங்காநின்றாரென்க. (௨௧)

வேறு.

மின்னியம்புயக்கண்ணுதி வென்றலைவம்பொறியைக்காத்தோர்
வன்னியம்பகையிற்பொங்கி வஞ்சகவெறிகளார்த்துத்
துன்னியம்புயிர்த்ததீயாற் றுகளுறுக்கதுவிடாத
கன்னியம்புரிசைசூழ்ந்த கதவடைத்தரணைப்போன்றார்.

உரை. — அங்ஙனமரியுங்குசையும் விளங்கியதந்தாமரை க்கண்முதற் பஞ்சேந்திரியங்களைக் காத்தவராகி யப்பேய்க ள்வஞ்சங்கொண்டு வெம்பகையிற்பொங்கி யார்த்து மொய் த் தெய்தவம்புகள்விட்டவழலாற் றும்வடுப்படாமல் வாய்வி டா தழியாதமதிளுள் கதவடைத் தளைசயாதகோட்டையைப் போலநின்றனரென்க. (௨௨)

கருவினூர்கலங்கத்தெண்ணங் கயங்கெடத்தெளிவத்றன்
செருவினூற்கலங்கவுள்ளந் தெளிவறப்பங்கமாமென் [ன
றுருவினூற்கலங்கத்தோன்றி யுடன்றபேயுளத்திலன்னூர்
வெருவினூற்கலங்கத்தம்முள் விளைத்தனவரும்போரன்றே.

உரை.— அங்ஙன மரியுங்குசையுந் தம்மேற்பசாசுகள் செய்தபோர்முகத் தசையாதிருப்பதுகண்ட பேய்கள் தெ ண்ணீரும் யாதொருகருவினூற்கலக்கினு லதுதெளிவுபோக்கி ப் பங்கமாகியசேறுவதுபோலப் பசாசுசெய் போர்முகத் து மனிதருள்ளங்கலங்கினூற் றெளிவுபோய்ப் பங்கமாகிய பாவமாகுமென்று கலக்கமாதற்குரிய வெருட்டுமுருவங்களை க்காட்டியபேய்க ளவ்விருவர்மன மஞ்சிக்கலங்கும்படி யவ ர்காணத் தம்முள் ளரிய மாயப்போரைவிளைத்துக்காட்டின வென்க. (௨௩)

வேறு.

கடமாறிலவெஞ்சினவேழமொடுங் கனமீருகொடிஞ்சி
விமானமொடு [ழியால்
மிடமாறியுகண்டனவாசியொடும் மெரியூறியவெங்கதமார்வி
விடமாறிலவெஞ்சிலையாதியொடும் வினைபோருரிவாள்வளை
வேல்கவருந் [டையே.
தடமாறிலவண்கரவீரரொடுஞ் சலராசியிறேன்றியதோர்ப

உரை. — அங்ஙன மும்மதமாறுத வெஞ்சினயானைகளு மேகங்களையறுக்குமுயர்ந்தகொடிஞ்சியின்றேர்களு மொரு நிலைநிற்கமாட்டாமற் குதித்துப்பாயும்புரவிகளு நெருப்புப் பெயர்க்குமுற்றதாகி யெரிந்தகண்ணேடுநின்று மாறுதநஞ்

கிணைக்கொப்பளிக்கும் வில்லுமுதல் வாளுஞ் சக்கரமும்வே
லு மென்றிவற்றோடு மற்றப்படைக்கலங்களைத் தடக்கையி
லேந்தியவீரருங் கணக்கின்றித்தோன்றிக் கரைகாணாத கட
லோடொத்ததோர் பெரும்படைதோன்றினதென்க. (௨௪)

புழுவாய்வழிகண்வழிகைவழியும் புனலொத்தவெரித்தி
ரளூற்றுறநீண் [வுவாக்
மழுவாய்வழிவேல்வழிவில்வழியும் மலியக்கிபுகைப்பமதத்த
கெழுவாய்வழிபாய்பரிவாய்வழியுங் கிழிபட்டகனத்திடியொ
த்தெரிதீ [ட்டினவே.
விழுவாய்வழிமண்வழிவான்வழியும் வெருவுற்றழல்ச்சமர்கா

உரை. — அங்ஙனம் புழுத்தவாயும் விழித்தகண்ணும் பொருதகையு மூற்றுகள்போல வாருகச்செந்தீத்திரளாய்க்கொப்பளிக்கவு மழுவும் வேலும் வில்லு மிக்கழலைவிட்டுப்புகையவு மதயானைகளும் பாய்பரிகளுங் கிழித்தமேகத்தின்வாயினின் றிடிவிழுந்தாற்போலத் தம்வாயினின்றழல்திரளாய்ப்புறப்படவு மிப்பலவழிவிழுந்த தீமிகுதியால் வானுலகும்பூவுலகும் வெருவிவேகும்படிதோன்றிக் கொடியபோரை யப்பேய்கள்காட்டினவென்க. (௨௫)

மேகங்கள்மெலிந்தறவேகுமென மேகத்துறுமின்றிடி
வேகுமென [குமென
மாகங்களடங்கிலும்வேகுமென வானிற்றிரிவெஞ்சுடர்வே
நாகங்களொடும்புனல்வேகுமென நால்வம்பலொடுங்கடல்
வேகுமென [யோர்பொருவார்.
வேகங்களுணர்ந்துளம்வேகுமென வேகங்கொடுவெந்திறை

உரை. — அங்ஙன மேகங்களு மேகத்திடிகளும் வானமண்டலங்கள்யாவும் வான்றிரியுஞ்சூரியனு மலைகளோ டவற்றினின்றிழிந்தோடு மருவிகளும் பூவுலகநாற்றிசைகளுங் கடலுமென் றிவையெல்லாம் வேகுமென்றுதோன்றி யவ்வேகத்தைநினைத்தமனமும்வேகும்படி முன்சொன்ன பலவகைத்தீயின்வேகத்தைக்காட்டித் தீநிலத்தோராகியபசாசுகள் தம்முட் போர்பொருதனவென்க. (௨௬)

தொடையுற்றவெயிற்றழலீட்டியபேய் தொடவொ
　　ற்றைசரத்தையடற்றனுகோர்த் [டருந்
திடையுற்றசதச்சரமாகிவிடு மிடையாயிரமாய்வெளியிற்ப
கடையுற்றசரத்தொடைகோடியுமாய்க் ககனத்திலழற்றியமா
　　ரியெனு [ளவாம்.
மிடையுற்றவழற்கிளர்நீத்தமெனு விரிதிக்குகள்முற்றுமெரித்த

உரை.— ஏயாமனெடும்பல்லின்வழியா யழலைக்கொப்ப ளித்தபேய்க்கூட்ட மோரம்பினையெடுப்ப வில்லிற்கோக்கும்போது நூறாகவு மெய்யும்போ தாயிரமாகவு மெய்தவம்பாகாயத்திற்போகிறபோது கோடியாகவும் விட்டவம்புகளக்கினிமாரியாகத்தோன்றி யம்மாரியானிறைந்த வக்கினிவெள்ளமோடித் திசைகளெல்லா முழுதுமெரிந்தனவென்று தோன்றினதென்க. (௨௭)

களிவீசியமும்மதம்வீசியமால் கரிவாரினரந்தரம்வீசின
　　ரோ [றுலவத்
வெளிவீசியசிந்துரமார்த்தலற விசையோடுசுழன்றுசுழன்
துளிவீசியமேகமொடுங்கிடவுஞ் சுடரோன்வெருவிக்கடி
　　தோடிடவும் [ந்தனவே.
வளிவீசியவூழியிலேவெறுவீழ் மழைபோனிலமாடவும்வீழ்

உரை.— மீளவு மப்பேய்கள் களியின்மிகுதியான் மும்மதமாறுதயானைகளைக் கையால்வாரிக்கொண்டு வீசி யாகாயத்திலெறிவன, அங்ஙனமெறிந்தயானைகள் மிகவுமுழங்கி யலறிவிசைப்படச்சூழச் சுழன்றுலாவினதனாற் றுளிபெய்மேகங்களொதுங்கவுஞ் சூரியன்வெருவிச் சீக்கிரமாயோடவு முகமுடியுநாளிற் காற்றின்முகத்தி விடியோடுமேகங்கள் கீழ்விழுந்தன்மையா லந்தயானைகளும் பூமிநடுங்கியாடும்படி விழுந்தனவென்க. (௨௮)

சிறையோடுபறந்தபறம்பெனவோ திறலோடுபடர்ந்த
　　விசும்பெனவோ [ரளே
வுறையோடுகலந்திருவிண்டிடையூ ருருளோடுகிரித்திரதத்தி

மிறையோடுவிரிந்தனபொய்யெனவோ விரைவோடுபடர்ந்
துபொதிர்ந்துபொரக் [ஞ்சமரோ.
கறையோடுமிடைந்தெரியுந்தழல்க் கதமோடுசரந்தொடுவெ

உரை.— பொருததேரோவென்னி விறகோடுமலைகள்பற
ந்தனபோலவோ விடிவலியோடு மேகங்கள்படர்ந்தனபோ
லவோ நிலத்திற்படாமன் மழைத்துளி மேகத்திடத் துருளை
யூர்ந்துதிரியு மிரதங்கடிரள் குற்றம்விளையப் பரந்தபொய்
யைப்போலச் சீக்கிரமாயோடிப்படர்ந்து நெருங்கிப்பொ
ரவே யிரத்தமுமழலுங்கலந்தெழும்படி சினங்கொண்டு ப
கழிமாரியைவிட்டுவிளைந்தது வெம்போரென்க. (௨௯)

தொடையொன்றுசரஞ்சதமொன்றிடுவார் துறுகின்
றிரதங்கொடெதிர்ந்திரிவார் [யுடன்றெரிவா
புடைநின்றுமிடைந்துதிரிந்தகல்வார் பொதிர்கின்றுபுழுங்கி
ரிடைநின்றுசுழன்றெவணுந்தழலா ரெரிகின்றிடியென்றுசு
ரந்தொடுவார் [ரண்டுருள்வார்.
மிடைநின்றிரதங்கொடிழிந்தெழுவார் மிலைகின்றுபிரண்டுபு

உரை.— மீளவுமந்நரகத்திசையோ ரொவ்வொருதொ
டையா லம்புகணூறுமெய்வார், எறினவிரதங்க ளெதிர்ந்து
நெருங்கும்படிதிரிவார், தம்முன்னெருங்கியபின் விலகியக
ல்வார், அங்ஙனநெருங்கிச்சினந்து போர்பொருதழலாயெரி
வார், மீளவுந் தம்முட்சுழன்று சூழவெங்குமெரியுமிடிகளை
ப்போலவம்புகளையெய்வார், எறினதேரோடு கீழேவிழுந்தெ
ழுந்து பிரண்டுபுரண்டுருண்டு பொருவாரென்க. (௩௰)

வேறு.

ஒருபுடையிவிற்றையாவுமிவரவி னுருவமுடனுட்குவீச
வணியணி [மறவமர்
யிருபுடையிலுற்றசோகுமொவிதா வெதிருமெதிருற்றயாவு
தருபுடையில்முற்றிவேகுமழலெழத் தகுதியிலகற்றமாயவினை
யொடு [மர்செய்வார்.
வருபுடையில்மற்றியாருமிணையற வடுவனெடுமைத்தன்வீரவ

உரை. — இவையெலா மொருமுகத்தாசையில் வெருவிடு முருவத்தைக்காட்டி யணியணியாயிருபக்கத்துநின்ற மற்றப் பசாசுகள் முழங்காநிற்ப வடுவனென்றும் மைத்தனென்று மிருபேய்கள் தமக்கெதிர்வந்ததெல்லாமழிந்துகெடும்படி த ம்முட்பொருதவிடத்து மிக்கழலெழ மட்டின்றிப்படித்த மாயவித்தையோடு மற்றப்பேய்களைக்காட்டிலும் வீரப் போராகப்பொருதாரென்க. (௩௧)

கரிகளை நிகர்த்தவீரமுனிவொடு கடியகதமொய்த்தநாளி
முகமுட [ருகையி
னரிகளையிசைத்ததேரினெழவெழு தழலுசரமைத்தனேவிவ
லெரிகளை நகைத்தகோபமெரிநெடி தெயிறுகடுதைத்தசீயமு
கமொடு [குவார்.
வரிகளையமைத்ததேரினுயரொழும் வடுவனெதிருற்றுலாவமலை

உரை. — மதயானைகளையொத்த கோபத்துடனே சினந்த கொடியநாய்முகமாய்ச் சிங்கங்களைப்பூட்டிய தேரின்மேற் றோன்றினமைத்த னம்புகளையெய்துவருகையி லழலினுமழ ன்று நீண்டுநெருங்கியவெயிறுள சிங்கமுகத்தோடு புலிகளை ப்பூட்டிய தேரெழுந்தவடுவ னவற்கெதிராகவந் துலாவிப் பொருதாரென்க. (௩௨)

அழலெழவளைத்தசாபநிமிரில வரைநொடிமுடித்திலா
துவிடுகணை [ணியணி
நிழலெழமருட்டுவானமிருளுற நிரைநிரையெதிர்த்தகூளிய
புழலெழவுரைத்தவாளிவழிவழி புனலெனவிரத்தமோடமலை
முதல் [குவான்.
சுழலெழவுயிர்ப்புவீசிமெலிவில சுனகமுகன்முட்டி நீடுமுனை

உரை. — நாய்முகனாகிய மைத்தன் நீமேற்பறிய வளைத்த வில்லு நிமிராம லரைநொடிநேரமுடியுமுன்னே விட்ட வம்புகள் நிழலாம்படி மறைத்தவான மிருளைக்கொள்ளவு நி ரைநிரையாயெதிர்நின்றபேய்க ளணியணியாய்ப்பட்டபுண் வாய் நுழைந்தவம்புகள்வழியாக வழிந்தபுனலைப்போல வி ரத்தமிகவுந்திரண்டோடவு மலைகள்முதலாய்ச்சுழலும்படி

பெருமூச்சுகளைவிட்டு முட்டி நெடிதாய்க்கோபித்துப்பொருதானென்க. (௩௩)

நெடுமலைதிரட்டிநீளவமைவன நெடியசிலையுற்றவீரவ
டுவேனும் [ழைவிடத்
கொடுமலைசுருட்டியாயவிருபுயக் குவடெழவளைத்தசாபம
தொடுமலையுயர்த்தநேமியுருவவுந் துழவிசையின்மைத்தனே
வுகணையொடு
கடுமலையிழைத்தசாபமிறுவது கடிதிலவனக்குநீடுகுமுறவே.

உரை. — அங்ஙனமைத்தன் பொருதுவருகையில் வீரவடுவனு நெடியமலையைத்திரட்டிச்செய்த நெடியவில்லைக்கொண்டு கொடியதோரிருமலைகளைச்சுருட்டிவைத்தாற்போல வுயர்ந்ததன்னிருபுயங்கள் எழும்படி யெய்தவம்பின்மாரி மலைகளையேந்தியபூமியு முருவினவாகி மைத்தனெதிராய் விசையோடுவிட்டவம்புகளான் மலையாற்செய்தவடுவேன்வில் விற்றொடிந்ததே மைத்தன் மிகவு நக்கு நெடிதுமுழங்காநிற்பவென்க. (௩௪)

சினமொடுமுடற்றிநீடுகையிவிடிச் சினைமுகில்பறித்து
நேமியெனவெறித் [டுவேனே
தினமொடுமெதிர்த்தகூளிவெருவுற விடியொடுசுழற்றிவீசவ
மனமொடுபழுத்ததீயையுமிழ்வன வடியகணைமைத்தனேவி
யெழுதினன் [டிமெவியவே.
கனமொடுமெரித்தவேறுதுகளெழக் கடறினைசுருட்டியோ

உரை. — வடுவன் றன்வில்லொடிந்ததுகண்டு சினத்தோடுடற்றிப்பார்த்து நீண்டகையாற் சூலாகவிடிகளைக்கொண்டவொருமேகத்தைப்பறித்துச் சக்கராயுதமாகவெறிந்து கூட்டமாயெதிர்த்த மற்றப்பேய்கள்வெருவும்படி யிடிகளோடம்மேகத்தைச்சுழற்றி மைத்தன்மேலேவீசினன், மைத்தனேவெனிற் றன்மனத்திற்பழுத்தகொடுத்தீயையுமிழுங் கூர்ந்த வம்புகளை யெதிராயெய்தமாத்திரத் தம்மேகமு மம்மேகத்துள்ளவிடிகளுந் தூளாய்ப்பறந்து கடலும்வெருவித் தினைகளைச்சுருட்டி மெலியாநின்றதென்க. (௩௫)

புடவியையனைத்தும்வேரோடசைவன புதவழல்கொளு
த்துசூலமிருகையிற் [ன
றடவியிறுகக்கடாவியுழுதன சடைவடுவனிட்டகாலையெதிர்வ
நடவியவயத்ததேரும்வெறியின நகுவவழல்பற்றிநீறமுகில்பு
ழை [வீழவுறுமினன்.
யிடவிளாவின்மைத்தன்மீதிலெழவிடி யெனமுனர்குதித்து

உரை. — அதைக்கண்டவடுவன் பூவுலகினை வேரோடசை
க்கவு நரகத்தீயைத்தூண்டவு முரியகொடுஞ்சூலத்தை யிரு
கையாலிறுகப்பிடித் தெறிந்தவளவி லெதிர்நின்ற மைத்தன
டத்தினதிண்டே ரெங்குஞ்சூழ மற்றப்பேய்கள் நகும்படிய
ழல்பற்றி நீறாகவேகாநிற்ப மைத்தன்மேகங்களைத்துளைத்தா
காயத்திற் பாய்ந்தபின்ன ரிடிவிழுந்தாற்போல வடுவன்மு
ன்பாகக்குதித்துவிழுந்து முழங்கினனென்க. (௬௬)

உறுமியுருமொத்தவீரன்வடுவனுந் துயருமிரதத்தை
வாரிமுகிலறத் [வெறிதரத்
துறுமிசைசுழற்றிவீசுவிசையொடு துறுவியழல்பற்றிவேக
தெறுமிடியினத்துவேகவினமுகில் திசைதிசையனைத்தும்வே
கவிருவிழி [னனே.
யிறுமெரியழற்றிவேகவெரிமழை யெனவிழுசினத்தசீயவத

உரை.—அங்ஙன மிடியைப்போல முழங்காநின்றமைத்த
னே வடுவனேறிய வுயர்ந்தவிரதத்தைக்கையால்வாரிக்கொண்
டு மேகங்களறும்படி மேலேசுழற்றி வீசினவிசையினுலழல்
பற்றி யவ்விரதம்வேகும்படி யெறிந்தான், எறிந்தவிரதம்வெ
ந்தவழலா லிடிகளோடு மேகங்கள்வேகவுஞ் சூழ வெண்டி
சைகள்வேகவுஞ் சினந்தசிங்கமுகனுகியவடுவன் றன்னிருக
ண்களைக்கிழித்ததீ யழன்றுவேகவு மக்கினிமழைபொழிந்த
துபோல நெருப்பினைச்சிந்திக்கீழேவிழுந்தானென்க. (௬௭)

வேறு.

அழலமதகரியழலவயபரி யழலவுருளொடுதிகிரிக
ளழலவிரிசிலையழலமுனிகணை யழலவடியயில்ழலவா

ளழலவிருவிழியழலமறமன மழலவிருசெவியழலவா [ர.
யழலவடையலுமழலுமிருவரு மழலுமிருகதையொடுபொ

உரை. — அங்ஙனந் தேரொரிந்துவிழுந்தமைத்தனும் வடு வனு மிருகதாயுதங்களைக்கொண்டுபோர்செய்தார், அழன்ற விருவரு மழலைப்பறியு மிருகதாயுதங்களைவீசலிற் சூழத்தோ ன்றினயானைகளுங் குதிரைகளுந் தேர்களுமெரிந்தழியவு மற் றப்பேய்கள்பிடித்த வில்லுகளு மம்புகளும் வேல்களும் வா ள்களு மெரிந்தொழியவும் பார்த்தவிழியுஞ் சினந்தமனமுங் கேட்டசெவியு முழங்கினவாயு மெரிந்துபுகையவும் பொரு தாரென்க. (௩௮)

திரிவருகளுவரணுகியகலுவர் திமிரவிருபுயமுறமுவர்
பிரிவர்மிடைகுவர்புரளவெருளுவர் பிரளவருளுவர்குருதிகள்
சொரிவருளைகுவர்சுழலுகதையொடு சுசியின்வெகுளுவர்
தொனியெழ
முரிவமெரிகுவர்முனியவதிர்குவர்முனையிலெதிரிலர்முனைவரோ.

உரை.—அங்ஙனந் திரிந்துகுதிக்கவுங் கிட்டியகலவு மிரு புயங்களோங்கி முழங்கவும் பிரிந்துநெருங்கவும் புரண்டு வெருளவும் பிரண்டுருளவுங் குருதிகளைத்திரளாய்ச்சொரிந் துவருந்தவு மிருகதாயுதங்களைச்சுழற்றித் தீப்போலவெகு ளவு மார்த்துமுறிந்துவேகவு முனிந்துமிக்கதிரவும் போர்மு கத்தெதிரின்றிப் பொருதாரென்க. (௩௯)

உயிரமதகரிசுழலவெறிகுவ ருழுவையுருவொடுமுகளு
பெயரவவர்கவர்வயிரநெடுவரைபிளவவுரமுழுதெறிகுவ [வர்
ரயரவிரிகுவர்குருதிமலியன வலையைமுழுகுவர்சினமலி
துயரமுகமொடுதசையையுணவுண வுதிரமுமிழுவர்சொரிய
வே.

உரை. — மதயானைகளையாகாயத்திற் சுழலும்படி விசை யோடெறியவும் வேங்கையுருவமெடுத்துப்பாயவும் வயிர நெடுமலைகளைப்பெயர்த்துக் கையாற்பிடித்தெதிர்நின்றவர் மார்புமுழுதும் பிளக்கும்படியெறியவு மங்கங்கேயயர்ந்து

திரியவு மோடினவிரத்தத்தினலையினுண்முழுகவுஞ் சினங்
கலந்த துன்பமுகத்துத் தசையைநிறையவுண்டுசொரியும்ப
டியுதிரத்தையுமிழவுங் கொடிய மாயப்போர்காட்டினவெ
ன்க. (௪௰)

முறையிலொலியொடுமுரசுமுருடொடு முழவொடு கடமொ
டுமொலியெழும் [லியெழக்
பறையினொலியொடுமிரதவுருளொடு பரிகள்கரியொடுமொ
கறையினொலியொடுமுவணியயிலொடு கதைகள்சிலையொடுசி
லைபொழி [வனவெனு.
யுறையினொலியொடுமுகிலினொலியொடு முவரியொலிமெலி

உரை.—முறையொன்றின்றி முரசுமுருடு முழவுங் கடமு
மற்றப்படைவாச்சியங்கள் முழங்கவு மோடினதேர்களும்
பாய்ந்தபரிகளு மதத்தயானைகளுமுழங்கவுஞ் சிந்தினவிரத்
தமும் வீசினவாள்களு மெறிந்தவேல்களுஞ் சுழற்றினகதா
யுதங்களும் வளைத்தவில்லுகளும் வில்லுகளெய்தவம்புமாரி
யுமுழங்கவு மிவற்றின்முன் மேகமுழக்கமுங் கடலின்முழக்
கமு மெலிந்தனவென்க. (௪௧)

பிழையின்வழிவழிதுயரின்மலியன பெருவில்வழிவழி
கணையதின் [லென
புழையின்வழிவழிகுருதிமலியன பொறையின்வழிவழிபுன
மழையின்வழிவழியிடியின்மலியன படையின்வழிவழியெரி
மனத் [யிலா.
துழையின்வழிவழிவெகுளிமலியன வுரையின்வழிவழியிணை

உரை. — பாவத்தின்வழியாக மலியவளருந் துயர்களைப்
போல வில்லுகளின்வாயான் மட்டில்லாதசரங்க ளோயாமற்
புறப்படவு மெய்தவம்புகள்செய் துளைவழியாய் மலையினி
ன்றிழிந்தோடுமாறுபோலக் குருதியோடவு மேகத்தினின்று
விழுமிடிகளைப்போலப் பலபடைக்கலத்துவழியாற் றீமலி
யப்பறியவும் பசாசுகள்மனதிற்கொண்டகோப மேன்மேல
ழன்று மிகவுஞ் சொல்லா லொப்பில போராயிற்றென்க.
(௪௨)

இனையவடையனு நரகவெறியின மியலவிடையிடையட
லமை
ரனையவலியொடுபெரியவளனுட னரியதுணையும்வெருவுருச்
சினையசனிமுகில்மெலியவெரிவெறி சினவியெழவெழவரிதி
டர் [வியன.
புனையவுமவனபுகையவெருவன பொருதல்வெறிதெனமெ

உரை. — அங்ஙன மிவையெல்லாவற்றையு நரகத்தினின்
றுபுறப்பட்டபேய்களெல்லா மொருங்குடன்கூடி யன்று
காட்டி யரும்போர்த்தன்மையிற் றமக்குளவல்லமையெல்
லாஞ்செலுத்திச்செய்தாலுஞ் சூசையு மவன்றுணையாகிய
மரியு மனதிலேசற்றுங்கலங்காம லஞ்சாதிருப்பதைக்கண்டு
சூலாக விடிகளைக்கொண்ட மேகமுழக்கத்தி னு மார்த்துச்சி
னந்து குதித்தபேய்கள் மனதி லருந்துன்பத்தைக்கொண்டு
நொந்துபுகைந் துள்ளஞ்சிக் காட்டினபோர் வீணென்றுக
ண்டு மெலியாநின்றனவென்க. (௪௩)

வேறு.

இன்னியாவையுமுளத் திரங்கிமூவரு
மின்னிலாவமரரும் விழித்துற்றாலாற்
றுன்னியார்கவியுடை சூழ்ந்தபாருளோ
ரன்னியாவையுமொருங் கறிந்திலாயினார்.

உரை. — இவையெல்லாவற்றையுமனதிலிரங்கி மரியுஞ்சூ
சையுந் திருக்குமாரனுமென்னுமூவரு மின்னியவானவரு
ங் கண்டறிந்தாரொழியக் கடலையுடுத்தபூமியிலுள்ளமனிதரு
ள் ளொருவனாயினுமறிந்தவனல்லவென்க. (௪௪)

பொன்வளர்வயிரநற் பொருப்பிற்போன்றுளம்
மின்வளருணர்வினால் விளங்குமாதவன்
கொன்வளர்வஞ்சகக் குணுங்கின்மாயைகண்
டின்வளரிரக்கமிக் கெண்ணியோதினான்.

உரை. — அங்ஙனம் வயிரப்பொன்மலையொப்ப வசையா
தமனத்திற் றெளிந்தவுணர்வினையுடைய மாதவன்சூசை வீணா

ய் வஞ்சனைசெலுத்தி மாயவித்தையாற் பசாசுகள்காட்டின தைக்கண்டு மனிதர்க்கிரங்கிச் சொன்னானென்க. (௬௫)

ஒழுங்கியமருப்பினை யொடுக்கியெந்தையான்
மழுங்கியவயத்தபேய் வஞ்சமாதிலாப்
புழுங்கியகடையுகம் பொருவப்பாரெலாம்
விழுங்கியதெனமுனை விளைத்தவீடிதோ.

உரை.—நிறுவி நீண்ட கொம்புகளையொடுக்கி யாண்டவனால் வல்லமைகுறைந்த பசாசுகள் தம்வஞ்சனைகுறையாமலுலகமுடியுங்கடையுகம்போலத் தாம்பூவுலகெல்லாத்தையுமிழுங்கினதன்மையாற் போர்செய்தவல்லமை யிதுதானோவென்றானென்க. (௬௬)

மின்முதல்முகிலொடு விசும்பியாவையும்
பொன்முதல்மணிகிளர் புணரியாவையுங்
கன்முதலீங்கெலாங் கனன்றுசுட்டெனப்
புன்முதல்சிதைந்ததோர் பொருளிங்காயதோ.

உரை.— அப்பேய்கள் பொருததன்மையான் மின்னலுமேகங்களுங்கூடி யாகாயமெல்லாத்தையும் பொன்னுமணியுங்கொழித்த கடலெல்லாத்தையுங் கல்லுமுதலாய்ப் பூவுலகுள்ளவெல்லாவற்றையுமழித்துச் சுட்டாற்போலத் தோன்றியபின்பு பசும்புல்லொன்றுமுதலா யிங்கேயழிந்ததுண்டோ வில்லையென்றானென்க. (௬௭)

விண்ணின்மேல்வைத்தநன் றிழந்தவெம்பழி
மண்ணின்மேல்வைத்தமன் னுயிரின்வைத்தபேய்
கண்ணின்மேல்வைத்தமா சென்னக்காட்டிய
வெண்ணின்மேல்வைத்தவுட் கியற்றுமாயமே.

உரை. —வானுலகுள்ளநன்மைகளையிழந்தமையா லுட்கொண்டபழியைப் பூவுலகுள்ள மனிதர்மேலேவைத்தபசாசுகள் கண்ணின்மேல்வைத்தமாசுபோல மனிதனைக்கெடுக்கவெண்ணப்படாதவகையா யவர்க்குப் பயம்வருத்துவித்துக் காட்டின மாயத்தொழிலிதேயென்க. (௬௮)

மாற்றரும்வஞ்சக மாயவித்தையா
லாற்றரும்வெருவுட னகங்கலங்கவே
போற்றரும்பழிவெறி புனைபுகுத்தலாற்
றேற்றருமழிவுறிச் சிதையும்பாரெலாம்.

உரை.—அங்ஙனமாற்றப்படாத வஞ்சகமாயவித்தைகளா லாற்றாதவெருவோ டுள்ளங்கலங்கும்படி காத்துவிலகுதற் கரியபழியையுள்ளபசாசுகள் பாவங்களைவிளைவித்துத் தேறு தவழிவோடு பூவுலகெல்லாங்கெட்டதென்க. (௪௯)

இத்திறத்தினலன்றே விருள்விரும்பிய
மைத்திறத்தடல்கொளு மண்ணகங்குவிற்
பொய்த்திறத்துகுத்ததீக் கனவைப்பூத்தவர்
மெய்த்திறத்துணர்வற விளைக்குந்தீமையே.

உரை.— இங்ஙனமல்லோ விருளைவிரும்பி மயக்கத்தால் வல்லமைகொள்ளும்பேய்க ளிராவிலே பொய்யைக்காட்டி த்தோற்றுவித்த கனவைக்கண்டவர் மெய்யிற்றெளியாம லறிவுகெட்டுப் பாவங்கள்விளைவனவென்க. (௫௰)

ஆசைசெய்சேயர்கொன் றலக்கண்செய்குவேன்
மாசைசெய்நலமற மிடிவகுக்குவேன்
பூசைசெய்தெனவணங் கிலாதபோதெனு
வோசைசெய்யுவரிபோ லுரைக்கும்பேய்களே.

உரை. — அங்ஙனம் வெருவிக்குங்கனவைக்காட்டி விரு ம்பின வுன்மக்களைக்கொன்று வருத்தம்விளைவிப்பேனென் றுஞ் செல்வங்களைமாற்றித் தாரித்திரத்தைவருத்துவிப்பே னென்றும் பூசைகொண்டென்னைவணங்காயாகி லென்று வீணுயிரைக்குங் கடலொலிபோலப் பசாசுகளுங்கனவிலே சொல்லி மனிதரைமயக்குவிப்பனவென்க. (௫௧)

ஒலித்தலாலெவன்செயு மூவரிபேயினங்
கலித்தலாலெவன்செயுங் கடவுள்சார்ந்தகாற்

சவித்தவாலெவன்செயும் பிணித்ததன்மையின்
வலித்தநாய்கடிக்குமோ மருவிலாமையே.

உரை. — உலகெலா மிழுங்கவேணுமென்றதுபோல வெப்பொழுது மிகவுமுழங்காநின்றதனு நெடுங்கடல்தன்கரையின்மேற்பொங்கிச் செய்வதுண்டோ வில்லையே, அங்ஙனமாண்டவன்பாதத்தைச் சேர்ந்தகாலத்து வெருவிடும்படிகூப்பிட்டாலும் பசாசுகளாலாவதொன்றுமில்லை. மீளவுங் கட்டப்பட்டநாய்குலைத்தாலு மதொழிய வென்னசெய்யும், கிட்டாதகாலத்துக் கடிக்குமோ வில்லையே, அங்ஙனம்பசாசுகளென்க. (௫௨)

பிணிப்பருங்குணத்தொடு பிணிபெயர்த்தறக்
குணிப்பருநலந்தருங் கொள்கைபேசுமால்
துணிப்பருந்தந்துயர் துடைக்கலாற்றிலாத்
தணிப்பருநரகழற் றழலத்தாழ்ந்தபேய்.

உரை. — மீளவுமுடியாததந்துன்பங்களைமாற்றித் துடைக்கமாட்டாமற் றணியாச்செந்தீநரகி லெக்காலத்தும்வேகும்படி விழுந்துகிடக்கின்றபேய்களே மனிதர்கொண்டதீராதவியாதிகளைத்தீர்க்கவு நினையாதநன்மைகளைத்தரவுஞ் செய்வோமென்று சொல்வனவென்க. (௫௩)

சுட்டிடைநரகுழி புதைத்தசோகுவா
னட்டிடைதளர்ந்தனர்க் குறுதிநல்கலே
நெட்டிடைநெறிகளி லுதவிநேடினர்க்
கட்டிடைகரவர்வந் தமைதல்போலுமே.

உரை. — மீளவுந் தம்மைவணங்கினவர்க்குப் பரமகதிவாழ்க்கையைத் தருவோமென்று பேய்கள்சொல்வி மனிதனையேய்ப்பன வாகையாற் றீயெரிநரகிற் புதைக்கப்பட்டபசாசுகள் வான்கதிசேரும் வழியிற்றளர்ந்தவர்க்குத் தாமுதவிசெய்வ தெங்ஙனமென்னில், நெடும்வழித்துணையைத் தேடினவர்க்குக் கொன்றுபறிக்குங்கள்ளர் துணையாகவமைந்த தன்மைபோல வாகுமென்க. (௫௪)

வெம்பியவஞ்சனை விளங்கிலாமையாற்
பம்பியபுரைபுனைந் தேய்த்தபாருளோர்
நம்பியவெறியொடு நரகில்வீழ்வரென்
றம்பியகொடியினோ னழுதிரங்கினான்.

உரை.—அங்ஙனஞ் சினங்கொண்டுபசாசுகள் செய்யும்வஞ்சனையுணராததன்மையா லேய்க்கப்பட்டமனிதர் விடாமற் பாவங்களைக்கொண்டு தாநம்பினபேய்களோடு நரகத்திலேவேகும்படி விழுவாரல்லோவென்று முன்சொன்னபடி பேய்கள்போர்செய்துவருகையின் மதுமலர்க்கொடியேந்தியகுசையிங்ஙனமழுதுமனிதர்க்கிரங்காநின்றானென்க. (௫௫)

வேறு.

நற்றிறத்துநரர்க்குமினைந்தபின்
செற்றிறத்தொவிசீறியபேய்கெட
விற்றிறத்துவியன்றவமேந்தியம்
பிற்றிறத்திலறத்தொடையேற்றினான்.

உரை.—அங்ஙனஞ் குசைதயைபொருந்தி மனிதர்க்கிரங்கினபின்னர் மேகமுழக்கத்தோடு சீறிப்பொருத பேயெலாங்கெட்டுமுறியும்படி தன்னருந்தவத்தை வில்லாகவேந்தியதிலேயம்பின்றொடையாகப் பலவறங்களையேற்றா நின்றானென்க. (௫௬)

கடிநடுக்கியகள்ளவிழ்கானலர்க்
கொடிநடுக்கியகோடிலமாதவன்
படிநடுக்கியவெம்பழிப்பேயெலா
மடிநடுக்கியவாண்மையினோக்கினான்.

உரை.— அங்ஙனம் பசாசுகள் நடுங்குதற்காரணமாகிய வாசமதுமலர்க் கொடியையசைத்தேந்திய குற்றமில்லாமாதவன்குசை பூவுலகெல்லாநடுங்கும்படி கொடியபழியைக் கொண்டபேயெலா மடியோடுகெட்டு வெருவிநடுங்க வவற்றைவீரங்கொண்டு நோக்கினானென்க. (௫௭)

நோக்கினான்கழுதாண்மையை நூறினான்
றூக்கினானறவெஞ்சரப்பற்றொடை
போக்கினான்கடிபோக்கியவேலெலா
நீக்கினானிமிர்வச்சிரநெஞ்சினான்.

உரை.—அங்ஙன முயர்ந்தவச்சிர நெஞ்சினையுடையசூ
சை யப்பேய்களைநோக்கினவளவிலே யுலைவுகொண்ட வல்ல
மைமெலியும்படிகெடுத்துப் போராகத்தாக்கியெதிர்த்து மூ
ன்றவமாகிய வில்வாயேற்றிய பலவறங்களாகிய பலவம்பின்
றொடைகளைவிட்டெய்து பசாசுகள் தனக்கெதிர்விட்டவாயு
தங்களெல்லாவற்றையுநீக்கி விலக்கினானென்க. (௫௮)

மேவிவான்றொழுந்தன்றவவில்லினாற்
றாவினாலெனக்கெட்டதிர்சோகெலா
மோவிநாணவொருங்கிருகாற்கொடு
பூவிறேய்த்ததுபோலவொடுக்கினான்.

உரை.—அங்ஙனஞ் சூசை வானுலகும்விரும்பி வணங்கு
ந் தன்றவமாகியவில்லைக்கொண்டு தான்கெடுத்துத் தாளா
யெறிந்ததன்மையாற் கெட்டழிந்ததிர்ந்த வப்பேயெல்லா
நொந்துநாணும்படி யவற்றையொருங்குட னிருகாலாற் பூ
மியோடு தேய்த்தாற்போல வென்றழித்தொடுக்கினானெ
ன்க. (௫௯)

புரிந்தநின்றயைப்பொற்பொடஞ்சேனையா
விரிந்தமன்னுயிர்வேண்டியிப்பேயெலா
மெரிந்ததீப்புதைத்தோட்டெனவின்றொளி
சொரிந்தபூமுகத்தோன்றலைவேண்டினான்.

உரை.—அங்ஙனஞ் சூசை பசாசுகளையொடுக்கி வென்ற
பின்பு மனிதர்க்கிரங்கித் தேவதிருக்குமாரனைநோக்கிச்சொ
ல்வான்: ஐயா நீயெனக்குச்செய்த தயையின்மிகுதியா ல
ஞ்சாதிருப்பேனாயினும் விரிந்தபூவுலகுள்ள மற்றமனிதரை
வேண்டி யிரக்கம்புரிந்து கூடினவப்பேயெல்லாவற்றையுந்
தீயெரிநரகிற்புதைத்துத் தள்ளியோட்டுவாயென்று வினி

ளங்கதிரைவீசும்பூமுகத்தவதரித்து நின்றதேவகுழந்தையை வண்டினுனென்க. (௬0)

மீன்முகத்துணர்காட்சியின்மேன்மையா
னூன்முகத்திலோராண்டுனோயாதபின்
கான்முகத்தலர்வாய்கனிவிண்டுரை
வான்முகத்தமுதூறிவழங்கினன்.

உரை.—சூசை வேண்டினதற்குத் திருக்குமாரன் ருன் மீனினும்விளங்கி யுணர்வெலாங்கடந்த காட்சியின்மேன்மையையுடையனுயினு மவதரித்தெடுத்த வுடலின்வகையா லறிவாதமற்றக்குழந்தைகளைப்போல வந்நாள்மட்டுந் தான்பிறந்தொருவருடமாகி யொன்றும்பேசாதிருந்தான். அன்றோவென்னில் வாசம்பொழிந்து மலர்ந்ததாமரைவாயா வினிதாய் வானுலகுள்ள தேவவமிர்தத்தை யூற்றதாகக்கொப்பளித்து மழலைச்சொற்களைவழங்கத் துடங்கினுனென்க. (௬௧)

மின்னித்தாரகைநோக்கெனவெண்மலர்
துன்னித்தாங்கியசூசையைநோக்கினன்
கன்னித்தாய்கமலக்கரத்தாசனத்
துன்னித்தானினிதெந்தையென்றோதினன்.

உரை.— திருக்குமாரனெங்ஙனம் பேசத்துடங்கினுனெனின்,கிட்டப்பூங்கொடியேந்திநின்றசூசையை வான்மீன் மின்னிப் பார்த்தாற்போல நோக்கிக் கன்னியாயிருந்து தன்னையீன்றதாயின் ருமரைக்கையாகிய வாசனத்தெழுந்தருளிக் கருத்துடன் ருனவனை யப்பாவென்ருனென்க. (௬௨)

சிந்தைநீடெழச்சீர்த்திவைகேட்டனன்
முந்தைநீயுளமூவுலகிற்கெலாந்
தந்தைநீதனிக்கன்னிதனையனீ
யெந்தைநீயெனையென்றனையோவென்ருன்.

உரை.—தானுள்ளே மிகமகிழும்படி திருக்குமாரன்சொன்னவார்த்தையைக்கேட்டசூசை வெருவினுற்போல வகிச

யித்து மறுமொழிசொல்வான்: என்னாண்டவனே யெல்லா
ப்பிதாக்களுக்கு மூத்தினபிதாவுநீயே, உலகமூன்றினையு மு
ளவாக்கினதகப்பனுநீயே, அவதரித்துமனிதனாயினவிடத்து
ம் புருடனுதவியின்றிக் கன்னிமாருததாயின் பிள்ளையுநீயே;
நீயித்தன்மைத்தாகையி லென்னை யப்பாவென்றாயோ வெ
ன்றுனென்க. (சுரு)

அருளின்மாகடன் மூழ்கவருந்தவன்
மருளின்மாகடன் மூழ்கியமண்ணகள்
வெருளின்மாகடன் மூழ்கிவிழுந்தெரி
யிருளின்மாகடன் மூழ்கினவென்னவே.

உரை.—அங்ஙன மருந்தவனாகியகுழவியினிதா யருளின்க
டலின்மூழ்கிமகிழா நிற்பத் திருக்குமாரனுச்சரித்த வவ்வொ
ருசொல்லின்வல்லமையான் மயங்கினபேயெலாம் வெருவி
விழுந்துருண்டு தீயெரியிருணிலமாகியநரகத்தின் றுன்பக்
கடலின்முழுகியமிழ்ந்தினவென்க. (சுச)

செகிவிப்படக்கனியெந்தைகிளைத்தசொற்
கவிப்படக்கலங்கிக்கடியீட்டமே
வவிப்படக்கனங்காவிடிமானவார்ப்
பொவிப்படக்கனலூடுறவீழ்ந்ததே.

உரை.— அங்ஙனஞ் செயங்கொளும்படியினிதா யவதரி
த்தநாத னுச்சரித்த வொருசொல்லின்சத்தமே பட்டதன்
மையாற் பேயெலாங்கலங்கி மேகத்தினின்று முழங்கிவிழு
மிடிகளைப்போல மிகவுமார்த்துக்கதறித் தீயெரிநரகினுள்
ளேவிழுந்தமிழ்ந்தனவென்க. (சுரு)

எல்வின்மாரியுமேந்தியவான்புகழ்ச்
சொல்வின்மாரியுந் தூய்மலர்மாரியுஞ்
செல்வின்மாரியின்வானவர்சிந்தவின்
வில்வின்மாரியினுதன்விளம்பினுன்.

உரை.— அங்ஙனந் தோர்த்தபேய்கள் நரகில்விழுந்தவ
ளவிலே யாகாயத்தெங்குநின்றவானவ ரொளியின்மாரியுமூ

யர்த்தபுகழ்ச்சியுளாத்தசொல்லின்மாரியு மதும்மலர்மாரியுமே
ங்கள்பொழியுமாரியைப்போல வழங்கத்தூவிவருகையின்
மீள்வுந்திருக்குமாரன் குசையைநோக்கி மாரியாகமுகத்தி
ந்கதிளாவீசிச் சொல்வானென்க. (௬௬)

ஏந்தைநீதவத்தேந்தியவில்லினு
னிந்தையாய்வெறிவென்றனை நின்பெயர்ச்
சிந்தையாலவையாவருஞ்சீக்கவும்
வந்தையாய்வரமேவகுத்தேனென்றான்.

உரை.—திருக்குமாரனெங்ஙனஞ்சொன்னானெனின்,
ன்பிதாவே நீயுன் றவத்தின்வில்லாற் பேய்களெல்லாவற்
றையு நிந்தைபடுத்திவென்றாயே, ஆகையா லினிமற்றமனித
ரு முன்பெயராவணக்கத்தோடு நினைத்தமாத்திரத்தி லப்
பேய்களைக்கெடுத்து வெல்லும்படி பெருமைபெறவுனக்கு
வரந்தந்தேனென்றானென்க. (தன்னைவளர்த்தவனாகையி லெ
ன்பிதாவென்றானென்க.) (௬௭)

என்றநாதனையேத்திவியப்புளத்
தோன்றநீடுதுதிப்பவுணர்வெலாங்
குன்றவாசியைக்கூறினன் கூளியை
வென்றமாதவத்தாண்மையின்வீரனே.

உரை. — அவ்வரந்தந் தவற்றைச்சொன்னநாதனை மிகவு
ம்வணங்கி யுளத்திலதிசயித்து நெடியதுதிகளைச்சொல்வி
நமதுணர்வெல்லாவற்றையுங்கடந்தமுறைமை லவனைப்புகழ்
ந்தான் பேய்களைவென்ற தவத்தினாண்மையிற் சிறந்தவீர
னாகிய குசைமாமுனியென்க. (௬௮)

சோகுதோர்வைப்படலமுற்றும்.

ஆகப் படலம் - ௨௪ - இ - விருத்தம்

௨௲௯௱௪௪.

பொருளட்டவணை.

படலம்,	பொருள்,	பக்கம்.
	சந்தங்களினட்டவணை.	௫*
௰௩	பைதிரநீங்குபடலம்.	௭
௰௪	இளவன்மாட்சிப்படலம்.	௰௪
௰௫	சோசுவன்வெற்றிப்படலம்.	௪௫
௰௬	சேணதயோன்வெற்றிப்படலம்.	௱௩௧
௰௭	காசைசேர்படலம்.	௱௬௪
௰௮	சீனயிமாமலைகாண்படலம்.	௱௮௩
௰௯	பாலைபுகுபடலம்.	௨௱௫
௨௰	சித்திரக்கூடப்படலம்.	௨௱௨௨
௨௧	நீர்வரமடைந்தபடலம்.	௨௱௭௪
௨௨	எசித்துசேர்படலம்.	௨௱௮௮
௨௩	குணுங்குமந்திரப்படலம்.	௩௱
௨௪	சோகுதோர்வைப்படலம்.	௩௱௫